# அகில இலங்கை இந்து மாமன்றம்











## தலைமையகக் கட்டிட பூர்த்தி

# சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகக் கட்டிடப் பூர்த்திச்

# சிறப்பு மலர்

# Special Souvenir

to commemorate the completion
of the Headquarters Building
of the

## ALL CEYLON HINDU CONGRESS

வெளியீடு :
தாது வருடம் சித்திரை மாதம் 30 ஆம் நாள்
(ஞாயிற்றுக்கிழமை)

**12.05.1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# விநாயகர் வணக்கம்



பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு மலரின்

# உள்ளடக்கம்

கருப்பொருள்: இலங்கையில் இந்து சமயம்

- இறை வணக்கம்
- வாழ்த்துக்களும் வரலாறும்
- கவிதைச்சரம்
- இலங்கைத் திருத்தலங்கள்
- இலங்கையில் இந்துப்பெரியார்கள்
- இலங்கையில் இந்து மதம்
- அர்த்தமுள்ள இந்து மதம்
- இறை வழிபாட்டு முறைகள்
- இந்து மத ஸ்தாபனங்களின் பணிகள்
- நினைவேடுகளிலிருந்து நிழற்படங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்றக் கட்டிடப் பூர்த்திச் சிறப்பு மலரின்
தெய்வீக மணம் கமழும் இதழ்களை அழகுறத் தொகுத்து
மாமன்றத்தின் சார்பில் சமர்ப்பிப்போர்

மாமன்ற
சிறப்பு
மலர்க்குழு



**SPECIAL
SOUVENIR
COMMITTEE**

## கந்தையா நீலகண்டன்
## Kandiah Neelakandan
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்

## எம்.ஆர். ராஜ்மோகன்
## M.R. Rajmohan
செயலாளர்,
மாமன்ற சமய விவகார, விழாக்கள் குருகுலம் குழு
பொதுச் செயலாளர்,
சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்

## செல்வி சற்சொரூபவதி நாதன்
## Miss. Satsoroopavathy Nathan
மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்
தலைவி,
கொழும்பு இந்து மகளிர் மன்றம்



*கணணித் தலைப்புகளும் வடிவங்களும் :*
*எம். ஆர். ராஜ்மோகன்*
**Computer Titles & Designs :**
*M.R. Rajmohan*

பதிப்பு: பொ. விமலேந்திரன், யுனி ஆட்ஸ் (பி) லிட்.
Printed by: P. Vimalendran, Unie Arts (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## 1 இறைவணக்கம்

பக்கம்


திருக்கேதீச்சரப் பதிகம் .............. 1
திருக் கோணேஸ்வரப் பதிகம் .............. 5
கதிர்காமம் - பாடல்கள் .............. 7


## 2 வாழ்த்துகளும் வரலாறும்


காஞ்சி காமகோடி பீடாதிபதி .............. 12
திருவாவடுதுறை ஆதீனம் .............. 13
நல்லை ஆதீனம் .............. 14
சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் .............. 15
இராமகிருஷ்ணமிஷன் தலைவர் .............. 16
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் .............. 17
மாமன்றத் தலைவர் .............. 18
மாமன்றப் பிரதித் தலைவர் .............. 19
அறங்காவலர் சபைத் தலைவர் .............. 20
கட்டிடக் குழுத் தலைவர் .............. 21
மாமன்ற வரலாறும் அதன் பணிகளும் - கந்தையா நீலகண்டன் .............. 22
From Our Diary - 34
கட்டிடம் வளர்ந்த கதை - மு. கந்தசாமி .............. 39
தலைமையகப் பூர்த்தி கண்டு புன்னகை பூக்கும் பெரியவர் - சந்திப்பு .............. 42


## 3 கவிதைச்சரம்


உலகமே போற்ற உயர்வாய்! உயர்வாய்! - வேலணை வேணியன் .............. 44
தலைநகரில் இந்து மக்கட்கோர் தலைமையகம் - செ. குணரத்தினம் .............. 45
ஆலயங்கள் - அமிர்தா சந்திரபாலன் .............. 49
அருள் நிறையச் செய்து நிற்கும் எங்கள் ஆலயங்கள் - க. சி. சண்முகம் .............. 50
மாமன்றத்திற்கு ஒரு கவிதாசாரம் - பிரம்மஸ்ரீராம் தேவலோகேஸ்வர சர்மா .............. 52
அன்பு ஊற்றோ எங்கள் மன்றம் - ஆ. பொன்னையா .............. 53
மடைதிறந்து பாயுதையா மதியிழந்தார் கோலம் - இ.எஸ். மகேந்திரராஜா .............. 55
சாந்தி பெறும் ஆத்மா - இரத்தினவடிவேல் சுரேந்திரன் .............. 56
மாமன்றத்தின் அறப்பணி அனைத்தும் வாழி - த. கனகரத்தினம் .............. 57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 இலங்கைத் திருத்தலங்கள்

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத்துறைமுகமும் | - சேர். கந்தையா வைத்திய நாதன் | .............. | 58 |
| Holy Thiruketheeswaram | - S. Saravanamuttu | .............. | 63 |
| திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும் | - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | .............. | 66 |
| கோணேஸ்வரத்தின் வண்மை | - சைவப் புலவர்இ. வடிவேலு | .............. | 68 |
| Thirukoneswaram | - M.K. Sellarajah | .............. | 70 |
| முன்னேஸ்வரம் | - க. இ. ஆறுமுகம் | .............. | 73 |
| நகுலேஸ்வரத்தின் பெருமை | - நகுலேஸ்வரக் குருக்கள் | .............. | 76 |
| The Mystique of Kathirkamam | - Hon. Justice C.V. Wigneswaran | .............. | 77 |
| இரத்மலானை ஈசுவரன் கோவில் | - க. வேலாயுதபிள்ளை | .............. | 80 |
| திண்ணமாபுரச் செல்வன் காதை | - | | |
| ஈழத்துச் சிதம்பர புராணம் | - நா. பொன்னையா | .............. | 82 |
| இலங்கையின் இந்து பாரம்பரியத்தினுட் செல்வச் சந்நிதி பெறும் இடம் | - பேராசிரியர் கா. சிவத்தம்பி | .............. | 84 |
| வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி வரலாறு | - முருகவே. பரமநாதன் | .............. | 87 |
| The Temple of Vishnu at Devinuwara | - V.K. Sivaprakasam | .............. | 91 |
| காலிக் கடலில் கண்டெடுத்த முருகன் | - ஆ. தேவராஜன் | .............. | 93 |
| காலி புனித நகர் | - தி. செந்தில்வேள் | .............. | 96 |
| அநுராதபுரம் கதிரேசன் கோயில் | - கும்பாபிஷேக மலரிலிருந்து | .............. | 100 |
| கொம்பனித் தெரு அருள்மிகு சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் | - க. பாலசுப்பிரமணியம் | .............. | 101 |


## 5 இலங்கையின் இந்துப் பெரியார்கள்


| | | | |
|---|---|---|---|
| நாவலர் நான்மணிமாலை | - வ. சிவராஜ சிங்கம் | .............. | 102 |
| நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வுமுறை | - குமாரசுவாமி சோமசுந்தரம் | .............. | 105 |
| வித்தகராம் விபுலானந்தர் | - இரா. மயில்வாகனம் | .............. | 108 |
| சுவாமி விபுலானந்தர் | - த. மனோகரன் | .............. | 112 |
| Siva Yogaswami | - V. Murugesu | .............. | 114 |
| நான் கண்ட யோக சுவாமி | - தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் | .............. | 117 |
| ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன் | - திருமதி. வசந்தா வைத்தியநாதன் | .............. | 119 |
| ஞானப் பிரகாச முனிவர் | - பண்டிதமணி சி. கணபதிபிள்ளை | .............. | 120 |
| சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் | - செ. பூபாலபிள்ளை | .............. | 121 |
| ஈழ நாட்டில் சித்தர் மரபு | - ச. அம்பிகைபாகன் | .............. | 123 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 இலங்கையில் இந்து மதம்

பக்கம்


| | | | |
|---|---|---|---|
| இலங்கையில் இந்து மதத் தொன்மை | - க. ந. வேலன் | .............. | 125 |
| புராதன ஈழத்தில் இந்து மதம் | - செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர் | .............. | 130 |
| இக்கால இலங்கையின் சைவசமய மறுமலர்ச்சி | - ஆ. குணநாயகம் | .............. | 135 |
| இலங்கையில் சுவாமிஜி விவேகானந்தர் | - பெ. சு. மணி | .............. | 140 |
| ஈழநாட்டுத் தமிழர்களும் தில்லைச்சிற்றம்பலமும் | - அருள் தியாகராசா | .............. | 148 |
| தமிழரின் தத்துவம் சைவசித்தாந்தம் | - வண. தனிநாயகம் அடிகள் | .............. | 149 |
| Hinduism and its impact on Buddhism | - T. Duraisingam | .............. | 151 |
| வன்னியும் வன்னியரும் | - சி. எஸ். நவரத்தினம் | .............. | 154 |
| மட்டக்களப்பு மாநில வரலாற்றுச் சிறப்புமிக்க சைவத் திருத்தலங்கள் | - எஸ். எதிர்மன்னசிங்கம் | .............. | 161 |
| மலையகத்தில் சைவம் | - நா. முத்தையா | .............. | 166 |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவ சமயம் | - வே. சுப்பிரமணியம் | .............. | 168 |
| நல்லை நகரில் வளர்ந்த சமயம் | - க. சி. குலரத்தினம் | .............. | 172 |
| நகரமய சூழலில் இந்து மத வழிபாடு | - பொன். இராஜகோபால் | .............. | 176 |
| நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் | - மு. சிவராசா | .............. | 178 |


## 7 அர்த்தமுள்ளது இந்துமதம்


| | | | |
|---|---|---|---|
| தில்லை திரு நடனம் | - ஸ்ரீ விபுலானந்தர் | .............. | 181 |
| Dance of Siva as seen by Dr. Anandacumarasamy | - Miss. Satsoroopavathy Nathan | .............. | 184 |
| தாய்மையே இறைவனின் முதல்வடிவம் | - செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி | .............. | 186 |
| Saiva Siddhantha | - Sri Kandiah Vaithianathan | .............. | 189 |
| பிறவிப் பணி | - கோ. ஆழ்வாப்பிள்ளை | .............. | 191 |
| The Hindu Family | - Mrs. Poomani Gulasingham | .............. | 193 |
| பொன்னூஞ்சலும் அதன் உட்பொருளும் | - க. இராசரெத்தினம் | .............. | 197 |
| ஆன்மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கை | - (திருமதி) பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம் | .............. | 199 |
| வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் இந்து மதம் | - இரா. பரமேஸ்வரன் | .............. | 202 |
| இலிங்காயத மரபு - சில குறிப்புகள் | - ஆ. சிவநேசச் செல்வன் | .............. | 205 |


## 8 இறைவழிபாடு


| | | | |
|---|---|---|---|
| ஈழநாட்டுச் சைவகிரியைகளும் சடங்குகளும் | - சிவ ஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் | .............. | 209 |
| நித்திய பூசையும் அதன் தத்துவமும் | - தருமபுரம் சிவகாமரத்னாகரம் எஸ். சுவாமிநாத சிவாச்சாரியார் | .............. | 213 |
| திருக்கோவில், விக்கிரக அமைப்புகளும் பூசை, வழிபாட்டு முறைகளும் | - த. செ. நடராசா | .............. | 218 |
| சைவத் திருமுறைகளும் பண்களும் | - கதிர் தணிகாசலம் | .............. | 222 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 இந்து மத ஸ்தாபனங்களின் பணிகள்


Religion and caring for society - Mrs. Vanathy Ravindran .............. 225
இந்து சமய சங்கங்களின் பணி - சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் .............. 229
இந்து சமய வளர்ச்சியில் பத்திரிகைகள் - இ. சிவகுருநாதன் .............. 231
இந்து சமயக் கல்வியும் எதிர் நோக்கும் தேவைகளும் - அறிக்கை .............. 233
இலங்கையில் இந்து சமய கல்வி வளர்ச்சியும் அதற்கு உதவிய பெரியார்களும் தாபனங்களும் - க. அருணாசலம் .............. 238
பல்கலைக் கழக மாணவரின் பார்வையில் மாமன்றப் பணிகள் - எதிர் பார்ப்புகள் - இரா. யசோதன் .............. 242
பாடசாலை மாணவியின் பார்வையில் மாமன்றப் பணிகள் - எதிர்பார்ப்புகள் - எஸ். சிவப்பிரியா .............. 243
மாமன்றத்தின் குருகுலப்பணி - எம். ஆர். ராஜ்மோகன் .............. 245
சிவானந்த குருகுலம் பாடத்திட்டம் - .............. 248
மனம் கனிந்த நன்றி


## 10 நினைவேடுகளிலிருந்து நிழற்படங்கள்


மாமன்ற விழாக்களும் நிகழ்ச்சிகளும்
முன்னைநாள் தலைவர்கள்
நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்
முகாமைப் பேரவை உறுப்பினர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறை வணக்கம்

1. திருக் கேதீச்சரப் பதிகம்
2. திருக் கோணேஸ்வரப் பதிகம்
3. கதிர்காமம் – பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# திருக்கேதீச்சரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

பண் – நட்டராகம்

*திருச்சிற்றம்பலம்*

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. (க)

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைக் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. (உ)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ
ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்
கருவினை யடையாவே. (ங)

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்ந்தடி பேணவல் லார்பதம்மேன்
மொய்த்தெழும் வினைபோமே. (ச)

நல்ல ராற்றாவு ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர
மிராப்பக னினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே. (ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. (கூ)

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே. (எ)

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. (அ)

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியுடந் தெழுந்தோடி
மேவி நாடிநுன் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே. (கூ)

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபாலாவி யின் கரையிற்கே
தீச்சர மடைமின்னே. (கு0)

மாடெ லாமண முரசெனக் கடலின்
தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொன்
னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே. (கக)

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

பண் – நட்டபாடை

*திருச்சிற்றம்பலம்*

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. (க)

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறைக் கீளும்
சுடர்மர்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாயுறை கின்ருன்றிருக் கேதீச்சரத் தானே. (உ)

அங்கம் மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே. (ங)

கரியகறைக் கண்டன்னல கண்டமேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேற்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே. (ச)

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. (ரு)

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. (சு)

ஊனத்துறு நோய்ள்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரிற்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. (எ)

அட்டன்னழ காகவவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும் பொழின் மாதோட்ட நன்னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச் சரத்தானே. (அ)

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. (சு)

கறையார் கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக மூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொல்லக் கூடாகொடு வினையே. (க0)

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர் தேவாரம் (திருநாட்டுத் தொகை)

*திருச்சிற்றம்பலம்*

ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சரஞ்
சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூரன நாட்டுக் கெல்லா மணியாகிய
கீழையில் லரனார்க் கிடங்கிள்ளி குடியதே.

*திருச்சிற்றம்பலம்*

## திருநாவுக்கரசர் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சரமேவினார் கேதாரத்தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதி குடியுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

*திருச்சிற்றம்பலம்*

## சேக்கிழார் பெரிய புராணம்

*திருச்சிற்றம்பலம்*

அந்நகரில் அமர்ந்தங்கண்இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நமசிவாய

# திருக்கோணமலைத் திருப்பதிகம்

## திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்தது

பண் – புறநீர்மை

*திருச்சிற்றம்பலம்*

1. நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறனி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் லோத நித்திலங் கொழிக்குங்
கோணமாமலை அமர்ந்தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சுமந்து
கொள்ளமும் நித்திலங் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தேன்றுங்
கோணமாமலை அமர்ந்தாரே.

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதின்மேல்
தனித்த பேருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவிவேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெளித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமாமலை அமர்ந்தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் கான் பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடாவண்ணம் முதைத்தவர்ற் கருளுஞ்
செம்மையார் நம்மை யாளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கை வண்செருத்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமாமலை அமர்ந்தாரே.

7. எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமாமலை அமர்ந்தாரே.

8. அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவராயுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணும் பிரமன்
இருவரும் அறியாவண்ணம் ஒள் எரியா
யுயர்ந்தவர் பெயர்ந்த நன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமாமலை அமர்ந்தாரே.

9. நின்று ணுஞ் சமணு இருந்துணுந் தேரு
நெறியலாதன புறங்கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லியலொடும் உடனாகித்
துன்றுமொன் பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொன் கானல் வாசம் வந்துலவும்
கோணமாமலை அமர்ந்தாரே.

10. குற்றமில்லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

*திருச்சிற்றம்பலம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமப் பாடல்கள்
## அருணகிரிநாதர் அருளிய
# திருப்புகழ்

## திருத்தலம் - கதிர்காமம்
## சில பாடல்கள்

*தனதனன தான தனதனன தான*
*தனதன தானத் தனதானா*

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரம் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுநிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே! (1)

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான

அலகின் மாறு மாறாத கலதி, பூத வேதாளி
அடைவில்ஞாளி, கோமாளி, அறமீயா
அழிவுகோளி, நாணாது புழுகுபூசி வாழ்மாதர்
அருளிலாத தோடோய மருளாகிப்
பலகலாக ரா! மேரு மலைகரா சலா! வீசு
பருவமேகமே! தாரு! எனயாதும்
பரிவுறாத மாபாதர் வரிசைபாடி, யோயாத
பரிசில்தேடி, மாயாத படி, பாராய்
இலகுவேலை நீள்வாடை யெரிகொள்வேலை மாசூரி
லெறியும்வேலை மாறாத திறல்வீரா!
இமயமாது பாகீர திநதி பால கா! சாரா
இறைவாகான மால்வேடர் சுதைபாகா
கலகவாரி போல்மோதி வடவையாறு சூழ் சீத
கதிர்காம மூதூரி விளையோனே!
கனகநாடு வீடாய கடவுள்யானை வாழ்வான
கருணைமேரு வே தேவர் பெருமாளே! (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனனதான தத்த தனதான
தனனதான தத்த தனதான

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதாணி னைப்பை யிருபோதும்
இதயவாரி திக்கு ளுறவாகி
எனதுளேசி றக்க அருள்வாயே!
கதிர்காம வெற்பி லுறைவோனே!
கனகமேரு வொத்த புயவீரா!
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுது கூனி மிர்த்த பெருமாளே! (3)

தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான

கடக வருவிகள் தப வரி அதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோட
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே!
அயிலவ சபரிசெய் கவிபுகழ் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே!
இடமொரு மரகத மயிலிசை வடிவள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினு
ஏழைக் கிரங்கும் பெருமாளே! (4)

தனனதன தானத்த தனனதன தானத்த
தனனதன தானத்த தனதான தானன

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசிய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர சாதக்தின் வசமாக மேவியே
உமதடியு னாருக்கு மனமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை யெனமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்ரு பாசித்தம் அருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசக்தி
எழுதரிய காயத்ரி உமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரர் சிறை மீள்விக்க வமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அமுதுலகை வாழ்வித்த கவுணியகு வாதித்த
அரிய கதிர்மாமத்தில் உரியாபி ராமனே. (5)

*தனத்தா தனத்தா தனத்தா தனத்தா தனத்தா*
*தனத்தா தனத்தா தனதான*

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் னிருகூறாச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கா ரமுற்றாய்
திருத்தா மரைத்தா ளருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தா ரெரித்ததார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனாரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா ளமுத்தே
கதிர்கா மமுற்றார் பெருமானே (6)

*தனதனா தத்தனத் தனதனா தத்தனத்*
*தனதனா தத்தனத் தனதான*

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணா, மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
தூரியமே, லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதி, நீடு
துகளில்சா யுச்சியக் கதியைமீ றந்நசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ?
புரிசை சூழ் செய்ப்பதிச் குரியசா மர்த்யசற்
புருவுவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வானே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிர காமக்கிரிப் பெருமாளே! (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானதன தத்தத்த தானதன தத்த
தானதன த்தத்த தனதான

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தித்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணி குழற்கற்றை மேல் மகர மொப்பித்த
தாதின்முக வட்டத்தி லதிமோக
காமுகன் கப்பட்ட ஆசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மாத்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தி னிருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில கப்பட்ட பெருமாளே! (8)

தனதனா தத்த தனதனா தத்த
தனதனா தத்த தனதான

மருவறா வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள் தாவுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முசிரயா மத்தி
னிரவினா னித்த மெலியாதே
இடருறா மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ்விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
ககனமா ணிக்க வடிவனே மிக்க
கதிர காமத்தி லுறைவோனே
முருகனே பக்த ருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு
முறியவே ல்தொட்ட பெருமாளே! (9)

தானதன தானத் தனதான தானதன தானத் தனதான

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் நீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர் வடக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி ஏற் மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்த மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரிக்க
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோத ரத்தி
ககன மேவு ளொருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி அசுர லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# வாழ்த்துகளும் வரலாறும்


1. காஞ்சி காமகோடி பீடாதிபதி
2. திருவாவடுதுறை ஆதீனம்
3. நல்லை ஆதீனம்
4. சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள்
5. இராமகிருஷ்ணமிஷன் தலைவர்
6. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
7. மாமன்றத் தலைவர்
8. மாமன்றப் பிரதித் தலைவர்
9. அறங்காவலர் சபைத் தலைவர்
10. கட்டிடக் குழுத் தலைவர்
11. மாமன்ற வரலாறும் அதன் பணிகளும்
12. From Our Diary
13. கட்டிடம் வளர்ந்த கதை
14. தலைமையகப் பூர்த்தி கண்டு புன்னகை பூக்கும் பெரியவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சந்தரமௌலீச்சவராய நமஹ:

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம் ஸ்மஸ்தானம்

எண். 1 சாலைத் தெரு. காஞ்சீபுரம் - 631 502



நமஸ்காரம்

அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பு மாநகரில் தலைமை கட்டிடத்தை அமைத்து அதில் ப்ராத்தனா மண்டபம் ஸ்ரீ நடராஜப் பெருமான் சிவகாமி அம்பாள் இவைகளை அமைத்து கும்பாபிஷேகத்தை செய்வதை கேட்டு சந்தோஷிக்கிறோம். இந்த மாமன்றம் சமயப்பணியோடு சமுதாய பணியையும் இணைத்து செயல்படுவது பாராட்டத்தக்கது. ஆண்டவன் அருளால் இந்த மாமன்றத்தின் பணிகள் மேலும் சிறப்புடன் விளங்க ஆசிர்வதிக்கிறோம்.

நராயணஸ்மிருதி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவடுதுறை ஆதீனம் குரு மகாசந்நிதானம் திருக்கயிலாய பரம்பரை சீர்வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்களின் வாழ்த்துரை

*"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க*
*ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க*
*ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"*

கொழும்பு – அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகக் கட்டிட வேலைகள் நிறைவெய்தி அம்மாளிகையில் அருள்தரு சிவகாமி அம்மை உடனாகிய அருள்மிகு நடராசப் பெருமான் பிரதிட்டை செய்விக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமையும் அதுபோழ்து சிறப்பு மலரொன்று வெளிவருதலும் அறிந்து மகிழ்கிறோம்.

இந்து மாமன்றம், நம் சமய வளர்ச்சிக்கான பணிகளை நன்கு ஆற்றி வருதலோடு, அரசியல் காரணங்களால் பல்லாண்டுகளாகத் தமிழ் மக்கள் அநுபவித்துவரும் துன்பங்களைத் துடைக்க உரிய முயற்சிகளைச் சிறப்பாகச் செய்துவருதலும் நிவாரணப் பணிகள் புரிந்து வருதலும் ஆறுதல் அளிக்கின்றன, பாராட்டுகிறோம்.

நலிவுற்றோர் துன்பந்துடைப்பதே வழிபாடு. இவ்வுயரிய பணிகள் கருதும் பயனை விரைந்து அளிக்கவும் நிகழவுள்ள கட்டிடத் திறப்பும் மகா கும்பாபிஷேகமும் சீரும் சிறப்புமுற நடைபெறவும், விழாமலர் மாமன்றப் பணிகளை விரித்துரைப்பனவும் நம் சமய மேலாந் தன்மைகளை விளக்குவனவுமாகிய அன்பர்களின் அரிய படைப்புகளைக் கொண்டு நல்லவண்ணம் மலர்ந்து இன்ப அன்பினைப் பெருக்க நம் வழிபடு மூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

*திருக்கயிலாய பரம்பரை*
**சீர்வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

**ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**

குருமஹா சந்நிதானம் - ஆதிமுதல்வர், ஸ்தாபகர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.

## ஆசிச்செய்தி



*சைவ பெருமக்களே!*

அகில இலங்கை இந்து மாமன்றம் தனக்கென சொந்தமான கட்டிடத்தை அமைத்து திறப்பு விழா செய்வதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்து சமயமும், தமிழ் மொழியும் இந்நாட்டில் நீண்ட காலமாக சான்றோர்களால் பழக்கப்பட்டு வந்ததை யாவரும் அறிவர். இந்த வகையில் இந்து சமயத்திற்கென நிறுவனரீதியாக இல்லாத குறையை இந்து மாமன்றம் நிறைவேற்றியுள்ளது. இந்துக்களுடைய ஏகோபித்த குரலாக இலங்கையின் தலைநகர் கொழும்பில் அமைந்துள்ளது இந்து மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். பரோபகாரம், சமய மேன்பாடு, மனிதநேயம் அனைத்தையும் நெறிப்படுத்த இந்து மாமன்றம் செயற்படவேண்டும் என்பது இந்து மக்களுடைய ஏகோபித்த சிந்தனையாகும். இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்கு இந்து மாமன்றம் செயற்படவேண்டும் என்றும் இதன் உறுப்பினர் அனைவருக்கும் இக்கட்டிடத்தை கட்ட உதவிய பொது மக்களுக்கும் மீனாட்சி சோமசுந்தரேஸ்வரர் ஆசிர்வதிக்கப் பிரார்த்திக்கிறோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரபரமாசார்யஸ்வாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான பிரதமகுரு

சிவகாமசிரோன்மணி, கிரியாகலாப முக்தாமணி,

பிரதிஷ்டாரத்தினம் பிரதிஷ்டா கலாநிதி

சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள்

## அவர்களின் ஆசியுரை



என்றும் உள்ளவர் எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிவர் எல்லாம் வல்லவராகியவரும் ஆன்மாக்கள் எல்லாம் தன் உடைமைப் பொருயோயகத்தான் என்றும் உடையவராகப் பசுபதி எனப்படும் சிவபெருமான் ஆன்மாக்கள் வழிபட்டுய்யும் வண்ணம் முக்கியதலங்களைப் பூமியில் நிலைநிறுத்தியுள்ளார். அத்தலங்களுள், தரிசித்தலால் முக்தியடையக்கூடிய தலம் சிதம்பரம் ஆகும். சிதம்பரத்தை தரிசித்தவர் முக்தியடைவார்கள். பரதகண்டத்து இமயமலைக்கும் இலங்கைத்தீவுக்கும் இடையில் சிதம்பரம் என்ற தலம் அமைந்துள்ளது.

சிதம்பரத்தில் ஞானசபையில் ஸ்ரீ நடராஜப் பெருமான் சிவகாமி அம்மையார் காண அனவரதமும் ஆனந்தநிருத்தம் செய்கின்றார்.

கோடி சூர்ய பிரகாசராயும் புன்முறுவல் பூத்த திருமுகமும் மூன்றுகண்களும், கங்கை பிறை, கொன்றை மாலையுடைய சடையும் சங்க குண்டலம் கொண்டவலச் செவியும் திருத்தோடுடைய இடச் செவியும் திருநீலகண்டமும் வலப்பக்கமாக டமருகம் அபயகரமும் இடப்பக்கம் அக்கினி கோளகரமும் புலித்தோலாயுடையும் முயலகன்மேல் ஊன்றியபாதமும் தூக்கிய இடதுபாதமும் வலக்கரத்தில் செங்கழுநீரும் இடக் கைலம்பகரமாகவும் சிவகாமி அம்மைவலப் பாகமுமாகத்தோன்றும் வடிவம். இவ்வடிவத்தின் தத்துவம் சிருஷ்டிடமருகமாகவும் திதி அபயகரமாகவும் அக்கினி சங்காரமாகவும் ஊன்றியபாதம் திரோதானமாகவும் குஞ்சிதபாதம் அநுக்கிரகமாகவும் தோன்றும் ஆனந்ததிருநிருத்தத்துக்கு நிலைக்களமான சபை சிவ சக்தியால் அதிஷ்டிக்கப்பட்ட சுத்தமாயாமயம். சிவசக்தி சிவத்தோடு நீக்கமின்றி உள்ள திருவருள்.

இந்த ஆனந்த நிருத்தத்தைப் பதஞ்சலியாக்கிரபாதர், உபமன்யு, திருவுடை அந்தணர், வியாசர், சுகர், சௌகன ஜைமினி, சூதர் முதலிய முனிவர்கள் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றனர்.

இலங்கை மக்களும் இப்பேரானந்த வாழ்வு பெறவும் துன்பம் நீங்கவும் கருணைகொண்ட காஞ்சி காமகோடிப் பீடாதிபதி பெரியார் அவர்கள் இலங்கை இந்துமாமன்றத்தில் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ நடராசப் பெருமானைப் வழிபடும் படி அநுக்கிரகித்த விக்கிரகங்களுக்கு தாது வருஷம் சித்திரைமாதம் சுக்கிரவாரம் பௌர்ணமி தினத்து மஹா கும்பாபிஷேகம் திருவருளால் நடைபெற்றது. இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்து நடத்திய அனைவருக்கும் பொருள் உதவி செய்தவர்களுக்கும் நல்லருள் கிடைக்கவேண்டுமென எல்லாம்வல்ல சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலலவாணேஸ்வரர் பெருமானை வேண்டி எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லோகாசமஸ்தாசுகினோபவந்து

இப்படிக்கு,
சி. குஞ்சிதபாதக் குருக்கள்
பிரதிஷ்டா சிவாசாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



இலங்கை நாட்டிலுள்ள இந்து மத நிறுவனங்களின் சம்மேளனமான 'அகில இலங்கை இந்து மாமன்றம்' கொழும்பு மாநகரில் தனது தலைமையகக் கட்டிடம் ஒன்றை சமீப காலத்தில் அமைத்திருப்பதை அனைவரும் அறிவர். அக்கட்டிடத்தின் ஆறாவது மாடியில், பிரார்த்தனை மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு, அங்கு ஸ்ரீ நடராஜப் பெருமானினதும், ஸ்ரீ சிவகாமி அம்பாளினதும் விக்கிரகங்கள் சித்திரை மாதம் 21 ஆம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன என அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். இத்தருணத்தில் விழா மலர் ஒன்று வெளியிடப்பட இருப்பதையும் அறிகிறோம்.

இக்கட்டிடம் அமைப்பதற்கு சிரமம் பாராது உழைத்த அன்பர்கள் அனைவரும் பாராட்டிற்குரியவர். அவர்கள் அனைவருக்கும் சகல நலன்களையும் அருள இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமய, சமூகப் பணிகள் மேலும் விருத்தியடைந்து மக்கள் நன்மை பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இறைபணியில்
சுவாமி ஆத்மகனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பளை



# வாழ்த்துரை

*"செயத்தக்க அல்ல செயக் கெடும் செயத்தக்க*
*செய்யாமை யானுங் கெடும்"*

என்பது வள்ளுவர் வாய்மொழி. அதாவது சமூகத்தில் செய்யத்தகாதவற்றைச் செய்வதாலும் செய்யவேண்டியவற்றை செய்யாமல் விடுவதாலும் கேடு விளையும் என்பது இக்குறட்பாவின் கருத்தாகும். எனவே அவ்வப்போது எமது சமூகக்கடமைகள் எவையென்பதை உணர்ந்து கருமமாற்றுதல் மக்களாய்ப் பிறந்த எமது தலையாய கடனாகும். இதனை இன்று கருத்திற் கொண்டு நிறைவேற்றி இருக்கிறார்கள் அகில இலங்கை இந்து மாமன்றத்தினர். தலைநகர் கொழும்பிலே தலை நிமிர்ந்து நிற்கிறது இந்து மாமன்றக் கட்டடம் என்றால் மன்றத்தின் பணிக்கு வேறு புகழாரம் சூட்ட வேண்டியதில்லை. வாக்காலும் மனத்தாலும் காயத்தாலும் ஒன்றுபட்ட தூயநினைப்போடு இதனை ஆரம்பித்து வைத்த பெருமக்களை இன்று நாம் மறக்க முடியாது. அத்துடன் ஆண்டுகள் பல சென்றாலும் உள்ளத்தைத் தளரவிடாது இப்பணியை நிறைவேற்றி இன்று திறப்பு விழாக்காணும் பெருமக்களை வாழ்த்துவதற்கு வாய்ச்சொற்கள் போதா;

*"மனதிலுறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும்*
*நினைவு நல்லது வேண்டும்"*

என்ற வகையிலே நிறைவேறி இருக்கிறது இப்பாரிய திருப்பணி என்றால் மிகையாகாது. காலங்காலமாக அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டடத்தைக் கனவு கண்டவர்கள் நாங்கள். ஆனால் இன்று நனவாகி இருப்பது சைவமக்கள் ஆற்றிய புண்ணியப்பயனாகும்.

மன்றத்தின் பணிகள் மாளிகையொன்றைக் கட்டி முடிப்பதில் மாத்திரம் அமையவில்லை. மக்களின் துயர்துடைக்கும் பணிகளிலும் எங்கள் நாட்டுத் திருக்கோயில்களை வளம்படுத்தி நித்திய நைமித்தியங்களை ஒழுங்காக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருபவர்கள் இவர்கள். அகதிகள்பணி, அநாதைகள் பணி, நோயுற்றோர் நலன்காக்கும்பணி ஆகியவற்றில் இன்று மிகமிக ஈடுபாடு கொள்ளும் தன்மையை நாம் அறிகிறோம். இவர்கள் எமக்கு அள்ளி அள்ளித் தருகிறார்கள். எம்போன்றோர் அதனை ஏற்று ஆவனசெய்து அல்லற்படும் எம்மக்களுக்கும் இடம்பெயர்ந்து அவலமுற்ற நிலையில் மனம் நொந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்குருமாருக்கும் பகிர்ந்தளித்துத் திருப்தி அடைகிறோம். பசிப்பிணி போக்கிப் பரிவு காட்டுகிறோம். இவற்றுக்கெல்லாம் ஆதரவு காட்டி அன்பளிப்புச் செய்பவர்களில் அகில இலங்கை இந்து மாமன்றம் முன்னணியில் நிற்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

எனவே இந்துமக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடம் பெறக்கூடியதாகவும் தலைநகரிலும் சைவத் தமிழன் தான் பிறந்த மதத்தை மதித்துத் தலைநிமிர்ந்து நிற்கக் கூடியதாகவும் அமைந்துள்ள எழில்மிகு கட்டடத்திறப்புவிழா இனிது நிறைவு பெறுக என்று வாழ்த்தி இறையருளைப் போற்றி அமைகிறேன்.

*தலைவர்,*
**தங்கம்மா அப்பாக்குட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்றத் தலைவரின் செய்தி

வி. கயிலாசபிள்ளை

*தலைவர்.*



அகில இலங்கை இந்து மாமன்றம் இந்த நாட்டில் இயங்கிவரும் இந்து ஸ்தாபனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து தலைமை தாங்கும் ஒரு மாபெரும் ஸ்தாபனமாக விளங்குகின்றது. இம்மாமன்றம் பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றது.

இவ்வாறு அமைக்கப்பட்ட ஸ்தாபனத்திற்கு இந்நாட்டின் தலைநகராகிய கொழும்பு மாநகரில் தலைமைக் கட்டிடம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்து காலஞ்சென்ற திரு சேர். கந்தையா வைத்தியநாதன், காலஞ்சென்ற கோ. ஆழ்வாப்பிள்ளை, காலஞ்சென்ற நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, காலஞ்சென்ற நீதியரசர் திரு.வீ. சிவசுப்பிரமணியம், திரு ஆ. சின்னத்தம்பி ஜே.பி. போன்ற முதிய தலைவர்களின் முயற்சியால் கொழும்பு - 2 இல் இருக்கும் சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அரசாங்கத்தினால் 99 ஆண்டு குத்தகையில் மாமன்றத்திற்கு ஒரு காணி வழங்கப்பட்டது. சென்ற 30 ஆண்டிற்கு மேலாக இக்காணியில் எமது தலைமையகத்தை கட்டியெழுப்புவதற்கு காலத்திற்குக் காலம் முன்னைய முதிய தலைவர்கள் முயற்சித்தும் இக்கட்டிடம் அஸ்திவாரத்துடன் பல ஆண்டுகள் தேங்கியிருந்தமை இந்த நாட்டில் வாழும் இந்து சமுதாயத்தினருக்கு ஒரு சவாலாக இருந்தது. இது இந்து சமுதாயத்தினருக்கு வேதனையையும், வெட்கத்தையும், தலைகுனிவையும் கொடுத்தது.

இப்படியான ஒரு இக்கட்டான நிலையிற்தான் எமது சமுதாயத்தினருக்கு ஓர் கலங்கரை விளக்காக, செயல்வீரன், கொடைவள்ளல், திரு. வே. பாலசுப்பிரமணியம் இம்மாமன்றத்தின் தலைமையை துணிவுடனும், திடசங்கற்பத்துடனும் ஏற்க ஒப்புக்கொண்டார்.கட்டிடத்தின் கீழ் தளக்கோப்பை கட்டியெழுப்பியபின்தான் செல்வந்தரின் நம்பிக்கையைப் பெற்று இப்புனித கைங்கரியத்திற்கு பணம் திரட்ட முடியுமென்பதை எமது மன்றத் தலைவர் உணர்ந்தார். தமது சொந்தச் செலவில் கீழ்தளக்கோப்பைக் கட்டியெழுப்பினார். கொடைவள்ளல், செயல்வீரர்கள் திறம்பட பிரகாசிக்கும் வேளையிற்தான் பல சமயங்களில் இறைவனின் சோதனைகள் தோன்றுவது வழக்கம். இதற்கு எமது மன்றமும் விதி விலக்கா ? எல்லாம் வல்ல இறைவன் எமது தலைவரை தம்மிடம் அழைத்துக் கொண்டார்.

எமது மன்றம் தாயைப் பிரிந்த சேயாக, அனாதையாக இனி எப்படி இப்பெரிய பணியை மேற்கொண்டு நிறைவேற்றுவோம் என்று ஏக்கமுறும் நிலைக்கு தள்ளப்பட்டது. இந்நிலையில் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராசா, உப தலைவர் திரு. சி. தனபாலா, பொதுச்செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் , பொருளாளர் திரு மு. கந்தசாமி, பொறியியலாளர் மற்றும் பல அங்கத்தவர்கள் இக்கைங்கரியத்தை நிறைவேற்ற தோள் கொடுத்துதவினார்கள். இப்படியான பெரியார்களின் ஒத்துழைப்பாலும் விடாமுயற்சியாலும் சி.ரி.சி. ஈகிள் ஸ்தாபனத்தாரின் குத்தகை முன்பண உதவியினாலும் எல்லாம்வல்ல இறைவனான கொம்பனித்தெரு முருகனினது திருவருளால் எமது ஐந்து (5) மாடிக்கட்டிடத்தை பூர்த்தி செய்துள்ளோம். இவர்கள் யாவருக்கும் மாமன்றத்தின் சார்பில் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜயேந்திரசரஸ்வதி மகாசுவாமி அவர்களின் ஆசியுடன், சென்னை சீமெந்து கம்பனியின் தலைவர் திரு. அர்ச்சுனராஜா அவர்களின் முயற்சியியால், சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானின் சிலைகள் கும்பகோணத்தில் அமைத்து திருக்குமார் நடேசன் அவர்களது பொருளுதவியுடன் கொழும்புக்கு வரவழைத்து கொம்பனித் தெரு முருகன் ஆலயத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டது. சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்களின் தலைமையின்கீழ் மேற்கூறிய சிவகாமி அம்பாள் சமேத நடராஜர் விக்கிரங்களை சித்திரை 19ம் திகதி புதன்கிழமை (01.06.96) காலை 8.00 மணிக்கு முருகன் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் சென்று எமது தலைமைக் கட்டிடத்திலிருக்கும் ஐந்தாம் (5ம்) மாடியில் அமைந்துள்ள பிரார்த்தனை மண்டபத்தில் பிரதிஷ்டை செய்ய உத்தேசித்துள்ளோம். சித்திரை 21 ம் திகதி காலை 8.44 மணிக்கு குடமுழுக்கு செய்து மகா கும்பாபிஷேக வைபவம் நடைபெறவுள்ளது. இவ்வைபவங்கள் இறையருளால் இனிது நிறைவேற "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்ற வாக்கிற்கேற்ப எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் தெய்வயானை அம்பாள் சமேத முருகப் பெருமானையும் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பிரதித்தலைவரின் செய்தி



இந்நாட்டின் இந்து மக்கள் எல்லோரும் பெருமைப்படும் வண்ணம் இந்து மாமன்றத் தலைமையகக் கட்டிடம் பூர்த்தியாகியிருப்பதையிட்டு நாங்கள் எல்லோரும் மனநிறைவு காண்கின்றோம்.

கடந்த ஆறு வருடங்களாக மாமன்றத்தின் கட்டிடக்குழு, நிதிக்குழு ஆகியவற்றில் பங்குபற்றி ஏனையோருடன் சேர்ந்து இப் பெரும்பணிக்கு எனது பங்களிப்பையும் கொடுக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை இறைவன் தந்த அருளாகவே கருதுகிறேன்.

சாதிக்கமுடியாதனைச் சாதித்தது போன்ற திருப்தி ஏற்படும் இவ்வேளையில் எமது சமுதாயம் இச் சாதனையால் எதிர் காலத்தில் தொடர்ந்தும் பயன் பெற ஆண்டவனருள் வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

கடந்த காலத்தில் மாமன்றத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பலர். அவர்களில் தவறாது குறிப்பிடபடவேண்டியவர்கள் அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியமும் இன்றும் எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. ஆ.சின்னத்தம்பி அவர்களும். இப்பணியில் ஈடுபட்ட இன்றைய தலைமுறையினர் பலர். இது எல்லோரும் சேர்ந்து கூட்டாக உழைத்ததன் நற்பயன். இந்தக் கூட்டுழைப்பு உணர்வுடன் சாதனைசெய்த இறுமாப்பில் மயங்காது தொடர்ந்தும் இந்நாட்டின் இந்து மக்களுக்கு எங்களாலான பணிகளை ஆற்றத் திடசங்கற்பம் கொள்வோமாக.

**மா. தவயோகராசா**
*பிரதித்தலைவர்.*
அகில இலங்கை இந்துமாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாமன்றத்தின் அறங்காவலர் சபைத்தலைவரின் செய்தி

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இந்நாட்டில் இருக்கும் இந்து மத நிறுவனங்களை ஒருங்கிணைத்து உச்ச நிறுவனமாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமைக்கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டமை திருவருள் என்று தான் கூற வேண்டும்.



மாமன்றத் தலைமையை ஏற்று வழிநடத்திய பல பெரியோர்களின் சேவையால் இன்று மாமன்றம் இந்நிலைக்கு வந்திருக்கின்றது.

நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் தலைவராக விளங்கிய காலகட்டத்தில் பொருளாளராக கடமையாற்றியிருக்கிறேன். நாட்டில் நிலவிய துர்ப்பாக்கியமான நிலையில் நாங்கள் அப்போது நிவாரண வேலையில் கூடிய கவனம் செலுத்தி வந்தோம். திரு. வி. பாலசுப்பிரமணியம் தலைமையேற்றதும் புதியதோர் உத்வேகத்துடன் கட்டிடப் பணிகளைத் துரிதப்படுத்தினார். ஆர்வத்துடன் அப்பணியில் ஈடுபட்ட இளம் தலைமுறையினருடன் சேர்ந்து பணியாற்றவும் இன்று மாமன்ற அறங்காவலர் சபையில் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தவும் ஆண்டவன் அருளியிருக்கிறான்.

மாமன்றத்தின் மதிப்பை உயர்த்தி நிற்கின்ற தலைவர் திரு. கயிலாசபிள்ளை, மாமன்றப் பிரதி தலைவர் திரு. மா. தவயோகராசா, அறங்காவலர் சபையின் துணைத்தலைவராக இருக்கும் திரு. ஹரிசெல்வநாதன், மற்றும் உறுப்பினர்கள் திரு.ஆ.சின்னத்தம்பி, திரு. தெ. ஈஸ்வரன், திரு. தே. ம. சுவாமிநாதன், திரு. சு. சத்தியமூர்த்தி, திரு. திருக்குமார் நடேசன் ஆகியோருடன் சேர்ந்து மாமன்றத்தின் சொத்துக்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகவும் மாமன்றச் செலவீனங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் மேற்பார்வையாளர்களாகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கிறோம். அறங்காவலர் சபையில் இருக்கும் திரு. சின்னத்தம்பி பல ஆண்டு காலம் பொதுச் செயலாளராகவும் பின்பு இரு ஆண்டுகள் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றியவர். ஏனைய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்கள் மாமன்றத்திற்கும் இந்நாட்டு இந்துமக்களுக்கும் பலவழிகளில் தொண்டாற்றித் கொண்டிருக்கிறவர்கள், பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன், பொருளாளர் மு. கந்தசாமி கட்டிடக்குழுத் தலைவர் திரு.சி. தனபாலா போன்றோரின் அயரா உழைப்பு என்றும் பாராட்டப்பட வேண்டியவை.

பகிரங்கக் கணக்காய்வாளராக திரு. என்.ஆர். ஹஜேந்திரன், நிதி ஆய்வு ஆலோசனைக் குழுவில் பணியாற்றும் திரு. டபிள்யூ. எஸ். கருணைரத்தினம், திரு. வி. கந்தசாமி, திரு. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர்களின் பணி எங்கள் பொறுப்பை கணக்காய்வாளராக இலகுவாக்கி நிற்கின்றது.

எதிர்காலச் சந்ததியினரின் சொத்து இந்த மாமன்றக் கட்டிடம். வரும் தலைமுறையினருக்கு நல்ல முறையில் பயன்படும் வகையில் மாமன்றம் பணியாற்ற எல்லாம் வல்ல ஆண்டவனருள்வாராக.

ஆ. குணநாயகம்
*தலைவர்*
அறங்காவலர் சபை
*அகில இலங்கை இந்து மாமன்றம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டிடக் குழுத் தலைவர்
## திரு. சின்னத்துரை தனபாலா அவர்களின் செய்தி



தலைநகர் கொழும்பினிலே இன்று ஏழு மாடிகளுடன் நிமிர்ந்து நிற்கும் அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டிடம் தமிழ் இந்து மக்களின் வரலாற்றில் ஓர் மைல் கல்லாகும்.

ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின், குறிப்பாக இந்து மக்கள் அமைப்புக்களை ஓர் குடையின் கீழ் அமைத்து குரல் கொடுக்கவல்ல, மிகவும் உறுதியான அமைப்பு ஒன்றாக இந்து மாமன்றம் இன்று மிளிர்கின்றது. இந்து மக்கள் தங்கள் கலை, கலாச்சாரம், பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு தலைநகரில் எங்களுக்கென ஓர் கட்டிடம் உருவாகியது கொம்பனித்தெரு முருகப் பெருமானின் கடாட்சமே! எல்லாவற்றிலும் மேலாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் தமிழ் மக்களின் விடிவுக்காகவும், தற்போதய போர் சூழல் அகன்று தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஓர் அரசியல் தீர்வுக்காக, இந்த புதிய கட்டிடத்திலிருந்து இந்து மாமன்றம் குரல் கொடுக்கக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கின்றது.

கொழும்பு நகரினிலே மற்றைய பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கென தனித் தலைமையலுவலகங்கள் இருந்த வேளையில், அரசு 1950ம் ஆண்டு இந்துக்களின் அமைப்பான இந்து இளைஞர் சங்கத்துக்கு ஓர் காணியினை ஒதுக்கித்தர இணக்கம் தெரிவித்திருந்தது. அதை ஏற்பதற்கு எவரும் முன்வராத நிலையில் 1968ம் ஆண்டு அகில இலங்கை இந்து மாமன்றம் இக் காணியினைப் பொறுப்பேற்று இரு தடவைகள் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டியும், பின்பு சில ஆண்டுகளுக்குப் பின் ஒரு சில வேலைகளை ஆரம்பித்தும், சிலசில இடையூறுகளினால் மாமன்றக் கட்டிடம் எழும்பாத நிலை உருவாகியிருந்தது. 1990ம் ஆண்டு மூன்றாவது முறையாக எமது மதிப்புக்குரிய மறைந்த தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், அன்னாரது உதவியுடனும் உறுதியான மனபலத்துடனும் இந்த மாமன்றக் கட்டிட வேலைகள் புதுப்பொலிவுடன் வளர்ச்சி கண்டு இன்றைய கட்டிடப் பூர்த்தி விழாவை நடத்துகின்றது என்பதைக் கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பலகோடி ரூபாக்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கட்டிடத்தை கட்டி எழுப்ப எமக்கு பண உதவிகள் பலவும், மற்றும் ஒத்தாசைகள் பலவும், ஆக்கபூர்வமான சேவைகள் பலவற்றையும் வழங்கி இந்த மாபெரும் பணியினைப் பூர்த்தி செய்வதற்கு உதவிகள் பல செய்த பெரியோர்களனைவருக்கும் இக்கட்டிடக் குழுவின் தலைவர் என்னும் முறையில் நன்றிகள் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

***"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"***

**சி. தனபாலா**
**தலைவர்**
**மாமன்றக் கட்டிடக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்ற வரலாறும் அதன் பணிகளும்

கந்தையா நீலகண்டன் (பொதுச் செயலாளர்)

திருச்சிற்றம்பலம்

*நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்*
*என்க டன்பணி செய்து கிடப்பதே*

– திருநாவுக்கரசு

இலங்கை வாழ் இந்து மக்களின் உச்சநிறுவனமாக, இந்நாட்டிலுள்ள இந்துமத நிறுவனங்களின் கூட்டமைப்பாக, நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அகில இலங்கை இந்துமாமன்றத்திற்கு ஒரு தலைமையகமில்லையே என்ற குறை ஆண்டவனருளால் நீங்கியிருக்கின்ற இவ்வேளையில் மாமன்றத்தின் வரலாற்றினையும் அதன் பணிகளையும் பற்றி எடுத்துரைக்கின்ற சந்தர்ப்பம் சிறியேனுக்குக் கிடைத்திருப்பதை இறைவன் தந்த பாக்கியமாகவே கருதுகின்றேன்.

"இறைபணி நிற்க" என்பதனை இலட்சியமாகக் கொண்டு பணியாற்றுகின்ற அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நாட்டின் நாலா பாகங்களிலிருந்து இந்து சமயப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இந்து நிறுவனங்களை ஒன்றிணைத்து – இந்நாட்டு இந்துமக்களின் ஒரே குரலாக – பலவழிகளிலும் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றது.

இந்து மக்களின் சமய, சமூக, கல்வி சார்ந்த பல பிரச்சினைகளிலும் மட்டுமல்லாமல் சமீப காலத்தில் அரசியல் ரீதியாகவும் இந்து மக்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகளிலும் கூட சுதந்திரமாக துணிச்சலுடன் இந்து மக்கள் சார்பாகக் குரல் எழுப்பியிருக்கிறோம். பல சமயங்களில் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கூட வெற்றிகண்டிருக்கிறோம் என்பதனை மனநிம்மதியுன் கூறி வைக்கின்றோம்.

இந்நாட்டின் இந்து மன்றங்களின் ஒன்றியமான மாமன்றத்திற்கு அரசிடமிருந்து நெடுங்காலக் குத்தகையில் கொழும்புமாநகரின் கேந்திரப்பகுதி ஒன்றில் 38 பேர்ச் அளவிலான காணி கிடைத்தபோதும் அக்காணியில் கட்டிடம் அமைக்கும் வேலைகள் பல கட்டங்களில் தடைப்பட்டு நின்றன. 1990 அக்டோபர் மாதம் முதல் மாமன்ற முகாமை எடுத்த தீவிர முயற்சிகளின் பயனாக தலைமையகக் கட்டிடம் பூர்த்தியாகியிருக்கின்றது. அக்காலகட்டத்தில் பிரதம நிறைவேற்று அலுவலராகப் பணியாற்றுகின்ற பாக்கியம் கிடைத்தது திருவருள் என்று தான் கூறவேண்டும். எல்லோரும் சேர்ந்து கூட்டாக உழைத்தோம். நல்ல தலைமை கிடைத்தது. உற்சாகம் தரும் ஆக்கபூர்வமான ஆதரவு பல கிடைத்தன. கொம்பனித்தெரு புண்ணிய பூமியில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் திருக்கோபுரமும் எழுந்து தலைமையகத்தின் மீதும் திருநிழல் பரப்பி நின்றது. அவற்றின் திரண்டபயன் இன்று நாம் காணும் தலைமையகப் பூர்த்தி.

தலைமையகப் பூர்த்தியின் பயனை முற்றாக அனுபவிக்க முடியாத நிலையிலிருக்கின்றோம் என்பதனையும் வேதனையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்நாட்டில் வாழும் இந்துமக்கள் தங்கள் சொந்த நாட்டில் அகதிகளாக இருக்கும் துர்ப்பாக்கியமான நிலை. 'நாளை நமதே' என்று பெருமைப்படுவதற்குப் பதிலாக 'நாளை நாமெங்கே' என்று திக்குத் திசையின்றித் தவிக்கும் பரிதாபமான கதி. எனவே தலைமையகக் கட்டிடம் கண்ட இறுமாப்பில் களிப்பு அடையாது, பொறுப்புணர்ச்சியுடன் தலைமையகத்தைப் பயன்படுத்தி இந்நாட்டு இந்துமக்களுக்கு பயன்தரும் வகையில் பணியாற்றும் திசையில் எங்கள் எண்ண அலைகளைத் திருப்பியிருக்கிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியர்களின் ஆலோசனைக்கிணங்க சமயாசாரமுறைப்படி பூசைகளையும் வழிபாடுகளையும் நடத்தி, தலைமையகத்தில் ஸ்ரீசிவகாமி சமேத ஸ்ரீநடராஜப்பெருமான் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து திருவருள் வேண்டி நிற்கிறோம். அத்திருவருளுடன் தலைமையகக் கட்டிடத்திலிருந்து வரும் வருமானத்தை அறப்பணிகளுக்குச் செலவிட்டு சமூகநலன் பேணத் திட்டமிட்டு வருகிறோம்.

இந்து சமய நிறுவனங்கள் எல்லாம் எம்முன்னோர் நாற்பது ஆண்டுகளுக்கு முன் திட்டமிட்டபடியே அகில இலங்கை இந்துமாமன்றம் என்ற ஒரே குடையின்கீழ் திரண்டு இந்துப் பெருமக்களின் நலனுக்காக வலுவுடன் உழைக்கவேண்டும். நவீன உலகில் எத்தனையோ புறச்சக்திகளுடன் எதிர் நீச்சல் போடும் இந்து இளம் சந்ததியினர் இந்து மதத் தத்துவங்களை அர்த்தமுணர்ந்து கசடறக் கற்க வழிவகுப்பது; அவர்கள் மதவழிபாடு நின்று வையகத்தில் வாழ்வாங்கு வாழவைப்பது எங்களின் பாரிய பொறுப்பு என்பதனை நாம் உணர்ந்து செயற்படக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்துமாமன்றத்தின் வரலாற்றைப் பல கால கட்டங்களில் மாமன்ற ஏடுகளிலிருந்து எடுத்த தகவல்களின் அடிப்படையில் இப்போது எடுத்துரைக்க முனைகின்றேன்.

## ஆரம்பம்:-

ஜய வருடம் தை மாதம் (1955 ஜனவரி 6) தைப்பூசத் திருநாளில் வெள்ளவத்தை மாணிக்கவிநாயகரின் அருளைப் பெற்றுக் கொண்டு ஆலயத்தின் அருகே அமைந்துள்ள இந்துக்கல்லூரி மண்டபத்தில் இலங்கையின் வடக்கிலிருந்து கிழக்கிலிருந்து தெற்கிலிருந்து மேற்கிலிருந்து மத்தியிலிருந்து பல இந்து மத நிறுவனங்கள் கூடி தங்களுக்கொரு கூட்டமைப்பாக அகில இலங்கை இந்து மாமன்றத்தை நிறுவினர். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைப் பேராளர் திரு. அ. அருளம்பலம் முன்மொழிய, மட்டக்களப்புப் பெரியார் புலவர்மணி திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை வழிமொழிய மாமன்றம் நிறுவும் பிரேரணை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தை நிறுவும் இப்பிரேரணையில் "இந்து மாமன்றம்" என்ற சொற்களை நீக்கிச் 'சிவப் பெருமன்றம்" என்னும் சொற்களை அமைத்தல் வேண்டும் என ஒரு திருத்தப் பிரேரணையைத் திரு. து. செல்லையா அவர்கள் பிரேரித்தார். அதனைத் திரு. சபாபதிப்பிள்ளை அவர்கள் ஆமோதித்தார். மூலப்பிரேரணைக்குச் சார்பாகவும், திருத்தப் பிரேரணைக்குச் சார்பாகவும் பல அன்பர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறிய பின், திருத்தப் பிரேரணை மீட்டுக் கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடற்பாலது.

இந்தப் பிரேரணையின் விளைவாக மாமன்றம் உதயமானதும், அதற்கு ஒரு வாழ்த்துப்பா பேராளர்களில் ஒருவரான திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால் பாடப்பட்டது:-

இந்துவாழ் சடையார்சீர் இந்நெடு உலகெங்கும் ஓங்கி
அந்திவாய் நிழலின்ட அரும்பணியாற்ற வேண்டி
சுந்தரப்பூச நன்னாள் சுடர்விரித்தெழும் இலங்கை
இந்து மாமன்றப் பைங்கூழ் தழைத்தினிதூழி வாழி.

மாமன்றத்தின் முதற் தலைவராகத் திரு. சி. குமாரசுவாமி அவர்களின் பெயரைச் சேர். கந்தையா வைத்தியநாதன் முன்மொழிய திரு சு. இ. கனகநாயகம் அவர்கள் வழிமொழிய திரு சி. குமாரசுவாமி அவர்கள் ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக, செனட்டராக, இந்தியாவில் இலங்கையின் உயர்ஸ்தானிகராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாமன்றத்தின் இணைச் செயலாளர்களாகத் திருவாளர்கள் கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களும் வே. ஆ. கந்தையா அவர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மாமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த கூட்டத்தில் ஆக்கசபை உறுப்பினர்கள் 67 பேரும் நாட்டின் பல பாகங்களிலும் இருந்த இந்து சங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்து வந்த 79 பேராளர்களும் கலந்து கொண்டமை அக் கூட்ட வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. பிற்காலத்தில் மாமன்றத்தைத் தலைமைதாங்கிய சேர் கந்தையா வைத்தியநாதன் வழக்கறிஞர் திரு. ச. சோமசுந்தரம் உயர்நீதிமன்ற நீதியரசராக உயர்ந்த திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராஜா மேலவை உறுப்பினர் எஸ். ஆர். கனகநாயகம் பிற்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினரான திரு க. பொ. இரத்தினம் மற்றும் திருவாளர்கள் க. கனகரத்தினம், மு. கனகரத்தினம், த. சிவலிங்கம், சி. சிற்றம்பலம், எஸ். அம்பிகைபாகன், நா. மாணிக்க இடைக்காடர், சு. சிவசுப்பிரமணியம், மு. ச. கந்தையா, எம். வயிரமுத்து,மு. வயிரவப்பிள்ளை, ம. ஸ்ரீ காந்தா கே. சி. தங்கராஜா, திருவாட்டி சி. தம்பையா, முதலியார் செ. சின்னத்தம்பி, அதிகார் ஏ. செல்லமுத்து, கலாநிதி ரி. தில்லைநாதன் போன்ற பிரமுகர்களும் அன்று மாமன்றத்தை ஆரம்பித்து வைத்த பெரியோர்களில் சிலர்.

## மாமன்றத்தின் பிரதான குறிக்கோள்களாவன : -

(அ) இந்து தர்ம அறிவினையும், சாதனையையும் விருத்தி செய்தல்.

(ஆ) இந்து கலாசாரத்தையும் கல்வியையும் விருத்தி செய்தல்.

(இ) இந்து சமய தாபனங்கள், ஆலயங்கள், சமய முக்கியத்துவம் வாய்ந்த புராதன நிலையங்கள் முதலியவற்றை அமைத்தல், பேணுதல் காத்தல், புதுபித்தல்.

(ஈ) இந்து தாபனங்களை வலிவடையச் செய்வதோடு அவற்றுக்கிடையே அன்னியோன்னியத்தையும் ஐக்கியத்தையும் வளரச் செய்தல்.

(உ) இந்து சமய அர்ச்சகர்களுக்கு வேதாகம தத்துவசாத்திர அறிவும் பயிற்சியும் அளிக்கும் பொருட்டுச் சமய சாத்திரக் கல்லூரி நிறுவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) இந்து சமூகத்தினரின் நலன்களைப் பாதுகாத்தலும் பொதுவில் காலத்துக்குக் காலம் அறிவுரை வழங்குதலும்

மாமன்றம் உதயமான அடுத்த வருடம் இலங்கைக்கு வருகைதந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமகனுக்கு வரவேற்பு அளித்து மாமன்றம் பெருமை தேடிக் கொண்டது.

அடுத்த ஆண்டில் 29.10.1956 அன்று கொழும்பில் ஓர் இந்து கலாசார நிலையத்தை கூட்ட வேண்டும் என்ற யோசனையை மாமன்றத்தின் முன் வைத்தது மாமன்றத்தை நிறுவுவதில் முன்னோடிகளாக திகழ்ந்து கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மாமன்றப் பணிகளில் தொடர்ந்தும் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்ற இந்நாட்டின் முதுபெரும் இந்து நிறுவனமான கொழும்பு விவேகானந்த சபை.

1957 ம் ஆண்டில் தைப்பொங்கலை ஓர் அரசாங்க விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று மாமன்றம் வேண்டுகோள் விடுத்தது. அடுத்த ஆண்டு முதல் தைப்பொங்கல் திருநாளை இந்நாட்டின் அரசாங்கவிடுமுறைகளில் ஒன்றாகக் காண்பதில் வெற்றியும் கண்டது. பின் மகாசிவராத்திரி தினத்தையும் ஒரு விடுமுறை தினமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று பலமுறை வலியுறுத்தி வந்தது எங்கள் நிறுவனம். அதன்பலனாக, பிற்காலத்தில் மகாசிவராத்திரி தினம் ஓர் அரசாங்க விடுமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1958ல் சிங்களப் பேரின வாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரம் காரணமாக மாமன்ற நடவடிக்கைகள் ஓரிரு ஆண்டுகள் அளவில் தடைப்பட்டிருந்தன.

1961ம் ஆண்டு திருக்கேதீச்சரத்தில் மாமன்றம் சிவானந்த குருகுலத்தை ஆரம்பித்து சமய குருமாருக்கு பயிற்சி தருகின்ற அரும்பணியை ஆரம்பித்தது.

கதிர்காமத்தில் உள்ள மடங்களை எடுக்க அரசு முயல்வதைக் கண்டித்தும் எதிர்த்தும் 1963 ல் குரல் எழுப்பி வந்தது மாமன்றம்.

1964 ம், 1965 ம் ஆண்டுகளில் க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கான இந்து சமயப் பாடத்திட்டத்தையும் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கான பாடத்திட்டதையும் ஆக்குவதில் விதந்துரைப்புகளும், உதவிகளும் வழங்கியது. 20.09.1964 ல் சமயங்களின் ஒன்றியத்தில் ( The Congress of Religions) மாமன்றம் ஓர் உறுப்பினராகச் சேர்ந்தது. மாமன்றம் ஆரம்பமான முதலாவது பத்து ஆண்டுகளில் அஃது ஈடுபட்ட சமய, கல்விப்பணிகளை மேலே தொட்டுக் காட்டியிருக்கிறேன். மாமன்றம் 6.2.1955 அன்று நிறுவியபோது தலைமைத்துவத்தை ஏற்ற திரு. சி. குமாரசுவாமி அவர்கள் 12.5.1957 ல் அத்தலைமைப் பொறுப்பை சேர் கந்தையா வைத்தியநாதனிடம் ஒப்படைத்தார்.

27.8.1965 ல் சிவபதம் அடையும் வரை மாமன்ற வரலாற்றின் முதலாவது தசாப்தத்தை வழிநடத்திய பெருமை சேர். வைத்தியநாதனைச் சாரும். திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரணத்திலும் மாமன்றப் பணிகளிலும் மூழ்கி இந்து சமூகத்திற்கு அரிய பல சேவைகளைச் செய்து நின்ற பெருந்தகை அவர். அரச அமைச்சச் செயலாளராக அதன்பின் அமைச்சராக உயர்ந்ததாலும் தன் இனத்தை மறவாத உத்தமர் அவர். இணைச் செயலாளர்களுடன் ஆரம்பமான மாமன்றம் 12.5.1957 முதல் பொதுச் செயலாளராக ஒருவரை நியமிக்கமுடிவு செய்தது. அப்பதவி திரு. கோ. ஆழ்வாப்பிள்ளையைச் சேர்ந்தடைந்தது. 25.1.1959 இல் முதலியார் எஸ். சின்னத்தம்பி பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். திரு. சோ சபாபதிப்பிள்ளை 6.9.1959 இல் அந்த இடத்தை நிரப்பினார். அவரைத் தொடர்ந்து 16.3.1962 இல் பொதுச் செயலாளராகத் திரு. ஆ. சின்னத்தம்பி தெரிவு செய்யப்பட்டார்.

அகில இலங்கை இந்து மாமன்ற வரலாற்றினை எழுத வரும் போது திரு. ஆ. சின்னத்தம்பி அவர்களின் பங்கு பெரிது என்பதனைக் குறிப்பிடவேண்டும். இன்று தலைமையகம் எழும்பியிருக்கும் காணியைப் பெற அல்லும் பகலும் அயராது உழைத்தவர் அவர்.

19.9.1965 அன்று மாமன்றத் தலைவராக நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவு செய்யப்பட்டார்.

## இரண்டாவது தசாப்தம்:-

1966ல் அகில இலங்கை இந்து இதழின் முதற்பிரதி வெளியிடப்பட்டது. 1967 ம் ஆண்டில் இந்து சமயத்திற்கு பல்கலைக்கழகம் ஒன்றில் ஒரு பீடம் அமைக்கவேண்டும் என்று மாமன்றம் வலியுறுத்தியது. 1968ம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகம் இந்து சமயத்திற்கு ஒரு பீடம் அமைத்தது.

சிறுபான்மைத் தமிழரை ஆலயங்களுக்குள் பிரவேசிக்கவிடாது தடுப்பது சரியல்ல என்பதனைச் சுட்டிக் காட்டி தீவிர பிரசாரத்தில் மாமன்றம் 1967 ம், 1968 ம் ஆண்டுகளில் ஈடுபட்டது. அந்தப் பிரசாரத்தின் உச்சக்கட்டமான கூட்டங்களை மாமன்றம் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் 11.4.1967 அன்றும் 12.4.1968 அன்றும் நடத்தியது.

கொழும்பு 10, கோவில் வீதி இல 3இல் தலைமை அலுவலகத்தைச் கொண்டிருந்த மாமன்றம் 16.3.1967 அன்று கொழும்பு 4 லோரன்ஸ் வீதி இல, 75 இல் இருக்கும் சரஸ்வதி மண்டபத்திற்கு தன் தலைமைப்பீடத்தை மாற்றிக் கொண்டது.

1965 இல் தலைவராகிய நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா 1968 டிசம்பர் வரை மாமன்றத்தின் தலைமையைப் பொறுப்பேற்று அதற்கு புதுமெருகு ஊட்டினார்.

1968ல் அன்றைய காணி அமைச்சின் நிரந்தரச் செயலாளராகவிருந்த திரு ம. ஸ்ரீகாந்தாவின் உதவியை மாமன்றம் நாடி நின்றது. கொழும்புக் கோட்டையில் அனைத்திலங்கை இந்துவாலிபர் சங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட காணி அவர்களின் சம்மதத்துடன் மாமன்றத்திற்குக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காணி ஒதுக்கீட்டைப் பெறுவதில் இருந்த தாமதம் காரணமாக கோட்டையில் காணியைப் பெறும் வாய்ப்பை இழந்து கொழும்பு 2 இல் காணியை ஏற்கவேண்டி இருந்தது.

நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா சிவபதம் அடைந்தபின் 17.1.1969ல் எல்லோரின் மதிப்பிலும் உயர்ந்து நின்றவரும் வழக்கறிஞர் நிறுவனத்தின் தலைவராக விளங்கியவருமான திரு. ச. சோமசுந்தரம் அவர்கள் மாமன்றத்தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அடுத்த ஆண்டு அவரே உயர் நீதிமன்றத்தில் நீதியரசராகப் புகழ் பூத்த இன்னுமொரு சமயத் தொண்டரான நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் அவர்களை மாமன்றத் தலைவராக 27.3.1970 ல் நடந்த ஆண்டு பொதுக் கூட்டத்தில் முன் மொழிந்தார். மாமன்றத்திற்கு சிறப்பான ஒரு தலைமைத்துவம் வேண்டும் என்ற பெருநோக்கோடு பதவியில் இருந்த தலைவர் திரு சோமசுந்தரம் நடந்து கொண்டதை எங்கள் வரலாற்றுக் குறிப்பில் பெருமையுடன் காண்கிறோம்.

திரு சோமசுந்தரம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட 17.1.1969 அன்று அதே கூட்டத்தில் காணி அமைச்சில் இருந்து தற்போதைய காணி மாமன்றத்திற்கு ஒதுக்கியிருப்பது பற்றி அறிவித்த கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

19.10.1970 அன்று தலைமையகக் கட்டிடத்திற்கு முதலாவது அத்திவாரம் போடப்பட்டது. (கட்டிட வளர்ச்சிபற்றி திரு. மு. கந்தசாமி, பொருளாளர், எழுதுதையும் பார்க்கவும்.) 20.10.1970 அன்று நாடாளாவிய மட்டத்தில் மாமன்றக் கட்டிட நிதிக்காக ஒரு கொடித்தினமும் நடத்தப்பட்டது.

## மூன்றாவது தசாப்தம்:-

இந்து சமய நம்பிக்கைப் பொறுப்புகளையும் அறநிலையங்களையும் ஒழுங்குபடுத்தவும் பாதுகாக்கவும் என ஒரு சட்டம் அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டது. இந்நாட்டின் சகல பாகங்களிலும் இருக்கும் இந்து மத நிறுவனங்கள் ஆலயதர்மகர்த்தாக்கள் சகலரையும் ஒரு மாநாட்டிற்கு 27.4.1975 அன்று அழைத்து அம்மசோதா பற்றிய கருத்துக்களை அவர்களிடம் இருந்து அறிந்த மாமன்றம் அப்படியான சட்டம் அவசியமில்லை என்பதனை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியது. மேலும்26.12.75 அன்று கலாச்சார அமைச்சருடன் நடந்த கலந்துரையாடலில் இந் நாட்டின் இந்து மக்கள் இச்சட்டத்தை வரவேற்கவில்லை என்பதனை மாமன்றம் வலியுறுத்தியது. அரசாங்கம் அத்துடன் அந்நடவடிக்கையைக் கைவிட்டதுடன் இது பற்றி மேலும் நடவடிக்கை ஏதும் எடுப்பதாயின் மாமன்றத்தின் ஆலோசனை பெறப்படும் என்றும், அமைச்சர் உறுதி மொழி தந்தார். கடந்த வருடம் (1995) இப்படியானதொரு முயற்சி எடுக்கப்பட்டபோது மீண்டும் அதனையும் எதிர்த்து தடுத்து நிறுத்தியது மாமன்றம்.

அதே ஆண்டு தீபாவளியை அரசாங்க விடுமுறைகள் பட்டியலிலிருந்து நீக்க அரசாங்கம் உத்தேசம் செய்தபோது அதனையும் வன்மையாக எதிர்த்து மாமன்றம் வெற்றிகண்டது.

1966ல் மேற்கொண்ட முயற்சி மாதிரி 1975 ஆவணி முதல் ' அகில இலங்கை இந்து' என்ற மாத இதழை வெளியிட மாமன்றம் ஆரம்பித்தது. ஒரு சில மாதங்கள் மட்டும் வெளிவந்த அந்த இதழ் தொடர்ந்து வெளிவராதது பெரும் குறையே.

மாமன்றத் தலைமைப் பதவியிலிருந்து 6.7.1975 அன்று நீதியரசர் சிவசுப்பிரமணியம் விலகிக் கொண்டார். மாமன்றத் தலைமையகக் கட்டிட வேலைகளில் திருப்திகரமான முன்னேற்றம் காணாதது பற்றி அவர் மனமுடைந்திருந்தார் போலும். எனினும் கட்டிடவேலைகள் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஏனைய மாமன்ற முக்கியஸ்தர்கள் தந்த வாக்குறுதி காரணமாக மீண்டும் தலைமைப்பதவியை அவர் 27.3.1977 ல் ஏற்றுக் கொண்டார்.

பொதுச் செயலாளராக இருந்த திரு. ஆ. சின்னத்தம்பி 27.7.1975 அன்று மாமன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 27.3.1977 வரை அப்பதவியில் தொடர்ந்தார். பொருளாளராக இருந்த திரு செ. விசாகசுந்தரம் 27.7.1975 முதல் 27.3.1977 வரை பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். 27.3.1977 ல் திரு. பொ. அட்சரமூர்த்தி பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இக் காலகட்டத்தில் சில கோயில்களில் அறியாமையால் செய்யப்பட்டு வரும் உயிர்வதையை நிறுத்த மாமன்றம் போராட்டம் நடத்தி அம் முயற்சியில் பலனும் கண்டது.

1982 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ம் நாள் மாமன்றத் தலைமைக் கட்டிட வரலாற்றின் ஒரு முக்கிய நாள். நகர அபிவிருத்திச் சபை நொத்தாரிசு கே. சி. பி. ஜெயவர்த்தனா முகதாவில் 44 ம் இலக்கக் குத்தகை உறுதியை நிறைவேற்றி இன்று தலைமையகக் கட்டிடம் அமைந்துள்ள காணியை மாமன்றத்திற்கு 99 வருடங்களுக்கும் குத்தகையாகத் தந்தது. அரச துறையில் உயர் பதவி வகித்த திருவாளர்கள் கோ. ஆழ்வாப்பிள்ளை ம. ஸ்ரீகாந்தா ஆர். பாஸ்கரலிங்கம் போன்ற இந்துப்பிரமுகர்களையும் மாமன்றத்தை அன்று தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்த நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் அம்முயற்சியில் பல ஆண்டுகள் பாடுபட்ட திரு. சின்னத்தம்பி ஆகியோரின் சேவையையும் ஈண்டு நன்றியறிதலுடன் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசாங்கம் முதலில் 30 வருடங்களுக்கு மட்டுமே இக் காணியைக் குத்தகையாகக் கொடுக்க இருந்தது. எனினும் அன்றைய மாமன்றத் தலைமைத்துவம் 1980 ம் 1981 ம் ஆண்டுகளில் பட்டபாடின் காரணமாகவே 1982 ல் குத்தகைக்கு இறுதியாக 99 வருடங்களுக்குக் கொடுக்கப்பட்டதை கூட்டவரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன.

1981ல் மாமன்றம் 10 மாடிகள் கட்டிடத்தைக்கட்ட விரும்பியபோதும் நகர அபிவிருத்திச்சபை 6 மாடிகளுக்கு மேல் கட்ட அனுமதிதரவில்லை. 1982 ம் ஆண்டில் இலங்கையில் நடந்த உலக இந்து மாநாட்டினை நடத்த மாமன்றம் பலவழிகளிலும் உதவி புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 யூலையில் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனத்துவேஷத்தால் இந்நாட்டின் பலபகுதிகளிலும் இருந்த மக்கள் பலவழிகளில் வார்த்தைகளால் வடிக்க முடியாத அல்லல்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளானார்கள். பலர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமுற்றனர். இலட்சக்கணக்கானோர் தங்கள் உடைமைகளை இழந்து வடக்கேயும் வெளிநாடுகளுக்கும் பரிதவித்து ஓடிப்போனார்கள். இந்நிலையில் மாமன்ற நடவடிக்கைகள் தேக்கநிலையை அடைந்தன.

## நான்காவது தசாப்தம்:-

நாட்டில் நிகழ்ந்த இனத்துவேச சம்பவங்களால் நொந்து போயிருந்த மக்களுக்கு அரசியற் தலைமைத்துவத்தை இழந்து நின்ற மக்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் ஓரளவுக்கு நிம்மதியைத் தேடித் தருகின்ற பணிகளில் ஈடுபட்டது. பல வழிகளிலும் நிவாரண உதவிகளை ஒழுங்கு செய்தது. அதுமட்டுமல்லாமல் நாட்டின் ஆட்சியாளருடனும் சர்வ கட்சி மாநாடு போன்ற அரங்குகளிலும் தமிழ் மக்களாகிய இந்து மக்களை வாட்டிக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்போராடியது. அவ்வாறு மக்களுக்கெல்லாம் நம்பிக்கை தந்து உழைத்து நின்ற அன்றைய மாமன்ற தலைவர் திரு வீ. சிவசுப்பிரமணியம் 5.12.1985 அன்று சிவபதமடைந்தது இந்நாட்டு இந்து மக்களுக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக அமைந்தது.

6.12.1985 முதல் 25.10.1986 வரை மாமன்றத்தின் தலைமைப் பதவி வெற்றிடமாக இருந்ததால் அன்றைய பிரதித் தலைவர் திரு. ஆ. செ. நடராசா மாமன்ற நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்தினார்.

நாட்டின் நிலைமையால் – தலைவர் சிவசுப்பிரமணியத்தின் மறைவால் – நொந்து போயிருந்த உள்ளங்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தந்து மாமன்றத் தலைவர் பதவியை திரு. வே. பாலசுப்பிரமணியம் 26.10.1986 ல் ஏற்றார். மாமன்றக் கட்டிடத்தை எப்படியாயினும் கட்டிமுடிப்பேன் என்ற திடசங்கற்பத்துடன் உழைத்தார். 19.4.1987 அன்று தலைமையக வளவில் சாந்தி பூஜை ஒன்று நடத்தி தன்முயற்சிக்கு ஆண்டவனருளை வேண்டி நின்றார். 28.7.1988ல் தன் இல்லத்துக்கு இந்து பிரமுகர்கள் யாவரையும் அழைத்து, வரவேற்று தேநீர் விருந்துபசாரம் செய்து அவர்களின் ஆதரவையும் கட்டிட வளர்ச்சிக்குக் கோரி நின்றார்.

அதே காலகட்டத்தில் நாட்டின் நிலைமை காரணமாக வாடிக் கொண்டிருந்த இந்து மக்கள் சார்பில் குரல் கொடுக்கவும் அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவும் மாமன்றம் தன்னாலான முயற்சிகளை எடுத்தது.

1987 ல் வடமராட்சி 'ஆபரேசன்' நடவடிக்கையால் இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்த சமயம் கொழும்பில் இந்து பிரஜைகள் குழு அமைப்பதில் மாமன்றம் பெரும் பங்கு வகித்ததுடன் அன்றைய ஜனாதிபதி, இந்திய உயர் ஸ்தானிகர் ஆகியோரைச் சந்தித்து அல்லலுறும் மக்களின் கஷ்டங்களை எடுத்துக் கூறும் தூதுக்குழுக்களிலும் மன்றத்தின் தலைவரும் ஏனைய பதவி தாங்குநர்கள் பலரும் பங்கேற்றினர்.

1990ம் ஆண்டின் முற்பகுதியில் மாமன்ற நடவடிக்கைகளும் தலைமையகமும் இப்போது தலைமையகம் கட்டப்பட்டுள்ள காணியில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகைக் கட்டிடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டதுடன் முகாமைப்பேரவை மற்றும் குழுக்களின் கூட்டங்கள் யாவும் முடியுமானமட்டில் அங்கே நடத்தப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கல்வித் துறையிலும் மாமன்றம் ஆர்வம் காட்டியதுடன் 17.2.1990 அன்று சரஸ்வதி மண்டபத்தில் பல பாடசாலைகளிலிருந்து ஆசிரியப் பிரதிநிதிகளையும் அதிபர்களையும் மற்றும் கல்விமான்களையும் அழைத்து கல்விக் கருத்தரங்கு நடத்தியதுடன் இந்து மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பற்றி மிகவும் பயன்தரவல்ல ஓர் அறிக்கையையும் மாமன்றக் கல்விக் குழு தயாரித்தது. பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் தலைமையிலான இக்குழுவின் உறுப்பினர்கள் – குறிப்பாக குழுச் செயலலாளர் திரு. த. மனோகரன் – செய்திருக்கும் இப்பணி எதிர்காலத்திலும் மாமன்றம் கல்வித் துறையில் தொண்டாற்ற இட்டதொரு நல்ல அத்திவாரம் என்றே கூறலாம்.

மாமன்ற முயற்சிகள் தீவிரமடைந்து வரும் இக்காலக்கட்டத்தில் இன்னும் ஒருபேரிடியாக அமைந்தது அன்றைய பொதுச் செயலாளர் திரு. செ. சச்சிதானந்த சிவம் அவர்களின் திடீர் மறைவு. நோயுற்றிருந்த வேளையில் தன் சமூகத்திற்கு அயராது உழைத்து நின்றவர் அவர். கொழும்பில் இந்து கலாசார நிலையம் என்று ஓர் இந்து மத நிறுவனத்தை நிறுவிப்பதற்குக் காரணகர்த்தாவாக இருந்த அவர் முன்குறிப்பிட்ட இந்து பிரஜைகள் குழுவின் உதயத்திற்கும் வழி கோலியவர்.

அன்றைய பொதுச் செயலாளரை இழந்த பின் 28.4.90 அன்று நடந்த முகாமைப் பேரவைக் கூட்டத்தில் சிறியேன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். சுமார் இருபது வருடங்களுக்கு முன் சட்டக் கல்லூரி மாணவனாக இலங்கை சட்டக் கல்லூரி இந்து மாணவர்மன்றத்தலைவர் என்ற கோதாவிலும் பின்பு சட்டதரணியான பின் என் சொந்த ஊரிலிருந்து தென் கருணையம்பதி இந்து இளைஞர் மன்றப் பேராளராகவும் மாமன்ற முகாமைப் பேரவையில் அங்கம் வகித்து மாமன்றக் கட்டிடம் எழுப்புவதில் இருக்கும் தாமதத்தைக் கண்டு விரக்தி அடைந்த அன்றைய இளம் சந்ததியினரில் ஒருவனான நான் மாமன்ற முகாமைப் பேரவையிலிருந்து விலகிக் கொண்டேன். மீண்டும் 1988 ம் ஆண்டில் கொழும்பில் இந்து கலாசார நிலையம் மூலம் மாமன்ற முகாமைப் பேரவைக்கு என்னை வற்புறுத்தி அழைத்தவர் அன்றைய பொதுச் செயலாளர் திரு சச்சிதானந்தசிவம் என்பதனைக் கூறி வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். கட்டிட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்கும் போது இப்பாரிய பொறுப்பினை ஏற்க எனக்குத் தயக்கம் மட்டுமல்ல பீதியுமேற்பட்டது. முகாமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவைக்கு என்னை வரவழைத்ததுடன் மட்டுமல்லாமல் தனது உதவிச் செயலாளர்களில் ஒருவராகவும் தேர்ந்தெடுத்துவிட்டுச் சென்ற திரு சச்சிதானந்தசிவத்தின் சில அறிவுரைகள் (குறிப்பாக, எம்மவரிடையே பொறுப்பை ஏற்று எம்மினத்திற்கு தொண்டாற்ற முன்வருபவர் போதாமை போகவேண்டும். எல்லோரும் சகோதரத்துவ உணர்வுடன் எமது சமூகம் ஈடேற உழைக்க வேண்டும்.) அன்றைய மாமன்றத் தலைவர் திரு பாலசுப்பிரமணியமும் பிரதிச் செயலாளர் நண்பர் இராஜபுவனீஸ்வரனும் செய்த வற்புறுத்தல்களும் தந்த துணிச்சலும் பொதுச் செயலாளர் பதவியை மறுக்காது ஏற்கும் நிலைக்கு என்னைத் தள்ளியது. தேர்வு நடந்த போது சபை செய்த ஒருமனதான முடிவும் அடுத்து வந்த ஆண்டுகளில் மாமன்றத்தில் சகலரும் தந்த ஒத்துழைப்பும் உற்சாகமும் இன்றும் அப்பதவியில் என்னை வைத்திருக்கின்றன.

இதுவரை பதிவேடுகளில் இருந்து கற்றவையை மாமன்ற வரலாறாகக் கூறிவந்த சிறியேன் இக்கட்டத்திலிருந்து மாமன்ற வரலாற்றை எனது நினைவுகளிலிருந்து சொல்லக்கூடிய பாக்கியம் பெற்றிருக்கிறேன்.

மாமன்றத் தலைவர் திரு. வே.பாலசுப்பிரமணியத்தின் துணிச்சலான தலைமை பிரதித் தலைவர் திரு. வி. கயிலாயபிள்ளையின் அனுபவமான ஆற்றல் ஆகியவற்றுக்கு மெருகூட்டும் வகையில் இளம் தலைமுறையினரின் ஆற்றலையும் உற்சாகத்தையும் பயன்படுத்த மாமன்றத் தலைவர் தீர்மானித்தார். கட்டிடக் குழுவிற்கு திரு. மா. தவயோகராசாவும் நிதிக் குழுவிற்கு திரு சின்னத்துரை தனபாலாவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். "மாமன்றக் கட்டிடம் இருபது வருடங்களாக எழும்பவில்லை. இவர்கள் எங்கே அதனைக் கட்டப் போகிறார்கள்!" இதுதான் அன்று பொதுமக்களின் மனநிலை. நிதி உதவிக்கு நாடியபோது 'தருகிறோம்' என்றார்கள்; ஆனால் தரவில்லை. இருந்தும் எங்களையெல்லாம் சோர்வடையவிடாது ஊக்குவித்தார் திரு பாலசுப்பிரமணியம். தனது குடும்பத்திலிருந்து முதற்கட்ட வேலைகளை ஆரம்பிக்க நிதி தர முன்வந்தார். பிரபல கட்டிடக்கலை நிபுணர் திரு வி. எஸ். துரைராசாவின் வரை படங்களுக்கு அமைய பழுத்த பொறியியல் நிபுணர் திரு. என். ஏ. வைத்தியலிங்கம் அரசகட்டடங்கள் பல அமைத்த பொறியியல் நிபுணர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் தலைமையிலான நிபுணர்கள் வழிகாட்ட கட்டிட வேலைகள் 31-10-90 நண்பகலில் ஆரம்பிக்கப்பட்டன. நல்ல சகுனமாக மழை பொழிகின்றது. நாட்டின் ஒரேயோர் இந்து அமைச்சர் மாண்புமிகு சௌமிய மூர்த்தி தொண்டமான் முதல் அடிக்கல்லை நாட்டிவைக்கிறார். சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையில் ஆண்டவனருள் வேண்டி பூசை நடக்கின்றது. அன்றைய மாண்பு மிகு இந்து விவகார இராஜங்க அமைச்சர் திரு. பி.பி. தேவராஜ், அன்றைய மாண்புமிகு கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராசமனோகரி புலேந்திரன், அன்றைய மாண்புமிகு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, மேல்மாகாண ஆளுநர் திரு. சு. சர்வானந்தா மற்றும் பல பிரமுகர்களும் நிகழ்ச்சியில் பங்கு பற்றி உற்சாகம் தந்து நிற்கின்றனர். சுகயீனமுற்றிருந்த மாமன்றத்தலைவர் கொட்டும் மழையில் குடைபிடித்து வந்திறங்குகிறார். நவலங்கா நிறுவனப்பங்குதாரர்கள் திரு. மு. சந்திரபால், திரு. மு. சண்முகநாதன் ஆகியோருடன் தொழில்சார் கட்டிடவேலை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றது. அக்காட்சி என்றும் மறக்கமுடியாத நிகழ்வு.

அன்று முதல் கட்டிட வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருந்தன. கட்டிடக் குழுவின் உயிர்நாடியாக ஓடி உழைத்தார் அதன் செயலாளர் திரு. கி. க. துரைராசா. திடீரென 8.9.1991 ல் அவர் ஆண்டவனடியெய்தினார். எங்கள் எல்லோருக்கும் பேரிடி. ஆர்வத்துடன் அயராது உழைத்த அந்த உத்தமர் இன்று இக்கட்டிடத்தை கண்டு எப்படிப் பெருமைப்பட்டிருப்பார் என எண்ணும் போது உள்ளம் நெகிழ்கின்றது.

கட்டிடக் குழுவின் செயலாளர் பதவி திரு. கு. மகாலிங்கம் மீது திணிக்கப்பட்டது. மறுக்கமுடியாது, தயக்கத்துடன் ஏற்ற பதவியை இன்றுவரை செவ்வனே நிறைவேற்றிவருகிறார்.

மாமன்றத் தலைவரின் உற்சாகத்தால் ஆரம்பித்த வேலைகள் தொடர நிதி எங்கே என்று ஒவ்வொரு சதமும் தவறாது கணக்குப் பார்த்து மாமன்றத்தின் நாணயத்தை பேணிவருகின்ற பொருளாளர் திரு. மு. கந்தசாமி ஏங்கி நின்றவேளையில் பலரையும் அணுகி உதவி கேட்டோம். மாமன்ற கட்டிட வேலைகளை சிக்கனமாக செய்வதில் என்றும் கண்ணும் கருத்துமாக இருந்தவர் பொருளாளர் திரு. கந்தசாமி. அதற்கு அனுசரணையாக இருந்தவர் அமரர் திரு. ஞானப்பிரகாசம்.

கட்டிடம் எழும்புவது கண்டு மக்களிடையேயும் நம்பிக்கை பிறந்ததையும் கண்டோம். மெல்ல மெல்ல ஆரம்பித்த நிதியுதவி வளர ஆரம்பித்தது. அவ்வழியில் முதலில் உற்சாகம் தந்தவர் பிரபல்ய பட்டயக் கணக்காளர் திரு. எஸ். கே. கணேஸ்வரன். அவர் தந்த உற்சாகத்தை மெச்சி அவரை எமது மாமன்றத்துக் கௌரவ உறுப்பினராக நியமித்துள்ளோம்.

நிதி உதவியுடன் நிற்காது நிதிசேகரிப்பு நிகழ்ச்சி ஒன்றும் நடத்துவோம் என முன்வந்தார் திரு. கணேஸ்வரன். மத்திய வங்கி பிரதி ஆளுநர் திரு. எஸ். ஈசுபரதாசனின் புதல்வி வானதியின் பரத நாட்டிய நிகழ்ச்சி 8.9.1991 அன்று புதிய கதிரேசன் மண்டபத்தில்கட்டட நிதி உதவிக்காக நடந்தது.

திரு. வே. பாலசுப்பிரமணியத்தினையடுத்து மாமன்றத்தின் ஊன்று கோலாக முன் வந்தார் இன்றைய பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராசா. கட்டிட வளர்ச்சி தடைப்படாது மேலோங்க உதவிகள் பல புரிந்த அவர் முன்னின்று செய்தது காரணமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 1.3.1992 அன்று தென்னிந்திய பாடகர்கள் டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா முதலியோரின் இன்னிசை விருந்து இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியிலிருந்து கிடைத்த நிதியிலும் பார்க்க அது மாமன்றக் கட்டிடம் பற்றி தந்த விளம்பரமும் மக்களிடையே எழுப்பிய விழிப்புணர்வும் கட்டிட நிதி சேகரிப்பில் பெரிதும் உதவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிக்குழு தலைவராகி பின் கட்டிட குழுத்தலைவராகப் பொறுப்பேற்ற திரு சின்னத்துரை தனபாலா வர்த்தத் துறையில் தனக்கிருந்த செல்வாக்கையும் கொழும்பு சைவ முன்னேற்ற சங்க தலைமையால் இருந்த மதிப்பையும் மாமன்ற நிதி சேகரிப்புப் பாதையில் திசை திருப்பிவிட்டார். கட்டிட நிதி சீட்டுகளும் அச்சிடப்பட்டு விற்பதற்கு திரு தனபாலா கடுமையாக உழைத்தார். அவருக்கு பக்கபலமாக இருந்தவர் திரு. கே.ஏ. திருஞானம்.

நாங்கள் நிதி திரட்ட சென்ற வேளையில் மாமன்றத் தலைவர் திரு கயிலாசப்பிள்ளையினதும் அவரது பாரியாரினதும் செல்வாக்கு பெருமளவில் கைகொடுத்து உதவியது. அதே மாதிரி கொழும்பு புறக்கோட்டையில் பிரதித் தலைவர் திரு. தவயோகராசாவின் நாணயமும் மதிப்பும் அவருடன் நெருங்கி நின்றுதவிய திரு என். பேரின்பநாயகத்தின் ஆர்வமும் உதவியமையையும் குறிப்பிடவேண்டும்.

நாவலர் பெருமான் காட்டிய வழியிலும் எல்லோரும் பங்குபற்றும் பாணியிலும் நிதி சேகரிக்கவேண்டும். என்று விதந்துரைத்தார் பிரதிச் செயலாளர் திரு. க. இராஜபுவனீஸ்வரன். அவர் தலைமையில் திருவாளர்கள். மு. சொக்கலிங்கம், பி. கருப்பையா, கு. மகாலிங்கம் ஆகியோர் அடங்கிய குழு ஆளுக்கொருபிடி சீட்டு விற்பனையை ஒழுங்கு செய்தது. 5.6.1992 அன்று ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் மாண்புமிகு அமைச்சர் தொண்டமான் விற்பனையை ஆரம்பித்து வைத்தார். ஆடிவேல் விழா சமயத்தில் வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலயத்திலும், கொம்பனித்தெரு அருள் மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோயில் மகாகும்பாபிஷேகம் சமயத்திலும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரியன்றும் ஆளுக்கொருபிடி சீட்டுக்களை விற்று சகல மக்களும் கட்டிட நிதி உதவியில் பங்கு கொள்ள வழிசெய்தோம்.

பேரிடிகளுக்கெல்லாம் பேரிடியாக 15-7-1992 அன்று அமைந்தது மாமன்றத்தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவு. கட்டிடக் கோப்பு வேலைகள் முடிந்து விட்டன. கட்டிடத்தை எப்படியும் முடித்து விடுங்கள் என்று சொல்லாமல் சொல்லிவிட்டுச் சிவபதம் அடைந்து விட்டார். அவர் மரணமடைவதற்கு இருதினங்களுக்கு முன் அவரை வைத்தியசாலையில் சந்தித்தபோது கூட மாமன்றக் கட்டிட வேலைகளைப் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தார். அவர் இன்று இல்லையே என்பது கட்டிட நிறைவு மகிழ்ச்சியில் பூரண நிறைவு காண முடியாத மனக் குறையை எங்களுக்குத் தருகின்றது.

2.8.1992 அன்று நடந்த முகாமைப் பேரவைக் கூட்டத்தில் பிரதித்தலைவர் திரு.வி. கயிலாசபிள்ளை ஒரு மனதாய் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட, திரு. மா. தவயோகராஜா புதிய பிரதித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தனியார் வர்த்தகத்துறையில் பெரும் மதிப்புடன் திகழும் கணக்கியல் நிபுணர் திரு கயிலாசபிள்ளையின் தலைமை புதிய பொலிவு ஒன்றினை மாமன்றத்திற்குத் தந்தது.

மறைந்த தலைவர் திரு பாலசுப்பிரமணியத்திற்கு சரஸ்வதி மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டம் நடந்த சமயம் அவர் விரும்பியபடி மாமன்றத் தலைமைக் கட்டிடத்தைக் கட்டி நிறைவேற்றுவதே அமரருக்கு நாங்கள் செய்யும் சிறந்த அஞ்சலி என்று ஒவ்வொருவரும் எடுத்துரைத்தனர். அந்த அஞ்சலியை இன்று செலுத்தி நிற்கின்றோம் என்பதில் ஒரு நிம்மதி.

29.3.1993 அன்று கொம்பனித்தெரு புண்ணிய பூமியில் அருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானின் திருத்தலத் திருக்கோபுரம் நிறைவுபெற்று மகா கும்பாபிஷேகம் நடந்தது. அத் திருக்கோபுர நிழல் தலைமையகக் கட்டிடத்தில் பட ஆரம்பித்ததும் கட்டிடவேலைகள் மேலும் துரிதம் அடைந்தன.

24.4.1993 அன்று அருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானிற்கு விசேட அபிஷேக பூசைவழிபாடு நடத்தி அத்திருத்தலத்தில் அன்னதானமும் வழங்கி அவன் அருள் பெற்றுக் கொண்டு அடுத்த தினம் 25.4.1993 அன்று காலையில் சாந்தி பூசை நடத்தி இரண்டாம் கட்டவேலைகளை ஆரம்பித்தோம். சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் சாந்தி பூசை நடத்தினர். இராமகிருஷ்ண மிஷன் மடத்தலைவர் சுவாமிஜி ஆத்மகனானந்தஜி, மாண்புமிகு திரு. எம். எஸ். செல்லச்சாமி, கொழும்பு மாநகர துணைமுதல்வர் திரு. க. கணேசலிங்கம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவர் திரு. கே. பாலகிருஷ்ணர் ஆகியோர் வாழ்த்துரை தந்து ஊக்கம் அளித்தனர். அன்றைய சுபவேளையில் கூரைக்கு வளையும் வைக்கப்பட்டது.

மாமன்றக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்ய நன்கொடை மூலம் மட்டும் நிதியைச் சேகரிக்க முடியாததை ஆரம்பத்திலிருந்தே உணர்ந்திருந்தோம். முப்பது இலட்சம் தரும் இந்து வர்த்தகர்களுக்கு ஒரு மாடியைப் பத்துவருடங்களுக்கு குத்தகையாக எதுவித மேலதிக வாடகையுமின்றித் தரலாம் என அன்றைய தலைவர் திரு. பாலசுப்பிரமணியமும் நாங்கள் பலரும் பல பிரமுகர்களை நாடி கோரி நின்றோம். பலன் கிடைக்கவில்லை. 1994 ம் ஆண்டில் நாங்கள் சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்டுடன் குறிப்பாக அதன் நிர்வாக இயக்குநர் திரு. சந்திரா ஜெயரத்தினா அவர்களுடன் பல நாட்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் காரணமாக நியாயமான அடிப்படையில் மாமன்றக் கட்டிடத்தின் சில மாடிகளைக் குத்தகைக்குக் கொடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1 கோடி இருபது இலட்சம் ரூபாவை முன்பணமாக 1994 ம் ஆண்டில் அவர்களிடம் பெற்று (திரு. நித்தியானந்தன் முருகேசு முகதாவில் இல 34 இல் 28.5.1994 திகதி முடிந்த குத்தகை உறுதிப்படி) கட்டிட வேலைகளைத் துரிதமாகச் செய்ய வழிபிறந்தது.

மாமன்றக் கட்டிட வேலைகளின் துரிதத்தில் நாம் கண்ட மகிழ்ச்சிக்கு இடையூறாக அமைந்தது நாட்டின் நிலைமை. இந்து மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் துயர்களையும் எடுத்துரைக்கவும் நிவாரணம் கோரவும் தயங்காது முன் வந்தது அகில இலங்கை இந்து மாமன்றம். இந்நாட்டின் தலைவருக்கு பல மகஜர்களை அனுப்பியிருக்கின்றோம். அமைச்சர்கள் மற்றும் அரசியற் தலைவர்களுக்கும் கோரிக்கைகள் விட்டோம். பகிரங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைகள் விடவேண்டிய சமயங்களில் அவற்றையும் வெளியிட்டோம். வெளிநாட்டுத் தூதராலயங்களுக்குக்கூட மகஜர்கள் அனுப்பினோம். அரசியற் சார்பின்றி இந்து மக்களின் நலனே எங்கள் நோக்கு என்பதனை மறவாது எந்த அரசியற்கட்சி பதவியிலிருந்தாலும் தயங்காது சொல்லவேண்டியவையை சொல்லியிருக்கிறோம்; சுட்டிக் காட்ட வேண்டியதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

அரசியலமைப்புத் திருத்த பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் யாவற்றிற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அரசியலமைப்பு திருத்த வேண்டும் என்று கோரி பொருத்தமான விதந்துரைப்புகளைச் செய்தோம். அத்துடன் குழு முன் ஆஜராகியும் எங்கள் கருத்துக்களைத் தெரிவித்தோம். அத் தூதுக்குழுவிற்கு திரு. வி. கணபதிப்பிள்ளை பேச்சாளராக இருந்து தொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தெளிவான விடைகள் கொடுத்தார்.

## இறுதி இரு ஆண்டுகளில்

மாமன்றம் நாற்பது ஆண்டுகள் பூர்த்தி செய்த சமயம் பவ வருடம் தை மாதம் 22 ம் நாள் (5.2.1995) அன்று காலை 9 மணிமுதல் 10.12 மணிவரையிலும் வந்த சுபவேளையில் சாந்திபூசை செய்து இறுதிக்கட்ட வேலைகளை ஆரம்பித்தோம். மாடிகள் யாவும் கட்டி முடிந்த நிலையில், உச்சிமாடியில் பிரார்த்தனை மண்டபம், மேடையமைப்பு வேலைகள் மட்டும் செய்ய இருந்தன. அத்துடன் மின்மாற்றி முதலிய சில வசதிகளும் ஒழுங்கு செய்ய வேண்டியிருந்தன. முதல் மாடிகள் நான்கும் நிறைவேறியிருந்தன.

இந்து மாமன்றத் தலையகக் கட்டிடம் பூர்த்தியானது கண்டு இலங்கைவாழ் இந்து மக்கள் பெருமித்து நின்றனர். அவர்களின் கருத்தை 5.2.1995 அன்று வெளிவந்த தமிழ்த் தினசரிகள் பிரதிபலித்து நின்றன. "தலைநகரில் ஒரு சைவ மாடம்" என்று வீரகேசரி புகழ்பாட "இந்து மாமன்றத்தின் இமாலய சாதனை" என்று தினகரன் மெச்சிநின்றது.

கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு சிவ சுப்பிரமணிய ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு செய்து, திருவுருவப் படங்கள் மாமன்றத் தலைமையகத்திற்கு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன.

பிரம்ம சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் பூசை செய்தனர். பெருந்திரளான மக்கள் பங்குபற்றினர்.

மிகுதி வேலைகளை – பெரும்பாலும் சகலவற்றையும் – நிறைவேற்றி இன்று உச்சிமாடியில் பிரார்த்தனை மண்டபத்தில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சகித ஸ்ரீ நடராஜப் பெருமான் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து நிறைவு காண்கின்றோம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளை நேரிலே தரிசித்து அவர் வழிகாட்டலில் இந்த விக்கிரகங்களைச் செய்வித்துள்ளோம். இந்த ஒழுங்குகளைச் செய்யப் பலவழிகளிலும் உதவியவர்கள் சென்னை வர்த்தகப் பிரமுகரும் சமயத் தொண்டருமான ஸ்ரீ எஸ். அர்ச்சுனராஜா அவர்களும் எங்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர் திரு. சு. சத்தியமூர்த்தி அவர்களும் என்பது குறிப்பிடற்குரியது. இந்த விக்கிரகங்கள் செய்ய நிதி உதவி ஒழுங்குகளைச் செய்து தந்தவர், பல அறப்பணிகளைச் செய்பவரும் இந்து அறப்பணிநிதியத்தின் தலைவரும் எங்கள் அறங்காவலர் சபையின் இன்னுமோர் உறுப்பினருமான திரு திருக்குமார் நடேசன் அவர்கள்.

இக்கட்டிடத்தை நிறைவேற்றி நிம்மதி காண்கின்ற போது ஒப்பந்தக்காரர்கள் கட்டிடக்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன், 1990 முதல் 30.6.93 வரை கட்டிட வேலை மேற்பார்வையாளராக இருந்த திரு எஸ். சுவாமிநாதன் அவரைத் தொடர்ந்து அப்பொறுப்பை 31.12.95 வரை வகித்த திரு. த. சிவசுந்தரலிங்கம் ஆறு ஆண்டுகளுக்குமேல் அல்லும் பகலும் மாமன்றக் கட்டிடமே சிந்தனையாக இருக்கும் திரு. சிவசோதி வல்லிபுரம் 1.10.1994 முதல் நிர்வாக உதவியாளராக இருக்கும் திரு. மு. சின்னையா ஆகியோர் பின்னணியில் அமைதியாக செய்த சேவையினையும் பாராட்டவேண்டும்.

ஐந்து வருடங்களுக்கு மேல் கட்டிட வேலைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்து உழைத்த திரு. எஸ். ஞானப்பிரகாசம் கட்டிடம் நிறைவேறிய நிம்மதிப் பெருமூச்சுடன் 15.7.1995 இல் சிவபதமடைந்தார். கடமையுணர்வும் கண்ணியமும் மிக்க திரு. ஞானப்பிரகாசம் இன்று எங்கள் மத்தியில் இல்லாமை பெரும் துரதிஷ்டம்.

ஆரம்பகாலம் முதல் மாமன்றக் கட்டிடத்தைக் கற்பனை செய்து வரைபடமாக வடித்தெடுத்து, காலத்துக்குக்காலம் தேவையான மாற்றங்கள் விளக்கங்கள் தந்து உழைத்தவர், நாடுபோற்றும் கட்டிடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா. பல கட்டிடங்களை நமது பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் வகையில் தன் கலைத்திறன் மூலம் சமைத்த பெருமை இவரைச் சாரும். தமிழாராய்ச்சி மாநாடுகளில் மிகவும் ஆர்வம் காட்டியும் பல திருத்தலங்களின் அமைப்புகளுக்கு வரைபடங்கள் தந்தும் தமிழுக்கும் சைவத்திற்கும் பலவழிகளில் உதவி நிற்கும் கனவான் இவர். இவர் செய்த பணியை என்றும் மெச்சி நிற்கின்றோம்.

புகையிரத திணைக்களத்தில் சிறப்புற வேலையாற்றிப் புகழ் பூத்தவர் திரு. என். ஏ. வைத்தியலிங்கம். அதன் பின் வெளிநாடு சென்று பலரும் பாராட்டப் பணிபல புரிந்தவர், பொறியியல் விற்பன்னர் வைத்தியலிங்கம். எவருக்கும் அன்பான 'வைத்தியலிங்கம் ஐயா' வின் பண்புகள் உயர்ந்தவை; மிகவும் உன்னதமானவை; கட்டிடக் குழுக்கூட்டங்களில் அவரின் அறிவும் அனுபவமும் மட்டுமல்ல அன்பான அரவணைப்பும் மிகவும் உதவியாக அமைந்து நின்றது. வயது முதிர்ந்தாலும் தயங்காது படிகளில் ஏறி உயர்ந்து வந்த கட்டிடத்தின் தரத்தை வளர்த்தெடுத்தவர் அவர்.

அமரர் திரு. ஈ. சண்முகம் அக்காலத்தில் மாமன்றக் கட்டிடக் குழுவில் ஓர் உறுப்பினர். அது போன்று அமரர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. தி. சின்னத்துரையும் கட்டிடக்குழுவிலும் நிதிக் குழுவிலும் இருந்தார். அந்தப்பரம்பரை ஆரம்பித்த பணியை இந்தச் சந்ததி முடிக்கும் வகையில் திரு. சண்முகத்தின் சகோதரியின் மகன் திரு. மாணிக்கம் தவயோகராசாவும் திரு. சின்னத்துரையின் புதல்வன் திரு. சி. தனபாலாவும் கட்டிடக்குழு நிதிக்குழு ஆகியவற்றில் கடந்த ஆறு வருடங்களாகப் பாடுபட்டு உழைத்தவர்கள். இருவரும் வெவ்வேறு வழிகளில் – பாணிகளில் – அயராது பணிபுரிந்ததுடன் பல உதவிகளையும் செய்தனர். கட்டுப்பாடுடன் நிதியாண்மை செய்த திரு. மு. கந்தசாமி கட்டிடக்குழுவின் கூட்ட அறிக்கைகளை சீராக எழுதிப் பேணிய திரு. கு. மகாலிங்கம் பலவழிகளில் தங்கள் நுட்ப அறிவையும் அனுபவத்தையும் தந்த திரு. எஸ். அருமைநாதன், திரு. வி. கங்காதரன், திரு. பி. நகுலேந்திரன், திரு. எஸ். இரத்தினசிங்கம் கட்டிடக் குழுவில் காலத்துக்குக்காலம் ஆர்வத்துடன் பங்குபற்றிய பிரதிச் செயலாளர் திரு. க. இராஜபுவனீஸ்வரன், திரு. எம். ஆர். இராஜ்மோகன், திரு. செ. தி. கனகலிங்கம் போன்ற பலர் கட்டிட வளர்ச்சிக்கு உதவியவர்கள். மின்சாரசபை பொறியியல் நிபுணர் திரு. இ. முத்துரத்தினானந்தன் பிற மதத்தவராயினும் தயங்காது பலவழிகளில் உதவினார். இப்படி உதவியவர் பலர். சிலரின் பெயர்கள் தவறுதலாக விடப்பட்டால் சிறியேனை மன்னிக்கவேண்டும். ஆரம்ப காலத்தில் பலர் கட்டிடக்குழுவில் பணியாற்றியிருக்கிறார்கள். அவை சம்பந்தமாக பதிவேடுகள் எல்லாம் கிடைக்கப் பெறாமையால் அது பற்றிக் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறேன். எனினும் கிடைத்த தகவல்களைக் கட்டிடம் வளர்ந்த கதையில் திரு. கந்தசாமி சொல்கின்றார்.

1995 ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் எடுத்த குத்தகைப்படி 21.8.1995 முதல் நான்குமாடிகளிலும் அடித்தளத்திலும் அக்கம்பனியினர் இயங்கி வருகின்றனர். ஐந்தாவது மாடியும் அவர்களுக்கு 1.5.96 முதல் 9 வருடங்களுக்குக் குத்தகை கொடுக்கப்படுகின்றது. 5ம் மாடிக்கு ஒருவருடம் 13, 1/2 இலட்சம் ரூபாவை வாடகை தருவார்கள். அதன்படி 4, 1/2 வருங்களுக்கான வாடகையை முன்பணமாகத் தருவார்கள்.

சீ.ரீ.சீ. இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்டுடன் செய்திருக்கும் குத்தகைகளின் நன்மைகளைச் சுருக்கமாக கூறப்போனால் (அ) சந்தைத் தரத்தில் நல்ல வாடகை (ஆ) வேறு எவரும் தர முன்வராத முன்பணம் (இ) அவர்களின் கணக்கில் மாநகர சோலைவரி (ஈ) அவர்களின் கணக்கில் கட்டிடம் காப்புறுதி.

1983 மார்ச் மாதத்தில் அன்றைய முகாமைப் பேரவை 6 மாடிகளையும் கட்டித் தரும் நிறுவனம் ஒன்றுக்கு 3 மாடிகளை 33 வருடங்களுக்கு வாடகையின்றிக் குத்தகையாகக் கொடுக்கத் தயாராக இருந்தது. அத்துடன் ஒப்பிடும் போது கட்டிடம் தாமதமானதும் நன்மையே என்று தோன்றுகிறது.

மாமன்றக் கட்டிடத்தின் உச்சமாடியில் பிரார்த்தனை மண்டபமும் கூட்ட மண்டபமும் இருக்கும். தற்போதைக்கு மாமன்ற அலுவல்கள் அவ்விடத்திலிருந்து இயங்கும். கூடிய விரைவில் பொருத்தமான இடத்தைக் குத்தகைக்கு எடுத்து வயோதிபர் பராமரிப்பு நிலையம், நூலகம் போன்றவற்றை அமைக்க ஒழுங்குகள் நடக்கின்றன.

1995 செப்டம்பர் 8ம் 9ம் 10ம் திகதிகளில் கொழும்பில் நடந்த 4வது உலக சைவ மாநாட்டிற்கு வருகை தந்த பேரூர் ஆதீனத்தலைவர் கயிலை மாமுனிவர் சாந்தலிங்க இராமசாமியடிகள், பழனி ஆதீன தலைவர் சண்முக அடிகளார் இலண்டன் மெய்கண்டான் ஆதீனத் தலைவர் சிவானந்த அடிகளார் ஆகியோர் மாமன்றத் தலைமையகத்திற்கு எழுந்தருளி ஆசீர்வாதம் வழங்கினர். வெளிநாட்டிலிருந்து மாநாட்டிற்கு வருகை தந்த பிரதிநிதிகளுக்கு மாமன்றம் ஒரு வரவேற்புபசாரம் வழங்கிக் கௌரவித்தது.

நாட்டின் நிலைமை இன்னும் கவலைக்கிடமான முறையிலே இருக்கின்றது. இந்து சமயத்தவர்களுக்கு வருத்தம் தரும் சில அசம்பாவிதங்கள் இடம் பெற்ற சமயங்களில் உரியமுறையில் ஆட்சேபனைக் குரல் எழுப்பியும், வடகீழ் மாகாண மக்களுக்கு ஏற்படும் பல இன்னல்கள் பற்றியும் இனப்பிரச்சினைக்கு தீர்வு அரசியற் தீர்வேயன்றி இராணுவத் தீர்வல்ல என்பதனையும் பல தடவை வலியுறுத்தி ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஏனையோருக்கும் தயங்காது எடுத்துரைத்து வருகின்றோம். அரசியற் சார்பற்ற மதநிறுவனமானாலும் கூட அரசியற் பிரச்சினைகள் எங்கள் மக்களைத் தாக்கும்போது அவர்கள் சார்பில் அரசியல் சார்பின்றி குரல் கொடுத்து வருவது எங்கள் கடமையாகக் கருதுகிறோம். சமீப காலத்தில் மாமன்றம் பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்த கருத்துக்களுக்கு உரிய அங்கீகாரமும் பலனும் கிடைத்திருக்கின்றன. மக்கள் கருத்தை எதிரொலிக்கும், தமிழ்ப் பத்திரிகைகள் மாமன்றத்தின் கருத்தையொட்டி ஆசிரிய தலையங்கங்களும் எழுதியமை குறிப்பிடற்பாலது. தைப்பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு போன்ற தினங்களை வழிபாடு தினங்களாக கருதுமாறும் அத்தினங்களில் கொண்டாட்டங்கள் விழாக்கள் கொண்டாட வேண்டாம் என்றும் அப்படியான கேளிக்கைகளுக்குச் செலவிடும் பணத்தை நிவாரண உதவிக்குச் செலவிடலாம் எனவும் நாம் விடுத்த வேண்டுகோளுக்கு சர்வதேசரீதியில் வரவேற்புக்கிட்டின.

வடகீழ் மாகாண அகதிகளுக்கு பொருட்களாகவும் பணமாகவும் சேர்த்து நிவாரண உதவி செய்து வருகிறோம். சமீபத்தில் நாலு லொறிகளுக்கு மேலான பொருட்களையும் ரூபா ஐந்தரை இலட்சம் பணத்தையும் சேர்த்து அனுப்பினோம். இலண்டனிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் அன்பர்கள் மாமன்றம் மூலம் வடகிழக்குக்கு நிவாரண உதவி அனுப்பியிருக்கிறார்கள்.

## மாமன்றத்தின் அமைப்பும் பணிகளும்

மாமன்றத்தின் அமைப்புவிதிகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு அனுபவத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப நல்லதோர் அமைப்பு விதிகளுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அமைப்பு விதிகளுக்கமைய இந்து சங்கங்களும் ஆலய அறங்காவலர்களும் மாமன்றத்தின் அங்கத்தவர்களாகச் சேரலாம். தனிப்பட்ட இந்துக்கள் இணை அங்கத்தவர்களாகச் சேரவும் வழிவகுத்து மாமன்ற அமைப்பு விதிகள் சமீபத்தில் திருத்தப்பட்டுள்ளன. மாமன்றக் கொள்கைகளை நிர்ணயிக்கும் உச்ச ஆட்சிக் குழுவாக இயங்குவது முகாமைப் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்துவ சங்கங்களின் பேராளர்கள் ஆண்டுப் பொதுக் கூட்டங்களிலும் விசேட கூட்டங்களிலும் கலந்து கொள்ளலாம். ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சகல அங்கத்துவ சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முகாமைப்பேரவை தெரிவு செய்யப்படுகின்றது. முகாமைப் பேரவை அதன் முதற்கூட்டத்தில் பதவி தாங்குநர்களை – (தலைவர் பிரதித்தலைவர் ஒன்பது துணைத்தலைவர்கள் பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர், இரு துணைச்செயலாளர்கள், பொருளாளர், துணைப் பொருளாளர்)யும் உபகுழுக்களையும் தெரிவு செய்யும். பதவி தாங்குநர்களும் குழுக்களின் செயலாளர்களும் நிறைவேற்றுக் குழுவாக இயங்குவர். நிறைவேற்றுக்குழுவும் முகாமைப்பேரவையும் இரண்டு மாதங்களுக்கொரு தடவையாவது கூட்டங்களையும் அவசியமேற்படின் அவசர கூட்டங்களையும் கூட்டி இயங்கி வருகிறோம்.

சமய விவகாரங்கள் விழாக்கள் குருகுலம் குழு, கல்விக்குழு, கட்டிடக் குழு, நிதி திரட்டல் குழு, உறுப்பாண்மை ஊக்குவிப்புக்குழு, வெளியீடுகள்குழு, சமூகநலன் குழு, அமைப்பு விதிகள் திருத்தக் குழு, அவசர நடவடிக்கைகள் குழு ஆகியன இப்போது இயங்கி வருகின்ற குழுக்கள்.

சிவானந்த குருகுலத்தை நிறுவி, பல ஆண்டுகளாக மாமன்றம் அதனை நிர்வகித்தும் பல வழிகளில் உதவியும் வந்தது. இந்நாட்டில் பயிற்சி பெற்ற இந்துக்குருமார்கள் இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்த மாமன்றம் ஆரம்பித்த பணிகளில் முதன்மையானது குருகுலத்தை நிறுவியதே. நாட்டின் நிலைமை காரணமாக இப்பணி இப்போது தடைப்பட்டிருந்தபோதும் எதிர்காலத்தில் இப்பணியை மீண்டும் தொடர ஆண்டவனருளட்டும். குருகுலப்பணிபற்றி குழுச்செயலாளர் இம்மலரில் தனியொரு கட்டுரை எழுதுகின்றார். ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட சிவானந்த குருகுலப் பாடத்திட்டத்தையும் இம்மலரில் எதிர்காலப் பயன்கருதி வெளியிடுகின்றோம்.

தலைமைக் கட்டிடம் நிறைவுபெறும்வரை விழாக்களை ஒழுங்காக நடத்த முடியவில்லை. இருந்தும் சிவராத்திரி தினத்தை ஒழுங்காக அனுட்டித்து வருவதுடன் தைப்பொங்கல் தோறும் சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபாடு நடத்தி வந்தோம்.

இந்து குருமாரை அவமதிக்கும் முறையில் சமீபத்தில் சில சம்பவங்கள் இடம் பெற்ற போதும் இந்து மக்களுக்கும் இந்து ஆலயங்களுக்கும் இடர்களும் நஷ்டங்களும் இடம் பெற்றபோதும் உரிய நடவடிக்கை எடுத்துவந்தோம்.

அரசாங்கம் இந்துக்களுக்கான விடுமுறை தினங்களான தைப் பொங்கல், மகாசிவராத்திரி, தீபாவளி முதலியவற்றிற்கான திகதிகளை நிர்ணயிக்கும் போது அகில இலங்கை இந்து மாமன்றத்தையும் கொழும்பு விவேகானந்த சபையையும் வருடந்தோறும் கலந்தாலோசித்து வருகின்றது. தைப்பொங்கல், மகாசிவராத்திரி தினங்கள் அரசவிடுமுறை தினங்களாவதற்கு மாமன்றம் அதன் ஆரம்பகாலத்தில் எடுத்த முயற்சிகளே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமிஜீ விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டபோது பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ததுடன் மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகளும் நடத்தினோம்.

கல்வி விடயத்தில் மாமன்றம் பலவழிகளிலும் அக்கறை காட்டிவருகின்றது. நாட்டின் இன்றைய நிலையில் இந்து மாணவர்களுக்கு ஏற்பட்டுவரும் இன்னல்களை உரிய இடங்களுக்கு எடுத்துரைத்து ஆவன செய்து வருகின்றோம்.

ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம் க.பொ.த. (சா.த), க.பொ.த. (உ.த.) பரீட்சைகளில் இந்து சமயம் படிப்பிக்க வேண்டும் என்பதிலும் பல்கலைக்கழகத்திலும் இந்து பீடம் இருக்கவேண்டும் என்பதிலும் மாமன்றம் செய்த முயற்சிகள் வெற்றி பெற்றன.

இரத்மலானையில் உள்ள கொழும்பு இந்துக் கல்லூரியை மீண்டும் இயங்க வைக்க அகில இலங்கை இந்து மாமன்றமும் அக்கல்லூரியின் ஸ்தாபகரும் மாமன்ற அங்கத்துவ சங்கமுமான இந்து வித்தியாபிவிருத்திச் சங்கமும் எடுத்த முயற்சிகள் பலன் அளித்தன. அதற்கு வழிவகுத்தவர்களில் இன்றைய கொழும்பு மாநகர பதில் முதல்வர் திரு. க. கணேசலிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

சுவாமி விபுலானந்தரைக் கௌரவிக்கும் முகமாக யூலை 19 இல் அகில இலங்கைத் தமிழ் தினவிழா அனுட்டிக்க வேண்டும் என்று மாமன்றம் கல்வியமைச்சுக்கு விடுத்த கோரிக்கையின்படி வருடா வருடம் யூலை 19 தமிழ்த் தினவிழா அமைந்திருக்கிறது. அன்றைய கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராசமனோகரி புலேந்திரன் இதற்கு நடவடிக்கை எடுத்தார்.

கட்டிடக் குழுவின் பணிகளை பற்றி ஏற்கனவே எடுத்தியம்பியிருக்கிறோம்.

நிதி திரட்டல் குழு பல வழிகளிலும் கட்டிடநிதி சேகரிப்பதில் உதவியது. இது பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுடன் பொருளாளர் திரு. மு. கந்தசாமி அவர்களும் இது பற்றித் தனியே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். கொழும்பு மாநகரில் வர்த்தக கேந்திரத்தில் கட்டிட நிதி சேர்க்க மட்டுமல்லாமல் நிவாரண பொருட்களும் நிதியும் சேர்க்க அயராது உழைத்தவர் நிதி திரட்டல் குழுச் செயலாளர் திரு என். பேரின்பநாயகம். நிவாரண நிதி சேர்ப்பதில் திரு சி. தனபாலா, திரு. க. பாலசுப்பிரமணியம், திரு. ரி. குழந்தைவேலு, திரு. மகாதேவா (சரஸ்வதி மண்டப முகாமையாளர்) விவேகானந்த சபை, கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், இந்து வித்தியாபிவிருத்தி சங்கம் முதலிய பலரும் உதவினர்.

உறுப்பாண்மை ஊக்குவிப்புக் குழு புதியதொரு குழு. கட்டிட நிறைவின் பின் தீவிர நடவடிக்கையில் ஈடுபடக் காத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடுகள் குழு இரு செய்தி மடல்களை வெளியிட்டது. கூடிய விரைவில் 'இந்து ஒளி' எனும் பெயரில் மாமன்றத்தின் சஞ்சிகையினை ஒழுங்காக வெளியிடத் திட்டங்கள் தீட்டப்பட்டுவருகின்றன.

சமூக நலன் குழு மாமன்றத்தின் பணிகளை மக்கள் சேவைக்கு திசைதிருப்பும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டு பணியாற்றி வருகின்றது. மாமன்றம் செய்து வருகின்ற நிவாரணப் பணிகள் பற்றி ஏற்கனவே கூறியிருக்கின்றேன். வயோதிபர் இல்லம், சிறுவர் இல்லம் போன்ற சமூகநலன் திட்டங்களையும் கூடிய சீக்கிரம் நடைமுறைப்படுப்படுத்த எண்ணியுள்ளோம். இந்து மத நிறுவனங்கள் மக்கள் சேவையில் ஈடுபடுவது போதாது என்ற குறையை நீக்க மாமன்றம் நடவடிக்கைகள் எடுக்கும்.

அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் சேர்ந்துள்ள மாமன்றம் அதன் கூட்டங்களிலும் கலந்து கொண்டு சமூகநலன் பணிகளை பரவிட உதவி நிற்கின்றது.

## சொத்துக்கள் நிதிக் கட்டுபாடுகள்

எங்கள் மாமன்றத்தின் சொத்துகளையும் நிதியையும் முறையாகப் பேணிக் காக்கும் வகையில் அமைப்புவிதிகள் திருத்தப்பட்டிருக்கின்றன. சொத்துகளை விற்பது குத்தகைக்கு கொடுப்பது முதலிய சகல விடயங்களும் மற்றும் நிதி செலவினங்களும் அறங்காவலர் சபையின் கட்டுப்பாட்டுடன் முகாமைப் பேரவையின் ஆளுமையுடன் தான் இடம் பெறலாம். அறங்காவலர் சபையில் இந்நாட்டின் துணைக் கணக்காய்வாளர் நாயகமாக இருந்து இளைப்பாறியவரும் மாமன்றத்தின் பொருளாளராக, துணைத்தலைவராக இருந்து அனுபவம் பெற்றவருமான திரு. ஆ. குணநாயகம் தலைவராகவும் மாமன்றக் கட்டிட வளர்ச்சிக்கு பெரும் துணை தந்தவர்களும் அனுபவமும் ஆற்றலும் மிக்க பிரமுகர்கள் திரு. ஹரி செல்வநாதன் (துணைத்தலைவர்) திரு. ஆ. சின்னத்தம்பி (மாமன்றத்தின் முன்னைநாள் தலைவரும் பொதுச் செயலாளரும்) திரு. தெய்வநாயகம் ஈஸ்வரன் (மொரிசிய நாட்டின் பிரதிநிதியும் ஆலய அறங்காவலரும்) திரு. தே. ம. சுவாமிநாதன் (சட்டத்தரணியும் ஆலய அறங்காவரும்) திரு. சுப்பிரமணியம் சத்தியமூர்த்தி (பிரபல சமயத் தொண்டரும் வர்த்தகப் பிரமுகரும்) திரு. திருக்குமார் நடேசன் (இந்து அறநிதியத் தலைவரும் கொடைவள்ளலும்) ஆகியோருடன் மாமன்றத் தலைவரும் துணைத் தலைவரும் இருக்கிறார்கள். பொதுச் செயலாளர் சபையின் பதவிவழிச்செயலாளர். கணக்காய்வில் நிபுணத்துவம் பெற்ற திரு. டபிள்யூ. எஸ். கிருபைரத்தினம் (கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்றின் தலைவர்) திரு. வி. கந்தசாமி (பிரதி கணக்காய்வாளர் நாயகம்) திரு. எஸ். சிதம்பரநாதன் (பிரபல கம்பனி ஒன்றின் கணக்காளர்) ஆகியோரைக் கொண்ட நிதி ஆலோசனை ஆய்வுக்குழுவும் அறங்காவலர் சபைக்கும் முகாமைப் பேரவைக்கும் மாமன்ற நிதி முகாமைத்துவத்தில் உதவி வருகின்றன.

## அங்கத்துவ சங்கங்கள்

எங்கள் மாமன்றம் ஒரு கூட்டமைப்பு – இந்நாட்டின் இந்து சங்கங்கள் சேர்ந்து இணைந்த ஒரு குடும்பம். நாட்டின் பல பகுதிகளிலும் எமது அங்கத்துவ சங்கங்கள் செய்கின்ற பணிகள் அளப்பரியன. அறப்பணிகள் பலவும் திருப்பணிகள் எண்ணற்றவையும் செய்கின்ற சிறப்பு மிக்கவை அவை. 1983 ம் ஆண்டின் பின் சில சங்கங்கள் நாட்டின் நிலைமை காரணமாக மாமன்றத்துடனான தொடர்பைத் தொடர முடியாவிட்டாலும் கூட அவை தங்களால் ஆன பங்கினைச் சிறிய அளவிலேலும் ஆற்றி வருகின்றன.

வடக்கே மாமன்றத் துணைத்தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் திருமலையில் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை மட்டக்களப்பில் மட்டக்களப்பு இந்து வாலிபர் சங்கம், கொழும்பில் விவேகானந்த சபை, கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம், கொழும்பு இந்து மகளிர் மன்றம் ஆற்றி வருகின்ற பணிகளின் மேன்மை நாடறிந்ததே. பல அரசாங்க திணைக்களங்களில் இயங்கி வந்த இந்து சங்கங்கள் மாமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தன. 1983ம் ஆண்டிற்கு பின்பு அவை இயங்காதிருப்பது வேதனைக்குரியது. இந்த நிலைக்கு விதி விலக்காக இன்றும் ஆர்வத்துடன் இயங்கிக் கொண்டிருப்பது எங்கள் அங்கத்துவ சங்கமான சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம். அவர்கள் எங்களின் நிவாரண நிதிக்குத் தாராளமாக உதவியமை குறிப்பிடற்பாலது. இன்னும் எத்தனையோ அங்கத்துவ சங்கங்கள் அமைதியாகப் பல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட எந்த நபருக்கோ ஒரு குழுவுக்கோ சார்ந்ததாக இல்லாது இந்த நாட்டின் இந்து மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அவர்களின் சங்கங்களின் கூட்டமைப்பாக – உச்ச நிறுவனமாக – மாமன்றம் கடந்த நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வருகின்றது. மாமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருந்து நாட்டு நிலைமை காரணமாக அங்கத்துவத்தைத் தொடர முடியாத சங்கங்களும் ஏனைய இந்து சங்கங்களும் ஒரே குடையின் கீழ் மாமன்றத்தின் தலைமையில் இயங்க முன்வரவேண்டும்.

## நிறைவு

தாது வருடம் சித்திரைத் திங்கள் 19 ம் நாள் (01.05.1996) காலை கொழும்பு 2 கொம்பனித்தெரு அருள் மிகு சிவசுப்பிரமணிய கோவிலில் இருந்து ஸ்ரீசிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் விக்கிரகங்களை ஊர்வலமாக எடுத்து வந்து அன்றும் மறுநாளும் கிரியா நிகழ்சிகளை சிவாச்சாரியார்கள் நடாத்தியபின் சித்திரை 21 ம் நாள் (03.05.1996) வெள்ளிக்கிழமை சித்திரைப் பூரணை நிறைநாளில் காலை 8.44 முதல் 9.56 வரை வந்த சுபவேளையில் மகாகும்பாபிஷேகம் செய்து வைத்தோம். மகாகும்பாபிஷேகத்தினை சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தி வைத்தனர். காஞ்சிபுரம் சிவஸ்ரீ க. ராயப்பு குருக்கள் அவர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடற்பாலது.

18.05.96 வரை மண்டலாபிஷேகம் நடக்கின்றது. 12.5.96 அன்று இந்த சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது. இச்சிறப்பு மலரை ஆக்குவதில் என்னுடன் கடந்த சில நாட்களாக அல்லும் பகலும் உழைத்த மலர்க்குழுவின் உறுப்பினர்கள் செல்வி சற்சொரூபவதி நாதன், திரு. எம்.ஆர். ராஜ்மோகன் ஆகிய இருவருக்கும் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன். இம் மலரை வரலாறு படைக்கும் முறையில் சிறப்புறத் தயாரித்துக்கொண்டிருக்கின்ற நண்பன் திரு. பொ. விமலேந்திரனுக்கும் அவர் தம் நிறுவனமான யூனி ஆட்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கும் மாமன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவிப்பதும் என் கடமையாகும். கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு உதவியவர் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. சின்னத்துரை தனபாலா, திரு சு. சத்தியமூர்த்தி, திரு க. பாலசுப்பிரமணியம், திரு. மு. கந்தசாமி, திரு. க. இராஜபுவனீஸ்வரன், திரு. மு. சொக்கலிங்கம், திரு. சி. வல்லிபுரம், திரு. எம். சின்னையா, கொழும்பு சைவ முன்னேற்ற சங்கத்தினர், கொழும்பு இந்து மகளிர் மன்றத்தினர்.

சிறியேனுக்குக் கிடைத்த குறுகிய காலஎல்லைக்குள் மாமன்றத்தின் ஏடுகளைப் புரட்டிக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மாமன்றத்தின் வரலாற்றையும் பணிகளையும் எடுத்தியம்பியிருக்கிறேன்.

மாமன்ற வரலாற்றில் சேவை செய்த சிலரை, கூறவேண்டிய சம்பவங்கள் சிலவற்றைத் தவறவிட்டிருக்கலாம். வேண்டுமென்று செய்த தவறு அது அல்ல – எந்த வித நோக்கமுமின்றி ஏற்பட்ட தவிர்க்கமுடியாத விளைவு என ஏற்று என்னைக்குறை காணாது மன்னிக்கும்படி அன்பாக வேண்டுகின்றேன். ஏடுகள் ஆதாரமாக அமையாத எந்த விடயத்தையும் எவரையும் புகழ வேண்டும் என்பதற்காக நாம் கூற முற்படவில்லை. எழுதுகின்ற இந்த வரலாற்றில் சில தவறிவிட்டாலும் எழுதப்பட்டவை ஆதாரபூர்வமானவை என்ற மனத்திருப்தியுடன் இதனை நிறைவு செய்து கொண்டு, வரலாறு படைக்கும் மாமன்றக் கட்டிடப்பூர்த்தி கண்டு பிரார்த்தனை மண்டபத்தில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை எழுந்தருள வைக்கின்ற இந்தத் திருவேளையில் மாமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்ற எனக்குச் சந்தர்ப்பம் தந்த அனைவருக்கும் நன்றி நவின்று, அந்த நிலையைத் தந்த எல்லாம் வல்ல ஆண்டவன் திருவடி பணிந்து இறைபணி நிற்கின்றேன்.

*மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்*
*பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப் பேசினல்லால்*
*குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த*
*நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே.*

– திருஞானசம்பந்தர்

*திருச்சிற்றம்பலம்*

## அபிஷேகப் பலன்கள்

*சிவபெருமானுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் நிகழ்த்தப்பெறும் அபிஷேகங்களால் வரும் இம்மை மறுமைப் பயன்கள் மிகப் பலவாகும். முன்னோர்கள் அனுபவ பூர்வமாகக் கண்டு தெளிந்த அபிஷேகப் பலன்களை கீழே காணலாம் :*

| | | |
|---|---|---|
| 1. | பால் | நீண்ட ஆயுள் அமையும். |
| 2. | தயிர் | நன்மக்கட் பேறு வாய்க்கும். |
| 3. | நெய் | வீடுபேறு நல்கும். |
| 4. | தேன் | குரல் இனிமை உண்டாக்கும். |
| 5. | பஞ்சாமிர்தம் | உடல் வலிமை பெறும். |
| 6. | இளநீர் | போகம் வழங்கும். |
| 7. | எலுமிச்சம்பழம் | பகையை அழிக்கும். |
| 8. | கரும்பின் சாறு | நோய் நீக்கும். |
| 9. | திருமஞ்சனப் பொடி | கடன், நோய் தீர்க்கும். |
| 10. | சந்தனத்தைலம் | சுகம் தரும். |
| 11. | திருநீறு | போகம், மோட்சம் நல்கும். |
| 12. | பன்னீர் கலந்த சந்தனக்குழம்பு | திருமகள் கடாட்சம் உண்டாகும். |
| 13. | சொர்ணாபிஷேகம் | வியாபாரலாபம் தரும். |
| 14. | வலம்புரிசங்கம் கலசாபிஷேகம் | தீவினை நீங்கி நல்வினை நல்கும்நினைத்தவை நடக்கும். |

தொகுப்பு : இரா. செ.

நன்றி : *திருப்பூர் குன்றுதோறாடல் கூட்டு வழிபாட்டுக் குழு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# From our DIARY

| | | |
|---|---|---|
| 06.02.1955 | - | Inaugurated (Name in Tamil : "Akila Ilankai Inthu Mamantram" and its English versionwas given as 'THE CONGRESS OF ALL CEYLONHINDU ASSOCIATIONS') Mr. C. Cumaraswamy was elected the President. Mr. K. Alvappillai and Mr. V.A. Kandiah were elected the Joint Secretaries. |
| September, 1955 | - | The Congress welcomed Thavaththiru Kunrukkudi Adigalar. |
| 28.10.1956 | - | One of the Founder Societies of the Congress requested the Congress to construct Hindu Cultural Home in a land which the Government was prepared to allocate to Hindus in Colombo Fort. |
| 12.05.1957 | - | Annual General Meeting (AGM) - Sir Kanthiah Vaithianathan elected the President, Mr. K. Alvappillai was elected the General Secretary. |
| 06.06.1957 | - | The Congress requested the Government to declare Thaipongal also a public holiday (Accordingly the Government declared the Thaipongal a public holiday from 1958). |
| 21.11.1957 | - | The Congress requested the Government to declare the Maha Sivaraththiri also a public holiday. |
| 1958 | - | Foundation was laid for Gurukulam (Hindu Priests' Training School) at Thiruketheeswaram. |
| 25.01.1959 | - | AGM-Mudaliyar S. Sinnathamby was elected the General Secretary. |
| 1961 | - | Establishment of Sivanantha Gurukulam at Thiruketheeswaram. |
| 16.03.1962 | - | Mr. A. Sinnathamby was elected to the office of the General Secretary. |
| 09.09.1962 | - | AGM and English version of the name was changed to "All Ceylon Hindu Congress" (ACHC). |
| 06.07.1963 | - | (1) AGM<br>(2) ACHC protests to the Government against the proposed take over by the Government of the 'Madams' at Kataragama. |
| September, 1964 | - | ACHC was requested by the Education Department to draw up a syllabus for Hinduism at G.C.E.(Ordinary Level). |
| 20.09.1964 | - | Decided to join the Congress of Religions as a member. |
| 04.10.1964 | - | Resolved to request the Government to declare Thirukoneswaran area as a sacred area. |
| 04.07.1965 | - | ACHC drew a syllabus for Hinduism for G.C.E. (Advanced Level) also |
| 22.08.1965 | - | (1) AGM.<br>(2) Mr. A.S. Gnanasampathan of India addressed ACHC. |
| 27.08.1965 | - | Sir Kanthiah Vaithianathan passed away. |
| 19.09.1965 | - | Hon. Justice P. Sriskandarajah was elected the President of ACHC. |
| February-April 1966 | - | Staged a drama 'Thodathei' (Don't touch) in various parts of Sri Lanka as a propaganda to persuade people not to consume liquor. |
| 06.10.1966 | - | (1) AGM.<br>(2) Publication of the first issue of the journal 'All Ceylon Hindu'. |
| 04.11.1966 | - | ACHC requested the Government to make Hinduism as a subject for G.C.E. (Advanced Level) and also to teach Hinduism in the University. |
| 24.02.1967 | - | ACHC resolved to ask the Government to establish a Tamil University based on Hindu cultural traditions named 'Ramanathan University'. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 16.03.1967 | - | Registered office changed from No. 3 Temple Road, Colombo 10 to No. 75 Lorenz Road Colombo 4. |
| 18.03.1967 | - | Benefit Show of the film 'Poompukar' in aid of the Congress Fund. |
| 25.03.1967 | - | AGM. |
| 11.04.1967 | | Held a propaganda meeting at Vannarpannai Vaidheesavara College in Jaffna to explain that preventing a section of the community from entering the Temples was not in keeping with the teachings of Hinduism. |
| 23.04.1967 | - | Annual Celebrations. |
| 22.08.1967 | - | Registered as a society under the Societies Ordinance on 22.08.1967 (Regn No.5167). |
| 23.11.1967 | - | Govt. Gazette published declaring ACHC as an approved charity. |
| 25.03.1968 | - | ACHC thanked the University of Sri Lanka for creating a Dept. for Hinduism. |
| 28.03.1968 | - | AGM. |
| April 1968 | - | Meetings with Mr. M. SriKantha, Secretary Ministry of Lands to obtain the land at Parsons Road (now Sir Chittampalam A Gardinar Mawatha) for ACHC building. Colombo YMHA (now known as All Ceylon YMHA), a member of the Congress to whom the land was allotted consented to the land being leased to ACHC. |
| 12.04.1968 | - | Another propaganda meeting in respect of temple entry in Jaffna. |
| 11.05.1968 | - | Annual Celebrations. |
| 24.12.1968 | - | Hon. Justice P. Sriskandarajah (President ACHC) passed away. |
| 17.01.1969 | - | (a) ACHC received a letter from the Government allotting the land to ACHC and the first Building Committee was appointed. |
| | | (b) Mr. S. Somasuntharam was elected the President of ACHC. |
| 26.03.1969 | - | AGM. |
| 27.03.1970 | - | AGM. Hon. Justice V. Sivasubramaniam was elected the President of the ACHC. |
| 19.10.1970 | - | Foundation was laid for the ACHC Building |
| 20.10.1970 | - | Flag Day for ACHC Building Fund |
| 25.03.1971 | - | AGM |
| 26.03.1972 | - | (1) AGM<br>(2) ACHC called for publication of a Hindu Encyclopedia |
| 30.09.1972 | - | Celebrated the Centenary of Sri Yogaswami |
| 1973 | - | Initial works on the foundation of the building were being done |
| 30.03.1974 | - | AGM |
| 30.03.1975 | - | AGM |
| 27.04.1975 | - | ACHC had a meeting with Trustees and Hindu Religious Associations and discussed the proposed Hindu Temperarilities Law. |
| 06.07.1975 | - | Hon. Justice V. Sivasupramaniam resigned from the Presidency of ACHC |
| 27.07.1975 | - | Mr. A. Sinnathamby was elected the President and Mr. S.Visakasuntharam as the General Secretary. |
| September 1975 | - | ACHC carried propaganda against animal sacrifice done at some Temples. |
| 28.03.1976 | - | AGM |
| 1975 - 1976 | - | Further issues of the Journal 'All Ceylon Hindu' were published |
| 27.07.1977 | - | AGM - Hon. Justice V. Sivasupramaniam was elected the President and Mr. P. Adsaramoorthy as the General Secretary. |
| 09.07.1978 | - | AGM |
| 15.07.1979 | - | AGM |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 02.08.1980 | - | (1) A GM<br>(2) Decided to ask the Government to give the lease of the land for 99 years instead of 30 years.<br>(3) Mr. P. Vanniasingham was elected the General Secretary. |
| 03.01.1981 | - | The Government agreed to extension of the period of lease to 99 years. |
| 26.04.1981 | - | ACHC was informed that it could construct only 6 floors of the Building as the Urban Development Authority (UDA) was not prepared to approve 10 floors. |
| 26.07.1981 | - | Mr. M. Sivarasa was elected the General Secretary. |
| 26.08.1981 | - | AGM |
| April 1982 | - | The World Hindu Conference |
| 30.09.1972 | - | Celebrated the Centenary of Sri Yogaswami |
| 1973 | - | Initial works on the foundation of the building were being done |
| 30.03.1974 | - | AGM |
| 30.03.1975 | - | AGM |
| 27.04.1975 | - | ACHC had a meeting with Trustees and Hindu Religious Associations and discussed the proposed Hindu Temperarilities Law. |
| 06.07.1975 | - | Hon. Justice V. Sivasupramaniam resigned from the Presidency of ACHC |
| 27.07.1975 | - | Mr. A. Sinnathamby was elected the President and Mr. S.Visakasuntharam as the General Secretary. |
| September 1975 | - | ACHC carried propaganda against animal sacrifice done at some Temples. |
| 28.03.1976 | - | AGM |
| 1975 - 1976 | - | Further issues of the Journal 'All Ceylon Hindu' were published |
| 27.07.1977 | - | AGM - Hon. Justice V. Sivasupramaniam was elected the President and Mr. P. Adsaramoorthy as the General Secretary. |
| 09.07.1978 | - | AGM |
| 15.07.1979 | - | AGM |
| 02.08.1980 | - | (1) AGM<br>(2) Decided to ask the Government to give the lease of the land for 99 years instead of 30 years.<br>(3) Mr. P. Vanniasingham was elected the General Secretary. |
| 03.01.1981 | - | The Government agreed to extension of the period of lease to 99 years. |
| 26.04.1981 | - | ACHC was informed that it could construct only 6 floors of the Building as the Urban Development Authority (UDA) was not prepared to approve 10 floors. |
| 26.07.1981 | - | Mr. M. Sivarasa was elected the General Secretary. |
| 26.08.1981 | - | AGM |
| April 1982 | - | The World Hindu Conference was held in Sri Lanka with the active participation of ACHC. |
| December 1981 | - | Negotiations were held with a company to recommence the building operations. |
| 03.02.1982 | - | Lease No. 44 (K.C.P. Jayawardena N.P.) was executed by UDA in favour of ACHC for 99 years |
| March 1983 | - | Negotiations with the Ministry of Regional Development and Hindu Religious Affairs in respect of building |
| 25.07.1983 | - | Communal riots commences in Sri Lanka |
| 31.07.1983 | - | AGM was to be held but postponed due to the riots |
| 24.11.1984 | - | 28th and 29th AGMs were to be held but postponed for want of Quorum because of the situation in the country. |
| 24.03.1985 | - | 28th and 29th AGMs |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 05.12.1985 | - | Hon. Justice V. Sivasupramaniam passed away. |
| 26.10.1986 | - | AGM - Mr. V. Balasubramaniam was elected the President of the ACHC, Mr. S. Satchithananthasivam was elected the General Secretary. |
| 19.04.1987 | - | Shanthi Pooja |
| 1987 | - | Vadamaradchy Military operations and lakhs of displaced people arrived in Colombo as refugees. ACHC |
| 03.04.1988 | - | Consequent to the death of Mr. Shanmuganathan who was the Treasurer, Mr. M. Kandasamy was elected to that office. |
| 28.07.1988 | - | Tea Party at the President's residence as a building fund raising function. |
| 26.11.1989 | - | AGM |
| 17.02.1990 | - | Conference on education organised by ACHC Education Committee |
| 02.04.1990 | - | Mr. S. Satchithananthasivam (General Secretary) passed away. |
| 28.04.1990 | - | Mr. Kandiah Neelakandan was elected as the General Secretary. |
| 31.10.1990 | - | Building works commence with Shanthi Pooja. Hon. S. Thondaman inaugurated the works. |
| 07.08.1991 | - | Mr. S.K. Thurairajah, Secretary, Building Committee, passed away. |
| 08.09.1991 | - | Bharatha Natya recital by Miss. Vanathy Easparathasan in aid of the building fund at New Kathiresan Hall. |
| 01.03.1992 | - | Musical recital by Mr. T.M. Soundrarajan, Mrs P. Susheela and other Musicians from India at BMICH in aid of the building fund. |
| 05.06.1992 | - | Commencement of sale of 'Alukkoru Pidi' Tickets at Gintupitiya Sri Sivasubramaniam Kovil in aid of the building fund |
| 15.07.1992 | - | Mr. V. Balasubramaniam (President) passed away. |
| 02.08.1992 | - | Mr. V. Kailasapillai (then Deputy President) was elected the President of ACHC. Mr. M. Thavayogarajah was elected the Deputy President. |
| 29.03.1993 | - | 'Maha Kumbabishekam' of Sri Sivasubramaniam Kovil at Colombo 2. |
| 24.04.1993 | - | Special pooja at Sri Sivasubramaniam Kovil Colombo - 2 to invoke the blessings on the ACHC building works. |
| 25.04.1993 | - | Second stage of the building works commenced with Shanthi Pooja. |
| 05.02.1995 | - | Shanthi Pooja - First 4 floors had been completed. Commencement of third stage of the building works (the 5 floor interior works). |
| 01.05.1995 | - | Lease of the first 4 floors to CTC Eagle Insurance Co. Ltd. commences. |
| 15.07.1995 | - | Mr. S. Gnanapragasam (Consultant Engineer) passed away. |
| 21.08.1995 | - | CTC Eagle Insurance Co. Ltd. moves into occupation of the first four floors. |
| September 1995 | - | World Saiva Conference in Colombo. |
| 10.09.1995 | - | Reception to religious delegates who came for the conference. |
| 06.12.1995 | - | AGM. |
| 31.03.1996 | - | The Council of Management of ACHC is informed that ACHC had collected 4 lorries of food and other items and cash Rs.5½ lakhs to the refugees of the North-East. |
| 01.05.1996 | - | Statues of Shri Nataraja Peruman and Shri Sivakami Ambal taken in procession to the ACHC Building from Sri Sivasubramania Kovil, Colombo - 2. Maha Kumbabhishekam Ceremonies commence. |
| 02.05.1996 | - | The Ceremonies continue. |
| 03.05.1996 | - | Maha Kumbabhishekam |
| 03.05.1996 to 18.05.1996 | - | Mandalabhishekam |
| 12.05.1996 | - | Launching of this special souvenir. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS

| | PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|---|
| 06.02.1955 | Mr.C.Cumaraswamy | Mr.K.Alavappillai }Joint<br>Mr.V.A.Kandiah }Secretarie | Mr.N.Manicka Idaikader |
| 12.05.1957 | Sir Kanthiah Vaithianathan | * Mr.K.Alavapillai | |
| 25.01.1959 | | Mudaliyar S.Sinnathamby | |
| 06.09.1959 | | Mr.S.Sabapathippillai | |
| 16.03.1962 | | Mr.A.Sinnathamby | Mr.S.Sabapathippillai |
| 27.08.1965 | Sir Vaithianathan <u>passed away</u> | | |
| 19.09.1965 | Justice Pon.Sri Skandaraja | | |
| 06.10.1966 | | | Mr.M.S.Kandiah |
| 24.12.1968 | Justice Pon.Sri Skandaraja <u>passed away</u> | | |
| 17.01.1969 | Mr.S.Somasundaram | | |
| 27.03.1970 | Justice V.Sivasubramaniam | | Mr.K.Satchithananda |
| 25.031973 | | | Mr.PVanniasingham |
| 30.03.1973 | | | Mr.S.Visakasuntharam |
| 27.07.1975 | Mr.A.Sinnathamby | Mr.S.Visakasuntharam | Mr.S.Sivasupramaniam |
| 27.07.1977 | Justice V.Sivasubramaniam | Mr.P.Adsaramoorthy | |
| 02.08.1980 | | Mr.P.Vanniasingham | Mr.A.Gunanayagam |
| 26.07.1981 | | Mr.M.Sivarasa | |
| 05.12.1985 | Justice V Sivasubramaniam <u>passed away</u> | | |
| 26.10.1986 | Mr.V.Balasubramaniam | Mr.S.Satchithananthasivam | Mr.S.N.Shanmuganathan |
| 03.04.1988 | | | Mr.M.Kandasamy |
| 02.04.1990 | | Mr.S.Satchithananthasivam <u>passed away</u> | |
| 28.04.1990 | | Mr Kandiah Neelakandan | |
| 02.08.1992 | Mr.V.Kailasapillai | | |
| As at today | Mr.V.Kailasapillai | Mr.Kandiah Neelakandan | Mr.M.Kandasamy |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடம் வளர்ந்த கதை

மு. கந்தசாமி
பொருளாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்

இந்துக்களுக்கும் மற்றைய சமயத்தவர்களுக்கு வழங்கியது போலவே அரசு 1948 – 1950 ஆண்டளவில் கொழும்புக் கோட்டையில் தற்போது தபால் அறை அமைந்திருக்கும் இடத்திற்கு அண்மையில் காணி ஒதுக்கியது. ஏனைய சமயத்தவர்கள் தமக்கு அரசால் வழங்கப்பட்ட காணிகளில் கட்டிடங்கள் அமைத்து தமது சமய கலாசாரப் பணிகளை மேற்கொண்டபோதும் எமது சமயத்தவர்களால் அக்காணியைப் பயன்படுத்தி கட்டிடம் அமைத்து சமய கலாசாரப்பணிகளைச் செய்ய முடியவில்லை. எனவே அக்காணி எமக்குக் கிடைக்கவில்லை.

அக்கால கட்டத்தில் எமது சமயகலாசாரப் பணிகளை அகில இலங்கை ரீதியில் ஆற்றுவதற்கு ஒரு அமைப்பு இன்மையே பிரதான காரணமென்று கொள்ளலாம். இக்குறையைப் போக்குவதற்கு 1955.2.6 ஆம் தேதி தைப் பூசத்தினத்தன்று அகில இலங்கை இந்து மாமன்றத்தை எமது முன்னோர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இம்மாமன்றம் ஆரம்பிக்கப்பட்டமை எமது சமய கலாசாரப் பணிகளுக்கு ஒரு மைல் கல்லாகும்.

கொழும்புக் கோட்டை பார்சன்ஸ் வீதி (இப்பொழுது சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை) யில் மாமன்றத்திற்கான காணியைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தைகள் காணி அமைச்சுடன் 1968 ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்டது. இக்காணி ஒதுக்கீடு அப்பொழுது கொழும்பு இந்து வாலிபர் சங்க (இப்பொழுது அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்க)த்தின் பெயரில் இருந்தது. 25.4.1968 ல் அச் சங்கம் மாமன்றத்திற்குக் காணி ஒதுக்கீடு செய்வதற்கு சம்மதம் கொடுத்தது. அச்சங்கம் மாமன்றத்தின் நெடுங்கால அங்கத்துவ சங்கங்களின் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

17.1.1969 ல் முதலாவது கட்டிடக் குழு நியமிக்கப்பட்டது. திருவாளர்கள் கே. சி. தங்கராஜா, எஸ். சோமசுந்தரம், எஸ்.ரி. சின்னத்துரை, எம். எஸ். கந்தையா, ஏ. சின்னத்தம்பி ஆகியோர் அக்குழுவின் உறுப்பினர்கள். 26.3.1969 ல் திரு த. நீதிராசாவும் 22.11.1969 ல் திருவாளர்கள் கே. செல்வநாதன், எஸ். சின்னத்துரை, வைத்தியகலாநிதி (திருமதி) ஸ்ரீஸ்கந்தராஜா சிவயோகம் ஆகியோரும் அக்குழுவில் சேர்க்கப்பட்டனர்.

திருவாளர்கள் எஸ். ரி. சின்னத்துரை, வி.கே. கந்தசாமி, ரி. விசுவலிங்கம், எம். எஸ். கந்தையா ஆகியோரைக் கொண்ட கட்டிடப் பிரசாரக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

மாமன்றத்திற்குத் தேவையான கட்டிடம் அமைப்பதற்கு வேண்டிய காணியைப் பெறுவதற்கு 1968 முதல் மாமன்றத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாக இப்பொழுது எமது தலைமையகம் அமைக்கப்பட்டிருக்கும் காணி அரசால் எமக்கு 1970 ம் ஆண்டளவில் வழங்கப்பட்டது. ஆனால் அதற்குரிய குத்தகை உறுதி அப்பொழுது வழங்கப்படவில்லை. இவ்வுறுதியை 1982 ம் ஆண்டே 99 வருடகுத்தகை ஒப்பந்தத்தில் அரசால் எமக்கு முறைப்படி வழங்கப்பட்டது.

1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் யூ.என். குணசேகரா கம்பனி தயாரித்த வரைபடங்களை மாமன்ற முகாமையினர் ஆராய்ந்ததை குறிப்பேடுகள் காட்டுகின்றன.

முதன் முதலாக மாமன்றக் கட்டிடம் அமைப்பதற்குரிய அத்திவாரக்கல் 1970 ம் ஆண்டு 10ம் மாதம் 19 ம் தேதி காலை10.00 மணியளவில் இடப்பட்டது. 20.10.1970 அன்று கட்டிட நிதிக்காக ஒரு கொடித்தினமும் நடத்தப்பட்டது. அக்கட்டிடத்தை "இந்து கலாசார நிலையம்" எனப் பெயரிடுவது எனவும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. அத்திவாரக்கல் 1970.10.19 ம் திகதி நாட்டப்பட்டாலும் கட்டிடவேலைகள் மீண்டும் 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. திரு. இ. சண்முகம் தலைமையில் திரு. எஸ். தில்லைநாதனைச் செயலாளராகவும் திரு. பி. வல்லிபுரத்தை நிதிச் செயலாளராகவும் கொண்ட ஒரு கட்டிடக்குழு திருவாளர்கள் த. நீதிராசா, எம். சுந்தரம், ரி. காங்கேசன், ஆர். யோகராஜா, கே. கே. சுப்ரமணியம், ஏ.சதானந்தன், வி. எஸ். துரைராசா, வி.நமசிவாயம் ஆகியோரையும் அங்கத்தவர்களாகக் கொண்ட ஒரு கட்டிடக் குழு சில ஆண்டுகள் கட்டிட நடவடிக்கையில் ஈடுபட்டது. அப்போது ஆறுமாடிக் கட்டிடத்தை நாற்பது இலட்சத்தில் முடிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். கட்டிட வேலைகள் நிதியின்மை காரணமாக பின்பும் தேக்க நிலையை அடைந்து கைவிடப்பட்டன. மாமன்ற குறிப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடுகளின்படி இக்கட்டிடத்தை கட்டி நிறைவேற்ற எமது அன்றைய முகாமைச் சபை மகாராஜா ஸ்தாபனத்தார் டிசைன் கொன்சோட்டியம் லிமிடெட் ஆகிய அமைப்புகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளனர். ஆனால் அப்பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை. 1987.4.19 ஞாயிறுக்கிழமை மீண்டும் கட்டிடவேலைகளைத் தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எவ்வித பயனும் அளிக்கவில்லை.

கட்டிடத்தை அமைத்து முடிக்கும் இறுதியானதும் வெற்றிகரமானதுமான முயற்சி 1990.10.31 ல் தான் தொடங்கியது. அன்றைய தினம் சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்களின் தலைமையில் நடந்த சாந்தி பூசையைத் தொடர்ந்து கட்டிடவேலைகள் மீண்டும் ஆரம்பமானது. அன்றைய தினமே மாமன்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, கட்டிடம் அமைக்கும் ஒப்பந்தத்தை நவலங்கா ரேடிங் கொம்பனியுடன் கூலி ஒப்பந்த அடிப்படையில் கையொப்பம் இட்டனர்.

பின்வரும் முறையில் கட்டிட வேலைகளைச் செய்வதெனக் கட்டிடக்குழு செய்த சிபார்சுகளை முகாமைச் சபை ஏற்று அதன்படியே கட்டிடப்பணிகள் நடைபெற்றன:-

(அ) கட்டிட வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய கூலியை ஒப்பந்தக்காரரிடம் கூலி ஒப்பந்தத்தின் மூலம் பெறுதல்

(ஆ) கட்டிடபொருட்களையும், ஏனைய உபகரணங்களையும் விலைகூறல்கள் கோரி வாங்குதல்.

(இ) விசேடமான வேலைகளை முழு ஒப்பந்தத்தின் மூலம் பெறுதல்.

நிதி சேகரிக்கும் பொறுப்புகள் முகாமைச்சபையினதும் நிறைவேற்றுக் குழுவினதும் மேற்பார்வையில் நிதிக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன.

பின்வரும் வழிகளில் நிதிசேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன :

(அ) பட்டியல்கள் மூலம் நன்கொடைகள் பெறுதல்

(ஆ) பரத நாட்டிய நிதி உதவி நிகழ்ச்சி நடத்துதல்

(இ) "பாட்டும் பரதமும் என்ற நிதி உதவி நிகழ்ச்சியைத் தென் இந்தியக் கலைஞர்கள் மூலம் நடத்துதல்.

(ஈ) கட்டிட நிதிச் சீட்டுகள் விற்பனை மூலம்

(உ) ஆளுக்கொரு பிடி சீட்டுகள் விற்பனை மூலம்

மேற்படி குழுக்கள் தங்கள் திட்டங்களையும் செயற்பாடுகளையும் முகாமைச் சபையினதும் நிறைவேற்றுக் குழுவினதும் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொண்டே செயல்பட்டன.

நாம் இறுதியாக கட்டிடம் அமைக்க தீர்மானம் எடுத்தும் நடைமுறைப்படுத்துவதற்கு இடையூறாக இருந்தவர், எமது காணிக்குள் தேநீர்க்கடை நடத்தி வந்த நபரே. இந்த நபரை காணிக்குள் தேநீர் கடை நடத்தவிட்ட எமது அங்கத்தவர் சொல்லியும் எழும்பவில்லை. ஈற்றில் எமது அன்றைய மாமன்றத் தலைவர் அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் தமது சொந்தப்பணத்தை கொடுத்து அந்த நபரை வெளியேற்றப்படாதிருந்தால் நாம் இன்றும் நீதிமன்றத்தில் வழக்கு நடத்திக் கொண்டுதானிருப்போம்; கட்டிடம் அமைத்திருக்க மாட்டோமென்றுதான் எண்ணுகிறேன்.

மாமன்றக்கட்டிடத்திற்கு அத்திவாரம் போட்டு கிட்டத்தட்ட 16 வருடங்களின் பின் கட்டிடம் அமைக்க யோசித்தபொழுது ஏற்கனவே போட்ட அத்திவாரத்தின் பலம் பற்றிய சந்தேகங்கள் எழுந்தன. எனவே ஏற்கனவே போட்டகுத்துக்கழி அத்திவாரத்தின் பலம் 'பயில் ரெஸ்ரிங் (Pile Testing) செய்து அது உறுதியானதென பொறியியல் நிபுணர்கள் சிபார்சு செய்ததன்பேரில்தான் கட்டிடம் தொடர்ந்து அமைக்கப்பெற்றது.

1988 89 ம் ஆண்டுகளில் கட்டிடம் தடையின்றி அமைப்பதற்குத் தேவையான நீர் வசதி மின் இணைப்பு, தொலைபேசி, வசதி போன்றவற்றை கட்டிடம் அமைக்கப்படும் காணிக்குள் பெறப்பட்டன. அத்துடன் கட்டிடம் சம்பந்தமான ஆலோசனைகள் நடத்துவதற்கும் கட்டிட மேற்பார்வையாளர்கள் பணியாற்றுவதற்கும் ஒருதற்காலிகக் கட்டிடம் அமைக்கப்பட்டது.

மாமன்றத்தின் புதிய கட்டிட வரைபடம் பற்றியும் கட்டிடத்திற்குத் தேவையான பணம் சேகரிப்பது பற்றியும் ஆலோசிப்பதற்கென இந்துப் பெரியார்களையும் அபிமானிகளையும் 1988.7.28 மாலை அன்றைய தலைவர் அமரர். திரு. வே. பாலசுப்பிரமணியம் தமது இல்லத்தில் ஒரு தேநீர் விருந்திற்கு அழைத்திருந்தார். அவ்வமயம் பல இந்துப் பெரியார்கள் தாமாகவே பணம் சேர்த்துத் தருவதாக முன்வந்தார்கள். இதற்கெனத் தயாரிக்கப் பெற்ற பத்திரங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பெற்றது. அன்றைய வைபவத்திற்குரிய செலவுகளையும் அமரர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களே ஏற்றுக்கொண்டார்.

### மாமன்ற தலைமையகக் கட்டிடம் :

1988 இல் இம்மாமன்றக் கட்டிடம் அமைப்பதற்கெனப் பின்வருவோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தலைவர் : வைத்தியகலாநிதி க.வேலாயுதபிள்ளை
இணைப்பாளர் : திரு. வி. கைலாயபிள்ளை
அழைப்பாளர் : திரு. சி. க. துரைராசா
உறுப்பினர்கள் : மாமன்றத் தலைவர்.
மாமன்றத் பொதுச் செயலாளர்
மாமன்றப் பொருளாளர்
திரு. சி. தனபாலா
திரு. க. இராஜபுவனேஸ்வரன்
திரு. ஆ. சின்னத்தம்பி
திரு. எஸ். சிவலோகன்
திரு. ஆ. குணநாயகம்
திரு. கு. மகாலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 ம் ஆண்டில் திரு. மா. தவயோகராசா தலைமையிலான புதிய கட்டிடக்குழு கட்டிடப்பணிகளை மீண்டும் ஆரம்பித்தபொழுது பணம் சேர்ப்பதில் இம்முறையும் வெற்றி கிடைக்குமோ என்று பலரும் அஞ்சிய வேளையில் முதலில் யாராவது பணம் போட்டு வேலைகளைத் தொடக்கினால்தான் கட்டிட வேலைகளை பூர்த்திச் செய்யமுடியுமென்று கூறி முதலில் துணிந்து தமது பணத்தையிட்டு கட்டிட வேலைகளைத் தொடக்கி வைத்த பெருமை அமரர்.திரு. வே. பாலசுப்பிரமணியத்தை சாருமென்றால் அது மிகையாகாது. அன்று அவர் துணிந்து இப்பணியில் இறங்காதிருந்தால் இன்றும் எமது மாமன்றக் கட்டிடம் கனவாகவே இருந்திருக்கும்.

எமது மாமன்றத்தலைவர் திரு. வி. கைலாசபிள்ளையும் அவரது குடும்பத்தவர்களும் எமது கட்டிட நிதிக்கு கணிசமான தொகையை அன்பளிப்புச் செய்ததுமன்றி நிதிசேகரிப்புக்கும் பல வழிகளில் உதவிகள் செய்துவருகிறார்கள்.

கட்டிட அமைப்பு வேலைகள் 1990 ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கியதிலிருந்து கடைசிவரை தேவையான சீமேந்தை அன்பளிப்புச் செய்தவர் எமது பிரதித்தலைவர் திரு. மா. தவயோகராசா ஆவார். எத்தனையோ கட்டிடங்கள் இக்காலகட்டத்தில் சீமேந்து இன்மையால் இடைக்கிடை தடைப்பட்டிருந்தன. இக்காரணத்துக்காக எமது கட்டிடப் பணிகள் எப்போதுமே தடைப்படவில்லை. ஏனெனில் அவர் எமக்கு தேவையான சீமெந்தை தங்கு தடையின்றி வழங்கிக்கொண்டே இருந்தார். அதுமட்டுமன்றி ஏனைய பொருட்கள் வாங்குவதற்கு பணம் தேவைப்பட்ட பொழுதும் தொழில் ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப் பணம் வேண்டிய பொழுதும் பணம் தந்து உதவியவர். சில கொடுப்பனவுகள் மாமன்ற நிதியிலிருந்து கொடுப்பதற்கு விதிகள் இல்லை என்றபடியால் அக்கொடுப்பனவுகளைத் தமது சொந்தப் பணத்திலிருந்தே கொடுத்து மாமன்றத்திற்கு வேண்டியவற்றைச் செய்து கொடுத்தார். கட்டிடப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு அவரின் பங்களிப்பு அளவிடமுடியாததாகும்.

பொதுச் செயலாளர் திரு கந்தையா நீலகண்டன் கட்டிடப்பணிகளைச் செய்து முடிப்பதற்கும், நிதிசேகரிப்பிலும் கட்டிடம் கட்டிமுடிந்து அதை வாடகைக்கு கொடுக்கவும் அவர் ஆற்றிக் கொண்டிருக்கும் சேவைகள் சொல்லில் வடிக்கமுடியாது. சுருங்கச் சொன்னால் அவர் இந்த கட்டிட அமைப்புத் திட்டத்தின் உயிர்நாடி எனலாம்.

1992ல் கட்டிட குழுத் தலைவரான திரு. சின்னத்துரை தனபாலா அவர்கள் கட்டிடப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு உழைத்துக்கொண்டு இருக்கிறார். அத்துடன் நிதிசேகரிப்பதிலும் முக்கிய பணி ஆற்றிக்கொண்டும் இருக்கிறார். இம்மாமன்றத்தின் கட்டிட வளர்ச்சியில் அவரின் பங்கு அளப்பரியது.

திரு.ஆ.குணநாயகம், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை, திருவாளர்கள் க. இராஜபுவனீஸ்வரன், ச. சரவணமுத்து, ஆ. சின்னத்தம்பி, செ. தி. கனகலிங்கம், ந. பேரின்பநாயகம், திருமதி அ. கயிலாசபிள்ளை திருவாளர்கள் கு. மகாலிங்கம், மு. சொக்கலிங்கம், எம். ஆர். இராஜ்மோகன், அமரர் ம. திருப்பதியாபிள்ளை, திரு. வி. செல்வநாயகம் ஆகியோர் நிதி சேகரிப்பில் மிகவும் உதவியவர்கள்.

கொழும்பு இந்து மகளிர் மன்றம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற அங்கத்துவ சங்கங்களும் தாராளமாக நிதி உதவி தந்தவர்கள் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

கட்டிடம் அமைப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கிவரும் பொறியியல் ஆலோசகர் திரு. N.A. வயித்தியலிங்கத்தின் சேவைகள் அளப்பரியது. முன்னைநாள் பொறியியல் ஆலோசகர் அமரர். திரு. ஞானப்பிரகாசத்தின் அளப்பரிய சேவைகளை நாம் இன்றும் மறக்க முடியாது. அவர் நோயுற்றிருந்த நாட்களிலும் கட்டிடப்பணிகளைப் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். அவரது ஆலோசனைகள் எப்பொழுதும் எவ்வாறு செலவைக் குறைக்கலாம் என்ற முறையிலேயே இருக்கும்.

கட்டிடக்கலைஞர் திரு.வி. எஸ். துரைராசா அவர்கள் கட்டிட அமைப்புக்குத் தேவையான வரைபடங்களையும் திராவிடக்கலைகளை பிரதிபலிக்கும் வகையில் வெளிப்படுத்தி வரைபடங்களையும் வரைந்து தந்ததுடன் மற்றும் தேவையான வேலைகளுக்கும் ஆலோசனைகள் வழங்கி எமது கட்டிட வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகிறார் அவரது சேவைகளைப் பாராட்டுகிறோம்.

திருவாளர்கள் எஸ். அருமைநாதன், வி.கெங்காதரன், ப. நகுலேந்திரன், இ. முத்துரத்தினானந்தன் ஆகிய பொறியியலாளர்களும் எமது கட்டிட வேலைகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்கள். அவர்களையும் பாராட்டுகிறோம்.

கட்டிடப் பணிகளில் 1988-91 ஆண்டுகளில் கட்டிடக் குழுச்செயலாளராக இருந்து இரவு பகலென்று பாராது செயலாற்றிய அமரர் திரு சி.க. துரைராசாவின் சேவைகளை நாம் என்றும் மறக்கமுடியாது. அவரது இடத்தை திரு. கு. மகாலிங்கம் நிரப்பி அப்பணிகளை செய்து வருகிறார்.

தடைப்பட்டிருந்த எமது மாமன்றக்கட்டிட வேலைகள் மீண்டும் 1990.10.31 ல் ஆரம்பமாகி முதலாவது கட்ட கட்டிட வேலைகள் 1993.4.24 இல் நிறைவெய்தியது. இரண்டாவது கட்ட கட்டிடப்பணிகள் 1993.4.25ல் தொடங்கி 1995.2.05ல் நிறைவுற்றன. இன்று கடைசி கட்டமாகிய பிரார்த்தனை மண்டபத்தையும் நிறைவேற்றி எமது மாமன்றக் கட்டிடப் பணிகள் அனைத்தும் பூர்த்தியடைவதையிட்டு எமது அங்கத்தவர்கள் அனைவரும் பூரிப்படைவார்கள் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தலைமையகப் பூர்த்திகண்டு புன்னகை பூக்கும் பெரியவர்"

**பல ஆண்டுகள் பொதுச் செயலாளராக இருந்த பெரியவருடன் ஒரு சந்திப்பு**
**சந்தித்தவர்: பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன்.**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பல்லாண்டுகள் அரும்பணியாற்றி – தலைவர், துணைத்தலைவர் பதவிகளைவகித்து – இன்றும் மாமன்றத்தின் அறங்காவல் சபை உறுப்பினராகத் திகழும் திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி அவர்கள் மாமன்றத் தலைமையகக் கட்டிடம் பூர்த்தியாகியது கண்டு தனது 92வது வயதிலும் உவகை கொண்டு நிற்கின்றார்.

பவுண்டன் ஹவுஸ் லேனில் தமிழும் சைவமும் கமழும் இல்லத்தில் சின்னத்தம்பி ஐயாவைச் சந்திக்கிறோம். அகில இலங்கை இந்து மாமன்றப் பணிகளுக்கு தன் வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்த பெரியவர், மாமன்றத்தின் தலைமையகப் பூர்த்தி வைபவங்களின் விபரங்களை ஆர்வமாகக் கேட்டறிந்து கொள்கிறார். 'தவறாது அவ்வைபவங்களில் கலந்து கொள்வேன்', என கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கக் கூறுகின்றார். என்றும் அவர் அருகே இருந்து அவரின் சேவையில் இரண்டறக் கலந்து விட்ட அவர் தம் பாரியார் "அவர் வராமல் இருப்பாரே ?" என்று கணவனின் உள்ளக் கிடக்கையை எடுத்துரைக்கின்றார்.

16.3.1962 முதல் 27.7.1975 வரை மாமன்றப் பொதுச் செயலாளராக விளங்கிய திரு. சின்னத்தம்பி 27.7.1975 முதல் 27.7.1977 வரை தலைவராகவும் அதன்பின் பல ஆண்டுகள் துணைத்தலைவராகவும், மாமன்ற அறங்காவலர் சபை உறுப்பினராக இருந்திருக்கின்றார். இன்றும் அறங்காவலர் சபை உறுப்பினராக இருக்கும் அவர் தள்ளாத வயதிலும் தவறாது சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு தன் பழுத்த அனுபவத்தின் பலனை மாமன்றத்திற்குத் தருகிறார்.

கொக்குவிலில் பிறந்து கொழும்பு மாநகரசபையில் 40 ஆண்டுகளுக்குமேல் சேவையாற்றிய திரு. சின்னத்தம்பி கொழும்பு மாநகரில் தமிழ் மக்களுக்கு அகில இலங்கை ரீதியில் இந்து மக்களுக்கும் செய்த சேவைகள் பல. அவற்றை நினைவு கூர்கின்ற வேளையில் மனம் நெகிழ்ந்து நிற்கின்றார். மருதானை கப்பித்தாவத்தை புனித பூமியில் ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலயம் 1790ல் நிறுவப்பட்ட பழம் பெருமையுடன் இருந்தது. ஆலய நிர்வாக சீரமைப்பில் 1936ம் ஆண்டில் இளைஞனாக ஆர்வத்துடன் ஈடுபட்ட திரு. சின்னத்தம்பியிடமே ஆலய அறங்காவலர் சபையின் முதலாவது செயலாளர் என்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அதற்குமுன் 1925ல் கதிர்காமத் தொண்டர் சபையை நிறுவி கதிர்காமம் செல்கின்ற யாத்திரிகர்களுக்கு இளம் வயதில் செய்த சேவைகளையும் 1959ல் மாத்தறைக்கு அப்பணியை நீடித்ததையும் கதிர்காமத் தொண்டர் சபையுடன் தன் பெயரை என்றும் இணைத்து நின்ற திரு. சின்னத்தம்பி நினைவு கூருகின்றார். 1954இல் தொண்டர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்படுவதிலும் அவருக்கு இருந்த தொடர்பை அறிந்து கொள்கின்றோம்.



மாமன்றத் தலைமையகக் கட்டிடம் பற்றி எங்கள் உரையாடல் திசை திரும்புகின்றது. பல ஆண்டுகளாக எத்தனை அமைச்சு அரசு அலுவலங்களின் படிகளில் அவர் மாமன்றக் காணிகுத்தகை எடுப்பதற்காக ஏறி இறங்கியிருக்கிறார் என்பதனையும் அறிகின்றோம். பல வர்த்தகப் பிரமுகர்களை எல்லாம் அவர் சந்தித்து மாமன்றக் கட்டிடத்தை எழுப்பித்தருமாறு கெஞ்சியிருக்கின்றார். அந்தப் பழைய கதைகளை நினைவு கூர்கின்ற போது அன்றைய வர்த்தகப் பிரமுகர்கள் பலரை துணைத்தலைவராக்க வேண்டும் என்பதற்காக அமைப்பு விதிகளை மாற்ற சின்னத்தம்பி ஐயா கொண்டுவந்ததிருத்தப் பிரேரணையை எதிர்த்து இளைஞனாக நண்பர்கள் க. சச்சிதானந்தன், க. இராஜபுவனீஸ்வரன் ஆகியோருடன் சேர்ந்து முகாமைப் பேரவையில் வாதிட்ட நிகழ்ச்சி என் மனத்திரையில் ஓடுகின்றது. மாமன்றக் கட்டிடம் நிறைவு பெற என்ன என்ன முயற்சிகள் எடுக்கலாமோ அவற்றைச் சின்னத்தம்பி ஐயா எடுத்து வந்திருக்கிறார். கட்டிடவேலைகள் சம்பந்தமாக ஓர் ஒப்பந்தக் காரருடன் ஏற்பட்ட பிணக்கு சம்பந்தமாக நீதிமன்றமும் ஏறிவந்திருக்கிறார். தன் சொந்தப் பணத்திலிருந்து மாமன்றத்திற்காக பல செலவீனங்களை ஏற்றிருக்கிறார்.

பல தடவைகள் சின்னத்தம்பி ஐயாவின் சேவை பாராட்டப்பட்டிருக்கின்றது. தன் அனுபவங்களின் பதிவேடுகளைப் பழைய பத்திரிகைகளையும் சேர்த்து வைத்திருக்கிறார். 18.2.1970 அன்று அவரின் நெருங்கிய நண்பர் திரு. சி. த. சின்னத்துரை அவர்கள் தலைமையில் அமைந்த ஒரு குழு திரு. சின்னத்தம்பி அவர்களின் சேவையைப் பாராட்டி, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பெருவிழா நடத்தியிருக்கின்றது. பத்திரிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் பக்கமாக அவரின் சேவையைப் பாராட்டி இருக்கின்றன. அன்றைய அமைச்சர் ஒருவர் தலைமை வகித்து திரு. சின்னத்தம்பிக்குப் பொன்னாடை போர்த்தியிருக்கிறார்.

சின்னத்தம்பி ஐயா மாமன்றத்தின் வரலாற்றில் ஓர் அத்தியாயம் என சாந்தி பூசை சமயம் ஒரு தடவை எழுதியிருந்தோம். அவரின் அனுபவத்தினை அத்தியாயங் களாகவே பல பக்கங்களில் எழுதலாம்.

தன் பதவி காலத்தில் தலைமையகம் பூர்த்தி அடையாவிட்டாலும் அப்புனித பணிக்கு அத்திவாரம் இட்டு பல ஏற்பாடுகளைச் செய்தவர்; காணிக்குத்தகையை அரசாங்கம் இரத்துச் செய்யாது காப்பாற்றியவர்; பலரை இந்துமத சேவையில் ஈடுபடுத்தியவர் – ஈடுபடவைத்தவர் என்ற பாணியிலும் அவர் உயர்ந்து நிற்கின்றார்.

சின்னத்தம்பி ஐயாவை நான் முதலில் சந்தித்தது 1968இல். சுமார் 28 ஆண்டுகளுக்கு முன் வேட்டி, கைவைத்த வெள்ளைப் பனியன் அணிந்து 'அந்தக் காலப் பென்சனியர்' கோலத்தில் இருந்தது போன்றே அவரை காண்கின்றோம். அடக்கமான தன் புன்முறுவலுடன் இளைஞன் கோலத்தில் இன்றும் எழுந்து நிற்கின்றார், அன்புடன் விடைதந்தனுப்புகிறார்.

ஒரு மனிதன் சாதித்தவை எவை? என்ற வினாவை விடுத்து அந்த மனிதன் செய்த பணிகள் எவை என்பதனை நாங்கள் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து எங்கள் மனதில் பதிய விடைபெறுகின்றோம். 'அவர் அன்று விதைத்த விதை; அதன் பயன் இன்று நாங்கள் அறுவடை செய்கின்றோம். அந்த அறுவடையைப் பார்க்க – பார்த்து உள்ளம் பூரிக்க – மனநிறைவுகாண–அந்த புனித மனிதர் இன்றும் எங்களுடன் இருப்பது எங்கள் புண்ணியம்" என்ற எண்ணங்களுடன் அவரை வாழ்த்துகின்றோம், போற்றுகின்றோம், பாராட்டுகின்றோம். அவரிடமிருந்து இளம் தலைமுறையினர் படிக்கக் கூடிய நல்லதொரு பாடம். "மனம் தளராது தொடர்ந்தும் நலம் செய்ய வேண்டியதைத் திடசங்கற்பத்தின் செய்யவேண்டும்". அவ்வழிநின்று சின்னத்தம்பி ஐயாவை என்றும் போற்றுவோமாக.

## சிவன் விரதங்கள் - 8

1. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் கைக்கொண்டு, பின் தொடர்ந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் இருப்பது;
2. மார்கழி திரு ஆதிரை நாளில் மேற்கொண்டு, பின் மாதந்தோறும் வரும் திருஆதிரை நாளில் இருப்பது;
3. உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கைக்கொண்டு பின்வரும் எல்லாப் பௌர்ணமி நாட்களிலும் இருப்பது;
4. மாசி, தேய்பிறை சதுர்த்தசி ( சிவராத்திரி)யில் தொடங்கி ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் மேற்கொள்வது;
5. கேதாரேஸ்வர விரதம் – புரட்டாசி வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி அமாவாசை வரை இருப்பது;
6. பங்குனி உத்திரநாளில் திருமண விரதம் கடைப்பிடிப்பது;
7. தை, சதுர்த்தசியில் பாசுபத விரதம் இருப்பது;
8. வைகாசி வளர்பிறை அட்டமியில் அட்டமி விரதம் இருப்பது.

## உமை விரதங்கள் - 3

1. சித்திரை மாதம் வளர்பிறை வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இருப்பது.
2. ஐப்பசி உத்திரநாளில் இருப்பது.
3. புரட்டாசி வளர் பிறைப் பிரதமை முதல் நவமி வரையில் இருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# கவிதைச் சாரம்

1. உலகமே போற்ற உயர்வாய்!உயர்வாய்!
2. தலைநகரில் இந்து மக்கட்கோர் தலைமையகம்
3. ஆலயங்கள்
4. அருள் நிறையச் செய்து நிற்கும் எங்கள் ஆலயங்கள்
5. மாமன்றத்திற்கு ஒரு கவிதாசாரம்
6. அன்பு ஊற்றோ எங்கள் மன்றம்
7. மடைதிறந்து பாயுதையா மதியிழந்தார் கோலம்
8. சாந்தி பெறும் ஆத்மா
9. மாமன்றத்தின் அறப்பணி அனைத்தும் வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# உலகே போற்ற உயர்வாய்! உயர்வாய்!

அன்பால் அறத்தால் அறக்கொடையால் மிகவோங்கி
அகிலமெலாம் போற்றும் கொழும்புத் தலைநகர்தனிலே !
தென்பாலிருந்து எம்வடபால் மகிழ நின் சேவைதனால்
சேர்த்த புகழோ மாமேரு மலைக்கு உவமை யென !
பொன்போல் மிளிரும் அகில இலங்கை போற்றிமகிழ்
இந்து மாமன்றப் பெருங்கடலே நினையென்றும் !
மின்போ லொளிர என்றென்றும் வாழ்த்தி மகிழ வாயார
என்தாய் தமிழும் அகமகிழ்ந்தாள் ஆகா ! அதுவுமற்புதமே !
நின்பேரோங்கி நிலைபெற்றென்றும் என வாழ்த்தி
நின்றோம் இலங்கை இந்துமதத் தின்பத் தமிழர்களே !

அகில இலங்கை இந்து மாமன்றப் பெருமலைத் தேனே
அகலவெம் இடர்களென அருள்வழி தாராயோ ?
திகிலதில் 'ழ்கிய திசையறியாதோர் பெருந்துணை வழியே
இகமதில் எம் அகதிகள் அகமகிழ் அருட்கடற்றேனே
முகிலதுபோல் நகர்வது வெம்துயரது நின் அருட்கொடையே
நித்தமுன் அரும்பணி போற்றி நிற்பதும் எம் கடனே
அகில இலங்கை இந்து மாமன்றமே நீ வாழ்க நீடூழி
உலகே போற்ற உயர்வாய் ! உயர்வாய் ! நீ வாழ்க ! வாழ்கவே !

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !*



- அருட்கவி வேலணை வேணியன்
(வை. கங்கைவேணியன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகரில் இந்து மக்கட்கோர் தலைமையகம்


இலக்கிய கலாநிதி செ. குணரத்தினம்

தலைவர், கொழும்பு தமிழ்ச் சங்கம்

*முன்னைநாள் அரசு அமைச்சுச் செயலாளர்*




1. விண்ணிறைந்த நெடுமாடம் மேன்மைகொள்ளும்
விறலீசன் பெருநெறியே மேவும் அன்பர்
கண்ணிறைந்த பலமாடிக் கட்டிடமாய்க்
கவினழகு சிற்பமைதி காணும் நெஞ்சின்
பண்ணுயர்ந்த பரம்பொருளின் பான்மை போற்றிப்
பரவுவார் தொழுதேத்தும் நலங்கள்வாய்ப்ப
எண்ணிறைந்த கலையழகு கவின்கொள்காட்சி
எழில்மாடம் இந்துமா மன்றம் கண்டார்

2. சிவலிங்கம் ஒன்றல்லப் பலவாய்க்கண்டு
திருமலிந்த நாடென்றே திருமூலர்கண்டார்
பவமறுக்கும் பரமனது பாதம் போற்றிப்
பண்ணிசையாய்ச் சாமகீதம்பயில் இலங்கேசன்
தவமதனால் பெற்றபெரும் வரங்களோடு
சப்தசுரங்கள் தரும்வீணைக் கொடியுயர்த்தி
உவமதிலாக் கீர்த்தியொடு அரசு செய்தே
உயர்பெருமை பெற்றதுவே இலங்கைத்தீவு

3. மாதுமையாள் பாகனுக்குத் தலங்களாக
மன்னுகே தீச்சரம் ஓர் பாலமைய
ஓதம்வந்து அலைக்கரத்தால் வாழ்த்தொலிக்கும்
ஓங்குகோண மாமலை யொருபால் ஓங்க
நாதவெள்ளம் பரந்தீசன் புகழேபாடும்
நல்லெழில்சூழ் முன்னேச்சர மொருபால்வாய்ப்ப
வேதவித்தாய் திகழ்பெருமை யாழ்நாடமைந்தே
வீற்றிருக்கும் நகுலேஸ்வர மொருபாலாக

4. கின்னரர்கள் கிம்புருவர் வாழ்த்திசைக்கக்
கிளர்ந்து எழும் ஆதவனார் எழுவானூரில்
மன்னுபுகழ் மண்டூரும் மற்றும் கீர்த்தி
மருவிநிற்கும் பலதலங்கள் மருங்கணையத்
தொன்மைநலம் கண்டொளிரும் கதிரமலை
தொட்டணையும் மாணிக்க கங்கைபோலாம்
இன்னலங்கள் பெற்றுயர்ந்து இந்துமக்கள்
இதிகாசம் கண்டதிவ் இலங்கைநாடு

5. விண்ணிறைந்த மிகுபுகழார் இந்துமக்கள்
விற்பன்ன வண்ணங்கள் வீறுகூர
தண்ணளியும் தகைசான்ற புகழும்செஞ்சொல்
தழுவிமகிழ் சான்றோர்கள் தகைமைமிக்கார்
எண்நலத்தால் ஈசன்கழலே பூசித்தலென்ற
இதயமொடு பணியாற்றி ஈட்டியசெல்வம்
கண்ணிறைந்த இம்மாடம் இதனைப்போற்றிக்
காதலித்தல் எமது கடன் என்றுரைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆடலிறை நடமிடுவான் உலகு உய்ய
அவனருளே போற்றிமகிழ் அன்பர்தங்கள்
தேடரிய செல்வம்பல் மாடம்கொண்ட
திகழ்மன்று தலைநகரில் தலைமையகமாய்
நீடரிய புகழ்விளங்க நிலைத்துச்சோபை
நிறைபுகழோடு இந்துமக்கள் நெஞ்சம்போற்றப்
பீடுயர்ந்த பெருமையொடு நிமிர்ந்துநின்றே
பெருமைபெற வேண்டுகிறோம் நன்றுவாழி!

7. நீதிபரன் சிவசுப்பிர மணியன்கண்ட
நீள்கனவும் நனவாக நிறைவுபெற்று
காதும் இதைக் காதலித்துப் பாலசுப்பிரமணியன்
கால்கோள் அன்றிட்டான் கனியுமன்பால்
தீதறியா நெறியாளர் கைலாசபிள்ளை
செயல்திறனும் வித்தகமும் தேர்பணியும்
கோதிலாத் தனபாலாதவ யோகராசா
கொள்திறனும் கொண்டபுகழ் கொழும்புமன்றம்

8. இவ்வழகார் மன்றமதை இனிதமைக்க
இடம்காண நின்றுழைத்தோர் இரும்புகழ்சேர்
தெய்விகமே சூடலுற்ற சேர் கந்தையா
வைத்திய நாதனென்ற செம்மலோடு
பவ்வியமாய்ப் பழகுசிவில் சேவையாளன்
பல் திறமை சூடலுற்ற ஆழ்வாப்பிள்ளை
ஒவ்வுயர்வு சீலம்அணி நீதியாளன்
ஒங்கு புகழ் ஸ்ரீஸ்காந்த ராசவேளும்

9. தாரணிந்த தமிழ்க்குரிசில் தமிழர்நெஞ்சில்
தனியிடத்தை காலமெலாம் தனதாய்க்கொண்டோன்
பார்அறிந்த ஸ்ரீக்காந்தா கர்மயோகி
பண்பாளன் நிலம்தரவே பகர்ந்தஆணை
ஆர்புகழே சூடலுற்ற சின்னத்தம்பி ஐயன்
அருமுயல்வால் அந்நாளிற் பலிதமாகித்
தேர்நிலமாய் மன்றமைக்க நிலம் கண்டிட்டார்
சிறப்பிதனை தமிழ்மக்கள் மறத்தலாமோ

10. அச்சாணி யாகிமன்றம் அசையும் தேராய்
அருமையுடன் நடைபயிலும் அன்னாள்நின்றே
மெச்சிடவே சேவைசெய்தோன் சற்றும்ஓயான்
மிகுபுகழார் செயலனென்ன மிளிர்ந்தோன்
சச்சிதா னந்தசிவம், பொருளாளன் என்ற
தகைசான்ற பெருமனத்தோன் கந்தசாமி
இச்சகத்தைத் துறந்த சி.க துரை ராசாவோடு
இனிதுஅவர் சேவை தொடர்ந்தார் மகாலிங்கவேளே

11. கட்டிடத்தைக் கருத்தினிலே இனிதமைத்துக்
காண்நலனும் இந்துக்கலை கலாசாரம்
மட்டில்லா அழகொழுகு மாமன்றமாக
வரைபடமாய் வழங்கிநின்ற வள்ளல் மேன்மைப்
பட்டறிவு பலகலைகள் கொள்பயிற்சி
பாங்குகொள் தமிழ் இதயம் தான்படைத்தோன்
கட்டிடக் கலைஞர்புகழ் துரைராசா என்ற
கவின்கலைகள் காதலிக்கும் கனவானாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. துறைபோகப் பொறியியலைத் தெரிந்த நூலோன்
தொல்புகழ் ஆர் புகையிரத இலாக்காநின்றே
நிறையறிவு உலகுபுகழ் நுண் புலமை
நேர்கொண்டோன் என்.ஏ. வைத்தி லிங்கத்தோடு
பொறியியல்ஆர் ஞானப்பிர காசமென்ற
புலமையினோன் மேற்பார்வை தான்புரிய
நிறைவுபெறு கட்டிடமாய் வளர்ந்து நிற்கும்
நிலமாடிக் கட்டிடமிது நீடுவாழி

13. இம்மனையின் எழுச்சிக்குப் பணிபுரிந்தோர்
இன்னுமுளர் வைத்திய கலாநிதியாம்
செம்மனத்தோன் வேலாயுத பிள்ளை மற்றும்
திருவாரும் சரவணமுத்து குணநாயகச் செம்மல்
கைமாறு கருதாத சேவையாளன் காண் இனியன்
ஜனாதிபதி கணித்துப் போற்றும்
மெய்மை கொள் சட்டத் தரணியென்ற
மிகுபுகழ்சேர் சிவராசன் மேன்மையோடு

14. வடகொழும்பு தலைமைகொள் விவேகானந்தமன்று
வழங்கு செயலன் இராசபுவனேசன் என்ற
திடமதுகொள் செயல்வீரன் மற்றும் பல்லோர்
சேவையினால் இந்துமா மன்றம் ஓங்கி
நடமதுகொள் நடராஜன் நாமம்போற்று
நலம்கனிந்த மாமன்றம் நலன்கள் ஓங்கி
இடம் மகிழ இன்றெழுந்த மன்றம் என்றும்
இன்றுபோல் நின்றொளிர்ந்து இனிதுவாழி

15. பெயர்பெயராய்ச் சுட்டாத பெருமக்கள் பல்லோர்
பேருதவி செய்திட்டார் அன்னார் வாழ்க
அயர்விலா துழைத்த செம்மல் பலபேருண்டு
அவர்தமக்குக் கைமாறு சொல்வ தெஞ்ஞன்
உயர்மனத்தார் வலதுகரம் கொடுத்த செய்தி
இடதுகரம் அறியாமல் செய்துவந்தார்
அவர்சேவை மிகப்பெரிது இந்துசமூகம்
அன்னாரைப் போற்றிடுதல் முதற்கடனாம்

16. ஆலமுண்டு அடியவரைக் காப்பதற்காய்
அருள்போந்து அமரர்களை அன்றுகாத்த
காலகண்ட னாம்சிவனே பிரணவமாய்க்
கருதுஇந்து மக்கள்கொள் காண்நெறியே
சீலமொடு ஆத்மிக அருள்தான் போற்றிச்
செம்மனத்தோர் கைசிவப்பக் கொடுத்தசெல்வம்
நீலகண்டன் செயலாற்று வித்தகத்தின்
நேர்மையதால் நிறைபணியாய் நிறைவுற்றதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மத்தளமும் சங்கொலியும் ஒருபால்முழங்கும்
மறைபயிலும் மேளம்நாதஸ் வரம்மகிழ்வால்
பக்தியொடு தேவாரம் பயிலும்கீதம்
பண்ணினொலி பாலிக்கும் ஒருபால்அன்பர்
நித்தியமாய் நிறைபுலவர் நிகழ்த்தும்செஞ்சொல்
நீர்மையொடு உசாவிநிற்கும் ஆத்மஞானம்
வைத்துமகிழ் இந்துமா மன்றம்கண்ட
மாளிகையின் மருங்குஎழும் மறையோர்ஓசை

18 நெஞ்சமார் கஞ்சமலர் நிகர்த்தஇந்து
நிறையன்பர் பூசனையொடு நின்றுபோற்ற
செஞ்சொலார் பனுவல் தொடுமாலைசூட்டித்
திசையெலாம் மன்றத்தின் புகழேபாட
கஞ்சமலர் வீற்றதிரு மால்அயனும்
காணாத திருவடியை மனத்திருத்தி
நெஞ்சமுறு காதலால் இந்துமக்கள்
நினைவிருந்து இந்துமன்றம் நீடுவாழி

19. இந்துக்கலை கலாசாரம் போற்றிநீடு
இலங்கு நலம்யாவுமே பெற்றமைந்த
சுந்தரமார் பலமாடிக் கட்டிடம்கொள்
சோபையுறும் மன்றுகொண்ட மாளிகையாய்
நந்தாத சின்னமதாய் ஆடும்ஈசன்
நடம்கொண்ட முத்திரையே கொண்டவிந்த
இந்துமா மன்றமது ஈட்டுசெல்வம்
இணையில்லா மாளிகையாய் என்றும் வாழி

20. ஆலயங்கள் தூபதீப அழகுஆர்ப்ப
அருள்மறையோர் வேதஒலி நாதவெள்ளம்
காலமது தவறாத நித்தியபூசை
கண்டொளிர ஈசன்மகிழப் பக்திசெய்வார்
கோலநயனக் கோதையர்கள் திருவிளக்கேந்திக்
கும்பிடலே கொண்டுமனம் குவிந்தகாட்சி
பால்விளங்க ஓங்கிஇந்துப் பண்பாடார்ந்து
பலநலனும் பாலித்து மாமன்றம் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள்

ஆன்ம அருள் கூட்டும் அரங்கம் அங்கு ஆணவம்
கன்மமென மாயை மருளுமிடமாம் - மனித
அங்கத்தின் அம்சமே அதன் அமைவிடமாகி
எங்கும் துலக்கம் எதிலும் விளக்கமாம் !

வாழ்பவனும் வருவான் வரமருள வந்திப்பான்
வீழ்ந்தவனும் விரும்பாமல் வேண்டியே நிற்பான் - இங்கு
வேதம் ஓதி வெம்மைகள் களைந்திட நாதனவன்
பாதம் பணிந்தால் பரம்பொருளே ! அருளே !

சோதனையில் பாதி சொல்லொண்ணா துயரும் மீதி
வேதனையில் துண்வண்டாலும் கர்மவினை கழியாது - பால்
பிறப்பது பசு மடிதன்னில் பாசங்களைவது பதிநிலையில் திரி
புரத் திருநீறு இட்டால் சிறக்கும் திருவுளம் செழிக்கும் !

ஆண்டான் அடிமையில்லை அனைவர்க்கும் சொந்தம்
மாண்டவர் மீள்வதில்லை மாய்வதே உடல் - என்று
கீதையின் பாதையில் கீர்த்தனைகள் தினந்துதிபாட
மேதையரும் மேன்மையுறும் ஆலங்களே ! !

*அமிர்த - சந்திரபாலன்,*
*திருகோணமலை.*
*(ஆயுட்கால உறுப்பினர்,*
*இந்து இளைஞர் மன்றம், திருகோணமலை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"அருள் நிறையச் செய்து நிற்கும் எங்கள் ஆலயங்கள் "

# அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கரவை கிழக்கு க.சி.சண்முகம்

1. ஆலயமே ஆன்மாவை அருள் நிறையச் செய்து அல்லல் தீர்க்கும்
ஆலயமே ஆன்மாவின் அழுக்கதனைப் போக்கி ஆக்கம் நல்கும்
ஆலயமே பிறவிப் பிணியகற்றும் அமுத மதை அளித்து நிற்கும்
ஆலயமே அனைவருக்கும் ஆன்ம சுகம் தந்திங்கே அணைக்கு மன்றே

2. அணைக்கின்ற ஆலயத்துள் அப்பன் ஒளியதனால் ஆசை நீங்கும்
அணைக்கின்ற ஆலயங்கள் ஆன்மசுகமிங்கே ஆக்கித் தந்தே
அணைக்கின்ற பேரொளியால் அல்லற் பிறவி அறுத்து நித்தம்
அணைக்கின்ற ஆலயமே அன்பாகத் தந்துதவும் அமைதி தானே

3. அமைதிதரும் ஆலயமே அவாவுடனே வெகுளித்தன்னை அகற்றி நிற்கும்
அமைதிதரும் ஆலயமே அட்ட மூர்த்தம் காட்டி ஆதரிக்கும்
அமைதிதரும் ஆலயத்தை வந்தடைய அகத்துயரமகலு மிங்கே
அமைதிதரும் ஆலயத்தை வந்தண்மத் துயரமெலா மகலு மன்றே

4. அன்று முதல் இன்றுவரை அரிய வேதம் உபநிடதம் ஆகமமே
சென்று காணாச் சிவன்பாதம் ஆலயத்தில் காண்போமிங்கே
பொன்று முடல் என்றெண்ணிப் போற்றி செய்து ஆலயத்தில்
'' நன்று செய்வோம் பணி செய்வோம் நன்மை நித்தம் ஒலிக்கவே

5. ஒலிக்கும் நினதருள் ஓங்கி வளர்ந்து உயர்ந்து நிற்கும்
சொலிக்கும் பலபயன் தோன்றாத் துணையாய்த் துலங்க வைக்கும்
வலிக்கும் துயர்களும் மாண்டிட ஆலயம் வாய்த்த திங்கே
நலிக்கும் பிறவித் துயரது போகிட நன்கருள்கே

6. அருள்க நலம்பல அன்பர் மகிழநல் லாரமுதை என்றும்
அருள்க பலபயன் அன்பாகத் தொண்ட ரருகு நிற்க
அருள்க பலபயன் ஆன்ம சுகத்தை யடைந்து நித்தம்
அருள்க பலபயன் ஆலயம் வந்திங் கடைந்த வர்க்கே

7. அடைந்தவர் நின்னருளா லென்றும் ஆறுதல் பெற்று நன்கு
மிடைந்த பலதுயர் போக்கி மிளிர்ந்து மிகவு கந்து
கடைந்த நற்பால் தருவெண்ணெ யெனவே கசிந்து நெக்கு
உடைந்த மனத்திற்கும் உறுதுணை வேண் டுவரிங்குள ஆலயத்தே

8. ஆலயம் சென்று அரன்புகழ் பாடுக அங்கு நின்று
மாலயன் தேடிய மன்றாடி மாண்பின் வடிவைக் கண்டு
தூல உடம்பால் வழிபாடு செய்து தோத்திரம் இயம்பச்
சாலவும் அன்பு சுரந்திடும் இங்குள்ள ஆலயம் சார்ந்துநில்லே

9. நிற்கும் திருவருள் நிறையும் நல் ஞானம் திருக்கோணேஸ்வரத்தில்
நிற்கும் திருவருள் நீங்காத் துயர்பல நீக்கி வைக்கும்
நிற்கும் பல அன்பர் நினைந்தன யாவும் நிறைய நல்கும்
நிற்கும் திருமுறை நீள்கழல் சுட்டி நிலைக்கு மங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நிலைக்கும் கேதீஸ்வர நாக நாதன் கவுரி நீடருளை
நிலைக்கும் படி செய்வர் நீங்காத பேரின்ப மெய்த் நித்தம்
நிலைக்கும் நல்முத்தி நீடுவழங்க அன்பர் நினைவிலெல்லாம்
நிலைக்கும் சிவமணம் நீங்காது சேர்த்து வைப்பருகந்தே

11. ஒட்டு சுட்டான் கொக்கட்டிச் சோலை யுறையும் சுயம்பு லிங்கம்
ஒட்டு சுட்டான் வேகாவன் நாத ரென்றும் இயம்பிடுமே
கொக்கட்டிச் சோலைச் சுயம்புலிங்கா விடங்கா என்று தோத்தரித்தோம்
இக்கட்டு நீக்கி விடங்க ரிருவரும் இன்பம் நல்கே

12. பொன்னம் பலவா ணேஸ்வரம் போதம் பொலிய வைப்பாய்
பொன்னம் பலவா ணேஸ்வர போற்றுதல் செய்து நின்றோம்
பொன்னம் பலவா ணேஸ்வர என்னப் போகும் துன்பம்
பொன்னம் பலவா ணேஸ்வர என்று இங்கு போற்றுவமே.

13. ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாம் முன்னை நாதா
''பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றிய னாம் பிரானாம் பெம்மான்
'' உன்னைப் பிரானாகப் பெற்ற சிவனடியார் உவந்து போற்ற
நின்னை எப்போதும் நீடன்பு செய்து நினைப்பமிங்கே

14. வற்றாப்பளை நயினை மாத்தளை மட்டுவி லென்றே நாம் போற்ற நாளும்
வற்றாத அருளூற்றை வழங்கிவரும் சத்திகளுறைகின்ற ஆலயங்கள்
'' கற்றாவின் மனம்போலக் கசிந்துருகி வேண்டி நிற்பார் களிக்க
நற்றாய ரெனக்காண நயந்து வந்து நன்மை நலமாக நல்குவாரே

15. அமிர்தகழி முறிகண்டி பொற்பதி தில்லையம் பலமெனுந் தலங்கடோறும்
அமிர்தமாம் ஞானத்தை அருளுகின்ற ஐங்கரர்க ளமருங் கோயில்
அமிர்தத்தை மதித்த நாள் மந்தரத்தை ஆழவைத்த அத்தி முகர் ஆலயங்கள்
அமிர்த நிகர் போதத்தை அருளாக எந்நாளும் ஆறாகப் பொழிவ ரிங்கே.

16. கதிர்காமம் நல்லூர் சந்நிதி மாவிட்ட புரமெனுந் தலங்கடோறும்
அதிர்நோய்கள் தீர்க்கின்ற ஆறுமுகன் ஆலயங்கள் அணைந்து தோன்றும்
வெதிரான வெம்பிறவி வேரறுக்கும் வேலவரை வேண்டி யிங்கே
முதிராத நல்லிளமை நற்செல்வம் நற்போதம் பெற்று நா முய்வமே.

17. பொன்னாலை துன்னாலை தெகிவளையே யென்கின்ற பதிக டோறும்
பொன்னான திருமார்ப ருறைகின்ற ஆலயங்கள் பொலிந்து தோன்றும்
மின்னான ஒளிபெருக மிக்க நன்மை பொழிந்துவர வரங்கள் சார
மன்னான வாழ்வதனைப் பெற்றுய்வோம் இப்பதிகள் வணங்கி நன்கே

18. சிவசக்தி ஆலயங்கள் சிறந்து தோன்றச் சின்மயமே வடிவாகிச் சோதியார்க்கும்
சிவசுதர்க ளாலயங்கள் திகழ்ந்தெமன்பைத் தித்திப்பாய் வளர்த்தெடுக்கும் நாளுமிங்கே
திருநிறைந்த திருமால் ஆலயங்க ளென்றுமிங்கே திருச்சுடரைக் காண்பிக்க
அருமருந்தாய் அதைப் போற்றித் துன்பவாழி அகற்றுவமே ஆழியார் அருளதாலே

சுபம் ! சுபம் !! சுபம் !!!

*க.சி. சண்முகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்றத்திற்கு ஒரு கவிதாசாரம்

பிரம்மஸ்ரீ ராம்.தேவலோகேஸ்வரசர்மா
பிரதம குரு ·

ஸ்ரீதேவி கருமாரி அம்பாள்
ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோயில்

திருவோங்கும் திகழ் இலங்கைத் தீவினிலே
தீஞ் செந் தமிழுடன் இந்து சமயமும் சேர்ந்து
அரு உருவாய் அளப்பரிய வளர்ச்சிதனை
ஆர்வமுடன் தான் இங்கே பெற்றுவரும் வேளை
தரு ணமதில் தக்கவொரு ஊன்றுகோலாய்
தார்மீகக் கொள்கை தனைத் தாங்கியே இன்று
பெரு வடிவாய் வளர்ந்திருக்கும் இந்துமாமன்றம் - தமிழர்
பேர் சொல்லி என்றும் பெருமை கொள்ளச் செய்யும்

இறை பணியதனை இனிய தொண்டாய்யாற்ற
ஈடு தனைக் கொடுத்துத் துணை நின்று - தமிழ்பண்பைப்
பறை சாற்றிப் பாரினிலே புகழ் கொண்டு வாழ
பக்தியருள் எம்மவரை பரவசமுடன் தொற்ற
உறை விடமாய் உற்சாகக் கூடமாயமைந்து
உண்மைத் தொண்டை உவப்புடனளிக்க
இறை யருளால் அமைத்த இந்து மா மன்றம் - தமிழர்
பேர் சொல்லி என்றும் பெருமை கொள்ளச் செய்யும்

சரி த்திரப் பெயர் கொண்ட திருத்தலங்களைத் தாங்கிச்
சான்றோர் போற்றும் சர்வ மங்கள லங்காபுரியில்
பரிவுடைப் பக்தி நெறி கொண்டு பாரினில் புகழ்கொண்ட
பத்துதலை லங்கேஸ்வரன் பதியமர்ந்த இந் நாட்டில்
திரி சடை முடியினில் திங்களனிந்த சிவனருளால்
திக்கெட்டும் தொண்டாற்றத் திகழுடனே என்றும்
சரி த்திரம் பெற வந்த இந்து மாமன்றம் - தமிழர்
பேர் சொல்லி என்றும் பெருமை கொள்ளச் செய்யும்

ஆர் வமதை மனதினிலே கொண்டு திட சங்கற்பம் பூண்டு
அழகிய இந்து மாமன்றக் கட்டிடத் தொகுதிதனை
சேர் சிற்றம்பலம் கார்டினர் வீதியிலே - என்றும்
செந்தமிழர் பெயர் தனைச் செப்பவென
கார் முகன் தம்பி கதிர் வேலோன் ஆலயமது
களிறுடனே காட்சி தந்து அருகிலமர
பார் போற்றும் சிறப்புதனைக் கொண்ட இந்து மாமன்றம்- தமிழர்
பேர் சொல்லி என்றும் பெருமை கொள்ளச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஊற்றோ எங்கள் மன்றம்

ஆக்கம் : புலவர். ஆ. பொன்னையன்.

சீரோங்கும் எத்திசையும் புகழ்ப ரப்பும்
ஈழத்தின் மேல்நகராம் கொழும்பு தன்னில்
பாரோங்கப் பணிபுரிந்து, பண்டு தொட்டு
பலர்புகழும் ஞாயிற்றின் விளக்கம் மேவி
ஏரோங்கப் போற்றுதமிழ் சைவர் சால்பில்
எழுந்தபெரு மாமன்றம் இதுவா மென்றே
வேரோங்கிக் கிளைபரப்பி விருட்ச மாக
மேதினியில் 'சிவம்'பரப்ப வளர்ந்த தன்றே.

ஆவாயி ரம்சமயம். அவற்றிற் கெல்லாம்
அணையாத அகல்விளக்கு. இந்து வாழ்வில்
ஓவாது சுடர்படர்வெண் ஞான மேகம்.
ஒருஉருவம். கனல்தாங்கும் இறைவ னார்க்கு,
மூவாதை யர்வாழியில் நாமும் சேர்ந்தே,
முட்டாத பெரும்பணிகள் செய்வம் என்றே
தேவான தேவர்க்கு இலங்கைத் தீவில்
தேர்ந்தெடுத்த சிவநெறிபேண் இம்மா மன்றம்.

ஓம் என்னும் பிரணவத்தின் வடிவம் தாங்கி
உயர்ந்தபணி செய்வதற்கும் மன்றம் வேண்டும்.
தேம் கொண்ட உள்ளத்தார் சான்றோர் சேர்ந்து
திகழவைத்த மன்றம் இது. சிறப்புச் செய்யும்.
பூம் கார்சூழ் தில்லையிலே புனித னார்க்கு
பொன்வேய்ந்த மன்றம்தான் என்றும் உண்டு.
நாம் வாழும் இந்நாட்டு மனித ருக்காய்
நயம் சேர்க்கும் மாமன்றம் கண்டோம் இஃதே.

மால்களைந்து தெருள்அழித்து அருளை வேட்கும்
மனிதருக்கு வழிகாட்டும் ஒளிவிளக் கமாகும்,
நால்வர்தமிழ், திருமுறைகள், கடவு ளார்க்கு
நல்விழாக்கள், பூசைவலம், செய்தல் வேண்டும்.
கால்புடைத்த 'பைஇம்மெய்' என்போர்க் கிங்கு
கடைத்தேறும் வழியூட்டும். சித்தாந் தத்து
ஆல்படைத்த மந்திரத்துப் பள்ளி வைத்தும்,
அனைத்தறமும் வளர்த்துமன்றம் வாழ வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனைப் போற்றுகின்ற அன்பர்க் கெல்லாம்
அறியாத மொழிப்பூசை ! என்ன செய்யும் ?
வேண்டாத முணுமுணுப்பை விலக்கி, மாற்றி,
விளங்கவரும் எங்கள்தமிழ் மொழியில் பூசை
முண்டாக வேண்டும். முடுக் கெல்லாம் இந்து
தத்துவத்தின் முழக்கங்கள். தமிழில் கொள்வோம்
ஆண்டாண்டு காலமதாய் அமைந்த எங்கள்
ஆன்மிகம் காலத்தால் மலர்ச்சி காண்போம்.

உள்ளத்தில் இந்துவெனும் எண்ணம் வென்றால்
உயர்வுண்டு வாழ்வினுக்கு உயிரும் ஊக்கும்
வெள்ளமெனப் பரவவரும் கருணைப் பிரவாகம்
வேதாந்த சிந்தனையை அருளைத் தேக்கும்.
பள்ளத்தில் வீழ்ந்தழுந்தும் உயிர்கட் கெல்லாம்
பகுத்தறிவால் பணிகளினால் ஓருலகு பூக்கும்
அள்ளஅள்ளக் குறையாத அநுபவப் பூதி
அனைவர்க்காம் மாமன்றம் தன்வழி ஆக்கும்.

தேறுமுகம் இன்றலையும் தமிழர்க் கெல்லாம்
தெளிவூட்டி இன்முகத்தால் துயர்துடைப்போம்
ஊறிவரும் 'அன்பு ஊற்று மன்றவழி' என்றே
உலகனைத்தும் முரசறைந்து முழக்கம் செய்வோம்
மாறிவரும் வாழ்வினுக்கு வளங்கள் காட்டும்
மார்க்கமெது ? இந்துமன்றம் ! வளரும் ! வாழும் !
ஏறுடையான் இசைகிளர்த்தி ஏற்றம் கொண்டு,
இவ்வுலகின் தலைமைபெற்று மாமன்றம் வாழிவாழி !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடைதிறந்து பாயுதையா – மதியிழந்தார் கோலம்

- வைத்திய கலாநிதி இ. சி. மகேந்திரராஜா



இடியிடித்து முழங்கி யெங்கும்
இருள் வானம் மூடப்
படியிடத்துப் பார்க்க வொண்ணாப்
புழுதி வெள்ளச் சூழ
உடை யிழந்தா ருரக்க முன்பு
உயிரிழந்தார் ஓலம்
மடை திறந்து பாயுதையா
மதியிழந்தார் கோலம்.

சுட்டவடை சட்டி யெலாஞ்
சுக்கு நூறாய்ப் போகச்
சுட்டவருஞ் சுட்டதினாற்
சுடுசாம்பர் வேக
கிட்ட வரும் காக்கையினங்
குதூகலமாய்க் கூடி
இட்டமுட னிணஞ் சுவைக்க
இழந்து மனஞ் சோரும்

வான்மழை குண்டு சொரிய
வளநிலஞ் சோரி தோய
நான்மறை யறங்கள் தேய
நானிலம் பாலையாக
கோன்முறை யரசு பொய்க்கக்
குரூரர்க ளாட்சி பொங்க
மேன்மை கொள் சைவநீதி
மீண்டிடா தோடு தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்திபெறும் அவர் ஆன்மா!

இரத்தினவேல் சுரேந்திரன்

திருமுறைகள் ஓதியென்ன தேவாரம் பாடியென்ன
அருமறைகள் போற்றியென்ன அறியாரைத் தூற்றியென்ன
பெரும்பறைகள் சாற்றியந்தப் பெரியவரை வாழ்த்தியென்ன
ஒருமுறையும் அவர் வழியில் ஒழுகிடநாம் நினையாமல்

மாணிக்கர் குருபூசை மணிக்கணக்கில் நடத்துவதும்
வாணிக்கு விழாவென்று வரிசையிலே பேசுவதும்
வீணிற்கு இறைத்திட்ட விழுநீராய் ஆகிவிடும்
காணிக்கை என்றேநாம் கணக்கிலதை எடுத்திட்டால்

பரமகம்ஸர் நாமமதைப் பகலிரவாய் பாடுகிறோம்
சிரமமதைப் பாராமல் சிலைகளைநாம் நாட்டுகிறோம்
உரமமைந்த உள்ளத்து உத்தமராம் அவர்களது
கிரமமான நெறிகளதை கீழ்ப்படிந்து வாழாமல்

ஆறுமுக நாவலரை அடிக்கடிநாம் இழுத்திடினும்
ஏறுகின்ற மேடைகளில் ஏற்றிவைத்துப் போற்றிடினும்
கூறுகின்ற நெறிகளதைக் குழந்தைமுதல் கற்றிடினும்
மாறுபட்ட முறையினிலே மக்கள் நாம் வாழுகின்றோம்

முத்திரைகள் அடித்ததுடன் முடிந்தது நம் கடமையென்று
நித்திரை நாம் கொள்ளாமல் நித்தமுமே அவர் வழியில்
பத்திநெறி பரவுகின்ற பாதையிலே சென்று என்றும்
சத்தியமாய் வாழ்ந்துவரின் சாந்திபெறும் அவர் ஆன்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்றின் அறப்பணி அனைத்தும் வாழி

பன்மொழிப்புலவர். த. கனகரத்தினம்
*(கொழும்புத் தமிழ்ச்சங்கத் துணைச் செயலர்)*

## வெண்பா

1. இந்துமா மன்றம் இலங்கை நகரிலங்கி
முந்துபணி பக்தி முகிழ்த்திடவே - சந்ததமும்
ஆர்த்த அருட்செல்வர் ஆதீன கர்த்தரெல்லாம்
நேர்ந்தார் தவத்தின் நிறைவு

2. காஞ்சிப் பெரியார் கருணை மழைபொலிந்து
வாஞ்சையொடு வாழ்த்த வளர்மன்றம் - தீஞ்சுவைத்தேன்
ஆசிகள் ஆர்க்கத் திருவருளும் கூட்டநின்று
காசினியில் வாழ்க தழைத்து

3. சத்தியம் சேர்சிவம் சுந்தரம் தாம்விளங்கச்
சத்தசிவ பூமியாமே சீரிலங்கை - முத்திதரும்
பாதார விந்தப் பரமன் பணிசிறக்க
வேதங்கள் வாழ்த்தும் விழைந்து

4. நல்லைநகர் நாவலர்தம் நல்வழியில் நாம்நிற்கத்
தொல்லை வினைகள் தொடராவே - தொல்லுலகில்
மூத்தபெரு இந்துவெளி நாகரிக மீன்றமதம்
காத்திடுவீர் காவலராய் நின்று.

5. அண்டம் அமைதியுற அல்லல் வினைதீரத்
தொண்டு பலசெய்க தூய்மையுடன் - பண்டமலி
கோதில் கொழும்பில் குடிகொண்ட மாமன்றே !
நீதியாய் வாழி நிலைத்து.

6. வானுயர்ந்த மாடி வடிவமைத்து சிற்பமெலாம்
தானுயர்ந்து காட்சி தருவதுபோல் - ஊனுள்ளே
உள்ளமது கோவிலாக ஊன்றிட ஆன்மிகத்தின்
வெள்ளமது பாய்க விரைந்து.

## விருத்தம்



7. வந்தித்தே வாழ்த்துவோம் வளர்பிறை போல
வளர்ந்து நாளும் வைதிகம் வாழச்
சிந்தித்தே செயற்படும் செயற்குழு வாழி
சேர்ந்த இந்துமா மன்றின் சிற்பி,
கந்தன் அடிதொழு கனதன வள்ளல்
காத்தருள் பால சுப்பிர மணியன்
இந்துமா கடல்சூழ் இலங்கை நாட்டில்
தந்த தவக்கொடை தழைத்து வாழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி ஆலய கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# இலங்கைத் திருத்தலங்கள்

1. திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத்துறைமுகமும்
2. Holy Thiruketheeswaram
3. திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்
4. கோணேஸ்வரத்தின் வண்மை
5. Thirukoneswaram
6. முன்னேஸ்வரம்
7. நகுலேஸ்வரத்தின் பெருமை
8. The Mystique of Kathirkamam
9. இரத்மலானை ஈசுவரன் கோவில்
10. திண்மைபுரச் செல்வன் காதை ஈழத்துச் சிதம்பர புராணம்
11. இலங்கையின் இந்து பாரம்பரியத்தினுட் செல்வச் சந்நிதி பெறும் இடம்
13. வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி வரலாறு
14. The Temple of Vishnu at Devinuwara
15. காலிக் கடலில் கண்டெடுத்த முருகன்
16. காலி புனித நகர்
17. அநுராதபுரம் கதிரேசன் கோயில்
18. கொம்பனித் தெரு சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும்

சேர். கந்தையா வைத்தியநாதன்
மறைந்த தலைவர், அ.இ.இ.மாமன்றம்; திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை

திருக்கேதீச்சரத்து இறைவன் புகழை நாயன்மார் இருவர் பாடிப் பரவினர். அவர்களுள் ஒருவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். மற்றவர் ஒன்பதாம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள். கேதீச்சரத்து இறைவனைப் பாடிய அவர்கள் மாந்தையின் மாண்பையும் போற்றிப் புகழ்ந்தனர். மாந்தைத்துறைமுகத்தில் தங்கி நின்ற பெரும் கப்பல்களையும் மாந்தைப்பட்டினத்தில் அமைந்து விளங்கிய பல அடுக்கு மாளிகைகளையும் மலர்ச் சோலைகளையும் பழத் தோட்டங்களையும் தம் தேவாரங்களில் தீட்டிக் கவின்பெறக் காட்டியுள்ளனர். பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தைத் துறைமுகம் அமைந்து இருந்தது. அங்கே ' மலை போன்ற அலைகள் எழுந்தும் விழுந்தும்' காட்சியளித்தன. களஞ்சியக் கட்டிடங்களும் பாலத்துறையும் பாலாவியின் தென்கரையில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் ' வங்காலை ' (வங்கம்: கப்பல், காலை: கப்பல்கள் தங்கும் நிலையம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம். பாலாவியின் வடகரையில் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்து திகழ்ந்தது. அதையடுத்து அதன் ஆட்சியாளரின் இல்லங்களும் மக்கள் வாழ்ந்த வளம் மிக்க மாளிகைகளும் காணப்பட்டன. மாளிகைத்திடல் (மாளிகைகள் நிலவிய உயர்ந்தவிடம்), பாப்பாமோட்டை ( அந்தணர்க்குரிய இடங்கள் கோயிற்குளம் (கோயில் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும் குளம்) என்ற பெயர்களுடன் இன்றும் அவை இருப்பதை நாம் காணலாம்.

பண்டைக் காலத்தில் அரேபியாக் கடல் வழியாக கப்பற் போக்குவரத்து நடந்தது. உரோமாபுரி, கிரேக்கம், பலஸ்தீனம், மெசப்பத்தேமியா, எகிப்து போன்ற நாடுகளிலிருந்து கப்பல்கள் அரேபியாக் கடலுக்கூடாகச் சென்றன. அவ்வாறு சென்ற கப்பல்களுக்குத் தென்மேல் பருவக் காற்றால் அல்லல் எதுவும் ஏற்படாமல் மாந்தைத் துறைமுகம் பாதுகாப்பளித்தது, மாந்தைத் துறைமுகம் இராமரணையின் பவளக் கற்பாறைக்கும் மன்னார்த் தீவுக்கும் தெற்கே சில கல் தொலைவில் அமைந்திருந்தது. அதனால் தென் மேல் பருவக் காற்றால் பாதிக்கப்படாத ஒதுக்கில் மாந்தைத்துறைமுகம் இருந்தது. தென்மேல் பருவக் காற்றின் கொடுமையிலிருந்து தப்புவதற்குக் கப்பல்கள் மாந்தைத் துறைமுகத்தில் தஞ்சம் புகுந்தன என்று கூறலாம். மன்னார்த் தீவுக்கும், இலங்கைக் கரைக்கும் இடையே இருந்த பகுதி அன்று கப்பற் போக்குவரத்திற்கு ஏற்றதாக விளங்கிற்று. எதிர்ப்பக்கமாக ஓடிய நீரோட்டங்களால் இப்பகுதியில் மணற்றிடர்கள் எதுவும் ஏற்படவில்லை. தென் கிழக்கு, தென்மேற்குக் காற்றுகள் எதிர்ப்பக்கமாக நீரோட்டங்களைச் செலுத்தக் காரணமாயின. எனவே தடைகள் எதுவுமின்றி ஆழமாக அமைந்திருந்த இக் கால்வாய்க் கூடாகக் கப்பல்கள் எளிதாகச் சென்று வர முடிந்தது. ஆனால் இவ்வாறு ஆழமும் அகலமும் உடையதாய்ச் சிறப்புடன் விளங்கிய மன்னார்க் கால்வாய் சுரி நிறைந்து கப்பற்போக்கு வரத்திற்குத் தடையாய் மாறியது எங்ஙனம்? மாந்தைத் துறைமுகம் மணற் குன்றுகள் நிறைந்தும், அலைபுரண்டோடிய பாலாவி பள்ளமாகவும், அதனையடுத்த பாகங்கள் மணற்றிடராகவும் மாறியது எவ்வாறு?

மாத்தளை பகுதியின் பரந்த பள்ளத்தாக்கில் ஓடிய நீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்து பாலாவி, என்ற பெயரோடு அன்று மாந்தைக் கடலில் கலந்தது. அவ்வாறு ஓடிய மல்வத்து ஓயா தன் படுக்கையை மாற்றித் தெற்குப் பக்கமாக மதவாச்சிப் பகுதிக்கூடாகப் பாய்வதாயிற்று. இக்கருத்தையே அண்மையில் இலங்கையில் விஞ்ஞான அடிப்படையில் மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை குறித்து ஆய்ந்த ருசியப் பேராசிரியரும் வலியுறுத்திச் சென்றார். இஃது இவ்வாறாகப், புதிதாக வெட்டப் பெற்ற " மாபெரும் குளம்" (Giant's Tank) ஒன்று பாலாவியை இரண்டாகப் பிரித்து விட்டது. அவ்வாறு பிரிந்த நீரின் ஒரு பகுதி அருவியாறு என்ற பெயரோடு இன்று மன்னார் தீவுக்குப் பல கல் தொலைவில் கடலில் விழுகின்றது. இவ்வாறு இரண்டாகப் பிரிந்ததன் காரணமாகப் பாலாவியின் முகத்துவாரம் சேறும், சுரியும் நிறைந்ததாக மாறிற்று. மேலும் புதிதாக அமைக்கப்பட்ட புகைவண்டிப் பாதையும், கற்பாதையும் மன்னார் கால்வாயை முற்றாக மறைத்து விட்டன. புகைவண்டிப் பாதையாலும், கற்பாதையாலும் மன்னார்தீவு இலங்கையோடு இணைக்கப்பட்டபோது, தலைமன்னார் இந்தியாவிற்குக் கிட்டிய துறைமுகமாயிற்று. பராக்கிரமபாகு மன்னன் காலத்திலிருந்தும், போர்த்துக்கேயர் வருகையிலிருந்தும் தலைமன்னார் சிறந்த துறைமுகமாக அமைந்து விளங்கிற்று. மாந்தை எவ்வாறு முக்கிய துறைமுகமாக விளங்கியதோ அதே போன்று தலைமன்னாரும் முக்கியம் பெற்றுத் திகழத் தொடங்கியது. கி.மு. பதினோராம் நூற்றாண்டின் முன் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக மாதோட்டம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் உரிய சிறந்த துறைமுகமாகவும் அமைந்து விளங்கிற்று. அல்லாமலும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பெற்ற பண்டங்களை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துறைமுகமாகவும் இருந்தது.

தமிழகத்தின் தென்கரையிலே அமைந்து மிளிர்ந்த "இராமேஸ்வரத்திற்கு" ஈடும் இணையும் உள்ளதாய் ஈழத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார்க்கரையிலே திருக்கேதீஸ்வரம்'' அமைந்து விளங்குகின்றதன்றோ! ஆனால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த அந்நியர் படைகளால் பலமுறை திருக்கேதீஸ்வரம் அல்லலுக்குள்ளாயிற்று. எனவே, எதிர்க்கரையில் திகழ்ந்த இராமேஸ்வரம் படையெடுப்புக்களால் பங்கப்படாமல் சிறப்புடன் விளங்கித் திருக்கேதீச்சரம் சீரழிந்து சிறப்புக் குன்றிற்று. ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்வு தாழ்விற்கேற்பத் திருக்கேதீச்சரம் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தது. சோழ மன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டினதும் அந்தஸ்து உச்ச நிலையை அடைந்தது. ஆனால் அரசியலில் ஏற்பட்ட மாற்றம் அவைகளின் சிறப்பைத் திடீரெனச் சீரழியச் செய்தது. திருக்கேதீச்சரம் சிறப்புடன் இருந்தகாலத்தில் இராஜராஜேஸ்வரம் என்ற பெயரோடும் வழங்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்துச் சிங்கை நகரிலே அரச குடும்பத்தில் பிறந்த காரணத்தால் பராக்கிரமபாகுமன்னன் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மேல் அந்தரங்கமான அனுதாப முடையவனாயிருந்தான். இன்னும் முதலாம் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251 – 1280) ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சரம் அரசனின் ஆதரவைப் பெற்று பாண்டியமன்னன் காலச் சிற்பமுறையில், புதுப்பித்துக் கட்டப்பட்டது. இன்று திருக்கேதீச்சரத்தில் காணப்பெறும் கற்சிற்பங்கள் இவ்வுண்மையை வலியுறுத்தும் சான்றுகளாம். மேலும் குடுமியா மலையிலுள்ள சடாவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று அவன் ஈழத்தில் ஈட்டிய வெற்றியைப் புகழ்ந்து பேசுகின்றது. ஈழத்து அரசனை வென்ற தோடல்லாமல் அவனைக் கப்பம் கட்டுமாறும் செய்தான் என்றும் தனது இரட்டை மீன் முத்திரையையும், கொடியையும் கோணமலையில் (திருக்கோணமலை) பொறித்துத் தன் நாடு திரும்பினான் என்றும் அக் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. எனவே சடாவர்மன் ஆட்சிக் காலத்திலே திருக்கேதீச்சரம் அவனின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். இலங்கையை வென்ற சடாவர்மன் கடல் வழியாகத் திருக்கோணமலைக்குச் சென்றிராவிட்டால் திருக்கேதீச்சரம் அவனாதரவைப் பெற்றிருக்கும்.

போர்த்துக்கேயர் இலங்கையின் வடகரையில் இறங்கியபோது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது என்பது திண்ணம். "எமேர்சன் ரெனந்து" கூறுவதை இங்கு நோக்குவோம்.

"யாழ்ப்பாணத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அங்கே ஆட்சி செய்த மலபார் அரசபரம்பரை அரசுரிமையை ஒழித்து நேரடியான ஆட்சியை 1617 வரையிலும் போர்த்துக்கேயர் ஏற்படுத்தவில்லை. தமது வாணிகப் பெருக்கத்திற்குத் துணைபுரிந்த வளம் மிக்க தென்மாகாணங்களிலும் பார்க்க, தங்கள் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பளிக்கத் தகுதியுடையதாக இருந்த யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நீண்ட காலமாக விரும்பி வந்தனர். ஆட்சிக்குப் பணியாத அப்பகுதியில் தமது மதத்தையும் பரப்பப் பாடுபட்டனர். இப்பகுதியைக் கைப்பற்ற 1544 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் முயன்றனர். போர்த்துக்கேயர் டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையடிக்கச் சென்ற போது இவ்வாறு முயன்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைவனைக் கண்டு தம் கீழ்ச் சிற்றரசனாக இருந்து கப்பங் கட்டுமாறு வற்புறுத்தினர். அதை விரும்பாத விடத்து அவன் தம்மோடு சேர்ந்து போரிடத் தயாராகவேண்டும் என்று கூறினர். அத்தலைவன் முன்னையதற்கு இணங்கி ஆண்டொன்றுக்கு 4000 டுக்கட்ஸ்க் கப்பங் கட்ட இசைந்தான். அதே ஆண்டில் மன்னார்ப் பகுதி மக்கள் பலர் வண. பிரான்சிஸ் சேவியரின் ஆணையின் கீழ் உரோமன் கத்தோலிக்கராக மாறினார். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் மதமாற்றத்தை வேரறுக்க, மதம் மாறிய அறுநூறு பேர்களைக் கொன்று ஒழித்தான். ஏன்? மதம் மாறிய தனது தனயனின் தலையையே கொய்து விட்டான். இதனைக் கண்ணுற்ற இரண்டாவது மகன் தன் தந்தைக்கு பயந்து கோவா சென்று அங்கே சரணடைந்தான்."

"இவ்வாறு வரம்பு கடந்து கொடுமைகள் செய்த அரசனுக்கு உறுதியான, மெதுவான, ஆனால் கடுமையான தண்டனை அளிக்கும்படி மூன்றாம் ஜோன் இந்திய வைஸ்ரோய்க்குக் கட்டளையிட்டான். இதனால் மன்னார்ப் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள் முன்போலத் தொல்லைகளுக்குள்ளானார்கள் என்றும் கோவாவிற்கு ஓடிச் சென்றவனின் அண்ணனுடைய அரசுரிமை பறிக்கப்பட்டது என்றும் இரு காரணங்களைக் காட்டி 1560 ஆம் ஆண்டில் இந்திய வைஸ்ரோய் 'டொன் கொன்ஸ்டான்டைன் டிப்பிரகாசர் (Don Constanine De Braganza) யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது போர் தொடுத்தான். டி கௌடேவின் (De Couto) இந்திய வரலாற்றின் எழுபதாவது பிரிவு இதனை நன்கு விளக்கிக் கூறுகின்றது. அதன்படி கொச்சி மேற்றிரணியார் போர்த்துக்கேயப் படைகளுடன் இங்கு வந்தார் என்றும் கடற்கரையில் பலிபீடம் ஒன்றை அமைத்து அதைப் பணிந்து வணங்கி ஏற்றுக் கொள்வோரை மன்னித்துப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறினார் என்றும் தெரிய வருகின்றது. இவ்வாறு தொடங்கிய போர் மிகவும் கொடுமை நிறைந்ததாக இருந்தது. மத நம்பிக்கையுள்ளோர் பலர் போர்த்துக்கேயரின் பீரங்கிகளுக்கு இரையாயினர். நகரமும் கைப்பற்றப்பட்டு அரண்மனையும் அழிக்கப்பட்டது. அரசனும் பிடிபட்டான். போர்த்துக்கேயர் அரசன் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்றும் ஏழாவது புவனேகபாகுவின் மருமகனும், டொன் ஜோன் தர்மபாலாவின் தந்தையுமான திரிபண்டா கண்டியிலிருந்தும் கோட்டையிலிருந்தும் கைப்பற்றிய செல்வங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக்கூற வேண்டும் என்றும் வற்புறுத்தினர். அவ்வாறு அவன் செய்யின் இழந்த அரசுரிமையை மீண்டும் பெறமுடியும் என்றும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். அதற்கு உடன்பட்ட மன்னன் 8000 குருசே டோஸ் தொகையையும் மன்னார்த் தீவையும் போர்த்துக்கேயருக்குக் கொடுக்க முன்வந்தான்".

" மேலும் யாழ்ப்பாண அரசன் சிங்களவர்களோடு சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராக உதவி செய்தான் என்ற குற்றத்திற்காக 1591 –ஆம் ஆண்டிலும், 1604 ஆம் ஆண்டிலும் கோவாவிலிருந்து படைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. அப்போர்களில் வலி குன்றிய அரசன் ஒவ்வொரு முறையும் பணிந்து சென்றமையால் பயமுறுத்தலின் அபாயம் குறைந்தது. அதனால் யாழ்ப்பாணப் பகுதி தமக்கு உரித்தானது என்று போர்த்துக்கேயர் கொண்டிருந்த எண்ணம் போர்களின் நிலைமைக்கு ஏற்ப சிறிது சிறிதாகப் பின்போடப்பட்டது. ஆனால் 1617–ம் ஆண்டில் ' கொன்ஸ்டன்டைன்' டி சாய் நொரோனா' (Constantine De Saay Norona) இன் அரசியற் தூதரின் கீழ்ப் படையொன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. அப்படை அநாரிகமான முறையில் போர் செய்து நகரைக் கைப்பற்றியது. அல்லாமலும் யாழ்ப்பாணத்து மன்னனைக் கோவாவிற்குக் கைதியாகக் கொண்டு சென்று அங்கே அவனின் தலையை வெட்டியும் விட்டது. இதனால் அவனது மருமகனான மலபார் அரசபரம்பரையைத் சேர்ந்த கடைசி இளவரசன் தன் அரசுரிமையை இழந்து பிரான்ஸிக்கன் மடத்தில் சேர்ந்தான். அவனது உடைமைகள் அனைத்தும் போர்த்துக்கேயருக்கு ஆயது'. என்று ஏமேர்சன் ரெனந்து எடுத்துக் கூறியுள்ளார்.

எமேர்சன் ரெனந்து (Emmerson Tennent) வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும், போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில், திருக்கேதீச்சரம் சீரும் சிறப்பும் உள்ளதாய் திகழ்ந்தது என்பது தெளிபு டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையிடப் போர்த்துக்கேயர் முயன்றனர். அவ்வாறு முயன்று கொண்டிருந்த அவர்களுக்கு இந்தியக் கரையில் அமைந்து விளங்கிய திருச்செந்தூர் ஆலயத்தையும், கன்னியா குமரிக் கோயிலையும் கொள்ளையிடுவதிலும் பார்க்கத் திருக்கேதீச்சரத்தைக் கொள்ளையடித்தல் மிகவும் எளிதாக இருந்தது. அவ்வாறு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றியும் கண்டனர். (இராமநாதபுரம் இராசாவின் படைபலக் காரணத்தாற்போலும் இராமேஸ்வரத்தைக் கொள்ளையடிக்கப் போர்த்துக்கேயரால் இயலாமற் போயிற்று).

மேலும், மன்னார்த் தீவில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. அவ்வாலயத்தை இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தைப் போர்த்துக்கேயர் கட்டினர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் போர்த்துக்கேயர் செய்த கொடுமைகளைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசன் சினங் கொண்டான். பழிக்குப் பழிவாங்க எண்ணினான். ஆனால் அவன் முயற்சி அடக்கியொடுக்கப்பட்டது. யாவும் படுகொலையில் முடிந்தது. அதைத்தொடர்ந்து மேலும் நடந்த செயல்கள் அன்றைய சமய நிலையில் சீரழிவையும், ஒழுக்கத்தின் இழிவையும் காட்டுவன என்றே கூறலாம். ஆனால் இந்நிலையில் நாம் ஒன்றைத் திடமாகக் குறிப்பிடலாம். திருக்கேதீச்சரத்தின் வீழ்ச்சியோடு ஈழத்தமிழரின் ஆட்சியும் அழிந்தது. அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாயினர்.

இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த சிவபக்தன். அவன் கோணேஸ்வரத்து இறைவனிடம் நீங்காத அன்பு கொண்டிருந்தான். இராவணனின் மாமனான மயன் திருக்கேதீச்சரத்துக்குப் புராதன ஆலயத்தை அமைத்தான் என்பது மரபு. இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்த இறைவனை, இலங்கையில் போரிட்டு வாகை சூடிய இராமன் வழிபட்டுச் சென்றான் என்று கூறுவர். இலங்கையில் வெற்றிபெற்ற பின் அயோத்திக்குத் திரும்பிய அவன் வழியில் இராமேஸ்வரத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்தான் என்றும் சொல்வர். மேலும் மகா பாரதத்தின் கதாநாயகனான அருச்சுனன் இலங்கைக்கு வந்தபோதுதான் மாதோட்டத்தையடுத்திருந்த பகுதியை ஆட்சி செய்த நாககன்னியான 'அல்லி அரசாணியை'ச் சந்தித்தான் என்றும் கூறப்படுகின்றது. மன்னார்த் தீவுக்குத் தெற்கேயுள்ள பெருநிலப் பகுதியில் பாழடைந்து காணப்படுவன அல்லிராணியின் கோட்டை என்று கூறுவர்.

மாந்தை கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து 'மகதித்தா' என்ற பெயர் உடையதாய் இருந்தது என்று புத்த இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இராமரும், அகத்தியரும், அருச்சுனனும் மாந்தைத் துறைமுகத்தில் இறங்கி இலங்கையில் புகுந்தனர் என்றால், விஜயனும் அவனுடைய நண்பர்களும் அவ்வாறே இங்கு வந்தனர் என்பதை நாம் ஒருவாறு ஊகித்து அறிய முடிகின்றது. இவை உண்மையானால் விஜயனோடு கூடிவந்த உபத்தீசன் என்ற பிராமணன் வழிபட்ட சிவாலயம் திருக்கேதீச்சரந்தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். யாழ்ப்பாண வைபவமாலை, "விஜயன் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்த திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான்" என்று எடுத்துரைக்கின்றது.

" ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் தமிழரின் ஆட்சி சிறப்படைந்தது. மக்கள் வளம் பெற்று வாழ்ந்தனர். எனவே நாயன்மார் காலத்தில் மாதோட்டம் சீரும் சிறப்பும் உடையதாய்த் திகழ்ந்தது" என்பது ' ராஜரட்ன கார' என்ற சிங்கள நூலில் நின்றும் அறியக் கிடக்கின்றது.

திருக்கேதீச்சர ஆலயத்தின் புனருத்தாரண முயற்சி முதல் முதலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கப்பட்டது. ஆனால் அன்று வாழ்ந்த சைவ மக்களின் உணர்ச்சிக் குறைவும், கிறிஸ்தவர்களுடைய பலத்த எதிர்ப்பும் நாவலருடைய முயற்சிக்கு உடனடியான பலனையளிக்கத் தடையாயின. ஆனால் நாவலரின் மறைவுக்குப் பின் பதினான்கு ஆண்டுகள் கழித்து அவருடைய கனவு நனவாயது. அரசாங்க அதிபராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சேர் வில்லியம் ருவினம் சி.சி. எஸ் யாழ்ப்பாணக் கச்சேரியில் நிலங்களை 13-12-1893 இல் ஏலம் போட்டபோது நாற்பது ஏக்கர் காடடர்ந்து கிடந்த நிலத்தை யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்கள் விலைக்கு வாங்கினர். அன்று தொடக்கம் திருக்கேதீச்சரப் ஆலய புனருத்தாரண வேலைகள் தொடங்கின என்று கூறலாம். சேர் வில்லியம் ருவினம் தமது ஆட்சி அறிக்கையில் திருக்கேதீச்சரத்து ஆலயத்தின் பழைய மகிமையைக் குறிப்பிட்டுள்ளார்.

" திருக்கேதீச்சரம், மகாதீர்த்தம், மாதோட்டம் அல்லது மாதோட்டை" என்ற (See Royal Asiatic Society Journal Volume No 35) தலைப்பில் 1887 ஆண்டு நவம்பர் மாதம் 7ம் நாள் திரு. W.J.S. போக் என்பவரால் படிக்கப்பெற்ற அறிக்கையிலிருந்து, புராதன ஆலயமான திருக்கேதீச்சரத்தின் நிலைமையைப் பற்றிப் திட்டவட்டவமான சில உண்மைகளை நாம் அறிய முடிகின்றது.

" இப் பழைய நகரில் உடைந்த சில சிற்பங்களின் பகுதிகளையும், ஓடுகளையும், செங்கட்டிகளையும், மட்பாண்டங்களையும் தவிர வேறு எதுவும் நிலத்தின்மேல் இல்லை. பழைய வீதிகளின் அறிகுறிகளும், இரண்டொரு கிணறுகளும், செங்கட்டிக் கட்டிடங்கள், கோயில்கள் என்பனவற்றின் அத்திபாரங்கள் என்பனவும் காணப்படுகின்றன. குன்று ஒன்றின் மத்தியில் செங்கட்டியால் அமைந்த பழைய அத்திபாரம் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்திலேயே முக்கிய நகரின் பெரும் பகுதி இருந்திருக்கவேண்டும். பழைய கிணற்றுக்கு அண்மையில் ஆலயத்தின் வாயில் இருந்திருக்கலாம்" என்று அவர் கூறினார்.

ஆனால் அந்தக் கூட்டத்தில் இருந்த சேர்.பொன். இராமநாதன் அவர்கள் குறித்த அறிக்கையின் ஒரு பகுதிக் கருத்தை மறுத்துரைத்து விரிவான விளக்கத்தோடு இந்துசமய அடிப்படையில் அந்த இடத்தின் அமைவைத் தெளிவுபடுத்தினார். மேலும், அவர் பழைய கட்டிடங்கள் இருந்தவிடம் நகருக்குப் புறம்பானது என்றும், அவை ஆலயத்தின் உடைமைகள் என்றும் எடுத்துக் காட்டினர். அங்கு ஆலயத்தின் ஆட்சிக் குழுவினர், அடியார்கள், வேலையாட்கள் என்பவர்கள் வாழ்ந்தனர். அன்று திருக்கேதீச்சரத்துக்கு ஆலயத்தைச் சூழ்ந்து இருந்த அகழியின் அமைவு முக்கியமான தொன்றெனலாம். அங்கே இரண்டு அகழிகள் அமைந்திருந்தன. ஓர் அகழி கடல் நீரையும், மற்றது நன்நீரையும் உடையனவாய் இருந்தன. கோயிற் சொத்துக்களைப் பாதுகாக்கவே அகழிகள் அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன போலும்!

பிரதான ஆலயத்தின் பாழடைந்த மூலப் பகுதி 1894ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டு அறிவதற்குக் கோயில் நிலத்தில் அமைந்திருந்த சோழர் காலக் கிணறு ஒன்றும், போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் வழிபடப்பட்ட சிவலிங்கம் ஒன்றும் நந்தி ஒன்றும், கணேசரின் உருவம் ஒன்றும் உதவியாயின.

ஈழத்துச் சைவப் பெருமக்களின் விருப்பத்திற்கு இணங்க, பெனாரிஸிலிருந்து மகிமை பொருந்திய சிவலிங்கம் ஒன்று கொண்டுவரப்பெற்றுத் திருக்கேதீச்சரத்து ஆலயத்தில் குடமுழுக்குச் செய்யப்பட்டது என்று இராமேஸ்வரத்திலுள்ள வரலாற்றுக் குறிப்புக்களால் அறியக் கிடக்கின்றது. அந்த மூர்த்தியே இன்றைய ஆலயத்தின் ஆதிமூலத்தில் அமைந்து திகழ்கின்றது. புராதன ஆலயம் இருந்த இடத்தில் 1903 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் நாள் சிறிய கோயில் ஒன்று கட்டப்பட்டது. (See the Jaffna Hindu Organ of the day for description of the ceremony)

இன்றும் அம்மையும் அப்பரும் அமர்ந்து அருள்புரியும் ஆலயம் முதலாவது உலகப் போருக்குப் பின் மன்னாரில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்து அரசாங்க உத்தியோகத்தர்களால் கட்டப்பெற்றது. இவ்வாறு அமைந்த ஆலயம் காலப்போக்கில் புனருத்தாரணம் எதுவுமின்றிச் சிதைந்தபோது 1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது. இப்பணியினை 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் நாள் கொழும்பிலே கூடிய இந்துக்களால் நிறுவப்பெற்ற ' திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையார்' செய்தனர். குடமுழுக்கு விழாவின் பின் பிரதான ஆலயத்தில் பூசையும் வழிபாடும் இடையூறு எதுவுமின்றி இனிது நடந்துகொண்டிருக்க ஏனைய ஒன்பது பிரகாரங்களுக்குரிய ஆலயங்கள், இராசகோபுரம் திருமதில் என்பவற்றின் திருப்பணிகள் நடைபெற்றுவந்தன. இன்றைய ஆலயத்தின் அமைப்பு பழைய மரபினைத் தழுவி, சமயத்திலும், சிற்பத்திலும் ஆற்றல் நிறைந்த தென் இந்திய சிற்ப வல்லுனர்களால் தீட்டப்பட்டது. மேலும், ஆலயத்தின் தென் கிழக்குப் பக்கத்திலுள்ள வெளி வீதியில் உற்சவ மண்டபமும் (வசந்த மண்டபம்) அதைச் சார்ந்த கட்டிடங்களும் அமைக்கப்படும். இன்னும், அடியார்கள் ஆயிரக் கணக்கில் கூடி நின்று கண்டு களிக்கக் கூடியதாகத் தேரோடும் வீதி ஒன்று வெளிப் புறச் சுவருக்கு வெளியே பெருமளவில் அமையும், அதனைச் சூழ்ந்த பகுதிகள் ஏனைய வீதிகளுக்கு ஒதுக்கப்படும். அங்கே பூந்தோட்டங்களும், அழகிய சோலைகளும். மடங்களும், சத்திரங்களும், அந்தணர், அடியார்கள், வேலையாட்கள் என்போர் இருக்கும் இல்லங்களும் அமையும். குருகுலப்பாடசாலை ஒன்றும், உயர்ந்த சமயப்படிப்புக்குக் கல்லூரி ஒன்றும், துறவிகள் தங்கி இளைப்பாறும் சாலை ஒன்றும் இடம் பெறும். குருகுலப் பாடசாலை இப்போதே ஆரம்பமாகியுள்ளது. அனாதைக் குழந்தைகள் இல்லத்தோடு இணைந்த மகளிர் இன்னல் நிலையம் ஒன்றும் நிறுவ ஏற்பாடாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்வரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15ம் நாள் (31-10-60) திருக்கேதீச்சரத்து வரலாற்றிலே முக்கிய புனித தினமாகும். அன்று, திருக்கேதீச்சரத்து ஆலயச் சுற்றுப் பிரகாரத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நடந்தது. புராதன மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு ஒம மண்டலங்களோடு கூடிய கிரியா முறைகளமைந்த மகா கும்பாபிஷேகம் அப்புனித நாளில் இனிது நிகழ்ந்தது. குடமுழுக்குச் செய்யப்பெற்ற மகாலிங்கம் மிகவும் பழைமையானது. இவ்விழாவில் நூற்றுக்கணக்கான சிவநேயச் செல்வர்கள் கலந்து திருக்கேதீச்சர நாதரின் இன்னருளைச் பெற்று ஏகினர்.

சுத்தமான வெண்கலத்தாலும், தகரத்தாலும் கலந்து செய்யப் பெற்ற ' மணி' ஒன்று இலண்டனிலுள்ள பிரபலமான வார்ப்புத் தொழிற்சாலையில் செய்யப் பெற்றுக் கப்பலில் வந்து கொண்டிருக்கின்றது. நாலடி விட்டத்தில் நுட்பமாக வார்க்கப்பட்ட அந்த மணி சிறந்த ஒசை உள்ளதாய் இருக்கும். அது ஒரு தொன் 3 அந்தர் 1 குவாட்டர் 26 இறாத்தல் நிறையுடையது. மொத்தத்தில் முழுதும் தழுவிய அதன் அளவு 50" – 50" – 50", அந்த மணிக்கு ஏற்ற உயரமும் உறுதியுமுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்பட்டுகின்றது. அடுத்த திங்களில், திருவெம்பாவைப் பூசையின் போது ஏறக்குறைய கடல் மட்டத்திலிருந்து 75 அடி உயரத்தில் அந்த மணியோசை மன்னார்ப் பகுதியைச் சுற்றிப் பல மைல் துரத்தில் வாழும் மக்களை விழித்தெழ வைத்துத் திருக்கேதீச்சரத்து இறைவனை வழிபட வைக்குமன்றோ!

பத்தாண்டுகளாகத் திருக்கேதீச்சர புனருத்தாரண சபையார் செய்து வந்துள்ள அரும்பணிகளை அவ்வாலயத்தைத் தரிசிக்கும் அடியார்கள் நேரில் கண்டு கொள்வர். திருக்கேதீச்சரத்திற்கு இறைவனைத் தரிசிக்க வரும் அடியார்கள் தங்குவதற்கான மடங்களையும், எளிதாகப் போக்குவரத்து செய்வதற்கான தார் இட்ட வீதிகளையும் அங்கு பார்க்கலாம். அல்லாமலும் குழாய்த் தண்ணீர் வசதியும் திருக்கேதீச்சரத்தில் செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கான பஸ் போக்குவரத்தும் திருக்கேதீச்சரத்தில் இருக்கின்றது. கடைகளும், தொலைபேசியோடு கூடிய அஞ்சலகம் ஒன்றும் அங்கே நிறுவப்பட்டுள்ளன. மின்சார வசதியும் உண்டு.

சைவசமயத்தின் சின்னமாகத் தமிழ்ப் பண்பாட்டின் அறிகுறியாகத் தமிழ் மொழியின் அடையாளமாகத் திருக்கேதீச்சரம் மன்னாரில் திகழ்கின்றது. அங்கே அம்மையப்பராக அமர்ந்து இன்னருள் புரியும் இறைவனை வாழ்வில் ஒரு முறையாவது தரிசித்து வழிபட வேண்டியது ஒவ்வொரு ஈழத்துச் சைவர்களதும் கடமையாகும்.

*" தொண்டர் நாள்தோறும் துதிசெய அருள்செய்*
*கேதீச்சரமதுதானே "*

(பேராதனை இலங்கைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க வெளியீடான ' இந்து தர்மம்' எனும் சஞ்சிகையில் இக்கட்டுரை ஆங்கிலத்தில் முதலில் வெளியிடப்பெற்றுப் பின்னர் திருக்கேதீச்சரம் சைவ மகாநாட்டு மலரில் 1960, தமிழாக்கம் பெற்றது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOLY Thiruketheeswaram

**S. SARAVANAMUTTU**

*ACTG. SECRETARY, THIRUKETHEESWARAM RESTORATION SOCIETY, VICE PRESIDENT, ALL CEYLON HINDU CONGRESS (ACHC) AND CHAIRMAN OF RELIGIOUS AFFAIRS, CELEBRATIONS AND GURUKULAM COMMITTEE OF ACHC.*

Thiruketheeswaram Temple is situated in the Mannar District about 7 miles North of the Mannar Town. It is a Temple dedicated to Lord Siva and its origin is concealed in myths and legends and no historian is able to give any indication as to its origin.

This is a pre-historic sacred Temple and Kethu Bagawan is said to have worshipped Lord Siva here and got His blessings. Hence, the name Thiruketheeswaram (Thiru+ Kethu + Eeswaram), Holy Shrine of Eeswaran (Siva), worshipped by Kethu.

Dr. Paul E. Peiris, the erudite scholar and historian wrote thus: "Long before the arrival of Vijaya (6th century B.C) there was in Lanka five recognised Eeswarams of Siva, which claimed and received adoration of all India. These were Thiruketheeswaram near Mahathitha, Munneswaram dominating Salawatte (Chilaw) and pearl fishery, Thondeswaram near Mantota, Thirukoneswaram near the great Bay of Kottiyar (Trincomalee) and Naguleswaram near Kankesanturai".

Out of the five Eeswarams mentioned by Dr.Paul E. Peiris the site "Thondeswaram near Mantota" has not yet been traced. If it was near Mantota it must have been in the environs of Thiruketheeswaram itself and this too might have been destroyed by the Portuguese in the 16th century, when they destroyed Thiruketheeswaram.

Some Hindus are of opinion that Thondeswaram was near the banks of the Deduru Oya in the North Western Province. Deduru Oya area is said to be yet having traces of extinct Tamil villages and also Hindu Temples. But no Hindu organisation or any Saivite like Sri La Sri Arumuga Navalar, who was responsible for the agitation to restore Thiruketheeswaram, or even the Archeological Department of the Sri Lankan Government has so far not paid any attention to trace this temple of Siva called Thondeswaram.

Though the main objective of the Portuguese at that time was to engage themselves in trade, they paid special attention to convert almost all the inhabitants in the Western parts of the country, who were mostly Hindus, to the Catholic Faith. With this object in view, they destroyed the Hindu temples and built churches on the very sites, that too by making use of the stones and such other building materials obtained by destroying the large Hindu temples. Vijaya, who came from India in the 6th century B.C. with his followers first married Kuweni, supposed to have been a queen ruling the Western parts of this country, and later abandoned her. He then went to Madurai in South India and married a Princess from the Pandyan Kingdom and came back to Lanka with her. As the couple landed in the historic Port of Manthai (Mathoddam), in close proximity to Thiruketheeswaram, the Brahmin priest called Upatissa, who accompanied the Royal couple from Madurai, took them to the Thiruketheeswaram Temple where a special religious ceremony was performed to bless the couple.



"The religion of Vijaya and his companions was Saivaism and it continued to be the religion of the Island for no inconsiderable period."
- C. Britto (1879).

There was no other religion in India and Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

during Vijayan's time. Buddhism, Christianity and Islam came subsequently.

The Kalinga Prince who brought Buddha's Tooth Relic to Lanka, which was later enshrined in the Dalada Maligawa, Kandy, also came through the Port of Manthai and stayed for a day and night at the Thiruketheeswaram Temple before proceeding beyond.

Mahinda Thero, son of King Asoka, who introduced Buddhism to Sri Lanka in the 2nd century B.C. also came through the Port of Manthai, rested at Thiruketheeswaram for some time and then proceeded to Mihintale, where he met King Thewanampiyatissa. The celebrated historian J.W. Bennet wrote (1843) thus: "At Mantotte, the antiquarian will find a field for research, in the still extant remains of remote antiquity, amongst which are the vestiges of an immense tank (Giants Tank) and the ruins of a former Hindu City, built of brick. The antiquity of the Hindus, by whom, I humbly presume, the island was originally peopled, and their civilisation at the remotest period of history, are recognised by all the ancient Eastern Philosophers".

"Manthoddam was a centre of International Trade. Greeks, Romans, Phoenicians, Arabs, Ethiopians, Persians, Chinese, Japanese, Burmese and others vied with each other at various times to monopolise the trade of North-Ceylon" - Cassie Chitty.

Sir William Jones in his eighth anniversary discourse before the Bengal Society remarked "Ceylon itself, we know from the languages, letters, religion and old monuments of the various inhabitants, was peopled beyond time of memory by the Hindu Race".

B.J. Perera, a reputed historian wrote: "Although Mahathitha (Mathoddam) is first mentioned in connection with the landing of Vijaya's second wife, a Royal Princes from the Pandyan Kingdom, there is no doubt that it was used as a Port by the Tamils long before the Aryan settlement in Ceylon. The existence of the Temple of Thiruketheeswaram, the origin of which is not covered by existing records, is an indication of the antiquity of the Port. Indeed Mahathitha is the only Port in the Island, which can be called a buried city. Mahathitha was a great Port in the early centuries of the Christian era. Next we have the references in the Sangam Literature of the Tamils, describing Mahathitha as a great Port".

Mathoddam was the Chief Port of Lanka till the 16th century, when it was replaced by Colombo.

Hugh Neville, while writing about the illustrious city of Mathoddam (1887), said " A renowned shrine grew into repute there, dedicated to one Supreme God symbolised by a single stone, and in later times, restored by Vijaya, a Saivite, after lying long in ruins. The temple was dedicated to Thiru-Kethes -Waram".

There was only Sivalinga worship during Thevanampitya Tissa's time. Sivalingam represented Lord Siva and worship of Lord Siva is Saivaism. Worship of deities like Vinayagar, Murugan, Amparl, Vairavar and such others came in later times.

The word 'Hinduism' came into being in the 8th century A.D. A.C. Bouquet says "The word Hinduism is not discoverable in ancient Indian Literature. It is known to have been used by the Persians in the eighth century A.D. in reference to the people who lived beyond the River Indus, the early name of which was Sindhu. Sindhu later became Hindu, the name of the people and Hinduism their religion. Today Hinduism refers to all those who accept the teachings of the Vedas".

The important religions coming under 'Hinduism' now are Saivaism, Vaishnavaism and Sakthism.

Saivaism is the religion of those who worship Lord Siva and Saivites are those who worship Lord Siva and also follow the Saiva Agamas. Dr.G.U.Pope said "Saivaism is the old pre-historian religion of South India, existing from the pre-aryan times and holds sway over the Tamil people". Saivaism is prevalent today in Sri Lanka, South India, Kashmir and Nepal.

Sir John Marshall, who carried out archeological explorations in Mohenjo-Daro in Sindhu and Harappa in Punjab in the 1920s has mentioned the existence of Hinduism as far back as 3000 years B.C. He has also mentioned about the existence of Sivalingam in the Indus Valley indicating that there was Sivalinga worship.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. John Murphy, who continued the explorations, said " These findings indicate the ruins and remnants of an ancient and flourishing civilisation which has existed about 3000-2500 B.C.".

Prof. Stuart Piggott, a distinguished authority on pre-historic India, says "There is more than one representation on seals from Mohenjo-Daro and Harappa of a male-God, sitting in the position of a Yogi. There can be little doubt that we have here the proto type of the great God Shiva".

A.C. Bouquet in his book on "Hinduism" writes "The point of importance for our subject, however, is that right back in the days when Mohenjo-Daro and Harappa were flourishing cities, their citizens seem to have had a religion, which already exhibited some of the elements familiar to the nineteenth century Hinduism."

The Thiruketheeswaram Temple, famous through ages and dedicated to the supreme God 'Siva' is the most venerated temple of the Hindus of this country. This holy Temple was a centre of pilgrimage to Hindus from India, Malaysia, Singapore and various other countries. The Temple and the holy waters of the Palavi tank are venerated in the sacred hymns of the two foremost Saiva Saints, Thirugnana Sambanthar and Suntharar, who lived in the 7th and 8th centuries respectively.

The great Sivan Temple was completely destroyed by the Portuguese in the 16th century and the very stones of the Temple were used by them to build the Fort at Mannar, the Church at Madhu and also the Hammenshield Fort at Kayts. After this destruction, the temple was out of sight for nearly four centuries and the place was overrun by dense jungle. Subsequently in 1872 Sri La Sri Arumuga Navalar of Jaffna appealed to the Hindu Public to re-build the temple which had been a centre of religion and culture.

The exact spot of the destroyed temple was traced in 1894 and some restoration work was done in 1903, 1910 and 1922. Much headway however was not made until 1948, when an intensive agitation was built up to re-build the temple, along with the grant of independence to Sri Lanka. The Thiruketheeswaram Temple Restoration Society was founded in 1948 in Colombo with the prime objective of restoring the Temple to its pristine glory. A branch Society was formed later in Kuala Lumpur, Malaysia.

The Restoration Society with the help of the Hindu devotees of Sri Lanka, India, Malaysia and Singapore has already completed the initial phase of the temple restoration work and the 2nd and 3rd phases are yet to be undertaken. The necessary granite work for the 2nd phase is under way at the School of Architecture and Sculpture at Mahamallapuram in Tamil Nadu and the Restoration Society is waiting anxiously to re-start the restoration work of the temple once conditions settle down in this country.

The Sri Lankan Army is occupying the Temple and its environs from August 1990. There are no poojahs or other religious rites performed now as the priests, their assistants and other workers of the temple had been forced by the army to leave the area. There are no people now within about a radius of 3 miles from the temple. Though the main building of the temple appears to remain without damage, the other buildings belonging to the temple, like the priests' quarters, Pilgrims' Rests and such other buildings are either completely destroyed or fully damaged.

"We are constrained to observe that the damage caused to the Thiruketheeswaram Temple now is not very much different from what the Portuguese did to the Temple in the 16th century. Freedom of worship has been denied to the devotees of the temple for nearly 2 years now." - Joseph Pararajasingam, M.P., in Parliament on 23.01.1992. The Army is yet (April 1996) in occupation of the Temple and its environs.

The Sri Lankan Government till last year (1995) declared 19 Buddhist Temples and their environs as "Sacred Areas". Having noted this, two Tamil Members of Parliament (Mr.V.Balachandran and Mr. R. Ramamoorthy) appealed to the Minister concerned (Mr.Nimal Sripala de Silva) in Parliament on 4.12.95 to declare Thiruketheeswaram and Thirukoneswaram also as "Sacred Areas". The Minister in his reply said "As regards Thiruketheeswaram necessary action will be taken in the future to declare it a Sacred Area".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

*"கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே"*

திருக்கேதீச்சரம் திருக்கோணமலைக்கு வெகு வெகு காலத்தால் முந்தியது. திருக்கேதீச்சரப் பழைமை சரித்திரத்துக்கோ, அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு ஊகிக்கற்பாலது.

ஒரு கற்பத்தில் மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம், இந்திரன் ஆணையால் தேவதபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது.

மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா, ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவஸ்தலத்தையும் அமைத்தான். நகரம் அவன் பெயரால் மகாதுவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைத்த சிவஸ்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் வேறு; இலங்கை வேறு. இரண்டும் ஒரு காலத்தில் உண்டானவை.

மூன்றாஞ் சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டிய போது நிலப்பரப்பாக அமைக்கப்பட்டது.

கால அடைவில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும், மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்துவிட்டன.

மற்றொரு கற்பத்தில் இமாசல கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தக்ஷிண பூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருக்கோணமலை; அது இலங்கையில் வீழ்ந்தது.

மற்றவை திருக்காளத்தியும், திருசிராப்பள்ளியுமாம்.

மூன்றுந் தஷிண கைலாசங்கள்.

திருக்கோணமலையைக் கைலாசம் என்று வழங்குவது போல, மேரு சிகரமாகிய திருக்கேதீச்சரத்தை அவ்வாறு வழங்குவதில்லை.

மகா துவட்டாவுக்கு இருவர் தம்பியர். ஒருவர் மது: மற்றையர் மயன். மயன் புதல்வி மந்தோதரி. நித்திய கன்னிகைகள் வரிசையைச் சேர்ந்த உத்தமி மந்தோதரி இராவணன் மனைவி. இராவணன் மணக்கும்போது அவள் வயிற்றிற் சிவகர்ப்பமாயிருந்து இலங்கையிற் பிறந்தவர் சீதை. இவ் வரலாறு இடைப்பிறவரலாயினும் இங்கே அறியத் தக்கது*.

வெகு காலத்துக்கு முன்னமே திருக்கேதீச்சரத் தலம் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுண்டு.

சமய குரவர்களாகிய நாயன்மார் காலத்திலும் திருக்கேதீச்சரம் காடாகவேயிருக்கலாம். தேவாரப் பாடல்களிற் காணப்படும் திருக்கேதீசுவரம் அவர்கள் அகக் காட்சியிற் காட்சியளித்ததாகலாம் எனக் கருதலாம்.

'கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே' என்ற ஞானசம்பந்தப் பிள்ளையார் வாக்கில் 'கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம் என்னலாம்.

திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளையாராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவ்வாற்றால் தனக்குத் தானே இணையாய தனிச் சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.

புனிதம் மிக்க தைவிக சிவத்தலங்கள் வழிபடும் பக்குவர்களருகிய காலத்தில் மறைவதும், பக்குவர் சிலரின் தவ விசேடத்தினால் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக் கேட்டதுண்டு.

---

இங்கே காட்டப்பட்ட வரலாறுகளுக்கு ஆதாரம், ஈழ மண்டல சதகத்திலுள்ள 'சுருதி பயில அறிஞன் துவட்டா' என்று தொடங்குந் திருக்கேதீச்சரப் பாடலும், 'தென் கயிலையாகியொளிர் திரிகோணமலை' என்ற பாடலும் அவற்றின் உரையுமாம்.

சதக மியற்றி உரையுஞ் செய்தவர் பௌராணிகரும், உரையாசிரியருமான ம.க.வேற்பிள்ளை இவர் . நாவலரின் மாணவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து, சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரே ஒரு ஆறுமுகநாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற துண்டுப் புத்தகத்தில் இறுதிப் பந்தி.

"சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்."

எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்துகின்றார் நாவலர் பெருமான்.

திருக்கேதீச்சர நிலம் அரசாங்கச் சொத்தாய் வடமாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக் காலத்தில் 'டைக்கும்' மத்திய காலத்தில் 'றசலும்' மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள். அவர்கள் காலத்தில் திருகேதீச்சர எண்ணம் கருக்கொண்டிருக்குமாயின், நாவலர் பெருமானே விதிப்படி சிவாலயம் எடுத்துப் பூசைக் கிரமம் முதலியன பற்றிப் பத்ததியுஞ் செய்து வைத்திருப்பார்.

றசலைத் தயாநிதி என்கின்றார் நாவலர். றசலுக்குப் பின் வந்தவர் துவைனம், திருக்கேதீச்சர நிலத்தை துவைனம் மூலம் நாவலர் பெற விரும்பவில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடை முறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

பெரியோர்கள் நீதி நெறிக்குப் புறம்பானவர்களிடம் எதையும் பெற விரும்புவதில்லை. இதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள. நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசுபடுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்திய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமாயது. மழையின்றிய பஞ்ச காலத்திலும், பேதி நோய்க் காலத்திலும், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும், கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள்.

*சமயம் சமயம் !*
*இது நல்ல சமயம் !*
*வெகு சனத் துரோகம் !*

என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள்.

'யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College) அதற்குத் தலைவர் (Principal) துவைனந் துரை; உபாத்தியாயர்கள்' பாவந் தோன்றிய நாளையிற்றோன்றிய பாதகன்' ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்; அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரங்களுடைய தானங்கள்.

( இது நல்ல சமயம்– 5 ஆம் பக்கம்)

ஏழைகளுக்கிரங்கி இவ்வாறெழுதிய நாவலர் பெருமானின் தைரியம் பற்றி என்ன நினைக்கலாம். மேற் காட்டிய மூன்று கட்டுரைகளும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளவை. யாவரும் படித்து நாவலர் யார் எத்தகையினர்! என்பதை ஊன்றி உணரக் கடவர்கள்.

நாவலர் குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம், துவைனத்தின் ஊழல்களை எடுத்துக்காட்டி வாதித்தார். துவைனம் தம்மீது ஏற்றும் குற்றங்களைப் பரிகரியாத் வழி உத்தியோக இழப்பு ஒன்றோ உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார்.

இந்நிலையில் நாவலர் பெருமானுக்கு அழைப்பு வந்து விட்டது. நாவலர் மறைந்தார் என்ற வார்த்தை கேட்ட அக்கணமே, துவைனத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டாகியது. கச்சேரிக்கு விடுதலை அளித்து; கச்சேரி உத்தியோகத்தர் அனைவரையும் நாவலர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தர் கைப்படாமல் வெகு திறமையாகச் சைவர்களுக்கே ஆக்கி வைத்தார் துவைனம். நாவலர் பெருமான் துவைனத்தைக் கேளாமலே காரியம் நிறை வேறியது.

*நாவலர் பெருமானின் தவ சக்தி இருந்தவாறு!*

*(நன்றி: சிவதொண்டன் சிறப்பு மலர் -1965)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேஸ்வரத்தின் வண்மை

சைவப்புலவர் - பண்டிதர் இ. வடிவேல்

உலகப் பிரசித்திபெற்ற இந்த உருவத் திருமேனிகளில் சிவன் (கோணேசர்) சுகாசன் மூர்த்தியாக அபயம் வரதங்களோடு சிம்மமுத்திரை காட்டி மானும், மழுவும் தாங்கிய சதுர்ப்புஜங்களை உடையவராக வலது திருவடியைத் தொங்கவிட்டு பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறார். பார்வதி (மாதுமையம்பாள்) சுகாசன மூர்த்தமாக லோலஹஸ்த முத்திரை காட்டி மறுகரத்தில் நீலோற்பல மலர்தாங்கிய துவிபுஜங்களோடு பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறார். இத்தகைய அமைப்பை வேறு எங்குமே காண்பதரிது. இந்தியாவில் நெல்லூரிலும், மேட்டூரிலும் இந்த அமைப்போடுள்ள திருவுருவங்கள் காணப்பட்டபோதிலும் அவைகள் ஒரே பீடத்தில் இருப்பதையும், அம்பாள் இடக் கரத்தை ஆசனத்தில் ஊன்றியபடி இருப்பதையும் காணலாம். கோணேஸ்வரத்திலுள்ள திருவுருவங்கள் தனித்தனிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்றன.

சிவஸ்தலங்கள் எல்லாவற்றிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் இருக்கும். அந்த மூர்த்தங்களை அவ்வத் தலத்து இறைவன் பெயரால் சுட்டி வழிபடுவார்கள். அவ்வாறே கோணேஸ்வரத்திலுள்ள சோமாஸ்கந்த மூர்த்தியை மாதுமையம்பாள் சமேத கோணேசர் என்றே வழிபடுவர். இங்கு எழுந்தருளியுள்ள மாதுமையம்பாள் சமேத கோணேசருக்கு மற்றும் ஒரு சிறப்புண்டு. சிவ ஷேத்திரங்களுக்குத் தேவார முதலிகள் மூவரும் திருமுறைகள் பாடியிருக்கிறார்களல்லவா? அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்களில் திருகோணமலைத் தேவாரத்தில் மாத்திரம்தான் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் " கோணமாமலை அமர்ந்தாரே" என்று பாடப்பட்டிருக்கின்றது. உத்தரகயிலையில் அமர்ந்திருப்பதுபோலத் தெட்சணகயிலையிலும் இறைவன் அமர்ந்துள்ளாரென்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். உத்தரகயிலையின் சிகரங்களிலொன்று தெட்சணகயிலாயமாகிய திருக்கோணமலை என்னும் புராண வரலாற்றையும், (செவ்வந்திப்புராணம்) திருமூலநாயனார் வட கயிலையையும், தென்கயிலையையும் (இலங்கை) சாஸ்திர ரீதியாக இணைத்துக் காட்டிய உண்மையினையும் ஞானசம்பந்தரின் வாக்கு உறுதிப்படுத்துகின்றது.

இத்தகைய கோணேஸ்வரத்தின் இயற்கை அமைப்பையும், வரலாறுகளையும் தெட்சணகயிலாய மகாத்மியம், தெட்சணகயிலாய புராணம், திருக்கோணாசலபுராணம், திருகோணமலை அந்தாதி முதலிய பழைய நூல்கள் விதந்து கூறுகின்றன. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பாடியருளிய தேவாரத்தில் " கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ளமும் நித்திலம் சுமந்து குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை" என்றும், " விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி செண்பகத்தின் குருத்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமாமலை" என்றும் துன்றுமொண் பௌவம் மௌவலும் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக் குன்றுமொண் கானல் வாசம் வந் துலவும் கோணமாமலை" என்றும், " கரைகெழு சந்தும் காரகிற் பிளவும் அளப்பரும் கனமணி வரன்றிக் குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும் கோணமாமலையென்றும், தெளித்தும் முன்னரற்றும் செழுங்கடற் தரளம் செம்பொன்னும் இப்பியும் சுமந்து கொழித்து வன்திரைகள் கடையிடைச் சேர்க்கும் கோணமாமலை" என்றும் கோணமாமலையின் இயற்கை எழிலை விதந்து கூறுகின்றார்.

அன்றியும் இறைவனானவர் " கடிதெனவந்த கரிதனை உரித்து அவ்வுரி மேனிமேல் போர்த்ததையும்", "மேரு வெஞ்சிலையாய்க் குனித்ததையும்", " மதனனைப் பொடியாய் விழித்ததையும்", " பரிந்து நன்மனத்தால் வழிபடு மாணி தன்னுயிர்மேல் வரும் கூற்றைத் திரிந்திடா வண்ணம் உதைத்ததையும்", "எடுத்தவன், தருக்கை விரலால் இழித்ததையும்", " வேள்வி தடுத்ததையும்", "வெண்தலை ஏந்தி அகந்தொறும் பலியுடன் புக்கதையும்", " பெருங்கடல் வண்ணன் பிரமன் இருவரும் அறியா வண்ணம் ஒள்ளெரியாய் உயர்ந்ததையும்", திருஞானசம்பந்தர் கோணேசப் பெருமான் மேலேற்றித் தேவாரம் பாடியமை கோணேசப் பெருமான் அட்டவீரட்ட மூர்த்தியாய் இங்கு எழுந்தருளியிருப்பதைக் குறிக்கின்றது.

திருக்கோணேஸ்வரத்தின் இயற்கை அழகும், கோணேசப் பெருமானின் திருவருட் செயல்களும் திருக்கயிலாயத்தின் இயற்கை எழிலுக்கும், கைலாசபதியின் திருவருட் செயலுக்கும் ஒப்பாக இருந்த காரணத்தினால் பண்டைக் காலத்தில் வட இந்திய யாத்திரிகர்கள் இந்தத் தெட்சணகயிலாயத்தை நோக்கி யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள். இச்சம்பவத்தைக் குறிப்பிட்டுப் போர்த்துக்கீச சரித்திர நூலாசிரியராகிய டி.குவைறோஸ் பாதிரியாரவர்கள், " பூரி ஜெகந்நாத்திற்கும், இராமேஸ்வரத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் தரிசனம் செய்துவரும் யாத்திரிகளிலும் பார்க்க மிக அதிகமானோர் இவ்வாலயத்தை தரிசித்து வருகின்றார்கள்". என்று தமது நூலில் எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது.

வடநாட்டு யாத்திரிகர்களின் கவனத்தைக் கவரக் காரணமாயிருந்ததென்ன? திருக்கோணேசர் ஆலயம் உலகிலுள்ள வழிபாட்டுத் தலங்களுள் மிகவும் பழைமையானதொன்று எனவும், திருக்கோணமலை நாகரீகமும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகமும் ஒரே காலத்தன எனவும், கடல் கோள்களால் அழிந்துபோன லெமோறியாக் கண்டத்தின் எஞ்சிய தரைப்பகுதிகளில் இலங்கையுமொன்று எனவும் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். திராவிட நாகரீகத்தின் பிறப்பிடமான லெமோறியாக் கண்டம் கடலுள் மூழ்குவதற்கு முன் திராவிட மக்களின் சமயக் கோட்பாடுகள் சிறந்து விளங்கிய காலத்தில் கடலுள் மூழ்கிய குமரிக் கண்டத்தின் பல பாகங்களிலும் சிவஷேத்திரங்கள் பல இருந்தன. இந்தச் ஷேத்திரங்களுக்கு இந்தியாவின் வடக்கேயிருக்கும் ஆஸ்திகப் பெருமக்கள் யாத்திரை செய்துவந்திருக்கிறார்கள். லெமோறியா கடலுள் மூழ்கிய பின்னும் அந்தப் பாரம்பரியப் பழக்க வழக்கங்களை அவர்கள் கைவிடவில்லை. இதனால்தான் இன்றும் எண்ணற்ற வட இந்திய யாத்திரிகர்கள் வடக்கேயிருந்து இராமேஸ்வரத்துக்குத் தரிசனம் செய்ய வந்துகொண்டிருக்கிறார்கள். காசி, பூரி, காஷ்மீர் முதலிய இடங்களிலுள்ள வட இந்திய யாத்திரிகர்கள் பத்திரிநாத், கேதாரநாத், அமரநாத், கயிலை முதலிய சிவஸ்தலங்களுக்குப் போய் வழிபாடு செய்து அங்கிருந்து கங்கா, ஜமுனா முதலிய புனித தீர்த்தத்தை எடுத்து வந்து இராமேஸ்வரத்தில் இராமலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து, இராமேஸ்வரத்திலிருந்து புனித மண்ணை எடுத்துச் சென்று கேதாரநாத், பத்திரிநாத், பூரி, காசி, முதலான இடங்களிலுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு மண்ணினால் அபிஷேகம் செய்யும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகின்றது. இந்த வழக்கம் பண்டைக் காலத்தில் உத்தரகயிலைக்கும் தெட்சணகயிலைக்குமிடையில் வட இந்தியர் ஆன்ம யாத்திரை செய்து வந்த வழக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கலாம்.

*"நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் நம்பிக்கையின் அவசியத்திலிருந்து மட்டும் நாம் தப்ப முடியாது"*

**(எமது அங்கத்துவ சங்கமான திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடான திருக்கோணேஸ்வரர் - தொன்மையும் வன்மையும்" என்ற திரு.வடிவேலு எழுதிய நூலில் இருந்து ஓர் அத்தியாயம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUKONESWARAM

**(M.K. SELLARAJAH, J. P. U. M., PRESIDENT, THIRUKONESWARAM TEMPLE, TRINCOMALEE)**

When we stand on the Swamy rock in the serene peace and blessed mood that reigns supreme in THIRUKONESWARAM, the burden of the mystery, the heavy and weary weight of all the unintelligible world is lightened. There is bliss.

In view of the publicity that the Koneswaram Temple at Trincomalee referred to by De Queroz as the Rome of the Gentiles of the Orient receives from time to time, Koneswaram Temple is not to be forgotten. It would have remained to the present day as a venerable relic, had not the misguided religious zeal of the Portugese razed it to the ground in 1622 to supply materials for one of their fortifications.

A king named Manu Neethi Kanda Solen who ruled over the country of Solamandalam learning from the Kailasa Puränäm the wonders of Thirukonanathamalai and the magnificent state of its inhabitants, came over to the place, his son Kulakota Maharajah who followed him thither afterwards raised the Temple, the spire, the pavilion, and the sacred cistern, in the year 512 of Kali Yug on Monday the 10th day of the month of Vaikasi.

After having built the Temple, the king finding that much difficulty was experienced in obtaining rice and other things from Solamandalam for the daily use of the Temple, he meditated on means to obviate it, and accordingly caused ( to the extent of 2800 Amonams) to be converted to the cultivation of paddy, and a tank ( which now refers to the famous Kantalai Tank ) to be converted in the vicinity for their irrigation of the said lands, both of which he consecrated to Konesar Swami. He afterwards proceeded to the village Marukoor, on the North on the 24th day of Panguni in the year 516 and brought from thence in a vessel to Thirukonanathamalai seven families whom he settled there, assigning to them the temple and the lands appertaining to the same, as hereditary possession. To these seven families were entrusted the care of the temple Treasury, the regulation of the income and expenditure, the celebration of the festivals, and the presentation of silk vestments to the kings. As more people were required for the service of the Temple, the King went to the village of Karakadoe and by compulsory means, brought from thence on the 10th day of Vaikasi (of the year aforesaid) twenty more families, whom he likewise settled at the place, and appointed for the robing of the Lingam (Phallho) and to the offering of flowers at the shrine, to sweeping and illuminating the Temple daily - cleaning the sacrificial implements - performing libations of water - husking of paddy and smearing the floor of the Temple with cow dung - singing and playing of musical instruments - spreading cloth at animal sacrifices - hoisting and lowering of the flag on solemn days, preparing essence of sandalwood, and purifying the ornaments of the Temple. These people were also endowed with lands for their subsistence and five of them dignified with the title of Panda - ratter.

As the first seven families who were settled there, were brought willingly from their country they received the common name of Tannattar in contradistinction to the twenty families who settled after them, who were called Varippattar because they were impressed, one out of every ten men in their country.

The king contemplating that there were none to judge these Tannattar and Varippattar in the event of any dissension among them, determined to appoint a chief over them, he accordingly proceeded to Madurai and brought from thence a nobleman of the name of Taniunna Pupalan, whom he invested with the title of Wanniya, and ordained him Governor of Thirukonamamalai, authorising him to punish offences by fine, imprisonment





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in chains or by death, according to their extent, or magnitude, strictly enjoining him to keep his institutions inviolate, and to conduct the affairs of the temple and ceremonies thereof, without omission.

The king further ordered that the citizens of Kattuculam should render their services to the Temple, that the citizens of Nilaveli should preside over the celebration of the festivals, and supply the Temple six Amonams of paddy, also pay the thithes, taxes, and customs of their country to the Temple, that the citizens of Cottiyaram should furnish the Temple with betel, plantains, sandalwood, curdled milk, clarified butter, 100 Amonams of rice, and the seeds of Amaneku, Punnei, and Ilippe trees. These latter mentioned seeds should be delivered to the citizens of Írativoe, to be made into oil, and then again delivered to the Tottiyen of Kovulimune who after entering the quantity into the accounts of the Temple, should pour it into the reservoir, where the same was to remain for lighting lamps. There were seven reservoirs built at the south side of the Temple for the reception of oil, they were enclosed with walls which were provided with doors, and a person appointed to overlook them, called Adikaree.

When the above orders had been given the king next proceeded to regulate the affairs of (the interior apartments of) the Temple. He ordered the servants to illuminate it every day with 5000 lamps lighted with butter, and 11000 lamps lighted with oil, to be placed both inside and out, and to sprinkle the ground with rose water impregnated with musk, and sandalwood. He further ordered that they should at stated periods make oblations of rice mixed with milk curds - to Supermaniya in 12 silver trays, and to the rest of the deities in 128 copper trays. Besides these he directed oblations of several thousand balls of rice to be made, and a lamp with a thousand camphor wicks to be burnt on particular occasions.

After detailing the foregoing particulars relative to the foundation of the Temple, and the institution of its ceremonies the Kavi Raj Varothayan proceeded to relate the prophecies delivered by the king with reference to its future magnificence, and the revolutions it would undergo by foreign invasions, but they are so incongruous, and confounded with fable, as is common with Hindu productions, that I have omitted the whole of it, and resume the translation as follows :-

The king ( one day ) after having performed ablution in the sacred pool, and his oblations and prayers, wearing around his head a wreath of Ottracha beads, painted his forehead with the holy ashes, went round the court of the Temple, holding in his hand a nosegay of flowers, and he entered into the sanctum sanctorum. He remained there so long that it raised the suspicion of his courtiers, who proceeding inside to look for him, found that he had become metamorphosed into a lotus flower, at the shrine of the God, upon which they made great lamentations.

The story of the king's transformation into a flower akin to what is related of the disappearance of Romulus, and like that price, Kulakotu Maharajah also became counted among the Gods, and sacrifices were accordingly made to him by the inhabitants of Thirukonathamalai.

Many years after this metamorphosis of Kulakotu Maharajah, a certain King called Gaja Bahu Maharajah made a pilgrimage to Thirukonathamalai, and on his arrival finding that the pasupalar who had hitherto ministered in the Temple were dead, and none had succeeded them, he was plunged in grief, and invoked the deity to repair the breach which death had made in the priesthood. While the king was thus engaged in acts of devotion, he perceived two Brahmin youths floating on the surface of the ocean with the Vedas in their hands. As soon as he saw them, greatly delighted, he rose from the seat, advanced towards them, into the sea and seizing one by each hand, brought them to the shore, calling them at the same time by the epithet of Irpahai, (or the right and left hand as he had held them). He conferred on them the priesthood of the Temple, and gave directions to the Wanniya, Tannattar and Varippattar to respect and obey them, and also to render their services to them.

Gaja Bahu Maharajah sent for the five tribes of town servants namely smiths, potters, barbers, washers and parreas from Solamandalam and fixed them at Thirukonathamalai allotting to them land and paddy fields for their maintenance. Afterwards he caused a tank to be built at Kottiyaram in the neighbourhood of the river Mahaveli Genga, and paddy lands to the extent of 6350 Amonams to be improved and groves of punnei, illipe, amanaku, and cocoa trees to be planted there abouts he also gave orders that one-tenth part of their produce should be appropriated for the service of the Temple.

Another inscription which refers to this Temple and that is the inscription which was found on the temple buildings by Constantine de Sa, the Portugese Commander who destroyed the Temple. He sent a copy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of the inscription about the year 1627 A. D. to the King of Portugal with a letter to the effect ' When I went there to make this Fort, I found engraved on the Pagoda which stated that a nation of the fragmis will destroy it and thereafter shall no King of the Island of Ceylon rebuild it. The inscription can still be seen at the entrance to the Fort Frederick.

Ramayana is an epic that is fascinating to both the genius and the layman, that had moulded the minds of Hindus for centuries. According to Ramayana Ravana was a great devotee of Lord Siva. The seated Lord Siva is four armed - holding an axe in his right hand and a deer in his left, the axe and deer were sent against him by his enemies and subdued by him in accordance with the legend that Siva had to fight the deceptions and fraud of human nature. The Ravana Cut even today is a popular spot in the Koneswaram Temple Swamy rock. It is also worth mentioning that the Kanniya Hot Wells were founded by Ravana in order to perform the funeral rites to his mother.

Saint Sambanthar - 7th century A. C. refers to Konamamalai in one of his Padikam.

'He who dwelleth on Konamamalai- where the roaring ocean replete with the sandalwood that is found on its banks and bits of Black akhil, and precious stones and pearls, splashes, is the peerless one who is accompanied by the sounds of the rows of Kalal and the anklets and half of whose body is shared by the maid of the mountain and who rides a sacred bull.

Konesar Kalvettu by Kaviraja Varothayan composed partly in verse and partly in prose.

'A King named Manu Neethi Kandacholan, who ruled over the country of Cholamendalam, learning from the Kailasapuranam the wonders of Trincomalee came over to the place. His son Kulakoddu Maharajah who followed him later, raised the temple, Gopuram, Mandapam, Pavanasa spring and the sacred tank in 512 of Kaliyuga on Monday the 10th day of the month of Vaikasi.'

At the entrance to the Fort Frederick, on either side of the arch, is a rock inscription with the insignia ( two fish ) of the Pandyan Kings. These rock inscriptions have miraculously escaped the stonebrakers hammer. Veerapandiyan chose Trincomalee to engrave the emblem of double fish because Thirukoneswaram had been revered as a place of veneration by the Hindus. Even today this ensign of the double fish, the great emblem of the Pandyan dynasty at the entrance to the Fort Frederick stands out as a standing monument of the glorious past of Thirukoneswaram and its antiquity.

After the destruction of this temple within a short span of six years Constantine De Sa and his men numbering about two thousand were destroyed while entering the jungles of Badulla to capture the Kandyan Kingdom. Not only did the Portugese Commander pay a price, even the Portugese rule under whose banner this greatest atrocity was committed, with whose blessings this religious persecution was practised had to pay a greater price. The Portugese domination of Ceylon began to totter after the destruction of the Konesar Temple and the regime gave way to the Dutch. This was what Rodrigo De Sa wrote in apology later. Kullakoddans commandment ' I have made endowments to Thirukoneswaram without distributing them to my kith and kin. It is a certainty that anybody who intends or plots to damage or destroy this venerated place of worship shall be reduced to ashes.'

The bronzes which were excavated in 1950 were taken in procession to every town and village in Ceylon. They came in thousands to look at Siva, who had disappeared for three hundred and twenty five years and reappeared according to a prophecy when the smoke-eyed people returned the Island to their rightful, owners. After the statues were taken round the Island they were enshrined at Koneswaram on 23. 02. 1952 and on that day King George VI died and on that auspicious day there was no King, in the Island of Ceylon.

The inscription at the entrance of the Fort Frederick.

The Portugese shall take the holy edifice built by Kulakooddan in ancient times. O King, hearken. After the cats eyed one, the red eyed one, and the smoke eyed one have gone, the figure will be that of the Northerner.

To mention a Punniya Poomi that has existed right through the ages since Harappa Mohajatharoo period, that was worshipped by Ravana, that was one of the first settlements in Ceylon, that had hymns sung about it by saints Sampanthar, Appar, and Arunagiri that had withstood the onslaughts of floods, cyclones, Portugese vandalism, world wars, the impact of various cultures and many other calamities and yet retained its individuality and entity is THIRUKONESWARAM.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேஸ்வரம் ஆலயம்


**க. அ. ஆறுமுகம்**
**இளைப்பாறிய கல்வி அதிகாரி**




*மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை*
*கூருமில் வானின் இலங்கைச் குறியுறுஞ்*
*சாரும் திலைவனத் தண்மா மலயத்தூ*
*டேறுஞ் சுழுனை இவை சிவபூமியே*

–திருமந்திரம்

## 1. வரலாறும் சூழலும்

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்படும் இலங்கைத் தீவின் நாலா பக்கங்களிலும் பழம் பெருமை வாய்ந்த சிவாலயங்கள் உள. இவை ஈசுவரம் என்ற பெயரோடு விளங்குகின்றன. அத்தகைய ஈஸ்வரங்களுள் இலங்கையின் வட மேற்பகுதியில் சிலாப நகருக்குக் கிழக்குத் திசையில் ஒரு மைல் தொலைவில் சிலாபம் குருநாகல் பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள காலத்தால் முந்திய ஈசுவரமாக விளங்குகின்ற முன்னேசுவரமும் ஒன்றாகும். இதன் முழுப் பெயர் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதசுவாமி ஆலயம் என்பதாம். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் சிறந்து விளங்குகின்றது. இந்தத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் முன்னைநாதர். இறைவியின் பெயர் வாடிவாம்பிகை. தீர்த்தம் மாயவனாறு (தெதுரு ஓயா). ஸ்ரீ சிவபுராணத்தில் சனத்குமார சம்ஹிதையில் "அளகேஸ்வரம்' என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றதும், அறுபத்து நான்கு ஸ்ரீதேவி பீடங்களில் ஒன்றாக விளங்குவதும், இம்முன்னேசுவர க்ஷேத்திரமாகும்.

கோயிலின் முன்புறமாக திருக்குளம் ஒன்று அமைந்துள்ளது. இக்குளம் பூமழை பொழிந்தது போன்று தாமரை மலர்களினால் அழகுற்று விளங்கும். இக்குளத்தின் அருகில் உள்ள அரசமரம் தலவிருட்சமாகும். முன்னேசுவர ஆலயத்தின் தென்கிழக்குத் திசையில் விநாயகர் ஆலயமும் தேர் ஓடும் வீதியான மாட வீதியின் வடமேற்குத் திசையில் ஐயனார் கோவிலும், வடதிசையில் காளி கோவிலும், கோவிலின் புறத்தே களத்துப் பிள்ளையார் கோயிலும் அமைந்திருப்பது தனிச் சிறப்புடையதாகும். அத்துடன் இச்சிவ கோயில்கள் பக்தி மயமான சூழலை உண்டாக்குவதற்கு உதவுகின்றன. இக்கோயில் அமைந்திருக்கும் தென்னஞ் சோலைகளையும், பச்சைப்பசேலென்று விளங்கும் நெல்வயல்களையும் கொண்ட இயற்கைச் சூழல் பக்தியைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவுகின்றது. ஈழநாட்டின் முக்கியமான கோயில்களைப் பற்றிய விளக்கங்களைக் கூறும் 'கோகில சந்தேசய' (குயில்விடு தூது) என்னும் சிங்கள இலக்கிய நூல் முன்னேசுவரம் கோயில் மிகவும் முக்கியமானதொன்றெனக் குறிப்பிடுகின்றது. இக்கோயிலைப்பற்றி இதிகாச புராண வரலாறுகளும் கர்ண பரம்பரைக் கதைகளும் பல உள. முன்னேசுவர ஆலயம் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களுடன் தொடர்புடையதென்பதைத் தக்ஷிணகைலாச மகாத்மியம் கூறுவதிலிருந்து அறியலாம். இராமர், வியாசர் முதலானோரும் வேறுபல முனிவர்களும் இதனை வழிபட்டதாகத் தக்ஷிணகைலாச மகாத்மியம் கூறுகின்றது. இராமபிரான் இலங்கைக்கு வந்து இராவணனைச் சங்காரம் செய்தபொழுது அவரை பிரமகத்தி தோஷம் பீடித்தது. அவர் மீண்டும் சீதா பிராட்டியாரோடும், ஏனைய பரிவாரங்களோடும் புட்பக விமானத்தில் அயோத்தி மாநகருக்குச் செல்லும் வழியில் ஸ்ரீ முன்னேசுவரத்தைச் சமீபித்தவுடன் சாயாரூபமான பிரமகத்தி தன்னைவிட்டு அகல்வதை உணர்ந்து. அதனை ஆராயும் பொழுது சோதிமயமான உன்னத கோபுரம், தீர்த்தம், நந்தவனம் முதலியவைகளோடு விளங்குகின்ற ஸ்ரீ முன்னேசுவரத்தைக் கண்டு இராமபிரான் விமானத்தைப் பூமியில் இறக்கி, அங்குள்ள சிவதீர்த்தத்தில் சீதாபிராட்டியாரோடும் விதிப்படி ஸ்நானம் செய்து கோயிலுட் போய் முன்னைநாதேசுவரரையும், வடிவாம்பிகையையும் பூசித்தார். அப்பொழுது பரமேசுவரன், வடிவாம்பிகையோடு காட்சிகொடுத்தருளினார். இராமபிரானைப் பீடித்த பிரமகத்தி தோஷம் நீங்கும் பொருட்டு இலங்காபுரியில் விளங்குகின்ற சிவத்தலங்களாகிய முன்னேசுவரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகிய மூன்று தலங்களிலும் உன்நாமத்தோடு மூன்று சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, பின் சேதுக்கரையிலும் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யுமாறு இறைவன் திருவாய் மலர்ந்தருளினார். அதன் பிரகாரம் முன்னேசுவரத்திற்கு வடக்கில் மாயவன் ஆற்றுக்கு வட பாகத்தில் மானாவாரி என்னும் தலத்தில் 'இராமலிங்கம்' என்னும் பெயரோடு விளங்கும் சுவர்ணலிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். இறைவன் கூறியருளியபடி ஏனைய இடங்களிலும் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டாரென்று தக்ஷிண கைலாய புராணம் பதினைந்தாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் பாரதம் எழுதிய வியாசர் முன்னேசுவர ஆலயத்தை வழிபட்டு நற்கதியடைந்தாரென்று ஸ்ரீ தக்ஷிணகைலாயபுராணத்தில் பதினாறாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. இராமபிரான், வியாசர் மட்டுமன்றி சோழ அரசனாகிய குளக் கோட்டு மன்னனும், இலங்கை மன்னர்களாகிய ஆறாம் பராக்கிரமபாகு, ஒன்பதாவது பராக்கிரம பாகு, கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் என்போரும் இவ்வாலயத்தை வழிபட்டுப் பெருந் திருப்பணி ஆற்றியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குளக்கோட்டு மன்னன் திருப்பணி

மனு நீதிகண்ட சோழன் மரபில் தோன்றிய வரராமதேவன் என்னும் மன்னனின் மகனாகிய சிவபக்தியில் சிறந்த குளக் கோட்டு மகாராசா பழம்பெருமைகளை இழந்து சிதைந்த நிலையிலிருந்த ஸ்ரீ முன்னேசுவர ஆலயத்தைச் சீர்திருத்தித் திருப்பணிகளையெல்லாம் செய்ததோடு தன் குலகுருவாகிய நீலகண்ட சிவாசாரியாரையும் அவர்பத்தினியாகிய விசாலாட்சி அம்பாளையும் அவர்கள் புத்திரர்களையும் அந்தணர்களையும் முன்னேசுவரத்தில் குடியேற்றி சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகத்தையும் செய்து வைத்தார் என்று முன்னேசுவர மான்மியம் கூறுகின்றது. நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடந்து வரும் பொருட்டு பல்வேறு குடிமக்களையும் குடியேற்றி அவர்களுக்கு வேண்டுவனவற்றை அளித்ததோடு, கோயிலுக்கு அறுபத்துநான்கு கிராமங்களையும் அளித்தான் என வரலாறு கூறுகின்றது.

### ஆறாவது ஸ்ரீ பராக்கிரமபாகு மகாராசன்

கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகு ஸ்ரீ முன்னேசுவர ஷேத்திர மான்மியத்தைக் கேட்டறிந்து 1448 ஆம் ஆண்டில் கோவிலுக்கு திருப்பணிகள் பல செய்து கிராமங்களையும் நன்கொடையாக அளித்துள்ளான். இச்செய்தியை கல்வெட்டுச் சாசனமாகத் தெரிவித்தான். இன்றும் இக்கோயில் கர்ப்பக் கிருகச் சுவரில் இதனைக் காணலாம்.

### கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன்

கண்டி நகரைச் சேர்ந்த குண்டசாலையென்னும் ஊரிலிருந்து அரசுபுரிந்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கமகாராஜா, ஸ்ரீ முன்னேசுவர ஷேத்திர மான்மியத்தையும், அக்கோயில் போர்த்துக்கீசரால் சின்னாபின்னமாக்கப்பட்டிருப்பதையும் கேள்வியுற்று மனம்வருந்தி, 1753 ஆம் ஆண்டு சோழ தேசத்திலிருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்துத் திருப்பணிகளைச் செய்து, நித்திய, நைமித்தியங்கள் குறைவின்றி நடக்க ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். இதனைக் குறித்துச் செப்புப் பட்டயம் எழுதிக் கொடுத்தார்.

### குமாரசுவாமிக் குருக்கள்

தமிழகத்தில் தொண்டை மண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்த குமாரசுவாமிக் குருக்கள் முன்னேசுவரப் பெருமானையும், வடிவாம்பிகையையும் வணங்கி அவரை வாட்டிய நீரிழிவு நோய் குணமடையப் பெற்றார். கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்து 1875ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் ஒன்றினைச் சிறப்பாகச் செய்துவைத்தார்.

### கர்ப்பக்கிருக அம்பாள் விக்கிரகம்.

ஒருசமயம் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி ஒருத்தி அதிசயிக்கத்தக்கவாறு தங்கமயமானதொரு சிறிய விக்கிரமாக மாறியதாகவும் அந்த விக்கிரமே இன்றும் கர்ப்பக்கிரகத்தில் வைத்து பூசை செய்யப்படுகின்றது என்று ஓர் ஐதீகம் உள்ளது.

## 2. ஆலயத் தோற்றம்

முன்னேசுவர ஆலயம் சிவாகம விதிகளுக்கும் சிற்ப சாத்திர முறைகளுக்கும், அமையவே உருவாக்கப் பெற்றுள்ளதாகும். அது கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், கோபுர வாயில் பரிவார தேவர் கோயில்கள், பிரகாரம் என்னும் அமைப்புகளுடன் விளங்குகின்றது. கோயில் கர்ப்பக்கிருகமும், ஸ்தூபியும், இலங்கையிலே எங்கும் இல்லாதவாறு பிரமாண்டமான வகையில் உருவாக்கப்பட்ட நிலையில் உள்ளன. கோயிலின் பிரதான கோபுரங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலையிலே இன்று காட்சியளிக்கின்றன. மூன்று வீதிகளைக் கொண்ட இக் கோயிலின் உட் பிரகாரத்தில் இலங்கையில் எந்தக் கோயிலிலும் இல்லாதவாறு அறுபத்து மூன்று சிவனடியார்களின் எழுந்தருளி விக்கிரகங்கள் கலையழகு ததும்ப, காண்போர் கருத்தைக் கவரும் வண்ணம் காட்சியளிக்கின்றன. இக்கோயிலில் பூசிக்கப்பட்டு வரும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகம், நடராஜர் ஆகிய விக்கிரகங்கள் கலையழகும், தொன்மையும் வாய்ந்தவை. இவை தூர்ந்து போனதொரு கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டவையெனக் கூறப்படுகின்றது. இங்குள்ள பிக்ஷாடண மூர்த்தி பரிபூரண கலையழகும், சுமார் ஐந்தரை அடி உயரமும் கொண்டதோடு சிற்ப சாத்திரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் அங்க அமைப்புகளும் கொண்ட ஓர் அபூர்வ விக்கிரகமாகும்.

### நித்திய, நைமித்திய கிரியைகள்

கோயிலில் முக்கிய அம்சமாக விளங்குபவை கிரியைகள். இவை கோயிலின் திருவருள் நிலைபெறுவதற்கு உதவுவனவாகும். திருக்கோயில்களில் நிகழும் கிரியைகள் நித்தியக் கிரியைகள், நைமித்திய கிரியைகள், காமியக் கிரியைகள் என மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. நித்தியக் கிரியைகளில் நடைபெறும் குறைபாடுகளைப் போக்குவதற்கு நைமித்தியக் கிரியைகள் நடத்தப்படுகின்றன. திருக்கோயில்களில் பார்த்த நிலையில் பூசைகள் நிகழுமிடத்து தெரிந்தோ தெரியாமலோ விளையும் மந்திரக் குறைவு, கிரியைக் குறைவு, திரவியக் குறைவு, சிரத்தைக் குறைவு போன்றவற்றை நீக்கி நிறைவுபெறச் செய்யும் வண்ணமும் இறையருள் பரிபூரணமாகப் பிரகாசிக்கவும் நைமித்தியங்கள் நிகழ்கின்றன. அத்துடன் விழாக்கள் இவற்றில் விளையும் குறைகளைப் போக்கிக்கொள்வதற்குச் செய்யப் பெறுவது பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகமாகும். திருக்கோயில்களில் நிகழும் கிரியை "பூசை" என மக்களிடையே பெரிதும் வழங்குகின்றது. கிரியை நூல்கள் "ஷட் காலப்பூசை" என குறிப்பிடப்படும் உஷக்காலப் பூசை, காலை சந்தி பூசை, உச்சிக்கால பூசை, சாயரட்சை பூசை, இரண்டாங்கால பூசை, அர்த்தயாம பூசை என்று ஆறுகாலப் பூசைகளும் வேளைதவறாது ஆகம முறைப்படி முன்னேசுவரத்தில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

### நைமித்தியக் கிரியைகள்

நைமித்தியக் கிரியையெனினும் விசேட கிரியையெனினும் ஒன்றே. இவ்வகைக் கிரியைகள் குறிப்பிட்ட விசேட தினங்களில் மட்டும் நிகழ்வனவாகும். நைமித்தியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகள் கிழமைக்கொரு முறை, இரண்டு வாரத்திற்கொரு முறை, மாதத்திற்கு ஒரு முறை, வருடத்திற்கு ஒரு முறை, பல வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்வனவாக அமையும். பிரதோஷம், கார்த்திகை, நடேசர் அபிஷேகங்கள், நவராத்திரி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பொங்கல், சிவராத்திரி, கார்த்திகைச் சோம வாரம், பௌர்ணமி ஸ்ரீசக்ர பூசை என்பன இக்கோயிலில் சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்று வருகின்றன.

### பர்வயந்திர பூசை

ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் அந்திப் பொழுதில் நடைபெறும் விசேட ஸ்ரீ சக்ர பூசை, பர்வயந்திர பூசை எனப் பெயர் பெறும். சிவசக்தி ஐக்கியரூபமாக உள்ள ஸ்ரீ சக்கரத்தினை (மேருயந்திரத்தினை) ஈழநாட்டில் முன்னேசுவரம் கோவிலில் மட்டுமே காணலாம். சுமார் இரண்டரை அடி உயரம் கொண்ட ஸ்ரீசக்கரத்தின் திருவுருவினுக்கு அபிஷேகங்கள் நடைபெற்று, மாலையில் சந்திரோதயத்தின் பொழுது ஸ்ரீசக்ர பூசை நடைபெறும்.

### நவராத்திரி

முன்னேசுவரத்தில் கொண்டாடப்படும் உற்சவங்களில் நவராத்திரி உற்சவம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. சிவராத்திரிக்கு திருக்கேதீசுவரம் போல, நவராத்திரி என்றதும் நினைவில் வருவது முன்னேஸ்வரம். இவ்வாலயத்தில் வசந்த ருதுவில் கொண்டாடப்படும் வசந்த நவராத்திரியும், சரத்ருதுவில் கொண்டாடப்படும் சாரதா நவராத்திரியும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. நவராத்திரி விழாவின் பொழுது ஒவ்வொரு நாளும் காலையில் நூற்றெட்டுச் சங்குகளைக் கொண்ட சங்கு பூசையும், கும்ப பூசையும், விசேட யாகங்களும் பிரதான குருவினால் நிகழ்த்தப்படும் கிரியைகளாகும். ஒவ்வொரு சங்கிலும் ஒவ்வொரு விதமான மூலிகைகள் இடப்பட்டு அபிஷேகம் நடாத்தப்படும். இந்த அபிடேக தீர்த்தம் மிகவும் சக்திவாய்ந்தது. தம்பட்ட ஒலி, நாதஸ்வர மேளதாள இசை, சங்கநாதம் என்பன முழங்கி பரவசமான அனுபவமாய் நவராத்திரி அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

### இலட்சார்ச்சனை

இது தைமாதத்துப் பூச நட்சத்திரத்தை இறுதி நாளாகக் கொண்டு பதினாறு நாட்களுக்கு நடைபெறும். விசேட அபிஷேக அலங்கார ஆராதனை ஸ்ரீசக்ர பூசைகளுடன் ஓர் இலட்சம் முறைகள் இறைவனுடைய பெயர்களைக் கூறி நடாத்தப்படும் பூசை இதுவாகும்.

### மகோற்சவம்

மகோற்சவம் ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒருகாலத்தில் நடைபெறும் பெருந் திருவிழாவாகும். முன்னேசுவரத்தில் நடைபெறும் மகோற்சவம் இருபத்தேழு தினங்கள் நடைபெற்று, ஆவணி மாதப் பௌர்ணமியில் தீர்த்தோற்சவத்தை இறுதியாகக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இருபத்தெட்டுத் தினங்களும் காலை, மாலை வேளைகளில் சோமாஸ்கந்த மூர்த்தம் திருவுலாக்காட்சி கொடுப்பது குறிப்பிடத்தக்கதாகும். மகோற்சவத்தில் கடைசி ஆறு நாள்களும் நடைபெறும் பக்தோற்சவம் (சிவனடியார் திருவிழா) பிக்ஷாடனோற்சவம், நடராஜ உற்சவம், வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன மிகவும் சிறப்பு வாய்ந்தவை. பக்தோற்சவத்தில் மாலையில் சுவாமியின் திருவுலா நடைபெறும் பொழுது சுவாமியை எதிர் நோக்கியவாறே அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவங்களைக் கொண்ட அழகிய இரதம் பின்னோக்கிப் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதே விழாவன்று இரவு நடக்கும் தீமிதிப்பு வைபவம் பக்தியின் உச்சநிலையைக் காட்டி நிற்கும். பிக்ஷாடனோற்சவம் இறைவன் இரவலர் கோலம் பூண்டு, தாருகாவனத்து முனிவர்களின் அகங்காரத்தை அடக்கிய அருள் வண்ணத்தைச் சித்திரிக்கின்றது. மஹோற்சவத்தில் நடைபெறும் நித்திய பலிபூசை, ஸ்தம்ப அபிஷேக பூசை என்பன தினமும் நடைபெறமாட்டா. மகோற்சவம் ஆகம முறைகளுக்கமையாது ஆங்காங்கே சிறிது மாறுபட்டு இந்த க்ஷேத்திரத்திற்கே உரித்தான பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றது. ஆனால் மாசி மகத்தை இறுதியாகக் கொண்டு பத்துத் தினங்கள் நடைபெறும் பிரம்மோற்சவம் ஆகம முறைகளுக்கு இம்மியளவும் மாறுபடாது நடைபெற்று வருகின்றது.

### மக்களும் கோவிலும்

முன்னேசுவரம் கோயிலுக்கு மக்கள் சாதி மத பேதமின்றி வந்து வழிபடுகின்றனர். அடியார்கள் அனைவரும் மகா மண்டபம் வரை சென்று வழிபடும் மரபு உண்டு. இங்கு வரும் மக்களின் பக்தி சொல்லுந்தரமன்று. அவர்கள் தாம் நினைத்த காரியம் நிறைவேற இறைவனை வேண்டி நேர்த்தி கட்டுவதும், அதன் பின் நேர்த்திக்கடன் நிறைவேற்ற விலை உயர்ந்த உலோகப் பொருள்களையெல்லாம் கொடுப்பதும் வழக்கம். பிள்ளைப் பேற்றை வேண்டி மக்கள் தென்னம் பிள்ளைகளையும், உடல் நலம் குன்றிய மக்கள் தங்களை வாட்டும் நோய் தீர்ந்தால் அவ்வுறுப்புக்களைப் போன்று தங்கத்தினாலோ அல்லது வெள்ளியினாலோ செய்தும் கொண்டு வந்து கொடுத்துத் தம் நன்றிக் கடனை நிறைவேற்றுவார்கள். இக்கோயில் நவராத்திரி அபிஷேகத் தீர்த்தத்தைப் பிணிதீர்க்கும் மருந்தாகக் கருதி அதனை அருந்துவார்கள்.

### உசாத்துணை நூல்கள்


1. சைவத் திருக்கோயிற் கிரியை நெறி – பேராசிரியர் கோ. கைலாசநாத குருக்கள் – M.A.(Ceylon), Ph.D. (Poona)
2. இலங்கையின் இந்துக் கோயில்கள் – பதிப்பாசிரியர் பேராசிரியர் சி. பத்மநாதன்.
3. ஸ்ரீமுன்னேஸ்வர வரலாறு – பா. சிவராமகிருஷ்ண சர்மா B.Sc., Dip. in Ed., S.L.E.A.S.
4. ஸ்ரீமுன்னேசுவரம் மகாகும்பாபிஷேக மலர் – 1963.
5. வடிவாம்பிகாசமேத முன்னைநாதஸ்வாமி தேவஸ்தானம் கோடியர்ச்சனை மலர் – 1962
6. சைவநெறி – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வரத்தின் பெருமை

நகுலேஸ்வரக் குருக்கள்

*கீரி மாமலை வாரிதி யாடியே*
*கிரீச னாநகு லேசனை நாடியே*
*சேரு மன்பொடு சிந்தனை செய்துமேற்*
*றிசைகொ ளுக்கிர சோழரா சன்மகள்*
*மாரு தப்பிர வல்லியென் பேரினாள்*
*வாவு வெம்பரி மாமுக மோடு நோய்*
*தீர நீங்கின ளித்தலத் தேயெனிற்*
*செப்பி லங்கையி லொப்பிதற் கில்லையே*

புராதன காலத்திலே திருத்தம்பலேசுரம் எனவும், நகுலமுனிவர் அருள் பெற்றபின் நகுலேசுவரம் எனவும் அழைக்கப்படும் கீரிமலைச் சிவன் கோயில் யாழ்ப்பாணத்தின் வடபாகத்திலே சாகர சங்கம புண்ணிய தீர்த்தக்கரையிலே இருக்கின்றது. இது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் விஷேடம் பெற்றது; இட்ட சித்திகளைக் கொடுப்பது; மனோலயத்துக்கும், வியாதி நீக்கம் முதலியவைகளுக்கும் ஏற்றது.

நகுலேச தீர்த்தமானது நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த சலமும் வடக்கிலுள்ள உப்புச் சலமுங் கலந்து கிழக்கு நோக்கிய சிவரூபமுஞ் சத்திரூபமுமாயிருக்கின்ற இயல்பினாலே திவ்விய தீர்த்தமாகும். இது கங்கா சமுத்திர சங்கமமென்றும், கண்டகி தீர்த்தமென்றும் பெயர் பெறும். இத்தீர்த்தத்திலே காலந்தோறும் அளவில்லாத அன்பர்கள் விதிப்படி ஸ்நானஞ் செய்து பயன் பெற்று வருகிறார்கள்.

முன்னொரு காலத்திலே மேருமலையின் இடப்பாகத்திலே தவஞ் செய்துகொண்டிருந்த சுதாமா என்னும் முனிவருடைய சாபத்தினாலே துர்த்தரன் என்னும் வேடன் கீரிமுகம் பெற்றான். உடனே வேடன் நடுநடுங்கி அச்சாபத்துக்கு விமோசனம் கொடுக்கும்படி வேண்டினான். முனிவர் கருணை கொண்டு '' வேடனே, நீ என் தரிசனத்தாற் சுத்தனானாய். வேதாரணியத்திற்குத் தெற்கிலுள்ள கடலிலே இலங்கையென்றொரு தீவு உளது. அதன் வடக்கே ஓர் உயர்ந்த மலையிருக்கிறது. அங்கு சென்று கருமயோகஞ் செய்தால் கீரிமுகம் மாறி மோட்சமும் பெறுவாய் என்று கூறி யோக மார்க்கங்களை உபதேசித்து ஆற்றுப்படுத்தி அனுப்பினார்.

கீரிமுகம் பெற்ற அவ்வேடன் இங்கு வந்து கங்கா தீர்த்தத்தில் நீராடி மலையிலே ஒரு சாரலிலிருந்து கருமயோகஞ் செய்வானாயினான். பல்லாண்டு காலம் தீர்த்தஸ்நானம், ஈசுரவழிபாடு, செபம், முதலியன செய்துகொண்டிருந்தலைத் திருவுளங்கொண்ட சிவபெருமான் உமா தேவியாரோடும் முருகப்பிரானோடுங் கூடி இடபாரூடராய்க் காட்சி கொடுத்தருளினார். அப்போது அவ்வேடனாகிய நகுலமுனிவர் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தோத்திரஞ் செய்து வணங்கினார். சிவபெருமான் அறிஞனே, நீ இப்போது அழகிய முகம்பெறுவாய். நீ தவஞ் செய்த இம்மலை நகுலமலையென்றும், உனக்கு அருள் செய்த எம் நாமம் நகுலேசுரர் என்றும், தேவி நாமம் நகுலாம்பிகையென்றும், தீர்த்தம் நகுலேச தீர்த்தமென்றும் வழங்குக என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். நகுல முனிவர் பின்னும் பலகாலம் தவஞ் செய்து மோட்சமடைந்தார்.

திசையுக்கிர சோழன் மனைவியாகிய கனகாங்கியென்பவள் குதிரைமுகமுடைய கின்னரப் பெண்ணொருத்தியின் சாபத்தினாலே குதிரை முகமுடைய மாருதப்புரவீகவல்லியென்னும் பெண்ணைப் பெற்றாள். அப்பெண் குன்ம நோயும் உடையவளாய் இருந்தாள். வெட்கத்தினால் வளைந்த கழுத்துடையவளாய்ப் பல தீர்த்தங்களாடி இறைவனைத் துதித்து வந்தாள். நகுலேசுவரப் பெருமான் அவளது கனவிலே சந்நியாசியாய்த் தோன்றி '' மாருதப் புரவீகவல்லியே, யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள நகுலேச தீர்த்தம் கங்கையிலும் மேன்மையுடையது; அத்தீர்த்தத்திலே முழுகிச் சுகமடைவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவள் அவ்வாறே அத்தீர்த்தத்திலாடிக் குதிரை முகமுங் குன்மநோயும் மாறப்பெற்றாள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி, இராமர், சுகங்கிதன், நளன், அருச்சுனன் முதலிய பலர் நகுலேசுவரத்துக்கு வந்து, நகுலேசு தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, நகுலாம்பிகாசமேத நகுலேசுவரப் பெருமானைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டு, இட்ட சித்திகளைப் பெற்று உய்தார்கள்.



(நன்றி : ஆத்மஜோதி உலக இந்து மாநாட்டு சிறப்பு மலர் 1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Mystique of Kathirkamam

**Hon Justice C.V.Wigneswaran B.A. (Lond) L.L.B (Ceylon)**
Judge of the Court of Appeal of Sri Lanka

'Kathir' plus 'Kaamam' makes Kathirgamam. 'Kathir' is a Tamil word. 'Kaama' is a Sanskrit word and 'Kaamam' is the Tamilicised Sanskrit word. Both words are difficult to understand because they are abstruse.

To the Hindus the one Supreme Reality (or God) in its unmanifested state is "Being" or Shiva. The same Supreme Reality in its manifested state is 'Becoming' (Parvati or Shiva's consort). Just as a full grown tree (manifested) in its entirety was always in existence in a potential state in its seed, so too, the 'Becoming' or this manifested Universe is and was always in a potential state in the 'Being' (Artha Nareeswara state of half Shiva and half Parvati). The 'Being' state is passive; it is impersonal, transcendental and unmanifested. It is thatwàtheetham (beyond attributes), gunàtheetham (beyond all qualities), Bhàvàtheetham (beyond bhavas or conceptions), Nàmàtheetham (beyond names), Roopàtheetham (beyond all forms) Advaitham (non-dual) and Maha Mownam (the great silence). This is expressed by the word 'Kathir'. It means luminous or that which gives light. The Shivalinga was a column of light extending into the heavens and the nether worlds infinitely.

When the 'Being' evolves to 'Become' this manifested Universe there is a throb. St. John said. "In the beginning was the Word. The Word was with God and the Word was God". To St. John the primordial throb was revealed as the mystic word.

With the throb the passive becomes active, the impersonal becomes personal, unmanifested becomes manifested and transcendental becomes immanent. This primordial throb is known as "Kaama" in metaphysical language. When the throb begins to act and to become dynamic the expression of such dynamism is 'Becoming'. Mother Goddess or Parvati is the symbol of 'Becoming'. Thus 'Being' evolving into 'Becoming' is Kathir plus Kaamam. The offspring of Kathir and Kaama is Kathirgamar. The shrine he resides is Kathirgamam.

'Becoming' is said to manifest in three stages. First stage is the Kaama or the desire or the Ichcha to become. Second is the jnana or the wisdom to become. And finally it is the action or Kriya of becoming. Thus Ichcha, Jnana, and Kriya or will, wisdom and action respectively are the three subsequent manifestations of the primordial throb of the one state of transcendental reality. Valli is Ichcha Sakti and Theivayaanai is Kriya Sakti. Since Kathirgamar was born from the third eye or the eye of wisdom of Shiva, Kathirgamar stands for divine knowledge and wisdom (Jnana).

Just before any manifestation, in its purest state, 'Being-Becoming' or Kathirgamar state has no form, no name, no attribute, no qualities nor functions. This is the subtle inconceivable state of the "Being-Becoming" which is worshipped in Kathirgamam as the Supreme Transcendental Absolute (formless form). This accounts for the shrine at Kathirgamam having no image nor idol whatsoever or even a symbol since divinity transcends all these. What is explained by such a temple is that Divinity is inconceivable and inexpressible. In other words it is apparently 'nil' but potentially 'full'.

This temple is said to have had seven veils in ancient times. They stood for the seven vestments in man to be transcended in order to get to the core of divinity. They are matter (or body), life consciousness (or waking state), sub-consciousness (or dream state), unconsciousness (deep sleep stage), pure intelligence and soul (or pure ego). When one tears down these obstructing hinderances what remains is said to be para sunyam or the Great Void





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which is Nirvana or Nakedness apparently nothing but potentially every thing.

"Be still and know that" seems to be the message of Kathirgamam. By being still we lift off the seven veils to finally be face to face with divinity in its absolute state.

In Hinduism divinity is one and many at the same time. Hinduism also conceives an integrated whole as Divinity. In that sense every one of us are potentially divine because we are part of a divine whole. We are the enquirers with inquiring intelligences who are part of the Divinity which we are trying to enquire. The "part" is trying to analyse the "Whole" and understand it. It appears therefore irrational though that is what all of us enquirers are trying to do. A "finger" or a "toe" is trying to understand through the metaphysical, allegorical, metaphorical, poetical and many other means the "body" of which it is a part. Its very existence and dynamism is dependent on the body but yet the "finger's" or the "toe's" struggle to seek does not stop.

What is expected in this struggle is to unbind the influences of matter, life, consciousness etc., to reach a stage of stillness in which the part intuitively experiences its connection to the "whole".

When the priest at Kathirgamam gags his mouth during pooja he is in effect declaring the great truth behind this ancient shrine symbolically and publicly.

He is not thereby depicting verbal stillness. He is depicting thought stillness. He seems to say 'Come into this shrine in stillness. When you go out you will go in fullness'. Again he seems to say 'Empty thyself and thou shalt be filled'. (vide 'Subramanya' by Swami Shantanand).

The Tamils call the incumbent deity of Kathirgamam as Murugan or "the tender child". Murugan appears to have been the primitive God of the Tamils who was brought down to the South from their supposed early settlements in North India. Wherever Tamil influence prevailed he was held in pre-eminent honour and dignity. Tamils regard Murugan as the guardian of their race, language and literature. He is reputed to have arrived in Sri Lanka in a remote age when it was part of a vast continent the LEMURIA, perhaps of the Zoologists stretching from Madagascar to near Australia (vide chapter on "The worship of Muruka or Skanda" in "Studies and Translations" by Sir Ponnampalam Arunachalam -P113).

Ancient Tamil history has for its chief landmarks three successive literary Academies called Sangams established by the Pandyan Kings of South India who were great patrons of literature and art. The first two Academies (Muthal - first and Idai - second) go back to an almost mythical period and their duration is counted by millenniums. The seats of the first and second Academies (old Mathura and Kapàdapuram) were the two first capitals of the Pandyan Dynasty and are said to have been submerged by the Sea. The third Sangam literature such as Purananooru, (56), Ahananooru (158), Porunaraatruppadai & Ainkurunooru (249) refer to worship of Murugan. Even the KAUTILYA ARTHA SHASTRA of 4th century B.C. during Chandra Gupta's time refers to Subramanya Worship.

Long before Buddhism found its way into Sri Lanka, Kathirgamam was a place of worship held in high esteem (vide Essay by K. Chokkalingam in World Hindu Congress Souvenir. Page 251. He refers to excavations in Puttalam District in 1955.) Kathirgamam is said to have been one of the sixteen places of sanctity visited by Gautama the Buddha where the Enlightened One sat in meditation. Mahiyangana, Naagadeepa, Kelaniya, Sri Pada, Divaguha near Adam's Peak, Dighavapi, Mutiyangana (in Badulla), Tissamaharama, Six places of worship in Anuradhapura (Mahabodhi, Mirisvetiya, Ruwanvelisaya, Thuparama, Abhayagiri and Jetawana) and Selachaitiya at Mihintale were the other fifteen sacred places credited to have been visited by the Buddha. (vide S. Paranavithana - Epigraphia Zeylanica Volume III Page 215).

The Mahavamsa (XIX 54) refers to the nobles of Kajaragama (Kathirgamam) next to the king of Sri Lanka when referring to those who welcomed Sangamitta, daughter of Emperor Asoka, when she brought the sacred Bo-sapling during the time of Devanambiya Tissa (vide Wilhelm Geiger - Mahavamsa (Translation) Page 132).

Yalpàna Vaipava Maalai (vide Translation by C.Britto - 1879) refers to the building of a Temple for Lord Murugan at Kathirgamam by King Vijaya around 543 B.C.

S.S. Nathan in his book - "Kathirgàma Thirumurugan"- refers to a book by Parker on "Ancient Ceylon" where the latter refers to the existence of the Valliamman Temple in Kathirgamam even before the birth of the Sinhala race.

Sir Ponnampalam Arunachalam in his book "Studies & Translations - Philosophical and Religious" says in page 117 thus:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"The worship of Skanda (Murugan) has suffered no de 24 centuries ago. The Kataragama God (Kataragama Deiyo) has a shrine in every Buddhist place of worship and plays a prominent part in its ceremonials and processions. In the great annual perahera of Kandy he had always a leading place. Buddha's Tooth, now the chief feature of the procession formed no part of it till the middle of the 18th century when it was introduced by order of King Kirthi Sri Rajasinghe to humour the Buddhist monks he had imported from Siam."

He further goes on to say that "King Dutugemunu in the first century B.C., according to ancient tradition, rebuilt and richly endowed the temple at Kataragama as a thank offering for the favour of the God, which enabled him to march from this district against the Tamil King, Elàla, and after killing him in battle recover the ancestral throne of Anuradhapura. Dutugemunu's great-great-grandfather Mahanàga, younger brother of Devanampiya Tissa had taken refuge in the Southern Province and founded a dynasty there and Anuradhapura was for 78 years (with a short break) ruled by Tamil Kings, of whom Elàla (205-161 B.C) was the greatest."

He further goes on to say that, "The incidents associating the Kataragama God with Dutugemunu's victory naturally find no place in the Buddhist Chronicle, the Mahavamsa, which glorifies him as a zealous champion of Buddhism. The tradition is confirmed by a Sinhalese poem called Kanda Upata - "Birth of Kanda", for a manuscript copy of which I am indebted to Mudaliyar A. Mendis Gunasekera. Stanzas 41 & 46 show that King Dutugemunu invoked the aid of the God and received his help and built and endowed the temple at Kataragama in fulfilment of his vow".

Sir Ponnampalam Arunachalam also makes another interesting comment thus:-

"Like most Ceylon kings he (Dutugemunu) was more of a Hindu than a Buddhist. An ancient manuscript account of Ridi Vihare which he built and endowed, states that on the occassion of its consecration he was accompanied thither by 500 Bhikkus (Buddhist monks) and 1500 Brahamins versed in the Vedas (see paper read at the R.A.S.B. in June 1923 on "Palm Leaf MSS in Ridi Vihare"). Throughout Ceylon History, the court religion was Hinduism and its ritual and worship largely alloyed and affected the popular Buddhism and made it very unlike the religion of the Buddha."

According to Robert Knox, who in the 17th century spent 20 years of captivity in Ceylon (in his "Historical relation of the Island of Ceylon"), in the great perahera at Kandy in Knox's time there was no Buddha's tooth but Alutnuwara Deiyo, God and maker of Heaven and Earth, and Kataragama Deiyo and Pathini Deiyo "these three gods that ride here in company are accounted of all the others the greatest and chiefest."

Thus Kathirgamam as a place of worship has existed from very ancient times and it has symbolised the highest and most abstruse ontological principles of the Sanadhana Dharma and at the same time been a sanctuary for the simple Veddhas and others. Though originally its votaries were Hindus essentially, yet later it attracted Buddhists and others as well. (vide Dr. M. Covington's 'Hindu Kataragama').

What is puzzling and yet fascinating about the shrine of Kathirgamam is that there is no idol whatsoever as is seen in all other shrines and the ritual is so peculiar that one cannot call it as of a particular type of prayer-ritual because there is no manthra ecitation, no Abhishekam, no Aarathi nor Archana as popularly practised and understood. All that one sees in the shrine is a curtain or veil which is never raised. Tradition has it that in bygone days there were seven curtains one behind the other covering the sanctum sanctorum. Only three remain today including the one in front facing the devotee.

No ordinary mortal has seen or known what is on the other side of the curtain except of course some Holy men who had become one with Murugan in Holy Communion and that too not with the naked eyes but through the eyes of their heart. They worship Murugan as the ultimate reality transcending all categories and attributes. The transcendent nature of divinity is underlined by the absence of any image, form or symbol in this shrine.

Yet the Lord of Kathirgamam does evoke awe and fear, reverence and love, inspiration and intuition among people of all walks of life and from all types of background who visit this abode of Murugan for peace and solace.

***Engum Murugan, Ellam Murugan, Yathum Murugan.***
***He resides everywhere - He is in every thing - He is everything.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்மலானை ஈசுவரன் கோவில்

வைத்தியகலாநிதி.க.வேலாயுதபிள்ளை
(தலைவர் விவேகானந்த சபை, கொழும்பு; துணைத்தலைவர், அ.இ.மா.மன்றம்)

திருக்கோயிலில்லாத திருவிலூருந்
திருவெண்ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரு
மலையெல்லா மூரல்ல வடவிகாடே

தனித் திருத்தாண்டகம் –அப்பர் திருப்பொலிவு அமைந்த ஊரிற்கு மேற்குறித்த பாடலால் விரிவிலக்கணந் தந்த அப்பர் சுவாமிகள், அவ்விலக்கணத்திற்குள் அமையாத வூரெல்லாம் அடவி காடென்றார். ஈழ நாட்டில் அடர்ந்த காடுகள் நிறைந்த வூர்களிலுஞ் சிவாலயங்கள் காணப்படுவதால் எவ்விடத்துந் திருநிறைவு காணப்படுகின்றது. கிரேதத் திரேதத் துவாபரமாகிய மூன்று யுகங்களிலும் சைவசமயமே ஈழத்தில் நிலவியது. சிவபக்தனாகிய இராவணேசுவரன் இலங்கையைச் சைவசமயச் சூழலிலேயே ஆட்சி புரிந்தானென்பது கூறவேண்டிய தொன்றல்ல. இராவண வதத்தின் பின்னர் இராமன் பாவநீக்கத்தின் நோக்காக இலங்கையிற் சைவாலயங்களில் வழிபாடு புரிந்தானெனப் புராணங்கள் புகழ்கின்றன. இற்றைக்கு 2400 வருடங்கட்கு முன்னர் வங்கத்திருந்து வருகைதந்து ஆட்சியை இலங்கையில் அமைத்த அரசகுலத் தோன்றல் விஜயன் இலங்கையின் நாற்திசையிலும் நான்கு ஈச்சுரங்களை அமைத்துச் சிவ வழிபாட்டில் மக்களை ஈடுபடுத்தினான் என யாழ்ப்பாண வைபவமாலை தகவல் தருகின்றது.

இதனால் ஈழத்திரு நாட்டின் பூர்வ சமயம் சைவமே என அறியலாம். அன்னிய சாம்ராச்சியங்களின் நுழைவால் மதமாற்றங்கள் ஏற்பட்டபொழுதும் சைவசமயம் நிலவியதற்குச் சான்றாக சிதையாத சைவ ஆலயங்களும் சிதைவுற்ற ஆலயங்களும் சான்று பகர்கின்றன. வட இந்தியரான அசோகச் சக்கரவர்த்தி இலங்கையில் புத்தமதத்தைப் பரப்ப எத்தனிக்காவிட்டால் இன்று இலங்கையில் மதத்தால் ஒன்றுபட்ட ஐக்கியமான மக்கட் குழாத்தைக் காணமுடியும். சைவ வழிபாட்டிற்கும் சைவ ஆலயங்கட்டும் பௌத்த மதத்தால் அழிவு ஆரம்பத்தில் ஏற்படவில்லை. இலங்கையில் நிலவும் பௌத்த மதம் சைவந் தழுவிய ஓர் மதமாகவே நிலவுகின்றது. புத்த கோயில்களில் வினாயகர், சிவன், முருகன் விக்கிரகங்கள் இருப்பதும் புத்தர்கள் சைவாலயங்களில் பக்தியுடன் வழிபாடு செய்தலும் பரம்பரையாக புத்த சமயிகளிடத்தே சைவ நம்பிக்கை வழிவந்துள்ளதற்குச் சான்றாகும். பல சைவ ஆலயங்களிற் பூசைசெய்பவர்கள் புத்தமதஞ் சார்ந்தவராயும் இருக்கின்றனர். இன்று இரத்மலானை ஈச்வரன் கோயிலின் பூசகரும் ஒரு புத்த சமயியாக இருப்பது கண்கூடு. இப்பொழுது இவ்வாலயத்தில் பூசகராகக் கடமையாற்றுபவர் திரு. எம். காமினி ஆர். பெர்ணான்டோவாவர். இவர் இவ்வாலயத்தின் பிரதான நம்பிக்கைப் பொறுப்பாளராக இருப்பதுடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் பொருளாளருமாக இயங்குகின்றார். இவர் கொடுத்துதவிய தகவல்களும் இக் கட்டுரையாளருக்கு உதவியன.

இவ்வாலயத்தின் முக்கியத்துவங் கருதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் கூட்டிணைத்தல் சட்டம் ஒன்றினை, 1992ம் ஆண்டின் 18ம் இலக்க, இரத்மலானை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொணாபெந்தி கதிர்காம மகா தேவாலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என்ற பெயரில் நிறைவேற்றியுள்ளது.

ஈச்வரன் என்ற அடைமொழி வழிபாட்டுத் தெய்வங்களிற் சிவனையும், சனீசுவரனையுமன்றி வேறெத் தெய்வத்திற்கும் அடைமொழியாய் அமைவதில்லை. கொணாபெந்தி கதிர்காம மகா தேவாலயம் என அழைக்கப்படும் ஈச்வரன் கோயில், கொழும்பு மாவட்டத்தில், தெகிவளை கல்கிசை மாநகர சபை உள்ளிட்ட பகுதியில் அமைந்துள்ளது. ஜெயசுமணராம வீதி இவ்வாலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ளது. காலிவீதிக்கும் மேற் கடலோரத்திற்கும் நடுவே ஜெயசுமணராம வீதியிருக்கின்றது. சிவ பக்தர்களின் வழிபாட்டுத் தலமாகத் திகழும் இவ்வாலயம் குறைந்தது 500 வருடப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது, என்பது மேல் அறியற்பாலது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் சிவவழிபாட்டின் முக்கிய நிலையாகத் திகழ்ந்து இருந்ததெனப் பல கதைகளுண்டு. அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட ஆவுடையாரும் நந்தியும் சிவன் கோயிலே இவ்விடத்தில் இருந்ததென்பதனைத் தெளிவு செய்கின்றது. பரம்பரையாகக் கூறப்படுமோர் கதை வியப்பைத் தருகின்றது. சிவவழிபாட்டிற்குச் செந்நிறப் பூக்கள் பாவிக்கப்பட்டதாயும், இதனால் இவ்விட மக்கள் செந்நிறப் பூக்களை மலர்விக்கும் பூந்தோட்டங்களைப் பரந்த அளவிற் செய்தனரென்றும், சிங்கள மொழியில் இரத்து மல் செந்நிறப் பூக்களைக் குறிப்பதால் இவ்வூர்ப்பெயர் இரத்மலான என்ற காரணப் பெயரைப் பெற்றதாகவும் இவர் பகர்வர்.

கோட்டே அரசர்காலத்து இவ்வாலயம் புகழ்பூத்த நிலையில் அரச ஆதரவுடன் துலங்கியதாகச் சேனரத் திசநாயக்கா என்பவர் (துணை அகழ்வாராய்ச்சி ஆணையாளர்) 01-7-1993ல் வீரகேசரி ஆசிரியருக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்தில் தகவல் தந்தனர். "சாலாகினி சந்தேச" என்பதில் வணக்கத்திற்குரிய ஸ்ரீ இராகுல தேரோ என்பவர் தூது செல்பவரை இச் சிவ வழிபாட்டுத் தலத்திற்குச் செல்லுமாறு இருபாடல்களிற் கூறியுள்ளதாகவும் இக்கடிதத்துட் குறிப்பமர்கின்றது. இதே பெயரிலுள்ளதோர் கோயில் வத்தளையில் இதே காலத்து இருந்ததாக 'மயூர சந்தேச' கூறுகின்றது. இங்கே ஆந்திர நாட்டிலிருந்து கூலிகளாக வருவிக்கப்பட்ட அகம்பொடி இராணுவம் வழிபாடு செய்ததாகவும் 'கன்ச சந்தேச' (1964 பதிப்பு) முன்னுரையில் வண. இரத்மலானே தர்மகீர்த்தி ஸ்ரீ தர்மாபித்தான தேரோ கூறுகின்றார். வத்தளைத் தேவாலயத்திருந்து நீர்கொழும்பு நோக்கிச் செல்லும் பாதையில் முத்துராயவலையில் ஓர் சிறுபாலம் இருப்பதாகவும் அதில் நந்திச் சின்னம் இருப்பதாயும் அவ்விடமும் கொணாபெந்தி கோவில் என்ற பெயரில் வழங்கப்படுவதாயும் தேரர் கூறுகின்றார். இப்பொழுது இரத்மலானை கொணாபெந்தி ஈச்வரன் கோயில் தர்மகர்த்தா அவர்களின் இறைபதமெய்திய தாயார் முத்துராஜவெலவில் இரத்மலானைக் கோயிலின் பங்கே இருந்ததென்றும் இப்பங்கு வருமானம் இரத்மலானைக் கோயிலிற்கு முறைப்படி முன்னர் சேர்க்கப்பட்டது எனவுங் கூறியுள்ளார்.

போர்த்துக்கீசர் 1518ல் இரத்மலானை ஈச்வரன் கோயிலை அழித்தனர் என்றும் அதனோடு நிற்காது அவ்வாலயப் பூசகராக இருந்த குப்புசாமியையும் அவரின் குடும்பத்தினரையும் கத்தோலிக்க மதத்தில் 1519ல் கௌரவ பேதுறு பீரிசு பிதா சேர்த்தாரென்றும் புனித செபாத்தியன் தேவாலய நூற்றாண்டு (1875-1975) மலரின் 16ம் பக்கத்தில் மொறட்டுவை ஆதிகால தேவபரம்பரை (மொறட்டுவே பழமுவெனி தேவமாத்து) என்ற பந்தியில் கூறப்பட்டுள்ளது. 1717ல் இவ்வாலயம் கதிர்காமத் தேவாலயத்தின் கிளையாகி, இயங்குகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய நான்கும் அமைந்த திருத்தலமாகப் பண்டு தொட்டு இன்றுவரை இவ்வாலயமுண்டு. இலிங்க மூர்த்தம் இருந்ததன் சான்றாக ஆவுடையார் இங்கேயுண்டு. ஆவுடையாரைக் கொண்டு ஆலயங்கள் பெயர் பெறுவன. சர்ப்பம் ஆவுடையாரைச் சுற்றி அமையும் சிறப்பால் நகுலேஸ்வரமாயும், சிவனின் வாகனமாகிய நந்தி ஆவுடையாரில் இடம் பெறின் நந்தீசுவரம் எனவும் பெயர் அமையும். இவ்வாலய ஆவுடையாரில் நந்தி காணப்படுவதால் இது நந்தீசுவரங்களுள் ஒன்றெனக் கொள்ளப்படலாம். பஞ்சேச்சுவரங்களாய கோணேச்வரம், திருக்கேதீச்சரம் முனீச்வரம், நகுலேச்சுவரம், நந்தீச்வரம் என்றவற்றுள் அமைந்துள்ள நந்தீச்வரம் இவ்வாலயமன்று என்பது பலரின் கருத்தாகும். இவ்வாவுடையார் பெரிதாக இருப்பதால் இவ்வாலயமும் அதற்கமைந்த சிற்பசாத்திர முறையைக் கருதும் போது பெரியதோர் ஆலயம் என்ற துணிபு கொள்ளப்படும். இலிங்கம் எங்கோ போர்த்துக்கீசரால் வீசப்பட்டுள்ளது எனக் கொள்ளப்படுகின்றது. இவ்விடத்திலும் சுற்றாடலிலும் மேலும் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படும்போது இலிங்கமும் அகப்படும் என்ற நம்பிக்கை தர்மகர்த்தா சபையினருக்கு உண்டு. தீர்த்தம் இன்றைய இரத்மலானை புகைவண்டிப்பயண வேலைத் தளப் பிரதேசத்துள் உண்டு. தலவிருட்சமாக ஆலமரத்தை அன்பர்கள் இன்றுங் காணலாம். அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட கற்றூண்கள் இவ்வாலயப் பெருமைக்குச் சான்றாகக் காணப்படுகின்றன. கண்டிய சரித்திர காலத்தைய 9 x 5 1/2 செங்கற்கள் இவ்வாலய புராதனம் பகர்வன. முன்னைய நாட்களில் கதிர்காம யாத்திரை செய்வோர் இவ்வாலயத்தில் தங்கிப் பிரார்த்தனை செய்தபின்னரேயே யாத்திரையைத் தொடர்வதாக இவ்விட மக்கள் கூறுகின்றனர். சூழலில் வேலைத்தலங்களுங் குடியிருப்புக்களும் அமைந்துள்ள போதும் சலனமற்ற அமைதியும் வழிபாட்டிற்குரிய சூழலாயும் அமைகின்ற இவ்விடத்தில் இன்று மூர்த்திகளாக முருகனும் புத்தபிரானும் அருள்பாலிக்கின்றனர். இவ்வாலயத்தின் பழைமைக் கீர்த்தி புதுப் பொலிவுடன் காணப் பக்தர் விளைகின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ணமாபுரச் செல்வனின் காதை – ஈழத்துச் சிதம்பர புராணம்

(காரையூர் நா. பொன்னையா)

ஈழத் திருநாட்டிலுள்ள சைவப் பெருமக்கள் தமிழகத்திலேயுள்ள சிதம்பரத்தில் மிகவும் பற்றுள்ளவர்கள். இங்குள்ள சைவப் பெருமக்கள் சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமானை அங்கு சென்று வழிபட்டுவந்தமை வரலாறு வாயிலாக அறியக் கிடக்கின்றது. எனவே, ஈழத்திலும் சிதம்பரம் என்று பெயரைச் சுட்டிக்கொண்டமை சிதம்பரத்திலே வைத்திருக்கும் அன்பைப் பிரதிபலிப்பதாகும். காரை நாட்டு சைவமக்கள் திண்ணபுரத்திலே கோயில் கொண்டருளிய சுந்தரேஸ்வரப் பெருமானை சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கும் பெருமானாகக் கண்டு இக் கோயிலை ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றினர். இவ்வாலயத்தில் வழிபாடுகளும், விழாக்களும் சிதம்பரத்தைப் போன்றே நடைபெறுகின்றன.

இத் தலத்திற்கு புராணம் இல்லையென்ற குறையை நீக்க ஈழத்துக் கவிஞர் பரம்பரையில் உதித்த சோமசுந்தரப் புலவரது மூத்த புதல்வராகிய புலவர்மணி இளமுருகனார் அவர்கள் திண்ணபுரத்திலே கோயில் கொண்டருளிய சுந்தரேசப் பெருமானின் தல வரலாற்றை வண்ணவண்ணத் தமிழிலே, உள்ளக்கமலத்திலே சிவானந்தத் தேனருவியாக அமைத்துத் தந்துள்ளார். புலவர்மணியின் காவியத்திற்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது, அவரது வாழ்க்கைத் துணைவியாகிய பண்டிதமணி பரமேஸ்வரி அவர்களின் உரை, இந்நூல் கண்ணையும், கருத்தையும் கவரும் வனப்பினதாய் விளங்கச் செய்த பதிப்பாசிரியர் சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களை இத்தல புராணத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாது.

தல புராணங்களின் பெரும்பாலானவை மொழிபெயர்ப்புக்களே. இப்புராணம் மொழிபெயர்ப்பாகாது முதனூலாகத் திகழ்வது ஒரு தனிச்சிறப்பாகும். இறைவணக்கம், அவையடக்கம், நூற்பயன், நகர வளம், நாட்டு வளம், ஆற்று வளம், நகர் வளம் என்பன இப்புராணத்தில் அமைந்துள்ள தனிச் சிறப்புகளாகும்.

ஈழத்துச் சிதம்பர புராணம் ஒரு காவியம். இது பத்துச் சருக்கங்களைக் கொண்டது. அவையானவை பாயிரச் சருக்கம், காரை வளச் சருக்கம், திண்ணபுரச் சருக்கம், தவம்புரிச் சருக்கம், ஐயனார் கோயில்காண் சருக்கம், சுந்தரேசரின் கோயில் காண் சருக்கம், அந்தணர் பூசை புரிச் சருக்கம், சோமஸ்கந்தர்ச்சருக்கம், திருக்கோயில் பாதுகாவலர் சருக்கம், விழாவயர் சருக்கம் என்பனவாகும்.

## பாயிரச் சருக்கம் :

இச்சருக்கத்தில், இறைவணக்கத்தையும், நூல் செய்த வரலாற்றையும், நூலில் பொதிந்து கிடக்கும் பொருட் கூறுகளையும், உள்ளடக்கிய 33 செய்யுள்கள் உள்ளன.

## காரைவளச் சருக்கம் :

காரைநாட்டில் உள்ள இயற்கை எழில், செயற்கை வளம் சான்றோர் வளம் ஆகிய பலவகை வளங்களைக் கூறும் 148 செய்யுள்களைக் கொண்டது. இச் சருக்கத்தில் ஒரு புதுமையைச் சிருஷ்டித்திருக்கின்றார் இதன் ஆசிரியர். ஆறுகள் இல்லாத இக்காரை நாட்டில் என்றும் வற்றாத ஒரு ஆற்றினை உருவாக்கி உள்ளார். காரைநாட்டு மக்களின் ஒழுக்காற்றையே ஆறாக உருவகித்துக் கூறுகிறார் என்பதை கீழ்வரும் பாடல் தெளிவு படுத்துகின்றது :

*"நல்லை நாவலன் நன்மலை யூற்றெழுந்*
*தொல்லையில் பதி யெங்கணும் பாய்ந்தது*
*சில்ல மென்கிளை யுள்ளொன்றிச் சீர்ப்பதி*
*புல்லியெங்கும் புகுந்தது பேசுவாம்."*

ஆறுமுகநாவலரை மலையாகவும், அவர் கடைப்பிடித்த சைவ ஒழுக்க நெறிகளை ஆறாகவும், அவ்வொழுக்க நெறியைப் பின்பற்றியொழுகிய தமிழகத்தையும், ஈழத்தையும் அவ்வாறு பாய்ந்த இடங்களாகவும் உருவகித்து, அவ்வொழுக்கம் காரை நாட்டு மக்களால் கடைப்பிடிக்கப்பட்டதால் அவ்வாற்றின் ஒரு கிளை காரை நாட்டிற்கும் பாய்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. காரைநாட்டு மக்களின் ஒழுக்க நெறிகளைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும், அவ்வூர் மக்கள் போற்றப்பட்டுள்ளதாகவும் காணலாம்.

## திண்ணபுரச் சருக்கம் :

இச் சருக்கத்தில் சிவன் கோயிலுடன் தொடர்புடைய மற்றும் பல ஆலயங்களையும், அக் கோயில்களில் பூசை செய்யும் அந்தணர்களினதும் அடியார்களினதும் சிவ வாழ்வினையும் மூன்றாம் வீதியிலுள்ள மணிவாசகர் மடாலயம், சிவாச்சிரமம் தீர்த்தங்கள், திருத்தல நன் மரங்கள், பூஞ்சோலைகள் ஆகியவற்றின் இயற்கை சொட்டும் அழகை எடுத்துக் காட்டுவனவாக 85 செய்யுள்களும் அமைந்துள்ளன. இப்பதியிற் பல முனிவர்கள் தவம் புரிந்தமையினால் முத்தியடைந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

## தவம்புரிச் சருக்கம் :

பல சிவனடியார்கள் திண்ணபுரத்திலே தவம் செய்து வீடுபேறு அடைந்த வரலாற்றைக் கூறும் 102 செய்யுள்களையுடையது. இந்தியாவிலிருந்து தூர்வாசமுனிவரும், அகத்திய முனிவரும் தும்பில் என்னும் இடத்தில் தவம் புரிந்தார்கள் என்பதும், தினகரன் முனிவர் தினகரன் பிட்டியில் தவம் செய்தாரென்பதும், ஆண்டிமுனிவர் திண்ணபுரத்தில் உள்ள அரச மரத்தின் கீழ் தவம் செய்தார் என்பதும் புலனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சருக்கத்தில் பௌத்த பிக்கு ஒருவர் ஆண்டி முனிவர் வைத்து வழிபட்ட சூலத்தை வணங்கியதால் மனவமைதி பெற்றதாக ஒருசிறப்புச் சொல்லப்பட்டுள்ளது. மேலும், ஒரு அற்புத வரலாறும் உண்டு. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராமநாதபுரம் சேதுபதி மகாராசாவின் கட்டளைப்படி, சேதுக்கரையைக் காவல் செய்த வீரர்களின் பரம்பரையில் தோன்றிய ஆண்டி முனிவர் என்பவர் ஈழநாட்டிலுள்ள சிவதலங்களை வணங்கி வரும்பொழுது வியாவிலுள்ள ஐயனார் கோவில் ஒல்லாந்தரால் இடிக்கப்பட்ட நிலையைக் கண்டு வருந்தினாரென்றும், அன்று இரவே ஐயனார் அவர்கனவில் தோன்றி தாம் திண்ணபுர அரசின் கீழ் இருப்பதாகக் கூறியதாகவும் ஆண்டி முனிவர் அவ்வரசின் கீழ் தாம் கொண்டுவந்த சூலத்தை வைத்து வணங்கியதாகவும், அப்பொழுது தென்கிழக்குத் திசையில் ஒரு ஒளி தோன்ற அவ்விடத்தைத் தோண்டி ஐயனார் திரு உருவொன்றை ஆண்டி முனிவர் பெற்றதாகவும் அத்திரு உருவத்தினை அரச மரத்தின் கீழ் வைத்துப் பூசைசெய்து வழிபட்டதாகவும் இச்சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஐயனார் கோயில் காண் சருக்கம் :

இங்கே வியாவிலும், திண்ண புரத்திலும் ஐயனார் செய்த அற்புதங்களைக் கூறும் 56 செய்யுள்கள் உண்டு. ஆண்டி முனிவரின் விருப்பத்தை நிறைவேற்றுமுகமாக, அம்பலவி முருகர் அவர்களால் ஐயனார் கோவில் கட்டப்பட்டது. எழுந்தருள் மூர்த்தியொன்றைக் கொண்டுவர அவர் இந்தியாவிற்குச் சென்றாரென்றும், அங்கே சிற்பாசாரி ஒருவர் திருவுருவத்திற்கு ஒப்பஞ்செய்யும் பொழுது இரத்தம் வடிந்ததாக இச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## சுந்தரேசர் கோயில்காண் சருக்கம் :

திலையிற் சுத்தனை திண்ணபுரத்தில் காண விரும்பிய அம்பலவிமுருகர், ஐயனார் கோயிலின் அருகே சிவன்கோயிலை அமைத்தார். கனவில் இறைவன் தோன்றி கேட்டுக்கொண்ட வண்ணம் சிதம்பரத்திற்குச் சென்று சிவலிங்கத்தைப் பெற்று மங்கலம் செய்ததையும் கூறும் 44 செய்யுள்களையுடையது. இச்சருக்கத்தில் இரு எருதுகள் திருப்பணிக்கு வேண்டிய பொருட்களை சலிப்பின்றிச் சுமந்த வரலாறும், இரு நாகங்கள் அப்பொருட்களைக் காவல் புரிந்த வரலாறும் மிக அழகாகவும் உள்ளத்தை உருக்கும் வகையிலும் கூறப்பட்டுள்ளமை இச் சருக்கத்தை அழகு படுத்துவதாக அமைந்துள்ளது.

*"பெரியார் தமது திருப்பணிக்கே*
*பெரிதுந் துணையாம் படியிருக்கத்*
*திருவாரிரண்டு காளைகளைச்*
*சேடன்போல வளர்த்தனரால்*
*உருவார் கந்தன் சங்கரனென்*
*துயர்ந்த பெயரா வழைத்தவழி*
*மருவா நின்று பணிகேட்டு*
*மைந்தர் போல வந்தனையும்"*

*"நீலகண்டனாராணையி னித்தலும்*
*வாலன் கூழைய னென்றிரு மாகங்*
*கோலக் கோயிற் பொருட்குறு காவலாய்ச்*
*சாலநின்று சரித்திடு மென்பரால்"*

## அந்தணர் பூசைபுரிச் சருக்கம் :

அம்பலவி முருகர் தாம் கட்டுவித்த சிவன் கோவிலுக்கு இராமசாமி ஐயர் அவர்களைப் பூசாரியாக்கியதும், அவர் முன்னோராசாமி ஐயருக்கு பின்வந்த அந்தணர்களின் வரலாறுகளும், இச் சருக்கத்திலுள்ள 33 செய்யுள்களால் விளங்கா நிற்கும். இந்த அந்தணர்களின் பாதையிலே வந்து, இக் கோயிலிலே 64 வருடங்கள் பூசையைச் செவ்வனே செய்த சிவத்திரு கணபதீஸ்வரக் குருக்கள் போற்றப்பட்டுள்ளார்.

## சோமாஸ்கந்தர் சருக்கம் :

அம்பலவி முருகர் சோமாஸ்கந்தர் திருவுருவை அமைப்பிக்க தில்லைக்குத் தமது மகன் சண்முகத்தார் சகிதம் சென்று சோமாஸ்கந்த உருவம் வார்ப்பித்தபோது அதன் அழகைக் கண்டதும் அவர் இந்தியாவிலேயே சிவபதம் அடைந்ததும், சண்முகத்தார் சோமாஸ்கந்தர் உருவத்தைக் காரைநகரிற்குக் கொண்டுவந்த வரலாறும் 51 செய்யுள்களில் கூறப்பட்டுள்ளது. இச் சருக்கத்தில் இரண்டு வரலாறுகள் மிகவும் உருக்கமான முறையில் கூறப்பட்டிருப்பதை அறியலாம். ஒன்று ஏற்கனவே சிவலிங்கம் பெற்ற சிதம்பரத்திற்குத் தனியே சென்று வந்த அம்பலவி முருகர் அடுத்தமுறை தனியே செல்லவில்லை. அவர் புறப்படும் போது பசுவொன்று அதன் வாலினால் அவரை அடித்ததும் தமக்கு அங்கு சிவபதம் கிடைக்கக்கூடுமென்ற அறிகுறியினால் மைந்தனையும் கூட்டிச் சென்றார் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

தில்லையில் சிற்பியர் சோமாஸ்கந்தர் வடிவத்தை வார்க்கத் தொடங்கி முதல் இரு முறைகளும் உருக்கி வார்த்த போது கரு சிதைந்து உருவம் அமையாது போனதைக் கண்ட அப்பெரியார், தம் காதிலிருந்த கடுக்கனைக் கழற்றிக் கொடுத்து அவற்றையும் சேர்த்து உருக்கி வார்க்கும் வண்ணம் அச் சிற்பியாரிடம் கூறினார். சிற்பி அவ்வாறே செய்ய சோமாஸ்கந்த திருவுருவம் மிகவும் அழகாகவும் சிறப்பாகவும் அமைந்தது கண்டு சிவமுருகர் சிவபதம் அடைந்தது இரண்டாவது'வரலாறு.

## திருக்கோயிற் பாதுகாவல் சருக்கம் :

கோயிலை அமைத்த சைவப் பெரியார் அம்பலவி முருகர் தற்பொழுதுள்ள சைவப் பெரியார்களாகிய அ. ஆண்டி ஐயா, து. முருகேசு ஆகியோர் உட்பட கோயிலைப் பாதுகாத்து வளம்படுத்திய பாதுகாவலர்களைப் பற்றிக் கூறும் 15 செய்யுள்களைக் கொண்டதாகும்.

## விழாவயர் சருக்கம் :

ஆண்டுதோறும் இத்தலத்திற் செய்யப்படும் திருவிழாக்கள் பொங்கல்கள், பூசைகள், அன்னதானங்கள் முதலியவற்றையும் திருவாதிரை தீர்த்த உற்சவத்தையும், திருவூடலையும் பங்குனித் திருவிழாவையும் விழாக்களின் தத்துவக் கருத்துக்களையும் உள்ளடக்கிய 160 செய்யுள்களைக் கொண்டதாகும்.

இப்புராணம் படிப்போர்க்கு நாடகம்போலப் பல வகைச் சுவைகளையும் உண்டாக்குதலே செய்யுள் இலக்கியப் பண்பாடாகும் எனலாம். ஈழத்துச் சிதம்பர புராணம் செந்தமிழ்ச் செய்யுள் இலக்கிய மறுமலர்ச்சி உடையது. இதுபோன்ற இலக்கியம் படைப்போர்க்கு இப்புராணம் ஒரு எடுத்துக் காட்டாகும்.

பாட்டும் உரையும், ஒருங்கிணைந்து புகழ்பெற்ற பண்டைக்காலத்து இலக்கியங்கள் போல இப்புராணம் பாட்டும் உரையும் ஒருங்கிணைந்து புகழோங்கியுள்ளது. இந்நூல் சைவ சித்தாந்திகளுக்கு ஒரு வரப்பிரசாதமெனில் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இந்துப் பாரம்பரியத்தினுட்

# செல்வச்சந்நிதி

## பெறும் இடம்

*பேராசிரியர் : கார்த்திகேசு சிவத்தம்பி*

"இலங்கையில் இந்துசமயம்" என்ற தளப்பொருளை மையமாகக் கொண்டு சிந்திக்கும் பொழுதுதான் நாம் இன்னும் இலங்கையின் இந்துப் பாரம்பரியத்தைத் தெளிவுற இனங்கண்டு, தொகுத்து எடுப்பதற்கான புலமை முயற்சிகளை எடுக்கவில்லை என்பது புலனாகின்றது.

இலங்கையின் இந்துப் பாரம்பரியம் பற்றிய ஆய்வு கீழ்க்காணும் பிரதேசங்களிலே நிலவும் இந்துப் பாரம்பரியங்களை (வழிபாட்டு நடைமுறைகள், மற்றும் மதப் பண்பாட்டு நடவடிக்கைகள்) பற்றிய தொகுப்பாய்வின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் :-

மட்டக்களப்புப் பிரதேசம் (அம்பாறை உட்பட)

திருகோணமலைப் பிரதேசம்

வன்னிப் பிரதேசம்

மன்னார் பிரதேசம்

யாழ்ப்பாணப் பிரதேசம்

மலையகம்

மேற்குக்கரையோரப் பிரதேசம் (புத்தளம், உடப்பு, சிலாபம், நீர்கொழும்பு)

தென்பகுதி (கதிர்காமம் உட்பட)

இப் பிரதேசங்களிலே வாழும் இந்து மக்களிடையே காணப்படும் வணக்கத்தலங்கள், வழிபாட்டு முறைமைகள் பற்றிய ஒரு முழுமையான தரவுத் தொகுதி ஒன்று வேண்டும்.

அத்தகைய ஒரு தரவுக் களஞ்சியம் இருக்குமானால், அதில் நாம் பெறப்போகும் முக்கிய தகவல்களில் ஒன்று முருக வணக்கமாகும்.

இந்திய இந்துப் பாரம்பரியத்தில் முருகன் தமிழ்ப் பண்பாட்டுக்குச் சிறப்பான இந்துத் தெய்வம் என்பர். இன்றைய நிலையிற் காணப்படும் முருக வழிபாடானது தமிழ் நாட்டின் முருக பாரம்பரியத்தையும், வடஇந்திய ஸ்கந்தமரபினையும் இணைப்பதாக உள்ளது. இந்தப் பண்பாட்டிணைவு திருமுருகாற்றுப்படையிலேயே நிறைவேறிவிட்டது. திருமுருகாற்றுப்படை ஏறத்தாழ கி.பி. 250 - 600க்கும் இடைப்பட்ட கால நூலாகும்.

தமிழ் நாட்டு இந்து மரபினுள் முருகனுக்கான "ஆறுபடை வீடு" என்னும் ஒரு மரபு உண்டு. திருப்பரங்குன்றம், திருத்தணிகை, சுவாமிமலை, பழனி, பழமுதிர்ச்சோலை (அழகர்மலை) என்னும் ஐந்து மலைகளையும், ஆறாவதாகக் "குன்றுதோறாடல்" என்று எல்லா மலைகளையும் இணைத்துக் குறிப்பிடுவர். குன்றுதோறாடலுக்குள்ளே கதிர்காமத்தையும் கொண்டு வரும் மரபு உண்டு. இவற்றைவிட கடற்கரையோரங்களிலேயும் முருகன் கோயில்கள் உள.

உதாரணம் :- திருச்செந்தூர்.

ஈழத்திற் பல இடங்களிலும் முருகன் வழிபாடு நடைபெற்று வருகின்றதெனினும், ஈழத்தின் மிகமுக்கியமான முருக தலங்களாகப் பின்வருவனவற்றைக் கொள்ளும் மரபு உண்டு :-

கதிர்காமம்

மாவிட்டபுரம்

நல்லூர்

செல்வச்சந்நிதி

இந்தப் பட்டியலுள் வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயிலும் இடம்பெறல் வேண்டும்.

ஈழத்திற் காணப்படும் முருக தலங்களை நோக்கும் பொழுது, அவற்றினுள்ளே செல்வச்சந்நிதி முக்கியமான ஓர் இடத்தைப் பெறுவதை அவதானிக்கலாம்.

"செல்வச்சந்நிதி" என்பது யாழ்ப்பாணம் தொண்டைமானாற்றில், பெருங் கடலுக்கருகேயுள்ள கல்லோடைக்கரையிலுள்ள முருக தலமாகும். இக்கோயிலின் ஐதீகங்கள், வழிபாட்டு மரபுகள் மற்றைய கோயில்களிலிருந்து வேறுபட்டனவாகும்.

முதலாவதாக நோக்கப்பட வேண்டுவது கோயிலின் பெயராகும்.

"சந்நிதி" என்னும் சமஸ்கிருதச் சொல் சம் + நி + தி என நிற்பது. இதன் கருத்து

1. அண்மையில் இருப்பது, அண்மை நிலை
2. முன்னே நிற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவாகவும், காலக்கிரமத்தில், தெய்வம், குரு, பெரியார் முன் நிற்பதை, "சந்நிதி", "சந்நிதானம்" என்பன குறித்தன. எனவே சந்நிதி என்பது முருகன் முன் நிற்றலைக் குறிக்கின்றது. கோயில்களிற் "சந்நிதிகள்" உண்டு. இங்கு "சந்நிதியே" கோயில்களாகவுள்ளது.

செல்வச்சந்நிதி ஓர் அசாதாரண பெயர். செல்வச்சந்நிதி ஓர் அசாதாரண கோயில்.

இக்கோயிலின் மிகப் பிரதானமான அமிசம் இங்குள்ள பூசை, வழிபாட்டு நடைமுறைகளாகும்.

இங்கு பிராமணர் பூசை செய்வதில்லை. தொண்டைமானாற்றில் பாரம்பரியமாக வசித்து வந்த ஒரு குடும்பத்தின் ஆண்சந்ததியினரே கோயிற் பூசைக்கு உரித்தானவர். இக்கோயிற் பூசகர் தன்னைப் பக்தனுக்கும் முருகனுக்கும் இடையேயான "பாலம்" ஆகக் கருதாமல், தன்னை வழிபடுவோருள் ஒருவராகவே கருதிப் பூசை செய்வர். இங்கு பூசையில் மந்திரங்கள் உச்சரிக்கப்படுவதில்லையாதலால், "வாய் கட்டிப் பூசை" செய்யும் மரபுண்டு.

இக்கோயில் பற்றிய ஐதீகங்களை இரண்டு பிரதான பகுதிகளுக்குள் வகுக்கலாம்.

1. முருகன் இங்கு கோயில் கொண்டமை பற்றியவை.
   - கோயிலின் தோற்றம்,
   - குறிப்பிட்ட குடும்பத்தினர் பூசகர்களாகத் தெரிவு செய்யப்பட்டமை,
   - பூசையின் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் ஆகியன.

2. இக்கோயிலுக்கும் கதிர்காமத்துக்கும் கற்பிக்கப்படும் உறவு.

இரண்டாவது ஐதீகம் மிகமுக்கியமான ஒன்றாகும். முருகன் செல்வச்சந்நிதியிலேயே எப்பொழுதும் இருப்பதாகவும், கதிர்காமத் திருவிழாவின் பொழுது, ஒரு நாள் முன்னர் கதிர்காமம் சென்று, அங்கு தீர்த்தம் நடந்து முடிந்ததும் திரும்பி வருவதாக ஐதீகம். இந்த ஐதீகத்தை நிகழ்த்திக் காட்டும் சடங்குகள் இக்கோயிலில் மிகப் பிரதான இடத்தைப் பெறும்.

இங்குள்ள பூசைமுறை இப்பொழுது சில சமஸ்கிருதமயப்பாட்டு (Sanskritization) அம்சங்களைக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையெனினும் (உருத்திராபிஷேகம் முதலியன), உண்மையில் அது சில தனித்துவமான அமிசங்களைக் கொண்டது.

வேலுக்குக் காட்டும் கர்ப்பூர தீபங்களை மக்களை நோக்கிக் காட்டுவது, கோயிற் பூசைக்குப் பலாவிலையில் சுவாமிக்கு அமுது படைத்தல் (இந்த அமுதே பிரதான பிரசாதமாகும்), பூசை முடிந்ததும் ஐயர், மணி, தீபத்தை வைத்துத் தான் வணங்கல், ஐயரின் காலைத் தொட்டுக் கும்பிடுவோருக்கு ஐயர் தலைக்கு விபூதி போட்டு, அவர்கள் நெற்றியில் ஐயர் தானே விபூதி சார்த்தல் என்பன அன்றாட பூசைகளிற் காணப்படும் முக்கிய அமிசங்களாகும்.

இவற்றை விடத் திருவிழாக் காலங்களிலும், மற்றைய கோயில்களை விட வித்தியாசமான மரபுகள் உள்ளன. திருவிழாவின் பொழுது ஏழு, ஒன்பது பருவமடையாப் பெண் குழந்தைகள் தீபங்கள் கொண்டு செல்லல் ஒரு விசேட அமிசமாகும். திருவிழாக் காலப் பூசைகளுக்கு பூ எடுத்துக் கொடுப்போர் திருவிழாக் காலம் முழுவதும் கோயிலிலேயே தங்குவர். திருவிழாச் செய்யும் குருக்களும் பதினைந்து நாட்களும் கோயிலிலேயே தங்குவர்.

இங்கு வள்ளியம்மன் வணக்கமுண்டு. வள்ளியம்மன் வாசலில் மாவிளக்கு எரிப்பர்.

இங்குள்ள பிள்ளையாரை மாணிக்கப்பிள்ளையார் என்பர்.

திருவிழாக் காலங்களில் சுவாமிக்குச் செய்யப்படும் சாத்துப்படி வித்தியாசமானதும், மிக அலங்காரமானதுமாகும்.

இங்கு வேலே வணங்கப்படுகிறது.

இக்கோயிலின் இன்னொரு முக்கிய அமிசம் இங்கு வழங்கப்பெறும் அன்னதானமாகும்.

இங்குள்ள பல்வேறு மடங்களில் இந்த அன்னதானங்கள் வழங்கப்பெறும். சந்நிதிக்கு செய்யப்படும் பிரதான நேர்த்திகளுள் ஒன்று அன்னதானமாகும். சந்நிதி முருகனை "அன்னதானக் கந்தன்" என்று குறிப்பிடும் முறையுண்டு.

மேற்கூறிய இந்த இரண்டு பண்புகளையும் நோக்கும் பொழுது, இக்கோயிலில் வெளிப்படும் மத அநுபவம் (religious experience) மிக முக்கியமான ஒன்றாகும். இங்கு வழிபடுவோர்கள் தங்கள் மன உணர்ச்சிகளை ஒளிவுமறைவின்றி வெளியிட்டு இறைவனிடம் முறையிடும் முறை நெஞ்சை அள்ளும் காட்சியாகும். சமஸ்கிருதமயப்பாடு அற்ற முறையிலேயே இவர்களின் வழிபாட்டுணர்வுகள் வெளிக்காட்டப்படுகின்றன.

சந்நிதிச் சூழலில் யோகிகள் பலர் வாழ்ந்து வந்துள்ளனர். சந்நிதியில் தங்கித் தீராத நோய்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுண்டு. அங்கு வழங்கப்படும் அமுதை "மருந்து" என்றே சந்நிதி பக்தர்கள் குறிப்பிடுவர்.

மொத்தமாக நோக்கும் பொழுது, முருக தலங்களுள் செல்வச்சந்நிதி முக்கியமான பல தனித்துவங்களைக் கொண்டது என்பதில் ஐயமேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து தலங்கள்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்கள். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் கூறப்பெறும். உலகம் ஐம்பூதங்களாலானது என்பதை தொல்காப்பியர்,

நிலந்தீ நீர்வளி விதம்போடு ஐந்துங்

கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

எனத் தொல்காப்பிய மரபியலிற் கூறியுள்ளார். உயிர்களது உடம்புகளும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனவையே "அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பது பழமொழி.

ஐம்பூதங்களைப்பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தினர். அவை பஞ்சபூதத் தலங்கள் எனப்படும். அவையாவன :

| | | | | |
|---|---|---|---|---|
| மண் | – | பிருதிவித்தலம் | – | காஞ்சிபுரம் |
| நீர் | – | அப்புத்தலம் | – | திருவானைக்கா |
| தீ | – | தேயுத்தலம் | – | திருவண்ணாமலை |
| வளி | – | வாயுத்தலம | – | திருக்காளத்தி |
| வான் | – | ஆகாயத்தலம் | – | சிதம்பரம் |

**நன்றி : 'கோயில்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி ஆலய வரலாறு

கவிஞர் முருகவே பரமநாதன், வல்லிபுரம், புலோலி

"கோயிலும் குளமும் குலவிடும் நாடு"

" மக்கள் துங்கம் உயர்ந்து வளர் கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே"

அமரகவி பாரதியார்

மனிதகுல வரலாறு இன்று வெகுதூரம் ஆராயப்பட்டு விட்டது. நந்திக் கரையிலும், குளத்தை அண்டியும், எப்பொழுது மனித இனம் வாழத்துவங்கியதோ, அப்பொழுது தான் அவனுக்கு ஒய்வும், ஆறுதலும் கிடைத்தது. இந்த ஒய்வும் ஒழிச்சலும் அவனுடைய சிந்தனைகளைக் கிளப்பி, அகவாழ்வுக்கும், புறவாழ்வுக்கும், ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. கலைகளும், கல்வியும் பிறந்தன. ஆடலும் பாடலும் அவனுடைய பொழுதுபோக்காகி கலைகளாகவே பரிணமித்தன. அந்தக் கலைகள் கூடத் தெய்வீக நிலைக்கு ஓங்கி வளர்ந்தன. அவனுடைய சிந்தனாலோகம் இம்மையையும் கடந்து நின்றது. உலகியலைவிட்டு, மெய்யியல் என்று ஒன்று இருப்பதாக உணர்ந்த மனிதன்; அந்த உண்மையைத்தேடி வெகுதூரம்– நெடுந்தூரம் நடந்தான். அப்பாலுக்கப்பாலான செம்பொருளைக்காண்பதே அவனுடைய அறிவுலக ஆய்வாய் இருந்தது. அறிவியலும் அழகியலுமவனுடைய இறக்கைகள் ஆயின. அன்றாட வாழ்வில் ஒரு மனிதன் எத்தனையோ தடவை நான் நான் எனக்குளறிக் கொண்டே இருக்கிறான். நான் என்று சொல்லும் பொருளெது. அதன் உருவம் என்ன என்பதைப்பற்றி அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. விளங்காத புதிர்களை விஞ்ஞானத்தின் மூலம் விளக்கிவிடும் விஞ்ஞானியால் கூடக் காணமுடியாத, இந்தப்புரியாத புதிருக்கு மெய்ஞானம் விடைகண்டது. நான் யார், என்னுள்ளம் யார் என்பதை இலகுவிலே விளக்கும் நெறியாகச் சைவம் நீதி பேசிற்று. கோயில்களைக் கட்டினான். குளங்களை வெட்டினான். கோயில்கள் கலைக்கும், கலையின் கருவூலமான பக்திக்கும், ஏன் முத்திக்குமே இருப்பிடமாயின. கோயில்களை உருவாக்கியது போலவே குளம் தொட்டு வளம் பெருக்கினான். இக்கோட்டமுங் குளமுமே அவனது இருதயமாகவும் மூச்சின் உயிர்ப்பாகவும் இருந்தன. இதனாலோ என்னவோ குளமும் கோட்டமும் அமைத்தவன் குளக்கோட்டு மன்னன் ஆனான்.

எனவே ஒரு சமுதாயத்தின், ஏன் ஒரு நாட்டின் புராதன நாகரிகத்துக்கு, உறைவிடம் கோயிலும் குளமுமே, மன்பதைக்கு வசியும் வளமும் அளித்து, பசியும் பிணியும் தீர்த்தன குளங்கள். உயிர்க்குயிரான ஆத்ம ஞானத்தை ஊட்டி வாழ்வில் நிம்மதியையும், நித்தியசாந்தியையும் அளித்தன கோவில்களே. எச்சமயத்தோர்க்கும் இது சம்மதமே. "மனிதனுக்கு இருதய மெப்படி முக்கியமோ, அவ்வளவு நாட்டுக்கு இன்றியமையாதது நீர்த்தேக்கங்களே. நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லும் கால்வாய்களே இரத்த நாடிகள். ஜீவ சக்தியையும் பலத்தையும் ஆரோக்கியமான வாழ்வையும் தாங்கிச் சென்று, புராதன கிராமங்கட்கு இவைதாம் உயிர் கொடுத்தன" என்று ரெஜினால்ட் பரார் என்ற ஆசிரியர் இலங்கையின் பண்டைக்காலக் குளங்களின் மேன்மையை எடுத்துக் கூறியுள்ளார். இந்தக் குளங்கள் கூட ஆலயங்களை அண்டியே அமைந்திருந்தன. மண்ணுலக வாழ்வுக்குத்தேவையான உணவளிப்பன இக்குளங்களே. கோயில்களோடு அண்டி வரும் புனித தீர்த்தங்களாயின.

விண்ணுலக வாழ்வைக் குறிப்பன கோவில்கள், என வேதான் "திருக் கோவிலில்லாத திருவிலூரும்" என்றார் அப்பரடிகள். "கோவிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே" என்பது சம்பந்தர் வாக்கு. குளத்தினால் வாழ்வு பெறும் ஜீவன் கோயிலிலே சாந்தி பெற்று விடுதலையடைந்தது. இவ்வாறு சமயமும் சமுதாயமும் ஒன்றிணைந்த நிலையிலே இந்துதர்மமும், அதன் நாகரிகமும், மிகத் தொன்மையானதாகப் பேசப்படுகிறது. சிந்துவெளி நாகரிகம் இதற்குச் சான்று பகர்வதாக வரலாற்று வல்லுநர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். இமயந்தொட்டு இந்தோனேசியாவரை, கங்கையிலிருந்து மாணிக்க கங்கைவரை இந்துமதம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஈழத் தமிழர் இந்நாட்டுப் பழங்குடிமக்கள் மட்டுமல்ல சைவம் கண்ட சமுதாயமுங்கூட மறைந்துபோன குமரிக்கண்டம். இந்தியா, இலங்கை என்பவற்றை உள்ளடக்கியதாயும் இருந்தது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தில் ஈழத்துப்புலவர்கள் மதுரையிலிருந்து தமிழாய்ந்துள்ளனர். மேலும் சாக்தம் வருவதற்கு முன்னதே சைவம் நிலவியுமிருக்கிறது. இராவணன் மண்டோதரி என்போர் சைவசமயிகளாய் இருந்து திராவிடப்பண்பாட்டை ஓம்பிக் காத்தனர். மாந்தை என்னும் மாதோட்டம் மாபெருஞ் சந்தையாயும் மிளிர்ந்திருக்கிறது. பாடல் பெற்ற தலங்களும், புராதன ஆலயங்களும் நிறையக் காணப்படுவதே ஈழத்தின் தனிச்சிறப்பாகும்.

ஈழம் இயற்கையழகுமிக்க தீவு. பாரத மணித்திருநாட்டின் முத்துப்பதக்கம் போல் அமைந்து கிடக்கிறது. இந்து மகாசமுத்திரத்தின் நுழை வாயிலான இலங்கையை நாடிப் பல யாத்திரீகர்கள் வந்திருக்கிறார்கள். இதற்கு நித்திலத்தீவு என்னும் பெயரும் உண்டு. ஓங்கியுயர்ந்த மலைச் சிகரங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெளிந்துபாயும் நதித்திரள்கள். காடெலாம். கடற்கரையெலாம் பசுமை. நாடெலாம் செந்நெல், நாட்டின் நதியெலாம் மணிகள். தேயிலையும், தென்னையும், இறப்பரும், கோப்பியும், கொக்கோவும், மிளகும் நம்நாட்டுச் செல்வங்கள். ஆலயங்களுக்கோ குறைவில்லை. தெய்வந்துறையிலிருந்து, பருத்தித்துறைவரை; காங்கேசன் துறையிலிருந்து மாத்தறை வரையும் கரையோரமாயமைந்த திருக்கோவில்களே நமக்கு அரண் செய்கின்றன. சைவம் மாத்திரமல்ல பௌத்தமும் ஒன்றிணைந்து வழிபடும் தலங்களும் பலவுண்டு. தென் கோடியிலுள்ள விஷ்ணு தலமான தெய்வந்துறை (தேவிநுவரை) எல்லோராலும் போற்றப்படும் ஸ்தலமாகும். இபின்பட்டுட்டா இத்தலத்துக்கு வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு இலங்கையின் கரையைச் சுற்றியுள்ள பேர்பெற்ற தலங்கள் இந்துக்களாற் போற்றப்படும் ஆலயங்களாகும். இவற்றிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயமைந்த சிறந்த ஷேத்திரங்களில் ஒன்று வல்லிபுரம் (ஆழ்வார் ஆலயம்) ஆகும். இதுவும் தெய்வந்துறையைப் போல, வடகீழ் கரையில் பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் என்னும் ஊரில் அமைந்திருக்கிறது.

" மூர்த்தியருளும் முறைசேர் தலநலமும்
தீர்த்தத் திருநிறைவும் சேருமருட்– கீர்த்திமிகு
நல்லவோர் ஆலயத்தை நாடி நான் போற்றுதற்
கல்லேனின்றானேனறி"

என்று கருடாழ்வார் தூது தலமகிமையைப் பாடுகிறார்.

இப்படி இத்தலத்தைப் பற்றிய வரலாற்றை தட்சிணகைலாச புராணம், தட்சிண கைலாச மான்மியம் என்பனவற்றிற் காணலாம். என்றாலும் சிங்கள மொழியிலெழுந்த இலக்கியத்திலும் இவ்வரலாறுகள் உண்டு. சிங்கள மொழியிலே சந்தேச காவியங்களென்று கூறுவது தூதுப் பிரபந்தங்களையே. இப்பிரபந்தங்கள் 14ம் நூற்றாண்டின் பின்னரே எழுந்தன. இப்பிரபந்தங்கள் பெரும்பாலும் ஈழநாட்டில் மத்திய காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வரலாற்றையும், அவர்களின் பழக்க வழக்கங்களையும், சிங்களப் புலவர்களிடையே தமிழ் மொழி பரவியிருந்த தன்மையையும் செவ்வனே எடுத்துக் காட்டுகின்றன. அதுமட்டுமின்றி ஈழத்தின் புராதன இந்துக்கோயில்களைப்பற்றிய குறிப்புகளுமுள.

இவற்றிலே செலகினி சந்தேசம், (மலைமயினா விடுதூது) மயூர சந்தேசம் (மயில் விடுதூது) கஹகுருலு சந்தேசம் (மஞ்சட் குருவி விடுதூது) கோகிலவு சந்தேசம் (குயில் விடுதூது) என்பன சில. மஞ்சட்குருவி விடுதூது கதிர்காமச் சிறப்பை வியந்து கூறுவதுபோலவே, குயில் விடுதூதும் யாழ்ப்பாணத்திலுள்ள பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலையும், வல்லிபுரக் கோவிலையும் பற்றிப் பாடியுள்ளது. ஆலயத்தின் புராதனத்துக்கும், புனிதத்துக்கும் இஃதோர்சான்றாகும்.

முதலியார் இராஜநாயகமவர்களின் இக்கூற்றை (Ancient Temples of sri Lanka) ஈழத்தின் புராதன இந்து ஆலயங்களென்னும் நூலில் 57ம் பக்கத்தில் இதன் ஆசிரியர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

**"The oldest Temple in Jaffna, dedicated to Rama and Krishna, were at Vallipuram and Ponnalai respectively and they are mentioned in the Kohilasandesa"**

wrote Mudliyar C. Rasanayagam.

## குடிசையிலிருந்து கோபுரம் வரை

ஆதியிலே கோயில்கள் மரத்தின் கீழும், குளக்கரையிலும், ஆற்றோரங்களிலும் அமைக்கப்பட்டன. ஒரு விருட்சத்தின் நிழலே கோயிலாயும், விருட்சம் இறைவடிவமாயும் போற்றப்பட்டது. அப்படியான கோயில்கள் வளர்ந்து குடிசையாயும், கீற்று ஓலைக் கொட்டிலாயும் மாற்றமடைந்தன. மண்ணினாலும் மரத்தினாலும் கட்டப்பட்ட ஆலயங்கள் நாளாவட்டத்தில் வானளாவிய கோபுரங்களின் நிலைக்கு மாற்றமடைந்தன. ஈழத்திலே இராச கோபுரங்களோடு கூடிய ஆலயங்கள் வெகு அருமையாயினும், அண்மைக் காலங்களில் தென்னக மோடியிலே பல இராச கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பழங் கோயில்களைப் பற்றி அப்பரடிகள் இப்படிப் பேசுகிறார்.

## அறமுயல் ஆழிப்படையவன் கோயில்

சனாதனதர்மமான இந்துமதம் ஆறுசமயங்களை உள்ளடக்கியது. அவற்றில் சைவமும், வைணவமும் அடங்குகின்றன. சைவம் சிவசம்பந்தமானது: வைஷ்ணவம் விஷ்ணு சம்பந்தமானது. இவ்விரு சமயங்களும் தென்னகத்தில், சிறப்பாகப் பாரத நாட்டில் அனுஷ்டிக்கப்படுகிறது. என்றாலும் ஈழத்தில் சைவமும், சாக்கியமும் கொண்ட இடத்தை வைணவம் பிடிக்காவிட்டாலும் திருமால் வணக்கம், சைவசமயிகளிடமும், பௌத்தர்களிடமும் பெரிதும் இடம்பெற்றிருப்பது கண்கூடு. கண்டியிலே உள்ள விஷ்ணு ஆலயத்தில் சந்தனம் பிரசாதமாய் வழங்கப்படுவதை இன்றும் காணலாம். இவ்வாறு ஏனைய திருமால் ஸ்தலங்களிலும் விபூதி சந்தனம் பெற்ற இடம் சைவ மரபாயிருக்க, வல்லிபுரக் கோவிலில் மட்டும் நாமம் இடும் வழக்கம் வைணவ மரபை ஒட்டியதாகும். ஈழத்திலுள்ள விஷ்ணு ஆலயங்களில் திருமண் இயற்கையாகக் கிடைக்கும் ஷேத்திரம் வல்லிபுரம் ஒன்றேயாகும்.

சைவத்திருமுறைகள் தந்த நாயன்மார்கள் திருமாலைப் பாடியிருக்கிறார்கள். சிவனின் இடப்பாகத்தைக் கொண்டவர் திருமால் என்ற நாயன்மார்களின் கூற்றைப் போல, ஆழ்வார்களும் சிவனை வலப்பாகத்தே கொண்ட திருமால் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியிருக்கிறார்கள். இவ்வாறு சங்கர நாராயணனாகக் காட்டும் காட்சிக்கு மேலே, விஷ்ணுவைச் சக்தியாகப் பாடிய நாயன்மார்களும், பார்வதியைத் திருமாலின் சகோதரியாகக் கண்ட ஆழ்வார்களும் உண்டு. இத்தத்துவத்தை பார்க்கும்போது அரியும், அரனும் ஒன்றே– வேறல்லர் என்ற நிலை தெற்றெனத் தெளிவாகிறது அன்றோ. சமயாதீதப்பழம் பொருளை ஈழத்துச் சைவப் பெருங்குடிமக்கள் வேறுபாடின்றி வணங்குகின்ற சமரசம் மேலானதே. பாரதத்திலே திருமால் சந்நிதியும், சிவ சந்நிதியும் உள்ள கோயில்கள் பலவுண்டு. கச்சியேகம்பம் (நிலாத்துண்டப் பெருமாள்) சிதம்பரம் (கோவிந்தராஜப் பெருமாள்) சிக்கல் (கோலவாமனப் பெருமாள்) திருநெல்வேலி (நெல்லைக் கோவிந்தர்) செந்தூர் (அரங்கநாதன்) திருப்புத்தூர் (இலட்சுமி நாராயணன்) பழனம் (வேனு கோபாலர் திரு நாவலூர் (வரதராசர்) பவானி (ஆதிகேசவப் பெருமாள்) என்னுந் தலங்கள் அதற்கு இலக்கியமாய் திகழ்கின்றன. இவ்வாறமைந்த சந்நிதானங்கள் ஒரே பொருள் தான் விஷ்ணு ஈஸ்வரன், சக்தி என்பதை எடுத்தோதுகின்றன. "மாதாய மாலவனை மாதவனை" எனப் பாடியிருக்கிறார், திருமழிசை பிரான். " ஒருவன் ஒருவனங்கத் தென்று முளன்", என்பது பொய்கையாழ்வார் வாக்கு. எனவே தான் வல்லிபுரத்திலமைந்த திருமால் சிவவிஷ்ணு என்று அச்சுவேலி பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருமால் கோயில்களிலே மூலமூர்த்தி நின்ற கோலத்திலும் இருந்த கோலத்திலும், கிடந்த கோலத்திலும் அமைந்திருக்கக் காணலாம். திருப்பதி, அத்திகிரி திருநாவாய் என்னுமிடங்களில் நின்ற கோலமும், ஹம்பி ஸ்ரீரங்கபட்டணம், மாமல்லபுரம் சிங்கபுரம், ஸ்ரீரங்கம், திருவனந்தபுரம் என்னுமிடங்களில் சயனகோலமும் காட்சியளிப்பது போல, காஞ்சி வைகுண்டப் பெருமாள், மதுரை அழகர், திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணன் எல்லாம் அமர்ந்திருக்கும் கோலத்தில் அருள் பாலிக்கக் காணலாம். இத்தனைக்கும் குடந்தைச் சக்கரபாணி கோயிலிலே சக்கரத்தாழ்வார் மூல மூர்த்தியாய் இருக்கின்றார்.

இவ்வாறே வல்லிபுரக் கோயிலில் மூலமூர்த்தி சுதர்சனமே, நெடுநாள் தவம் புரிந்த ஹேமமுனிவரின் முன்தோன்றினார். குடந்தைச் சக்கரபாணி. நாக சாபத்தால் வாடிய லவல்லி சிவனருளால் வல்லிபுரத்திற் பிறந்து தவம் செய்தாள். அவள் முன்னே மற்சமாய், மகவுமாய்க்காட்சியளித்த மாயவனளித்த சக்கரமே வல்லிபுர ஆழ்வாராலயக் கருவறையில் காட்சியளிக்கும் மூலமூர்த்தி பஞ்சலோகத்தாலான இத்திருவுருவம் காத்தற் கடவுளின் ஆழியாகும். அம்பஷன் என்ற அரசன் விஷ்ணு பத்தருட் சிறந்தவன். அந்த மகானுபாவன் ஏகாதசியன்று சந்தோபவாஸஞ் செய்து, ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம் இந்த உபாயங்களால் மகாவிஷ்ணுவை ஸ்வாதீனமாகச் செய்து கொண்டு ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தான். பகவானான விஷ்ணு அவனுடைய மேலானபக்தியைப் பார்த்து, அவனுடைய ராஜ்யத்தை ரட்சிப்பதற்காக அந்த ராசனுடைய அரண்மனை வாயிலில் தம் ஸுதர்சன சக்கரத்தைப் பிரதிட்டை செய்து அந்த மன்னனை ரஷித்து வந்ததாகப் புராதன கதைகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்திலே வேலை ஆவாகனம் பண்ணி ஸ்தாபித்து வழிபடும் முருகன் கோவில்கள் நல்லூரும் செல்வச் சந்நிதியுமாகும். இவை வேற் கோட்டங்களாயமைந்த முருகன் கோவில்களாகும். அவ்வாறே சக்கரத்தை மூலஸ்தானத்தில் ஸ்தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம் வல்லிபுரம் ஆழ்வார் கோவிலாகும். தர்மசக்கரமான ஆக்ஞானசக்கரம் காத்தலையும், சங்கு படைத்தலையும், கதை அழித்தலையும் தாமரைமலர் அருளலையும்., அனந்தாழ்வார் மறைத்தலையும் குறிக்கின்றது. இத்தலத்தோடு தொடர்புடைய குருக்கட்டுப் பிள்ளையார் கோவில் மேற்கேயமைந்திருக்கிறது. தும்பிக்கையாழ்வாரான கணபதிக்கும், ஆழ்வார் சுவாமிக்குமான பாரம்பரியம் இன்றும் பேணப்பட்டு வருகிறது. குருக்கட்டுச் சித்திவினாயகருக்குப் பூசை செய்தபின்தான் வல்லிபுரசுவாமிக்கு ஆதியிலே பூஜை நடைபெற்று வந்திருக்கிறது மட்டுமன்றி பட்டுத்தீர்த்தம் எனப்படும் இறுதித் தீர்த்தவிழா கூட நெடுங்காலமாக, குருக்கட்டுச் சித்திவினாயகர் கோவிலின் மேற்கேயுள்ள தீர்த்தக் குளத்திலேதான் நடாத்தியும் வந்தார்கள். தீராநோய் தீர்க்குமிக்குளம் இன்று கேணியாய் அமைக்கப்பட்டுவிட்டது. இத்திருப்பணியைச் செய்தவர் பொன்னையா வைத்தியராகும்.

## பெரும் பெயர் இறை

திருமால் காத்தற் தெய்வம். பெருமாளிலும் பெரிய பெருமாள் என்பது அருணகிரிவாக்கு முல்லைநிலத் தெய்வமாயும், பாரத நாட்டின் குலதெய்வமாயும் திகழ்கிறார். வேத காலத்திலிருந்தே திருமால் வழிபாடு நிலைபெற்றுவிட்டமையை இருக்கு வேதம் எடுத்து இயம்புகிறது. இருக்கு வேதத்திற் சிறப்பாக ஆறு சூத்திரங்களில் முழுமையாகப் போற்றப்படுகிறார். அக்கினி இந்திரன் முதலிய தெய்வங்களுடன் திருமாலுக்கு முக்கிய இடம் அளிக்கிறது வேதம். இவ்வாறு வேதங்களாலும், புராண இதிகாசங்களாலும் போற்றப்படும் திருமாலைத் தொல்காப்பியர் முதல் பாரதியார் வரை பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். இதைத் தேசிய வீரர் வ.உ.சி. அவர்கள் பாரதியாரின் கண்ணன் பாடலுக்கு எழுதிய முன்னுரையில் "பாரதநாட்டின் குல தெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூடாத கவிகள் அருமை" என்று குறிப்பிடுகின்றார்.

ஆதிமுதல் இத்தேதிவரை போற்றப்படும் கண்ணனை முழுமுதற்கடவுளாய் வழிபடுபவர்கள் வைணவர்கள் ஆதிசங்கரர் வைதிக சமயங்களாறையும் இணைத்துச் சமயப் பூசலை ஒழிக்க முயன்றார். குலதெய்வமாகக் கொண்டாடும் அளவுக்கு கண்ணன் எல்லார் உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருக்கிறார். திருமால் பெருமை பேசும் பாகவதம், பாரதம், இராமாயணம், பகவத்கீதை முதலிய தொன்மையான நூல்களைவிட, சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் திருமாலைப் பெரிதும் போற்றியுள்ளன. பிள்ளைத் தமிழ் நூல்களிலெல்லாம் காப்புப் பருவத்தில் திருமால் அழகாகப் பாடப்பட்டுள்ளார். " பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" என அழகொழுகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியிருக்கிறார் குமரகுருபரர். பரிபாடலிலும், பரிபாடற்றிரட்டிலும் மொத்தம் ஏழுபாடல்கள் திருமாலைப்பற்றிப் பேசுகின்றன. அப்பாடல்கள் திருமாலின் தத்துவங்களையும், கோவில் கொண்ட ஸ்தலங்களையும் பற்றிச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. முருகனைப் "பெரும் பெயர் முருகன்" எனத்திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும் போற்றுகின்றன. அவ்வாறே திருமாலைப் 'பெரும் பெயர் இறை' யெனப்பேசுகிறது பரிபாடல். (பாடல் 15) முல்லைப்பாட்டில் "நனந்தலையுலகம் வளையிய நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை. நீர்செல நிமிர்த்தமா அல்" எனவும், பெரும்பாணாற்றுப்படையில் "காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந்தாங்குப் பாம்பணைப்பள்ளி யமர்ந்தோன்" எனவும் மதுரைக் காஞ்சியில் 'மாயோன்' எனவும் வரும் தொடர்கள் திருமாலைக் குறிக்கின்றன. தொல்காப்பியர் "மாயோன் மேயகாடுறை உலகமும்" என முல்லைநிலத் தெய்வத்தைப் போற்றுகிறார். கீழ்க்கணக்கு நூல்களிற் திருமாலைப் பாடும் பாவம் நிறைந்த பாடல்கள் பலவுண்டு. அவற்றைக் கீழே தருகிறோம்.

*"மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்குங்*
*கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்"* 2நான்மணிக்கடிகை

*"முக்கட் பகவன் அடி தொழார்க்கினான்*
*பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகினான்*
*சக்ரத்தானை மறப்பின்னா"* – இன்னா நாற்பது

*"கண்ணகன் மாஞாலம் அளந்த தூஉங் காமருசீர்த்*
*தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம் – கண்ணிய*
*மாய்ச்சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்*
*பூவைப் பூவண்ணனடி"* திரிகடுகம்

கலிங்கத்துப்பரணி

*"ஒரு வயிற்றிற் பிறவாது பிறந்தருளி உலகொடுய்க்கும்*
*திருவயிற்றிற்று ஒரு குழவி திருமாலைப் பரவுதுமே"*

எனக் கூறுகிறது.

வள்ளுவர் வைகுந்தத்தை 'தாமரைக் கண்ணான் உலகு எனவும், படியளந்த பான்மையை 'அடியளந்தான்' தாய தெல்லாம் எனவும் காட்டுகிறார். இவ்வாறே சித்தரும்,

"காண்டிடினால் பணிபூண்டவன் வைகுந்தம்
ஆண்டவன் பொற்பாதங்கள் காப்பாமே" என்று பாடுகிறார்.

சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் திருமால் கோவில் கொண்டிருந்தமை பற்றியும், ஆடல்வகையிற் திருமாலுக்கான தேவபாணி எதுவென்பது பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன.

*"பிறவா யாக்கைக் பெரியோன் கோயிலும்*
*அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்*
*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*
*நீலமேனி நெடியோன் கோயிலும்"*

இந்திரவிழவூ, ரெடுத்தகாதை (170–175)

*'மல்லன் மூதூர் மகிழ்விழாக் காண்போன்*
*மாயோன் பாணியும் வருணப்பூதர்*
*நால்வகைப் பாணியும்"* கடலாடுகாதை

இவ்வாறு மிகத் தொன்மையான திருமால் வழிபாடு இமயம் தொட்டு ஈழம்வரை பரந்துள்ளது. ஈழவள நாட்டில் சைவமும் சாக்தமும் விஷ்ணுவை வணங்கும் ஒருமைப்பாடுடையன. தெற்கே தெய்வந்துறை, கண்டி, பெல்லங்குவில, களுபோவில, என்னுமிடங்களிலும், கிழக்கே வந்தாறுமூலை, மண்டூர், திருப்பழுகாமம், கழுவாஞ்சிக்குடி, கிரான், தம்பிலுவில், திருமலை, என்னுமிடங்களிலும் விஷ்ணு தேவாலயங்கள் அமைந்துள்ளன.

நன்றி : ஆத்ம ஜோதி - 1982 தை, மாசி இதழ்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Temple of Vishnu at DEVINUWARA

**By V.K. Sivaprakasam M.A.,**
**Government Teachers' College, Kopay, Sri Lanka.**

Longstanding popular and political patronage of Hinduism and Hindu-Buddhist rapport are two salient features in the development of Hinduism in Sri Lanka from ancient times. The existence of many Hindu temples in the past in predominantly non-Tamil speaking areas of the island is well known to students of Sri Lankan religious history. Approximately half of the seventy Hindu temples listed by religious historian, C.S. Navaratnam are now mainly in Sinhala speaking areas in seven out of the nine provinces of the island. Among the comparatively few Sri Lankan temples of Vishnu both in the non-Tamil speaking and Tamil speaking areas the temple of Vishnu at Devinuwara is perhaps second in antiquity to the ancient temple of Sri Chakra Alvar at Vallipuram in Point Pedro, the northernmost point of Sri Lanka.

The southernmost point of Sri Lanka called Tanavare by the Portuguese, deandere by the Dutch, Dondra Head by the British, Thennavanthurai and Theivendramunai by the Tamils is now known in Sinhala as Devinuwara-the city of Gods (Nuwara-city). Close to the 'Plain of the Moon' marked by Ptolemy (Second Century A.D.) in his ancient map of Sri Lanka Hindu temples of Siva, Ganesha and Vishnu existed in the past, along with a Buddhist Vihara in an atmosphere of peaceful religious co-existence and cooperation. All these Hindu temples are now in ruins with little or no trace of their ancient grandeur.

The temple of Vishnu at Devinuwara was first built by Agbo IV in the middle of the seventh century A. D. when Sri Lanka came under Pallava influence in art, architecture and religion. Adjacent to it were the temple of Santhirasegaram I, later known as Nagarisa, founded perhaps by Vijaya and the temple of Ganesha erected in the fifteenth century by a merchant called 'Ramachandra.' Unlike most of the Sri-Lankan Hindu places of worship which are temples of Vishnu, Devinuwara was a popular place of worship with an impressive edifice as well as a spot frequented by foreigners and natives where religious rites and ceremonies were conducted in accordance with the religious tenets and principles set out in the Agamas-ancient Hindu special scriptures. As Vishnu was considered the protector of Sri Lanka and Buddhism it is no wonder that Abgo IV built a temple of Vishnu on the southern headland of Sri Lanka. It is noteworthy that even now Sinhala Buddhists worship images of Vishnu in many viharas in the island.

Culawamsa, an ancient historical chronicle records that Lord Vishnu blessed Manabharana with a son, Parakramabahu when he offered prayers to him. Parakramabahu II (1236-1271), a devout Buddhist well known for his catholicity of religious outlook renovated the temple of Vishnu at Devinuwara and ordered the annual celebration of the Asalki Festival in Honour of God Vishnu. It also records that Prince Virabahu, another devout Buddhist after defeating Candabanu and his Javakas went to ' Devanagara' -Devinuwara and celebrated a divine sacrifice to the presiding deity. Raja Senalamkadhikara, a famous Minister of the Gampola kings also is recorded to have built a three storeyed image house at Devinuwara.

Ibn Batuta, the Arab traveller and scholar-pilgrim who came to Sri Lanka in the fourteenth century visited the shrine at Devinuwara and was impressed by its wealth and the Annual Fair held there. He found a typical Hindu settlement of eighteen pathways comprising one thousand Brahmins who served as ministers of the deities, numerous silversmiths and five hundred dancing girls who sang and danced before the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

presiding deity every night.

Sri Rahula, a famous Sinhalese poet well versed in Tamil, in his description of the temple dance of these girls says:

"With flowers entwined in the tresses of their hair and garlands pendent from their necks, the women dance, as dances the budding leaf of the mango twig to the music of the breeze."

The Trilingual inscription of Galle records that on their safe arrival in Sri Lanka after a tempestuous sea-journey the Chinese mission of 1410 A. D. sent by the Emperor of the Ming dynasty offered lavish gifts of oil for lamps at the temple of Vishnu at Devinuwara.

In 1588 a Portuguese task force headed by Thom de Sousa, according to Portuguese historian, Du Conto,. demolished the infernal structure of the vast temple of Vishnu, destroyed the idols of diverse forms and colours, plundered the wealth stored in the treasure houses, desecrated the precincts and set fire to the artistic wooden car of seven storeys in which the presiding deity rode through the city. The wanton destruction and desecration of the temple of Vishnu by the Portuguese perhaps resembles the vandalism of the early Huns.

De Jonville, a French traveller of the eighteenth century, who visited Devinuwara after the Portuguese demolition of the famous temple of Vishnu saw the remains of' the edifice and assumed that a gallery of three hundred or four hundred pillars should have earlier formed part of the well-planned, pagoda, dedicated to Vishnu.

A new structural temple, the Divya Raja Bhavana, has recently come up at the site of the ancient shrine destroyed by the Portuguese. It has no semblance of the majesty of the ancient temple.

The ancient temple of Vishnu at Devinuwara can regain its stately grandeur and cultural glory and become the focal point of religious rapport and racial harmony if effective steps are taken to rebuild it with national initiative and interest and international collaboration and contribution.

REFERENCES:


1. De Jonville, Travels of Ceylon (1700-1800), Translated and Edited by Raven Hart.
2. Du Conto, A Portuguese History of' Ceylon, Translated by D. Ferguson.
3. Geiger Wilhelm, The Culavamsa.
4. Lee Samuel The Travels of Ibn Batuta 1824
5. Navaratnam C. S., A short History of Hinduism in Ceylon, Jaffna, 1964.
6. Raghavan M.D.Tamil Culture in Ceylon, Colombo, 1970.


*(Courtesy: World Hindu Congress Souvenir 1982.)*

Hindu religious worship may either be private, at home in the domestic set-up, or be public, at a temple, where several are present and where the ceremonies are performed by the priest.

Worship in the very early days have been directed to objects of the environment such as mountains, trees, snakes, etc. In "Tholkapium", we find references to Murugan, deity of the mountain tops, Thirumal and the Vedic Gods, Indra, Varuna, Sun, Moon, Fire, etc. The attributes of Lord Siva are referred to in Sangam literature. Temples eventually became the focal centre of the social and cultural activities of the people. These had to encompass, within their precinets, halls for schools and other scholastic activities, reference libraries, facilities for feeding, conference halls, halls for musical and dance performances, etc., also the King has to have a Raja Mandapam. So we get the gradual evolution of the traditional pattern of the temple structure.

***S. Arumugam in his book on Ancient Hindu Congress in Sri Lanka.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிக் கடலில் கண்டெடுத்த முருகன்

- ஆ. தேவராஜன்

*(பொதுச் செயலாளர், தனிநாயகம் மன்ற நம்பிக்கையம்)*

காலித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அப்போது துறைமுகப்பகுதிக் கடல் ஆழமாக்கப்படும். ஆழமாக்கப்படும்போது அடிக் கடலில் இருப்பவை அழிந்து போகலாம் அல்லது மறைந்து போகலாம். காலித் துறைமுகம் நீண்டகால வரலாற்றுப் பெருமை உடையது. வெளிநாட்டு வணிகத்தோடு தொடர்புடையது. ஆதலால், வரலாற்றுப் பெறுமானம் உள்ள தொல்பொருட்களைத் தரக்கூடும். எனவே, மீட்புத் தொல்லியலில் பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க தலைமையிலான களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பின்கற்கைக்கான தொல்லியல் நிறுவனமும், தொல்லியல் திணைக்களமும், கலாசார முக்கோணமும் செயற்படத் தொடங்கின.

மீட்புத் தொல்லியல் வேலைகள் 1992 ம் ஆண்டு தொடங்கப்பட்டன. இவர்களுக்கு உதவியாக அவுஸ்திரேலியாவில் உள்ள அனுபவம் மிக்க ஆழ்கடல் தொல்லியல் நிபுணர்குழு உதவி செய்கிறது. இவர்கள் மேற்கு அவுஸ்திரேலிய கடல்சார் அருங்காட்சியகத்தைச் சேர்ந்தவர்கள். கலாநிதி ஜெறெமி கிரீன் தலைமையிலான இந்தக் குழுவில் செல்வி. காரென் மில்லர், ரொம் வொஸ்மர், பாற் பேக்கர், ஜோன் காப்பென்ரர், கலாநிதி இயன் கொட்பிறே ஆகியோர் அடங்குவர்.

1992 ம் ஆண்டு இவர்கள் கூட்டாக மீட்புத் தொல்லியல் வேலைகளைத் தொடங்கினர். இவர்களுடன் மேற்சொன்ன நிறுவனத்தினரும், பேராதனைப் பல்கலைக்கழகத் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி. செல்வி. மோய்ரா தம்பு, கண்டி அடிப்படை ஆய்வுகள் நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி திருமதி. மாத்தா பிறிக்கற் ஆகியோரும் சேர்ந்து கொண்டனர்.

கட்டுரையாளருடன் கலாநிதி ஜெறெமி கிரீன் பேசும்போது இந்துமாக்கடல் சார்ந்த கடற் தொடர்புகளுக்கு இலங்கை நுழைவாயிலாக இருப்பதால், இலங்கையின் ஆழ்கடல் தொல்லியலில் அவுஸ்திரேலியா அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். அவுஸ்திரேலியாவில் நான்கு ஆழ்கடல் தொல்லியல் தளங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும், அது அவுஸ்திரேலியாவின் கடல்வழித் தொடர்பு வரலாற்றை மீளச் சீர்படுத்துவதற்கு உதவும் என்றும் கூறினார். இலங்கையில் 14 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த தொல்பொருட்களைக் கண்டுபிடிக்கலாம் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் சொன்னார். இக்கால கட்டம் மேற்குலக நாடுகள் ஆதிக்கம் செலுத்திய காலம் என்ற காரணத்தால் அவுஸ்திரேலியாவுக்கு நாட்டமுள்ள பொருட்கள் கிடைக்கலாம் என்பது அவர் நம்பிக்கை. அவர்கள் கண்டு பிடித்த பொருட்களுள் கடலுக்குள் தாண்டுவிட்ட ஹர்கியூலிஸ் (Hercules) என்ற ஒல்லாந்தர் கப்பலும், 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொருட்களுடன் ஒரு மணியில் "அமோர் வின்சிற் ஓம்னியா அன்னோ – 1625" (Amor Vincit Omnia Anno 1625) என்று ஒல்லாந்த மொழியில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதன் கருத்து "அன்பு அனைத்தையும் ஆட்கொள்ளும்" என்பதாகும்.

கடலுக்கடியில் கிடைத்த பொருட்கள் இருந்த இடங்களை ஐந்து இடங்களாகப் பிரித்துள்ளனர். கிடைத்த பொருட்களின் பட்டியலைத் தந்த மோய்ரா தம்பு மொத்தம் 19 போர்ஸ்லெயின் ஏனங்களும், 22 கல்லாலான பொருட்களும், 61 மட்பொருட்களும், 19 குழாய் வகைகளும், 4 செங்கற்களும், 2 செம்பு/பித்தளைப் பொருட்களும், 2 இரும்புப் பொருட்களும் கிடைத்ததாகச் சொன்னார். ஏ என்று குறிப்பிடப்பட்ட இடத்தில்தான் இவை கூடுதலாகக் கிடைத்தன. அடுத்து ஈ என்று அடையாளமிடப்பட்ட இடத்தில் இவை கூடுதலாக கிடைத்தன. பி, சி, டி என்று அடையாளமிட்ட இடத்தில் அதிகம் கிடைக்கவில்லை. இவற்றுள் பெரும்பான்மையானவை ஐரோப்பிய, மத்திய கிழக்கு, தூரகிழக்கு நாடுகளைச் சேர்ந்தவை. பீங்கான் ஏனங்களுள் 40 ஐரோப்பிய வகையையும், 39 இலங்கை வகையையும் சேர்ந்தவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் நடவடிக்கைகளில் ஆழ்கடல் தொல்லியலின் தேவையை வலியுறுத்தி வருபவரும் ஔளவில் தன்னால் இயன்றதைச் செய்து வருபவருமான கப்டன் சோமசிறி தேவேந்திரா அவர்கள் தலைமையில் இயங்கும் இத்துறையில் நாட்டம் கொண்ட குழு முழு ஆதரவை நல்கி வருகிறது. சுழியோடி முக்குவத் தொழில் செய்து உதவினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் சுழியோடி உதவுவதற்குக் காலியில் உள்ள வேறு சுழியோடிகளும் உதவிக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் பலபகுதிகளிலும் சுழியோடினர். பெரிய கப்பல்கள் நங்கூரமிட்டு நிறுத்தப்படும் இடங்களிலும் சுழியோடினர். அப்படிச் சுழியோடிய ஒருவர் தான் உலோகத்தால் செய்யப்பட்ட இந்து விக்கிரகம் ஒன்றைக் கண்டு பிடித்தார். துறைமுகப் பக்கம் வராமலே அவர் வேறோர் இடத்தில் விக்கிரகத்துடன் கரை சேர்ந்திருக்கலாம். இந்தச் சிலையைத்தான் அவர் விற்க முற்படுகையில் பொலீசாரிடம் சிக்கிக் கொண்டார். பொலீசார் சிலையை மீட்டுத் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

போர்த்துக்கேயர் இந்த நாட்டில் நுழைந்தபோது பல பாகங்களிலும் பல இந்துக் கோவில்களையும் பௌத்த கோவில்களையும் அழித்தார்கள். விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளை அடிப்பதற்காக குறிப்பாக இந்துக் கோவில்கள் கொள்ளையிடப்பட்டன. தென்னிலங்கைப் பகுதியில் குறிப்பாக காலி, மாத்தறைப் பகுதியில் வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்று விளங்கிய ஒரு சிவன் கோவிலும் நெடுமால் கோவிலும் இருந்தன. சிவன் கோயில் (தெனவரை நாயனார்) இருந்த இடமே தெரியாமல் அழிந்துவிட்டது. நெடுமால் கோவில் (தெனவரை பெருமாள்) பாரிய அழிபாடுகள் இன்றும் தெய்வக்துறையில் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த விக்கிரகம் இந்தக் கோவில் ஒன்றை சார்ந்ததாக இருக்கலாம் அல்லது பிறிதொரு கோவிலைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். அழிக்கும் வெறிபிடித்த போர்த்துக்கேயர் இதை எங்கேயாவது கொண்டுசெல்ல முயற்சி செய்தார்கள் என்று கொள்ள முடியாது. ஒல்லாந்தர் அல்லது பிரித்தானியர் முயற்சி செய்திருக்கலாம் அல்லது அரும்பொருட்களைச் சேகரித்த ஒரு வெளிநாட்டவர் கொண்டு செல்ல முயற்சித்திருக்கலாம். இந்தச் சிலையின் பின்புறம் ரோம இலக்கமான xii பொறிக்கப்பட்டிருப்பதால் இது யாராலோ சேகரிக்கப்பட்ட அரும்பொருட்களுள் ஒன்று என்பது தெளிவு. நங்கூரமிடப்பட்ட பெரிய கப்பலில் ஏற்றப்படும்போது இது தவறிக் கடலில் விழுந்திருக்கவேண்டும்.

இந்த விக்கிரகம் வெண்கலத்தினால் செய்யப்பட்டது. மூன்று அடி உயரமானது. 30 கிலோ எடை உள்ளது. இது ஒரு பெரிய சிவன் கோவிலில் அல்லது நெடுமால் கோவிலில் இருந்திருக்கவேண்டும், அல்லது ஒரு முருகன் கோவிலில் இருந்திருக்க வேண்டும். 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வந்தபொழுது இலங்கையின் தென் கரையோரம் எல்லாம் இந்துக் கோவில்கள் இருந்தன. நீர்கொழும்பு புத்தளக் கரையோரங்களிலும் இந்துக் கோவில்கள் இருந்தன. ஏன் இன்று தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பாரி ஒலி நாளாந்தம் கேட்கிற கோட்டையில் 16 ஆம் நூற்றாண்டில் அரச மாளிகைக்குப் பக்கத்தில் இருந்த புகழ்பூத்த அழகேஸ்வரர் சிவன் கோவிலில் நாளாந்தம் இளம் பெண்கள் ஓதுவார்களின் தேவார திருவாசக ஒலியும், சங்கு, சேமக்கல ஒலிகளும், மணி ஒலிகளும் சாம்பிராணி, கற்பூர புகைகளும் வாசனையும் இருந்ததாக தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர் கூறியுள்ளார். இந்தக் கோவில்களில் எல்லாம் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் மிகுந்த சகோதரத்துவ உணர்வுடன் சென்று வணங்கி வந்தனர். உண்மையில் ஐரோப்பியர் வருகைக்கு முன்னரும், குடியேற்றத்துவ ஆட்சிக் காலத்திலும் சிங்கள – தமிழ் உறவுகள் சீராகவே இருந்தன. பிரித்தானியர் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில்தான் சில சுயநல சிங்கள அரசியல் வாதிகள் சிங்கள – தமிழ்ப் பிளவுக்கு வித்திட்டனர்.

இந்த விக்கிரகம் எந்தத் தெய்வத்தினுடையது என்பது பற்றி ஆராய்ந்தவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. ஒரு சிலர் இதை இந்திரன் சிலை என்றனர். கொழும்பு அருங்காட்சியகப் பணிப்பாளர் திரு. லக்துசிங்க இதனை சுப்பிரமணியர் சிலை என்றும் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறினார். இந்தச் சிலையின் படம் ஒன்றைத் தொல்லியல் திணைக்கள அதிகாரி ஒருவரிடம் பெற்றுக்கொண்ட இக்கட்டுரை ஆசிரியர் அதனைப் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களிடம் காட்டிக் கருத்துக் கேட்டார். பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் இதை முருகன் சிலை என்று அடையாளம் கண்டு அதன் அழகான வேலைப் பாட்டின் அடிப்படையில் இது சோழர் காலத்தியது என்றும் கூறினார். அத்துடன் இது பத்தாம் அல்லது பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறினார்.

இந்த விக்கிரகத்தின் ஒரு கையில் இருப்பது வச்சிரம் என்றும் மற்றக் கையில் இருப்பது சக்தி என்றும் கூறினார். வச்சிரம் என்பது மேல் நோக்கியதும், கீழ் நோக்கியதுமான திரிசூலத்தைக் கொண்ட ஆயுதம். அது மேல் நோக்கிய திரிசூலமும் கீழ்நோக்கிய திரிசூலமும் இணைந்த ஒன்று. (படம் 1 ஐப் பார்க்கவும்).

இந்த விக்கிரகத்தின் வலது கையில் இருப்பது சக்தி (வேல்) வேலின் கூரிய நுனிப் பாகத்தை மூன்றாகச் சதுர வடிவில் கொண்டது. இரண்டாகக் காட்டப்படுவதும் உண்டு. (படம் 2 ஐப் பார்க்கவும்). இந்த சக்தியின் பின்னால் உள்ளது சூரபத்மன் பற்றிய புராணக் கதை. சூரபத்மன் என்ற அரக்கன் சிவனிடம் அழியா வரம் பெற்றிருந்தான். அதை வைத்துக் கொண்டு மக்களையும் தேவர்களையும் துன்புறுத்தினான். துன்புற்ற தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அழியா வரம் கொடுத்த சிவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் பார்வதியின் (சக்தி) பக்கம் திரும்பினர். பார்வதி அவர்களுக்கு இரங்கித் தன் இளவல் முருகனை போர்க்களத்துக்கு அனுப்பினார். கூடவே எந்த ஆயுதத்தையும் நிர்மூலமாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி என்ற வேலாயுதத்தையும் கொடுத்தனுப்பினார். சூரபத்மனைக் கொன்று முருகன் மக்களையும் தேவர்களையும் காத்தருளினார். இந்த வேலாயுதம் (சக்தி) தான் முருகனின் வலக் கையில் உள்ளது.

இதை விளக்குகின்ற ஒரு சமஸ்கிருத சுலோகத்தையும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் மேற்கோளாக எடுத்துக் காட்டினார். அது வருமாறு :

*"ஏக வக்த்ரம் சதர்பஹும்*
*சதுர் தோர் தண்ட மண்டிதம்*
*வஜீர சக்தி தரம் தேவம்*
*வரதாய பாணி நங்*
.................................
*தயாத தும் சரசம் பூதம்*
*மயூர ருத மவ்யம்"*

இதன்படி முருகன் கையில் இருக்கும் ஆயுதங்கள் வச்சிரமும் சக்தியுமாம். இதே சுலோகத்தில் சரப் புல் நிறைந்த வனத்தில் உள்ள பொய்கையில் தோன்றியவன் முருகன் (சரவணப் பொய்கை) என்ற கருத்தும் தரப்படுகிறது. இந்த விக்கிரகத்தின் ஒரு கை வரம் கொடுக்கிறது ; இன்னொன்று பூமியில் அமைதி நிலவ ஆசீர்வாதம் செய்கிறது.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் கருத்துப்படி இந்த விக்கிரகம் தனித்து இருந்திருக்கமுடியாது. கூடவே தெய்வயானையும் வள்ளியும் வாகனமான மயிலும் இருந்திருக்கவேண்டும். அவை பாதுகாப்பாகக் கப்பலில் ஏற்றப்பட்டுவிட்டனவா அல்லது அவையும் கடலுக்குள் வீழ்ந்தனவா ? இதே இடத்தில் கடலுக்கடியில் தேடுதல் நடத்துவது ஐயத்தைத் தீர்க்கும். உரிய அதிகாரிகள் முயற்சி செய்வார்களா ? அல்லது ஏனோ தானோ என்று இருந்து விடுவார்களா ?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலி புனித நகர்

சிவநெறிச் செல்வர் சிவநெறிச் செம்மல் திரு.தி.செந்தில்வேள் ஜே.பி.
பிரதம அறங்காவலர்
பேலியாகொடை ஸ்ரீ பூபால விநாயகர் கோயில், கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், காலிநகர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது எம் மூதாதையர் மொழிந்த முதுமொழி. தாம் குடியிருக்கும் ஊரெல்லாம் கோயில் கட்டி வாழ்வாங்கு வாழ்ந்த பெருமைக்கு உரியவர்கள் நம்மவர்கள். நாடெல்லாம் ஆலயம் எழுப்பி ஆன்மிக வாழ்விற்கு வழிகாட்டிச் சிறக்க வாழ்ந்த எம் முன்னோர்கள் எமக்கென விட்டுச் சென்ற பழம் பெரும் பாரம் பரியங்களை அருமையாய்ப் பாதுகாப்பது எம் தலையாய கடமை அன்றோ.

மிகப் புராதனமும் பிரதானமும் வாய்ந்த ஒரு புண்ணிய பூமிப் பகுதி இலங்கையில் உள்ளது. அது தான் காலி முதல் கதிர்காமம் உள்ளடக்கிய பழம் பெரும் புனித பிரதேசம்.

வள்ளல் முருகனை அடைவதற்கென்றே அவதாரம் எடுத்த வள்ளி பெருமாட்டியார் வளர்ந்த வள்ளிமலையும் இங்கே தானே. வள்ளியை ஆட்கொள்ள வந்த வேலவன் வேடனாக, வேங்கையாக, விருந்தனாக வேடம் பல பூண்டு நாடகம் ஆடிய இடம் தானே கதிர்காமம். வேடுவ மன்னன் நம்பிராஜனிடத்தில் வளர்ந்த வள்ளியை வேலனுடன் இணைய வைத்த கைங்கரியத்தை ஐங்கரன் செய்ததுவும் மாணிக்க கங்கை சூழும் செல்லக் கதிர்காமத்தில் அன்றோ.

எமை ஆளும் அம்மை அப்பன் அருள் மிகும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் என்னும் திருநாமங்கள் கொண்டு அருள் பாலிக்கும் அழகுபுரி காலிமாநகர்.

இணையற்ற இராவணேஸ்வரனால் வணங்கப்பெற்றவன் தென்னாடுடைய சிவன். அக்காலத்தில் ஆகாய மார்க்கமாக சஞ்சீவி மலையை ஏந்தி வந்த வாயுபுத்திரனான அநுமன் இறங்கி மீனாட்சி சுந்தரேஸ்வரரைத் தரிசித்த இடம் காலிநகர். அநுமன் கொணர்ந்த சஞ்சீவி மலை, அன்றுபோலவே இன்றும் நோய் தீர்க்கும் சஞ்சீவியாக ஒரு மருத்துவ வரப்பிரசாதமாக காலிமாநகரில் நிலைத்து நிற்கிறது.

இம்மலையையும் மலை சார்ந்த பகுதியையும் சிங்களவர் "உண வற்றுணா" என்றே அழைக்கின்றனர். சிங்கள மொழியில் உண வற்றுணா என்றால் நோய் அகன்று விழுந்தது எனப் பொருள்படும்.

வேறு மலையே, காணக் கிடையாத காலிக் கடலோரத்தில் கம்பீரமாய் நிற்கும் தனி மலை சஞ்சீவ மலை, இதன் அடிவாரத்தில், தொன்று தொட்டு கதிர்காம யாத்திரீகர்கள் தேங்காய் உடைத்து வழிபட்டுச் செல்வது வழக்கம். இங்கு சற்றே இளைப்பாறினாலும் புத்துணர்ச்சி பெற்று மிகுந்த உற்சாகத்துடன் கதிர்காம யாத்திரையைத் தொடரும் பக்தர்களைக் காணலாம்.

அநுமன் இறங்கிய காலிநகரைத் தாண்டியதும் வாலி கமம். அதை அடுத்து மகாவிஷ்ணு தேவேந்திரனுக்குக் காட்சி கொடுத்தருளிய தேவேந்திர முனை. இது இன்றைய இலங்கையின் தென்முனை ஆகும். தேவுந்தர எனச் சிங்களவரால் குறிப்பிடப்படும் இத்தலத்தில் பெரு விழாக் காணும் விஷ்ணு ஆலயம் அருள் மிகுந்தது.

இன்னும் சற்றே முன்னேறினால் காந்தவர்கள் விரும்பி உலாவரும் காந்தார நாடு. இதனை அடுத்து சென்றால் தூரத்தே தெரிவது அழகே உருவான கதிர்காமத்து கந்தனது கதிரமலை எனப்படும், கதிர்மலையின் கவர்ச்சித் தொலைக்காட்சி.

இத்தகைய புண்ணிய பூமியில் காலிமாநகரில் மூன்று வருடங்களுக்கு முன்னர் பாரிய குண்டு வெடிப்பொன்றினால் காலிச் சிவன் கோயிலின் பகுதிகள் சிலவும் சேதம் அடைந்தன. ஆனால் அதில்தான் அற்புதமே மறைந்து வெளிப்படுகிறது. மாகாண அமைச்சர்கள் முதன் முதலில் தெரிவாகி மாநகர சபையில் கூடும்போது வைக்கப்பட்ட குண்டு முன்னால் இருக்கும் கோயிற் புறத்திலும் சேதம் விளைவித்தது. சேதங்களைப் பார்வையிட வந்த பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவைப் பிரமிக்க வைத்த காட்சி மறக்க முடியாதது. திருத்தப்படவேண்டிய நிலையிலிருந்த சகல பிரகாரங்களும், "கதிர்காம யாத்திரீகர் அன்னதான மடம்" என்ற பெயர்ப் பலகையைத் தாங்கியிருந்தும், அன்னதானம் அல்லாது பிற விஷயங்களுக்காகப் பாவிக்கப்பட்ட மடங்களும் பெருத்த சேதத்திற்குள்ளாகியபோதும், ஆலயத்தின் இராஜ கோபுரத்திற்கோ, மூலஸ்தானத்திற்கோ, பண்டைய பாண்டி நாட்டின் மீன் இலச்சினை பொறித்த அர்த்த மகா மண்டபங்களுக்கோ, உற்சவ மூர்த்திகளுக்கோ வேறெந்த முகூர்த்தங்களிற்கோ எந்தவித அணு அளவு பிரமாண-சேதமேனும் ஏற்படாதது ஈசனின் திருவிளையாடல் மகிமையை உலகத்திற்கு எடுத்துக்காட்டி நிற்கிறது. நேரிற் பார்த்த பாதுகாப்பு அமைச்சர் உணர்ச்சி வசப்பட்டு வியந்து போற்றி வழிபட்டார். கோயிலைத் திருத்த பாதுகாப்பு நிதியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பொருள் தருவதாகச் சொன்ன அவரும் பிறிதோர் சம்பவத்தில் மீளாது போந்தார்.

வேறு எங்குமே காண்பதற்கு அரிய பிரகாசம் வீசுகின்ற பெரியதோர் சிவலிங்கமே மூலமூர்த்தி, உடனுறையும் தேவியோ, கண் இமையாது காக்கும் மீனாட்சி அம்மன். காணக் காண சொக்க வைக்கும் திருவழகு. ஆலயத்தின் அத்தனை மூர்த்திகளுமே சர்வ லட்சணம் கொண்டவை.

எம்பொருமான் பாலிக்கும் திருவருட் திறத்தாலும் அண்மையில் அமரத்துவம் அடைந்த பரிபாலன சபைத் தலைவர் கனகலிங்கம் ஐயா அவர்களின் விருப்பப்படியும் அன்னாரின் ஆசிர்வாதத்துடனும் காலிநகர் வாழும் சைவப் பெருமக்கள் துணையுடனும் மாநகர முதல்வர்கள், முதலமைச்சர்கள் ஆதரவுடனும் அடியார்கள் வாழ்த்துடனும் எம் முன்னோர் இயற்றிய தவப்பயனாய் இன்று இக்கோயில் புதுப்பொழிவு பெற்று வளர்கிறது.

அன்று பாதுகாப்பு அமைச்சரின் பணம் கிடைத்திருப்பின் சேதமுற்ற பகுதிகள் மட்டும் பழைய நிலைக்குத் திருத்தப் பட்டிருக்கும். ஆயின் இன்றோ புனர் நிர்மாணம் மட்டுமன்றி பல புது நிர்மாணங்களும் வளர்கின்றன. ஆலயம் முன்னைய அளவிலும் நான்கு மடங்காக விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

வள்ளி தெய்வானை உடன் உறையும் கந்த சுவாமியார் எழுந்தருளி, கதிர்காத் திக்கை நோக்க ஓர் தனி வீதி, பார்த்தால் இது கோயிலுக்குள் கோயிலா அல்லது தனிக்கோயிலா எனும்படி அமைந்துகொண்டிருக்கிறது.

கோபுர வாசல் ஒன்றாய் இருந்த தலத்தில் நாற்புறமும் திருவாயில் அமைய வேண்டும் என்பது திருவுள்ளம். திறக்கப்படாதிருக்கும் தென்கதவினைத் திறக்க மீனாட்சி அம்மன் திருவுளம் கொள்வார். தெற்கு கதவினைத் திறக்கவும் தென்பிரகார விஸ்தரிப்பிற்கும் தடையாய் இருப்பது தென்புறத்தே செல்லும் அரச வீதி. அவ்வீதியை ஆலயத்திற்கு ஆக்கி பிறிதோர் புது வீதியை சற்றுத்தள்ளி அமைப்பதற்கு திருமுயற்சி சித்திக்கும் நாளை எதிர்பார்த்து இருக்கிறோம். மிகவிரைவில் ஈடேறும்போது அம்மனுக்கோர் அலங்கார வாசலும் ஐங்கரனுக்கு ஓர் தனிக் கோயில் பிரகாரமும் அமைந்துவிடும்.

ஆலய உத்தரத் தூண்களில் மதுரை மீனாட்சி சுந்தரரேஸ்வரர் கோயிலில் உள்ளது போன்ற மீன் இலச்சினைகள், ஆதிபாண்டிய நாட்டிற்கும் இன்றைய பாண்டி நாட்டிற்கும் உள்ள பொருத்தத்தை தெளிவுபடுத்துகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் சரித்திரங்களிலும் பாண்டிநாடு எனப்பட்ட இலங்கையிலும் இன்றைய பாண்டிநாடு எனப்படும் இந்தியாவின் தென்பகுதியிலும் ஒரே பெயரால் மீனாட்சி சுந்தரேஸ்வரர் எனும் திருநாமங்களோடு எழுந்தருளிய பொருத்தம் சிறப்புக் கவனத்திற்குரியது. பழம் பாண்டி நாட்டின் மதுரைப் பகுதியின் ஒரு பகுதி சிங்களவரால் ' மாதர என இன்றும் அழைக்கப்படுவது சிறப்பே.

வலது பதம் ஊன்றி எத்தனை காலம் தான் ஆடுவாய், கால்மாறி இடப் பதம் ஊன்றி ஆடுக என வருந்திக்கேட்ட வரகுண பாண்டியனுக்காக கால்மாறி ஆடிய சிவன் காலிகா நகரத்திலும் அங்ஙனமே ஆடவென ஒரு திரு அரங்கம் நிர்மாணிக்கப்படுகிறது.

பிரளய காலத்தின் பின் படைத்தல் தொழில் இயற்றும் பிரமதேவனுக்கு ஆதார கும்பத்தை நடராசப் பெருமான் நிலைபெறச் செய்த அமுத கும்பேஸ்வர கும்பகோணம் எனும் திருப்பதியில் உலக உற்பத்தி மந்திரத்தின் பொருளை தந்தைக்கு உபதேசித்த சுவாமிமலைநாதன் சன்னிதியின் முன்னிலையில் அளப்பரிய நடராஜ திருமேனி ஐம்பொன்னால் ஆகவும் திருவருள் பாலித்துள்ளது. சிவகாமி சமேதராய் ஆடல்வல்லான் தென்னாட்டில் அருள் நடனம் காட்டி ஆட்கொள்ளும் திருநாள் வரும் நாள் எந்நாளோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலம் ஆளும் மன்னவனுக்கு
ஓர் மடல்
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவர் ஆலயம்
6. பூந்தோட்ட வீதி,
காலி 14.3.1993



*மண்டலம் ஆளும் மன்னவனுக்கு ஓர் மடல்*

# *மண்டலம் ஆள் மன்னவா.*
# *தேவரைச் சிறை மீட்ட செல்வக்குமரனை சிறை எடுப்பதா*

ஆழ்கடல் அடியிலிருந்து அழகு முருகனின் அற்புதச் சிலையொன்று ஆங்கிரஸ ஆண்டு ஆருத்திராநாள் அன்று வெளிப்பட்டது. அருமையான வேலைப்பாடு அமைந்த அதிபுராதன உலோகச் சிலை அது.

காலி மாநகரின் வரலாற்றுக்கு முற்பட்ட ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தின் பாரிய திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வேளையில் திரு உருவச் சிலை வெளிவந்தது. காலமறிந்து வந்த தெய்வீகம் அல்லவா. அதுவும் இறைவன் திருஉலா வந்து தரிசனம் தந்து அருள்புரியும் திருவாதிரைத் திருநாள் வந்தது நிச்சயமாகத் தெய்வச் செயலே.

தட்சப் பிரஜாபதி தவமியற்றிப் பெற்ற வரபலத்தின் பயனாய் உமையன்னை தட்சனுக்கு மகளாய் வளர்ந்தாள். தாட்சாயணி என்னும் பெயரும் கொண்டாள். சிறு பிராயத்திலேயே சிவனன்றி வேறு சிந்தியாது கடும் தவம் இயற்றினாள் இறைவி. தவத்திற்கு மகிழ்ந்த இறைவன் பிரத்தியட்சமாகி இறைவியைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டார். இறைவன் ஆடும் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றே

தட்சப் பிரஜாபதி பின்னொரு நாள், அழைக்க வேண்டிய தலைவனுக்கு அழைப்பு விடாது மாபெரும் யாகமொன்றை ஆரம்பித்தான். பரம்பொருளையே மதியாது செய்த யாகத்தில் பிரசன்னமாய் இருந்த காரணத்தினால் தேவர்கள், சூரபத்மனுக்கு ஏவல் செய்யும் அடிமை ஆனார்கள். தான் செய்த வினையின் விளைவே இது என உணர்ந்த தேவேந்திரன் சிவனிடம் முறையிட்டு வணங்கினான். தேவர்களுக்கு விமோசனம் தருவதற்கு திருவுளம் இசைந்தார் எம்பெருமான்.

அண்ட வெளியில் ஆகாயமாய்ப் பரம்பொருளின் புருவமத்தியின் நேத்திரத்தினின்றும் கிளம்பிய ஒளிப்பிழம்பினின்றும் வடிவெடுத்து உதித்தான் குமரன். தவத்தில் சீலத்தில் தலை சிறந்த சூரபத்மனை ஆட்கொள்ளத் திருவுளம் கொண்ட முருகன் திருவிளையாடல் காட்டி சூரனைச் சேவலும் மயிலும் ஆக்கி தன்னுடனே இருக்கும் பேரருளுக்கு ஆளாக்கினான்.

திருவருளைப் பக்தர்களுக்குக் கொடுப்பதற்காக பதவியும் சீரும் கொடுத்துப் பரீட்சிப்பது அவன் செயல். நம் நாட்டில் இன்னும் நாடகங்கள் நடத்தவென்று நினைத்தார் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16ம் நூற்றாண்டின் ஆரம்பம், இலங்கையிலும் இந்தியாவிலும் அந்நியர் அட்டகாசம் செய்த காலம். தாம் சூறையாடிய பொருள்களோடு முருகன் சிலையையும் கப்பலில் ஏற்றி காலியில் இருந்து புறப்பட எத்தனித்த வேளை, வேலன் ஆணையாலே வாயு பகவான் சூறாவளியாகச் சுழன்றடிக்கக் கப்பல் கடல் நீருள் அப்படியே மூழ்கியது.

கடல் நீருள் ஐந்து நூற்றாண்டுகளுக்குக்கிட்ட ஜலவாசம் செய்த எம்பெருமான் காலிச் சிவன் கோயிலிலே விரிவான பணி செய்யப்படும் இந் நாளிலே வந்ததும் அதுவும் சிவனுக்கு உரிய திருவாதிரைப் பெருநாளில் வந்ததையும் சிந்தித்தால் இக்கோயிலிலேதான் கந்தன் எழுந்தருள வேண்டும் என்பது தெளிவாகிறது.

சுழியோடுகள் மேல் கொணர்ந்த கந்தப் பெருமான் சிலையை, வெள்ளையன் ஒருவனுக்கு விலை பேசிய வேளை தரகர் இருவருக்கிடையே ஏற்பட்ட தர்க்கத்தால் விவகாரம் பொலிஸாரிடம் போயிருக்கிறது.

ஆக, ஐந்து நூற்றாண்டுகளுள் இரண்டு தரம் சிலையைக் கொண்டு போக அந்நியர் எத்தனித்த பிரயத்தனம் பலிக்கவில்லை. இந்த நிமித்தமும் முருகனது சிலை காலியிலேயே இருக்க வேண்டும் என்கின்ற தெய்வ சங்கல்பத்தை உணர்த்துகிறது அல்லவா.

கோயில்களிலே வழிபடப் பெற்ற தெய்வச் சிலைகள் கோயில்களிலே தான் இருக்க வேண்டும்.

எத்தனையோ எம் கோயில்களை இடித்து எடுத்த கருங்கற்களினால் கோட்டைகளைக் கட்டி அந்த அரண்களுக்குள் இருந்தே எம் நாட்டை ஆண்டவர்கள் அந்நியர்கள், போர்த்துக்கீஸியரும் பறங்கியரும் ஆலய இடிப்பு, கட்டாய மத மாற்ற ஆட்டூழியங்களைச் செய்து வரும் போது எம் முன்னோர்கள் தம்மால் முடிந்த அளவில் தெய்வச் சிலைகளை பக்கத்துக் குளத்திலும் கிணற்றிலும் மண்ணிலும் புதைத்த கதைகள் ஏராளம் உண்டே. அதே அந்நியர் புதையுண்ட புராதனப் பொருள் எல்லாம் அரசுக்கே சொந்தம் என்ற சட்டத்தையும் இயற்றினார்கள்.

ஆயினும் ஆக்கிரமிப்பாளரின் ஆதிக்கங்கள் தளர்கின்ற பிற்கால வேளைகளில் ஆங்காங்கே கோயில்களை இயலுமான முறையில் எழுப்பி புதைத்தும் மறைத்தும் இருந்த சிலைகளில் கிடைத்தவற்றை எடுத்துப் பிரதிஷ்டை செய்ததும் வரலாறு அல்லவா.

கோயில்களிலே வழிபடப் பெற்ற தெய்வத் திருமேனிகளைக் கோயில்களிலேயே பிரதிஷ்டை செய்து மீண்டும் வழிபாட்டுக்கு உரியதாக்க வேண்டியது எம் தலையாய கடனும் கடமையும் அன்றோ. இதை விடுத்து விட்டு காலியில் கிடைத்த கந்தப் பெருமான் சிலையை, கடலில் கிடைத்த புராதனப் பொருள் என்பதனால் அது அரசுக்கே சொந்தம் என்று சட்டத்தையும் காட்டி பழம்பொருள் நூதன சாலையில் இரும்புக் கூண்டுகளுக்குள்ளே சிறைப்படுத்த வேண்டுமா.

சரித்திரத் தொன்மையோ நாகரிகமோ குறைந்த பறங்கியருக்குத் தாம் பிற நாடுகளில் சூறையாடிய பொருட்களைத் தம் நாட்டில் பாதுகாக்க பழம்பொருள் நூதன சாலைகள் தேவையாய் இருந்திருக்கலாம். ஆனால் எமது நாட்டில் எமது ஆலயங்கள் மியூஸியத்தை விட மிகப் பழைமையானவை. ஆலயங்கள் இருக்கும் போது ஏன் தெய்வச் சிலைகளை மியூஸியத்தில் வைக்க வேண்டும்.

கலாசார அலுவல்களுக்கென்றே ஒரு அமைச்சு உள்ள நாடு இது. இந்து கலாசாரத்துக்கென அமைச்சு அமைத்த அரசு ஆண்டவனுக்குத் தர வேண்டிய ஆசார மரியாதைகளை விடுத்து ஆண்டவனையே சிறைப்படுத்துவதா. தேவரைச் சிறைமீட்ட செல்வக்குமரனைச் சிறை எடுப்பதா. ஏது நிகழுமோ என்ன ஆகுமோ.

அந்நியர் ஏற்படுத்திய சட்டங்களைத் திருத்துங்கள். மனந்திருந்திய அரசு செல்வக்குமரனை அம்மை அப்பன் ஆலயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற கதிர்வேல் நிலைகொண்ட கோயிலில் மகா கும்பாபிஷேக கிரியைகளை ஆரம்பிக்கும் புனித வேளையில் பணிவான வேண்டுகோள் விடுக்கிறேன்.

நங்கடம்பனை விடுவித்தால் நாடும் நாடாள்வோரும் நல்ல சுபிட்சமாய் வாழலாம்.

மண்டலம் ஆள் மன்னவா

மேலும் காலம் தாழ்த்தாது ஓர் மண்டல காலத்துள் கந்தப் பெருமான் திருமேனியைத் தந்து மாபெரும் விழா விடுத்து பிரதிஷ்டை செய்து வழிபட வழிவிடுங்கள்

கால தேவன் கருணை கிட்ட வேண்டுமாயின் காலம் கழிக்காது கந்தனை எழுந்தருள வையுங்கள். தங்கள் கால்களில் கரம் தொட்டுக் கேட்கின்றேன்.

இங்ஙனம்
**தி. செந்தில்வேள்**
பிரதம அறங்காவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுரம் கதிரேசன் கோவில்

## ஆதிக் கதிரேசன் ஆலயம்

தமிழர், சிங்களவர் ஆகியோர்களின் தலைநகரமாக மிளிர்ந்த அனுராதபுரம், சோழரின் 2ம் படையெடுப்பின் பின்னர் ஓர் பாழடைந்த நகரமாக காடுகளாலும் கொடிய வன மிருகங்களாலும் சூழப்பட்டு இருந்தது. இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதும் திரும்பவும் நகரமாக்கப்பட்டது, இந்நாளில் "சேர் கென்றிவார்ட்" என்பவரின் ஆட்சிக்குட்பட்டதும் விவசாயிகளுக்கு நற்பலன் ஏற்பட்டு குடியிருப்புக்கள் ஏற்பட்டன. 19 ம் நூற்றாண்டின் இறுதியில் ஏராளமான தமிழ் மக்கள் வசித்துவரலாயினர். ஒரு கதிரேசன் ஆலயம் அவர்களின் வழிபாட்டுக்கெனத் தோன்றியது. இதன் பூர்விக வரலாற்றைக் கூறப்புகின் பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர்.

முருக பக்தராய தென்னிந்தியத் துறவி ஒருவர் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மேல்நிலை அடைந்த அநுராதபுரத்தை அடைந்து தற்போது பழைய நகராகத் திகழும் புனித அநுராதபுரத்தின் உம்மா பள்ளிவாசலுக்கு அண்மையில் ஒரு சிறு கொட்டில் அமைத்து வேலையும், சுப்பிரமணிய யந்திரத்தையும் வைத்து பூசித்தார். தான் செல்லுமிடமெல்லாம் கொண்டு செல்லும் வேலையும் இயந்திரத்தகட்டையும் எடுக்க முனைந்த போது வேல்பகவான் சொப்பனத்தில் தோன்றி எடுக்கவிடாது செய்தமையால் அதை எடுக்காது விட்டுச் சென்று விட்டார். பின் அந்நகரப் பெருமக்கள் வழிபட்டுவரலாயினர்.

இதன் பின்னர் சுற்றாடலும் சூழ்நிலையும் சரியின்மையால் அந்நாளில் வாழ்ந்த சைவச்சீலர்கள் ஒன்று சேர்ந்து, இருந்த இடத்தில் இருந்து சிறிது தூரத்திற்கப்பால் தற்போது பழைய நகராகவிருக்கும் அநுராதபுரத்திலுள்ள ஸ்நானகுளத்துக்கண்மையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதுவே ஆதிக் கதிரேசன் ஆலயமாகும்.

## மாவடி முருகன்

பின்னரும் இடவசதியின்மையால் சைவச் சீலர்களான எஸ். சரவணமுத்து துன்னாலைச் செல்லையா, ச. சிற்றம்பலம் தி. முருகேசம்பிள்ளை, சி. ந. சிற்றம்பலம், வழக்கறிஞர் ராமசாமி, வழக்கறிஞர் சிவக்கொழுந்து போன்ற பெரியார்களும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து பழையபடி அநுராதபுரத்திலுள்ள மாவடி என்னும் இடத்தில் சுமார் இரு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியொன்றைத் தரும சாதனமாகப் பெற்று 1927ம் ஆண்டு திருப்பணி வேலையை ஆரம்பித்து 1930 ம் ஆண்டு திருப்பணியை முடித்தனர். பின்னர் கடந்த பிரமோதூத வருடம் வைகாசிமாதம் அச்சுவினி நட்சத்திரத்தில் ஆகம முறைப்படி மகாகும்பாபிஷேகத்தைச் செய்தனர். 1955ம் ஆண்டு யந்திரங்கள் களவாடப்பட்டமையால் அம்மூர்த்தியை மறுபடியும் அங்கேயே கும்பாபிஷேகம் செய்தனர்.

## புதிய கதிரேசன் கோவில்

1942 ம் ஆண்டு அநுராதபுரத்தை புனித நகராக்க வேண்டும் என்று பௌத்தர்கள் கிளர்ச்சி செய்தமையால் 1961 ம் ஆண்டு அரசாங்கம் இதற்கென ஓர் பாதுகாப்புச் சபை நிறுவியது. இதன் விளைவாகப் பௌத்த கோவில் அல்லாத ஏனைய கோவில்கள் இங்கு இருக்கப்படாது என்று சட்டம் வந்தது. ஆகவே 1962 ஆம் ஆண்டு 31 ந் திகதிக்கு முன் இக்கோவில் அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக புதிய நகரில் ஜெயந்தி மாவத்த வீதி சந்திக்கும் இடத்தில் நான்கு ஏக்கர் நிலத்தில் புதிய அத்திபாரக்கல் சேர். கந்தையா வைத்தியநாதன், திரு. எஸ். மணி ஆகியோரால் 1962ம் ஆண்டு ஜுலை மாதம் 4ந் திகதி நண்பகல் சுபவேளையில் நாட்டப்பட்டது.

இவ்வாலயத்துக்கு திருவாளர்கள் நடராசா (தலைவர்) சி.கந்தசாமி (செயலாளர்) சதாசிவம்பிள்ளை (பொருளாளர்), சிவராமலிங்கம், கந்தசாமிசுப்பையா, நல்லைநாதன், பரஞ்சோதி, சேனாதிராசா ஆகியோர் அங்கத்தவராகப் பணியாற்றுகின்றனர். புதிய கதிரேசன் திருப்பணிக்கு திரு. நடராசாவைத் தலைவராகக் கொண்ட 7பேர் அடங்கிய கமிட்டியிடம் பொறுப்பு விடப்பட்டுள்ளது.

அரசாங்கம் கோவிலுக்கென 105,000 ரூபாவைக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு 73,000 ரூபாயைக் கொடுத்துதவியது. மீதிப்பணம் வருட இறுதியில் தருவதாக ஒப்புக்கொண்டது. தற்போது இக்கோவில் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

முன்னோரால் பூசிக்கப்பட்ட கதிரேசனையும் இயந்திரத் தகடுகளையும் பரிவார மூர்த்திகளையும் தற்காலிகமாக முன்னரேயே புதிய கதிரேசன் கோவில் மகா மண்டபத்தில் பால ஸ்தாபனம் செய்யப்பட்டு இருக்கின்றது.

வேதசிவாகம விதிப்படி திரு.தங்கவேலு ஆசாரியால் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வள்ளி தெய்வநாயகி சமேத முத்துக்குமாரசாமியை மூலஸ்தானத்திலும், பரிவார மூர்த்திகளாய விநாயகர், நடராஜர், வைரவர் நவக்கிரகம் முதலிய மூர்த்திகளை அவரவர்களுக்கென அமைக்கப்பட்ட ஆலயத்திலும் பிரதிஷ்டை செய்து குரோதி வருடம் ஆனி மாதம் 25ம் திகதி (9.9.1964) புதன்கிழமை காலை 6 மணி 34 நிமிடம், தொடக்கமுள்ள கன்னி லக்கின சுபவேளையில் கலியுகவரதன் திருவருள் முன்னிற்க குடமுழுக்கு நடந்தேறியது. இக்கும்பாபிஷேகத்தை அச்சுவேலி சிவ. ஸ்ரீச. குமாரசுவாமிக் குருக்கள் நடாத்தி வைத்தார்கள்.

நன்றி: *கோவில் மகாகும்பாபிஷேக மலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு - கொம்பனித் தெரு



# அருள் மிகு சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில்

– க. பாலசுப்பிரமணியம்,

செயலாளர், கொழும்பு – கொம்பனித்தெரு அருள் மிகு சிவசுப்பிரமணியசுவாமி கோவில் அறங்காவலர் சபை; கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம்; மாமன்ற உறுப்பாண்மை ஊக்குவிப்புக் குழு.

கலியுக வரதனான கந்தக் கடவுள் உறையும் ஆலயங்கள் ஈழத்திரு நாட்டின் ஒவ்வோர் பகுதியிலும் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் வகையில் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகின்றன. கொழும்பு மாநகரின் மத்தியில் பல்வேறு மத வழிபாட்டு ஸ்தலங்களை தன்னகத்தே கொண்டு மிளிரும் கொம்பனித் தெருவில், தன்னை அண்டினோர்க்கும் அல்லவருக்கும் ஸ்ரீ வள்ளி தேவசேன சமேதராய் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சிவசுப்பிரமணியப் பெருமானது ஆலய வரலாற்றினை அடியார்கள்முன் சமர்ப்பணம் செய்வதில் மனமகிழ்வடைகிறோம்.

பழமையும் புதுமையும் பொலிவுற்றுத் திகழும் கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானது இவ் ஆலயம் நீண்ட வரலாற்றை கொண்டதாகும். புறக்கோட்டை டாம் வீதியில் திரு. பெரியதம்பி என்னும் சைவப் பெரியாரின் காணியின் மத்தியில் சிறிய அளவிலான மூர்த்தி ஒன்று அக்காலத்தில் வணக்கம் செலுத்தப்பட்டு வந்தது. இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் தலைநகருக்கு வரும் இந்துக்கள் அனைவரும் வணங்கும் ஒரு யாத்திரீக ஸ்தலமாக இக்கோவில் விளங்கியது.

1832 ம் ஆண்டளவில் ஸ்ரீ வள்ளி தேவசேன சமேத சுப்பிரமணியப் பெருமானின் திருவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீறணஜி மஹாராஜி என்ற பெரியார் பூசகராகவும் ஸ்ரீ மாணிக்க பண்டாரம் உதவியாளராகவும் இவ்வாலயத்தில் பணிபுரிந்தனர். அக்கால கட்டத்தில், போயர் யுத்தமுனைக்குச் சென்ற இந்திய படைவீரர்களும் தளபதிகளும் இவ் ஆலயத்தை வணங்கி இந்தியா சென்றார்களாம்.

நாளடைவில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தமையினால் டாம் வீதியிலிருந்த இவ் ஆலயம் வேறோர் இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்றைய ஆட்சியாளருக்கும் இந்த இடம் தேவைப்பட்டதன் காரணமாக சைவ தொண்டில் சிறப்புற்று விளங்கிய பெரியார் சேர் பொன்னம்பலம் அவர்களிடம் அரசாங்கம் பொருத்தமான இடத்தில் இவ் ஆலயத்தினை அமைக்கும்படி பணித்தது. 1887ம் ஆண்டில் திரு. அருணாசலம் பொன்னம்பலம் முதலியார் அவர்கள் இவ் ஆலயத்தினை கொம்பனித்தெரு கியூ றோட்டிலுள்ள வளவினுள் கட்டுவித்தார்கள்.

1902ம் ஆண்டில் இவ் ஆலயம் சைவப் பெருந்தகை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் பெரிப்பிக்கப்பட்டு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் ஆலயம் என்னும் திருநாமம் சூட்டப்பட்டது. அத்துடன் இவ் ஆலய நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது. ஸ்ரீ இராமநாதன் அவர்களுக்குப் பின்னர் அவருடைய புத்திரர் திரு. இ. இராஜேந்திரா அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்று பணியாற்றினார். 1942 ம் ஆண்டில் அத்தியார் திரு. அருணாசலம் அவர்கள் தலைமையில் ஒரு குழு ஆலயத்தை நிர்வகித்து வந்தது. இதன் பின்னர் இவ் ஆலய நிர்வாகப் பொறுப்பனைத்தும் ஓர் அறங்காவலர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவ் அறங்காவலர் சபையின் தலைவராக சைவப் பெரியார் திரு. M. S. திருவிளங்கம் விளங்கினார்கள்.

இக்கால எல்லையுள் எதுவித திருத்தங்களுமின்றி பழுதடைந்திருந்த இவ் ஆலயத்தை புனர் நிர்மாணம் செய்யும் பொறுப்பை சைவப் பெரியாரும் வர்த்தகருமான திரு. V.N. கனகசபை அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு தர்மகர்த்தா சபை 1970 ம் ஆண்டளவில் பொறுப்பேற்றது. இத் தர்மகர்த்தா சபையின் செயலாளராக கடமையாற்றிய திரு. க. தியாகராஜா அவர்களின் பெரு முயற்சியால் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடம் சந்திர சேகரேந்திர சரஸ்வதி அவர்களுடைய நல்லாசியுடனும் திருப்பனந்தாள் மடம் காசிவாசி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமி அவர்களின் ஆலோசனைப்படியும் மற்றுமுள்ள பெரியோர்களினது ஒத்துழைப்புடனும் பிரதிஷ்டா பூஷணம் சிவ ஸ்ரீ நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் 1975ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி புனராவர்த்தன அனாவரித்தன மகா கும்பாபிஷேகம் நடத்திவைக்கப்பட்டது.

1980ம் ஆண்டு துர்அதிஷ்டவசமாக ஷ அறங்காவலர் சபை மீது வழிபடுவோர்க்கு ஏற்பட்ட அதிருப்தி காரணமாக எழுந்த பிணக்கினால் அரசினர் இவ் ஆலயப் பொறுப்பை ஏற்று சைவப் பெரியாரும் – சிரேஷ்ட இறைவரி மதிப்பாளருமான திரு. வே. சண்முகம் அவர்களை இவ்வாலய அரச நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமனம் செய்து திரு. வே. சண்முகம் அவர்கள் பணியாற்றிய காலத்தில் இவ் ஆலயத்தின் வைப்பு பணமாக ஒரு லட்சத்திற்கு மேலான பணத்தை வங்கியில் சேகரித்து வைத்ததோடன்று ஆலய நிர்வாகப் பொறுப்பினையும் தனி ஒருவராக நின்று திறம்பட நடத்தினார்.

1984 ம் ஆண்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அளித்த உத்தரவை ஏற்று இளைப்பாறிய உயர் நீதிமன்ற அரசர் திரு. ப. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஆலய சட்ட திட்டங்களுக்கமைய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

1984 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ம் தேதி நடைபெற்ற ஷ விசேட கூட்டத்தில் தங்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பாத்திரமான இன்றைய அறங்காவலர் சபையினர் இவ் ஆலயத்தைப் பொறுப்பேற்று இப்புனிதப் பணியில் தொடர்ந்து செயற்பட ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

இன்றைய தர்மகர்த்தா சபையின் காலத்தில் பல்லோராலும் பாராட்டத்தக்க பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு ஆலய நித்திய பூசைகள் மற்றும் யாவனவும் எல்லோராலும் மெச்சத்தக்க விதத்தில் நடைபெறுகிறது. சிறப்பாக வானளாவிய 82 அடி உயரம் கொண்ட அழகுறு இராஜகோபுரமும் 51 அடி உயரம் கொண்ட இருமருங்கு மணிக்கோபுரங்களும் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் அமையப்பெற்றது முருகப் பெருமானின் திருவருளாலும் தர்ம கர்த்தா சபையினரதும் இராஜகோபுர திருப்பணிச்சபையினரதும் பெரும் உழைப்பாலும் அன்புப் பெருமக்களின் பேராதரவுடனுமே இப்பணி சிறந்தோங்கியது சாலக் குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# இலங்கையின் இந்துப் பெரியார்கள்


1. நாவலர் நான்மணிமாலை
2. நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வுமுறை
3. வித்தகராம் விபுலானந்தர்
4. சுவாமி விபுலானந்தர்
5. Siva Yogaswami
6. நான் கண்ட யோக சுவாமி
7. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்
8. ஞானப் பிரகாச முனிவர்
9. சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன்
10. ஈழ நாட்டில் சித்தர் மரபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நான்மணி மாலை

பிள்ளைக்கவி. வ.சிவராஜசிங்கம்

## காப்பு

ஆரணத்தின் வித்தா யமைகுடிலை யின்சொருப
வாரணத்தின் சோதிமுக வள்ளலே - ஏரணங்கூர்
நல்லை நகர்நா வலன்நான் மணிமாலை
சொல்ல வருவாய் துணை

## நூல்
## நேரிசை வெண்பா

கிள்ளை தமிழ்பேசக் கேட்டுருகி நாகணவாய்ப்
பிள்ளை பெயர்த்துரைக்கும் பேரூராம் நல்லையிலே
வந்து தமிழ்வளர்க்க வாய்த்தகும்ப மாமுனிபோல்
எந்தை அவதரித்தாரே.

## கட்டளைக் கலித்துறை

ஏவல்செய் பாங்கினில் சொற்கூட்டம் நாவெதிர் போற்றிநிற்ப
பாவலர் மெச்சப் பிரசங்க மாரி பொழிந்துதமிழ்க்
காவல னாய்த்திகழ் ஆறுமுகற்குக் கற்றோரளித்த
நாவலன் பேர்யோக ரூடியதாகவும் நண்ணியதே

## விருத்தம்

நண்ணற் கரிய பகைவர்களும் நாணம்விட்டு நாடுவரால்
கண்ணிற் கினிய முகப்பொலிவும் காதுக்கினிய சொல்லடைவும்
எண்ண இனிக்கும் கருத்தழகும் இசைக்கும் இனிய குரல்கனிவும்
பண்ணிற் பொலிநா வலர்தமிழில் பயிலும்நெஞ்சம் கண்டயர்ந்தே.

## நேரிசை ஆசிரியப்பா

தேன்மலி கொன்றைச் சிவன்பத மகலா
உளத்தினர் தமிழ்மேல் உற்றிடு காதலால்
மான்விழி மாதரைக் கருதா மாணியாய்
ஊனுடல் ஒண்பொருள் உயிரிம் மூன்றும்
தண்ணார் தமிழுடன் சைவமும் வளர்த்தற் (கு)
ஆக்கி அருளைத் தேக்கி நெஞ்சில்
தன்னலன் நோக்காது மன்பதை நலமே
கருத்திற் கொண்டு காலம் முழுவதும்
சேவைசெய் நாவலன் சீரை
ஓவற நினைக்கின் உணர்வுறும் உயர்வே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா

உயர்வுவெள்ளைத் தோலுக்கென் றுற்றவெண்ணத் தாலந்
நியரிங்கு செய்தபெரு நீசச் - செயல்கண்டு
பொங்கி எழுத்தென்னும் போர்தொடுத் தன்னார் வலிமை
மங்கச் செய் தாய் நாவலோய்

## கட்டளைக் கலித்துறை

வலங்கொண்ட மான்மழு ஈசர்தம் பாதம் மனத்திருத்தி
புலனைந்தும் ஆகுதியாயற மாம்பொங் கெரியிலுய்த்து
நலங்கொண்ட சைவப் பெரும்போகம் நண்ணிட மக்களுக்குப்
பலங்கொண்ட மட்டும் தவயாகம் நாவல பண்ணினையே

## விருத்தம்

பண்ணா லுயர்ந்த தேவாரப் பதிகமுரைத்த நால்வர் முதல்
எண்ணத்தகுநூல் விற்பன்னர் ஏத்தும் பெரிய புராணத்தின்
உண்மைப் பொருளைத் தெளிவுறுத்த உரைத்த உந்தன் சூசனங்கள்
அண்ணலாறு முகநாவலவ நின் பெருமைக் கணியாமே

## நேரிசை ஆசிரியப்பா

யாமே பெருங்கவி வாணரென் றுளத்தில்
தாமே தருக்கித் திரிபவர் மயல்வெப்(பு)
அடங்கிடக் காருது அமைசூல் முகிலெனத்
தண்ணளி வாய்மலர் ஒண்முத்தமிழார்
பிரசங்க மாரி பெய்திடல் கண்டு
கார்மயி லென்னக் களிப்புறு நெஞ்சின
ராய்க்குது கலித்துள் ளகங்குழைந் துன்சீர்
வாய்த்திடு சிவநெறி ஒழுக்கினில் வாஞ்சை
உடையராகி யுலகிலெப் பொருளும்
வேண்டேம் விண்பதம் வேண்டேம் நின்பத த்(து)
அருகிருந் தருந்தமிழ் ஆகமச் சிவநூல்
திரிபைய மின்றித் தேர்ந்திட வருளென
வேண்டிய மாணவர் மெய்யுணர் வகையில்
சீலம் நோன்பு செறிவே யறிவெனும்
நால்நெறி நான்முனி வரர்க்குமுன் உணர்த்திய
ஆலமர் செல்வன் போன்று
பாடம் பயிற்றுநின் அருள்பழிச் சுதுமே.

## நேரிசை வெண்பா

மேவுபுகழ் வெண்ணீறு வேற்றார் வருகையினால்
நோவுறுதல் கண்டு நுவல்தருக்க- ஏவுகணை
கொண்டு பர சமயக் கொள்கைசரித் துச்சைவம்
உண்டெனமேல் வைத்தாய் உவந்து

## கட்டளைக் கலித்துறை

உவப்புற்றுக் கேட்போர் மயிலாகி ஆட உளவயலில்
சிவப்பற் றெனும்விளை வுண்டாக அன்பு திரண்டபெருந்
தவக்கீகருக் கொண்டுமெய்ஞ் ஞானமின் வீசிப்ர சங்கமெனும்
நவமழை பெய்தமிழ்ச் சொற்கொண்ட லாயினர் நாவலரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

நாவுக்கினிய வார்த்தையினால் நாகரீகப் போர்வையினால்
மேவுமுத் யோக வலைவிரிப்பால் வேற்றுமதத்தி னில்மக்கள்
தாவல்தடுத்துச் சைவமதச் சால்பு நலியா வகையாகக்
காவல்புரிந்த திறத்தாலே காவலரானார் நாவலரே

## நேரிசை ஆசிரியப்பா

நாவலந் தீவினில் நாடக ராசன்
மேவு சிதம்பரம் விளங்கிடப் பாட
சாலையும் அழுத்தக வேலையுந் தொடங்கி
பாலபாடம்முதல் பைந்தமிழ்த் தொண்டர்
புராண வசனம் புட்பவிதியே
இலக்கணச் சுருக்கம் இலக்கண வினாவிடை
சிவாலய தரிசன விதியென் றின்ன
பலநூல் தாமே படைத்தும் முன்னையோர்
எழுதிய இலக்கணக் கொத்து இலக்கணச்
சூறாவளிதொல் காப்பியஞ் சேனா
வரையம் நன்னூல் காண்டிகை விருத்தி
இவை முத லான எண்ணறு நூல்கள்
தமைப்பதிப் பித்தும் சைவத்தமிழுல (கு)
உய்தி பெறுதற் கோயாதுழைத்த
ஐயநின் கீர்த்தி அடியேம்
தம்மால் தகைபெறச் சாற்றுதல் எளிதோ.

## நேரிசை வெண்பா

தோலாத நாவெண் சுடர்பூதி அக்குமணி
நாலுபுயஞ் சைவம் தமிழ்நாட்டம் -கோலவுமை
கூறர் அடிபயிலும் நெஞ்சங்கொள் பேருருவே
ஆறு முக நா வலர்

## கட்டளைக் கலித்துறை

பொலங் குன்ற வில்லி நெறிதமிழ் மீது பொருந்தன்பினால்
வலங் கொண்ட வில்வாள் மருவு புருவ விழிமடவார்
நலங்கொள்ளு மில்லற வாழ்வை யிகந்துமெய் ஞானம்நண்ணிக்
கலந்த விதயத் தொடுநா வலர்தவம் கண்ணினரே

## விருத்தம்

கண்ணுக் கணிகண் ணோட்டமெனுக் கருத்துக் கனிந்த உளத்தினராய்
மண்ணில் மாந்தர் கொடுமிடியால் வாட்டமுறல் கண்டதுபோக்க
எண்ணித் தரும நெஞ்சினர்த மிடத்தில் இரந்து பிடியரிசி
கொண்டு கஞ்சித் தொட்டியறம் புரிந்து பசிநோய் குறைத்தனரால்

## நேரிசை ஆசிரியப்பா

ஆலமுண் டமுதம் பொழிதரு தடங்கண்
கோலக் குறமகள் குமர நாயகர்
மகத்துவங் கூறும் மதுரித் தெழுந்த
செந்தமி ழமுதக் கந்தபு ராணமாம்
தொழுதகு நூலினைப் பழுதற அச்சில்
ஏற்றியும் கத்திய ரூபத்தியற்றியும்
ஆற்றிய அரும்பணி அகத்துக் கொண்டுனைப்
போற்றுதும் போற்றுதும் நெடிதுபோற்றுதும்
கூற்றனும் குறுக அஞ்சும்
நற்றமிழ் வல்ல நாவலோயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை


குமாரசாமி சோமசுந்தரம்.
ஆலோசகர், தேசிய கல்வி நிறுவனம்.


சமயம் என்பது ஒருபாதை – ஒரு போதை – ஒரு போர்வை. அவரவர் பார்வையைப் பொறுத்து, சமயத்திற்கு அவ்வாறு வியாக்கியானம் தரப்படுகிறது. சமயத்தின் வரலாற்றைக் கூர்ந்து கவனிப்பின் இம் மூன்று விதங்களிலும் சமயம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை தெரிய வரும். சமயத்தைப் போதைக்குரியதொன்றாக்கி, மாந்தி, மதவெறி பிடித்து மயங்கினவர்கள் சிலர். சமயத்தைப் போர்வையாக்கி, அதனுள் மறைந்து நின்று கொண்டு, சமுதாயத்திற்கு அல்லவை புரிந்தோர் பலர். சமயம் ஒரு பாதை, ஒரு வாழ்க்கை நெறி. வையத்துள் வாழ்வாங்கு வாழ அது வழி காட்டுகின்றது என்ற உணர்வில்லாமல், சமயத்தைச் சம்பிரதாயமாக்கி வாழ்ந்தோர் மிகப்பலர். பத்தொன்பதாம் நூற்றாண்டில், இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவத் தமிழ் மக்களைப் பெரும்பாலும் மேற்கூறிய ஏதாவது ஒரு வகையினுள் அடக்கி விடலாம். நாவலர் தோன்றி வாழ்ந்து பணியாற்றிய காலமாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டு அத்தகைய சமயப் பின்னணியையும், சூழலையும் கொண்டிருந்தது.

நமது சைவசமயம், சைவ ஆசாரம், பண்பாடு, கலாச்சாரம், சைவமரபுக் கல்வி முதலியன அக்கால கட்டத்தில் நைந்து நலிந்து நலமிழந்திருந்தமைக்கு அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் ஆதிக்கம், அவர்களின் செல்வாக்கினைப் பெற்றிருந்த பிற சமயக் குழுவினரின் பல்வேறு நடவடிக்கைகள் என்பனவற்றைப் பொதுவாகக், காரணங்களாகக் கூறுவர். அவை புறக்காரணிகள் மட்டுமே. அகக் காரணிகள் இன்றிப் புறக் காரணிகளால் மாத்திரம், பாரிய தீங்குகளை விளைவிக்க முடியாது. சைவத் தமிழ் மக்கள், சைவத்தை ஒரு போர்வையாக்கிக் கொண்டமை; சைவம் வேறு, வாழ்வு வேறு என்ற ஒரு நிலைப்பாட்டினைப் பெற்றிருந்தமை; சமயம் ஒரு சம்பிரதாயம் என்று கருதியமை; சமயத்தைப் போதை ஆக்கியமை ஆகிய அகக்காரணிகள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயம் பழுதுபட்டுத் தாழ்நிலை அடைந்தமைக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தன. நாவலர் இந்நிலைமையை நன்கு உணர்ந்து தெளிந்திருந்தார். பிழை எங்கே என்பதைக் கண்டறிந்து பரிகாரம் தேடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

நாவலர் உத்தம சைவ சமயி. தம் வாழ்க்கையை மாசுபடியாமல், குற்றம் தீண்டாமல், கண்ணுங் கருத்துமாயிருந்து, காலந்தோறும் பாதுகாத்துக் கொண்டிருப்பவர்கள் உத்தம சமயிகள். ஏனையோரும் தத்தம் வாழ்க்கையை செம்மைப்படுத்தி, நல்ல வண்ணம் வாழ்வதற்குச் சமயநெறி காட்டி, வழிப்படுத்துபவர்கள் அவர்கள். சைவநெறி நீதியை ஆதாரமாகக் கொண்டுள்ளது. "மேன்மை கொள் சைவநீதி" என்று போற்றப்படுகிறது. நாவலர் சைவநீதியை உபாசித்தவர்; சாதனை செய்தவர்; நீதிக்குத் தம்மை அர்ப்பணித்தவர். நாவலர் பெருமான் காட்டும் சைவசமய வாழ்வு முறை, நீதியின் பாற்பட்டது ஆகும்.

சமயம், மனிதர்கள் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கு வழிகாட்டுகின்றது.

*"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது.*
*நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"*

இது நாவலர் வாக்கியம்.

மனிதப் பிறவியெடுத்ததன் பயனை எய்துதற்குச் சமயம் நெறிப்படுத்துகிறது. சமய வாழ்வின் ஓர் இன்றியமையாத அம்சம் இதுவாகும். அது மட்டும் தான் சமயத்தின் பணி. அன்று, சமயம், மனிதர்களைச், சிறந்த மனிதர்களாக்குகின்றது; படிப்படியாகத் தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்கின்றது. சமய ஒழுக்கங்களை, விழுமியங்களை, பண்புகளை மனிதர்கள் அறிந்து, அவற்றை வாழ்வில் கடைப்பிடித்தல் சமய வாழ்வின் மற்றொரு பிரதான அம்சமாகும். அதுவே சமயத்தின் உயிர் நாடியுமாகும்.

சைவசமய வாழ்வு முறையினைத் தந்த நாவலர், அத்தகைய ஒரு வாழ்வில், ஆன்மிகமும் உலகியலும் இணைய வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆன்மிகம் கலக்காத உலகியல் பயனற்றது மட்டுமன்று, ஆபத்தானதும் கூட என்னும் நிலைப்பாடு அவருடையது.



சைவ சமயத்தைப் போர்வையாகக் கொண்டு, அதனுள் மறைந்திருந்து கொண்டு, சமுதாயத் தீங்குகளை விளைவித்தவர்களுக் கெதிராகவே நாவலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்டன. பிரபுக்கள், கோயில் எசமானர்கள், மற்றும் சமூகத்தின் பெரும்புள்ளிகள் பலரும் அவர்களுள் அடங்குவர். அவ் வேடதாரிகளின் போலி வாழ்க்கையினாலேயே சைவம் பிறசமயத்தவரின் ஏளனத்திற்கு இலக்காயிற்று என்பர்.

சமயமானது மனிதனின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்று நாவலர் கொண்டார். வாழ்க்கைத் தரம் என்றதும் பொருளாதார அடிப்படையில் சிந்திப்பது இயல்பு. உண்மையான வாழ்க்கைத் தரம் பண்புசார் ரீதியாக வளர்ச்சி பெறவேண்டும். ஒழுக்கம், அறிவு, ஆன்மிகம், பண்பாடு, விழுமியம் ஆகியவற்றை உள்ளடக்கிய அகவளர்ச்சி ஏற்படும் போதுதான், மனித வாழ்க்கைத்தரம் உயர்வு பெறுகின்றது. சமய வாழ்வு முறை ஒன்றினை அனுசரித்து வாழும் போதே இத்தகைய வாழ்க்கைத் தர உயர்வினை அடைய முடிகிறது. இந்த வகையில் நாவலர் பெருமான் காட்டிய சமய வாழ்வு முறை, வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதாக அமைகின்றது.

சைவசமய வாழ்வு முறையில், முதலில் கடவுளில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பது நாவலரின் உறுதியான நிலைப்பாடு ஆகும். " இந்தச் சரீரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும்" என்கிறார் நாவலர்.

கடவுளால் அருளிச் செய்யப்பட்ட வேதம், ஆகமம் என்னும் முதனூல்களில் விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்கள்; விலக்கப்பட்டவையெல்லாம் பாவங்கள். புண்ணியங்கள் நன்மை பயப்பன; பாவங்கள் தீமை விளைவிப்பன. சமய வாழ்வு முறையில், புண்ணியங்கள் செய்வதற்கு மட்டுமே இடம் உண்டு; பாவங்கள் விலக்கப்பட வேண்டியன.

" கடவுளால் விரும்பப்படுபவைகளாவன: இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாகும். "கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன: கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்." நாவலர் பெருமான், நான்காம் பாலபாடத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

கடவுள் நம்பிக்கை கொண்ட நாம், கடவுளுக்கு எவை விருப்பமோ, அவற்றை நம் வாழ்வில் மேற்கொள்ள வேண்டும். கடவுள் வெறுப்பவற்றை நாம் தள்ளிவைக்க வேண்டும். அப்போதுதான் நம் வாழ்வு சமய வாழ்வாக அமையும் என்பது நாவலர் கருத்து.

சமய வாழ்வு முறையில், கடவுள் வழிபாடு முதன்மை பெறுகின்றது என்று கூறும் நாவலர் பெருமான், அது எவ்வாறு அமைய வேண்டுமென்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்;

" கடவுளுக்குச் செய்யும் வழிபாடுகளாவன: அவரை மனதாலே தியானித்தலும்; வாக்கினாலே துதித்தலும்; கைகளினாலே பூசித்தலும்; கால்களினாலே வலம் வருதலும்; தலையினாலே வணங்குதலும்; செவிகளினாலே அவருடைய புகழைக் கேட்டலும்; கண்களினாலே அவருடைய திருமேனியைத் தரிசித்தலுமாம்". இத்தகைய வழிபாட்டு முறை, மனிதர்கள் ஒவ்வொருவராலும் கடைப்பிடிக்கக் கூடியதே. பணமோ, பொருளோ இல்லையே, அதனால் கடவுள் வழிபாடு செய்ய முடிய வில்லையே என்று எவரும் அங்கலாய்க்கத் தேவையில்லை.

நாவலர் காட்டிய சைவசமய வாழ்வு முறை, எல்லோர்க்கும் உரியது; எல்லோராலும் மேற்கொள்ளப்படக் கூடியது என்பதிலேயே அதன் சிறப்பும் பெருமையும் உள்ளது. செய்ய இயலாதவற்றைச் சொல்வதால் பயன் ஏதும் ஏற்படாது என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

இவற்றைச் செய்யுங்கள் இவற்றைச் செய்யாதீர்கள் என்று மக்களுக்கு அறிவுறுத்தும் பாணியில் நாவலர் தாம் எழுதிய நூல்களில் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார். செய்ய வேண்டியவற்றைச் செய்வதால் ஏற்படும் நற்பயன்களையும்; செய்யத்தகாதனவற்றைச் செய்வதால் தமக்கும் பிறர்க்கும் ஏற்படும் தீங்குகளையும் தெளிவாகத் தந்துள்ளார். மக்கள் அவற்றை இனங்கண்டு செயல் இது வாய்ப்பாக உள்ளது.

கடவுளை நிந்தித்தல்; கடவுளை வழிபடும் முறைமையைப் போதிக்கும் குருவை நிந்தித்தல்; கடவுளின் மெய்யடியாரை நிந்தித்தல், வேதாகமங்களை நித்தித்தல்; இந் நிந்தனைகளைக் கேட்டல்; தேவாலயத்திற்கும் மடாலயத்திற்கும் உரிய திரவியங்களை அபகரித்தல்; தேவாலயம், திருநந்தவனம்; திருக்குளம் முதலியவற்றிற்கு அழிவு செய்தல் என்பன ஈசுரத்துரோகம் என்று நாவலர் குறிப்பிட்டுள்ளார். அவை விலக்கப்படவேண்டியவை.

சைவநெறி ஆனது அன்பு நெறி, அருள் நெறி, நீதி நெறி, ஒழுக்க நெறி, பண்பாட்டு நெறி, அறிவு நெறி, அறநெறி என்று நாவலர் கொள்வர்.

கடவுளில் உண்மை அன்பு கொண்டவர்கள், பக்தி உடையவர்கள், கடவுளின் படைப்புக்களான அனைத்துச் சீவராசிகளிலும் அன்பு, ஆர்வம், கரிசனை பூண்டு ஒழுகுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்தலோ இடையூறாக இருத்தலோ சமய வாழ்வு ஆகாது. சமய வாழ்வு ஆனது கடவுள் வழிபாட்டினை வற்புறுத்துவதோடு, அன்பும் அறனும் கொண்ட நல்லொழுக்கம் நிறைந்த சமூக வாழ்வையும் வலியுறுத்துகிறது. சமய வாழ்வு வேறு, சமூக வாழ்வு வேறு என்று கொள்ளல் ஆகாது. சமய வாழ்வையும் சமூக வாழ்வையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் பண்பினை நாவலர் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரின் சமூக வாழ்வினை அல்லல்படுத்தும் கொலை, புலாலுண்ணல், கள்ளுண்ணல், களவு, வியபிசாரம், பொய், சூது, அழுக்காறு, கோபம், செய்ந்நன்றிமறத்தல் முதலியன முற்றிலாக இடம் பெறாத வாழ்வினையே சமய வாழ்வு என நாவலர் பெருமான் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

" கொலையில்லாத ஞானமே ஞானம்; கொலையில்லாத தவமே தவம்; கொலையில்லாத தருமமே தருமம்; கொலையில்லாத செல்வமே செல்வம்", என்பது நாவலர் வாக்கு.

*"பிறவுயிரைக் கொல்லுதல் போலத் தன்னுயிரைக் கொல்லுதலும் பெருங் கொடும் பாவம்"* என்பதும் அவருடைய கருத்து

புலாலுண்ணல் சைவத்திற்கு விரோதமானது. புலாலைப் புசித்துக் கொண்டும் கொலைபுரிந்து கொண்டும் பிறரை இம்சித்தும் வாழும் வாழ்வு சமய வாழ்வு ஆகாது. இத்தகையோர் தாம் உயிர்களிடத்து அன்புடையோம், அருளுடையோம், கரிசனையுடையோம் என்பதும்; ஏன் சைவசமயிகள் என்று கூறுவதும் கூட, நடிப்பாக அமையுமே தவிர உண்மையாகாது.

" கள்ளு, அபின் கஞ்சா முதலியவை அறிவை மயக்கும் பொருள்கள், அவைகளை உண்பவர் அறிவையும் நல்லொழுக்கத்தையும் இழந்து தீயொழுக்கத்தையே அடைவர்."

" களவாவது பிறருடைமையாய் இருக்கும் பொருளை அவரிடமிருந்து வஞ்சித்துக் கொள்ளுதல்."

" வியபிசாரமாவது காமமயக்கத்தினாலே தன் மனையாளல்லாத மற்றைய பெண்களை விரும்புதல்"

" பொய்யாவது உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் சொல்லல்".

மேற்கூறியவை நாவலர் பெருமானின் கருத்துக்கள் அவை மானுடம் தழுவியவை.

பெரியோரைப் பேணல்; தான தருமங்கள் செய்தல்; நலிந்தோரை ஓம்புதல்; வித்தியாதானம் செய்தல்; தாய், தந்தை சுற்றத்தினரைப் பாதுகாத்தல் முதலிய சமூக விழுமியங்கள், சமய வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றன. இதனால் சமூகத்தின் உறுதி, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன பேணப்படுகின்றன. அமைதி, சாந்தி, நிம்மதி என்பன சமூகங்களில் நிலவ அவை துணையாகின்றன. தற்காலத்தில் சாந்தி, சமாதானம், அமைதி என்பனவற்றின் சீர்குலைவுக்கு சமூகவிழுமியங்கள் வாழ்வில் பேணப்படாமையே முக்கிய காரணமாகின்றது.

சமயம் ஒருபாதை என்ற வகையில் நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை, நடைமுறைக்கேற்றதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது. மனிதர்கள் வாழ்வில் சகல நலன்களையும் அடையவேண்டும் என்னும் விழுமிய குறிக்கோள் எய்தப்படுவதற்கு, நாவலர் பெருமான் காட்டிய சைவ சமய வாழ்வு முறை பெரிதும் உதவும் என்பது உறுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விபுலானந்தர்

*- சிவநெறிச்செல்வர், சைவநன்மணி, ஞானவாரிதி*
*இரா. மயில்வாகனம்*

**கடவுள் வணக்கம்**

சமயங்கள் பலவகையாய்ப் பகர்ந்தாலும் சைவமே
சமயமாம் சாஸ்திரத்தை சாதித்தார் – இமயமாம்
மலைவரைநீ ளும்விபுலா நந்தர்புகழ் சாற்றுதற்கு
மலைமகளின் மணமகனே காப்பு.

வல்லதமிழ் மாறன்வகுத் துவைத்த ஒண்தமிழை
சொல்லால் பொருளால் சுருதியால் – நல்லமுறை
சங்கமிக்க வேள்விபுலா நந்தர்இசை நானியம்ப
துங்கமத ஐங்கரனே காப்பு.

கதிரவன் கிரணக்கை யால்கடவுளைத் தொழுவான் மக்கள்
கதிர்வரவால் கண்விழித்து கைதொழுவார் காரைநகர் கண்ணகியை
விதிவலியார் வித்தகவிபு லாநந்தர் செய்வினையாம் சைவம்தமிழ்
கதியறியார் நினைவூட்ட கற்பகமே என்னிலையைக் காப்பாயே

கண்ணகையே கண்மணியே கற்பரசே கற்பகமே
மண்ணுலகில் வாழ்வளிக்கும் வடிவழகே வல்லரசே
விண்ணுலகும் வியப்புறுவித் தகனாம்விபு லாநந்த
அண்ணல் தம்சீருரைக் கஅம்மா அருள் தருவாய்

**அவதாரம் : -**

மட்டு நகரை மாநக ராமென
கட்டுரை என்னாது காண்போர் போற்றும்
குணகடல் வளையிய கூர்மணல் பரந்த
கணம்பல சூழ்ந்த கவின்பெறு நகரில்
வயலும் வயல்சூழ் வாழை கமுகும்
கயல்கள் பாயும் கவின்கா னாறும்
நிழல்தாழ்ந் துதவும் அரசும் ஆலும்
காழ்பெறு கரும்பும் காவியும் சூழ்ந்த
மந்தை மேய்ந்து மதியம் படரும்
மருத நிலத்தின் மத்திய இடத்தில்
மேழித் துவசமும் மேன்மைச் சைவமும்
கேழில் விழாவும் கிளர்ந்து விளங்கும்
காரால் கவின்பெறு காரை தீவில்
தகைபெறுசாமித் தம்பி என்பார்
மாண்புறு கற்பின் மடவர லாகும்
கண்ணகை அம்மன் பெயராம் கண்ணகியை
கண்டனர் கைபிடித்துப் பிறந்த சேயே
மயங்கா மதிமயில் வாகனப்பேர்
விளங்கும் விபுலா நந்தரா வாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வித்தையிற் சிறந்த வித்தகர் :-**

இரும்புநிகர் மனமதனை பொன்னாக்கி யுள்ளத்தில்
கருதியவெல் லாமளித்துக் கரைகாண விரும்பியவர்
பெருமாசா னாங்குஞ்சித் தம்பியெனும் பெருந்தகை
அருகு சார்ந்து அடிவணங்கி ஆர்வமொடு கல்விகற்றார்

இலக்கணத்தை இலங்கவைக்கும் நாடறிந்த நன்னூலும்
நிலத்தறிந்த நித்தியமாம் சூடாமணி நிகண்டும்
பலிக்குமொதி வைத்திலிங்க தேசிகர்பால் தேறியபின்
கலித்துறையாம் கல்முனையில் ஆங்கிலத்தை ஆரம்பித்தார்

மாநகராம் மட்டுநகர் மயில்வாகனர் படிப்புயர
போநகமும் மிகப்பொருளும் பொருந்திய அர்ச்மிக்கேலில்
கேட்போர்க்கு செவிதோட்கும் கேம்பிறிச்மா தேர்வினிலே
ஆட்சிபெற்று ஆசானாய் அவ்விடத்தே அமர்ந்தாரே

அந்திபடு நேரமோ அதிகாலை வேளையோ
அந்தகனாம் தர்மனுக்கு அதிசயமா மென்றிலையே
அன்னையார் ஆண்டுபல கழியஅவர் கைப்பட்டார்
அவர்கடமை ஆற்றியபின் மேற்கொண்டார் கொழும்பிருக்கை.

வளர்ந்தோர் கல்விவாழ் வளித்து மீதுற்று
வளமார் இடந்தனில் வயங்குபுத்தி ஓங்குமென
பிள்ளை தாமோதரனார் வித்துவான்கயி லாயபிள்ளை
தள்ளரிய கேண்மையோடு சங்கநூல்கள் கற்றுணர்ந்தார்

உலகமெலாம் மாயுத்தம் உற்றவர்கள் யாருமில்லை
பலகலைகள் கற்குமெண்ணம் பாலியர்க்கு நீங்கவில்லை
தமிழ்வளர்ந்த சங்கமதில் தனியாக எண்தமிழில்
பலகலையும் வாய்த்திட்ட பண்டிதராய்ச் சிறந்தாரே.

ஓராயிரம் ஒன்பான் நூறுசேர் பதினேழில்
சாருமிசைச் சம்பத்தியார் கல்லூரி தனிலே
சீர்மிகுந்த விஞ்ஞானம் சிறப்பாசா னாய்விளங்கி
சாதுசர்வா நந்தாவுடன் சிவசிவா எனச் சேர்ந்தார்

நீர்க்குமிழி நிலையிலா வாழ்க்கையென ஆனந்த
சாதுவின் சம்பந்தமும் போதித்து புத்திமூட்ட
மேதக்க பி.எஸ்.சி. பட்டங்கள் பதராக
சார்வுற்றார் சென்னையில் தூய்மைசேர் துறவியாயே.

**சமயமும் சமயச் சால்புகளும் :-**

புத்தியில் வித்தகனாய் பொலிவு புக்க
பொருந்துநெறி யவர்க்கோர்விந் தையன்றால்
சித்தாந்த நூல்களோடு தமிழில் மேவும்
சிறப்புறுகா வியங்கள்உறத் துணர்வுகூட்ட
முத்தமிழ் தீந்துறை களிஞரி டத்தில்
முழுவிருப்புக் கொண்டுசிலம்ப தனில்நாட்டம்
வைத்ததனை ஆராய்ந்து இசை நுணுக்கம்
மலிந்தபெரும் யாழ்நூலை யாத்தளித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையின் வேந்துகளி செகப்பிரி யார்செய்த
கவினாரும் நாடகங்களை யெல்லாம்
அற்புதமாய்த் தமிழ்செய்து மதங்கசூளா
மணியென்னும் பெயர்சூட்டி பலர்போற்றும்
விற்பனஞ்சேர் அந்நூலை வியப்பாக பிரசுரித்தும்
வியத்தகுமாங் கலைவாணி பூஞ்சோலை
பொற்புறு காவலன் ஆதி சஞ்சிகைகள்
வெளியிட்டும் தமிழ்த்தாய்க்கு சேவித்தார்.

தேங்குமொளிச் சைவசம யநெறிப் பின்னணியில்
சிறார்களுக்கு கல்வியறி வூட்டுதற்கும்
தீங்கில்லா ஒழுக்கநெறி பற்று தற்கும்
சிந்தைசெய் ராமகிருஷ்ண பரமஹம்சர்
வீங்குபுகழ் மிஷன்சார்ந்து வனப்பு வாய்ந்து
விளங்குமட்டு நகர்தன்னில் சிவாநந்தப்பேர்
ஒங்குமிசை வித்தியா சாலை யோடு
உயர்மகளிர் பள்ளியும் தாபித்தார்.

காளியர் கோன்பாடல் பெறுதலமாம் கோணை
கவினாரும்மலை யிலிருந்துகல் விச்சாலை
சூழுமெழிலுற நிறுவிச்சைவசமயப் போதம்
துறுமிளார் வகையினில் மாணவரிடத்தே
ஆழமுற நெஞ்சதனில் படியும் பாங்கர்
அருந்தமிழும் ஆங்கிலமும் யூறிக்குன்றில்
வீழருவி போலினிய குரலின் பாடல்
விதம்விதமாய்க் கற்பித்து மகிழ்வுகண்டார்

## யாழ்நூல் அரங்கு

பல்கலை இசைக்கழகம் பணிவுடன் வேண்டியாங்கு
பேராசிரியராய்ப் பெரும்பணி செய்யுங்கால்
நல்லோர் நயக்கும்நன் சன்மார்க்க சைவமும்
நயமாய் நடக்கும் தேர்வும்சேர
நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி
யல்லியம் பங்கயத் தவனினிது
நல்கியதெய் வஞ்சான்ற தீஞ்சுவை நல்யாழ்
நல்லிசையாக்க நாட்டமும் கொண்டீரே

வித்துவான் ஒளவை துரைச்சாமி விளங்கவைக்க
நாச்சியார் நான்மணிமா லைஅரங்கேற
வித்துவான் வெள்ளைவாரணர் வியந்துரை விளம்பிமகிழ
பூசணம்சிவா நந்தன்பொன் இசைபொழிய
பிள்ளையாம் மீனாட்சி சாம்பமூர்த்தி முருகப்பா
அறிஞர்ஆ னோர்அரங்கேற் றியகாலை
களங்கமிலா தமிழ்க்கரந்தை கருமமார் கந்தசுவாமி
நன்றிநவின் றார்நாடு நயந்திடவே

## வாழ்த்து

இரும்புதரு மனத்தினை ஈர்த்துஈர்த்து என்புருக்கி
கரும்புதரு சுவையெனக்கு காட்டி
வருந்துவதை விருந்தாக்கி வருவிருந்து காத்திருந்து
விருந்தாக விண்ணோர்க்கு விளங்கியாங்கே
உருத்திரனார் வேண்டும் உள்ளக்கம லமும்கூப்பிய
காந்தளும் நாட்டவிழி நெய்தலும்
நரேந்திரரும் நாயனாரும் நான்முகனும் வேண்டியது
இன்னதென காட்டியவா! வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கைக் கொருமணியாம் என்றுலக மெல்லாம்
கீர்த்திபெற கிளர்செஞ் சாலி
செழித்துவளர் காரைநகர் தனியிரவி யெனவுதித்த
துறவியாம் செம்மல் செய்த
உளப்படுநல் இயல்இசை நாடகமென் முத்தமிழும்
ஓங்கவைத்த வித்தகவிபு லாநந்தரை
தொழவாங்கு ஒதவைத்த உயர்ந்தோர் பெரியோர்
எண்பலவாய் வாழ வாழியவே

எந்தமத மானாலும் இந்துமதம் தந்த மதம்
சிந்தனையில் வந்தணைந்து சிவநெறியைக் கூட்டுவிக்கும்
கந்தன் நீலகண்டன் கயிலாயத் துச்சியான்
தந்ததொரு தண்ணளியைத் தலைவணங்கி வாழ்த்துவமே.

---

## "எழில் கொள் மாமன்றம் இனிது வாழி !"

இங்கிதமாய் நாதமிசைத்திடும் எம் இனிய மன்றம்
எழில் கொள் இலங்கைதனில்
இலங்கும் மன்றம்
தலைநகராம் கொழும்புதனில்
தன்னொளி பரப்பி
கற்றோரை உபசரித்து
கவினுற பற்பல பரோபகாரம் புரிந்திடும் மன்றம்
ஏழடுக்கு மாளிகையில் எழிலாக
நிமிர்ந்து நின்று ஏற்றம் கொள் மாமன்றம்
அவனியிலே அற்புதங்கள் புரியும் மன்றம்
இந்துக்களின் இன்னிசையாய்
இன்பம் தந்திடும் எழிலான மாமன்றம்
வாழியவே !
மங்காப் புகழ் பரப்பும் மாமன்றம்
மானிட நேயம்கொள் இந்துமன்றம்
கற்றறிந்த பலர் கண்காணிப்பில்
கச்சிதமாய் மாமன்றம் மலர்ந்ததுவே !
சைவத்தின் தொன்மைதனை தரணியெங்கும்
தாயெனவே மேன்மை கொண்ட மாமன்றம்
பொதிகைமலை உச்சியிலே தமிழ் அன்னை
பொற்புறவே உயர்ந்து நின்றாள் புவியதனில்
இந்து மதம் இனிமையான சேதி சொல்லும்
இகபரசுக மெல்லாம் ஈர்ந்தளிக்கும்
புத்துணர்ச்சி தந்திடும் மாமன்றம்
பொன்னெழுத்தைப் பொறித்து நிற்கும் பாரினிலே
வாழியவே மாமன்றம் வளம்பல பெற்று
வஞ்சியரே வாழ்த்திடுவீர் மாமன்றம் வாழ !

மாவையூர் — விஸ்வலிங்கம் சண்முகசுந்தரம்
(வீரகேசரி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தர்

– த. மனோகரன்.
*அகில இலங்கை இந்து மாமன்றத் துணைச் செயலாளரும்*
*கல்விக் குழுச் செயலாளரும், அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கச் செயலாளரும்*

இலங்கைத் திருநாடு ஈன்றெடுத்த பெருமைமிகு பேரறிஞர் இந்து மத பெரியார், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர். இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் தமிழ் மொழியும், இந்து சமயமும் எழுச்சியுற வழிவகுத்த முதன்மையானவர்களிலொருவராவார்.

சுவாமி அவர்கள் கிழக்கிலங்கையிலே அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் சாமித் தம்பி என்பவருக்கும் கண்ணம்மையாருக்கும் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆந் திகதி பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்டபெயர் மயில்வாகனம் ஆகும். மயில் வாகனத்தார் காரைதீவு கிராமப்பாடசாலையிலும், கல்முனை மெதடிஸ் பாடசாலையிலும், மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரியிலும் கல்வி பெற்றார். தமது பதினாறாவது வயதில் கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்தார்.

ஆசிரியர் தொழிலில் அடியெடுத்து வைத்த அன்னார் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்சி பெற்ற ஆசிரியரானார். இவர் ஒரு விஞ்ஞான மாணிப்பட்டதாரியுமாவார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதப்பரீட்சையில் சித்தியடைந்து பண்டிதர் மயில்வாகனம் ஆனார். கல்முனை மெதடிஸ்ட் கல்லூரி ஆசிரியராக இருந்தபின் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றினார்.

சுவாமிகள் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் கல்விப் பணிக்காற்றிய பங்களிப்பு பெருமைக்குரியது. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியை இராமகிருஷ்ணசங்கம் பொறுப்பேற்று நடத்தத் தூண்டுகோலாயிருந்தவர் சுவாமிகளே. மட்டக்களப்பில் ஒரு இந்துப் பாடசாலை இல்லாக் குறையை நீக்க 1926 ஆம் ஆண்டில் சிவானந்த வித்தியாலயத்தை நிறுவும் பணியில் ஈடுபட்டு 1929 ஆம் ஆண்டு மேற்படி வித்தியாலயத் திறப்பு விழாவை நடத்தினார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே தமிழ்மொழியும் இந்து சமயமும் எழுச்சியுற சுவாமிகளது பங்களிப்பே அடித்தளமாய் அமைந்தது. திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்த இராம கிருஷ்ண சங்கத்தின் பாடசாலைகளைப் பல ஆண்டுகள் சிறப்பாக நிருவகித்த பெருமையும் சுவாமிகளுக்குண்டு.

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சொல்லாக்கக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றிய சுவாமிகள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தேர்வாளராகவும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகவும் இலங்கை பல்கலைக் கழகத்தின் தமிழ் பேராசிரியராகவும் செயலாற்றிச் சீர்மை சேர்த்தவர்.

முத்தமிழ் வித்தகரான விபுலாநந்த அடிகளார் மதங்க சூளாமணி என்னும் நாடகநூலை எழுதியதுடன் தமிழ் மக்களின் பண்டைய இசைக்கருவிகளான யாழ் என்னும் இசைக்கருவியைப்பற்றி ஆராய்ந்து யாழ் நூலை வெளியிட்டார். யாழ் நூல் வெளியிட்டது சுவாமிகளது கலை ஆர்வத்தினையும், ஆராய்ச்சித் திறனையும் வெளிக்காட்டும் சான்றாகும்.

"வெள்ளை நிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ" என்று தொடங்கும் சுவாமிகளது பாடல் அவரது கவிதை புனையும் திறமையையும், பக்தியின் ஆழத்தையும் தெளிவுறுத்துவதாய் அமைந்துள்ளன. விபுலாநந்த அடிகளார் தமிழில் எழுதிய கட்டுரைகள் 48 இன்றும் போற்றுதற்குரிய பெருமை கொண்டவை. அவ்வாறே ஆங்கிலத்திலும் ஏழுகட்டுரைகளும் கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி, மாணிக்கப்பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்ரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமார வேணவமணி மாலை ஆகிய நான்கு செய்யுள் நூல்களும் யாழ் நூல், மதங்க சூளாமணி, நடராச வடிவம், தில்லை திரு நடனம், உமா மகேசுவரம், கலைச்சொல்லகராதியின் ஒருபகுதி என்னும் ஐந்து வசன நூல்களும் ஐந்து மொழிபெயர்ப்பு நூல்களும் தமிழ்த்தாய்க்குச் சூடப்பட்ட அணிகலன்களாகவும், இந்து சமய அறிவுக்கு விருந்தளிப்பவைகளாகவும் உள்ளன.

விபுலாநந்த அடிகளாரின் முயற்சியால் நிறுவப்பட்ட மட்டக்களப்பு கல்லடி – உப்போடை சிவானந்த வித்தியாலயம் இந்து சமய சூழலிலே மாணவர்கள் கல்வி பயில வழி வகுத்துள்ளதுடன் கிழக்கிலங்கையின் முதல்தர கல்வி நிலையமாக விளங்குகின்றது. சிவானந்தவித்தியாலயம் இந்துக் கல்விமான்களை மட்டுமல்ல இஸ்லாமிய கல்விமான்களையும் சமுதாயத் தலைவர்களையும் உருவாக்கிய பெருமையைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலே சிதம்பரத்திலே அண்ணாமலைப்பல்கலைக்கழகம் நிறுவ முன்னின்று செயற்பட்ட விபுலாநந்த அடிகளாரே. சிதம்பரத்திலே சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவியதன் மூலம் தனது சமய, கல்விப் பணியைத் தமிழ் நாட்டிற்கும் விரிவுபடுத்தியவர். வட இலங்கை பெற்றெடுத்த பெருந்தகை ஆறுமுக நாவலர். அதுபோல கிழக்கிழங்கை ஈன்றெடுத்த விபுலானந்த அடிகள் இராமநாதபுரம் அரசரிடம் சிதம்பரத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டியதன் அவசியத்தை எடுத்தியம்பி அங்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிட வழி கண்ட பெருமை கொண்டார். அத்தோடு அப் பல்கலைக்கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியருமாவார்.

இளமையிலேயே துறவறத்தில் நாட்டங்கொண்டிருந்த மயில்வாகனத்தாருக்கு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை யோகசுவாமிகளது தொடர்பு துறவறத்திற்கு விரைவு கூட்டியது. 1922 ஆம் ஆண்டில் மயில்வாகனத்தார் இராமகிருஷ்ண சங்கத்தில் இணைந்து துறவறத்தை மேற்கொண்டார்.

பகவான் இராமகிருஷ்ணரின் கருணையால் ஆட் கொள்ளப்பட்ட சுவாமி விவேகாநந்தர் வழியில் சுவாமி விபுலாநந்தர் அடியெடுத்து வைத்ததன் மூலம் தமிழ் உலகம் பெருமை பெற்றது. இந்து சமயம் இணையில்லாப் பெருமகனொருவரது சேவையை ஏற்றது.

இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் செயற்பாடுகள் மக்கள் மத்தியிலே சென்று வளமூட்ட அடித்தளம் அமைத்தவர் சுவாமிகளே. சுவாமிகளது செயற்பாடுகளும், அவர் ஆற்றிய அருளுரைகளும் மயங்கிக்கிடந்த இந்து சமயத்தவர் மத்தியிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தியது.

இந்து சமயப் பணியென்பதும், வழிபாடென்பதும் ஆலயங்களில் அடங்கியது மட்டுமல்ல மக்களுக்கு, அவர்களது சமுதாய நலனுக்கு மனத் தூய்மையுடன் பணியாற்றுவதுமாகும் என்பதைத் தனது நற்பணிகள் மூலம் வெளிப்படுத்தி நமது நாட்டில் சமய மறுமலர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார்.

விபுலாநந்த அடிகளாரது அளப்பரிய சமுதாயப்பணியின் நினைவுச் சின்னங்களாக விளங்கும் கல்வி நிறுவனங்கள் என்றும் அவர் பெருமை கூறும். மட்டக்களப்பு சிவானந்த குருகுலமும் அடிகளாரின் அரும்பணியின் அம்சமேயாகும்.

கிழக்கிலங்கையிலே பிறந்து வட இலங்கையிலே பணிபுரிந்து பின் கடல் கடந்து தமிழ் நாட்டிலும் மக்கள் நலப்பணியே இறைபணியென எண்ணி செயலாற்றிய சுவாமிகள் 1947 ஆம் ஆண்டு யூலைமாதம் 19 ஆந் திகதி இறையடி சேர்ந்தார். அமரத்துவம் அடைந்த சுவாமிகளது பூத உடல் கல்லடி உப்போடையிலுள்ள சிவானந்த வித்தியாலய வளவில்சமாதி வைக்கப்பட்டது. யூலை மாதம் 19ஆந் திகதி வருடாந்தம் அகில இலங்கையிலும் உள்ள பாடசாலைகளிலும் தமிழ்த்தினமாகக் கொண்டாடப்படுகின்றது. அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்த வேண்டுகோளிற்கிணங்கி கல்வியமைச்சு யூலை மாதம் 19ஐ தமிழ்த் தினமாகப் பிரகடனப்படுத்தியமை குறிப்பிடற்பாலது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்திற்கிணையாக வைத்துப் போற்றப்படும் சுவாமி விபுலாநந்தர் மனிதகுல நலனுக்காக ஆற்றிய பணிகள் என்றும் நிலைபெற்று வாழும்பேறு பெற்றவை. சமயப் பணியில் ஈடுபடுவோர் சமுதாயப் பணியும் இறைபணியே என்பதைச் சிந்தையில் கொண்டு செயல்படுவது சுவாமிகளுக்கு ஆற்றும் அஞ்சலியாகும்.

*"என் அருமைச் சகோதரர்களே ! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள்தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான கீதத்தின் ஒரு சில வரிகளை இங்கு, உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.*

*எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்*
*இறுதியிலே கடலில் சென்று*
*சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர்*
*பின்பற்றும் தன்மை யாலே*
*துங்குமிகு நெறிபலவாய் நேராயும்*
*வளைவாயும் தோன்றி னாலும்*
*அங்கு அவைதாம் எம்பெரும ! ஈற்றில் உனை*
*அடைகின்ற ஆறே யன்றோ !*

*சிகாகோவில் சுவாமிஜி விவேகானந்தா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Siva Yogaswami

## THE SAGE OF COLUMBUTURAI, JAFFNA

*- V. Murugesu (Attorney-at-Law and Solicitor)*
*Secretary, Sri Aurobindo Society (Sri Lanka Branch)*

In the march of civilization down the ages, from the very dawn of history, man in his searchings felt the Presence of a Power that permeated this universe. The ancient Rishis from the Vedic Age sung the praises of this Reality and invoked the powers It possessed, and this torch of Truth has over the years been revealed, expounded and explained by Avatars, seers, sages and saints. This has been the unique tradition of the Hindu Dharma, the Eternal Religion. In the Twentieth Century, in the line of this perennial tradition, in our own land, there appeared a mystic and seer in the person of Siva Yogaswami, the Seer of Lankapuri, who sang the hymns of the Divine Reality contained in his Natchinthanai. His life and teachings are a source of enlightenment to us frail mortals groping our way through life in our search for Light.

Yogaswami, as he was commonly referred to, was born on the 29th May 1872 and having lived a rich spiritual life of nearly 92 years entered Mahasamadhi on the 24th March 1964. Little is known of his early life. His name was Yoganathan. He attended St. Patrick's College, Jaffna, and he was given the Christian name Johnpillai. He joined the Irrigation Department, Killinochi, and worked as a storekeeper. He spent most of his leisure reading the Hindu scriptures and spiritual literature. He was drawn to the spiritual aura of Chellappa Swami, a disciple of Kadai Swami. His life soon turned towards irrigating human souls and keeping store of their lives. That became his later mission.

My first direct contact with Yogaswami was when I faced a crisis in my life and his Grace guided me. I had heard of him as a boy because my father used to speak of this unique God-man. I remember once a bus plying between Colombo and Badulla stopping in front of our house which abutted the main road close to Balangoda and a message being brought to my father by the conductor of the bus that Swami wanted to speak to him. He was so well-known even in those regions. My father walked up to the bus and after a brief conversation with Yogaswami returned home. The bus carrying Swami proceeded on its journey. As children, being inquisitive, we asked father what it was. He told us that Yogaswami had called him and told him that it was not necessary for him to come to see him as he (Swami) prayed for him in his meditations. My father was a deeply pious man and venerated Yogaswami as he did other great spiritual personages.

It was the eve of the Wesak Poya day when my first pilgrimage to Swami began. A few months before that I took a major step in my professional life of leaving a leading legal firm after an association of fifteen years and venturing to start a professional practice of my own. I had by then three little children and I was taking a plunge into the unknown in faith as I felt my soul cramped in the surroundings of my work place. It was a decisive step. A collegiate mate of mine was unhappy at my decisio because he felt it was an unwise step and wished me to see Yogaswami before I left the old firm. The dice had however already been cast and I left the firm but yet I decided to go and see Swami.

On the eve of my departure to Jaffna I had to hand a Power of Attorney which I had prepared for a Muslim client who had earlier confided to me that his wife suffered from a mental ailment and used to fall periodically into moods of madness. That evening I dropped in to hand the document to him. He then told me that his wife was under the spell of one of those attacks and wished me to come into the bedroom. He added that there were other ladies. So I entered the bedroom with him.



I saw a lady with eyes closed being held down by some ladies, as apparently she



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

had been boisterous. Some of them were ridiculing the evil spirit in her. I had never seen this lady before nor had I spoken to her. My client wished me to speak to her to see her reactions. So I asked her my name. She said; "Mr. Murugesu". My client was surprised for her eyes were closed and she had no occasion to recognise my voice previously. She was now silent and quiet. He wanted me to ask her another question. I then asked her, "Where am I going tomorrow?" She replied, "To Kataragama". My client asked me whether that was correct. I told him that as I was going to see Yogaswami, a sage in Jaffna, it was like going to Kataragama. I was in effect going on a pilgrimage. I then took leave and returned home.

The next morning at 3 A.M. we left for Jaffna by car with my eldest daughter then about 4 years old. We reached Jaffna by about 5 p.m. My friend had arranged some accommodation at the Jaffna College Hostel as the College was in vacation. He was a teacher there. We then left to Columbuturai, to Swami's Ashram and reached there around 6 p.m. We took a tray of fruits as our offering. As we opened the gate - we could not have been seen by him - I heard him say in Tamil, "They are coming after a very tired journey". We entered, paid our respects to him and offered the tray and he indicated where I should be seated. During that whole one hour or so, he sang occasionally, devotees sung 'Thevarams' and he gave intermittent discourses in cryptic sayings. All these took place in Tamil. There were also moments of silence. He then broke out into English and said: "Swami Vivekananda has said that a man must learn to stand on his own feet. So fearlessly go and stand on your feet." I felt that the guidance was directly meant for me, firstly as it dealt with my decision to commence a professional practice of my own and secondly he spoke in English as my knowledge of Tamil was poor.

As the devotees began to leave we too decided to go. My wife and I then went up to his couch, fell at his feet and prayed in silence for his blessings. He then caught my hand and stayed me. He asked what I was doing. I told him that I was a Proctor (that was how that branch of the legal profession was then known). He then said in Tamil "Look after all my property carefully." I laughed silently for what did this Swami own. He was no doubt rich though a beggar. Later the wisdom of his guidance dawned on me. He was referring to the clients who would come to me. They were his property and it was his injunction that I must look after them. He then showed me his hand. "See this" he said. "All the fingers are separated but look at my hand. They all come from the same source. Therefore show no difference or distinction to anyone. Treat them all alike. If you do this it will be like the pot boiling, overflowing, but the vapour reaches the heavens and you will be blessed." All this conversation was in Tamil. I accepted the guidance. Then when I was about to go he stopped me again by holding my hand and said: "Son, this is not Kataragama. Do you understand me?" I said, "Yes", and my mind went back immediately to the episode in Colombo on the eve of my departure when I told my client: "It is like going to Kataragama". He then blessed us and we returned to our temporary abode filled with the Light he gave us and the Peace we had encountered by being in the presence of this Jivanmukta. Can he ever be forgotten! His Grace is always there.

To the devotee he is always like a spiritual magnet drawing souls to his aura. One experience leads to another. The fire to see him again burned within and a second visit was made within a year, despite the draw to mundane attractions. We made a second trip to Jaffna. We saw him at one of those usual satsangs and listened to his discourses. The next day we were to leave Jaffna. So around 3 p.m. we decided to call at his Ashram. Surprisingly there was not a soul when we went and Swami was not at the meeting hall. He was in the inner sanctorum. At the knock at the door his close devotee, Mr.Chellaturai, came and said that Swami was resting. I asked him whether I cannot see him as I was leaving Jaffna that night. He went in and came and said that Swami was willing to see me. He stood there before us totally bared with not even his usual loin cloth giving us his full darshan. After we paid him obeisance he opened up like a cascade of torrential waters and gave me unmitigated chastisement. He scolded me. He minced no words. He warned me of consequences. He knew I had slipped from the Path. I felt deeply touched for here was a sage protecting his disciple from lapse in the spiritual Path that could have irreversible consequences. I knew and learnt the lesson given. He then blessed us. That incident has been a constant reminder. Grace poured from him in the form of pelting stones. Such was his love and compassion. These are unforgettable moments in the life of a man.

Yogaswami had the whole of Sri Lanka within his spiritual orbit. Ceylon was not just a geographical spot to him. He has sung its spiritual glory. He lived with the common people and led a simple life. He attracted people from all walks of life. He possessed great



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

siddhi powers but never showed them. He used them only when necessary. He had vak siddhi - the power of the word. Once a devotee complained to him that wild boars were attacking his fruit orchard. He told him that they will not come again. That ended the animals marauding the orchard. He had visited distant shrines in Sri Lanka. He traversed the length and breadth of the country. He visited Trincomalee and Batticoloa. He trekked the Veddah lands of Bibile and Moneragala to visit holy shrines that skirted the Menik Ganga (Mannikka Gangai). His itinerary took him across the hilly regions of Kandy, Haputale, Bandarawela, Balangoda and the Ratnapura valley. Other places to which his Yaatrai stretched were to Munneeswaram, Kurunegala, Anuradhapura, Colombo. He had also been to India and visited shrines there. He embraced in his spiritual circle people of different faiths, Christians, Muslims, Hindus, Buddhists, the high and the low and men from all strata of society. He saw no distinctions and knew of no differences between persons and people.

It is futile of us lesser mortals to attempt to evaluate the life and teachings of Divine souls. What is revealed here is only to attract men and women to receive their guidance and protection and live by their Grace moving away from the ordinary life that is beset with problems and difficulties.

It is reported that when Swami Vivekananda visited Jaffna in 1897 he was ceremoniously drawn in a carriage by leading Hindu citizens to address the public at a place that later became the Hindu Maha Vidyalaya at Columbuthurai. There stood an Illuppai tree (botanical name : Madhuca Longlfolia) at the junction. At this spot he got down and walked up to the school. In his lecture he alluded to the fact that he was impelled by some inner Force to get down from the carriage. He felt he was treading on sanctified soil and called it an oasis. This was the Illuppai tree under whose shade Yogaswami had sat in the sun and the rain during his early years of tapasya. It truly became an oasis when Yogaswami hallowed that spot as his spiritual Centre and Ashram.

The teachings of Yogaswami like those of his Guru, Chellappa Swami are terse and cryptic but carry within them an ocean of Realisation and guidance in all circumstances. His four great utterances known as the Mahavakiam transmitted to him by his Guru, are :-

"Oru Pollapumillai" - There is not the slightest flaw.
"Muluthum Unmai" - All is the Truth.
"Eppavo Mundintha Kariyam" - It was accomplished a long time ago

"Naam Ariyom" - What do we know or Realise yourself.
His vakkiyam or mantras often repeated by him are:-
"Thannai Ari" - Realise yourself.
"Sarvam Sivamayam" - All is the Divine.
"Summa Iru - Be still.
"Ellam Sivan Seyel" All is the Divine Will.

In these mantric utterances there is a whole philosophy. On one of these a thesis can be written. It is said that the last words of Yogaswami before he shed his mortal frame were : "Ellam Sari".

Sri M.P. Pandit of the Sri Aurobindo Ashram elaborated on this terse message in his "Commentaries on Sri Aurobindo's Thought, Part 4. "The observation sums up a wisdom born of a deep and at the same time an integral spiritualisation of the truth of things. Despite the baffling appearances of disorder, continuing clashes of forces, there is an unseen Order in the universe. Our gaze stops on the surfaces of the movement of life and is lost in the seeming incoherences and disjoints in the circumstances of the world in which we live. The mind is appalled by the cruelties, inequalities, injustices that strike the sensitive eye. One wonders what is the sense of it all, the uneven and insensitive creation. Is there really an Intelligence guiding the whole movement of the universe and if so, how are these incongruities permitted? ............ Let us not be in a hurry to judge things by their appearances or by our initial reactions. Let us not look at them too locally. Undue emphasis on the personal elements in the experience of life vitiates right perception. We tend to relate everything to our own self - which is the ego-self and judge its value thereupon. If however we learn to detach ourselves from the stream of life even a little bit, the vision changes. A different perspective begins to dawn. It is also misleading to confine ourselves to the movement at hand. A look which sees in larger stretches of time reveals a different working ......... All stands justified, everything is just what it has to be, Ellam sari".

Let us turn to the wisdom of our great seers and mould our lives in the thought and spirit of their teachings. Yogaswami is one such in that long line of perennial God-men who have come to help humanity through the baffling life of material existence through the touch of spirituality in every day life.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட யோக சுவாமி

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்

*(இக்கட்டுரையில், தாம் சுவாமிகளைத் தரிசித்ததும், அறிந்ததும், பெற்றதுமாகிய அநுபவங்களைப் பன்மொழிப் புலவரும், அண்ணாமலை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியருமாகிய*

பல ஆண்டுகளாக யோக சுவாமியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். சில அதிசயச் செய்திகளையும் கேட்டிருக்கின்றேன். ஆனால் இலங்கைக்குப் பலமுறை சென்றபோதும் இலங்கையில் தமிழ்விழா நடப்பதற்கு முன் அவரைக் காணும் பேறு பெறவில்லை. யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் விழாவின்போது கலைப்புலவர் நவரத்னமும் நானும் காரில் சென்றுகொண்டிருந்தோம். இடைவழியில் யோகசுவாமி நின்றிருந்தார். கலைப்புலவர் யோக சுவாமியிடம் ஈடுபாடு உள்ளவர். சுவாமிகளை ஏற்றிக்கொண்டு அவர் சொல்லிய இடத்தில் விட்டுப் போயினோம். அந்த இடத்தில் அவர் எல்லோருக்கும் மோர் வழங்குமாறு கூறினார். சுவாமிகளின் அருட்பிரசாதமென்று அதனைத் தெய்வீக எண்ணத்தோடு பருகி மகிழ்ந்தோம். காரில் வரும்போது சுவாமிகள் தமிழ்விழாவைப் பற்றிக் கேட்டறிந்து கொண்டார். அதில் ஒரு மகிழ்ச்சியும் இருந்தது என்பது தெளிவாயிற்று. 'சந்நிதான விசேஷம்' என்று கூறுவார்கள். பெரியோர்களோ, ஞானிகளோ, ஆண்டவன் கோயிலோ அருகே வருகிறவர்களில் பலரைத் தம் தூய அமைதியின்பத்தில் அவர்களையும் அறியாமல் ஆழ்த்திவிடுகின்றதைப் பார்க்கிறோம்.

இரண்டாம் முறை அவரைக் காணும் பேறு நான் பெற்றது அன்பர் நடேசபிள்ளை அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடந்த மாநாட்டில் பங்குகொள்ளும் போதுதான். அப்போது அங்கிருந்த மூன்று நாட்களில் ஒவ்வொரு மாலையும் அவரைப் பார்க்கவும் அவரோடு பேசவும், அவருடைய நல்லுரைகளைக் கேட்கவும் வாய்ப்புக் கிடைத்தது. தத்துவப் பேராசிரியர் திரு.டி. எம்.பி. மகாதேவன் அவர்களும் திரு.அ.ச. ஞானசம்பந்தமும் உடன் வந்திருந்தார்கள். முதல்நாள் கண்டு வணங்கினோம். எங்களைப் பற்றி எல்லாம் அன்போடு விரும்பிக்கேட்டு அறிந்து கொண்டார். எல்லோரும் நல்லவர்கள் என்று வாழ்த்தினார். மனங்கசிந்து பழத்தைத்தந்து உண்ணச் செய்தார். பல பாடல்களைப்பாடினார். தேவாரத்திலிருந்து சில பாடல்கள்; அவருடைய குருநாதர் மீது பாடிய சில பாடல்கள் இப்படி எத்தனையோ பாடினார் "ஆண்டவனை நம்பி நல்லவனாக உண்மையில் நடப்பதே சரியான வழி" என்று கூறினார். உபதேசந்தானே அது. இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது சகஜநிட்டையில் அடிக்கடி இருப்பது போல் தோன்றிற்று. ஒரு குழந்தை போன்ற நினைவு சகஜநிட்டையோடு தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டு அப்போதப்போது பேசிவருவதால் முழுப்பேச்சின் தொடர்பும் நமக்கு விளங்குவதில்லை. இதனாலேதான் "ஞானியர் பேச்சுப் பித்து பேச்சு" என்று பலர் சொல்கிறார்கள் போலும். அடுத்த அறையில் ஏதோ பூசை நடைபெற்றது தெரிந்தது. தம்முடைய அடியார் ஒருவருக்காக இவ்வாறு நிகழ்ந்தது என்று அறிந்தோம். "தீய ஆவிகள் உண்டா அவற்றைப் பூசை செய்து ஓட்டமுடியுமா"? என்றெல்லாம் எங்கள் மனத்தில் கேட்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. ஆனால் அன்று சுவாமிகள் எதிரே நாங்கள் பெற்ற அமைதி நிலையில் இதைப்பற்றியெல்லாம் பேசக் கூட மனம் எழவில்லை. அந்த அமைதி நிலையிலேயே அவரை வணங்கி எங்கள் விடுதிக்குத் திரும்பினோம். அடுத்த நாளும் வரச்சொன்னார். நாங்கள் மாநாட்டில் பேசியபேச்சு என்னென்ன என்றெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார். சிரித்து விளையாடினார். மறுபடியும் அந்தக் குழந்தையின் நினைப்பே பித்தரின் நினைப்பே எங்களுக்கு வந்து நின்றன. ஆனால் அந்த அமைதியின்பத்தைப் பெற்று மகிழ்ந்தோம். அடுத்த நாளும் வரச்சொல்லிக் கட்டாயப்படுத்தினார். மூன்றாம் நாள் நாங்கள் விடைபெற்றுக் கொண்டு ஊர் திரும்பவேண்டும் என்று தெரிவித்தோம். அவர் எங்களிடம் காண்பித்த அன்பை என்ன என்பது? எங்களுக்காக விருந்து ஒன்று அமைத்திருந்தார். உணவு என்றா சொல்வது? ஞானத்தையே அன்புடன் குழைத்துக் குழந்தைகளுக்கு ஊட்டுவதுபோல் ஊட்டினார் என்றே சொல்லவேண்டும். எல்லையற்ற பேரின்பம்! அன்பேரின்பத்தில் திளைத்து மகிழ்ந்து நின்றார். முகத்தில் குழைந்த புன்சிரிப்பு– நெற்றியில் திருநீற்று வெண்மை– இடுப்பில் சுற்றுக்கட்டாகக் கட்டிய வெள்ளை வேட்டி– மார்புவரை வந்து புரளும் நரைத்த தாடி–தலையெல்லாம் நரைத்து வெளுத்த முடி– முழுவதும் ஆகிய பேரின்பக் களிப்பு– அமைதியையும் உயர்ந்த எண்ணத்தையும் வந்தோரிடம் எல்லாம் நிலவச் செய்யும் சூழ்நிலை– இப்படியாக அவரைக் கண்டு பிரிய மனமில்லாமல் பிரிந்து வந்தோம்.

மூன்றாவதாக ஒரு தமிழ்க்கழக விழாவுக்குப் போயிருந்தபோது அவரைப் பார்த்தேன். அப்போது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சியால் நடக்கமுடியாமல் படுக்கையிலேயே அவர் கிடக்கவேண்டி இருந்தது. சுவாமிகளின் சீடர்களும், அவராலே மணமகனும், மணமகளும் ஆக ஆக்கப்பெற்றவர்களான என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை நண்பர்கள் திரு. நவரத்தினமும் திருமதி ரத்னா நவரத்தினமும் என்னை அவர்கள் வீட்டில் வரவேற்றுத் தங்கச் செய்திருந்தார்கள். நான் போய்ச் சேர்ந்த அன்று மாலையே அவரைப் பார்க்கச் சென்றேன். அவர் ஞான சமாதியில் இருந்தார். அப்போதப் போது உலக நினைவாக வந்து தம் அடியாரோடு சில சொல் பேசினார். அவருடைய சீடர்கள் என்னையும் அறிமுகம் செய்தார்கள். ஆனால் ஞானசமாதியில் அடிக்கடி அவர் புகுவதால் இந்த வெளிப்பேச்செல்லாம் அதனைக் கலைப்பதாகவே தெரிந்தது. அந்த நிலையில் என்னோடு பேசவில்லையே என்று நண்பர்கள் வருந்தினார்கள் ஆனால் எனக்கோ நோயொன்றும் தெரியாமல் ஞான நிட்டையில் அமைதியோடு விளங்கும் காட்சியே அவர் என்னோடு பேசுவதை விடச் சிறந்த உபதேசமாகத் தோன்றியது. அடுத்த நாள் இரவு கூட்டத்தில் பேச்சு ஆகையினாலே அவரைப் பார்க்க முடியவில்லை. மறுநாள் காலையில் ஆகாய விமானத்திற்குச் செல்லுகின்ற வழியில் அவரைப் பார்க்கப் போயினோம். அப்போதும் அவர் ஞான நிட்டையிலேயே இருந்தார். அவருடைய சீடர்கள் கர்ப்பூரத்தை ஏற்றி வைத்து உடநிடதம், தேவாரம் முதலிய பாடல்களைப் பாடி வணங்கிச் சென்றார்கள். நாங்களும் வணங்கி விடைபெற்று வந்தோம்.

அப்போது ஒரு செய்தி அறிந்தோம். ஞாயிறுதோறும் அன்பர்கள் கூடிப் பாடிக்கொண்டு ஊரூராகப் பயணம் போகும் ஏற்பாட்டைச் சுவாமிகள் தாமே செய்திருந்தாராம். வாரத்திற்கு வாரம் கூட்டம் மிகுந்து கொண்டே வந்ததாம். இளைஞர்கள், செல்வர்கள், கிழவர்கள் எல்லோரும் நடந்தேவந்து முதலிலிருந்து முடிவு வரை பயணத்தை முடிப்பார்களாம். ஒரு புது உயிரே உண்டாகியிருக்கிறதென்றும், ஒரு பெரிய மாற்றம் உண்டாகியிருக்கிறதென்றும், என்னிடம் அவர் சீடர்கள் கூறினார்கள். நேரில் காணும் வாய்ப்பில்லையே என்று வருந்தினேன். குடியொழிப்புத் திட்டத்தில் முன்னர் சுவாமிகள் கலந்து ஊக்கந்தந்து நின்றமை நினைவுக்கு வந்தது. இதற்கு முன் ஒரு ஜெர்மானியர் சந்நியாசியாகி யோகர் சுவாமியோடு பழகி இருந்ததும் அவர் வழியே சுவாமிகளது நான்கு மகாவாக்கியங்களைக் கலைப்புலவர் வீட்டில் கேட்டறிந்ததும் நினைவுக்கு வந்தன.

சைவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, உபநிடத உண்மைகளோடு ஒருசேர வைத்துச் சைவத்தை விளக்கி உலகெங்கும் பரப்பவேண்டுமென்று சுவாமிகள் கருதினார்களாம். சைவசித்தாந்தப் பாடத்தை முறையாகப் பாடஞ்சொல்லி வரவும் சுவாமிகள் ஏற்பாடு செய்தார்களாம். சுவாமிகள் அவர்களுக்கு லார்ட் சோல்பரியின் மகன் போன்றவர்கள் சீடர்களாக மேனாட்டிலும் விளங்குகின்றார்கள். அவர்கள் உதவியால் இங்கிலாந்திலும் சைவத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்று தம் சீடர்களிற் சிலராகிய வித்துவான் க. கி.நடராஜன் திருமதி, ரத்னா நவரத்தினம், திரு. நவரத்தினம், திரு. சச்சிதானந்தம், திரு.இராமஸ் போதம் (சந்தசுவாமி) ஆகியோரை வேண்டிக்கொண்டார்களாம். அவர்களுள் ஒருவராகிய திருமதி ரத்னாநவரத்தினமும் அவரது கணவரும் இந்தத் தொண்டாற்ற இங்கிலாந்திற்குப் போய்த் திரும்பி வந்தபோது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர்களை வரவேற்கும் பேறு பெற்றேன்.

தொண்டு முடிந்தது. சுவாமிகள் விதேகமுத்தி அடைந்து விட்டார். கண்ணீரும் கம்பலையுமாக இதைத் திருமதி ரத்னா நவரத்னம் அவர்கள் எழுதினார்கள். இனி அவரைக் காண முடியாது. ஆனால் அழியா நிலைமையையல்லவா அவர் பெற்றுவிட்டார். அவர் தொண்டு வாழும். சிவத்தொண்டன் என்றும் சிவத்தொண்டனே. பல தொண்டர்கள் வளர்வார்கள். உலகம் வாழும், அவரில் நாம் கண்ட காட்சி, அவருடைய இனிய பேச்சு, ஞானப்புன்சிரிப்பு, அமுதவிருந்து இவற்றை எப்போதும் என் மனத்தில் கண்டு களிக்கின்றேன். யான் எதிர் பாராதபடி ஓர் நாள் கலைப்புலவரிடமிருந்து சுவாமிகளுடைய புகைப்படம் ஒன்று வந்தது. என் எதிரே சுவாமிகளை நினைப்பூட்டிக் கொண்டு உலகிலே மயங்கும் போதெல்லாம் மயக்கத்தை நீக்கி அது அருள்புரிந்து வருகிறது. நண்பர்கள் இருவர் சுவாமிகள் பாடிய நற்சிந்தனை என்ற நூலை எனக்கு உதவினார்கள். ஒன்றிற்கு இரண்டாக அவர் அருள் கிடைத்ததே என்று மிகமிக மகிழ்ந்தேன். அவர் பேசுவது போல அவர் பாடல்களைப் படிக்குந்தோறும் எனக்குத் தோன்றும். ஆகவே அவரோடு கூடியிருப்பதுபோலவே இன்றும் எனக்குத் தோன்றுகிறது.

(நன்றி : திருக்கேதீச்சரம் திருக்குடந் திருமஞ்சனமலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்

*(வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்)*

'பூ' எனப்படுவது பொறிவாழ் பூவே என்பார் சிவப்பிரகாசர். அதுபோன்று "பண்டிதமணி" என்றவுடன் நம் நினைவுத்திரையில் நிழலாடுவது ஆறடிக்கும் குறையாத உயரம் மெலிந்து சிவந்த தேகம், அறிவின் ஆழத்தை அளவிடும் கண்கள். அனுபவப் பரப்பைக் காட்டும் அகன்ற நெற்றி, வரைவின்றி வழங்கும் கொடை, மடம் பட்ட கரங்கள், தடையின்றித் தமிழ் ஊறும் தனித் தங்க நெஞ்சம். ஆம்..... இவைகளின் ஒட்டுமொத்த உருக்கொண்ட தமிழ் அன்னையின் தவப் புதல்வர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களது உருவம் தான்.

நல்லாசிரியனது இலக்கணம் கூறவந்த பவணந்தி முனிவர்

*"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை*
*கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை*
*நிலமலை நிறைகோல் மலர் நிகர் மாட்சியும்*
*உலகிய லறிவோ டுயர்குண மினையவும்*
*அமைபவ னூலுரை யாசிரி யன்னே"*

என்பார். நன்னூலார் கூறும் அனைத்துப் பண்புகளும் ஒருசேரப் பெற்ற பெருமகனார் இலக்கிய கலாநிதி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். சைவமும், தமிழும் செழித்து மணக்கும் மட்டுவில் மண்ணின் வார்ப்பு. பேராசான் நாவலர் பெருமானின் வழித்தோன்றல். ஸ்ரீமத் கைலாசப்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் போன்ற பழுத்த தமிழ் மரங்களினின்று பயன்கொண்ட தமிழ்க்கனி. ஆயிரம் பிறைகளுக்கும் மேற்கண்ட பேரருளாளன் தேன் பிலிற்றும் இவரது உரைகளை மாந்துவதற்கென்றே ஒரு மாணவர் கூட்டம்.

பண்டிதர் ஐயாவிடம் பாடங் கேட்டவர்கள் முற்பிறவியில் புண்ணியம் செய்தவர்கள். விரையாமல், வெகுளாமல், விரும்பி முகமலர்ந்து கொள்வோன். கொள்வகை அறிந்து அவர்கள் உளங்கொளக் கூறும் ஆற்றல் போற்றுதற்குரியது. புகழ்தற்குரியது.

தமிழிலே மட்டுமல்ல சைவ சித்தாந்தத்திலும் துறை போகியவர்கள் சித்தாந்தக் கடலில் மூழ்கி முக்குளித்து எடுத்த ஆணி முத்துக்கள் தான் கந்தபுராண தக்ஷகாண்ட உரையும், அத்வைத சிந்தனைகளும்.

சைவ இலக்கியங்களில் கந்தபுராணம்பண்டித மணியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நூல். யாழ்ப்பாணக் கலாசாரத்தைக் கந்தபுராண கலாசாரம் என்று கூறி மகிழ்வார். இவரது படைப்புக்களிலே மிகச் சிறந்தது கந்தபுராண தக்ஷகாண்ட உரை. பேராதனை பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் இந்நூலைப் பதிப்பித்தது.

நூலினை யானை மீது ஏற்றி இருபுறமும் கவரி வீச சோழன் அநபாயன் நடத்திய பெரியபுராண அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு ஒப்ப தக்ஷகாண்டம் அரங்கேறியது.

பண்டிதமணி ஐயா வெளியிட்ட நூல்கள் இருபதிற்கும் மேலே அச்சேறி வெளிவர இருந்த நூல்களும் இருபதிற்கும் மேல். கோயில் கதிர்காம வேலவன் பவனி வருகின்றான். பாரத நவமணிகள் சைவநற்சிந்தனைகள், கந்தபுராண கலாசாரம், கந்த புராண போதனைகள் இருவர் யாத்ரிகர், சமயக் கட்டுரைகள், சிந்தனைக் களஞ்சியம், அன்பின் ஐந்தினை போன்ற நூல்கள் இவரது பரந்து பட்ட அறிவிற்கும் நுண்மாண் நுழை புலத்திற்கும் சான்று. உரைநடை கைவந்த வல்லாளர். இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களை விளக்குவதில் வல்லவர். பெரியபுராணம், திருக்குறள், தேவார திருவாசகங்களில் ஊறிய நெஞ்சு. தங்கு தடையின்றி ஆற்றொழுக்காகத் துள்ளி வரும் சொற்கள். எழுத்திலே.... சொல்லிலே அவருக்கென ஓர் தனிப்பாணி. சொற்களை அவர் தேடுவது இல்லை. கூப்பிட்ட குரலுக்குக் கைகட்டி அவை ஏவல் புரியும்.

இலக்கியத்தைப் படிப்பவர்கள் நம்மில் பலர் இருக்கிறார்கள். ஆனால் இலக்கியத்தை நயப்பவர்கள் அனுபவிப்பவர்கள் வெகு சிலர்தான். இதோ பாலைக்கலியிலே ஒரு பாடல்.

*"அறம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்தாம்*
*கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்*
*துள்ளுநர் காண்மார் தொடர்ந்துயிர் வவ்வலின்*
*புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை"*

இரக்கமற்ற மறவர்களின் செயலுக்கு இதனைவிட வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா? பாடலைப் படிக்கும்பொழுது அடிமனதில் நிழலோட்டமாகக் காட்சிகள் விரிய வேண்டும். அதில் படிப்பவன் தோய வேண்டும் அதுமட்டுமல்ல அதுவாகவே ஆகிவிட வேண்டும். அதுதான் உண்மையான இரசிப்பு. இரசிப்பதற்கும் தனி ஆற்றல் வேண்டும். அதனை யாரும் கற்றுத்தர முடியாது. அதற்கெனத் தனிக் கல்லூரியும் கிடையாது. பண்டித மணி அவர்கள் சிறந்த இலக்கியவாதி மட்டுமல்ல. முதிர்ந்த இரசிகரும் கூட கம்பனை இரசிப்பதைப் போலவே கச்சியப்பரையும் இரசிப்பார். தமிழ் நாட்டிலே சுடர்விட்ட இரசிகமணி, டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களையும் இலக்கியவானிலே ஒளி கூட்டிய பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையையும் இலக்கிய நெஞ்சங்கள், தமிழ் நெஞ்சங்கள் மறக்காது.

விதித்தன செயலும், விலக்கியன ஒழிதலும் பண்டிதர் ஐயா அவர்களது தனித்த பண்புகள். நற்குடிப் பிறப்பும், நிறை கல்வியும், அறிவும், திருவும், அஃகா அன்பும், வேஃகா உள்ளமும், பொறையும், நிறையும், பொச்சாப்பின்மையும் கொண்ட ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன், வருங்கால சமுதாயத்தின் கலங்கரை விளக்கம். கிழக்கிலே ஒரு புலவர் மணி.. வடக்கிலே ஒரு பண்டிதமணி இருவருமே கண்ணின் கருமணிகள்.

*வாழ்க! பண்டிதமணி அவர்களது புகழ் !!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச முனிவர்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, டி.லிட்

பசுக் கொலைக்கஞ்சிப் பரதேசம் போனவர் ஞானப்பிரகாசர். இலங்கையை பறங்கியர் ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பறங்கித் தலைவனும் பரிவாரமும் விழுங்குவதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொரு பசு முறைதவறாது கொடுக்க வேண்டுமென்பது தலைவிதி. இக் கொடுங்கோன்மைக்குத் தீர்வு காணப் பரதேசம் சென்றவர் யாழ் திருநெல்வேலி ஞானப்பிரகாசர்.

ஞானப்பிரகாசர் சென்றடைந்த பரதேசம் தேசஸ்மிக்க அம்பரதேசம் சிதம்பரம்.

சிதம்பரத்தில் தேவி சந்நிதியிலே நாற்பது நாள் உபவாசமிருந்து கடுந்தவம் புரிந்தார் ஞானப்பிரகாசர். தேவியின் அநுக்கிரகம் கிடைத்தது. அநுக்கிரகித்தவாறு கௌடதேசம் போய் வேதாகம சமஸ்த சாத்திர பாரங்கதாரயினார் ஞானப்பிரகாசர். அதன்மேல் திருவண்ணாமலை ஆதீனத்தில் காஷாயம் பெற்று முற்றத்துறந்த முனிவர் ஆயினார்.

ஞானப்பிரகாசரின் பெருமையில் ஈடுபட்ட தனவான் ஒருவர் சிதம்பரத்தில் அவர் பெயரால் ஒரு குளம் அமைத்தார். இது ஞானப்பிரகாசர் குளம் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

சமஸ்கிருதத்தில் சிவஞானபோதவிருத்தி, பௌஷ்கராகமவிருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதி மகான்மிய சங்கிரகம் என்னும் நூல்களும் தமிழில் சிவஞான சித்தியாருக்கு ஓர் உரையும் ஞானப்பிரகாச முனிவர் அருளியவை.

வடமொழிச் சிவஞானபோதத்து இறுதிச் சூத்திரத்து இறுதியடி, ' ஏவம் வித்தியாத் சிவஞ்ஞானபோதே சைவார்த்த நிர்ணயம்' என்பது. இதில் சிவஞ்ஞானபோதே என்பதற்கு ஞானப்பிரகாசர் செய்த உரை பெரிதும் சிந்தனைக்குரியது.

உரைகாரர்கள் (இச்) சிவஞானபோதத்தில் என ஒரு சுட்டு வலிந்து வருவித்துக்கொண்டார்கள். ஞானப்பிரகாச முனிவர் அப்படியொரு சுட்டு வருவிக்கவில்லை. ஆகவே முனிவர் கருதும் சிவஞானபோதம் யாதாம்? என்பது விசாரிக்கற்பாலதாம்.

ஞானப்பிரகாச முனிவரின் தவ வலியால் பறங்கியர் ஆட்சி ஒடுங்கியது. அதன்மேல் ஒல்லாந்தர் சிறிதுகாலம் தலைகாட்டினராயினும் அவர் அரசு தேய்பிறையாயது. மறைவிலிருந்த சைவம் தலைநீட்டியது. சைவாலயங்கள் எழுந்தன. அடுத்து,

ஆங்கில அரசு வந்தது; நீதிக்கு இடம் அளித்தது. ஆயினும் பாதிரிகள் தொல்லைகள் எழுந்தன. ஞானப்பிரகாச முனிவர் மரபில் முனிவரின் தவம் திரண்டு உதயம் செய்தது போல், ஓர் ஆறுமுக நாவலர் உதயமாயினர் ஞானப்பிரகாச முனிவரின் தேவசக்தி இருந்தவாறு! திருச்சிற்றம்பலம்.

## பதிப்பாசிரியர் குறிப்பு:

கட்டுரையில் குறிப்பிடப்பெற்றுள்ள நிகழ்ச்சியின் விளைவாக அக்காலத்தில் யாழ்ப்பாணத்தார் பலர் சிதம்பரத்துக்கு வந்து சிவபுரிப் பகுதியில் ஒரு குடியிருப்பை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர் என்று வரலாற்றுப் பேராசிரியர் சி.எஸ். சீனிவாசாச்சாரியார் 1940 இல் எழுதிய ஆய்வுரையில் தெரிவிக்கிறார்.

ஞானப்பிரகாசர் சிதம்பரம் அடைந்து பல்லாண்டுகள் அங்கேயே தங்கி, சமயசாத்திர நூல்கள் பலவற்றை வடமொழியில் இயற்றினார். இவர் தங்கியிருந்த மடத்திற்கு அடுத்த நிலத்தில் இருந்த நிதிக்குவையைக் கொண்டு மிகப் பெரிய தொரு திருக்குளமும் அதன் அருகில் திருமடமும் அமைத்தார். இவை 'ஞானப்பிரகாசர் குளம்' என்றும் 'ஞானப்பிரகாசர் மடம்' என்றும் சிதம்பரத்தில் கனகசபை நகர் அருகே இன்றும் நின்று நிலவுகின்றன.

இவர் இயற்றிய பல நூல்களுள், இப்போது கிடைப்பது சித்தியார் சுபக்கவுரை மட்டுமே. இதன் இறுதியில் இவரைப்பற்றி ஒரு பாடல் காணப் பெறுகிறது.

*"சொல்லில் நாவில் துரிசறும், சோத்திரத்து*
*ஒல்லுமேற் சிவஞானம் உதித்திடும்,*
*செல்லுமெய் அருணந்திசெய் சித்திக்கு*
*நல்ல ஞானப்ர காசன் நவிற்றுரை"*

(ஆதாரம் தமிழ் இலக்கிய வரலாறு: 16ம் நூற்றாண்டு. பாகம் 3 ப. 62.69 ஆசிரியர் மு. அருணாசலம்).

திருவண்ணாமலையில் ஞானப்பிரகாச சுவாமிகள் சில காலம் வாழ்ந்தார். இவர் இயற்றிய 129 சமஸ்கிருத சுலோகங்கள் SIVA YOGARATNA DE JNANA PRAKASA என்ற பெயரில் தாரா மைக்கேல் என்பவரால் பதிப்பிக்கபெற்றுப் பிரெஞ்சு மொழியில் புதுச்சேரி பிரெஞ்சு இன்ஸ்டிட்டியூட் ஆப் இண்டாலஜி என்ற நிறுவனத்தாரால் 1976 இல் வெளியிடப்பெற்றுள்ளன.

நன்றி : *'கோயில்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன்

## இலங்கை இந்துக்களை ஒன்று கூட்டிய ஒப்பற்ற மாபெருந் தலைவர்

**(பண்டிதர் செ. பூபாலபிள்ளை)**



இந்துக்களின் நாகரிகம் திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததொன்று. இந்த உண்மையினை அண்மையில் வாழ்ந்து மறைந்த சைவப்பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் உள்ளவாறு காட்சி மூலம் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

இவர் மாகாண அதிபராகவும், மந்திரியாகவும் உயர்தரப் பதவிகள் பலவற்றை இலங்கை அரசினரிடம் ஏற்று நடு நின்று கோணாத நீதி செலுத்தியுள்ளார். இவர் 'சிவமணி' என்னும் பட்டம் பெற்று தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தை உறைவிடமாகக் கொண்டு அருமையான திருப்பணிகள் புரிந்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கனவிற் கண்ட திருக்கேதீச்சரத் திருக்கோயில் திருமடம், திருக்குளங்களை நனவிற் காட்டி மாண்புற அமைக்க உதவினார். ஆங்கு ஆண்டுதோறுந் திருவிழா எடுத்து அகமிக மகிழ்ந்தார். தீவினை அணுகாது திறம்பட வாழ்ந்தார்.

மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் திவ்விய திருப்பதியை இரவும் பகலும் இடையறாது சிந்தித்து வணங்கித் துக்கம் நீங்கிச் சிவனடியாராக வாழ்ந்து அகில இலங்கை இந்துமா மன்றப் பத்தாவது ஆண்டு விழாவைத் தலைமை தாங்கி அழகுற நடத்திய பின்பு நல்லூரானைத் தரிசித்துத் தமது ஆப்த நண்பர் ஞானசம்பந்தனுடன் திருக்கேதீச்சரக் கொட்டிலில் அமர்ந்து திருக்கேதீச்சரத்தானுடன் இரண்டறக் கலந்தார்.

*அட்டன் அழகாக அரைதன்மேல் அரவார்த்து*
*மட்டுண்டு வண்டாடும் பொழில் மா தோட்ட நன் நகரில்*
*பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்*
*சிட்டன் நமையாள்வான் திருக்கேதீச்சரத்தானே*

இத்தேவாரப் பதிகப்படி திருக்கேதீச்சரத்தான் இவரை ஆட்கொண்டருளினார்.

### இலங்கை இந்துக்களை ஒன்று கூட்டியமை

இலங்கைவாழ் இந்துக்கள் தமக்கென ஒரு மாமன்றமில்லாதுந் தலைவரில்லாதுங் கட்டற்ற மாடுங் கயிறற்ற பம்பரமும் போல தாம் தாம் விரும்பியவாறு ஒழுகி இடர்பல உற்றனர். பிறமதத்தவருடைய எள்ளி நகையாடல்களுக்கு இலக்காயினர். சைவ பரிபாலன சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை, இந்து வாலிபர் சங்கம், இந்து இளைஞர் சங்கம், அருள்நெறித் திருக்கூட்டம், இந்து சமய விருத்திச் சங்கம், கதிர்காமத் தொண்டர் சபை, சைவமங்கையர் கழகம் முதலிய பல சபைகள் இருந்தும் இவை அகில இந்துக்களையுந் தம்முள் அடக்கி ஈழவராகும் இந்துக்கள் யாவருக்கும் ஒரு முகமாகப் பணிபுரியும் ஆற்றலைப் பெறவில்லை. இந்தச் சங்கடத்தால் இந்துமதப் பிரச்சினைகளை அரசினருடன் அன்பாக வாதாடித் தீர்க்க முடியவுமில்லை. இந்தக் குறைபாட்டைச் சிவனடியாராக வாழ்ந்த சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் உள்ளவாறு உணர்ந்தார்கள். உணர்ந்த இவர்கள் கொழும்பு மாநகரத்து வாழ்ந்த இவர் நண்பர்களாகும் இந்துப் பெருமக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். இதனைக் கேட்ட இவர்களும் திருக்கேதீச்சரத்தான் திருவருளால் உள்ளவாறு உணர்ந்தனர். இவர்கள் இந்த உணர்ச்சியால் அனைத்து இலங்கையிலும் இந்து மதப் பண்பாட்டைப் பாதுகாக்கவும், அதனை இந்து சமூகத்தில் நிலைநாட்டவும், ஈழத்துள்ள சகல இந்துச் சங்கங்களையும் இணைத்து ஓர் அகில இலங்கை இந்துமா மன்றம் அமைக்க வேண்டும் என ஒருமனதாக தீர்மானித்தனர். இத் தீர்மானத்தை இலங்கையில் அமைந்துள்ள சகல இந்துமதச் சங்கங்களுக்கும் அறிவித்து அவற்றின் பிரதிநிதிகளைக் கொழும்புக்கு வரவழைத்தனர். வரவழைக்கப்பட்ட எல்லோருங் கொழும்பு மாநகரத்துள்ள பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒன்றுகூடி 1955 ஆம் ஆண்டு தை மாதம் அகில இலங்கை இந்துமா மன்றத்தை அமைத்தனர். இதன் தலைவராக உயிர் நீங்கும் வரையும் இடையறாது தொடர்ந்து பத்துவருட காலம் சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களையே அகில இலங்கை இந்து மாமன்றத்தார் தெரிவு செய்து அமர்த்தினர்.

கல்வி செல்வங்களிற் உதித்தவரும், உலகியலிலும் அரசியலிலும் நல்லனுபவம் வாய்ந்தவரும் ஆக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினாலும் இன்சொல்லினாலும், தாழ்ச்சியினாலும் சாந்தமாக யாவரையும் அணைத்து கருமம் முடிக்குந் தனி ஆற்றல் இவருக்குண்டு. பிரச்சினைகளை விட்டுக் கொடுத்து அனைவரையுஞ் சமாதானமாக அணைத்துக் கருமம் முடிக்கும் ஒரு கரும வீரர் இவர். சைவ சித்தாந்த மகாநாட்டை இவர் இலங்கையிற் சீருற நடத்தியதை முகமுகமாகக் கண்ணுற்றோர் இவரது நிருவாகத் திறனை நன்கறிவர். சிவானந்தக் குருகுலத்தைத் திருக்கேதீச்சரத்து அமைத்து சிவப்பிராமணர்களுக்கு 'வேத ஆகம சாஸ்திர அறிவினையும், அர்ச்சக முறைப் பயிற்சியினையும் மூன்றரை வருட காலத்துப் பயிற்றுவித்துச் சிவநெறி காத்தோம்பிய இந்தச் சிவதொண்டர் உதவியினை யார்தான் மறக்க முடியும்? மத்திய இலங்கையில் அனுராதபுரத்துள்ள கதிரேசன் கோயிலை அரசினருடன் வாதாடி இந்து சாத்திர விதிக்கமையப் படம் எழுதி அமைப்பித்துக் குடமுழுக்குமாட்டுவித்த சைவக் குலமகனார் இவர். பாணந்துறை கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித்துக் குடமுழுக்காட்டி இந்துமா மன்றத்துக்குப் பெரும்புகழ் ஈட்டித் தருமுன்பு அந்தோ! இவர் பரகதி அடைந்துவிட்டாரே! என் செய்குவம் யாம்? திருக்கோணேசுவர ஆலய பரிபாலனமுறைகளை ஆராய்ந்து முடிக்கவேண்டிய ஐவருள் ஒருவராகிய இவர் அஃது நிறைவேறுமுன்பு இகவாழ்வை நீத்தனரே!

இலங்கைப் பாடசாலைகளில் உள்ள பொதுத்தராதரப்பத்திர உயர்தரவகுப்பு இந்து சமயமாணவருக்கு இந்துசமயப் பாடத்திட்டத்தை இந்துமாமன்ற சார்பில் அமைப்பித்து உதவிய இவர், பெரும் பிரிவை உயர்தர இந்து மாணவரும் பெற்றோரும் எண்ணி எண்ணி அவலக் கவலை அடைகின்றனரே!

பெரும்பான்மை இந்து மாணவர் கற்கும் பாடசாலைகளுக்கு இந்து சமயத்தைச் சேர்ந்த அதிபர் நியமிக்க வேண்டுமென வித்தியா பகுதியாருடன் வாதாடி வழக்குரைத்த இவர் பேரிழவால் இந்து அதிபர் இருந்த இடத்துக்குக்கூட வித்தியாபகுதியார் கிறித்துவ அதிபரை அச்சமின்றி இப்பொழுது மாற்றி அனுப்புகின்றனரே! இந்த அநீதியை இலங்கை இந்துக்கள் யாருடன் சொல்லி அழுவது?

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளராகும் இந்துக்கள் வழிபடும் ஆலயங்களுக்குச் சங்கமக் குருக்களை திருக்கேதீச்சரத்துப் பயிற்றி அர்ச்சகராகத்தருவதாக உறுதி கூறிய 'அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர் ஐயோ! அது செயற்படு முன்பு மீளா நித்திரைக் காளானாரே. ஈழநாட்டுக் குடிபதிகளிடத்திலே அரசினர் சமய ஒற்றுமைக் கனாக்காண முயலுகின்ற இந்த நல்ல தருணத்திலே அரசியல் ஞானத்திற் சிறந்த எழுபது வயது நிரம்பிய இந்துப் பெரியார் எம்மை விட்டுப் பிரியலாமா? என்செய்வது? இதுவிதியின் சதி.

### மட்டக்களப்பிற் பற்றுள்ள சிவமணி

மட்டக்களப்பு வாழ் இந்துப் பெருமக்களைப் பண்டொரு நாள் ஒன்று கூட்டி இந்துமா மன்றச் செயலாளருடன் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையை அடைந்து அகில இலங்கை இந்துமா மன்ற நோக்கங்களை அன்பாகப் பேசி மட்டக்களப்பாரை இந்து மாமன்றத்தாருடன் இணைத்தருளிய இவர் எங்கே? மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை அன்றைய மாணவ மாணவியர் மகிழ்வுறுமாறு இவருடன் கலந்துரையாடி விருந்துண்டு இவர்கள் நடத்திய ஆடல்பாடல்களைக் கண்டுங்கேட்டும் அகமிக மகிழ்ந்த சிவனடியார் சிவமணி ஐயா, வைத்தியநாதரை அவர்கள் எப்படி மறப்பது? இனி அவர்களை எங்கே தேடிக் காண்பது? விதியே நீ சதிசெய்துவிட்டாய்.

'எனது தமிழ் பொறுக்குத்தமிழ், உங்களைப் போல ஒழுகு தமிழ் பேச எனக்கு வராது. மட்டக்களப்பு வளர்ச்சிக்குரிய நல்லூற் பாதம் இரண்டு எனது மனதிலேபடுகிறது. ஒன்று யாழ்ப்பாணத்தார் இந்த நாட்டுப் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவருடன் ஒரு மேசையில் இருந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கோப்பி குடிக்க முடியாத நிலையில் இன்று இருக்கிறோம். நீங்கள் அப்படி இல்லை. அவர்களுடன் அன்பாகக் கலந்து உறவாக இருக்கிறீர்கள். மற்றது கண்ணகியும் அல்லியும்போன்ற இந்த வீர ரமணிகள் நடனத்தை இங்கு கண் முன்னே கண்ட கிழவனாகிய எனக்கும் வீரம் பிறக்கிறது. பெண்களுக்கு எந்த நாடு முதன்மை கொடுக்கிறதோ அந்த நாடு முன்னேறும். இது சரித்திரங் கண்ட உண்மை.' என்று நயம்படத் திறன் ஆயந்து சோதிடங் கூறிய பெரியார் பெரும் பிரிவால் ஏற்பட்ட துயரத்தை மட்டக்களப்பு மக்கள் எங்ஙனம் பொறுப்பது!

தமது தள்ளாப் பராயத்து மட்டக்களப்பு சித்தாண்டிக் கந்தசுவாமி கோயிலில் இருந்து தூய வெண்ணிற வேட்டி சால்வை மாத்திரந்தரித்துத் திருநீறு பூசியபடி யாழ்ப்பாண வண்ணார்பண்ணைச் சிவதொண்டனில் இருந்து எழுந்தருளிவந்த திருவடியுடன் செங்கலடிக்கு நடந்து பல கல்தூரம் வந்தார், நமது வைத்தியநாதன். செங்கலடிச் சிவதொண்டன் நிலையத்தில் சாதாரண பாமர மக்களுடன் ஒன்றுகூடி பந்தியில் இருந்து விழாவின்போது உணவருந்திச் சிறுமையாற் பெருமை தேடிய சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதனை மட்டக்களப்புச் சைவ நன்மக்கள் எப்படி மறப்பது?

இலங்கை இந்து மன்றங்களை ஒன்றுகூட்டி இணைத்தார் வைத்தியநாதன். இவர்களைத் தென்னிந்தியச் சிவநெறிச் செல்வருடன் சேர்த்தார் சேர். வைத்தியநாதன். ஈழவரிடையே யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், மலைநாட்டுத்தமிழர் என்ற வேற்றுமைக்கு இந்து மதத்தை மையமாகக் கொண்டு வழி வகுத்தார் நமது விரிந்த மனப்பான்மையுள்ள சேர் கந்தையா வைத்தியநாதன். கதிர்காம மடங்களை அப்புறப்படுத்த வேண்டாம் என்று கர்ச்சித்தார், சிவமணி.

இத்தகைய பெரியார் நம்மனைவர் மனத்துடனுங் கலந்துகொண்டார். அன்னார் வகுத்துவைத்த வழியை இந்துக்களாகிய நாமெலாம் பின்பற்றி ஒழுகுவதல்லது இத்தருணம் வேறு யாது செய்யவல்லோம்? அவர் முயன்று அமைத்துக் காத்த வளர்த்த அகில இலங்கை இந்து மாமன்றம் வாழ்க! வைத்தியநாதன் திருத்தொண்டு ஊழிதோறூழி நிலைபெற்று உயர்வுறுக!

*"கந்தையா, வைத்திய நாதரையாங் காண்பரிதால்*
*எந்தை திருக்கேதீச் சரத்தான்– இணையடியை*
*நந்தா விளக்கெனவே நண்ணினார் இன்புற்றார்*
*அந்தரித்தோம் இந்துமதத் தார் "*

(குறிப்பு: *1966ல் மாமன்றம் வெளியிட்ட அகில இலங்கை இந்துவில் பிரசுரமான கட்டுரை இது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாட்டில் சித்தர் மரபு

ச. அம்பிகைபாகன்

தமிழ் நாட்டிற் சித்தர் மரபொன்று நெடுங்காலமாக இருந்து வருகின்றது. நாயன்மார்களை அறுபத்து மூவர் என்பது போன்று சித்தர்களையும் பதினெண்மர் என்று கூறுவது மரபு. ஆயினும் பதினெண்மருக்கு மேற் பலர் இருந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. சமீப காலத்திலும், தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் சித்தர்கள் பலர் இருந்தனர்.

சித்துக்களில் வல்லவர்கள் சித்தர்கள் என்று மக்கள் பொதுவாக கருதுகின்றனர். சித்தர்கள் அட்டமாசித்திகளிற் கைதேர்ந்தவர்கள். யோகமார்க்கத்தில் வல்லவர்களான சித்தர்கள் அந்நெறி நின்று, பல சித்திகளைப் பெற்றனர். சித்தர்கள் கைக்கொண்ட யோகமார்க்கம் வாசியோகம் எனப்படும். வாசியென்பது சுவாசம். வாசியை அடக்கி ஆண்டவர்கள்,

*"வாசிதனை அறியாத சண்டிமார்கள்*
*வார்த்தையினால் மருட்டிவைப்பார்*
*நாசிநுனிதன் நடுவில் சிவத்தைக் கண்டோர்*
*நான் முகனும் திருமாலும் சிவனும் தாமே"*

என்பர் வான் மீகர் என்னும் சித்தர். சித்தர்கள் சாதிசமய ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்: சில சித்தர்கள் இவற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். மேலும் உடலைத் திடமாக வைத்திருப்பதற்கும் நீண்டநாள் வாழ்வதற்கும் சித்தர்கள் வைத்தியத் துறையில் ஆராய்ச்சி செய்து கண்ட முறை சித்த வைத்தியம் எனப்படும்.

## கடையிற் சுவாமிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஈழநாட்டிற் கடையிற் சுவாமி, ஆனைக்குட்டிச் சுவாமி, பரமகுருசுவாமி என்னும் மூன்று சித்தர்கள் சஞ்சாரம் செய்தனர். கடையிற் சுவாமிகளின் பூர்விகத்தைப் பற்றி நிச்சயமாக ஒன்றும் கூறமுடியவில்லை. சிலர் வண்ணை வயிரமுத்துச் செட்டியார் என்பவர் தென்னிந்தியா யாத்திரை செய்தபோது இவரைக் கண்டு அழைத்ததற்கிணங்க இவர் யாழ்ப்பாணம் வந்ததாகக் கூறுவர். வேறுசிலர் பங்களூரில் நீதிவான் உத்தியோகம் பார்த்தபோது குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க மனமொருப்படாமையினால் அதனைத் துறந்துவிட்டு ஈழம் வந்தவர் என்பர். இக்கூற்றுகள் எவ்வாறாயினும் இவர் இந்தியாவிலிருந்து வந்தவர் என்பதும் இவரது தாய் மொழி தெலுங்கல்லது கன்னடமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் இவர் பேசிய பாஷையிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. பெரும்பாலும் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியிற் சஞ்சாரம் செய்தமையால் இவர் கடையிற் சுவாமி என்றழைக்கப்பட்டார். கக்கத்திலே குடையும் கரிய உடையும் கொண்டு உலாவிய சுவாமிகளின் தோற்றம் வசீகரிக்கும் தன்மையது. சாமுந்திரிகா இலட்சணங்களெல்லாம் பொருந்தியது. சுவாமிகள் பல சித்துக்களைச் செய்துள்ளனர். பெரிய கடையில், கடை வைத்திருந்தவர்கள் சுவாமிகளுக்கு ஏதேனும் ஒரு பொருளைக் கொடுத்தால் தங்கள் வியாபாரம் செழித்தோங்குமெனக் கருதினர்.

யோகர் சுவாமிகள் தாம் பன்னிரண்டு வயதுப் பையனாக இருந்தபோது கடையிற் சுவாமிகளைக் கண்டதாகக் கூறியுள்ளார். அவர்கள்

"கடையிற் சுவாமி சிவபோகத்தைப் புசித்தவர். அவரோடு ஒப்பிடும்போது நாமெல்லாமெங்கே? கிருஷ்ண பரமாத்மா போல் அவர் பல லீலைகள் புரிந்துள்ளார்கள். அவர் நன்மை தீமைக்கு அப்பாற்பட்டவர். அவர் என்ன செய்தாலும் அவரைக் குறை சொன்னவர்கள் கிடையாது"

என்று கூறியுள்ளார். கடையிற் சுவாமிகளுக்குச் சார்ஷன் சுவாமி, வயிரமுத்துச் செட்டியார், சின்னச் சுவாமி, நன்னையார், குழந்தைவேலுச்சாமி, சடைவரதர், செல்லப்பாச் சுவாமி போன்ற பலதரப்பட்ட சீடர் இருந்தனர். சார்ஷன் சுவாமிகளே கந்தர்மடம் வேதாந்த மடத்தைத் தாபித்தவர். சின்னச்சுவாமியின் சமாதியுள்ளதும் நாவலர் வீதியிலுள்ள அன்னசத்திரமுள்ளதுமான காணியைச் சுவாமிகள் பேரில் தர்மசாதனம் செய்தவர் வயிரமுத்துச் செட்டியார். மண்டை தீவைச் சேர்ந்தவர் நன்னையர். குழந்தை வேலுச்சுவாமி அரசாங்கத்தில் உயர் பதவி வகித்துச் சீடரான பின், அதனைத் துறந்து சமயப் பணியில் முழு நேரத்தையும் செலவழித்துக் கீரிமலையிற் சமாதி கொண்டவர். ஏகாலியர் குலத்தைச் சேர்ந்த சடைவரதரின் சீடர்கள் ஏழாலையிலும் உசனிலும் மடங்கள் தாபித்தவர்கள். நல்லூர் தெற்கு வீதியில் வசித்து கந்தசுவாமி கோயில் தேரடியிற் சஞ்சரித்து, அங்கே யோகர் சுவாமிகளுக்கு உபதேசஞ் செய்தவர் செல்லப்பா சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் ஆதிகுரு எனக் கூறத்தக்க கடையிற் சுவாமிகள் சமாதி வண்ணை நீராவியடியிற் காணப்படுகிறது. பண்டிதர் மு. கந்தையா எழுதிய 'குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும்' (1965) எனும் நூலிற் சுவாமிகள் பற்றி விரிவாக அறியலாம்.

## ஆனைக்குட்டிச் சுவாமிகள்

கொழும்பு வீதிகளிற் பெரும்பாலும் சஞ்சரித்த ஆனைக்குட்டி சுவாமிகள் ஸ்தூலமான சரீரத்தையுடையவர். சேர். பொன்னம்பலம் அருணாசலம் போன்ற தலைவர்கள் இவரை ஆதரித்தார்கள். இவர் சமாதி கொழும்பு முகத்துவாரத்தில் உள்ளது. சுவாமிகளின் சீடர் மொட்டைச்சி அம்மையார் திருக்கேதீச்சரத்திற் கொட்டில் அமைத்து வதிந்து வந்தார்.

## குமரகுரு சுவாமிகள்

குமரகுருசுவாமிகள் பற்றி இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சோமசுந்தர பிள்ளை, அக்கல்லூரி வெள்ளி விழா மலரிலும் (1939) சேர்.பொன்னம்பலம் அருணாசலம் (Studies and Translations 1937) எனும் நூலிலும் எழுதியுள்ளனர். சுவாமிகள் இராமநாதபுரம் கிடாரிப்பட்டியிற் பிறந்தவரென்றும் இலங்கை மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர் மத்தியிற் பிறந்தவரென்றும் வேறுபடக்கூறுவர். சுவாமிகள் இராமநாதபுரக் கிடாரிப்பட்டியிலும் யாழ்ப்பாணத்தில் மருதனார் மடம், கீரிமலை, வண்ணை முதலிய இடங்களிலும், மாத்தளையிலும் கொழும்பிலும் சஞ்சாரம் செய்தவர். கீரிமலையிற் சண்முகநாதன் அச்சக அதிபர் சண்முகநாதனின் தந்தையார் இவருக்கு மடமொன்று தாபித்துக் கொடுத்தார். இங்கு இருந்த காலை குழந்தைவேலுச் சுவாமிகளுக்கு உபதேச குருவாக அமைந்தார். சோமசுந்தரம்பிள்ளை கொழும்பில் தம்பையா சத்திரத்தில் இருந்தகாலை சுவாமிகள் தமக்கு உபதேசம் செய்ததாக எழுதியுள்ளார். சேர்.பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் முயற்சியினாற் சுவாமிகள் சமாதி மாத்தளையிலே தாபிக்கப்பட்டது.

## யோகர் சுவாமிகள்

செல்லப்பா சுவாமிகளின் சீடரான யோகர் சுவாமிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற் சிறந்த சித்த புருஷராக விளங்கியதோடு நாவலரவர்கள் வழியைப் பின்பற்றிச் சைவ சமய பரிபாலனமும் செய்து வந்தார். சித்தர் மரபும் வேதாகம மரபும் தாயுமானவரிடத்திற் போன்று இவரிடமும் சங்கமமாயின. வாசியோகத்திற் கைவரப்பெற்ற சுவாமிகள் பலவிதமான சித்திகள் உடையவராக விளங்கினார். சுவாமிகள் திருமுறைகளை முறையாக ஓதியும் ஓதுவித்தும் அவற்றுக்கு வகுப்புக்களை நடாத்தி வந்தும் புராண படனத்திற்குப் புத்துயிர் கொடுத்தும் சித்தாந்த சாத்திர வகுப்புக்களை நடாத்துவித்தும் சைவசமய பரிபாலனம் செய்து வந்தார்கள்.

சித்தர்கள் நமது நாட்டில் வாழையடி வாழையாக வந்துள்ளார்கள். இதனால் சித்தர் மரபு ஒரு வற்றாத ஊற்றாக இருந்து வருகிறது. இதுவே நமது நாட்டின் தனிச் சிறப்பாகும்.

(நன்றி: *திருக்கேதீச்சர திருக்குடத் திருமஞ்சன மலர்*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான்
தான்தோன்றீஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் இந்து மதம்

1. இலங்கையில் இந்து மதத் தொன்மை
2. புராதன ஈழத்தில் இந்து மதம்
3. இக்கால இலங்கையின் சைவசமய மறுமலர்ச்சி
4. இலங்கையில் சுவாமிஜி விவேகானந்தர்
5. ஈழநாட்டுத் தமிழர்களும் தில்லைச்சிற்றம்பலமும்
6. தமிழரின் தத்துவம் சைவசித்தாந்தம்
7. Hinduism and its impact on Buddhism
8. வன்னியும் வன்னியரும்
9. மட்டக்களப்பு மாநில வரலாற்றுச் சிறப்புமிக்க சைவத் திருத்தலங்கள்
10. மலையகத்தில் சைவம்
11. முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவ சமயம்
12. நல்லை நகரில் வளர்ந்த சமயம்
13. நகரமய சூழலில் இந்து மத வழிபாடு
14. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்துமதத்தின் தொன்மையும் அதன் இன்றைய நிலையும்

வித்துவான். க. ந. வேலன்.

## சில அடிப்படை உண்மைகள்

இந்து மதம் என்னும் சொல்லால் குறிக்கப்படும் மதமானது பல தத்துவ சமயக் கோட்பாடுகளைத் தன்னுள்ளே அடக்கிய ஒரு மதமாகும்.

அத்வைதம், துவைதம், விசிட்டாத்துவைதம், சைவசித்தாந்தம் முதலிய தத்துவக் கோட்பாடுகளும் இவற்றைத் தெளிவுபடுத்தும் சமயக் கோட்பாடுகளும் ஒன்று சேர்ந்ததே இந்துமதமாகும்.

இது ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல் இயற்கையாகத்தானே முகிழ்த்த ஒரு மதமாகும்.

ஐம்பூதங்களின் கூட்டாகிய இவ்வுலகில் ஐம்பூதங்களின் சேர்க்கைக்கு ஏற்ப நிலம், நீர், தட்பம், வெப்பம் முதலியன அமைந்து அவற்றிற்கு ஏற்ற தாவரங்களும் உயிர்வாழ்வனவும் தோன்றி வளர்ச்சியடைந்து வருவதைக் காண்கின்றோம்.

மனித இன வளர்ச்சி இரு வகையான கூர்ப்பினையுடையது. ஒன்று புறவளர்ச்சி பற்றியது. மற்றது அகவளர்ச்சி பற்றியது. அகவளர்ச்சியே புற வளர்ச்சியாதலால் அகவளர்ச்சியும் இருவகையானது. ஒன்று உலகியல் பற்றிய அறிவு வளர்ச்சி. அதுவே விஞ்ஞான வளர்ச்சியாகிய புறவளர்ச்சியாகும். மற்றது பரவியல் வளர்ச்சி, அதுவே மெய்ஞ்ஞான வளர்ச்சி.

அகத்தின் விஞ்ஞானக் கூர்ப்பே புற நாகரிகமாக நவீன நாகரிகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அகத்தின் மெய்ஞ்ஞானக் கூர்ப்பே மதங்களாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

தானே தோன்றிய இந்துமதமாயினும் பிறரால் தோற்றுவிக்கப்பட்ட ஏனைய மதங்களாயினும், தாம் தோன்றிய இயற்கைக்கு ஏற்ற இயல்பினையே கொண்டிருப்பதைக் காணலாம். இந்த இயல்பு, மதத்தின் தத்துவக் கோட்பாட்டினைவிட, மதத்தின் சமயக் கோட்பாட்டில், வெளிப் படையாகத் தோன்றுவதைக் காணலாம். மதமானது சாதாரண மக்களிடையே சமயக் கோட்பாடாக, புறச் சடங்குகளாக விரிந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

வலுவான சிறப்பான சமுதாயக் கட்டுக் கோப்புக்கு மதங்கள் பெரும்பணியாற்றி வந்துள்ளன. இதற்கு, அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளோடு கூடிய அமைப்புகள் ஒரு சவாலாக அமைந்த போதிலும் இவற்றால் முன்னையதனை மாற்ற முடியவில்லை.

மதக்கட்டுக் கோப்புக்குப் பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாமிய மதங்களை உதாரணமாகக் கொள்ளலாம். இந்தமதக் கட்டுக் கோப்புக்குச் சவாலாக அமைந்ததே கால்மாக்சின் சித்தாந்தமாகும்.

பழமையும் முதுமையுமுடைய இந்துமதம் பௌத்தம் முதலான மதங்களைப் போன்ற வலுவான சிறப்பான சமுதாயக் கட்டுக்கோப்பினையுடையதாயினும் கால தேசவர்த்த மானங்களுக்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையைக் காலத்துக்குக் காலம் தோன்றிய ஞானிகள் இந்து மதத்தில் ஏற்படுத்தி இந்து மதத்தைத் தெளிந்த நீர் பாயும் ஜீவ நதியாக்கியுள்ளனர். இதனால் 'கம்பனும் கால்மாக்சும், காந்தியும் கால்மாக்சும்' என்று சமரசம் காணும் மனப்பக்குவத்தை இந்துக்கள் பெற்றுள்ளனர்.

இந்துமதம் காலத்தால் முற்பட்டும் சிறந்த கோட்பாடுகளையுமுடைய காரணத்தால் அதற்குப்பின் தோற்றுவிக்கப்பட்ட மதங்களில் இந்துமதம் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் பலதாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

*'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்துக் குரு'*

என்னும் கோட்பாட்டினையுடைய இந்து மதத்தினர், அக்கருணைக் கோட்பாட்டினைக் கைவிட்டு வேதவேள்விகளில் புரிந்த உயிர்க் கொலைகளைக் கண்டு தாளாத சமண, பௌத்த மதங்கள் ஜீவகருணைக் கோட்பாட்டைத் தம் மூச்சாகக் கொண்டன. " ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம்".

காண வேண்டிய இந்துமதத்தினர் அக்கோட்பாட்டை நெகிழ்த்த வேளையில் பாவ மன்னிப்பு என்னும் பெருந்தன்மையினைக் கிறிஸ்துவம் தன்கோட்பாடாகக் கொண்டது.

விக்கிரக வணக்கத்தின் தூய்மை கெட்டுப் பொய்யும் களவும் இந்துமதத்தினரிடம் புகுந்த போது விக்கிரக வணக்கமே பாவமானது என்னும் கோட்பாட்டைக் குரலாக இஸ்லாம் எழுப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கூறப்பட்ட சிந்தனைகளின் பின்னணியில், இலங்கையில் இந்துமதம் பற்றியச் சிந்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலங்கையின் ஆதிக்குடிகள்:

இலங்கை என்பது இலங்குவது, விளங்குவது, ஒளிர்வது என்னும் பொருளையுடைய ஒரு தமிழ்ச் சொல்லாகும். அது இலங்கு+ஐ எனப் பிரிக்கப்படும், விகுதியாகிய ஐகாரம், தனக்கென ஒரு பொருளின்றிப் பகுதிப் பொருளையே தனக்குரிய பொருளாகக் கொண்டுள்ளது.

இன்று இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழர் (இந்தியவம்சாவளியினர் உட்பட) சிங்களவர், வேடராகிய முப்பிரிவினரும் ஓர் இனத்தினரே, இவர்கள் இயக்கர் என அழைக்கப்பட்டனர்.

வெள்ளை நிறத்தினராகிய ஆரியர்களின் வருகையை எதிர்த்த இவர்களை ஆரியர், அசுரர் (மதுவை வெறுப்பவர்) இராட்சதர் (பயங்கரமான மிருக இயல்பினர்) இயக்கர் (பேய் பூத இயல்பினர்) எனப் பழித்தனர்.

இவர்களின் தலைவனாகிய இராவணன், இந்தியாவின் தெக்கண பீடபூமி உட்பட இந்தியாவின் பெரும்பகுதியை ஆட்சி செய்தான். அவன் தலைநகரே, இன்று லங்கா, சிறிலங்கா, என வழங்கப்படும் இலங்காபுரியாகும். இராவணனின் காலம் இராமாயண காலமாகும்; இவனது சமயம் இன்று இந்து மதமென வழங்கப்படும் சைவசமயமாகும்.

எனவே இலங்கையில் இந்து சமயத்தின் தொன்மை, இராமாயண காலத்துக்குப் பிந்தியதன்று.

இயக்கர்கள் இலங்கையை ஆண்ட காலத்தில் நமது முன்னோரில் மற்றொரு பிரிவினராகிய நாகர்களும் இந்தியாவிலும் இலங்கையிலும் செல்வாக்கோடு வாழ்ந்து வந்தனர். இதற்கும் நிறையச் சான்றுகள் உண்டு. இவர்கள் மதமும் இந்துமதமே.

இந்துக்களாகிய இயக்கர்களும் நாகர்களும் காலமாறுபாட்டால் பல மாற்றங்களை அடைந்து தமிழர்கள் எனவும் சிங்களவர்கள் எனவும் பிளவுபட்டனர்.

சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டிமண்டலம், கொங்குமண்டலம், தொண்டைமண்டலம் போல ஈழ மண்டலமும், தமிழ் நாட்டின் ஒரு பிரிவாக, தமிழ் பேசும் ஒரு மண்டலமாகவே இருந்தது.

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த 12 கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்றாக ஈழநாடு- சிங்கள நாடும் சிங்கள மொழியும் கணிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் தமிழே அன்றிக் கொடுந் தமிழ் மொழிகளும் பிற மொழிகளும் தங்கி வளர்ந்து வந்தன என்பதை,

*"சிங்களம் சோனகம் சீனம் சாவகம்*
*கொங்கணம் குடகம் கொல்லம் துளுவம்*
*வங்கம் கடாரம் மகதம் கோசலம்*
*கங்கம் காச்மீரம் கலங்கம் நேபாளம்*
*அங்கம் காந்தாரம் ஆகிய மொழிகள்*
*தங்கி வளரும் தமிழ் நா டென்ப"*

என்னும் செய்யுளால் உணரலாம். இதனால் தமிழர், மொழிப் பகையல்லாதவரென்பது புலனாகின்றது. மேலும் 'பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும் கண்டவர்" எனத் திருமூலரே கூறுவதினால், அக்காலத்துத் தமிழறிஞர், அக்கால வழக்கிலிருந்த பல மொழிகளையும் அறிந்திருந்தனர் என்பதும் புலனாகின்றது'.

யூகிஎன்னும் பெயரினை உடைய சித்தர், தமிழ்ப் பேரறிஞராக இருந்ததோடு, சித்த வைத்தியத்திலும் பெரும் புலமை பெற்றவர். இவர் பாடியதே 'யூகிபதினாயிரம்' என்னும் சித்தவைத்திய நூல் ( இந்நூலினை மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.)

இந்நூலிலுள்ள ஒரு பாடல், இந்தச் சித்தஞானி, தமிழ்த் தந்தைக்கும் சிங்களத் தாய்க்கும் மகனாகப் பிறந்தவர் எனக் கூறுகின்றது.

இயக்கர்களாகவும் நாகர்களாகவும் இருந்த நமது முன்னோர் தமிழர், சிங்களவர் எனப் பிளவுபட்டபோது, காலமாற்றத்தைப் புறத்கணித்த நம்முன்னோரில் ஒருபிரிவினர், வேடர்களாக இலங்கை வனங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களும் இந்துக்களே.

## இயற்கை மொழி, இயற்கை மதம்.

ஒவ்வொரு நாட்டின் இயற்கைக்கு ஏற்ற உயிரினங்கள் தோன்றுவதுபோல, பேசும் மொழியும் ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல் இயற்கையாகவே தோன்றுகின்றது. எனவே இயற்கைக்கு, ஏற்ப மொழிகளும் வேறுபடுகின்றன.

நமது முன்னோர்களாகிய இயக்கர், நாகர் பேசிய மொழியின் வளர்ந்த நிலையே இன்று நமது மொழிகளாகிய தமிழும் சிங்களமுமாகும். எனவே தமிழும் சிங்களமும் இந்த நாட்டில் தோன்றிய ஒரு மொழியில் கிளைத்த கிளை மொழிகளாகும். இவற்றுள் தமிழ் தன் தாய்மொழியைப் பெரிதும் தழுவி நிற்க, சிங்களம் பௌத்தத்தின் சார்பால் ஆரியத்தைப் பெரிதும் தழுவிக் கொண்டது.

இதனாலும் பல்வேறு காரணங்களாலும் தமிழோடு தொடர்புடைய ஒரு பிரதேச வழக்காக இருந்த சிங்களம், தனி மொழியாகிவிட்டது. தமிழினத்தோடு ஒன்றியிருந்த மக்கள், தாம் ஆரிய இனத்தினரெனச் சிங்களவர் எனும்தனி இனத்தினராயினர். இந்துக்களாயிருந்த இம்மக்கள் பௌத்தரெனும் தனிமதத்தினராயினர்.

இது இலங்கையில் ஏற்பட்டகாலச் சூழ்நிலை 2000 ஆண்டுகளுக்கு முன்பாகும். இதனை இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குப் பின்வரும் உதாரணம் ஓர் எடுத்துக் காட்டாகும்.

பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம் போன்ற உயர் செம்மொழி இலக்கியங்கள் தோன்றிய சேரநாடு, தமிழ் நாடாகவே இருந்தது. நாளடைவில் அங்குவழங்கிய தமிழ், கொடுந் தமிழ் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச வழக்காகத் திரிந்து வடமொழி இயல்பைப் பெரிதும் தழுவி இன்று மலையாள மொழியெனும் தனி மொழியாகி விட்டது. அம்மக்கள் மலையாளிகள் எனும் தனியினமாகிவிட்டனர். அந்நாடும் மலையாள நாடாகிவிட்டது.

நிற்க தமிழ் மொழி இலங்கையில் தோன்றி வளர்ந்த இயற்கை மொழியாயிருப்பதைப் போல, இந்துமதமும் இலங்கையில் தோன்றி வளர்ந்த இலங்கையின் தொன்மை மதமாகும்.

நடுநிலை தவறிய வரலாற்று ஆசிரியர் சிலர், இலங்கைத் தமிழர் உட்பட இந்நாட்டார் அனைவரும் வந்தேறு குடிகள் என்பர்.

7ஆம் 8ஆம் நூற்றாண்டில் வணிகத்துக்கு வந்த அராபிய இஸ்லாமியர், ஆங்கிலேயராட்சிக் காலத்தும் அதற்கு முன்னும் பின்னுமாக வந்த இந்திய வம்சாவழியினர் மலாய் இனத்தினர், பரங்கியர் தவிர இலங்கைத் தமிழரும் சிங்களவரும் வேடரும் இந்நாட்டில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய, பதியெழுவறியாப் பழங்குடியினராவர். அவர்களின் தொன்மை மதம் இந்துமதமாகும்.

## இலங்கையில் இந்துமதத்தின் தொன்மை.

வரலாற்றுச் சூனியமும் தாழ்வு மனப்பான்மையும் பகையுணர்ச்சியும் கற்ற சிங்கள மக்களையேயன்றி, தமிழ்மக்களைக்கூட தாம் இந்தியாவிலிருந்து வந்தவர்களென எண்ண வைத்துள்ளன.

இந்துமதத்தோடு இலங்கையில் இன்று பல மதங்கள் இருக்கின்றன. அவையே இங்கு வந்த மதங்களாகும். இவை வருவதற்குமுன் இங்கு இந்துமதமே பரவி இருந்ததென்பதற்குப்பல சான்றுகள் உண்டு.

1) தேவநம்பிய தீசன் காலத்தில் இலங்கையில் முதன்முதலாகப் பரப்பப்பட்ட பௌத்தம் இங்கு வருவதற்கு முன் இந்துமதமே இந்நாட்டின் ஒரே மதமாக இருந்தது. சிவனே முழுமுதற் தெய்வமாக முன்னேஸ்வரம், இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் முதலிய திருக்கோவில்களில் போற்றி வணங்கப்பட்டான். இக்கோவில்கள் பௌத்தம் இங்கு வருவதற்கு முன்பே விஜயனின் இந்நாட்டு வருகைக்கு முன்பே தோன்றியிருந்தன.

2) இராமன், இலங்கைப் படையெடுப்பின் போது முன்னேஸ்வரத்தை வழிபட்டான் என இராமாயணம் கூறுகின்றது. இந்நூல் இயக்கர்களையும் இயக்கர்வேந்தனாகிய இராவணனையும் இழிவுபடுத்திக் கூறியுள்ளபோதிலும் இராவணனின் சிவபக்தியை மிக உயர்வாகப் புகழ்ந்துள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள திருக்கோவில்களுள் முன்னேஸ்வரமே மிகப் பழமையான தென்பதனை முன்+ஈஸ்வரம் என்னும் அதன் பெயரே புலப்படுத்துவதாகும். மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள பழம் பெருந் தலம் நகுலேஸ்வரமாகும். இதனை அருச்சுனன் தரிசித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது.

3) விஜயன் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டுக்குவந்த போது பல சிவத்தலங்கள் இருந்தன. அவனும் பல திருத்தலங்களைக் கட்டியும் புதுப்பித்தும் சிவத்தொண்டு புரிந்துள்ளான்.

கிழக்கே தம்பலகாமத்தில் கோணேஸ்வரர் கோவிலைக் கட்டினான். மேற்கே நெடுங்காலமாக அழிபட்டிருந்த திருக்கேதீச்சுவரத்தை மீளக் கட்டினான். தெற்கே சந்திரசேகரன் கோவிலைக் கட்டினான். வடக்கே கீரிமலையின் அடிவாரத்தில் திருத்தம்பலேஸ்வரன் கோவிலைக் கட்டினான். கதிர்காமம் முருகன் ஆலயத்தையும் புதுப்பித்தான்.

திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரம், குளக்கோட்டன் என்னும் அரச குமரனால் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

4) கிறிஸ்துவ சகாப்தத்துக்கு முன்னும் பின்னும் இலங்கையின் பாலை முதலிய ஐவகை நிலப் பிரிவுகளையும் காக்கும் தெய்வங்களாக மாயோன் ( விஷ்ணு முதலிய தெய்வங்கள் வணங்கப்பட்டன). மாயோனே இலங்கையின் காவல் தெய்வமாகும்.

இராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் முறையே யாழ். வல்லிபுரத்திலும் யாழ். புன்னாலையிலும் எழுப்பப்பட்ட கோவில்கள் மிகப் பழமையானவையாகும்.

தெகிவளையில் உள்ள பிரசித்தி பெற்ற விஷ்ணு கோவிலும் மிகப்பழமை வாய்ந்ததாகும். அக்கோயில் அமைக்கப்பட்டுள்ள ஊரின் பெயர் நெடுமாலய என்று சிங்களத்தில் அழைக்கப்படுகின்றது. நெடுமால் என்பது விஷ்ணுவைக் குறிக்கும் தூய தமிழ்ச் சொல்லாகும்.

5) கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் பௌத்தம், இந்நாட்டில் வழக்கத்துக்கு வந்த போதும் இந்துமத தெய்வவணக்கத்தையோ கிரியைகளையோ மக்கள் கைவிடவல்ல இதனை இன்றுவரை காணலாம்.

பௌத்தம் இந்து மதத்திலிருந்து தோன்றிய போதும் இருமதங்களும் தத்துவக் கோட்பாட்டிலும் சமயக் கோட்பாட்டிலும் வேறானவை. இருந்த போதும் பௌத்தப் பொதுமக்கள் முன்னர் இந்து சமயத்தவர்களாக இருந்த காரணத்தால் இந்து சமயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளைப் பௌத்த சமயக் கோட்பாடுகளுடன் இணைத்தே கடைப்பிடித்து வருகின்றனர்.

கோட்பாட்டு வேறுபாடுகளெல்லாம் குருமாருக்கும் சமயப்பண்டிதருக்கும் மாத்திரமே பிரச்சினைகளாயுள்ளன. பக்திமார்க்கத்தில் இறைவனோடு ஒன்றும் பொது மக்களுக்கு இவை என்றும் பிரச்சினைகள் அல்ல. பௌத்தம் தோன்றிய இந்திய நாட்டில் இந்துமதமானது பௌத்தத்தை தன்னுள் கரைத்துக் கொண்டதுபோல பௌத்தம் வந்த போது இலங்கையில் இருந்த இந்துமதமானது பௌத்தத்தைக் தன்னுள் கரைத்துக் கொள்ளவில்லை. மாறாக, பௌத்தம் இலங்கையிலுள்ள இந்துக்களைப் பௌத்தர்களாக மாற்றித் தன்னை நிலைப்படுத்திக் கொண்டது. இதற்கும் வரலாற்றுக் காரணங்கள் உண்டு. பௌத்தம் இங்கு வந்தபோது முன்னர் குறிப்பிட்ட இந்துக் கோவில்களேயன்றி சிறுதெய்வ வழிபாட்டுக்குரிய பல கோவில்களும் நாடுமுழுவதும் பரந்திருந்தன.

பௌத்தம், பிராமணரின் மேலாண்மையை வீழ்த்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்த காரணத்தால் பிராமணர் நிறைவேற்றிய இந்து மதச் சடங்குகளைப் புறக்கணித்த போதும் பௌத்தர்களாக மாறிய இந்துக்கள் இந்துமதச் சடங்குகளை இன்னமும் கைக் கொண்டு வருகின்றனர்.

இந்துமதச் சடங்குகள் பக்தியின் வெளிப்பாடாக பக்தனுக்கு ஒருவித ஆத்ம திருப்தியைத் தந்தமையால் அதனைப் புறக்கணிப்பது மனித இயல்புக்குப் புறம்பாக இருந்தமையே காரணமாகும்.

சுருங்கச் சொல்லின் அவர்கள் பௌத்தர்களாகப் பெயர் பொறித்தபோதும் அவர்களின் மூலவேர், வேர்த்தூய் இந்துமதத்திலேயே இருக்கின்றது. பௌத்தர்கள் என்ற பெயரில் அவர்கள் இந்துக்களாகவே வாழ்ந்துவருகின்றார்கள். இந்துக்கள் என்னும் பெயரோடு வாழும் போலி இந்துக்கள் போலன்றி அவர்கள் உண்மையான இந்துக்களாக வாழ்ந்து வருவதை நாம் இன்றும் காணலாம். எனவே இலங்கையில் இந்துமதம் இந்துக்களிடம் மாத்திரமன்றிப் பௌத்தர்களிடமும் செழிப்புடன் வாழ்வதைக் காண்கிறோம்.

கி.மு.3ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு வந்த பௌத்தத்தை இங்கு வாழ்ந்த இந்துக்கள் பிறவிப் பிணி நீங்கி மோட்சமடைவதற்காகப் பின்பற்றவில்லை. இந்துமதத்தினரிடமிருந்து சமூகக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்று பொருளாதார சுபிட்சமடையவே மதம் மாறினர்.

பெருந் தொகையானோர் மதம் மாறியதைக் கண்டும் இந்துக்கள் மனம் மாறவில்லை. மதம்மாறிய தம்மவரை மிகத்தாழ்ந்தவராக மதித்தனர். மிலேச்சர், காட்டுமிராண்டிகள் என வசை பாடிப் புறக்கணித்தனர்.

இந்நிலையில் 7ம் 8ம் நூற்றாண்டில் இங்கு வந்த இஸ்லாம் மதத்திற்கு மேலும் பல இந்துக்கள் மதம் மாறினர். இது இன்றும் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்னும் மீதமுள்ள இந்துக்களிற் பலர் ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்துவர்களாக மதம் மாறினர். இதுவும் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

இங்ஙனம் இவர்களெல்லாம் மதம் மாறிய போதும் இவர்களின் வேர்த்தூய், இந்து மதத்திலேயே மறைந்து கிடக்கிற தென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஓரினமாய், ஒருமதமாய் இருந்த இலங்கை, பல்லினமும் பலமதங்களுமுடைய நாடாகப் பிளவுபட்டுக்கிடக்கின்றது. இன்று இலங்கையில் ஏறக்குறைய (10, 283, 325) பௌத்தர்களும் 2,297,806 இந்துக்களும் 1,130, 568 கிறிஸ்துவர்களும் 1,12,717 இஸ்லாமியர்களும் உள்ளனர் எனப் புள்ளிவிபரம் கூறுகின்றது. உண்மையில் இவர்களில் 99 வீதமானோர் இந்துக்களாக இருந்து மதம்மாறியோராவர். இலங்கையில் மாத்திரமன்று இந்துக்கள் 85 வீதமானோர் வாழும் இந்தியாவிலும் அகதிகளாக மேலைநாடுகளில் தஞ்சம்கோரிய இந்துக்களிடையேயும் மதமாற்றம் வேகமாக நடைபெற்று வருகின்றது.

இதற்குரிய வலுவான காரணம் உலகிலுள்ள மதங்களுள் இந்துமதமே வறிய மதமாக இருப்பதும் இந்தியா உட்பட எல்லா இடங்களிலும் அது ஆட்சி அதிகாரமற்ற அடிமை நிலையில் இருப்பதுமாகும்.

தத்துவம் முதலியவற்றால் தொன்மையும் சிறப்பும் வாய்ந்து, மற்றெல்லா மத வயல்களையும் செழிப்புறச் செய்து இன்றும் ஜீவநதியாய் ஓடிக் கொண்டிருக்கும் இந்துமதத்தின் உலகியல் வீழ்ச்சிக்கு வேறெந்தக் காரணத்தைக் கூறமுடியும்?

இலங்கையில் இந்துமதத்தின் தொன்மையை இன்றுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் சுருக்கமாகக் கூறுவதாயின் அது.

1) கி.மு.2000 எனக் கணிக்கப்படும் இராமாயண காலத்துக்கு முன்பே செழிப்புற்றிருந்தது.

2) கி.மு. 5ஆம் நூற்றாண்டில் விஜயன் இலங்கைக்கு வந்த போது இங்கு இந்துமதம் வளமுடன் இருந்தது.

3) கி.மு.3 ஆம் நூற்றாண்டளவில் இங்கு பௌத்தம் வந்தபோது இங்கு இந்துமதம் சிறப்புற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயன்மார் காலத்தில் பாடல் பெற்ற தலங்கள் பல இருந்தன.

5) பிறமதங்களின் வருகையால் இந்துமதம் சிதைக்கப்பட்டபோதும் இன்றும் இலங்கையின் மதம் இந்துமதம் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

## இன்றைய நிலை:

ஒப்பாரும் மிக்காரும்மில்லாத இந்துமதம் இந்துக்களிடமுள்ள குறைபாடுகளினால் நாளுக்கு நாள் நலிந்து வருகின்றது. இந்நிலை தொடருமானால் எண்ணிக்கையில் இன்று இரண்டாம் நிலையில் இருக்கும் இந்துமதம், மதமாற்றத்தினால் நான்காம் இடத்திற்குத் தள்ளப்படுவது உறுதி என்பதை இந்துக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் இந்துசமயம் ஓங்கியிருந்த மாலைதீவைப் பாருங்கள். பின்னர் பௌத்தத்தைக் கடைப்பிடித்த அத்தீவு அராபிய வர்த்தகர்களால் இஸ்லாமாக இஸ்லாமைத் தவிர வேறு சமயம் கால்வைக்க முடியாத இஸ்லாம் நாடாகி விட்டது.

இளையான் குடிமாறநாயனார் என்னும் சைவஞானி அவதாரஞ் செய்த இளையான் குடி என்னும் ஊரில் இன்று ஓர் இந்துவும் இல்லை. எல்லோரும் 'இஸ்லாம் ஆகிவிட்டார்கள். இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்தும் இந்தியாவில் அம்மதம் அதிகாரமற்ற மதமாக இருக்கிறது. ஆனால் அதைச் சுற்றி பௌத்த நாடாகிய இலங்கை, இஸ்லாமிய நாடுகளான மாலைதீவு, பாகிஸ்தான், பங்களாதேசம் முதலியன இந்துமதத்தின் மீது மிகுந்த அழுத்தத்தைக் கொடுக்கின்றன.

## முடிவென்ன?

Organised Religion is the Opium என மேதை கால்மாக்ஸ் கூறியது உண்மையாயினும்,

"எவ்வது உறைவது உலகு உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"

என்னும் வள்ளுவர் வாக்கைப் புறக்கணிக்க முடியுமா? நிர்மாணிக்கப்பட்ட கிறிஸ்துவம், ரோமாபுரியில் வீற்றிருந்து உலகெலாம் ஆட்சி செய்கின்றது. அத்தகைய இஸ்லாம் மெக்காவிலிருந்து கோலோச்சுகிறது. அங்ஙனமே பௌத்தமும் இந்நாட்டு ஆட்சியை மாற்றும் ஆற்றல் பெற்றுள்ளது.

இந்நிலையில் வள்ளுவன் வாக்கை இந்துக்களும் சிந்தித்துச் செயற்பட வேண்டாமா?

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் ஏறக்குறைய 30 இந்துமன்றங்கள் இருக்கின்றன. இவையாவது " அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதை உணர வேண்டும்.

இன்ன மதத்தினருக்கே பள்ளிக்கூடத்தில் அனுமதி இன்ன மதத்தினருக்கே இந்த நிலம் விற்கப்படும் என இங்கு வந்து குடியேறிய மதங்கள் இந்த நாட்டு மக்களுக்கு கதவடைப்புச் செய்வதைப் பார்த்திருந்தும் இந்துக்கள் தம் நிலையை உணரவில்லையே.

உலகிலுள்ள கோடிக்கணக்கான இந்துக்கள் அவர்கள் எங்கிருந்தாலும் எம்மொழி பேசினும் தத்துவ, சமயக் கோட்பாடுகளிலுள்ள சிற்சில வேற்றுமைகளை மறந்து நாம் இந்துக்கள் என்னும் பேரால் ஓர் உலக இந்து அமைப்பை உருவாக்க வேண்டும்.

அதற்கெனப் பெருநிதியம் ஏற்படுத்தி மதமாற்றத்திற்குக் காரணமான வறுமை, அறியாமை முதலியவற்றை ஒழிக்க வேண்டும். பெரிய மகாநாடுகளைப் பெரும் பொருட் செலவில் நடத்தி மதப்பகையை வளர்க்காது இந்துக்களின் குறைகளை நீக்கும் திட்டங்களை இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப தீட்டிச் செயற்படுத்தி நமது எண்ணிக்கை இனியும் மதமாற்றத்தால் சிதறாது காக்க வேண்டும்.

" பட்டணம் பாழானபின் செட்டி சிங்காரித்து என்ன பயன்?" இந்து சமயத்தை விட்டுப் போவதற்கு ஆயிரம் வாசல்கள் திறந்து கிடக்கின்றன.

ஆனால்,

உள்ளே நுழைய ஒரு சிறு துவாரமும் இல்லையே என்னும் வரலாற்றை மாற்ற வேண்டும்.

வீரசிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாகி வரும் இவ்வேளையில், இலங்கை இந்துக்களும் தம்கடமையை உணர்வார்களென நான் கதிர்காமப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதன ஈழத்தில் இந்து மதம்



செல்வி தங்கேஸ்வரி கதிராமர்
கலாசார உத்தியோகத்தர் , மட்டக்களப்பு

## 1) இந்து மதத்தின் தொன்மை

தென், தென்கிழக்கு ஆசியாவின் ஆதிமதம் இந்து மதமாகும். கற்காலம் தொட்டு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இனமக்களால் கடைப்பிடிக்கப்பட்ட மத நம்பிக்கைகளின் வளர்ச்சியாகவே இந்துமதம் ஏற்பட்டது. இப்பிரதேசத்தின் ஆதிக்குடிகளை மானுடவியலாளர் ஒஸ்ரலோயிட் ( Osterloid) என வழங்குவர். இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக் ( Ostric) மொழி எனக் கூறுவர். இவர்களைத் தொடர்ந்து திராவிடர் ஆரியர் போன்ற மக்கட் கூட்டத்தினர் வாழ்ந்து வந்துள்ளனர். ஈழமும் தென்கிழக்காசியாவில் ஓர் அங்கமாக விளங்குவதனால் இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட பல மாற்றங்கள் பண்டு தொட்டு இன்று வரை ஈழத்திலும் ஏற்பட்டன.

## 2) ஈழத்தில் இந்துமதம் பற்றி ஆராய்ந்தோர்

ஈழத்தில் இந்துமதம் பற்றிய ஆராய்ச்சியில் பல அறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் டாக்டர் பரணவிதானா, வில்ஹம் கெய்கர், பெச்சேட், அதிகாரம் சரத்சந்திரா, ராகுல, ஆனந்தகுமார சுவாமி முதலிய அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எல்லோரும் வட இந்திய தாக்கத்தின் அடிப்படையிலேயே தமது ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். தென்– இந்திய கண்ணோட்டம் இவ்வாய்வில் விடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஆரிய மய நம்பிக்கையே எனலாம்.

ஈழவரலாற்றினை ஆராயும் எவருக்கும் தென் இந்திய வரலாறு ஈழத்தில் எத்தகைய இடத்தினை வகிக்கின்றது என்பது நன்கு விளங்கும். தென் இந்திய வரலாறு மட்டுமல்ல சமயம், கலை, கலாசாரம், பண்பாடு, இலக்கியம் முதலாம் சகல துறைகளும் ஈழத்து வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

## 3) ஈழத்தின் ஆதிக் குடியேற்றங்களும் இந்து மதமும்

ஈழத்து வரலாற்றில் விஜயன் வருகைக்கு முன்பே ஆதிக்குடியேற்றம் பற்றிக் கூறப்படுகிறது.[2] ஈழநாட்டிலே ஆதிக்குடியேற்றங்கள் நடந்த இடங்களாவன அநுராதபுரம், உருவேல, திசமகராம, தம்பபண்ணை. மாதோட்டம், பொனிபரிப்பு மாகம போன்ற பல இடங்களாகும். அண்மைக்கால ஆய்வுகளின் மூலம் இப்பகுதிகளில் எல்லாம் வாழ்ந்த மக்கள் ஒஸ்ரலோயிட், திராவிடர் என அறியப்படுகின்றது. கதிரவெளி, பதவியா, யாப்பகூவ, ஆனைக்கோட்டை, கந்தரோடை போன்ற மேலும் பல இடங்களிலும் இம்மக்கட் கூட்டத்தாரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3] இவை எல்லாம் யக்ஷ வழிபாட்டுடன் தொடர்புடையது என பரணவிதான கருதுகின்றார். இங்கெல்லாம் பெருங்கற்காலப் பண்பாடும் இந்துமத நம்பிக்கைகளுமே இருந்துள்ளன. மேலும் ஆதிக்குடியேற்றத் தலைவனான விஜயன் கலிங்க நாட்டிலிருந்து வந்தவன் என மகாவம்சம் கூறுகின்றது.[4] ஆனால் கலிங்க நாட்டிலும் இந்து மதமே செழித்தோங்கியிருந்தது.

## 4) ஈழத்து யக்ஷ வழிபாடும் இந்து மதமும்

இயக்க வழிபாடு ஆதிக்குடிகளிடம் மட்டுமல்ல, பண்டைய சிங்கள மக்களிடையேயும் பிரசித்தி பெற்றுக் காணப்பட்டுள்ளது. யக்ஷ தெய்வங்களில் சித்தராஜ, காலதேவ, மகேஜ வைசிராவண, வியாதேவ பச்சிமராணி, வடவாமுகி போன்ற பல தெய்வங்கள் பேர் பெற்றவை. இத் தெய்வங்கள் குளங்கள், மரங்கள், மலைகள் மற்றும் இயற்கைப் பொருட்களில் 'உறை தெய்வங்களாக' அக்காலத்தில் கருதப்பட்டன. இது ஆரம்ப நிலையையும், பண்டைய சமய நிலையையும் காட்டுகின்றது.

தமிழ் நாட்டில் ஆரம்பத்தில் மரங்கள் மிருகங்கள் தெய்வத்தன்மை பெற்றுக் காணப்பட்டன. ஆரம்பகால கோயில்கள் மரங்களின் கீழ் அமைக்கப்பட்டன. முருகன் 'கடம்பன்' எனவும், சிவன் 'கொன்றை வேந்தன்', ஆல்கெழுகடவுள்' எனவும் அழைக்கப்பட்டனர். வேம்பு, கடம்பு. வேங்கை, ஆல், புன்னை போன்ற மரங்கள் வணக்கத்துக்குரியனவாகக் கருதப்பட்டன. இவை ஈழத்து யக்ஷ வழிபாட்டிலும் இடம் பெற்றன. ஒஸ்ரலோயிட், திராவிட நம்பிக்கைகளை ஒத்ததாகவே ஈழத்து இயக்க நாக வழிபாடுகள் காணப்பட்டன. இதுவே ஈழத்தில் இன்றும் நிலைத்து நிற்கும் வைரவர், ஐயனார், பிடாரி, மாரியம்மன், வீரபத்திரர், போன்ற ஊர்த்தெய்வங்களின் வழிபாடாகும். அன்று மரங்களின் கீழ் வழிபாடு தொடங்கியது போலவே இன்றும் மரங்களின் கீழ் பந்தலிட்டு வழிபாடு நடைபெறுகிறது. விஜயன் ஈழத்திற்கு வருவதற்கு முன்னரே இவ்வழிபாடு காணப்பட்டது. எனவே ஈழத்தின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும் இந்து மதத்தோடு தொடர்பான வழிபாட்டினையே கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது. இவை எல்லாமே திறந்த வெளிக்கோயில்களாகவே காணப்பட்டன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5) ஈழத்து நாகரும்- இந்துமத வழிபாடும்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இயக்கர் நாகர் இலங்கையில் வாழ்ந்ததாக அறிகிறோம். இதனைப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் நிறுவ முடிகின்றது. நாக வழிபாடு தொன்மை வாய்ந்த ஒன்றாகும். இன்றும் தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் நாகர் வழிபாட்டைக் காணலாம். இவர்கள் இலிங்க, மர, இயற்கை வழிபாடுகளையே கொண்டிருந்தனர். ஈழத்தின் ஆதிக்குடிகளான நாகரும் இவ்வழிபாட்டினையே கொண்டிருந்தனர்.

ஆதியில் நாகர் வழிபட்ட பிரசித்தி பெற்ற ஓர் இலிங்கக் கோயில் திருக்கேதீஸ்வரமாகும்.[5] ஐந்து தலை நாகத்தினால் காக்கப்படுகின்ற சிவலிங்கம் நாகர் காலத்துடன் தொடர்புடைய பழமையினை எடுத்துரைக்கின்றது. ஆதித் திராவிடர்களின் கோயில்களை ஒத்த வகையிலே ஆதி நாகர்களும் திறந்த வெளிக் கோயில்களையே அமைத்து வழிபட்டனர். இக்கோயில்கள் மரங்களின் கீழ் கற்பலகைகள் அல்லது நாகக் கற்களைக் கொண்டமைந்தன. யட்டாள விகாரையில் காணப்பட்ட எச்சங்கள் ஆதிநாகர், இயக்கர் வழிபட்ட தலம் என்பதை வலியுறுத்துகின்றது.[6]

## 6) இயக்க நாகர் வழிபாடும் - திறந்த வெளிக்கோயில்களும்.

ஈழ மக்கள் சமுதாய, மானுடவியற் கூறுகளை ஆராயுமிடத்து இந்துமத ஆரம்ப கோயில்கள் ஒரு குறிப்பிட்ட மரம், குன்று, அல்லது நீர்நிலை அபூர்வ சக்தி கொண்டதாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டன. ஆரம்பகால கோயில்கள் இந்தியா போன்று இங்கும் திறந்த வெளிக் கோயில்களாகவே அமைந்தன. ஒரு மரத்தை (தலவிருட்சம் என இப்போது வழங்கப்படுகிறது. ) ஆதாரமாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டு கோயில்களிலே திருப்பங்கள் ஏற்பட்ட போதே மக்கள் தங்கள் அபிலாசைகளுக்கேற்ப தெய்வ வடிவங்களையே உருவாக்கினர். ஆதிக் குடிகளான இயக்கர் நாகரும் விஜயன் வருகைக்கு முன்னரே இத்தகைய திறந்த வெளிக்கோயில்களையே அமைத்து இந்து மத நம்பிக்கைகளைக் கைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது.

இலங்கையில் இன்றும் காணப்படும் வேடர்கள் திராவிடர்களுக்கு முற்பட்ட இலங்கையின் ஆதிக்குடிகள் என மஜீம்தார் சட்டர்ஜி போன்ற பிரபல ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பிரபல ஆய்வாளரான செழிமரும் இதனையே வலியுறுத்தியுள்ளார்.

## 7) பெருங்கற் காலப் பண்பாடும் இந்து சமயமும்

ஈழத்தில் அனேக இடங்களில் பெருங் கற்காலப் பண்பாடு காணப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டினைப் பேணிய மக்கள் ஆதித் திராவிடரே என்பது ஆய்வாளர்களது முடிவாகும்.[9] ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவின் பல்வேறு இடங்களில், எகிப்து மத்திய தரைக் கடல் நாடுகளில் எல்லாம் இப்பண்பாடு காணப்பட்டுள்ளது. பெருங் கற்கால காலம் சுமார் கி.மு. 5000–3000 இடைப்பட்ட காலம் ஆகும்.

ஈழத்தில் பல இடங்களில் பெருங்கற் கால சின்னங்களான நீள் சதுரக் கற்பாறைகள் (Doimenoid) ஈமத்தாழிகள் (Urns) கல்வட்டங்கள் (Cairn Circles) கல்மேசைகள் (Doimeng Grave) கல்லறைகள் (Cist Grave) போன்றன கண்டு பிடிக்கப்பட்டன. இவை மத்திய, வடமத்திய, தென், கிழக்கு, மாகாணங்களில் பல இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டன.

பண்டதாரா (சுடுமண் சவப்பெட்டி) தப்போவ (யானை உருவ சவப்பெட்டி) தம்மடுவ (மனித– விலங்கு உருவங்களுடன் கூடிய சவப்பெட்டிகள்) பொன்பரிப்பு (ஈமத்தாழிகள், மட்பாண்டங்கள், விலங்கு எச்சங்கள், ஆபரணங்கள்) பதவிகம்பொள கதிரவெளி, குருக்கல்ஹின்னை (கல்மேசை, ஈமத்தாழிகள்) போன்ற இடங்களிலும் காணப்பட்டன.[10] இவை தவிர ஆனைக்கோட்டை காரைநகர், உகணை, ஹபரணை, பதவியா, யாப்பகூவ, கதிர்காமத்தையண்டிய இடங்களிலும் பெருங்கற்கால சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டினை கொண்டிருந்த மக்கள் கடைப்பிடித்த சமயம் நிச்சயமாக பௌத்தம் இலங்கைக்கு வரமுன் (சங்கமித்தை மூலம்) இருந்த ஒரு சமயமாகும். அச்சமயம் இந்து மத நம்பிக்கைகளைக் கொண்ட ஒரு சமயமாகும் என்பது ஆய்வாளர்களது முடிவாகும்.[11]

ஆகவே தொல்லியல் பின்னணியில் நோக்கும் போது ஈழத்தில் ஆதியில் காணப்பட்டது இந்துமதம் என்பது மறுக்க முடியாத உண்மையாகின்றது. ஈழத்தில் பெருங்கற்கால பண்பாடு பல இடங்களிலும் சவ அடக்கத்தோடு காணப்படுகின்றது. இவை எல்லாம் அம்மக்களின் சமய நம்பிக்கையினையே காட்டுகின்றன. அச்சமய நம்பிக்கைகள் இந்துமத நம்பிக்கைகளே ஆகும்.

## 8) சுட்ட மண் உருவங்கள் (Terracotta)

ஈழத்தின் பெருங்கற்கால பண்பாடு காணப்பட்ட பல இடங்களில் சுட்ட மண் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெண் தெய்வங்கள், யானை, குதிரை போன்ற வடிவிலான இந்த உருவங்கள் தப்போவா மருதமடு நவகிரிநகர் அம்பாறை மிகுந்தலை முதலாம் பல இடங்களில் காணப்பட்டன.

இப்பெண் உருவங்கள் ஈழத்தில் தாய்த்தெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியமான கட்டத்தினைக் குறிக்கிறது. உலக வரலாற்றிலே தாய்தெய்வ வழிபாடு முதன்மையானது.[12] இது திராவிடர்க்கே உரியதும் மிகப் பழமையானதுமாகும். ஈழத்தில் காணப்பட்ட இச்சுடுமண் உருவங்கள் பல்வேறு மூர்த்தத்தை காட்டுகின்றன. இதுவே பின்பு ஈழத்தில் நிலைத்துள்ளதும் கி.பி.113ல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதுமான கண்ணகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடாகும். இது சிங்கள மக்களிடையேயும் இன்னும் நிலைத்து நிற்பதைப் பார்க்கிறோம். இன்று பெண் தெய்வ ஆலயங்களில் காணப்படும் குரவையிடல், தெய்வமாடுதல், கட்டுச் சொல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளும் பண்டைய சமய நம்பிக்கைகளையே பிரதி பலிக்கின்றன.

## 9) திறந்த வெளிக் கோயில்களின் வளர்ச்சி

கி.மு. காலப்பகுதியில் காணப்பட்ட இந்துமத வழிபாட்டு நம்பிக்கைகள், வணக்க முறைகள் எல்லாமே திறந்த வெளிக் கோயில்களாக மரங்களின் கீழ் அமைக்கப்பட்டன. மண்ணாலான மேடைகளைக் கொண்டிருந்தன. காலப்போக்கில் இவைகள் எல்லாம் கோயில்களாக உருப்பெற்றன. இவைகள் இலிங்கக் கோயில்கள், முருகன் ஆலயம், வருணன், உபுல்வன், சந்திரசேகரர், குபேரன், விநாயகர் எனப்பல விதமான முறையில் வளர்ச்சி அடைந்தன.

## 10) இலிங்கக் கோயில்கள்

விஜயன் வருவதற்கு முன்பே ஈழத்தில் ஐந்து ஈச்சரங்கள் இருந்தன என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[13] அவையாவன; திருக்கோணஸ்வரம், நகுலேஸ்வரம், முனிசுவரம் , தெண்டேசுவரம், திருக்கேதீச்சரம் என்பனவாகும்.

இவற்றிலே திருக்கோணமலை கோணேசர் ஆலயம் மூன்றாவது கடற்கோளில் மூழ்கியது என்பர். இக்கடற்கோள் ஏற்பட்டது கி.மு. 3544 எனவும், அப்போது ஈழத்தின் பெரும் பகுதி அழிவுற்றது எனவும் ' ராஜாவலிய' என்னும் பாளி நூல் கூறுவதாகவும் அறிகிறோம்.[14]

திருக்கேதீஸ்வரம் நாகர் வழிபாடு நிலவிய இலிங்க வழிபாட்டுத் தலமாகும். மிகப்பழைய ஈசுவரன் கோயிலான முனிசுவரம் கி.மு. காலத்தில் காணப்பட்ட இலிங்கக் கோயில் என அறியப்படுகிறது.

தென்பகுதியில்மாத்தறை நகரின்கண்ணே தெவிநுவர என்னும் இடத்தில் அமைந்துள்ளது தெண்டேசுவரம் ஆலயமாகும். இவ்விடம் " தேவந்துறை' ' தேவநகர' எனவும் வழங்கப்படும். இந்நகர் கடவுள் இறங்கிய துறை எனப்படும் கோயில் நகரினைச் சுற்றி வணிகர் குழுவினர் வாழ்ந்தனர் எனவும், ஆரம்பகாலத்தில் இக்கோயில் மாத்தறை (மாதுறை)யை அண்டி வாழ்ந்த மக்கள் குழுவினால் மரஅடியிலே திறந்தவெளிக் கோயிலாக உருப்பெற்று பின்னர் சந்திர சேகரர் கோயிலாக மாறியது எனவும் அறியப்படுகிறது. கி.பி. 150ல் தொலமி இக்கோயில் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். Daganacicitas Sacra Lane என்கிறார். விஜயன் சந்திரசேகரர் ஆலயத்தை நிறுவியதாக யாழ்ப்பாண வைபவமாலையும் குறிப்பிடுகின்றது.[15]

திருத்தம்பலேசுவரர் கோயிலை விஜயன் நிறுவியதாக யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும். இது நகுலேஸ்வரம் எனப்படும் கீரிமலையாகும். திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி, கதிரையாண்டவர் கோயில்களை விஜயன் அமைத்ததாக யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்படும் கூற்று கி.மு. 5ம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்து சமய நிலையினைக் காட்டுகிறது.

இவை தவிர மட்டக்களப்பில் உள்ள மாமாங்கேசுவரம், கொக்கட்டிச்சோலையில் தான்தோன்றீசுவரம், ஒட்டிசுட்டானில் வவ்வாத்தி மலையின் ஆலயம் என்பன மிகவும் பழமை வாய்ந்த ஈசுவரன் ஆலயங்களாகும்.

# II) ஏனைய தெய்வங்களின் ஆலயங்கள்

## அ) சிவனுக்கான ஆலயம்

பண்டுகாபய மன்னன் இலிங்கக் கோயில் கட்டியதாக மகாவம்ச மூலம் அறியப்படுகிறது.[16] ஸிவிகாசாலா, செத்திசாலா எனும் இரு சமயக் கட்டிடங்களை கட்டினான் எனவும் புரதேவனுக்கு ஆலயம் அமைத்ததாகவும் கூறப்படுகின்றது. ஸிவிகாசாலா என்பது சிவனுக்குரிய ஆலயமாகவும், புரதேவன் என்பது சிவனுக்குரிய மூர்த்தம் எனவும் அறிகிறோம். இது கி.மு. 4ம் நூற்றாண்டு இந்து சமய வழிபாட்டினைக் காட்டுகிறது.

மகாசேனன் மூன்று பிராமணக் கோயில்களை அழித்து விகாரைகளை நிறுவியதாக மகாவம்சம் மூலம் அறியக்கிடக்கிறது. [17] அவைகோகர்ண, கிழக்கிலங்கையில் எலகெர என்னுமிடம், ரோகணையில் ஒரு இடம் என அறியமுடிகிறது.

இராவணன் காலத்து சிவதலங்கள் ஈழத்தில் இருந்தன எனவும், இவன் சிறந்த சிவபக்தன் எனவும் வரலாறு கூறுகின்றது. முனிசுவரம், கோணேசுவரம் என்பன இராவணன் வழிபட்ட திருத்தலங்களாகும். இராவணன் காலம் முதல் ஈழத்தில் இந்துமத நம்பிக்கை காணப்பட்டன என்பது தெளிவாகின்றது.

கந்தசுவாமிமலை என்னுமிடத்திலும் மரக் கோவிலொன்று அமைக்கப் பெற்றிருந்தது. இதனை நவரெட்ணம் அவர்கள் திரியாய கல்வெட்டில் குறிப்பிடும் கிரிகண்ட சைத்தியத்துடனும், தட்க்ஷணகைலாயபுராணம் குறிப்பிடும் கந்தாத்கிரியுடனும் அடையாளம் காண்பர்.[18]

## (ஆ) வருண வழிபாடு

பருமந்தர் மலை என்பது வருண வழிபாட்டுடன் தொடர்புடைய ஒருகுன்றாகும். புத்தளத்திற்குக் கிழக்கே உள்ள இவ்விடத்திலே வருணனுக்கு எழுப்பப்பட்ட கோயிலின் எச்சங்கள் இன்றும் காணப்படுகின்றன.

## (இ) உபுல்வன் வழிபாடு

தெண்டேசுவரத்திற்கு அருகாமையில் அரைமைல் தூரத்தில் உபுல்வன் கோயில் ஒன்று உள்ளது. விஜயனும் தோழர்களும் இலங்கைக் கரையை அடைந்தபோது சக்கதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்திரன்) விஜயனைப் பாதுகாக்கும் பணியினை உபுல்வனிடம் ஒப்படைத்ததாக மகாவம்சம் கூறும்.[19] எனவே இவ்வழிபாடு கி.மு. காலப்பகுதியில் இருந்துள்ளது.

ஆரம்பத்தில் ஏற்பட்ட முருக, சிவ, வழிபாட்டுத் திறந்தவெளிக் கோயில்கள் பல பிற்காலத்தில் உபுல்வன, வருண, சக்கதேவ, சோமதேவ எனப் பலவாறாக மாற்ற மடைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

### ஈ) முருக வழிபாடு

முருகவழிபாடு பண்டுதொண்டு ஈழத்திலும் காணப்படுகிறது. கதிரை ஆண்டவன் கோயிலை விஜயன் நிறுவினான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும். கிழக்கிழங்கையில் சங்கமான்கண்டிமலை, ஒட்டுசுட்டானில் உள்ள வவ்வாத்திமலை, கதிரைமலை போன்றன கி.மு. ஆண்டுகளில் காணப்பட்ட திறந்தவெளிக் கோயில்களாகும்.[20]

### உ) வீரபத்திரர் வழிபாடு

மட்டக்களப்பிலே ஏறாவூர் என்னுமிடத்தில் காணப்படும் வீரபத்திரன் கோயில் கி.மு.கால வரலாற்றினை உடையது. மகாசேனன் அழித்ததாகக் குறிப்பிடும் மூன்று ஆலயங்களில் ஒன்றாகும். பிராமணக் கோயில்களை அழித்து அவ்விடங்களில் மூன்று விகாரைகளை நிறுவியதாக் அறிகிறோம்.[21] அவை கோகர்ன எனப்படும் கோணேஸ்வரம், எலகர எனப்படும் ஏறாவூர், ஏனைய இடம் ரோகணையில் உள்ளதாக அறிய முடிகிறது.

ஈழத்தின் பல பகுதிகளிலும் மேலும் பல திறந்த வெளிக்கோயில்கள் காலப் போக்கில் கோயில்களாக உருவெடுத்தன.

## 12) கி.மு. கால பிராமிக் கல்வெட்டுகளில் இந்துமதம்

### அ) பெயர்கள்

ஈழத்தின் பல இடங்களிலும் காணப்பட்ட பிராமிக்கல் வெட்டுக்கள் நேரடியாக இந்துமதம் பற்றிக் கூறாவிட்டாலும் அவற்றிலே காணப்படும் பல பெயர்களைக் கொண்டு அறியமுடிகிறது.[22] அவற்றிலே காணப்படும் பெயர்ப்பட்டியல்கள் இந்துமதப் பெயர்களாகும். "சிவ" "அய" "புர" "நாக" "வேல" "வேலச" "கண" "கணதத்த" "கணச" எனக் காணப்படும் பல சொற்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளிலே காணப்படுகின்றன.

"அய" என்பது "அயன்", "ஆயன்" என்பதன் திரிபாகும். "புரம்" என்றால் கோயில் எனப்பொருள் கொள்ளப்படும். ஆயர்கள் முல்லை நிலக்கடவுளான மாயோனை வழிபட்டவர்கள். எனவே ஈழத்திலும் "சிவ" வழிபாட்டுடன் மாயோன் (உபுல்வன்) வழிபாடும் காணப்பட்டிருக்கலாம். "கண" "கணச" எனக் காணப்படும் சொற்களினால் கணநாதனாகிய விநாயக வழிபாட்டினை அறிய முடிகிறது. கி.மு. கால சைத்தியங்களின் சிற்பங்கள், காவற் தூண்களில் கண உருவங்கள் காணப்படுகின்றன.

ஆதி பிராமிய கல்வெட்டுக்களில் பிராமணர் பற்றிய குறிப்புக்கள் பல இடம் பெறுகின்றன. பிராமணர்கள், சடங்குகள், பூசைகள், தர்மசாத்திரங்கள் போன்ற சமய விடயங்கள் அனைத்திற்குமே பொறுப்பாக இருந்தமையினை அறிய முடிகின்றது. மகாவம்சத்தில் கூட பிராமணர் பற்றி அனேக இடங்களில் குறிப்பிட்டுள்ளமை அக்காலத்து இந்துமத செல்வாக்கினைக் காட்டுகிறது. இவற்றில் காணப்படும் "விஷு" "கோபால, நாராயண, வாசுதேவ, போன்ற சொற்கள் விஷ்ணு வழிபாட்டை உறுதி செய்கின்றன.

### ஆ) குறியீடுகள்

கி.மு.கால பிராமிக் கல்வெட்டுக்களிலே சக்கரம், சூலம். சுவஸ்திகம் போன்ற குறியீடுகள் காணப்படுகின்றன. இவை ஆதித் திராவிடரின் இந்துமத சின்னங்களாகும். சக்கரம் விஷ்ணு வழிபாட்டையும், சூலம் வயிரவன், வீரபத்திரன், காளி போன்ற இந்துசமய வழிபாடுகளையும் காட்டுகின்றன. கி.மு.கால இப் பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் கி.மு.3ம் நூற்றாண்டுக்கும் கி.பி.1ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால இந்துமத நம்பிக்கைகளை அறிய முடிகிறது.

## 13) நாணயங்கள்

கி.மு. கால நாணயங்களான லக்ஷ்மி தகடுகளும் இந்துமத நம்பிக்கையினையே வலியுறுத்துகின்றன. இவை விஜயன் கால தங்க நாணயங்களாகும். இவற்றிலே அழகிய லக்ஷ்மியின் உருவம் காணப்பட யானைகள் இருபுறமும் நீர் அபிஷேகம் செய்வதைக் காட்டுகின்றன. மறுபுறம் சுவஸ்திகம் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஈழத்தில் பண்டு நிலவிய இந்துமத நம்பிக்கையுடன் கூடிய தாய்தெய்வ வழிபாட்டினைக் காட்டுகிறது.

## 14) கட்டிடம், சிற்பம், ஓவியங்கள்

கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து 1ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக் கட்டிட சிற்பங்களில் கண உருவங்கள் காணப்படுகின்றன. மிகுந்தலையின் கண்டக சைத்தியம் கண உருவ சிற்பங்களைக் கொண்டது. அநுராதபுர கால சேத்தியங்களின் காவல் தூண்கள் (Guard Stone) குள்ளர் உருவ சிற்பங்களைக் கொண்டமைந்தன. இவை எல்லாம் பௌத்தமதம் ஈழத்தில் கால் கொள்ள முன்பு நிலவிய இந்துமத சமய நம்பிக்கையின் தொடர்ச்சியினைக் காட்டுகிறது எனலாம்.

## தொகுப்புரை

இதுவரை கூறிய விபரங்களிலிருந்து பின்வரும் உண்மைகள் நிறுவப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) ஈழத்தின் ஆதிக்குடிகளான இயக்கர் நாகர் இந்துமத நம்பிக்கைகளையே கைக் கொண்டுள்ளனர்.

2) பௌத்தமதம் கால்கொள்ள முன்பு ஈழத்தில் இந்துமத நம்பிக்கைகளே காணப்பட்டன.

3) சிங்களவரின் மூதாதை எனக் கருதப்படும் விஜயன் கலிங்க நாட்டவன். இந்து மதத்தவன் பல இலிங்கேகோயில்களை அமைத்தவன். எனவே கி.மு. காலங்களில் இந்துமத நம்பிக்கைகளே காணப்பட்டன.

4) ஆரம்பத்திலே திறந்தவெளிக் கோயில்களாக உருப்பெற்ற இந்துமத வழிபாட்டு முறைகள் இலிங்கக் கோயில்களாகவும், இயற்கை வழிபாடுகளாகவுமே ஆரம்பிக்கப்பட்டு தற்போதைய கோயில்களாக வளர்ச்சியுற்றன.

5) இதனைப் பல்வேறு ஆய்வுகளும் தொல்லியல் ஆதாரங்களும் உறுதி செய்கின்றன.

## அடிக்குறிப்புகள்


1) சிந்தனை ஆடி 1983 – கலாநிதி சிற்றம்பலம் கட்டுரை: ஈழத்து யக்ஷ – நாக வழிபாடுகள்

2) Mahavamsa Gaiger (Translated) Ch. VII. pp. 55 Notes 6

3) Ceylon Journal of Science Vol. II. 1928 December, 1933 February pp. 94-98

4) Mahavamsa Gaiger (Translated) Ch. VI. pp. 51 Notes- 2

5) இலங்கையிற் தொல்லியலாய்வும்–திராவிடக் கலாசாரமும், த.குணபாலசிங்கம் 1988 மட்டக்களப்பு பக் 108.

6) J.S.B.R. AS New Series Vol. XX. 1976 pp 31-41

7) The History and Culture of Indian People by Majumar pp. 8-40

8) The Vaddhas by C.G. Shiligman - 1911 Cambridge PP. 419-430

9) Ceylon Journal of science Vo. II. December, February 1933 pp. 94-98

10) Ancient Ceylon-Journal of the Archaeological Survey of Ceylon 1971 -January Ch. I,II

11) a) Archaeological Survey Annual Report 1957-pp 12-18

B) Ceylon Journal of Science, Vol. 11 December 1928 Feb 1933

12) சிந்தனை, ஆடி 1983 பக் 48– பேராசிரியர் சிற்றம்பலம் கட்டுரை:

13) P.E.Peris Nagadepa and Buddhist Ruins of Jaffna J.R.A.S.C.B. XXVI. No 70 1917-11, 17; 18

14) கோணேஸ்வர ஆலய வரலாறு கட்டுரை 1963 மாசி 17, 24, 31 வீரகேசரி

15) யாழ்ப்பாண வைபவமாலை – பதிப்பாசிரியர் –குல சபாநாதன் – 1953 பக் 4,5

16) Mahavamsa -Gaiger (translated) Ch. XXXVII pp. 270 Notes 40-61, 1950 Colombo.

17) ------------------------do------------------------

18) A Short History of Hinduism in Ceylon by C.S.Navaratnam - 1964- pp. 88

19) Mahavamsa Gaiger (translated) 1950 Colombo- pp 55 Ch. VII Notes-06

20) Hinduism in Ceylon - by Rc. James Cartman Colombo 1957 pp.5

21) Mahavamsa Gaiger-Ch. XXXVII pp. 270 Notes 40-61.

22) சிந்தனை ஆடி 1988 கட்டுரை–பேராசிரியர் சிற்றம்பலம். பக் . 39


(எமது அங்கத்துவ சங்கமான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் 1993 இல் வெள்ளிவிழாக்கண்டதையொட்டி 1994 இல் வெளியிட்ட விசேட மலரில் வெளியான கட்டுரைகளில் இதுவும் ஒன்று )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கால இலங்கையின் சைவ சமய மறுமலர்ச்சி

ஆ. குணநாயகம்

*தலைவர், ஈழத்து திருநெறித் தமிழ் மன்றம்*
*தலைவர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அகில இலங்கை இந்து மாமன்றம்*

## இலங்கையில் சைவ சமயத்தின் தொன்மை

சைவ சமய மறுமலர்ச்சியை நோக்கு முகமாக முதற்கண் இலங்கையில் சைவ சமயத்தின் தொன்மை நிலையை நோக்குதல் சாலவும் பொருத்தமுடையதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பெருமை மிக்க மேல் நாட்டு ஆராய்ச்சியாளரான சேர்ஜேம்ஸ் உவில்லியம் என்பவர் இது பற்றி இவ்வாறு கூறுகின்றார்.

> *"எமது ஞாபக எல்லைக்கு அப்பாற்பட்ட காலம் தொட்டே இலங்கையில் இந்து மதத்தினர் வாழ்ந்து வந்திருக்கின்றனர்"*

சிங்கள இனத்தவரான பிரபல வரலாற்று ஆசிரியரான சேர் போல் ஈ. பீறிஸ் கூறுவது இது :

> "விஜயன் இலங்கைக்கு வர எவ்வளவு காலத்திற்கு முன்னரே, அகில இந்தியாவும் போற்றி வந்த நான்கு சிவ ஈஸ்வரங்கள் இலங்கையில் திகழ்ந்தன. திருக்கேதீஸ்வரம், ஸ்ரீ முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பவையே அவை."

இவற்றுள் தொண்டேஸ்வரம் தவிர்ந்த மூன்றும் இன்னும் நிலைத்து நின்று இந் நாட்டுச் சைவ சமயத் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன. திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் சுந்தரமூர்த்தி நாயனாராலும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும் பாடப் பெற்ற திருத்தலங்கள்.

பௌத்தம், அசோகச் சக்கரவர்த்தி மகனார் மகிந்தனது வருகையோடு இலங்கையில் கி.மு. 250ம் ஆண்டில் தோன்றிற்று. இது தேவநம்பியதிஸ்ஸ மன்னன் காலத்திலேயே நிகழ்ந்தது. திஸ்ஸ மன்னனின் தந்தையின் பெயர் சுத்த சைவ சமயப் பெயரான மூத்த சிவன் என்பதேயாகும்.

## வரலாற்று மாற்றங்கள்

ஏறக்குறைய கி.பி. 1500 ம் ஆண்டு தொடக்கம் 150 ஆண்டுகள் வரை எமது இலங்கைத் திருநாடு போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து, பின்னர் 150 ஆண்டுகள் வரை ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இந்த முன்னூறு ஆண்டுகளும், எமது சமயத்தைப் பொறுத்தவரை இருள் சூழ்ந்த காலமாகவே இருந்தது. இருவகை ஆட்சியாளர்களும் தமது சமயமாகிய கிறிஸ்தவத்தையே நிலை நாட்டவேண்டுமென்று அதற்காக வேண்டிய யாவற்றையும் செய்தனர். வன்முறையாக மதமாற்றம் நிகழ்ந்தது. சைவ சமயத் திருத்தலங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. இவற்றுள் பெருமை மிக்க திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும், ஸ்ரீமுன்னேஸ்வரமும் அடங்கும்.

சைவ சமயத்தினர் தமது சமயத்தை முறைப்படி அனுசரிக்க முடியாதவாறு கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன.

கி.பி. 1800 ம் ஆண்டு வரையில் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்தது. இவர்களது ஆட்சியின்கீழ் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும் முன்னைய கடுமையான வன்முறைகள் சிறிது தளர்த்தப்பட்டன. இதுவே சைவ சமய மறுமலர்ச்சிக்கு கால் கோளாக அமைந்தது எனலாம்.

## நாவலர் பெருமான் (1822-1879)

இருள் மண்டித் தடுமாறிக் கொண்டிருந்த சைவ உலகிற்கு ஒளி விளக்கு ஏற்றி வைத்தவர் நாவலர் பெருமான் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. 1822 ம் ஆண்டில் அவதரித்து, இந்நிலவுலகில் 56 ஆண்டுகள் மாத்திரமே வாழ்ந்திருந்து தமது வாழ் நாள் முழுவதையும் தமிழுக்கும் சைவத்திற்குமாக அர்ப்பணித்தார். இதற்காக நைட்டிகப் பிரமச்சாரிய விரதம் பூண்டொழுகினார்.



சிறு பராயத்தில் கல்வி பயின்று, ஆங்கிலம் கற்பதற்காக 12 ம் வயதில் பேர்சிவல் பாதிரியாரின் பள்ளிக்குச் சென்றார். மாணவராகச் சென்றவர் விரைவில் ஆசிரியருமானார். பாதிரியாருக்குத் தமிழ் கற்பித்தார். தாமாகவே வடமொழியும் கற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிரியாரிடம் உயர்ந்த சம்பளம் கிடைத்தது, எனினும் சமயப் பணியும் தமிழ்ப்பணியுமே தமது பணியென உணர்ந்த ஆறுமுகனார் 1848 ம் ஆண்டில் பாதிரியாரை விட்டு விலகினார். விட்டு விலகியவர், கல்வி, சமயம், தமிழ், சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் ஈழத்திலும் தமிழகத்திலும் அளப்பரிய பணிகளை ஆற்றினார். அநேகம் சொற்பொழிவுகளும் ஆற்றினார். இவரின் செவி அமுதத்தை சுவைத்த திருவாவடுதுறை ஆதீனத்தார் ''நாவலர்'' என்னும் பெரும் பட்டத்தை நல்கிக் கௌரவித்தார்கள்.

தூய ஒழுக்கத்தினர், அஞ்சா நெஞ்சினர், சொல்லிய வண்ணம் செய்பவர், அவரது காலத்தில் கல்வி கற்பதற்குரிய வசதிகள் இருக்கவில்லை. ஏட்டை இரவலாகவே வாங்கிப் படிக்க வேண்டியதாயிருந்தது. பள்ளிக் கூடங்கள் பெரும்பாலும் இல்லை. சமய மாற்றம் பெற்றவர்க்கே சில பள்ளிக் கூடங்களிற் படிக்கும் உரிமை இருந்தது. கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமும் என உணர்ந்த நாவலர் பள்ளிக்கூடங்களை நிறுவமுற்பட்டார்; நிறுவினார்.

யாழ்ப்பாணத்திலே, வண்ணார்பண்ணையில் 1848ல் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபிக்க ஆர்வம் கொண்டபோது, பிற மதத்தினரின் எதிர்ப்பும், நம் மதத்தினரின் உதவியின்மையையும் நோக்கி, நெஞ்சம் கலங்கி இறைவனை நோக்கித் தனது எண்ணம் கை கூடாதுவிடின், உயிர் விடுதல் திண்ணம் எனப் பாடி, அப்பாடலை இவ்வாறு முடித்தார் :

*"நான் துயருறலறிந்தும் ஒரு சிறிதும் அருளாத*
*திணிகொண்ட நெஞ்ச, இனி நின் முன்யான் உயிர் விடுதல்*
*திண்ணம் நீயறியாததோ,*
*சிறியேனது அன்பில் அர்ச்சனை கொள் அழகிய*
*திருச்சிற்றம்பலத்தெந்தையே"*

பள்ளிக்கூடங்களை நிறுவி, இலவசக் கல்வியைப் பரப்பினார். செலவுக்காகப் பிடியரிசி முறையை அறிமுகம் செய்தார். அச்சுக்கூடம் நிறுவினார். சிறார்க்குரிய சைவவினாவிடை, பாலபாடம் போன்ற நூல்களை ஆக்கித்தந்தார்.

சைவத்தின் உயரிய தத்துவத்தையும் தமிழின் இனிமையையும் வேற்றுச் சமயத்தவர் உணராது, அவற்றை இகழ்ந்து, தம் சமயமே மேலானது என்னும் கோட்பாட்டுடன் உத்தியோகம் சம்பளம் என்னும் பகட்டுகளைக் காட்டிச் சமய மாற்றம் மேற்கொண்டனர். இப்படியாயின் சைவமும் தமிழும் விரைவில் அழிந்துபோம் என்பதனைக் கண்டார் நாவலர்.

அருள் சுரக்கும் தேவாரத்தையும், அன்பு கனியும் திருவாசகத்தையும், வாய்க்கினிய திருக்குறளையும் தந்த திருநெறிய தமிழை அழிய விடலாமா என, இகழ்வார் முன் ஏறுபோற் பீடு நடைபோட்டு வீறிட்டெழுந்தார் நாவலர். வேற்றுச் சமயத்தவரை மாத்திரமல்ல நம்சமயத்திலுள்ள ஊழல்களையும் எதிர்த்துப் போராடினார். சைவமும் தமிழும் நாவலருக்கு இரு கண்கள். அவற்றைப் பாதுகாக்க ஆவன எல்லாம் செய்தார்.

நூல்களை இயற்றியும், உரை எழுதியும், ஏட்டு நூல்களை அச்சிற்பதிப்பித்தும் பெரும்பணியாற்றினார். திருக்குறள், திருக்கோவையார், கந்தபுராணம் போன்ற எத்தனையோ நூல்கள் இவற்றுள் அடங்கும். கோவில்களில் புராணபடலம் என்னும் முறையைத் தீவிரப்படுத்திப் பொதுமக்களை அதில் ஈடுபடச் செய்தார்.

காலத்தின் தேவைக்கு ஏற்ப தமிழ்வசன நடையை நடைமுறைப்படுத்தியவர் நாவலர். முதுபெரும்புலவரிடம் செய்யுள் நடை கற்ற தமிழ்ப்பாவை அழகு வசன நடையையும், கருத்திற்கேற்பச் சிறிது தரித்தும், ஒரேவழி முற்றாகத் தரித்தும், செல்லும் குறியீட்டு முறையையும் நாவலர்பாற் கற்றுக் கொண்டார். கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் இதற்குச் சான்று.

பழம் பெரும் திருத்தலமாகிய திருக்கேதீஸ்வரம் மறுபடியும் உயிர்பெற்று ஒளிரவேண்டுமெனக் குரல் எழுப்பியவர் நாவலர். இவ்வாறு அரும்பணிகள் ஆற்றி இவ்வுலகில் 56 ஆண்டு, 11 மாதம், 16 நாட்கள் மாத்திரமே வாழ்ந்திருந்த நாவலர் பெருமான் சைவமும், தமிழும் ஏக்கமுற்றுக் கண்ணீர் சொரிய 1879 ம் ஆண்டு, மார்கழி 25ம் திகதி இறைவனடி எய்தினார்.

அவர் பேரிற் பாடப்பெற்ற இரங்கற் பாக்கள் பலப்பல! அவற்றுள் மூன்று மாத்திரம் இங்கு தருகின்றோம்.

*"நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேற்*
*சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே – எல்ல வரும்*
*ஏத்து புராண ஆகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே*
*ஆத்தன் அறிவெங்கே அறை".*

சி.வை. தாமோதரம்பிள்ளை.

*"புண்ணிய நாள், நாளெல்லாம் போற்று நாள், செந்தமிழ்த்தாய்*
*எண்ணி எதிர் பார்க்கும் இனிய நாள் – மண்ணுலகில்*
*மேவு வுயர் சைவம் விளங்கிடு நாள், ஆறுமுக*
*நாவலர் கோன் தோன்றிய நல் நாள்."*

கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை.

*"மும்மொழியில் வல்லுனராய், மூதறிவு மிக்கவராய்*
*நம்மொழியும் சிவநெறியும் நன் முறையில் தழைத்திடவே*
*செம்மை நெறிதவறாத துறவு நெறிதாம் மேவி*
*அம்மம்ம ! அவர் செய்த அருந்தொண்டை என்னென்பேன்"*

புலவர் கீரனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமானைக் குறிக்கும்போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்பது வழக்கு, 'ஸ்ரீ' என்றால் 'திரு'. 'ஸ்ரீலஸ்ரீ' என்றால் 'திருவுடன்கூடிய திரு' என அமையும். எனவே 'ஸ்ரீலஸ்ரீ' என்பது 'திருமிக திருவுடையார்' எனப் பொருள்படும்.

## சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் (1878-1953)

சைவ சமய மறுமலர்ச்சியில் இரண்டாவதாகத் திகழ்பவர் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் எனலாம். நாவலர் பெருமானின் மறைவிற்கு ஓராண்டிற்கு முன்னர், அதாவது 1878ம் ஆண்டில் தோன்றினார். இவர், சிவநெறி ஒழுக்கில் மேம்பட்டு விளங்கினார். ஆங்கிலத்தில் B.A. பட்டதாரியான இவர் பல பள்ளிக்கூடங்களிற் பணிசெய்து ஈற்றில் 1924ம் ஆண்டு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முதல்வராகக் கையேற்றார்.

நாவலர் காட்டிய வழியைப் பின்பற்றுதல் வேண்டுமென்பது இவரது உயரிய கோட்பாடு. மதமாற்றத்தைத் தீவிரமாக எதிர்த்தார். சைவம் மறுமலர்ச்சி பெற வேண்டுமாயின், கிறிஸ்தவப் பாடசாலைகள் உள்ள பல இடங்களிலும் சைவப் பாடசாலைகள் நிறுவப்படல் வேண்டும் என்னும் சீரிய சிந்தையுடன், வழக்கறிஞர் எஸ். இராசரத்தினம் என்றும் பெரியாரைச் செயலாளராகக் கொண்டு இந்து வித்தியாவிருத்திச் சபை (Hindu board of Education) என்னும் சபையை நிறுவினார். இச்சபை எத்தனையோ சைவப் பாடசாலைகளை நிறுவிற்று. இதனால் பல கிறிஸ்தவ பாடசாலைகள் மூடப்பட்டன. இதனைத் தொடர்ந்து சைவமும் தலை தூக்கியது.

சைவசமய சாரம், திருவருட்பயனுரை, சைவபோதம் 1ம், 2ம், 3ம் புத்தகங்கள், சைவக் கிரியை விளக்கம் போன்ற நூல்களைத் தமிழிலும், Glories of Saivism என்னும் நூலையும் லண்டனில் அச்சிடப்பெற்ற Saiva School of Hinduism என்னும் நூலையும், ஆங்கிலத்திலும் வெளியிட்டார்.

பிரபல சென்னை எழுத்தாளரான J.M. நல்லசுவாமிப்பிள்ளை வெளியிட்ட சிவஞானசித்தியார் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பார்வையிட்டு, திருத்தியும் புதுக்கியும் அச்சிடுவித்தார்.

செல்வி வயலற் பரஞ்சோதி என்னும் ஒரு எழுத்தாளர் எழுதிய சைவ சித்தாந்தக் கண்டனத்திற்கு யாவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தர்க்க ரீதியாகத் தகுந்த விடையளித்துச் சைவத்தின் மேன்மையை நிலைநாட்டினார். மதமாற்றத்தை எதிர்த்தார். அதேவேளை தீண்டாமையையும் தீவிரமாகக் கண்டித்தார்.

நாவலர் பெருமானின் தூண்டுதலைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை நிறுவப்பட்டது. அதற்குத் தலைவராகப் பணியாற்றினார் பெரியார் அவர்கள்.

## சுவாமி விபுலானந்தர் அவர்கள் (1892-1947)

சைவ சமய மறுமலர்ச்சியில் அடுத்தபடியாக நாம் கவனிக்கப்படவேண்டியவர் சுவாமி விபுலானந்தரேயாகும். இவர் மட்டக்களப்பிற்குத் தெற்கே 27 மைல் தூரத்திலுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் 1892 ம் ஆண்டு அவதரித்தார்.

ஆங்கிலத்தில் B.Sc. பட்டதாரி. இதேவேளை மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதருமாவர். சமயத்தை அடிப்படையாகக் கொண்ட உயர்தரக் கல்விமூலம் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் இவரே.

சமயம் என்பது வெறும் நம்பிக்கையோடு கூடிய கிரியை மாத்திரமல்லாது, உயர்ந்த ஒரு குறிக்கோளைத் தனது உள்பொருளாகக் கொண்டுள்ளது. சமயத்தின் உயர்ந்த குறிக்கோள் நேர்மையான வாழ்க்கையை மேற் கொள்வதாகும். இக்குறிக்கோளை அடைவதற்குத் துறவுநெறி சிறந்த மார்க்கம் என்பதனை உணர்ந்த சுவாமிகள் இராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்து கொண்டார்.

தமிழும் சைவமும் பின்னிப் பிணைந்துள்ள ஓர் அமைப்பு. எனவே தமிழை வளர்த்தவர் சைவத்தையும் வளர்த்தவராவர். இந்த வகையில் சுவாமிகளது தமிழ்த்தொண்டு அபாரமானது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கினார். முத்தமிழ்வித்தகர் எனப்பட்டம் நல்கிப் போற்றப்பெற்றவர்.

அக்காலத்தில் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர்கள் பட்டம், பதவி, செல்வாக்குப் பெறுவதற்காகத் தம் மதத்தை மாற்றிக் கொள்ளும் ஒரு அவல நிலை இருந்தது. மதமாற்றத்தைத் தீவிரமாகச் சுவாமிகள் கண்டித்தார்கள். ஆங்கிலேயருக்கு அஞ்சாதவராகவும், புரட்சியாளராகவும், தளராத மனம்கொண்டவராகவும் இருந்தார்.

மனிதனது பூரணமான வாழ்விற்கு விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் வேண்டும் என்பது அவரது சித்தாந்தம். சுவாமிகளது மேலான ஒழுக்க நெறியாலும், சொற்பொழிவுகள் மூலமும், எழுத்துமூலமும், சுவாமிகளது அருந்தொண்டினால் சமய மறுமலர்ச்சி மேம்பாடு எய்திற்று. அறநெறிவாழ்க்கையே ஒருவரது சமயமேம்பாட்டிற்கு அளவுகோல். தருமமே வெற்றி தருவது. உடல்வலிமையால் இன்னொருவர் மீது கொள்ளும் வெற்றி, வெற்றியாகாது. இயல்பான, சாத்விக முறையிலே ஒவ்வொருவரும் தத்தமக்கான முயற்சியில் மேன்மையடைவதே, உண்மையான வெற்றி! இது சுவாமிகளது விளக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்துறையில் பெரும்பணியாற்றியுள்ளார் சுவாமிகள். யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் நிறுவுவதற்கு மிக்க உதவிபுரிந்தார். பின்னர் பரீட்சகராகவும் கடமை புரிந்தார். பெண்களின் உரிமையிலும், அவர்களது கல்வி முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட சுவாமிகள் தமது ஊராகிய காரைதீவில் சாரதா வித்தியாலயத்தை 1925 ம் ஆண்டில் தொடக்கி வைத்தார். அதே ஆண்டில் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துவித்தியாலயம் என்பனவற்றையும் தொடக்கி வைத்தார். அடுத்த ஆண்டில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், விவேகானந்த வித்தியாலயம் ஆகியவற்றின் முகாமையாளராகக் கடமையைக் கையேற்றார்.

பண்ணிசை சைவத்தோடு பின்னிப் பிணைந்ததொன்று. இப் பண்ணிசைக்கு உதவுவது யாழ், அல்லது வீணை வாத்தியம். சுவாமிகளது நுண்மாண் நுழைபுலம் சான்ற ஆராய்ச்சியின் பயனாக "யாழ்நூல்" என்னும் அரிய நூல் வெளியாகியுள்ளது. இது இன்னொருவரால் செய்யப்பட முடியாத அரும்பெரும் தொண்டு.

சுவாமிகளது சமயப் பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி, இசைப்பணி ஆகியன அபாரமானவை.

## சித்தாந்த வித்தகர் சிவங் கருணாலய பாண்டியனார் அவர்கள் (1903-1976).

சிவங்கருணாலய பாண்டியனார் அவர்கள் அதிகமாகப் பொதுமக்களால் அறியப்படாத அமைதியான ஒரு பெருமகனார். இவர் தமிழகத்தேயுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் 1903 ம் ஆண்டில் தோன்றினார். இவர்களது தமிழ், சைவ அறிவு பெரும்பாலும் தாமாகவே தனிப்பட்ட முறையிற் பெற்றுக்கொள்ளப்பட்டதெனலாம். மதுரைத் தமிழ்ச் சங்கப் பாலபண்டித, பண்டிதத் தேர்வுகளில் தேறியவர். கொழும்பு நகர் வணிகரான திரு. பெ. ல. கறுப்பண்ண செட்டியார் தமது மகனார் இராமநாதனுக்குப் பாடம் கற்பிப்பதற்காகப் பாண்டியனாரை 1922ம் ஆண்டு கொழும்பிற்கு வரவழைத்தார். (பின்னர் இராமநாதன் என்பவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராய் விளங்கியவர், இக் கற்பித்தல் நிறைவெய்திய பின்னும் திரு சிதம்பரம் செட்டியாரின் உதவியோடு கொழும்பிலேயே பாண்டியனார் வசித்து வந்தார். இவர்களது சைவத் தமிழ் ஆற்றலை அறிந்த சில பெரியவர்கள், கொழும்பு விவேகானந்த சபையிலும், வெள்ளவத்தையில் சைவமங்கையர் கழகத்திலும் அவரிடம் பாடம் கேட்கக் கூடிய பொருத்தமான வகுப்புக்களை ஒழுங்குசெய்தார்கள். இவ் வகுப்புகளில் பலர் பாடம் கேட்டனர். சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. மு. வயிரவப்பிள்ளை, திரு. மு. வயிரமுத்து முதலானோர் இவருள் அடங்குவர். பேராசிரியர் கணபதிப்பிள்ளையும், தமக்கேற்பட்ட சந்தேகங்களைப் பாண்டியனாரிடம் கேட்டுத் தெளிந்து கொண்டார்.

சமய சார்பான பல நூல்களைப் பாண்டியனார் ஆக்கியுள்ளார். "ஸ்ரீமத் பகவத் கீதை" என்னும் நூல் தமிழில் "நம்பி அகவல்" என்னும் பெயரில் வெளிவந்தது. அழகியது, கதிர்காமப் பிள்ளைத் தமிழ், எழினி போன்ற நூல்களும் வெளியாயின. சிவன் சகஸ்ரநாமம், விஷ்ணு சகஸ்ரநாமம் என்பன "செம்பொலிவுப் பேராயிரம்" "நெடுமால் பேராயிரம்" என்னும் பெயர்களில் தமிழில் வெளியாயின. ஸ்ரீ ருத்திரம் என்பது வேத நூலின் ஒரு பகுதி. இதன் சரியான நடுப்பகுதியில் சைவசமய முதல் மந்திரமான "திருவைந்தெழுத்து" திகழ்கின்றது. இதன் பெருமையை நோக்கி இந்நூல் "திருவருட் செற்றம்" என்னும் பெயரில் தமிழில் வெளியாகியுள்ளது. அச்சுவாகனம் ஏறாத பல பிரதிகள் கையெழுத்தில் உள்ளன. புதிய கருத்துக்களைக் கொண்ட, 2,000 பக்கங்கள் வரையிலான திருக்குறள் அறத்துப்பால், தஞ்சலியோக சூத்திரம் "புணர்ப்பியல்" என்னும் பெயரிலான பிரதி எட்டு உபநிடதங்களின் தமிழாக்கம் என்பன இவற்றுள் அடங்கும். இவ்வாறு சமயத்துக்கும் தமிழுக்கும் பெரும்பணி ஆற்றிய பாண்டியனார் 30-06-1976 ல் கொழும்பில் இறைவனடி எய்தினார். அவ்வமயம் அடியேனும் அருகில் நிற்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

பாண்டியனார் அவர்கள் மறைவதற்கு ஐந்து ஆண்டுகள் முன்னதாக, 31-05-1971ல் அவர்களது மாணாக்கர்களும் ஆர்வலர்களும் அவருக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழியளித்துக் கௌரவித்தார்கள். அவ்வமயம் வழங்கப்பட்ட பாட்டிதழிலிருந்து இரு பாடல்கள்:

*"செந்தமிழ்ப் பாண்டிநாட்டிற் சிவனெனும் பெயரினாற்கு*
*மைந்தனாய்த் தோன்றி மெய்ந்நூல் மாசறத் தமிழொ டாய்ந்தே*
*அந்தநற் கலைக ளெல்லா மார்வலர்க் குணர்த்து மாறு*
*வந்தனை கொழும்பை நாடி வாழ்ந்தது சேய்நா டம்மா"*

*"அன்றுதொட் டின்று காறு மரசியல் வினைஞ ருக்கும்*
*துன்றிய தமிழா ராய்ச்சித் துறைபடிந் தாடு வார்க்கும்*
*ஒன்றிய வுளத்தி னோடே யுண்மை நூல் நாடு வார்க்கும்*
*ஒன்றுநீ கரவா துன்ற னுறுபொரு ளுவந் தளித்தாய்"*

## சிவயோக சுவாமிகள் (1872-1964)

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் ஒருவராகத் திகழ்பவர் சிவயோகசுவாமிகள்! இப்பரம்பரையில் இக்காலத்து முதல்வராகக் கருதப்படக் கூடியவர் கடையிற் சுவாமிகள். அச் சுவாமிகளது குருகடாட்சம் பெற்றவர் செல்லப்பா சுவாமிகள். இச் சுவாமிகளுக்கு ஒரேயொரு சீடனாகத் திகழ்பவரே சிவயோக சுவாமிகள். திருவருட்கடாட்சம் பெற்ற பரம ஞானியாக இருந்த போதிலும் ஒரு சாதாரண மனிதனாகவே மக்களிடையே வாழ்ந்து வந்தார். காவியுடை, உருத்திராட்சம் போன்ற புறச் சாதனங்கள் ஒன்றுமே அவர் பாலிருக்கவில்லை. ஆனாலும் மக்கள் அவர்பாற் சென்று சமய விழிப்புணர்ச்சி பெற்றார்கள்.

சுவாமிகள் சொல்லவேண்டிய அறிவுரைகள் யாவும் "நற்சிந்தனை" என்னும் அவரது பாடல் தொகுப்பின்கண் உள்ளது. இங்கு இளைஞர்க்கேற்ற ஒழுக்க நெறி உரைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்க்குப் பொருத்தமான சமய அறிவுரைகளும் காணப்படுகின்றன. இத் தொகுப்பு, வேதாகம சாரமும், தேவார திருவாசகப் பிழிவும் எனலாம். யாழ்ப்பாணத்துப் பெரும்பாலான வீடுகளிலும், கொழும்புச் சைவ மக்கள் வீடுகளிலும் இந்நூல் இடம்பெற்றிருந்து சமய வழி காட்டியாகத் திகழ்கின்றது. சுவாமிகளது வருகை சமய மறுமலர்ச்சிக்குப் பெரும் உந்து சக்தியாக அமைந்திருந்தது.

தமது குருபரன் செல்லப்பா சுவாமிகளது திருவாக்காகச் சுவாமிகள் விட்டுச் சென்ற பொன்னான நான்கு மகா வாக்கியங்கள் பேர் போனவை :

*ஒரு பொல்லாப்புமில்லை*
*முழுவதும் உண்மை*
*நாம் அறியோம்*
*எப்பவோ முடிந்தது.*

## ஏனைய சமய மறுமலர்ச்சிப் பெருமக்கள்

சமய மறுமலர்ச்சிக்கு உதவிய ஏனைய பெருமக்களும் பலர் உளர். கொக்குவில் சபாரத்தின முதலியார் என்பவர் 300 பக்கம் வரையிலான Essentials of Hinduism என்னும் ஆங்கில நூலை வெளியிட்டார். வேற்றுச் சமயத்தவர் சைவ சமயத்தின் மீது விடுக்கும் கண்டனங்களுக்கு மறுப்பாகவும், பதிலாகவும் இந்நூல் சென்னையில் வெளியிடப்பட்டது. சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களும் அவரது பரம்பரையினரும் பெரும் சமயத் தொண்டு ஆற்றியிருக்கின்றார்கள். 23 வயது இளம் வழக்கறிஞராக 1857 ம் ஆண்டு Royal Asiatic Society கொழும்புக் கிளை முன்னிலையில் வெளி நாட்டினரும் எமது சமயத்தின் பெருமையை அறிதற் பொருட்டு "சைவ சித்தாந்தம்" என்னும் பொருள் பற்றி சேர் முத்துக்குமாரசுவாமி ஒரு ஆங்கில உரை ஆற்றினார்கள். அவரைத் தொடர்ந்து சேர். பொன். இராமநாதன் அவர்களும், சேர்.பொன். அருணாசலம் அவர்களும் அரிய சமயத் தொண்டு ஆற்றியுள்ளார்கள்.

சமய மறுமலர்ச்சி சார்பாக எமது சைவத்திருக்கோவில்கள் மக்களுக்குச் சமய உணர்வையும் ஆர்வத்தையும் உண்டாக்கி வந்துள்ளன. பிறவும் கூறிற்பெருகுமென விடுத்தாம்.

## நிறைவுறை

16,17,18 ம் நூற்றாண்டுகள் பர சமய இருள் சூழ்ந்த, சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி மங்கிய காலம். சைவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு அவையோர் பயங்கர காலமாகவும் இருந்தது. சைவ முறைப்படி வாழையிலையில் உணவு உண்டாலும், அதனை அதிகாரிகள் காணாதவாறு வீட்டின் இறப்பில் செருகவேண்டியதாயிற்று. ஒருவரைத் தொடர்ந்து மற்றவர் வரன் முறையாக அதிகாரிகளின் உணவுக்காகப் பசுமாடு கொடுக்க வேண்டியதாயிருந்தது. ஆங்கிலேயரின் வருகையோடு 19ம் நூற்றாண்டில் இந்த வன்முறையான நிபந்தனைகள் சிறிது தளர்த்தப்பட்டன. இதனையடுத்து அஞ்சா நெஞ்சினரான நாவலர் பெருமான் தோன்றியது சைவமும் தமிழும் செய்து கொண்ட தவப் பயனேயாகும். பெருமானையடுத்து, அவரது அடியை ஒற்றிப் பலர் சமய, மொழி மறுமலர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார்கள். இதனைத்தொடர்ந்து சைவமும் தமிழும் உயிர் பெற்று எழுந்தன. இவற்றை மேலும் வளர்த்துப் பாதுகாக்க வேண்டியது நம்மவரைச் சார்ந்த பொறுப்பாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சுவாமி விவேகானந்தர்

பெ. சு. மணி



## வருகைக்கு முன்

சுவாமிஜியின் சிகாகோ சாதனைகளின் எதிரொலியை இலங்கையில் தமிழர்களிடையே 1894–லேயே கேட்க முடிந்தது. "ஈழத்துத் தமிழ் சைவத்தின் தனிச்செங்கோலாகத்" தோன்றியது "இந்து சாதனம்" எனும் இதழ் 1889–இல் இருமொழி இதழாக (தமிழில் 'இந்து சாதனம்' ஆங்கிலத்தில் ழுனைேரா ீடசயயே') தோன்றிய இந்து சாதனம் சிகாகோ சாதனைச் செய்திகளை ஆதரவுடன் வெளியிட்டு மகிழ்ந்தது. கிறித்துவ சமயத்தின் புகழ் பரப்ப 1841–இல் தோன்றிய 'உதயதாரகை', சிகாகோ சாதனைகளை ஏற்காமல் திரித்துக்கூறி எதிர்த்து எழுதியது. யாழ்ப்பாணத்தின் இந்த இரு இதழ்கள் சுவாமிஜி தொடர்பாக தம்முள் கருத்துப்போரையே நிகழ்த்தியுள்ளன. கருத்துப்போர் இல்லாமல் சிகாகோ செய்திகளை 'சிலோன் அப்சர்வர்', 'சிலோன் இன்டிபெண்டென்ட்' எனும் ஆங்கில இதழ்கள் வெளியிட்டன.

மெர்வின் மேரிஸ்நெல் என்பவர் சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி புகழ்பெற்றதைக் குறிப்பிட்டு 'பயனீர்' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தை 'இந்து சாதனம்' மொழி பெயர்த்து தனது 21–3–1894–ஆம் இதழில் வெளியிட்டது. 'அமெரிக்காவில் இந்து மதம்' எனும் தலைப்பில் இந்த மொழிபெயர்ப்பு பின்வரும் குறிப்புரையுடன் வெளிவந்தது.

"அமெரிக்காவில் சிக்காக்கோ என்னும் நகரத்திலே இன்றைக்கு ஐந்து மாசங்களுக்கு முன்னே கூட்டப்பட்ட சர்வ சமய மகாசபையிலே சாஸ்திரப்பகுதிக்கு அக்கிரா சனாதிபதியாக விற்றிருந்து, அங்கே உலகத்துப் பலதிசைகளினின்றும் போயிருந்த பற்பல சமயக் கொள்கைகளையெல்லாம் கேட்டுச் சீர்தூக்கிய மெஸ்டர்மேர்வின் மேரிஸ் நெல் என்னும் அமெரிக்க பண்டிதர் பயோனியர்ப் பத்திரிகைக்கு எழுதிய விஷயத்தைச் சங்கிரகித்து இங்கே மொழி பெயர்த்துக் கூறுகின்றோம்." (இலங்கையில் சுவாமி விவேகானந்தர், நூற்றாண்டு விழா வெளியீடு, 1963, யாழ்ப்பாணம் ப.1).

இந்த மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி வருமாறு :

"இவரிடத்திலே இவ்வளவு அபிமானத்துக்குக் காரணம் அமெரிக்காவுக்கு இந்தியர்கள் இவர் மூலமாக அனுப்பிய ஆன்ம ஞானத்தின் மீதுண்டாகிய பெருங்காதலன்றி மற்றியாது? உலக விவகாரத்திலும், அறியாமையிலும், கிராமியப் பழக்கத்திலும் அமிழ்ந்திக் கிடக்கும் பலதிறப்பட்ட அமெரிக்கருள்ளே ஆங்காங்கும் பலர்க்கு இப்போதொருவாறு ஆன்ம ஞானத்தின் மீது பெருங் காதலெழுந்திருக்கின்றது. இங்ஙனம் இங்கே பரந்து வருதலைப் பெற்ற இந்து மதவுணர்ச்சியாகிய படர்கொடிக் கொழுந்துக்கு விவேகானந்த சுவாமிகளது பிரசங்கங்கள் கொழு கொம்பாயின.

"இவ் விவேகானந்த சுவாமிகளுடைய இனிய பிரசங்கத்தையும் அவரைச் சனங்கள் புகழ்ந்து கொண்டாடுவதையும் காதில் வீழ்த்தப் பொறாமை கொண்டவர். புரோடெஸ்டாண்டுக் கிறிஸ்தவருள்ளும் றெவரெண்டுக் குருமார் சிலரினும் சிலரேயாம். அவர்கள் பொறாமை முதலியனவெல்லாம், பாரத வருஷமாகிய இந்தியாவினின்றும் வந்த பச்சைப் பீதாம்பரதாரியும் பரமசாதுவுமாகிய விவேகானந்த சுவாமிகளது மாறாக் கருணை, மாறாச் சாந்தம், மாறாப் பெரும்பொறை, கலங்காக் கல்வி, குளிர்ந்த மலர்ந்த முகம், மதுர பாஷணம் முதலிய நற்குணங்களின் முன்னே சூனியமாகி நசிந்து விட்டன."

'இலங்கையில் சுவாமி விவேகானந்தர்' நூலாசிரியர் திரு. ச. அம்பிகைபாகன் நூலின் முன்னுரையில் பின்வரும் செய்தியையும் குறிப்பிட்டுள்ளார்.

"இதை மொழி பெயர்த்து இந்து சாதனம் வெளியிட்டதோடு, மகாநாட்டுத் தலைவர் டாக்டர் பரோஸ் எழுதிய கட்டுரையையும் சேர்த்துத் தனிப் பிரசுரமாக வெளியிட்டது."

இந்து சாதனத்தில், ஙஹ ழுனைேரங என்பவர் எழுதிய ஒரு கடிதம் வெளியிடப்பட்டது. அதில் 'உதயதாரகை'யில் 'ஓர் வேதன்' என்பவர் எழுதிய கடிதம் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. "ஸ்ரீ விவேகானந்த சுவாமி அவர்களும் உதய தாரகைக் கடிதரும்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட கடிதத்தின் முக்கியப் பகுதிகள் சில, பின்வருவன:

"இந்த மாதம் 1–ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 'உதய தாரகை' இருபதாம் இலக்கப் பத்திரிகையில் 'ஓர்வேதன்' எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைச்சாத்திட்டு, ஒருவர் "விவேகானந்த சுவாமியும் நாலாயிரம் பெயரும்" என்ற முகவுரையோடு ஓர் கடிதம் வரைதிருக்கின்றார். இக்கடிதம் மிக நீடித்த தொன்றாயினும் கட்டுரை மிகச் சுவல்பமே. அன்றியும், கடிதர் தோளின் மீதிருந்துசெவியைக் கடிப்பது போல, விவேகானந்த சுவாமியவர்கள் செய்யும் கிருத்தியங்களையும், அவரது கீர்த்திப் பிரதாபங்களையும் பற்றிப் புதினப் பத்திரைகைகள் பல பகர்ந்திருக்கும் சாக்ஷியங்களை ஒருவாறு நிராகரிப்பவர்போல் நடித்து எமது சமயத்தின் மீது தூஷண அஸ்திரங்களைப் பிரயோகிக்கின்றார்.

"அமெரிக்கா, இங்கிலாந்து ஆதியாம் தேசங்களில், ஸ்ரீவிவேகானந்த சுவாமியவர்கள் செய்து வரும் இந்து மதப் பிரசங்கங்களைக் கேட்டு, அநேகாயிரவர் இந்து மதசாரிகளாய் விட்டனர் என்ற சங்கதி அபத்தமென்பதும், சுவாமியவர்களுடைய பிரசங்க மண்டபங்களிலே சனங்கள் திரண்டு குழுமுதல் அவர் செய்யும் போதனையில் அபிமான முற்றன்று, வேடிக்கை பார்த்துக் களிப்புறற்கே யென்பதும், "இந்து தேச மார்க்க கிரியா சாரங்களை நன்குணர்ந்த கிறிஸ்த சுதேசி அவர் பிரசங்கத்திற் சமூகமாயிருப்பின்" சுவாமியவர்கள் தலை குனிந்து பயந்தொடுங்கி விடுவாரென்பதுமே "வேதன்" கடிதத்துட்டுறை......

"இனி விவேகானந்த சுவாமியவர்கள் தமது முயற்சியிற் சித்தியடைந்து வருகின்றனரோ அன்றோ என்பதை உலகமே தூக்கியறியட்டும். முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் சக்தி எம்மிடத்துமில்லை. வேதனிடத்துமில்லை... சுவாமியவர்களினது பிரசங்க மண்டபங்களிலே எமது மதாசாரநியமங்களை நன்குணர்ந்த ஓர் சுதேசக் கிறிஸ்தன் சமூகனாயிருந்தால், சுவாமியவர்களுடைய பேச்சு 'கீச்சுக் கீச் சென்னுங் கிளி போன்றிருக்குமோ' என்று 'வேந்தன்' மனப்பால் குடித்து மகிழ்வெய்துகின்றார்....

"அப்படியாயின் கிறிஸ்த மிஷனரிகள் எம் மூருக்கு வந்து தம்மதத்தைப் பிரசங்கித்துத் திரியும் சமயங்களிலெல்லாம் மேலைத் தேசச் சமயாசார நியமங்களை நன்குணர்ந்த இந்து ஒருவர் பிரசன்னராயிருப்பின் மிஷனரிகளெல்லாம் சிங்க சந்நிதானத்துற்ற சம்புகங்களை நிகர்த்திருப்பரே என்று நாமும் சொல்லி விடலாமே. இதனாலுள்ள பயனென்னோ?"

இந்த 'கடிதப்போர்' தொடர்ந்து நடந்தது, 'உதய தாரகை' பத்திரிகை, சுவாமிஜியின் சாதனைகளை அமெரிக்கப் பத்திரிகைகள் வாயிலாக அறியட்டும் என்று மீண்டும் ஙஹ ழனேரங என்பவர் தம்முடைய மற்றொரு கடிதத்தில் (இந்து நேசனில்) பின் வருமாறு கூறியுள்ளார்.

"சுவாமியவர்கள் சங்கதிகளை வெளியிட்ட பத்திரிகைகளின் நாமங்களை ஈண்டு தருகின்றோம். அப்பத்திராதிபர்களுக்கு கடிதம் நேரே யெழுதியவர்கள் அறியாமையை நீக்கிக் கொள்ளட்டும். அங்ஙனமின்றி சமய தூஷணத்தில் மீண்டும் தலையிட்டுக் கொண்டு அவதிப்படல் புத்தியன்று.

பத்திரிகைகளின் நாமங்கள் வருமாறு:-

"Lowa State Register"
"New York Critic"
"The Interior, Chicago"
"Chicago Daily Interior Ocean"
"The Newyork Herald"
"Westminister Gazette"

உதயதாரகை கடிதர் ஆங்கில அமெரிக்க பத்திராதிபரை அறியாமையுள்ளார் என்று காட்டப் புகுந்த மதி குருவுக்குபதேசிக்க துணிந்த சீஷன மதியை யொக்கு மென்க."

சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்த பொழுதும், இந்து சாதனம், உதயதாரகை கருத்துப்போர் தொடர்ந்தது.

## யாழ்ப்பாணத்தில் 'நாவலர் மரபு'

சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகையின் தாக்கத்தை அறிவதற்கு முன்பு, அங்கு செல்வாக்கு செலுத்தி வந்த 'நாவலர் மரபு' பற்றிய சுருக்கமான அறிமுகம் இன்றியமையாததாகும்.

குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சம காலத்தவரான யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான் (1824-1879) யாழ்ப்பாணத்தில் சைவ சமயப் பேரெழுச்சியை ஏற்படுத்தியவர். சைவசமய எழுச்சியை, தமிழ் எழுச்சியாகவும், தேசிய அடையாளங்களின் எழுச்சியாகவும் முதன்மைப்படுத்தியவர் நாவலர் பெருமான். இந்த ஒருங்கிணைப்பை 'நாவலர் மரபு' எனக் கூறத் தகுந்தது.

நாவலர் மரபின் ஊற்றுக்கண்களாக அவர் தொடங்கிய "சைவப் பிரகாச வித்தியாசாலை"யும், அவருடைய மாணவ பரம்பரையினரும், யாழ்ப்பாணத்து சைவ பெரு மக்களும் தொடங்கிய 'சைவ சமய பரிபாலனசபை'யும் விளங்கின.

சைவ மாணவர்கள் திருநீறு அணிந்து வந்தால், அவர்களுக்கு அநுமதி மறுத்தன, கிறிஸ்துவ கல்வி நிறுவனங்கள். இதற்கு வழிகாணவே, "சைவப் பிரகாச வித்தியாசாலைகளை" பல இடங்களில் நிறுவினார், நாவலர் பெருமான். அக்காலத்தில் கிறிஸ்தவப் பாடசாலைகளில் சேர்க்கும் சைவப்பிள்ளைகளுக்கும் ஒரு கிறிஸ்தவப் பெயரை முன் வைத்தே பாடசாலைப் பதிவேடுகளில் பதியும் வழக்கம் இருந்தது என்பதும் இங்கு நினைவிற்குரியது.

சைவ வழிபாட்டுணர்வை விளக்க, பரப்ப பின்வரும் சிறுசிறு வெளியீடுகளை வெளியிட்டார் நாவலர் பெருமான்.

அனுட்டான விதிமுதற் புத்தகம் (நித்திய கன்மவிதி), அனுட்டானவிதி இரண்டாம் புத்தகமும், குருவாக்கியமும், சிவாலய தரிசன விதி, சைவ சமய சாரம், சைவ வினாவிடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம் (1875), திருக்கோயிற் குற்றங்கள் (1878).

சைவ சமயத்தைக் கண்டனம் செய்து கிறிஸ்துவர்களால் தொடுக்கப் பெற்ற பிரசாரத்தை முறியடிக்க நாவலர் வெளியிட்ட நூல்களாவன: சைவ தூஷண பரிகாரம் (1854), சுப்பிரப்போதம் (1853) வச்சிரதண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் மாணவர் பரம்பரையினர், அத்வைத வேதாந்தத்திற்கு மறுப்பாக சைவ சித்தாந்த உயர்வை நிலைநாட்ட பத்திரிகைகளிலும், நூல் வெளியீடுகளிலும் பெரும் முனைப்பு காட்டினர். 29-4-1888-இல் நிறுவப் பெற்ற "சைவ சமய பரிபாலன சபை"யும், அதன் பிரசார முரசாக 11-9-1889-இல் வெளி வந்த "இந்து நேசன்-இந்து ஆர்கன்" நாவலர் மரபை முன்னெடுத்துச் சென்றன. சைவசித்தாந்தத் தத்துவப் பிரசாரப் போரில் "இந்து சாதனம்" முன் நின்றது.

தமிழகத்தில் சிதம்பரம் 'பிரம்மவித்யா' (1887). சென்னை "ஹிந்து ஜன பூஷணி", திருச்செங்கோடு 'விவேகதிவாகரன்' ஆகியன அத்வைத வேதாந்தப் பிரசாரப் போர் நிகழ்த்த; "நாகை நீலலோசனி" (1890), "ஞானாமிர்தம்" (1888), இரண்டும் சைவசித்தாந்தம் பிரசாரப் போரை நிகழ்த்தின. அக்காலத்தில் யாழ்ப்பாணம், தமிழகத்திடையே சமூக-பண்பாட்டு உறவுகள், பரிமாற்றங்கள் மிக நெருக்கமாக இருந்தன.

இத்தகைய சமய வாதங்களுடன் நாத்திகவாதமும் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டியுள்ளது. 1880-இல் சென்னையில் இருந்து வெளி வந்த "தத்துவ விசாரணி" எனும் இதழின் வாயிலாக நாத்திகப் பிரசாரம் நிகழ்ந்தது. சார்லஸ் பிராட்லாவின் நாத்திகக் கருத்துகள் பிரசாரம் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் இந்த முயற்சி அரும்பியுள்ளது. இதைக் கண்டனம் செய்து சைவசமயச் செம்மல் ச. சபாரத்தின முதலியார், 'உதய பானு' எனும் சைவ சமய இதழில் எழுதி வந்தார். இவ்வாறு இவர் எழுதியது 1896-இல் "ஈச்சுர நிச்சயம்" எனும் நூலாக வெளிவந்தது. சார்லஸ் பிராட்லாவின் நாத்திக வாதம் இந்து சாதனத்திலும் கண்டிக்கப்பட்டது.

இந்தச் சூழலில் சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தைப் பற்றி ஆற்றிய விளக்கவுரை, யாழ்ப்பாண இந்துக்களையும் கவர்ந்தது. புறப்பகையை வென்றெடுப்பதில், உட்குழுப் பூசலில் திளைப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனும் நோக்கு முன்நின்றது. சைவ சமய உணர்வுடன், இந்து சமய உணர்வையும் வளர்ப்பதில் வேதாந்த-சித்தாந்தப் பூசலுக்கு சற்றே விடை கொடுத்து, சுவாமிஜியின் சிகாகோ சாதனை காரணமாகத் தோன்றிய இந்துசமயப் பெருமிதத்தை வகித்துக்கொள்ள யாழ்ப்பாண இந்துக்கள் முன்வந்தனர்.

## பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வுரை

சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரம், யாழ்ப்பாண சைவர்களிடையே எவ்வித மாற்றதை ஏற்பட வைத்தது என்பதைப் பற்றி 'நடுநிலைமையுடன் பேராசிரியர் கைலாசபதி ஆய்வு செய்துள்ளார். ஆங்கிலத்தில் வெளி வந்த ஆய்வுரையின் தமிழாக்கத்தின் ஒரு பகுதி, வருமாறு:

"நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள், இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறிஸ்த்துவ சமயத்தின் மதமாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர். கிறித்தவம், தகுதியற்றது என்று நிறுவப் போராடினர். ஆனால், விவேகானந்தரின் அணுகுமுறை வித்தியாசமானது. தமது குருநாதரின் போதனைகளுக்கு ஏற்ப அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால், இந்து மதம் பிறமதங்களுக்குத் தாழ்வானது அன்று என்பது விளக்கமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்கப்பட்டது.

இவ்வாறு விவேகானந்தரால் பிரசாரம் செய்யப் பெற்ற வேதாந்தம் அனைத்துப் பிரிவினரையும் சமயக் கோட்பாடுகளையும் சமமாகக் கருதியது. இதனால் ஒருவர் இருவித அங்கீகாரத்தையும் பெறமுடிந்தது. ஒருவர் சைவராகவும் அதே சமயத்தில் விரிந்த பொருளில் ஓர் இந்துவாகவும் அங்கீகாரம் பெறுவார். இவ்வாறே வைணவரும் இருவேறு அங்கீகாரம் பெறத்தக்கவர்.

"யாழ்ப்பாண இந்துக்களில் பெரும்பான்மையினர் சைவர்கள். சைவசமயப் பற்று மிகுந்தவர்கள், சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல-மெல்ல வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுவாமி விவேகானந்தரின் போதனைகளும் இராமகிருஷ்ணர் இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக்கொள்ளச் செய்யாவிட்டாலும் பெரும்பாலோரின் குறுகிய நோக்கையும், கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது," ["The Impact of Swami Vivekananda on Hinduism in Sri Lanka" - Prof. K. Kailasapathy, Golden Jubilee of the Ramakrishna mission, Sri Lanka Centre, 1980, P. 2.]

## இலங்கையில் வெற்றியுலாத் தொடக்கம்

சிகாகோ சர்வமத சபையில் கலந்து கொள்வதற்காக சென்றபொழுது 1893 மே மாதத்தில் ஒரு நாள் அவர் சென்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமி, கொழும்பு நகரைச் சுற்றிப் பார்த்தார். ஆனால், அன்று அவரைச் சூழ்ந்து பார்க்க எவருமிலர். 1897 சனவரியில் அந்தக் காட்சி மாறி விட்டது.

இந்தியா தம்மை வெற்றி விழாக் கோலம் பூண்டு வரவேற்கும் என்பதை, இந்தியா திரும்புவதற்கு பல மாதங்களுக்கு முன்பாக தமது நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு கூறினார்.

"இந்தியா எனக்குச் செவிசாய்க்கத்தான் வேண்டும். அதன் அஸ்திவாரத்தையே அசைக்கப் போகின்றேன். அதனுடைய தேசிய ரத்த நாளங்களிலே மின்சார அதிர்வைப் பாய்ச்சப் போகின்றேன். இந்தியா எம்மை எப்படி வரவேற்கப் போகின்றது என்பதைப் பொறுத்துப் பார். வேதாந்த உணர்வை, என் உயிர்ச் சக்தியுடன் இங்கு எவ்வளவில் வாரி வழங்கியுள்ளேன் என்பதை என் தாய்த் திருநாடான இந்தியாவிற்கு உண்மையிலேயே மதிப்பிடத் தெரியும். இந்தியா எம்மை வெற்றி விழாக் கோலம் பூண்டு வரவேற்கும்.

இவ்வாறு ஒரு பக்கம் உணர்ச்சியுடன் சுவாமி சாற்றிய போதிலும், மறுபக்கம் என்ன நடக்குமோ என்று சற்று சோர்வுடன் இருந்ததாகவும் குட்வின் குறிப்பிட்டுள்ளார். 1896 நவம்பர் 14-இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபுல் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் குட்வின் சுவாமியிஜின் சோர்வை பின்வருமாறு கூறியுள்ளார்.

"இந்தியாவில் தாம் எவ்வாறு வரவேற்கப்படுவார் என்பதைப் பற்றி சுவாமி நிச்சயமற்ற வுணர்வைக் கொண்டுள்ளார். பெருமளவில் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்றும் நினைக்கின்றார். அப்படியானால், இந்தியாவில் சிறிது காலம் தங்கி மீண்டும் அமெரிக்கா, இங்கிலாந்திற்கு போவதுதான் உகந்ததாகும். போகும்பொழுது ஜப்பானிலும், சீனாவிலும் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்." [Swami Vivekananda His Life and Legacy, Swami Tapasyananda, P. 87]

சுவாமிஜியை வரவேற்க மக்கள் எழுச்சி எவ்வாறு திரண்டெழுந்து ஏற்றிப் போற்றிப் பக்திப் பரவசத்தால் ஆரவாரம் செய்தது என்பதை வரலாறு மிக விரிவாக பதிவு செய்து விட்டது. இதை முதன்முதலில் தொடங்கி வைத்த பெருமை இலங்கை இந்துக்களுக்கு வாய்த்து விட்டது.

## கொழும்பில் சுவாமிஜி

சுவாமிஜி சிகாகோ வீரராகத் திரும்பி ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிடப் பெற்ற நூலிற்கு "கொழும்பு முதல் அல்மோரா வரையில்" எனும் பெயரிட்டனர். இந்தப் பெயர் பொருத்தத்தைப் பார்க்கும் பொழுது கொழும்பு நகரம் பெற்ற முதற் சிறப்பையும் அறிகிறோம்.

சுவாமிஜி 1897 சனவரி 15-ந் தேதியன்று, மாலையில் சேவியர் தம்பதிகள், குட்வின் புடைசூழ கொழும்பு துறைமுகத்தில் வீரக்கழல்களைப் பதிப்பித்தார். கொழும்பு நகர இந்துக்கள் சுவாமிஜியை வரவேற்க ஆயிரக்கணக்கில் திரண்டனர். சுவாமிஜியை வரவேற்க சென்னையில் இருந்து அவருடைய சகோதரத் துறவி சுவாமி நிரஞ்சனானந்தா வரவேற்புக் குழுவின் சார்பில் வந்திருந்தார். கொழும்பு இந்து சமய மக்கள் வரவேற்புக்குழுவின் தலைவர் பொ. குமாரசுவாமியும், செயலாளர் ஏ. குலவீரசிங்கமும் வந்திருந்தனர்.

சுவாமிஜிக்கு வரவேற்பு குழுத்தலைவர், மல்லிகை மலர் மாலையை அணிவித்ததும், மக்கள் திரள் சுவாமிஜியின் திருவடிகளைத் தொட்டு வணங்க அலை அலையாய் முன்னேறியது. மக்கள் உணர்ச்சி ஒலியும், கர ஒலியும், துறைமுகத்தையடுத்த கடல் அலையோசையை அடக்கி விட்டது. சுவாமிஜியை கறுவாக்காடு என்னுமிடத்தில் ஓர் கவின் மாளிகையில் எழுந்தருளச் செய்ய நீண்ட ஊர்வலம் தொடங்கியது. இரு குதிரைகள் பூட்டிய அணிசேர் இரதத்தில் ஞான சூரியனாக சுவாமிஜி அமர்ந்தார். வழி நெடுகத் தோரணங்கள், அலங்கார வளைவுகள், மக்களின் பக்திப் பரவச வாழ்த்தொலிகள் மாளிகையில் மலர் சொரிய சுவாமிஜி எழுந்தருளியதும், தமிழ்ப் பண்பாட்டிற்கேயுரிய இசை தவழ்ந்தது. தமிழ் பக்தி இலக்கியத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மலர்ந்து தெய்வீக மணம் பரப்பிக் கொண்டு வரும் தேவாரப் பண் இசை, சுவாமிஜியை வரவேற்றது. சுவாமிஜிக்கு இது ஓர் புதிய அனுபவம்; அற்புத அனுபவம். இதையடுத்து சம்ஸ்கிருத துதிப்பாடல் ஒன்று ஓதப்பட்டது.

வரவேற்புக் குழுத் தலைவர் பொ. குமாரசுவாமி சுவாமிஜியிடம் சமர்ப்பித்த வரவேற்புரையின் ஒரு பகுதி, வருமாறு:

"அனைத்து சமய நெறிகளையும் சமரசப்படுத்தும் இந்து சமயத்தின் இலட்சியமான உலகளாவிய சமயத்தைத் தாங்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் அறிவுறுத்தினீர்கள். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் பேரருளினாலும் தங்களுடைய தன்னலமற்ற பற்றார்வக் கிளர்ச்சியாலும் மேலைநாடுகள், இந்தியாவின் ஆன்மிக ஞானத்தின் உயிரோட்டமுள்ள விலைமதிக்கவியலாத வரத்தைப் பெற்றுள்ளன. மேல்நாட்டு நாகரீக வெளித் தோற்றத்தில் மயக்கமுற்ற பெரும்பான்மையான நம் நாட்டு சகோதர மக்கள், தங்கள் முன்னோர் தேடிவைத்த புகழார்ந்த பாரம்பர்யத்தின் அருமையறிந்து உய்ந்தார்கள்."

சுவாமிஜி தமது ஏற்புரையில் உளம் நெகிழ்ந்து இந்து சமயப் பண்பாட்டின் சாரம்சத்தை தமக்களிக்கப் பெற்ற மாபெரும் வரவேற்பில் கண்டதாக பின்வருமாறு கூறினார்.

"ஓர் ஏழைச் சந்நியாசிக்கு அளிக்கப்பட்ட அரசர் மரியாதைக்குரிய வரவேற்பில் இந்துக்களின் ஆன்மிகம் வெளிப்பட்டது."

அடுத்த நாள் 16-ந் தேதி சுவாமிஜி பொதுக் கூட்டத்தில் பேசுகையில், இந்தியா புண்ணிய பூமியென்பதையும், இந்தியாவின் உயிர்நாடி சமய வாழ்க்கை என்பதையும், ஒரே இறைவனை மக்கள் பல பெயரால் வணங்குகிறார்கள் என்பதையும் விளக்கினார்.

சுவாமிஜி இலங்கையில் பத்து நாட்கள் தமது வெற்றியுலாவை நிகழ்த்தினார். கொழும்பு, கண்டி, வவுனியா, அநுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் சுவாமிஜிக்கு வரவேற்புரைகள் படித்தளிக்கப்பட்டன.

இலங்கையில் சில கிறிஸ்துவர்களும், சில பௌத்தர்களும் தமிழ் இந்துக்களின் மத்தியில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கண்டு பொறாமையுற்று தொல்லை கொடுத்தனர். அநுராதபுரத்தில் சுவாமிஜி பேசியது தமிழுடன், சிங்களத்திலும் மொழி பெயர்க்கப் பெற்றது. பௌத்தர்கள், சொற்பொழிவின் இடையே இடையூறு விளைவிக்கும் வகையில் பலவித ஒலிகளை எழுப்பினர். தமிழர்-சிங்களவர் இடையே மோதல் உருவாகும்போல் இருந்தது. சுவாமிஜி, தமிழர்களிடையே கட்டுப்பாட்டை வலியுறுத்தி அமைதியை நிலை நாட்டினார். பின்பு அங்கிருந்த பௌத்தர்களே வெட்கமுறும் வண்ணம் பகவான் புத்தரைப் பற்றி மிக உயர்வான உரையாற்றினார். அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்றார், சுவாமிஜி.

## யாழ்ப்பாணத்தில் சுவாமிஜி

அக்காலத்தில் ரயில் பயணத்திற்கு வாய்ப்பில்லாததால், அநுராதபுரத்தில் இருந்து 120 மைல் தொலைவில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு குதிரை பூட்டிய 'கோச்' வண்டியிலே, படுமோசமான பாதையில், மிக்க சிரமத்துடன் சுவாமிஜி பயணித்தார். சுவாமிஜியுடன் சேவியர் தம்பதிகள், குட்வின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரத் துறவி சுவாமி நிரஞ்சனானந்தா ஆகியோரும் வந்தனர். சனவரி 24-இல் காலை பத்து மணி அளவில் சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

திரு. சி. நாகலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்களைச் செயலாளராகவும், கொண்ட வரவேற்புக் குழு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது. சுவாமிக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பை 'இந்து சாதனம்' (3-2-1897) பின்வருமாறு வருணித்தது. "பல்லாயிரவர் புடைசூழ, மேளவாத்திய கோஷங்கள் திசாமுகங்களை அதிரச் செய்ய, தீவர்த்திகளெல்லாம் வானசோதிகளை அதிரச் செய்ய இரு துரகங்கள் பூட்டிய வண்டிமீதமர்ந்து இந்துக் கல்லூரியிலியற்றப் பட்டிருந்த அலங்காரப் பந்தலுக்குச் சுவாமியவர்கள் எழுந்தருளிய போது பெரிய கடை முதல் கல்லூரி ஈறாகச் செய்யப்பட்டிருந்த வீதியலங்காரம் அம்மம்ம! எம்மாற் சொல்லத்தக்கதன்று, எங்கணுந் தோரணங்கள்! எங்கணும் பூரண கும்பங்கள்! எங்கணுந் தீபதூபங்களுமாயே இருந்தது."

யாழ்ப்பாண மக்கள் சார்பில் அ. சபாபதிப்பிள்ளை, வரவேற்புரையை வாசித்தளித்தார். இதில் ஒரு பகுதி, வருமாறு:

"எமது சமய உண்மைகளைத் தங்கள் சுயநலமற்ற சேவை மூலம் பரப்பி வருவதற்கும், சர்வசமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்திய தத்துவ சாஸ்திரத்தை அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலே பரப்பி மேலைத் தேசங்களுக்கும், கீழைத் தேசங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். சமய உண்மைகளில் நம்பிக்கை குறைந்த உலோகாயதக் கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் நமது பழம்பெரும் சமய உண்மைகளைப் பிரசாரம் செய்வதற்குத் தாங்கள் ஆரம்பித்திருக்கும் இயக்கத்திற்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வரவேற்புரையை ஏற்று சுவாமிஜி பதிலளித்ததைப் பற்றி 'இந்து சாதனம்' சைவ சமய எழுச்சியுடன் பின்வருமாறு வருணித்தது.

"அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பிரசங்கங்களினது அலங்காரமே அலங்காரம்! புத்தரை வாதில் வென்ற ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமியவர்களினது திருவவதாரமே அன்றிச் செக்கர் வானிறத்தானாகிய எம்பிரானே எமக்கு உபதேசஞ் செய்யுமாறு மானுடச் சட்டை பூண்டெழுந்தருளிய குருவடிவந்தானோ எம் முன்னே நிற்கும் வடிவமென்று ஐயுறக் கிடந்ததெனில் சுவாமி அவர்கள் மகத்துவம் எம்மாற் சொல்லுந்தகைத்தோ!"

25-ந் தேதியன்று இரவு 7 மணி அளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுவாமிஜி 'வேதாந்தம்' எனும் தலைப்பில் ஒரு மணி 40 வினாடிகள் நேரம் பேசினார்.

## யோக சுவாமிகள் நினைவுக் குறிப்புகள்

யாழ்ப்பாணத்தில் சைவ சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த நாவலர் பெருமானுக்குப் பிறகு சைவப் பெருமக்களால் பெரிதும் கொண்டாடப் பெற்றவர் யோக சுவாமிகள் (1872-1964). சைவ சமயத்தைப் பேணுவதில் மிகுந்த கண்டிப்புடையவராயிருந்த அதே சமயத்தில் சமயங் கடந்து நின்று, தத்துவப் பூசல்களுள் அகப்படாத தத்துவாதீதனாகவும் திகழ்ந்தவர் யோக சுவாமிகள்.

'வேதாந்த சித்தாந்த, சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம் நாமே' என்றும் கூறியவர் யோக சுவாமி. 1925-ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பலரும் யோகசுவாமிகள் திருநாமத்தை பக்தி சிரத்தையுடன் கூறத் தொடங்கிவிட்டனர். யோகசுவாமிகளின் போதனைகள் 'நற்சிந்தனை' எனும் நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்து ஞான மலராக ஆன்மிக மணம் வீசிய யோக சுவாமிகள், சிகாகோ வீரராக சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்த சமயத்தில் அவருடைய தரிசனத்தையும், சொற்பொழிவையும் கண்டு கேட்ட பேறு பெற்றவர்.

சுவாமிஜி ஏறி வந்த வண்டியை, யோக சுவாமிகள் இழுத்ததாக, பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தின் சுவாமி சித்ரூபானந்தா ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். !ஆத்மீகமும் யாழ்ப்பாண மக்களும் - தமிழோசை, லண்டன், 31-7-1992, ப. 15

யோக சுவாமிகள் பற்றிய ஒரு நூலில், அவர் சுவாமிஜியைக் கண்டது, கேட்டதைப் பற்றிக் கூறியது பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"சுவாமிகள் கிளிநொச்சியில் தொழில் புரியும் காலத்திலேயே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது (1897). அப்பெரியாருக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் உற்சாகத்துடன் பங்கு பற்றினர். கோட்டையிலிருந்து இந்துக் கல்லூரி வரை சென்ற ஊர்வலத்திலும் பின்னர் கல்லூரியில் நடை பெற்ற பொதுக் கூட்டத்திலும் சுவாமிகள் கலந்து கொண்டனர். பின்னாட்களில் அவர் தம் அன்பர்களிடத்து "விவேகானந்தர் மேடையின் இரு பக்கங்களிடையேயும் சிங்கக்குட்டிபோல் உலாவிக் கொண்டு பேசினார்" எனவும், "அவர் பேசினார் என்பதிலும் சிங்கம் போல் கர்சித்தார் என்பதே சரி" எனவும் கூறி மகிழ்வார். அவர் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகளில் அன்பர்களுக்குக் கூறியிருக்கிறார். "விடயம் பெரிது நேரமோ குறுகியது" [The subject is Vast, But time is short] என்பதே அவ்வாசகமாகும். !யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் முதற்பதிப்பு, 1991, ஆக்கம், 'சிவத் தொண்டர்', சிவதொண்டன் நிலையம், செங்கலடி, இலங்கை, ப. 17

சுவாமிஜி மேடையில் உலாவிக் கொண்டே பேசும் பழக்கமுடையவர் என்பதை மேரி லூயிஸ் பர்க்கும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவர்கள் தூண்டியபிரசாரம்

"சுவாமிகளின் பிரசாரத்தினால் தங்கள் ஏகபோக நிலைக்கு ஆபத்து ஏற்படுவதைக் கண்ட கிறிஸ்தவர்கள் சுவாமிகளைப் பலமாகத் தாக்கினர். வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள வித்தியாசத்தை மிகைபடக் கூறி இந்துக்களுக்குள் மித்திர பேதஞ் செய்ய எத்தனித்தனர்." இவ்வாறு "இலங்கையில் விவேகானந்தர்" எனும் நூலின் ஆசிரியர் ச. அம்பிகைபாகன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிஜி இலங்கை வருவதற்கு முன்பே, சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி நிகழ்த்திய சொற்பொழிவுகள் இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்த காலத்திலேயே கிறிஸ்துவ சமய இதழ்கள் சுவாமிஜியை எதிர்த்து எழுதியதை முன்பு கண்டோம்.

சுவாமிஜியை வேதாந்தி எனச் சுட்டிக் காட்டி, சித்தாந்தம் பேசும் தமிழர்கள் வரவேற்கலாமா என 'மித்ர பேதம்' செய்ய முற்பட்ட பொழுது, சைவ சமயப் பிரசார முரசான 'இந்து சாதனம்' அந்தச் சூழ்ச்சியை சாடியது. 17-2-1897-இல், "ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளும் கிறிஸ்துவர்களும்" எனும் தலைப்பில் 'இந்து சாதனம்' எழுதிய கட்டுரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

"ஆயிரஞ் சுணங்கன்கள் கூடிச் சந்திரனைப் பார்த்துக் குரைத்துக் குரைத்து ஊளையிட்டாலும் அதற்கு யாதும் குறைவுண்டாகுமா? ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் மீது எண்ணிறந்த கிறிஸ்தவர் சீறிச் சினந்து அவர்க்கும் அவர் பிரசங்கிக்கும் மார்க்கத்திற்கும் விரோதமாகப் போலிக் கண்டனங்கள் எழுதித் தங்கள் பத்திரிகைகளை நிரப்பி விடுவதால் அவர் மாட்சிக்கு இம்மியளவேனுந் தாழ்ச்சி யுண்டாகுமா? உண்டாகா! உண்டாகா!

சுவாமியவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா ஆதியாமிடங்களிலே எமது மார்க்கத்தைப் பிரசங்கித்து அங்குள்ளாரநேகரை எமது மத அனுசாரிகளாக்கினாரென்று நாம் கூற அதனை மறுத்து, அங்ஙனமன்று 'வினோதக் காட்சிப் பிரியாராயுள்ளோர் சிலர் மாத்திரமே அவர் பிரசங்கத்தைக் கேட்டு போயின' ரென்று எம்மோடு வாதாடின கிறிஸ்தவர்கள், அவர் தமது ஆங்கில சீடரோடும் நம் மத்தியில வந்துதித்து, துயின்றிருந்த எம்மை விழிக்கச் செய்து ஒரு பெருங்கிளர்ச்சியை எம் மதத்தினர்க்குள் உண்டாக்கிச் சென்றதைக் கண்ணுற்று மனம் பொறுக்கலாற்றாதவராய்க் கிறிஸ்த மதத்திற்கு இடையூறு நேரிட்டிருக்கின்றதே எனுமச்சங்காரணமாய் நம் பத்திரிகைகள் மூலம் ஆகச் சில வெற்றுரைகள் பகர்ந்து எம் நாட்டினரை இதுவரையும் வஞ்சித்தது போதாதென்றாக்கும் இன்னும் வஞ்சிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூண்டெழுந்த வேதாந்த சித்தாந்தத் தத்துவப் போராட்டம், இந்து சமயத்திற்குள் நிகழ்ந்த பல்வேறு போராட்டங்களில் ஒன்றாகும் கிறிஸ்துவத்தில் கத்தோலிக்க, பிராட்டஸ்டன்ட், யூனிட்டரினிஸம் முதலான பல்வேறு கருத்துப் போர்களைப் போன்றும், இஸ்லாத்திலும் ஷியா, சன்னி, அகமதியா எனும் பிரிவினர்களிடையே நிகழ்ந்த தத்துவப் போராட்டங்கள் போன்றும், இந்து சமயத்திலும், வேதாந்த, சித்தாந்தத்தத்துவப் போராட்டம் எழுந்தது. இது, இந்து சமயத்தை அழிப்பதற்கன்று, 'அவரவர் தம தம தறி தறிவகை வகையால், இந்த சமயத்திற்கு ஆக்கம் தேடுவதற்கும்தான். இந்தப் போராட்டத்தை இந்து சமய ஒற்றுமைக்கு ஊறு தேடுவதற்காக, பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும், கிறிஸ்தவ மிஷனரிகள் பயன் படுத்தியதுண்டு.

சுவாமிஜிக்கு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் படித்தளிக்கப் பெற்ற வரவேற்புரைகளில், "சகல சமய நெறிகளையும் சமரசப்படுத்தியதாய், ஆன்மாக்களது பக்குவத்துக்கேற்ற படிப் படியாகக் கொள்ளத்தக்க ஞானவ முதத்தையுடையதாய்" என்றும், "சர்வ சமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன.

அழுத்தமான சைவ சித்தாந்த உணர்வை போர்க் குணமாகக் கொண்ட யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மையான சைவர்கள், புத்தெழுச்சி பெற்று மேலும் சமய வலிமை பெறுவதை கிறிஸ்துவ மிஷனரிகள் சிலர் விரும்பவில்லை. ஆகவே, வேதாந்த சித்தாந்த 'மோதல்களை' மீண்டும் நினைவு படுத்தி, அவற்றை முன் நிறுத்தி சுவாமிஜியின் வளர்ந்தோங்கி வந்த செல்வாக்கைத் தடுத்து நிறுத்த வீண் முயற்சி செய்தனர். சுவாமிஜி கிறிஸ்துவ சமயத்திற்கு எதிரி அல்லர்; கிறிஸ்துவ மிஷனரிகளின் தவறான பிரசார - செயற்பாடுகளுக்குத்தான் எதிரி என்பதை கருத்தில் கொள்ளாமல் யாழ்ப்பாணத்து கிறிஸ்துவர்கள் சிலரும், அமெரிக்காவில் கிறிஸ்தவ மிஷனரிகள் கிளப்பிவிட்ட திரிபுவாதத்தைப் பின்பற்றினர்.

இதற்காக, தமிழகத்தில் சிதம்பரத்தில் இருந்து வெளி வந்த 'பிரமவித்யாவும், திருச்செங்கோட்டில் இருந்து வெளி வந்த "விவேகதிவாகர"னும், சைவசித்தாந்தப் பிரசாரப் போரிற்கு பதிலளித்து எழுதி வந்தது தாக்கியும் எழுதின. இந்தத் 'தாக்கு'தலை யாழ்ப்பாண கிறிஸ்தவ மிஷனரிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதையும் உள்ளடக்கி, 'இந்து சாதனம்' மேலும் எழுதியதாவது:

".......பத்திராதிபர் இந்துக்களாகிய எமக்கு இந்து மதம் போதிக்கத் துணிந்த துணிவே துணிவு! வேதாந்தம் சித்தாந்தங்கட் கிடையேயுள்ளே பேதாபேதங்களை ஏதோ நன்குணந்தவர் போன்று நடிக்கும் நடிப்பே நடிப்பு! தாம் கையாண்டிருக்கும் கிறிஸ்த மதத்தினது உண்மை பொய் தெரியாது மயங்குமிவர் பரசமய ஆராய்ச்சி செய்ய நினைத்த மருளே மருள்! "பிரம வித்தியா", "விவேகதிவாகரன்" ஆகிய இந்தியப் பத்திரிகைகளில் அத்துவைத விஷயமாய் ஆங்காங்கு பலமுறைகளிலும் எழுதப்பட்டவற்றையெல்லாம் திரட்டி எடுத்துச் சென்று.... பிரசுரித்து விட்டு, தாம் ஏதோ அத்துவைத நூல்களை விசாரித்துக் கரை கண்டார் ஒருவர் போலக் கபட நாடகஞ் செய்யும் நாடகமே நாடகம்!..... எமக்குள்ளே பிரிவினையுண்டாக்கிச் சுவாமிகள் வரவாற் கிளர்ந்திருக்கும் மதாபிமானத்தைக் கெடுத்து விடுவதற்கோ! ஏதுக்கிவர் இவ்வளவு பதை பதைக்கின்றார்! இவர் வெற்றுரையால் எடுபட எமது சமயிகள் அத்தனை மூட சிரோமணிகளன்று."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமிகள் வரவாற் கிளர்த்திருக்கும் மதாபிமான"க் கண்ணோட்டத்தினால் வேதாந்த–சித்தாந்த நல்லுறவிற்குக் குரல் கொடுத்தது, இந்து சாதனம்'. சுவாமிஜியின் வருகையால் விளைந்த இந்தப் புதிய மாறுதலை 'இந்துநேசன்' பின்வருமாறு எதிரொலித்தது.

"வேதாந்த சித்தாந்தங்களை உண்மை ஞானிகள் ஒருபோதும் இரண்டெனார். சுத்தாத்துவிதமே சித்தாந்தம் என்பது எமக்கெல்லாம் ஒத்த துணிவு. ஆகவே வேதாந்த சித்தாந்தங்கள் உண்மையளவில் ஒன்றேயாம். கிரியா விஷயங்களில் இவை இரண்டிற்கும் சிறிது பேதமுண்டேயாகினும், அதனால் உண்மை பேதிக்குமா? மாயாவாதத்துக்கும் சித்தாந்தத்துக்கும் மிக்க பேதமுண்டு. இவ்வுண்மைகளை அறியாது பத்திராதிபர் தாமே மயங்குகின்றாரன்றிப் பேதைகளை மயக்கவும் எத்தனிக்கின்றார்."

## *'சிவ புண்ணியத் தெளிவு'*

சுவாமிஜியின் சொற்பொழிவுகளில் சிந்தாந்தச் சாத்திர நூல்களுள் ஒன்றான "சிவ புண்ணியத் தெளிவு" எனும் நூலில் ஓதப்பட்டிருக்கும் கருத்துகள் "மிகுதியும் செறிந்து கிடத்தலைப் பாலரும் இனிது விளங்கிக்கொள்வர்" என்று 'இந்து சாதனம்' தனது கருத்துப்போரில் தொடர்ந்து வலியுறுத்தி, பின்வரும் பாடலையும் 'சிவ புண்ணியத்தெளி'வில் இருந்து எடுத்துக்காட்டியது.

சீவனை சிவத்தினொன்றாய்ச் சேர்க்கும்
சித்தாந்தத்தோர்க்கும்
சீவனை பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத்தோர்க்கும்
பாவனை இரண்டுமொன்றே பரம
ஞானத்தோர்க்கெல்லாம்
மேவிய கருமகாண்டம் விளம்பிடிற் பேதமாமே.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும், இந்நூலை அருளியவர் உமாபதிசிவாசாரியார் ஆவார்.

ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் என்னும் மூன்று நிலைகளில் இந்து சமயத்தத்துவங்கள் அனைத்திற்கும் விளக்கங்கள் காண்பதற்கு வாய்ப்புகள் பெருமளவில் இருக்கும் பொழுது, வேதாந்த–சித்தாந்தங்களிடையே ஒற்றுமை அம்சங்களைக் காண்பதே உகந்ததுமாகும். 'சிவ புண்ணியத் தெளிவு' சாத்திர நூலைக்கொண்டு 'இந்து சாதனம்', சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரத்திற்கு ஆதரவளித்ததும், குறிப்பிடத்தக்க ஒரு விளக்கமாகும்.

## *'உதய தாரகை'யின் பார்வையில்*

யாழ்ப்பாண கிறிஸ்துவ சமயத்தினர் மீது 'இந்து சாதனம்' தொடுத்த விமர்சனத்திற்குரிய காரணத்தை அறிவதற்கு, 'உதய தாரகை'யின் போக்கை அறிய வேண்டும். சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகையைப் பற்றி, 'உதயதாரகை' விரிவான செய்தியை 1897 மாசி மாதம் 4–ந் தேதி வியாழக் கிழமை இதழில் வெளியிட்டது. இதில் ஆங்காங்கே காழ்ப்புணர்ச்சியுடன் திரிபுவாதத்தை தெரிவித்தது, உதயதாரகை. சில சான்றுகளைப் பார்ப்போம்.

"வேதாந்தம் தமிழ் நாடுகளுட் புகுந்து காலத்துச் சைவ சித்தாந்த ஆதீனத்தார் குமிறொலி செய்தெழும்பச் சித்தாந்திகளுக்கும் வேதாந்திகளுக்குமிடையில் பெரும் பூசலுண்டாயிற்று. இப்பூசலிடையறாது நடந்து கொண்டே வருகின்றது." அத்வைத தூஷணங்கள்," "பரிகாரங்கள்", "நிராகரணங்கள்" மெத்த! மெத்த! திருச்செங்கோட்டு விவேக திவாகரனாதியாம் பத்திரங்களிலுமிச்சமர் நடக்கின்றது. திராவிட தேயத்தவர்களில் மிகுதியானோர் சைவ சித்தாந்த பட்சத்தாராகவே விவேகானந்த சுவாமியின் அத்துவைத பிரபாரண மெவ்வள விலங்கீகாரம் பெறுமோ அறியோம்."

"விவேகானந்த சுவாமியின் அவிவேக சாலப் பிரசாரணம்" எனும் தலைப்பில் 'சத்திய நேசன்' என்பவர் எழுதிய கடிதத்தையும், வெளியிட்டது 'உதயதாரகை'. இதில் சுவாமிஜியை, 'இந்து சாதனம்' பாராட்டியதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பின்வரும் சில கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

"அமெரிக்க கிறிஸ்தவ மதம், மாணிக்கவாசக சுவாமிகாலச் சைவமாயிருப்பின் சுவாமி அங்கு பிரசங்கிக்கவும் பின்னர் திரும்பி வரவும் விடுவரா? கழுவேற்றிடுவாரே. சமய இட்டங்கொடுப்பதும், பரமத வேறுபாடின்றிச் சகலரிலும் அனுதாபப்படச் செய்வதும் கிறிஸ்து மதமேயென்பதை அனுபவமாத்திரையாய் பூரணமாயறிந்தும் இவ்வாறு போலி சாலம்விடல் அவர்க்கு விவேகமாகுமா?"

"எட்டி எட்டிப் பார்ப்பாரும், ஏணி வைத்துப் பார்ப்பாரும் குட்டிச்சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும் என்றாற்போல நம் யாழ்ப்பாணத்துள்ள சைவரும் பிறரும் விவேகானந்த சுவாமியை வலிந்தழைத்தும் எட்டிப் பார்த்தும் வணங்கிப் பார்த்தும் பெற்றுக்கொண்ட நற்பலன்தானென்ன? விவேகானந்த சுவாமி போதிக்கின்ற மதத்துக்கும் அவரதாசாரத்துக்கும் யாழ்ப்பாணத்துள்ள சைவர் அனுசரிக்கின்ற மார்க்க ஒழுக்கங்களுக்கும் ஏதும் ஒற்றுமை பற்றுமா? முத்திறத்தார்க்கே விசேஷ சலாக்கியமும் பாக்கியமுமாகச் சமைத்துள்ள ஆலயங்களும் நூல்களும் எத்திரத்தார்க்கும் இயைத்தற்குகந்த விதி உபதேசத்தால் மாற்றினால் வாய்ப்புத்தான்.

உதயதாரகை, இந்துநேசன் இரண்டும் நிகழ்த்திய கருத்துப்போர், யாழ்ப்பாண கிறிஸ்துவ சமய, சைவ சமய வரலாற்றின் போக்குகளை அறிய வாய்ப்பளித்தது. ஆறுமுக நாவலர், வேதாந்தத்தை எதிர்த்தது போலவே, கிறிஸ்துவ சமயத்தையும் எதிர்த்தார். அவருக்குப்பின் அவருடைய மரபின் வழிநின்றோர், வேதாந்த சமய எதிர்ப்பில் முனைப்பு காட்டாமல், சுவாமிஜி வேதாந்த சமய அணுகுமுறையைப் புரிந்து கொண்டனர். கிறிஸ்துவ சமய எதிர்ப்பையும், வேதாந்த சமய எதிர்ப்பையும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகக் கொள்ளாதது; சுவாமிஜியின் காரணமாக ஏற்பட்ட மாற்றம், இதுவென்றும் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜிக்கு முன்பு கூட ஆங்கிலம் படித்த, சைவசமய அறிஞர்கள், வேதாந்த, சித்தாந்த சமரச நோக்குடன் விளங்கினர். சேர் முத்துகுமாரசுவாமி (1834–1879), பொன்னம்பலம் ராமனாதன் ஆகியோர் வேதாந்த, சித்தாந்த சமரச நோக்குடையவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வகையில் அவர்கள் தாயுமான சுவாமிகள் (1706–1744) சமரச நெறி வழியே நின்றனர் என்றும் கருதலாம்.

சேர் முத்துகுமார சுவாமிஜியின் சமரச நோக்கைப் பற்றி பேராசிரியர் கைலாசபதி எழுதியதாவது!

"தாயுமானவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த முத்துகுமாரசுவாமி அவர்கள் அந்த நூலிற்குக் கொடுத்த தலைப்பு குறிப்பிடத்தக்கது. "Taumanavar-or Hindu-Philosophic Poems of the Vedanta-Siddhantic School"! சித்தாந்தத்தில் இருந்து வேதாந்தத்திற்குச் சென்ற பிறகு முத்து குமாரசுவாமி 1874–இல் பௌத்த சமய நூலொன்றை பாளிமொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்தார். அந்த மொழிபெயர்ப்பு நூலின் பெயர்: "Sutta Nipata or Dialogues and Discourses of Gotama Buddha"... பொதுவாக மற்ற மதங்களிடத்திலும் குறிப்பாக இந்து சமயத்தினிடமும் அவர் மேற்கொண்ட அணுகுமுறை, அவர் காலத்தில் இருந்த படித்தோரிடையேயும் விளங்கியது."

இவ்வாறு பேராசிரியர் கைலாசபதி விளக்கமளித்து விட்டு, "விவேகானந்தரின் உயிர்த்துடிப்பான பேச்சுகளுக்கு முதலில் ஆதரவளித்தவர்கள் ஆங்கிலம் படித்த மேல்தட்டுவர்க்கம் முக்கியமாகத் திகழ்ந்தது" என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சேர். பொன்னம்பலம் ராமனாதன் அமெரிக்காவில் சொற்பொழிவாற்றிய பொழுது, சுவாமி விவேகானந்தர் நெறியிலே நின்றார் என்று கூறப்படுகின்றது. சுவாமிஜி மேலை நாடுகளில் செய்த இந்து சமயப் பணியின் அற்புத விளைவுகளை நேரில் கண்டு, அவ்வழியைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொன்னம்பலம் ராமனாதன் விரும்பியதாகவும் தெரிகின்றது.

இலங்கையில் சுவாமி விவேகானந்தர் வழியைப் பின் பற்றி இராமகிருஷ்ணர் இயக்கம் செழித்திடப்பாடுபட்டவர் சுவாமி விபுலானந்தர் (1892–1947) என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது. இதன் விவரத்தை "சுவாமி விபுலானந்தர்" எனும் நூலில் !ஆசிரியர், பெ. சு. மணி, சுவாமி விபுலானந்தர். நூற்றாண்டு விழா வெளியீடு, 1992 அறியலாம்.

சுவாமிஜியின் இலங்கை விஜயத்தின் விளைவாக நிகழ்ந்த அற்புதங்களில் ஒன்று, சுவாமிஜியின் சொற்பொழிவு ஒன்று நிகழ்ந்த சில மாதங்களுக்குள்ளேயே (1897) அது தமிழாக்கம் செய்யப்பெற்று கொக்குவெள்ளை எனும் ஊரில் வெளியிடப்பட்டதாகும். இந்தச் சாதனையை நிகழ்த்தியவர் ஏ. முத்துத்தம்பிபிள்ளை (1858–1917) என்பவராவார். அவர் வெளியிட்ட நூலின் பெயர், "சுவாமி விவேகானந்தர் பிரசங்கம்". கொழும்பு நகரில் சுவாமிஜி, 'தியோசபி' பற்றி ஆற்றிய சொற்பொழிவின் தமிழாக்கம், இந்த நூலாகும். இந்த நூலிற்கு மற்றொரு வரலாற்றுச் சிறப்புண்டு; அதாவது சுவாமிஜியின் முதல் மொழிபெயர்ப்பாகவும், தமிழாக்கமாகவும் வெளிவந்த நூல், இந்த நூல்.

## இலங்கை அனுபவம் பற்றி சுவாமிஜி

1900–ஆம் ஆண்டில் சுவாமிஜி இரண்டாவது முறையாக மேலைநாடுகளிற் பயணம் செய்தபொழுது, தமது நினைவுக் குறிப்புகளைப் பற்றி சகோதரத் துறவியும், கல்கத்தா 'உத்போதன்' எனும் வங்கமொழி இதழின் ஆசிரியருமான சுவாமி திரிகுணாதீதா அவர்களுக்கு வங்க மொழியில் எழுதியனுப்பினார்: 'உத்போத'னில் வெளிவந்த நினைவுக் குறிப்புகளின் ஆங்கில மொழியாக்கத்திற்கு "Memoirs of European Travel" எனப் பெயரிடப்பட்டது. இதில் சுவாமிஜி தமது இலங்கை அனுபவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்துக்களைக் குறித்து சுவாமிஜி எழுதியதாவது:

"இங்கு எல்லா இந்து வகுப்பினரும் ஒன்று கலந்து ஒரே இனமாய் வாழ்கின்றனர். இவர்கள் பஞ்சாபிய ஜாட்டுகளைப்போல எந்த ஜாதிப்பெண்ணையும் (ஐரோப்பியப் பெண் உட்பட) மணந்து கொள்ளலாம். ஒருவன் கோவிலுக்குச் சென்று புனிதமான முப்பட்டைத் திருநீற்றை நெற்றியில் அணிந்து, 'சிவசிவா' என்று கூறினால் உடனே இந்துவாக மாறிவிடுகிறான். கணவன் இந்துவாகவும் மனைவி கிறிஸ்துவ மதத்தினளாகவும் இருக்கலாம். ஒரு கிறிஸ்தவன் நெற்றியில் வெண்ணீற்றைப் பூசி, 'நம பார்வதிபதயே!' என்றதும் இந்துவாக மாறிவிடுகிறான். இதுதான் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு மிகுந்த கோபமூட்டுகிறது. இலங்கைக்கு நீங்கள் வந்ததிலிருந்து அநேக கிறிஸ்தவர்கள் நெற்றியில் நீறணிந்து 'சிவனே போற்றி' என்று கூறித் தங்கள் பழைய இந்து மதத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

"இங்கு அத்துவைதமும், வீர சைவமும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவன் எனக் கூறவேண்டும். ஸ்ரீ சைதன்னிய தேவர் வங்காளத்திலே பரவச் செய்த இறைவனின் திவ்விய நாம சங்கீர்த்தனமும் நடனமும் ஆதியிலே தென்னாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன. இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமான தமிழாகும். மதமும் கலப்பற்றத் தமிழ் மதமேயாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறைநூல்களை ஓதுதலும், சிவனைப் பரவி பாடுதலும் ஆயிரக்கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிறந்த அடியாரான அனுமனையொத்த தோற்றமும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறுபூசி, கழுத்திலே உருத்திராக்க மாலைகளணிந்து மெய் மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பாராமல் ஒருவரால் புரிந்து கொள்ள இயலாது".

சுவாமிஜி, மிகச் சரியாகவே இலங்கை இந்துக்களைப் புரிந்து கொண்டார் என்பதை மேலே காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாட்டுத் தமிழர்களும் தில்லைச் சிற்றம்பலமும்

*அருள் தியாகராசா*

கோயில் என்று அழைக்கப்பெறும் சிதம்பரத்தின் பெருமையை ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் அளவிட்டுக் கூற இயலாது. இத்தலத்தை 'எப்புவனங்களும் நிறைந்த திருப்பதி' என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் சைவப் பேரொளியையும் தமிழ் மொழியின் சிறப்பையும் பரப்புவதற்கே அவதரித்த ஆறுமுக நாவலர் பெருமான் சிதம்பரத்திலே அக்காலத்தில் ஓர் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபித்துத் தமிழ் மணமும் சிவ மணமும் கமழச் செய்தார். சைவத்தின் நிலைக்களமாய் விளங்கும் பன்னிரு திருமுறைகளுக்கு உரிய மதிப்பையும் இடத்தையும் கொடுக்கத் தயங்கிய தில்லையில் வாழ்ந்த சுமார்த்தர்களை வன்மையாகக் கண்டித்தார். பெரியபுராணத்தை அச்சுவாகனமேற்றி உலா வரச் செய்தார்.

நாவலர் பெருமானின் முன்னோர்களில் ஒருவராகிய ஞானப் பிரகாசர் சிதம்பரத்தில் ஞானப்பிரகாச தீர்த்தம் என்ற ஓர் குளத்தை உண்டாக்கினார்.

நாவலர் பெருமானைப் பின்பற்றி சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், வண்ணை சுவாமிநாத பண்டிதர், சிவஞான பாடியம் முழுவதையும் அச்சுவாகன மேற்றுவித்த ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் பல காலம் சிதம்பரத்தில் வாழ்ந்து அரும்பணி புரிந்தனர்.

ஸ்ரீமத் நடராசமூர்த்தியிடம் எல்லையில்லாத பேரன்பு பூண்ட 'யாழ்நூல் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்கள் நடராச வடிவம் என்ற நூலை இயற்றியிருக்கிறார்கள்.

ஈழநாட்டில் கலைமகளின் கடாட்சம் திருமகளின் திருவருளும் சிவபக்தியும் ஒருங்கே பொருந்திய குடும்பத்தில் உதித்தவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். கல்வித்துறையில், சமயத்துறையில் அரசியலில், நிர்வாகத்தில், நாவன்மையில், சிவபூசை செய்வதில், வள்ளற்றன்மையில் சேர்.பொன் இராமநாதன் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினார். சேர். இராமநாதன் தில்லையம்பதியில் ஐந்தொழில் இன்பக்கூத்தியற்றும் ஸ்ரீ நடராசப் பெருமானிடம் பெரும் பற்றுடையவர். 1905ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் நடந்த சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தின் முதலாண்டு விழாவிற்கு சேர். இராமநாதன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அவர்கள் தம் சொந்தச்செலவில் நிறுவிய சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடராசர் கோயிலைக்கட்டி, அங்கே பயிலும் சைவப் பெண்பிள்ளைகளெல்லாம், நடராசப் பெருமானை நாடோறும் வணங்க வேண்டுமென்று விதித்திருக்கிறார். திராவிட சிற்ப முறைப்படி ஓர் பெரிய சிவாலயத்தைக் கொழும்பு மாநகரில் கருங்கல்லினால் அவர் கட்டியிருக்கிறார். அதனை ஸ்ரீ பொன்னம் பலவாணேசர் கோயில் என்று அழைப்பர்.

சேர். முத்துக்குமாரசாமியின் புதல்வரும் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மைத்துனருமாகிய கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரசாமி கலையுலகில் சர்வதேசப் புகழ்பெற்றவர். அவர் இந்தியாவிலுள்ள புராதனக்கலைகளை ஆராய வேண்டுமென்ற நோக்கத்துடன் முதலில் தென்னிந்தியாவிலுள்ள முக்கிய தலங்களுக்குச் சென்று சிற்பம் முதலிய கலைகளில் கருவூலங்களாய் அமைந்த ஆலயங்களைத் தரிசித்தார். தமிழிலக்கியங்களைப் பற்றியும் சைவ சாத்திரங்களைப்பற்றியும் ஓரளவு அறிந்துகொண்டார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'சிவநடனம்' (டான்ஸ் ஆஃப் சிவா) என்ற நூல் மிக்க பிரசித்தி வாய்ந்ததாகும். அது அவருடைய கலை ஆராய்ச்சியின் சிகரமாக அமைந்துள்ளது என்று கூறலாம். இந்நூலில் நடராஜ தத்துவம் அழகாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் அவர் பெற்றிருந்த இந்து சமய ஞானமும் இந்தியக் கலைஞானமும் ஒன்றாகச் சேர்ந்து மிளிர்கின்றன.

ஈழநாட்டிலுள்ளவர்கள், சிதம்பரத் தலத்தைத் தமது கண்ணின் மணிபோல் போற்றும் பண்புடையவர்கள். சிதம்பரத்தில் மானா முதலி மடம், சிவபுரி மடம், புண்ணிய நாச்சி மடம் முதலிய மடங்களை யாத்திரிகர்களின் பொருட்டுக் கட்டி வைத்திருக்கிறார்கள். மடங்கள் இப்போது நன்றாக பரிபாலிக்கப்படுவதில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பல சைவப் பெருமக்கள், நிலங்களையும் கட்டிடங்களையும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராசப் பெருமானுக்குத் தரும சாதனம் செய்திருக்கிறார்கள். பல்லாண்டுகளாக, இவற்றிலிருந்து பெற்ற வரும்படியைக் கொண்டு அறக்கட்டளைகள் நடைபெற்று வந்தன. இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக அந்த அறக்கட்டளைகள் முட்டின்றி நடைபெற முடியாத நிலையை எய்தியுள்ளன.

ஈழநாட்டிலுள்ள பலர், தங்கள் பிள்ளைகளுக்கு அம்பலவாணன் நடராசா, சிதம்பரம், கனகசபை, பொன்னம்பலம், சபாநாயகம், சிவசிதம்பரம், சிவகாமி முதலிய பெயர்களை வைத்திருக்கிறார்கள்.

நன்றி: *'கோயில்' - சென்னை சோமு நூலக வெளியீடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தத்துவம் சைவசித்தாந்தம்

-வண. பிதா தனிநாயகம் அடிகள்
(அனைத்துலகத், தமிழாராய்ச்சிக் கழகம்)

கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக இந்தச் சிந்து நதி நாகரிகம்பற்றி நடைபெற்ற ஆராய்ச்சியின் பேறாகச் சில புதிய உண்மைகள் வெளியாகியுள்ளன. ஆரியரல்லாத மக்களே சிந்து நதி நாகரிகத்தை வளர்த்துள்ளனர். இவர்கள் திராவிட நாகரிகத்தின் மூதாதையர்களாவர். இவர்கள் மொழியும், பண்பாடும் சங்ககால மொழி, பண்பாட்டுடன் இயைந்திருக்கின்றன.

இந்த நாகரிகம் தென்னிந்தியாவிலும், பௌத்தத்திற்கு முந்திய இலங்கையிலும் பரவியுள்ளது. இந்த நாகரிகப் பரவலின் பரப்பையும் தன்மையையும் தொல்பொருள் ஆராய்ச்சி முடிவுகள் ஆதரிக்கின்றன. பம்பாயில் லோதால் வரையும், மேற்கே பட்னா வரையும் இது பரவியிருந்திருக்கின்றது.

நீண்ட தொடர்களாலும், படவிளக்கத் தன்மையாகவும் இந்தச் சிந்து நதி நாகரிகம் அமைந்துள்ளது. முற்கால சுமேரிய, எகிப்திய, எலாமிய எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. சிந்து நதி எழுத்துக்கள், இவற்றில் ஒன்றிலிருந்து அல்லது இவை எல்லாவற்றிலுமிருந்து பிறந்திருக்க முடியும். சீன எழுத்துக்களில் சிந்து நதி நாகரிகச் சாயலைக் காணமுடியும்.

சிந்து நதி மொழி பேசுவோர் கஸ்பியன் கடலுக்கு மேற்கே தோன்றி, ஒரு கிளை சிந்து நதி மக்களுடன் சென்று கலந்திருக்கக் கூடும். ஏனைய பகுதியினர் யூறல் மலைச்சாரலை அடைந்தனர். இன்னும் ஒரு பகுதியினர் மொங்கோலியா பகுதிக்குச் சென்றனர். இதனால்தான் திராவிட மொழிகளுக்கும் யூறல், ஆல்டேய்க் மொழிகளுக்கும், மொங்கோலிய, கொரிய மொழிகளுக்கும் ஒற்றுமைப்பாடு நிலவுவதைக் காணலாம்.

இந்தியாவிலிருந்து மத்தியதரைக் கடற் பிரதேச மக்களுடன் திராவிடர் சென்று கலந்தனர் என்ற கொள்கையை வண. ஹெரஸ் அடிகள் கூறியிருக்கிறார். மத்தியதரைக் கடற் பிரதேசத்தில் உருவாகிப் பிரிந்து சென்ற குழுவொன்று இந்தியாவிற்குள் நுழைந்து திராவிட மொழியை உருவாக்கியிருக்கலாம் என்ற கருத்தைப் பின்லாந்து, ரஷ்ய ஆராய்ச்சி குழுக்கள் வலியுறுத்தி இருக்கின்றன. சிந்துநதி மொழி ( ஆஸ்கோ பார்போலா, ஐராவதம் மகாதேவன் கருத்துப்படி) சங்க இலக்கிய மொழிகளுடன் ஒத்திருப்பதை ஆதார ரீதியாக வற்புறுத்தியுள்ளனர். சேர, சோழ, பாண்டிய சின்னங்களுடன் இங்கு காணப்படும் சின்னங்கள் ஒத்திருப்பதை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர். அகநானூறு, புறநானூறு தொகுதியிலுள்ள சங்கப் புலவர்கள் பெயர்களுடன் ஒத்திருக்கின்றன.

இந்துசமயக் கோட்பாடுகளுடனும், வான சாத்திரக் கலைகளுடனும் சிந்துநதி மக்களின் சமய, சமூகக் கண்ணோட்டங்களை ஆஸ்கோ பார்போலா இணைத்துள்ளார். சில சின்னங்களின் பொறிப்புகளில் ராகு, கேது, சர்ப்ப வழிபாட்டுக் குறிப்புகள் இருப்பதாக ஐராவதம் மகாதேவன் சுட்டிக்காட்டுகின்றார். சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் வேளிர், கோசர் போன்றாரின் கடவுளர்கள் விஷ்ணு கிருஷ்ணா முருகன் குமாரா ஆகியோருடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

## வேதத்துக்கு முந்தியது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து நதி மொழிக்கும், அதற்கு பிற்பட்ட சங்க இலக்கிய மொழிகளுக்கும் பொதுப்பண்புகளுக்கும் இடையிலுள்ள ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் விளக்கவே நான் இந்தக் குறிப்புக்களை கூறினேன். கலித்தொகைகூறும் ஏறு தழுவல், சக்தி வழிபாடு போன்ற தமிழ்நாட்டு கலாசார அம்சங்கள் மத்தியதரைக் கடலோர மக்களிடம் குறிப்பாக கிறீட், மினோவன் நாகரிகங்களுடன் ஒத்திருப்பதையும் நாம் அவதானிக்க வேண்டும்.

வேதகாலத்து சமஸ்கிருத இலக்கியங்கள் பல அவற்றிற்கு முன்பே திராவிடத்தில் தோன்றி மறைந்த நூல்களின் சமஸ்கிருத மொழிபெயர்ப்புகளே என்று பலர் கருதுகின்றனர். கிரியை முறைகளுடன் இணைந்த சமயம் பிராமண சமயத்துக்குப் புறம்பான திராவிட மூதாதையர் சமயத்திலிருந்து உருவாகியதாய் இருக்க வேண்டும் என்று அறிஞர் கூறுவர்.



தமிழரின் நாகரிகம், ஊர், நகர், சார்ந்த நாகரிகம்; இதற்கான அடையாளங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சிறப்பாக அமைக்கப்பட்ட சிந்து நதி வீடுகளிலிருந்து காணலாம். வீட்டு அமைப்பு, நகர அமைப்பு, பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கியங்களில் காணலாம். சங்க இலக்கியத்தில் காதலியின் அழகை நகருக்கு உவமித்துப் பாடும் பண்பு பரவியிருந்தது.

## வணிகத் தொடர்பு

சிந்துநதி மக்கள், தரை, கடல் வணிகத்தொடர்புகளை எகிப்து, மொசப்பொட்டேமியா, தென்மேற்கு சிந்தியக்கரை, மேற்கு இலங்கைக் கரை ஆகிய இடங்களுடன் வைத்திருந்தனர். பல்வேறு ஜாதகக் கதைகளில் இந்திய மொசப்பொட்டேமியா தொடர்பு விவரிக்கப்பட்டுள்ளது. கிரேக்க, லத்தீன் மொழிகளில் திராவிட வணிகப் பொருட்களுக்கான சொற்களைக் காணலாம். ஈபுரு மொழியிலும் தமிழ் வணிகப் பொருட் சொற்களுண்டு.

## தொல்காப்பியம்

தமிழரின் மிகப் பழைய நூலான தொல்காப்பியம் ஒரு நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தைப் பற்றிக் கூறுகின்றது. குறிஞ்சி மலரைப் பற்றிக் கூறுகிறது. சுமாத்தராவில் ஒரு பகுதியில் குறிஞ்சிமலை உண்டு. அந்த மலைப் பிரதேச மக்கள் தம்மை ஒருந்தகுறிஞ்சி என்று அழைப்பர். இதனருகில் உள்ள இன்னொரு மக்கள் சேர சோழ பாண்டிய கலிங்க மக்கள் என்று தம்மைக் கூறிவருகிறார்கள். தொல்காப்பியம் குறைந்தது மூன்று நிலைப்பட்ட தமிழ் மொழி இலக்கிய வளர்ச்சியைக் காட்டுகின்றது. அகநானூறு, புறநானூறு இலக்கியங்கள் திருமண வைபவங்களையும் விரிவாகக் கூறுகின்றன. சங்க காலத்தில் அகலவன், அகலவன் மகள் ஆகியோர் சமுதாய இணைப்பு, சமாதானம், சமரசம் முதலியவற்றை ஏற்படுத்த மிக்க ஈடுபாடு கொண்டனர்.

## சிலம்பு

சங்க காலத்தில் தனிப்பாடல்கள் கூறிவந்த மனித நலவியற் கோட்பாடுகளை முதன்முதலில் ஒன்றிணைத்துக் கட்டுக்கோப்பாகக் கூறியது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் பல்வேறு நிலத்திணை, அகத்திணை, நாட்டுப்பண்பு முதலிய எல்லாவற்றையும் ஒருங்கே இணைத்துப் பாடியுள்ளது. மணிமேகலையிலும் பல பண்புகள் இப்படி இணைந்துள்ளன. சங்ககால வாழ்க்கை முறைகளை, நிலப்பண்புகளை, ஏனைய கலாசாரங்களைச் சிலம்பு ஒன்றிணைத்து நிற்பதுபோல, திருக்குறளும், சங்ககால இலக்கியங்கள் கூறிய வாழ்க்கைத் தத்துவங்களை மிக்க விரிவாகக் கூறி இன்னொரு புரட்சி செய்துள்ளது.

இதையடுத்து எழுந்த நாயன்மார், ஆழ்வார் பக்திக் கோலமும், அதையடுத்து வந்த இராமலிங்க வள்ளலார் புதுவைக்கவி பாரதி, பகுத்தறிவுவாதி பாரதிதாசன் ஆகியோர் கவிதைகளும் ஒரே இலட்சியப் போக்கைக் கொண்டவையாக இருக்கின்றன. திரு.வி.க.,ரா., பி. சேதுப்பிள்ளை ஆகியோர் வசனத்திலும் பக்திநெறி தொனிக்கிறது. சைவசித்தாந்தம் ஒரு பரந்த ஆழமான தத்துவப் பேராழி. அது தமிழரின் பெரும் சொத்து. "மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும். வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்ற பாடலின் பக்திச் சுவையை வேறெந்த மொழியிலும் மொழிபெயர்க்க முடியாது. இதுவே தமிழன் கண்ட மனித நலவியற் கோட்பாட்டின் ஆதாரமும் பின்னணியும்.

*(யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் தலைவர் பங்கர் நினைவுச் சொற்பொழிவின் சுருக்கம் திரு.ஆ.தேவராசன் அவர்களால் தயாரிக்கப்பட்டு மாமன்ற அங்கத்துவ அங்கமான அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்க திங்கள் வெளியீடான இந்து இளைஞன் 1972 மாசி இதழில் பிரசுரமாகியிருந்தது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDUISM AND ITS IMPACT ON BUDDHISM





## T. DURAISINGAM, (ATTORNEY-AT-LAW & SOLICITOR)
## FORMER VICE - PRESIDENT, ACHC

THE people of the Indian side of the Sindhu (the Indus) were called the Hindus by the Persian and the later western invaders, and their civilization is called the Hindu civilization. From the Punjab, the civilization flowed over into the valley of the Ganges, where it met with numerous cults of primitive tribes. In its southward advance, the Aryan culture came into contact with the Dravidian culture, and ultimately dominated it, though undergoing some modification from its influence. As the civilization extended over the whole of India, it suffered many changes, but it kept up its continuity with the old Vedic type developed on the banks of the Sindhu. The term 'Hindu' had originally a territorial and not a religious significance. It implied residence in a well-defined geographical area. Aboriginal tribes, Savage and half civilized people, the cultured Dravidians and the Vedic Aryans were all Hindus, as they were the sons of the same mother. The Hindu thinkers realised the fact that the men and women dwelling in India belonged to different communities, Worshipped different gods, and practised different rites.

In addition to this, outsiders had been settling there and had made for themselves a home in India. How was Hindu society built up out of material so diverse, so little susceptible in many cases to assimilation, and scattered across a huge continent measuring nearly two thousand miles from north to south and eighteen hundred miles from west to east? In a few centuries the spirit of cultural unity spread through a large part of the land, and racial stocks of varying levels of culture became steeped in a common atmosphere. The differences among the sects of the Hindus are more or less on the surface, and the Hindus as such remain a distinct cultural unit, with a common history, a common literature and a common civilization.

The Hindu thinker is prepared to admit other points of view than his own, and considers them to be just as worthy of attention. When he found that different people aimed at and achieved God-realisation in different ways, he generously recognised them all and justified their place in the course of history. Hinduism is the religion not only of the Vedas but of the Epics and the Puranas. By accepting the significance of the different scriptures of the peoples living in India, Hinduism has come to accept variegated and diverse forms of faith within its fold. Every tradition which helps man to lift his soul to God is held up as worthy of adherence. Hinduism is therefore not a definite dogmatic creed, but a vast, complex, subtly unified mass of spiritual thought and realisation. Its tradition of the godward endeavour of the human spirit has been continuously enlarging through the ages.

Throughout the history of Hinduism, the leaders of thought and practice have been continuously busy experimenting with new terms, developing new ideals to suit new conditions. The first impulse of progress came when the Vedic Aryans came into contact with the native tribes. A similar impulse contributed to the Protestant movements of Jainism and Buddhism when the Aryans moved out into the Gangetic valley. Contact with the highly civilized Dravidians led to the transformation of Vedism into a theistic religion. The reform movements of Ramananda, Caitanya Kabir, and Nanak show the stimulus of Islam. The Brahmo Samaj and Arya Samaj are the outcome of the contact with western influences, and yet Hinduism is not to be dismissed as a mere flow and strife of opinions, for it represents a steady growth,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

since every form of Hinduism and every stage of its growth is related to the common background of the Vedanta. Though Hindu religious thought has traversed many revolutions and made great conquests, the essential ideas have continued the same for four or five millennia.

Hindu thought believes in the evolution of our knowledge of God. Hinduism does not distinguish ideas of God as true and false, adopting one particular idea as the standard for the whole human race. It accepts the fact that mankind seeks its goal of God at various levels and in various directions, and feels sympathy with every stage of the search. The same God expresses itself at one stage as power, at another as personality, at a third as all-comprehensive spirit, just as the same forces which put forth the green leaves also cause the crimson flowers to grow. We do not say that the crimson flowers are all truth and the green leaves are all false. Hinduism accepts all the varying religious notions as facts, and arranges them in the order of their more or less intrinsic significance. Hinduism insists on our working steadily upwards and improving our knowledge of God. The Ieaders of Hindu thought say that "The worshippers of the Absolute are the highest in rank; second to them are the worshippers of the personal God; then come the worshippers of the incarnations like Rama, Krishna, Buddha; below them are those who worship ancestors, deities and sages; and lowest of all are the worshippers of the petty forces and spirits."

However, the majority of the Hindus do not insist on the graduated scale, but acquiesce in all conceptions of God. The cultivated consider the popular notions as inadequate signs and shadows of the incomprehensible, but the people at large believe them to be justified and authorised. Hinduism accepted the multiplicity of aboriginal gods and others which originated, most of them, outside the Aryan tradition, and justified them all. It brought together into one whole all believers in God. Many sects professing many different beliefs live within the Hindu fold.

The social framework in which Hinduism was set was the caste system. The origins of caste are complicated and obscure. Castes began to develop after the Aryan migrations, when the invaders tried to control the conquered by giving each racial, functional, or religious group a fixed place in society. However, due to the activities of enlightened Hindus and due to the economic and other changes in society, the caste system is fast dying. But it still lurks in the background and reveals itself at times of social unrest.

The belief in a soul (ätman) and the belief in rebirth is found among all sects of Hindus. The ultimate religious goal of a Hindu is to end the round of births and deaths (samsära), to become free of the round of births and deaths and for the soul to merge with God. Swami Vivekananda, an Advaita Hindu, has stated that "Our main problem is to be free. It is evident then that until we realise ourselves as absolute, we cannot attain to deliverance, yet there are various ways of attaining to this realisation. These methods have the generic name of Yoga (to join, to join ourselves to our reality). These Yogas, though divided into various groups, can principally be classed into four; and as each is only a method Ieading indirectly to the realisation of the Absolute, they are suited to different temperaments. Now, it must be remembered, that it is not that the assumed man becomes the real man or Absolute. There is no becoming with the Absolute. It is ever free, ever perfect; but the ignorance that has covered its nature for a time is to be removed. Therefore the whole scope of all systems of Yoga (and each religion represents one) is to clear up this ignorance and allow the 'Ätman' to restore its own nature. The chief aids in the liberation are Abhyasa and Vairagya. Vairagya is non-attachment to life, because it is the will to enjoy that brings all this bondage in its train; and Abhyasa is constant practice of any one of the Yogas."

Swami Vivekananda further stated that "... the Jhana Yoga was the best form of Yoga, and to him who practises this Jhana Yoga, a realisation comes from: 1) being certain that Brahman is real and everything else is unreal; 2) giving up all desire for enjoyment; 3) controlling the senses and the mind; 4) intense desire to be free. Meditating on this reality always and reminding the soul of its real nature are the only ways in this Yoga. It is the highest, but most difficult."

The Advaita philosophy, as mentioned above, postulates that there is only one reality, that Brahman is real and everything else is unreal. But there are other systems of Hindu philosophy which consider that there is more than one reality. The religious System followed by most Hindus of South India and Sri Lanka, is the Saiva Siddhanta system. The three categories of this system are Pathi (the Lord), Pasu (the flock), and Pasam (the bond)

The three eternal entities of the system are: 1) the Lord, who is Sivan Himself; 2) the aggregate of all souls or lives that constitute Sivan's flock, which by his grace, He wills to conduct to the blessedness of final disentanglement from all embodiments; and 3) the Bond, or the sum total of all these elements which binds souls and hinders them from finding release in union with the Lord.

Tens of thousands of devotional songs have been sung by Saiva saints expressing their yearning for His



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

grace, for the blessedness of final disentanglement from all embodiments. Most Hindus fulfil their spiritual needs by worshipping in temples. Not everyone can evoke for his contemplation a mental image of God, hence external worship is performed at the concrete image in the temple. Dr. G.U Pope, a great Saiva Siddhanta scholar, says: "It is sometimes thought and said that the idols are mere signs representing as symbols the Divine Being and some of His works and attributes. This is not altogether an adequate statement of the case. Each image by a peculiar service, which is called 'avahanam', becomes the abode of an in-dwelling deity and is itself divine ... Devout and enthusiastic worshippers, amid the glare of the lamps and the smoke of the incense, seemed to be carried away so as to entirely identify the invisible object of their thought with that which is presented before their eyes."

The conception of the world as samsara, a stream without end, where the law of 'karma' functions, is common to all Indian systems: Hindu, Jain, Buddhist and Sikh. Nothing is permanent, not even the gods. Even death is not permanent, for it must turn to new life. The conduct of the individual in one life cannot determine his everlasting destiny.

Buddhism says that man can work out his own future and overcome samsära', and the way to it is the moral path which results in illumination. Soon after his enlightenment, the fundamental principles of Buddhism were set out by the Buddha in his very first sermon given at Sarnath, near Benares.

The Buddha said that there are two extremes to be avoided: on the one hand, habitual devotion to the passions, to the pleasures of sensual things, which are ignoble and unprofitable; on the other, habitual devotion to self-mortification which is also painful, unprofitable and ignoble.

There is a Middle Path, a path which opens the eyes and leads to understanding, which leads to peace, to insight, to higher wisdom, to nirvana. This is the Noble Eightfold Path, that is to say, Right Under-standing, Right Thought, Right Speech, Right Action, Right Livelihood, Right Effort, Right Mindfulness, and Right Concentration.

There is suffering, and the noble truth of suffering is this: birth is painful, old age is painful, disease is painful, death is painful. Contact with the unpleasant, separation from the pleasant are painful.

The origin of suffering comes from both the burning thirst and the desire for sensual pleasures, and the craving for material success.

The Noble Truth to eliminate pain is this: to conquer passion, to give up, to get rid of, to be emancipated from this burning thirst.

The Noble Truth of the Eightfold Path leads to the ending of pain.

Buddhism did not start as a new and independent religion. It was an offshoot of the more ancient faith of the Hindus. While on the fundamentals of metaphysics and ethics the Buddha agreed with the faith he inherited, he protested against certain practices which were in vogue at the time. He refused to acquiesce in the Vedic ceremonialism. When he was asked to perform some of these rites, he said, "And as for your saying that for the sake of Dharma I should carry out the .sacrificial ceremonies which are customary in my family and which bring the desired fruit, I do not approve of sacrifices, for I do not care for happiness which is sought at the price of others suffering."

This conception of abstaining from causing suffering to all living beings has had its impact on the religions within the Hindu fold. Thirukkural, which has been described as the Tamil Veda, states: "Of all those who, fearing the impermanence of earthly births, have abandoned desire, he is the chief who, fearing the guilt of killing, considers how he may avoid the destruction of life" Saiva Siddhantis consider it a mortal sin to kill animals or to eat their flesh.

A distinguishing feature of Buddhist philosophy is the doctrine of no-soul (anattä). What is meant by soul, self, ego, or ätman, is that in man there is a permanent, everlasting and absolute entity, which is the unchanging substance behind the changing phenomenal world. Buddhism denies the existence of such a soul, self or ätman. According to the teaching of the Buddha, the idea of self is an imaginary, false belief which has no corresponding reality, and it produces harmful thoughts of 'me' and 'mine', selfish desire, craving, attachment, hatred, ill-will, conceit, pride, egoism, and other defilements, impurities and problems.

Whatever differences there may be between Hinduism and Buddhism, in actual religious practices of the mass of the people following these two religions, one sees very close resemblances. Many Buddhists worship at the Hindu temples and pray and give offerings to the Hindu deities. Similarly, the Hindus pay great respect to Buddha and consider him as one of the Avatars of God.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியும் வன்னியரும்

சி. எஸ். நவரத்தினம்

## நில நூல் (Geography)

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் நுவரகலாவிய (அனுராதபுர) மாவட்டத்திற்கும் இடையே அமைந்த இலங்கையின் வடபகுதிக்கு வன்னி என்ற பெயர் அளிக்கப்பட்டது. வன்னி என்ற பெயரைப் பெறுவதன் முன்னர் அப்பகுதி 'அடங்காப்பற்று' என்ற பெயரால் அழைக்கப்பெற்றது என்று தெரிய வருகின்றது. இவ்வன்னி நாடு கிழக்கே திருகோணமலையையும், மேற்கே மன்னார் பகுதியையும் எல்லையாக, தென்னமரவடி, முள்ளியவளை, கருநாவல்பற்று, பணங்காமம், பெருங்காலிப்பற்று முதலியனவற்றையும், செட்டிகுளத்தின் ஒரு பகுதியையும், குதிரைமலையை உள்ளடக்கிய முசலிப்பற்றையும் தன்னகத்தே கொண்டு பரந்து கிடந்தது. இவ்வன்னி நாடு ஏறத்தாழ 3000 சதுர மைல்களை கொண்டதாய் அமைந்திருந்தது.

இவ்விடங்களின் கரையோரப்பகுதிகள் பதிவாயும், உட்செல்லச் செல்ல நிலம் உயர்ந்தும் உள்ளது. குருந்தூர் மலை, குன்பகன்னன்மலை, ஒதியமலை போன்ற இடங்களில் காணப்படும் கற்பாறைகளைப் போலவே முல்லைத்தீவுப்பகுதியிலும் கற்பாறைகள் காணப்படுகின்றன. கரையோரப்பகுதிகள் மணல் செறிந்த உவர்த்தரையாக இருப்பினும் , உள்நாட்டில் பலவகையான வளம் நிறைந்த மண் இருக்கிறது. ஏறக்குறைய பதினாறு சதுர மைல் பரப்பில் செறிப்புள்ள கருமண்ணைக்கொண்டு துணுக்காய் அமைந்துள்ளது. மன்னார்ப்பகுதியில் துணுக்காய்க்கு தெற்கேயுள்ள வவுனிக்குளப்பகுதி மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் பார்க்கச் சிறந்த மண்வளமுடையதாய் இருக்கின்றது. ஆண்டு முழுவதும் பயிர்ச்செய்கைக்கு வேண்டிய மழையைத் தரக்கூடிய மலைப்பகுதிகள் இங்கில்லை எனினும் நிலத்திடை தோன்றியோடும் தெள்ளிய ஊற்றுக்கள் முள்ளியவளை, தனியூற்று, குமாரபுரம் முதலிய இடங்களில் இருக்கின்றன.

மேலும் மாரியில் கரைபுரண்டோடிக் கோடையில் வற்றி விடும் காட்டாறுகள் இங்கு உள. ஆனால் இங்கிருக்கும் ஏராளமான குளங்கள் இப்பகுதியைச் செழிப்படையச் செய்வதோடு, எல்லாக் காலங்களிலும் பயிர்ச் செய்கை நடைபெறவும் வாய்ப்பளிக்கின்றன. இன்னும் சிறந்த முறையில் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற நீர்ப்பாசன வசதிகள் தென்பகுதி மலைகளினின்றும் இப்பகுதிக்கு நீரை அளித்து வந்தன. இந்நீர்ப்பாசன திட்டங்களில் முக்கியமான மல்வத்து ஓயா, பதவியா திட்டங்கள் இன்னும் பெரும் பயன் அளிப்பனவாக இருக்கின்றன.

கிறித்து காலத்திற்கு முன்பாகவே பூதக்குளம் (கட்டுக்கரை), வவுனிக்குளம் , பாவற்குளம், என்பன வன்னி நாட்டில் இருந்தன. பெரிய குளம், மாமடு, ஒலுமடு , கனகராயன் குளம், பண்டாரக்குளம் என்பவை கிறித்து காலத்துத்தொடக்கத்தில் இருந்தவை எனலாம்.

பூதக்குளத்தின் (Giant's Tank) கட்டுக்கரை அமைப்பு வரலாறு இலங்கை அரசர்கள் காலவரலாற்றில் மறைந்து கிடக்கின்றது. இக்குளம் இயக்கர்களாற் கட்டப்பட்டது என்பது மரபு. பார்க்கர் (Parker) என்பார் இக்குளம் கிறிஸ்து காலத்துக்கு முற்பட்டது என்று எடுத்துரைக்கின்றார். இக்குளம் 15 மைல் நீளமுள்ள வரப்போடு 6400 ஏக்கர் நிலப்பரப்பினை உடையதாய் விளங்குகின்றது. அருவியாற்றுக்கு குறுக்கே 90 அடி அகலத்திற் கல்லணை ஒன்று கட்டப்பெற்று ஆழமான வாய்க்கால் வழியாக நீர் இக்குளத்திற்கு கொண்டு வரப்பட்டது. 1739 இல் தேசாதிபதியாக இருந்த வான் இம்கொவ் (Van Imhoff) இக்குளத்தைச் சீர்படுத்த முற்பட்டார். ஆனால் அது மிகவும் கடினமானதொன்றாக இருந்தமையால் அவர் தமது முயற்சியை இடையிலே கைவிட்டார். 1897 ம் ஆண்டில் பகிரங்க வேலைப்பகுதி இக்குளவரப்புக்களிலிருந்த உடைப்புக்களைச்சீர்செய்ததுடன் முன்பிருந்த கால்வாயையும் சரி செய்து அமைத்தது. இன்று இக்குளம் உலகத்தில் அமைக்கப்பெற்ற, பெரிய செயற்கை குளங்களில் நான்காவதாக அமைந்து விளங்குகின்றது. இக்குளத்திலிருந்து பாலாவிக்குத் தண்ணீர் பாயும்படி செய்யப்பட்டிருக்கிறது.

கிறித்து காலத்திற்கு முற்பட்ட குளங்களில் வவுனிக்குளமும் ஒன்றாகும். இது துட்டகைமுனுவின் காலத்திலேயே இருந்திருக்கின்றது. இதனை எல்லாளமன்னன் அமைத்தான் என்று 'பார்க்கர்' என்பார் கூறுவார். பாலியாற்றுப்படுக்கையின் குறுக்கே நீண்ட அணை ஒன்றினை கட்டி உருவாக்கப்பெற்ற இக்குளம் முன்னாளில் 'பிலிவாபி' என்று அழைக்கப்பட்டது.

பாவற்குளமும் கிறித்து காலத்திற்கு முற்பட்ட குளங்களில் ஒன்றாகும். இதுவும் வவுனிக் குளத்தோடு கால அளவில் ஒத்திருக்கின்றது. இலங்கையிலுள்ள மற்றெந்த குளத்திற்கும் இல்லாத கண்மாய்கள் (Value Pits) ஐந்து இக்குளத்தில் காணப்படுகின்றன. ஒத்த சிங்களப்பெயர்கள் இல்லாத குளங்களில் இதுவும் ஒன்றாகும். இதனைக்கொண்டு தமிழர்கள் மிகப்பழங்காலந்தொட்டே இப்பகுதிகளில் சிறப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வந்தார்களென்பதை நாம் நன்கு அறிய முடிகின்றது. நிலைத்து வாழ்ந்த தமிழினத்தின் உதவி இல்லாமல் எல்லாள மன்னன் இங்கு நாற்பத்து நான்கு ஆண்டுகள் சிறந்த ஆட்சியைத் தன்னிலும் வேறுபட்ட இனத்திடையே நிலைபெறச்செய்திருக்க முடியாது. "தென் இந்தியாவில் நின்றும் மக்கள் தொடர்பாக மகாதித்த துறைமுகத்தின் (மாதோட்ட) வழியாக வந்த குடியேறியதன் பயனாய் அப்பகுதி முற்றிலும் தமிழ்நாடாக மாறியது. இன்று தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் கீழ்மாகாணங்களிலும் சிங்கள ஊர்ப்பெயர்கள் பல மறைந்தும் சிதைந்தும் இருக்க மன்னார்ப்பகுதிகளில் அப்படியில்லாதிருத்தல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இப்பகுதியில் யாவும் தூய தமிழ்ப்பெயர்களாக இருக்கின்றன" என்று காலஞ்சென்ற எச். டபுள்யூ. கொட்ரிங்டன் (H.W. Codrington) என்பவர் எழுதிப்போந்தார்.

'விஜயன் இலங்கைக்கு வரும் முன்பு கி. மு. ஆறாம் நூற்றாண்டில் மகோதரன் என்பவன் நாகதீபத்தை ஆண்டு வந்தான். அவனின் மருமகனான குலோதரன் இராமேஸ்வரத்திற்கு அண்மையில் இருந்த கண்டமடானத்தை அரசு செய்தான்.' இவ்வரலாற்றை மகாவம்சம் எடுத்துரைக்கின்றது. இதனிலிருந்து தென் இந்தியாவிற்கும் வட இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது தெளிவாகின்றது. இந்நெருங்கிய தொடர்பை நோக்கும்பொழுது தெற்காசியாவிலேயே கடல் வாணிபத்துறையில் சிறந்து விளங்கிய தென் இந்திய தமிழர்கள் அணித்தாய் இருந்த இலங்கையில் மாதோட்டம் , குதிரைமலை போன்ற இடங்களில் வாணிப நிலையங்களை நிறுவி இருக்கலாம் என்பது தெரியவருகின்றது. அன்று இத்துறைமுகப் பட்டினங்கள் வளம் நிறைந்து திகழ்ந்தன. அங்கே ஆயிரக்கணக்காக மக்கள் நெருங்கி வாழ்ந்தனர். எனவே அங்கே வாழ்ந்த மக்களின் உணவு நெருக்கடியைப்போக்கப் பெரிய குளங்களையும் , நீர்ப்பாசன வசதிகளையும் தங்கள் நாட்டில் அமைத்தது போல இங்கும் அமைத்திருக்கலாமன்றோ! இன்னும் தங்கள் ஆத்மீக தேவைக்காகத் திருக்கேதீச்சரத்தில் சிவாலயம் ஒன்றினையும் அமைத்தனர் போலும்! இலங்கையின் வடக்கு, வடமேற்கு பகுதிகளில் தென் இந்தியாவிற்கு எதிரில் பழைய பல குளங்கள் காணப்படுவதைக்கொண்டு இவ்வுண்மையை மேலும் வலியுறுத்த முடிகின்றது.

மேலும் பந்துகாபயன் ஆட்சிக்காலத்தில் அனுராதபுரத்தில் பொறியியல் வல்லுனரான ஜோடியன் என்ற பிராமணன் ஒருவன் இருந்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. "முன்பு தமிழர்கள் கையாண்ட வரன்முறைப்படியே இன்றும் குளத்திலுள்ள நீர் விகாரை நிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்" என்றும் மிகிந்தலையிலுள்ள 2 ம் இலக்கக் கல்வெட்டொன்று எடுத்துரைக்கின்றது. எனவே இலங்கையில் முதன் முதலில் தமிழர்களே குளங்களை வெட்டினார்கள் என்பது தெளிவாகின்றது. இன்னும், இரும்பின் உபயோகத்தை இலங்கையில் புகுத்தியவர்களும் தமிழர்களே! ஏனெனில் பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களை நிறுவ இரும்பு இன்றியமையாததாகும்.

## வன்னியைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சி :

பாழடைந்த குளங்களும், சிதைந்த குளவரப்புக்களும் நிறைந்த நிலப்பரப்பே வன்னியாகும். அழிந்த தாதுகோபங்களும், சிதைந்த சைவாலயங்களும் அங்கே அருகருகே இருக்கக்காணலாம். ஒரு புறத்தில் ஆற்றங்கரையில் விநாயகப்பெருமான் பீடத்தில் அமர்ந்திருப்பார். இன்னொரு புறத்தில் காட்டினுள் தனது அடியார்க்கு மோனமாக நடுவழியை நினைவூட்டிக் கொண்டிருக்கும் புத்தர் சிலையினைக் காணலாம். இச்சூழலில் இடையிடையே வன்னியர் இல்லங்களின் சிதைவுகள் அவர்களின் ஆயிரவாண்டுச்சுதந்திர வாழ்க்கையைக்கூறி நிற்கும் அழிந்த குளங்களும் , சிதைந்த கால்வாய்களும் ஆங்காங்கே காணப்படுவதால் வன்னியின் மேற்குப்பாகமான மன்னார்ப் பகுதியில் மக்கள் பெருந்தொகையாக நெருங்கி வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது. பழைமையான அணைக்கட்டுகளில் கல்லாற்றிலுள்ள குறிஞ்சாக்குளத்தேக்கமும், பேராற்றிலுள்ள இன்னொரு தேக்கமும் குறிப்பிடத்தக்கவையாகும் .

வரலாற்றுப்புகழ்பெற்ற மாதோட்டத் துறைமுகமும், புகழ்பெற்ற திருக்கேதீச்சர ஆலயமும் இப்பகுதியிலேயே உள்ளன. இப்பழைய துறைமுகத்தின் வரலாறு, ஈழநாட்டு வரலாற்றுக்கு முற்பட்டதாகும். போர்த்துக்கேயர் தங்களது மத வெறியைத் தீர்த்துக்கொள்ள இத்திருக்கோயிலை அழித்தனர். அல்லாமலும் அவர்கள் யாழ்ப்பாணத்துப் போரில் தோல்வியுற்றபின் தமிழர்களின் தாக்குதலை தடுக்கும் வகையில் மன்னார் குடாக்கடலைக் கண்காணிக்க வசதியாக நான்முகக்கோட்டை ஒன்றினையும் கட்டினர் . இக்கோட்டை பின்னர் ஒல்லாந்தர்களால் திருப்பிக் கட்டப்பெற்றது.

மன்னார்க்குடாவில் மாதோட்டத்திற்கு ஒரு சில கல் தெற்கே அரிப்பு என்னும் கிராமம் முத்துக்குளிக்கும் இடங்களைப்பார்த்த வண்ணம் அமைந்துள்ளது. அரிப்பு என்றால் சலித்தல் என்று தமிழில் பொருள் படும். கடலில் இருந்து முத்து எடுத்து இங்கே அரிக்கப்பட்டதனால் இவ்விடம் இப்பெயரைப்பெற்றது போலும்! இவ்விடம் முத்துக்குளித்தலோடு தொடர்புள்ளதாக இருப்பதுடன் இன்னொரு முக்கியமும் உள்ளதாக இருக்கின்றது. அதாவது ரொபாட் நொக்ஸ் என்பவன் கொட்டியாரில் (Kottiyar) இழந்த தன் உரிமையை இங்கே மீண்டு பெற்றான் என்று கூறப்படுகின்றது. இச்சிற்றூருக்கு ஒரு கல் தெற்கே டச்சுக்காரரின் சிதைந்த கோட்டை ஒன்று இருக்கின்றது. இன்னும் முத்துக்குளித்தலை மேற்பார்வை செயவதற்கென இலங்கையின் முதல் ஆங்கில தேசாதிபதியாக இருந்த பிரடெரிக் நோர்த் அமைத்த கட்டிடத்தின் அழிந்த பகுதிகளும் இவ்விடத்திலிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கின்றன.

விடத்தல் தீவிற்கும் இலுப்பைக்கடவைக்கும் இடையிலுள்ள கொம்புதூக்கியில் சில கற்றூண்கள் காணப்படுகின்றன. அவை அங்கே ஒரு ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது என்பதை வலியுறுத்துகின்றன. இதற்குச் சிறிது வடக்கே வெள்ளாங்குளத்திற்கு அருகே யானையை வாகனமாகக் கொண்ட ஐயனார் கோவில் ஒன்று காணப்படுகிறது. "கோகில சந்தேசா" வில் கூறப்பட்ட கோவில் இதுவாக இருக்கலாம்.

கட்டிடங்களின் சிதைந்த பகுதிகள் சின்னச் செட்டிகுளம், செட்டிகுளம், பாலம்பிட்டி, வெனாயன் குளம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. செட்டிகுளத்திலேயே வன்னித்தலைவர்கள் வாழ்ந்தனர். திரு.ஜே. பீ. லூயிஸ எனபார் பழைய தமிழ்க்கையெழுத்துக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய நூலில் கி.பி.247 – இல் மதுரையிலிருந்து பல பரவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற பெயருடைய வாணிகன் ஒருவன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்குக் கரையை வந்தடைந்தான் என்றும், பின் அவன் தன்னைச் சேர்ந்தாருடன் வந்து செட்டிகுளத்தில் குடியேறி அங்கே 'வவ்வாலை'என்ற பெயரையுடைய கேணி ஒன்றையும், சந்திரசேகருக்குக் கோவில் ஒன்றையும் கி. பி. 289 – இல் அமைத்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதியில் இன்று வாழும் முஸ்லீம்கள் தாங்கள் முதல் முதல் இலங்கைக்கு வந்த அரேபிய வணிகர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறிக்கொள்கின்றனர்.

போர்த்துக்கேயரின் வழித்தோன்றியவர்களைப் பறங்கிச் செட்டிக்குளத்தில் அவர்களின் நிறத்தைக்கொண்டு அறிய முடிகின்றது. ஆனால் நிறத்தால் வேறுபட்டாலும் அவர்கள் அப்பகுதிக்குரிய ஆடைகளை அணிகின்றனர்.

புகழ்பெற்ற யாத்திரைத்தலங்களில் மடுவும் ஒன்றாகும். இன்று மடுக்கோவிலில் இருக்கும் சிலை மாந்தையில் முன்பு இருந்ததாகக் கூறுவர். டச்சுக்காரர்கள் மாந்தையைக் கைப்பற்றியபோது கத்தோலிக்கர் பலர் மாதாவின் சிலையை எடுத்துச்சென்று கண்டி இராச்சியத்தின் எல்லையில் இருந்த மருத மடுவில் வைத்தனர் என்றும், அவ்விடத்தே முன்பு ஒரு சுங்க வாடி வீடு, அரசனுடைய நாட்டிற்குள் கொண்டு செல்லப்படும் பொருட்களனைத்திற்கும் வரி அறவிட்டு வந்தது என்றும் பரம்பரை வழக்காகக் கத்தோலிக்கரிடையே கூறப்பட்டு வருவதை நாம் அறிவோம். மேலும் வெகு விரைவாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய கத்தோலிக்கர்களும் வன்னி நாட்டில் குடியேறினர். இவ்வாறு அங்கே குடியேறிய அனைவரும் நம் அன்னை புனித ஜபமாலைமாதாவின் பாதுகாப்பில் வாழ்ந்தனர். சிறிது காலத்தின் பின் ஆண்டு விழா ஒன்றினை 1870 – ஆம் ஆண்டு யூலாய் மாதம் 2 – ஆம் நாள் கொண்டாடினர். (அனுராதபுரத்திற்கும், மாந்தோட்டத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் அமைந்திருந்த பழைய பாதைகளின் அடையாளங்களை இன்றும் நாம் கிழக்கு மூலைதெற்கிற்காணலாம். பழைய பாலம் ஒன்றும் ஓலுக்குளத்தில் காணப்படுகின்றது.)

வன்னி நாட்டின் பிரதானிகளின் சிறப்பான தலைநகரில் பனங்காமமும் ஒன்றாகும். இங்கு பௌத்த சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே இப்பகுதியில் பண்டுதொட்டு இந்துக்களே வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவாகின்றது.

வவுனிக்குளத்தின் வடமேற்குப்பகுதியில் இருக்கும் காட்டில் அழிந்து சிதைந்த அடையாளங்கள் சில தென்படுகின்றன. எனவே அது ஓர் அழிந்துபட்ட நகராக இருக்கலாம். அழிந்து சிதைந்து போன பொருள்களின் இடையே, இந்துக்கள் வழிபட்டு வந்த சிவ விஷ்ணு ஆலயங்கள் திரு. ஜே. பீ. லூயிஸ் என்பவரால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் 1885 – ம் ஆண்டில் முல்லைத்தீவில் தென்னந்தோட்டத் தொழிலாளி ஒருவரால் சுட்டமண் கொட்டுக்களால் கட்டப்பெற்ற சிறிய கிணறு ஒன்றில் வெள்ளிப்புராண ஏடுகள் ( 51 தகடுகளும் 16 தகடுகளும் கொண்டவை) கண்டெடுக்கப்பட்டன. இந்தக்கிணறும் திருக்கேதீச்சரத்தில் காணப்பட்ட கிணறுகளும் அமைப்பில் ஒத்திருக்கின்றன. இந்த அரிய கண்டுபிடிப்பின் பயனாக இப்பகுதியில் ஆதிகாலத்தில் திராவிட இனம் வாழ்ந்ததென்பதை அறிய முடிகின்றது.

மகததேசத்துப்புத்த சமயிகள் விஜய இளவரசன் காலத்தில் இலங்கையில் தஞ்சம் புகுந்தனர் என்று யாழ்ப்பாணத்தில் பரம்பரை வழக்காகக் கூறப்படுகின்றது.அப்போது தமிழ்ச் சைவசமயத்தவர்கள் மாதோட்டத்திலும், குதிரைமலைப்பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். எனவே விஜயனும் அவனைச்சார்ந்த புத்தசமயத்தவர்களும் தெற்கே புத்தளத்திற்கு அருகேயுள்ள தம்மன நுவர என்ற இடத்தில் நகரொன்றை அமைத்தனர். அத்துறைமுகம் அக்காலத்தில் கல்யாணத்துறைமுகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. ஏனெனில் விஜய இளவரசன் குவேனியை இங்குதான் மணந்தான் போலும் ................. முதன் முதலில் இலங்கையில் குடியேறியோர் தென் இந்தியர்கள் என்பதும், திராவிட நாகரிகம் விஜயன் இலங்கைக்கு வருவதன் முன்னரே இங்கு இருந்து வந்தது என்பதும் வடமாகாணப்புதை பொருள் ஆராய்ச்சியின் பயனாய்த் தெரிய வருகின்றது. எனவே இலங்கையின் வரலாறு முதலில் வடபகுதியில் தோன்றிப் பின்னர் படிப்படியாகத் தென்பகுதிக்குச்சென்றது என்று கூறுவதற்கு யாதொரு ஐயமுமில்லை.

### வன்னியர்கள் :

வன்னியர்கள் பண்டைக்காலத்தில் தென் இந்தியாவில் வாழ்ந்து வந்த அக்கினி குலத்தைச்சேர்ந்த ஆரியர் அல்லாத வகுப்பினர்ஆவர். அவர்கள் மறத்தொழில் புரியும் மாவீரர்கள் பரம்பரையில் தோன்றியவர்கள்; அரச பரம்பரையைச்சார்ந்தவர்கள். அவர்களை தென் இந்திய இராசபுத்திரர்கள் ( Rajputs) என்று கூறலாம்.

வன்னியர்கள் இலங்கைக்கு வந்தமை குறித்துப்பலகாரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, இலங்கையின் அரசைக்கைப்பற்ற எண்ணி இங்கு கொண்டு வந்த படைகளில் அல்லது இலங்கையின் மேல் படையெடுத்து வந்த இளவரசர்கள் அல்லது தலைவர்களினது தமிழ்ப்படைவீரர்களின் எஞ்சிய பகுதியினரே வன்னியராக இருக்கலாம். இரண்டாவதாக, வைபவ மாலை கூறும் காரணத்தைச் சொல்லலாம்: "பாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் ஆட்சிக்காலத்தில் சுமார் கி. பி. 436 – ல் இந்தியாவிலிருந்து இங்கு வந்த குளக்கோட்டன் என்ற தலைவன் கோயில்கள் பலவற்றைச்சீர்திருத்தி அமைத்தான். அப்போது இலங்கையரசன் அவனுக்கு எதிராகப் படை ஒன்றினை அனுப்பினான். ஆனால் பின்னர் அவன் அரசனோடு நல்லெண்ண உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டு கோயில்கள் பலவற்றைத்திருத்தினான். மேலும் அக்கோயில்களுக்குப் பெருந்தொகை நிலங்களை மானியமாகக் கொடுத்துதவினான். வன்னியர்கள் பலரை இந்தியாவின் கரையோரப்பகுதிகளில் இருந்து வரவழைத்துக் கோயில் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டு கோவிலின் நன்மைக்காக பாடுபடுமாறு பணித்தான். இவ்வாறு பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது குடிகள் இங்கு வந்து சேர்ந்தன. நாளடைவில் அக்குடிகள் பெருகி மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. வன்னியர்களில் ஏழு தலைவர்களைத் தேர்ந்து அவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பகுதிக்கும் முழு உரிமையோடு அதிகாரம் செய்ய உரிமை அளிக்கப்பட்டது.'' இத்தலைவர்களின் வழித்தோன்றல்கள் தொடர்ந்து தங்களது தொழிலைச் செய்து வந்தமையால் அவர்கள் ஆண்டு வந்த நிலப்பரப்பு வன்னி என்ற பெயரைப் பெற்றது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த மக்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக் கோணேசர் கல்வெட்டு, மேலும் உறுதிப்படுத்துகின்றது. ஆராய்ச்சி நூலாக அமையாவிட்டாலும் வையாபாடல் வன்னி நாட்டில் அமைதியாகக் குடியேற்றியிருந்த தென் இந்திய இனங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது.

''வன்னிநாடு நுவரக்கலாவிய மாவட்டத்தையும் தன்னகத்தடக்கிய பெரு நிலப்பரப்பு '' என்று சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனை 'மாவன்னி' என்றும் கூறப்பட்டுள்ளது. பிற்பட்ட காலத்தில் வன்னியர் என்ற பெயர் சிங்கள அல்லது வேட்டுவ அல்லது முக்குவத் தலைவர்களின் சிறப்புப் பட்டங்களாக கொள்ளப்பட்டது. வேளாளர்கள் சிறு ஊரிற்கு தலைவர்களான போது அவர்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். வன்னி நாட்டு இளவரசிகளை 'நாச்சியார்' என்ற சிறப்புப் பெயரால் அழைத்தனர். இது நாயக்கர் என்ற ஆண்பாற் சொல்லுக்கு எதிரான பெண்பாற் சொல்லான 'நாயக்கியார்' என்ற சொல்லின் திரிபாகும்.

வன்னியர்கள் இங்கு வந்து குடியேறி வாழ்ந்தமைக்குப் பல விளக்கங்களைத் தரினும் சிங்கள வரலாற்று நூல்களிலே குறிக்கப்படும் உத்தரகோசம் என்ற நிலப்பகுதியில் வன்னியர்கள் மிகப்பழமையான காலத்திலிருந்தே வாழ்ந்து வருபவர்கள் என்று கூறுவதற்கு எவ்வித தடையும் கூறவியலாது.

## வன்னிநாட்டுத் தெய்வங்கள்:

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஐயனாரை (ஐயனா–சிங்களம்) ஒரு காட்டுத் தெய்வமாக காட்டு வழியிற் சொல்லுவோருக்குப் பாதுகாப்பை அளிக்கும் தெய்வமாகக் கருதி வழிபடப்படுகின்றது. இத்தெய்வம் குளக்கரைகளிலிருந்து குளங்களைப் பேணிக் காக்கும். பயிர்ச் செய்கை நடைபெறும் போதும், மக்கள் நோய்வாய்ப்பட்டு வருந்தும்போதும், மழை வளங்குன்றும் போதும் மக்கள் ஐயனாருக்கு விழா வெடுத்து வழிபடுவர். குளம் நிம்பித் தண்ணீர் கரைபுரண்டோடும்போது சிங்களவர்களில் முதியோர் ஒன்று திரண்டு அக்கிராமத்து ஐயனாருக்கு 'முட்டிமங்கலம்' என்ற விழாவை நடாத்தி வருவது இன்றும் வழக்கில் உண்டு.

இத் தெய்வ வணக்கம் தென் இந்தியாவிலிருந்து மிகப் பழங்காலத்திலேயே இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இத்தெய்வத்தின் முழுப்பெயர் 'கையனார்' என்பதாகும். ஏனெனில் இவர் விஷ்ணுவின் கையில் நின்றும் வெளிவந்தாராம். திருவாங்கூரில் இத் தெய்வம் 'அய்யப்பன்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இத் தெய்வத்தின் சின்னம் இடையர்களின் தடியாகும். இவரின் இருப்பிடம் மேற்குப் படித்துறையாகும்.

வன்னி நாட்டின் பல பகுதிகளில் இத் தெய்வத்திற்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. முன்னர் கூறியது போல் யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்குமிடையில் ஐயனார் கோயில் ஒன்று இருக்கின்றது. குதிரையும், யானையும் இத்தெய்வத்தின் வாகனங்களாம். மாதம்பையில் காணப்படும் ஐயனார் கோயில் ஒன்றில், இத்தெய்வத்தின் வாகனமான குதிரை மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றது.

இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப்பழமையான புத்தகோயில்களில் இஸ்ருமுனியா கற்கோயிலும் ஒன்றாகும். விகாரையாக மாற்றப்படுவதற்கு முன்னர் இது ஒரு தேவாலயமாக இருந்தது. அரசதோரணையில் அமர்ந்திருக்கும் ஒருவரின் புடைப்பகழ்வுச்சித்திரம் (Relief) ஒன்று இங்குள்ள கற்பாறையில் காணப்படுகின்றது. இந்த உருவத்தைப் போர்வீரன் ஒருவன் என்று சிலர் கூறினாலும், அமைப்பில் எல்லா விதத்தாலும் ஐயனாரையே அது ஒத்திருக்கின்றது. இந்தச் சிலைகள் எல்லாம் உயர்ந்த முழந்தாளில் முழங்கையை வைத்து வீற்றிருக்கும் பாவனையில் அமைந்துள்ளன. இந்துக்களின் உயர்ந்த தெய்வங்களின் தலையை அலங்கரிக்கும் கூம்புவடிவமைந்த 'கிரீடம்' இத்தெய்வச் சிலைகளில் காணப்பெறாமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்று. இப்புடைப்பகழ்வுச் சித்திரத்தில் குதிரையும், கையில் வளைந்த தடியும், அருகே ஐயனாரின் வாகனமாகிய யானைக் கூட்டங்களும் காட்டப்பட்டுள்ளன. கீழே மற்றொரு கல்லில் காணப்படும் இடது கையிலே மலரேந்திய மங்கையின் உருவம் இவரது தேவியாய் இருக்கலாம் என்று ஊகிக்கவேண்டியுள்ளது. இவையெல்லாம் சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது ஐயனாரின் திருவுருவேயன்றிப் போர் வீரன் ஒருவரின் உருவம் அன்று.

மலபார் மக்களிடத்து மலிந்திருந்த நாகவணக்கம் (Serpent Cult) இலங்கையிலும் பரவியது. பண்டைய நாகர்கள் இதற்குக் கோயில் அமைத்து வணங்கி வந்தனர். ஐந்து தலை நாகத்திற்கு அமைக்கப்பட்ட கோவிலின் சிதைவுகள் மதவுவைத்த குளத்திற்கும் குருத்தூர்க் குளத்திற்கும் இடையில் காணப்படுகின்றது. வன்னியின் பல பகுதிகளிலிருந்தும் புத்தூரில் நடைபெறும் நாகதம்பிரான் திருவிழாவிற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆண்டு தோறும் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் காவல் தெய்வமாகிய கண்ணகி வணக்கம் அல்லது பத்தினி வணக்கம், அது தோன்றிய இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் மிகவும் சிறப்புற்றுத் திகழ்கின்றது. இத்தெய்வம் சின்னம்மை பெரியம்மை போன்ற தொற்று நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்றது, தொடக்கத்திலிருந்தே பத்தினி ஒரு இந்துத் தெய்வமாக இருப்பினும் சிங்கள, பௌத்த மக்கள் பலருள்ளும் இன்று பரவியுள்ளது.

வற்றாப்பளையிலுள்ள பழைமைவாய்ந்த கண்ணகி கோவிலுக்கு ஆண்டுதோறும் தீவின் தமிழ்பேசும் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கோர் இன்றும் செல்கின்றனர். இன்னொரு பிரபலமான கண்ணகி கோயில் ஒன்று குஞ்சுப் பரந்தனில் இருக்கின்றது.

போர்த்துகேயர் வருவதற்கு முன்னர் மடுவில் கண்ணகிக்குக் கோயில் ஒன்று இருந்ததாகப் பரம்பரையாகக் கூறி வரப்படுகின்றது. அவ்வாறு கொண்டாடப்பட்டுவந்த கண்ணகி வணக்கம் இந்துக்களிடையேயும் பரவி இருக்கின்றமைக்கு இப்பகுதியிலிருந்து வந்த நெடுகாலக் கண்ணகி வணக்கமே வித்திட்டதெனலாம். ஒரு தாய்த்தெய்வ வணக்கமே மற்றொருதாய்த் தெய்வ வணக்கத்திற்கு இடமளித்தது போலும்! இந்தப் பழமையான கூற்றை ஆதரிக்கும் வகையில் திரு. ஈவேர்ஸ் என்பார், தமது 'வடமத்திய மாகாணக் கைநூலில்' பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "மடுவிலிருக்கும் தூயமேரி மாதாவின் திருக்கோயில் புத்த சமயத்தினராலும், அனேக தமிழ் யாத்திரிகர்களாலும் பத்தினி அம்மன் கோயில் என்றே வழிபடப்பட்டு வருகிறது"

கண்ணகி வணக்கத்தோடு சேர்ந்து ஏழு கன்னிகள் (நாச்சிமார்கள்) வணக்கமும் வன்னி நாட்டில் மிகுந்திருந்தது. இவ்வணக்கம் முதலில் தென் இந்தியாவில் தோன்றி பின்னர் இலங்கையில் தமிழ் பேசும் பகுதிகளில் பரவலாயிற்று. புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுச்சுட்டானுக்கும் இடையிலுள்ள மன்னாக்கண்டல் (Mannakandal) என்னும் இடத்தில் இத்தேவிகளின் கோயில்கள் உடைந்து சிதைந்து கிடப்பதைக் காணலாம்.

விநாயகரை வேளாண்மைக்குக் காவற் தெய்மாகப் பயிர்தொழில் செய்யும் வேளாளர் கருதி வழி பட்டனர். வன்னியின் எல்லாப்பகுதிகளிலும் இத்தெய்வத்தின் அழிந்துபோன கோயில்களைக் காணலாம். ஆத்மிக வளர்ச்சியிலும் பார்க்கச்செல்வப் பெருக்கை மனத்திற்கொண்டு சிங்களவர் பிள்ளையாரை வணங்குகின்றனர். சில காலத்துக்குமுன் அனுராதபுரியிலுள்ள அரசமரத்திற்கு எதிரில் ஒரு கணேசர் சிலை இருந்து வந்தது. இக்கணேசருக்கு இந்துக்கள் செய்வது போல், புத்த மதத்தினர் பாற்சோறு படைத்துப் பணிந்து வந்தனர். இவர் அனுராதபுரத்தையும் அரசமரத்தையும் பாதுகாக்கும் தேவகாவலன் என்றே எண்ணப்பட்டார்.

சிவனுக்குரிய பழைய தலங்கள் மன்னாருக்கணித்தே திருக்கேதீச்சரமும், ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரமும், குதிரைமலைக்கருகேயுள்ள அசுவகிரியும் ஆவனவாம். தென் இந்தியக் கல்வெட்டொன்றின்படி திருவிராமேஸ்வரமுடைய மகாதேவன் கோவில் என்ற பெயருடைய மற்றொரு சிவன்கோயில் மாதோட்டத்தில் இருந்தாக அறியக்கிடக்கின்றது. உருத்திரபுரமும் வவுனிகுளத்திற்கு அண்மையிலுள்ள கோயிற்காடும், கற்சிலைமடுவும் ஏனைய முக்கிய சிவஸ்தலங்களாம். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட சிவன்கோயில் ஒன்று முன் கூறியதுபோல் செட்டிக்குளத்தில் இருந்தது.

பழைய அனுராதபுரத்திலும் சிவவணக்கம் இருந்தது. தேவநம்பியதீசன் அனுராதபுரியின் எல்லையை வரையறுக்கும்போது அவன் பிராமணன் ஒருவனுக்குச் சொந்தமான கோயில் ஒன்றைக் கடந்து போக வேண்டியிருந்தது. 1893இல் அனுராதபுரியில் நடந்த புதைபொருளாராய்ச்சி, அப்பழம் நகரில் சிவன்கோயில் ஒன்று இருந்ததாகத் தெளிவுறுத்திற்று. ஜேத்தவனராமாவிற்கும் விஜயராம மடத்திற்கும் இடையில் இந்து ஆலயங்கள் பலவும் அவற்றைச் சார்ந்த கட்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இரு சிவன் கோயில்களில் கருங்கல்லினால் செய்யப்பெற்ற இரண்டு சிவலிங்கங்கள் அவைகளுக்குரிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. "மேஜர் போர்ப்ஸ்" என்பார் அனுராதபுரத்தை 1828இல் பார்வையிட்ட பின், காடில்லாமல் இருக்கும் ஒரேயொருபகுதி மகாவிகாரையின் முன்னுள்ள பகுதியாம். அப்பகுதியில் ஒரு சதுரத்தில் நிழல்தரும் மரம் ஒன்று நிற்கின்றது. பதினான்கு அடி உயரமுள்ள தூணொன்றின் அருகில், ஒரு அச்சில் சுழலும் கருங்கற்காளை ஒன்று உண்டு. இவையனைத்தும் இங்கே ஒரு சிவன் கோயில் இருந்ததென்பதைக் காட்டுகின்றது. இக்கற்றூண் எல்லாச் சைவக் கோயில்களிலும் நந்தியின் அருகில் காணப்படும் கொடித்தம்பமாக இருக்கலாம்."

இத்தெய்வங்களோடு வைரவரையும், விஷ்ணுவையும், காளியையும் வன்னியர் வணங்கி வந்தனர். பெரிய காளி கோயில் ஒன்று அனுராதபுரத்தில் இருந்தது.

இவ்வாறு பண்டைக்காலத்திலிருந்தே இலங்கை மக்களிடையே எப்படித் தென்இந்தியப் பண்பாடு மேலோங்கி இருந்தது என்பதைக் காணலாம். ஆயிரமாண்டுகளுக்கு மேலாக வன்னி நாட்டை ஆண்டவர்களும், தமிழர்களின் பெருமைக்கும் பண்பாட்டிற்கும் பாத்திரர்களுமான வன்னியர்களின் வரலாறின்றி ஈழத் தமிழர் வரலாறு என்றும் முற்றுபெறாது

*(சி. எஸ். நவரத்தினம் அவர்கள் "வன்னியும் வன்னியரும்" எனும் பெயரில் ஆங்கிலத்திலெழுதிய நூலிருந்து எடுக்கப்பட்டது. திருக்கேதீச்சரம் சைவ மாநாட்டு மலரில் - 1960-இடம்பெற்றது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி நாட்டுப்
# பிரிவுகள் - ஆறுகள் - ஊர்ப்பெயர்கள்

## அ. பிரிவுகள்

I. பெருங்காலிப்பற்று
II. முசலிப்பற்று
III. மேற்குமூலை
IV. சின்னச்செட்டிக்குளம்
V. நடுச்செட்டிகுளம்
VI. கிழக்குமூலை தெற்கு
VII. கிழக்குமூலை வடக்கு
VIII. மேல்பற்று தெற்கு
IX. மேல்பற்று கிழக்கு
X. மேல்பற்று வடக்கு
XI. பனங்காமம்
XII. உடையாவூர்
XIII. துணுக்காய்
XIV. கரச்சி
XV. புதுக்குடியிருப்பு
XVI. முள்ளியவளை
XVII. கரிக்கட்டுமூலை வடக்கு
XVIII. கரிக்கட்டுமூலை தெற்கு
XIX. மகாவன்னி
XX. திருக்கோணமலை

## ஆ. ஆறுகள்

க. பறங்கி ஆறு
ங. அருவி ஆறு அல்லது மல்வத்து ஓயா
ச. கல்லாறு
ஞ. மொடரகம ஆறு அல்லது மோர்க்கமான் ஆறு
ட. கனகராயன் ஆறு
ண. பேராறு
த. நாயாறு
ந. மாஓயா
ப. யான் ஓயா

## இ. ஊர்கள்

1. பூநகரி
2. அக்கராயன்குளம்
3. வெள்ளாங்குளம்
4. துணுக்காய்
5. வவனிக்குளம்
6. பனங்காமம்
7. இலுப்பைக்கடவை
8. கொம்புதூக்கி
9. விடத்தல்தீவு
10. வினாயன் குளம்
11. பாலம்பிட்டி
12. மடு
13. கட்டுக்கரை
14. மாதோட்டம் (திருக்கேதீச்சரம்)
15. மன்னார்
16. அரிப்பு
17. அகத்திமுறிப்பு
18. தேக்கம்
19. புளியடிஇறக்கம்
20. புளியடித்தேக்கம்
21. பெரியகட்டுக்குளம்
22. வில்மடுத்தேக்கம்
23. குதிரைமலை
24. பொம்பரிப்பு
25. அநுராதபுரம்
26. மதவாச்சி
27. செட்டிக்குளம்
28. பூவரசங்குளம்
29. குறிங்சாக்குளதேக்கம்
30. ஒலுக்குளம்
31. பாவற்குளம்
32. ஈறற்பெரியகுளம்
33. வவுனியா
34. மடுக்கந்தை
35. மணியர்குளம்
36. மாமடு
37. கருங்காலிக்குளம்
38. மகாகச்சக்கொடி
39. மாறா இலுப்பை
40. ஓமந்தை
41. இறம்பைக்குளம்
42. ரூவன்மடுவ
43. புளியங்குளம்
44. புத்தூர்
45. கனகராயன்குளம்
46. மாங்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. முறிகண்டி
48. இரணைமடு
49. கிளிநொச்சி
50. குஞ்சப்பரந்தன்
51. பரந்தன்
52. ஆனையிறவு
53. முரசுமோட்டை
54. வட்டக்கச்சி
55. இரணைமடுக்குளம்
56. கொக்காவில்
57. புதுக்குடியிருப்பு
58. கற்சிலைமடு
59. மன்னார்க்கண்டல்
60. தனியூற்று
61. வற்றாப்பளை
62. முல்லைத்தீவு
63. முள்ளியவளை
64. ஒட்டுசுட்டான்
65. குருந்தூர் மலை
66. தண்ணீர் முறிப்பு
67. ஒதியமலை
68. பண்டாரக்குளம்
69. நெடுங்கேணி
70. பெரியகுளம்
71. சின்னப்பூவரசங்குளம்
72. ஆரியமடு
73. நொச்சிக்குளம்
74. கும்பகன்னன்மலை
75. வண்ணாத்தி பாலம்
76. ஒலுமடுக்குளம்
77. தென்னமரவடி
78. கொக்கிளாய்
79. பழமோட்டை (புல்மோட்டை)
80. பதவியாக்குளம்

81. திருக்கோணமலை

## நடராஜர் நடனமாடிக் கொண்டிருப்பதேன்?

அணுக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற விஞ்ஞானிகள் "அணுக்களெல்லாம் ஏகதாளத்தில் ஆடிக் கொண்டிருக்கின்றன" என்பதைக் கண்டு அதற்குரிய காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்துக் காரணம் காண முடியாது கலங்கினர். அதன்பின் நமது தெய்வம் நடனமாடிக் கொண்டிருக்கின்றது என்பதைக் கேட்டு வியந்த அந்த விஞ்ஞானிகள் இங்கு வந்து இதனைக் கண்டு சென்றுள்ளார்கள். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவனும் நடன மூர்த்தியாயிருக்க வேண்டும். ஆதலினாலேயே நடராஜர் விக்ரகம் நடனமாடும் ரூபமாக விளங்குகிறது. மனிதர்களுடைய நோக்கம் துக்கம் நீங்கிச் சுகம் அடைய வேண்டும் என்பதேயாகும். நாம் ஆனந்தமடைய ஆனந்த மூர்த்தியை வணங்குதல் வேண்டும். அவர் ஆனந்த நடனம் புரிவதால் எப்போழுதும் ஆனந்தத்தோடு விளங்குகிறார் என்பது தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநில வரலாற்றுச் சிறப்பு மிக்க சைவத்திருத்தலங்கள்

- எஸ். எதிர்மன்னசிங்கம்-
உதவிப்பணிப்பாளர் ( கலாசாரம் )
கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு.

எமது அங்கத்துவ சங்கமான மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் 1993இல் வெள்ளிவிழாக்கண்டதையொட்டி 1994 இல் வெளியிட்ட விசேடமலரில் பிரசுரமான கட்டுரை இது)

வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே பெரிய நீலாவணை மட்டும் தற்போதைய எல்லையான மட்டக்களப்பு மாநிலம் பல வரலாற்றுப் பெருமைவாய்ந்த கோயில்கள் கொண்டு விளங்குகின்றது. இவற்றுள் சில முக்கியமான திருத்தலங்களைப் பற்றி மட்டும் இக்கட்டுரையில் எழுத விழைகின்றேன்.

**சித்தாண்டி**

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே பதின்மூன்று கல் தொலைவில் அமையப்பெற்றுள்ளது, சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோயில்.இத்தலத்தின் சிறப்பு முதலான அம்சங்களைப்பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, கல்வெட்டுக்களோ செப்பேடுகளோ ஓலைச் சுவடிகளோ எமக்குக் கிடைக்கவில்லை. இருந்த போதும் மரபு வழியாக வழங்கி வரும் ஐதீகக்கதைகளும், கர்ணபரம்பரைக் கதைகளும் உதவுகின்றன. இரண்டு கதைகள் மிக முக்கியமாக இக்கோயிலைப்பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் ஒன்று: ஆண்டி ஒருவன் காட்டு மார்க்கமாக இவ்வழியாகச் சென்ற போது அவனை மதயானை ஒன்று வழிமறித்தது. அவ்வேளையிலே ஆண்டி முருகப்பெருமானை நினைத்து அபயக்குரல் கொடுத்தான். அதனைக் கேட்டதும் முருகன் அழகான வேடன் உருக்கொண்டு ஆண்டிமுன் தோன்றி மதயானையைக் கொன்று மறைந்தருளினான். தனக்கு வரவிருந்த ஆபத்தை விலக்கி அபயமளித்துக் காப்பாற்றிய சித்திரவேலாயுதனைத் தன்னுள்ளக் கோயிலே பூசித்து வந்த ஆண்டி வேலாயுதத்தினை வைத்துத் தன் வழிபாட்டையும் செய்து வந்தான். காலப்போக்கில் அந்தச் சித்திரவேலானது பல அற்புத சாதனைகளைச் செய்ததனால் 'சித்திரவேலாயுத சுவாமி' என்ற காரணப் பெயர் சித்தாண்டி முருகப்பெருமானுக்கு ஏற்பட்டது எனக்கதை கூறுகிறது.

அடுத்தகதை: "சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் கதிர்காமத் திருத்தலத்தைத் தரிசிக்க விரும்பி இந்தியாவினின்றும் தமது சீடர்களுடன் தலயாத்திரை மேற்கொண்டு இவ்வழியாக வந்தபோது, அத்தருணத்தில் மதம் கொண்ட யானை ஒன்று அவர்களை வழிமறித்ததாகவும், உடனேசிகண்டி முனிவர் கதிர்வேலாயுதக் கடவுளை மனதிலே நினைத்துச் சடாட்சரமந்திர முரைத்து சமீபத்திலிருந்த வெற்றிலை யொன்றைப் பிடுங்கித்தன் கையிலேந்தி 'முன்னர் தேவர்களை வென்றது உண்மையாயின் ஆறுமுகன் உத்தமபக்தரையும் அவர் தம்திருவடித்தாமரையே பற்றுக்கோடாகக் கொண்டமையினால் இந்த இலையே வேலாகச் சென்று மதயானையைக் அழிக்கும்' என்று சபித்து எறிந்தார். உடனே அவ்வெற்றிலை சுப்பிரமணியக் கடவுளின் திருவருளினால் வேலாகச் சென்று மதயானையைக் கிழித்துக்கொன்றது. இவ்விரு கதைகளுக்கும் தொடர்பு இருப்பதனைக் காணலாம். இரு கதைகளிலும் யானை வருகின்றது. சிகண்டி முனிவருடன் ஒரு கதையும், ஆண்டியுடன் அடுத்த கதையும் தொடர்பு கொண்டு சித்தாண்டி என இத்தலம் மருவிற்று என்று சித்தாண்டித் தல புராணச் செய்யுளினால் இதனை நன்கு தெளியலாம்.

"பக்தியிற் றோய்ந்து
ஞானப் பரமானார்
கருணை மேவிச்
சித்துகள் மனத்தாற்செய்த
சிகண்டியா மாண்டியானோர்
முத்தியிற் கலந்தேயீங்கு
முறையுற விடங்களாலே
இத்தலமுயர் சித்தாண்டி
யெனும் பெயர்
பெற்றதன்றோ"

சித்தாண்டி முருகன்மீது 103 ஊஞ்சற்பாடல்களை காரைதீவினைச் சேர்ந்த பீ. கதிரமலை என்பவர் பாடியுள்ளார். இப்பாடல்களின் மூலம் தலச் சிறப்பும் மகிமையும், பெருமையும் புலப்படுத்தப்படுகின்றன. செட்டிபாளையத்தைச் சேர்ந்த க.உ. சின்னப்புலவர் 20 கண்ணிகளைக் கொண்டு 'கோபுரவாசல் அழகு' என்னும் பொருளில் பாடியுள்ளார். அத்தோடு 13 செய்யுள்களை உடையதாகச் சித்தாண்டிக்கந்தசுவாமி கோயில் பெயரில் தோத்திரப் பற்றும் பாடியுள்ளார். ஆரையம்பதியைச் சேர்ந்த நல். அளகேசமுதலியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சித்தாண்டித் தல புராணம் இயற்றியுள்ளார். இவையாவும் இத்திருத்தலத்தின் சிறப்பினைப்பற்றிக் கூறுகின்றன. மட்டக்களப்பு மாநிலத்திலே மிக அழகும் சிறப்பும் பொருந்திய மிக உயரமான கோபுரம் சித்தாண்டிச் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்கே அமையப்பெற்றுள்ளது. வருடாந்த மகோற்சவம் ஆவணித்திங்களிற் கொடியேற்றத்துடன் நடைபெறுகின்றது. உற்சவத்தின் இறுதி மூன்று நாள்களும் விசேடமான 'மைல்கட்டு' திருவிழா நடைபெறும். இச்சமயத்தில் நிறையத் திருமணங்கள் இப்பகுதியில் வாழ்கின்ற மக்களிடையே நடைபெறும். இறுதியில் தீய்க்குளிப்பு வைபவமும், தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

## திருப்பெருந்துறை

மட்டக்களப்பு நகருக்கு மிக அண்மையிலுள்ள திருப்பெருந்துறையில் ஸ்ரீ முத்துக்குமார வேலாயுத சுவாமி கோயில் அமைந்துள்ளது. மிகவும் பழைமைவாய்ந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. பெரியதுறை எனப்படும் கிராமம் மிகப் பழங்காலத்துப் பட்டினமாக இருந்து இருக்க வேண்டும். 1807ம் ஆண்டைச் சேர்ந்த வரலாற்றுக் குறிப்பொன்று இப்பெரியதுறையில் முதன் முதல் பாடசாலை இருந்தமை பற்றிக் கூறுகின்றது. எனவே இங்கு மக்கள் வாழ்ந்து நல்ல நாகரித்தினை உண்டு பண்ணியிருக்க வேண்டுமெனக் கொள்ளலாம்.

திருப்பெருந்துறை முருகன் கோயில் மிகவும் பழைமை வாய்ந்தது. 1972ம் ஆண்டிற்குப் பின்னரே புனரமைப்பு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழிபாட்டுக்குரியதாக அமைக்கப்பட்டுள்ளது. 1902ம் ஆண்டிற்குப் பின்னர் இக்கோயில் நிருவாகம் பற்றியோ நடைமுறைகள் பற்றியோ எதுவித குறிப்புகளும் இல்லை. 1907ம் ஆண்டு வீசிய புயற்காற்றினால் அதன் பின்னர் ஏற்பட்ட வறட்சி, தொற்றுநோய் போன்ற காரணங்களாலும் மக்கள் குடிபெயர்ந்து செல்லக் கோயில் பாழடைந்திருக்க வேண்டுமென அறியக் கிடக்கின்றது. மிகவும் பழைமை மிக்க அழிபாடுகள் இக்கோயிலில் காணப்பட்டன. இத்தலத்தின் கிழக்குக் கரையில் சிவன் கோயில் இருந்தமைக்குரிய அழிபாடு காணப்படுகின்றது. சிவன் கோயிலுக்குரிய இடிந்த கட்டிடங்களுக்கு அருகில் தூர்ந்துபோன நிலையில் தீர்த்தக் கேணியொன்று உள்ளது. இக்கேணி தற்பொழுது புனரமைப்புச் செய்யப்பட்டு சுவாமி தீர்த்தம் ஆடுதற்கேற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் மேற்குத் திசையில் வேங்கை மரம் ஒன்று உள்ளது. இது மிகவும் அதிசயமான முறையில் பொது மக்களால் தரிசிக்கப்பட்டு வருகின்றது. கோயிலின் மகோற்சவம்எல்லாம் கதிர்காமத்தலத்தோடு ஆடி மாதத்தில் நடைபெறுகின்றன. ஏனையமுக்கிய பூசைகளும் விசேட விரதங்களும் கோயிலில் அனுட்டிக்கப்படுகின்றன. ஏனைய ஆலயங்களில் வண்ணக்குமார் நிருவாக முறை பின்பற்றப்படத் திருப்பெருந்துறை முருகன் ஆலயத்தில் 'மணியக்காரன்' நிருவாக முறை இன்றும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தலத்தின் சிறப்புப் பற்றி மட்டுநகர் வித்துவான் ச. பூபாலப்பிள்ளை அவர்கள் இயற்றிய திருமுருகன் பதிகத்தின் முதலாம் பாடலின் ஈற்று ஈரடிகளும் படித்துச் சுவைத்தற்பாலது.

*"வானெறு கொம்முலை*
*யேரேறு அம்மைகுற*
*மங்கைக் குவந்த கணவா*
*மதுவேற பூம்புறவ*
*மஞ்சேறு பெரியதுறை*
*மருளசிவ திருமுருகனே"*

## கொக்கட்டிச் சோலை

மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே மண்முனை ஊடாக ஒன்பது கல் தொலைவில் அமைந்துள்ளது கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வர் திருக்கோயில். சிவன் இங்கு சுயம்புலிங்கமாகத் தோன்றி அருள்சுரந்து வருவதால் 'தான்தோன்றீஸ்வரர்' என்று பெயர் பெற்றிருக்கலாமெனக் கொள்ளக்கிடக்கின்றது. சிவன் கோயில் சிகரத்தையுடைய கர்ப்பக்கிருகத்தையும், நான்கு மண்டபங்களையும், கோபுரம் இல்லாத முகப்பு என்னும் (தற்பொழுது மிகப்பெரிய அளவில் உயரமான அழகியகோபுரம் - சிகரம் நிருமாணிக்கப்பட்டுள்ளது.) முன்புறத்தையும் கொண்டுள்ளது. இதன் தம்ப மண்டபம் மிக அண்மைக்காலத்தில் கட்டப்பட்டுள்ளது. அறுபது அடி உயரத்தையுடைய 'கொடிக்கம்பம் ஒன்று நிருமாணிக்கப்பட்டுள்ளது. இக்கொடிக் கம்பத்திலும் பார்க்கக் கர்ப்பக் கிருகச் சிகரம் பதிவாகவுள்ளது. தம்ப மண்டபம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் காலத்தால் மிகவும் பழைமை வாய்ந்தவை. இங்குள்ள மூன்றாவது மண்டபத்தில் பார்வதி அம்மன் கோயிலுக்கு முன்புறமாக இடபத்தின் கற்சிலை ஒன்றுள்ளது. இந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த போர்த்துக்கேயர் அக்காலத்தில் இக்கோயிலைத் தகர்க்க வந்த போது 'நந்தி' உயிர்பெற்று நின்று அவர்களை விரட்டியது எனக் கதை வழங்குகின்றது. கர்ப்பக்கிருகம் சுயம்பு லிங்கத்தை வைத்தே அமைக்கப்பட்டதென்பர். ஆனால் இது வெளியில் தெரிவதில்லை. மூலஸ்தானத்தில் உள்ள பீடத்தில் உமா மகேஸ்வரர் விக்கிரகமே தாபிக்கப்பட்டுள்ளது. குளக்கோட்டு மன்னனது காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதெனக் கொள்ளப்படுகின்றது. குளக்கோட்டனது திருப்பணியைப் பெற்று ஒழுங்குபடுத்தப்பட்ட கோயில்கள் பற்றிய கல்வெட்டுப் பாடல் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

*"சீர்மேவு இலங்கை பதி வாழ்வு தரு*
*செல்வமும் சிவநேச இரு சமயமும்*
*செப்புதற்கரிதான மாணிக்க கெங்கையும்*
*செகமேவு கதிரமலையும்*
*ஏர் பெறும் தென்கைலைவாழ் கோணலிங்கமும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைதான் தோன்றுலிங்கம்
வெற்றிபுனை மயூர சித்திர சங்காரவேல்
வெள்ளை நாவற் பதிய தாம்
பேர் பெறும் தென் திருக்கோயில்
சிவாலயம் சிவபூசை தேவாரம்
செய்முறைகள் என்றென்றும்
நீடுழி காலமும்
நேரம் தளம்பாமலும்
ஏர் பெருகு பரிதி குலராசன்
குளக்கோட்டர் எவ்வுலக முய்வதாக
எழு கோபுரம் கோயில் தொழுவார் தினம்
தேட எங்கெங்கு மியற்றினாரோ."

ஏழு கோயில்களைத் திருப்பணி செய்து குளக்கோட்டன் அமைத்தான் என்பதனை இப்பாடல் மூலம் அறியலாம். திருமலைக் கோட்டையிலுள்ள வடமொழிக் கல்வெட்டிற் கூறப்படுகின்ற கி.பி. 1223ல் ஈழம் வந்த சோழகங்கனே, கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக்கோட்டன் என்று கலாநிதி சி. பத்மநாதன் கூறுகின்றார். பேராசிரியர் க. இந்திரபாலா குளம் கட்டி வளம் பெருக்கிய மகாசேன மன்னன் அல்லது கோணேஸ்வர ஆலயத்தைத் திருத்திக் கட்டிச் சிற்றரசனாக ஆட்சி புரிந்த கலிங்கத்துச் சோடங்கன் ஆதல் எனக் கருதுகின்றார். கோயில்களின் கட்டிட அமைப்பினை நோக்கினும் இப்பகுதிகளிலே கலிங்கரது செல்வாக்கு அதிகரித்திருந்த 13ம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே இவை கட்டப்பட்டிருக்க வேண்டும் போல் தெரிகிறது. திருக்கோயிலின் கட்டிட அமைப்பைக் கொண்டு அது 13ம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனத் திட்ட வட்டமாக முடிவு கட்டியுள்ளனர். திருக்கோயிலின் கட்டிட அமைப்பு முறைக்கும் தான்தோன்றீஸ்வரர் கோயில் கட்டிட அமைப்பு முறைக்கும் பெரிதும் ஒற்றுமை காணப்படுகின்றன. இதிலிருந்து இக்கோயில் 13ம் நூற்றாண்டு காலப்பகுதியினைச் சார்ந்ததாகக் கொள்ளலாம். கோயில் பரிபாலனம், வண்ணக்குமார் நிருவாக முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. மூன்று குடிகளான காலிங்கக்குடி, உலகிப்போடிக்குடி, படையாண்டகுடி ஆகிய குடிகளிலிருந்து மூன்று வண்ணக்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டு நிருவாகத்தைக் கவனித்து வருகின்றனர்.

இக்கோயிலின் வருடாந்த உற்சவம் ஆவணி மாதத்தில் வரும் முதற் பிறையிற் கொடியேற்றப்பட்டு அதனை அடுத்து வரும் பூரணைக்கு அடுத்த திங்களில் தீர்த்தமும் அதற்கு முதல்நாள் ஞாயிறு பிற்பகல் தேர்த்திருவிழாவும் இடம் பெற்று வருகின்றது. மட்டக்களப்பு மாநிலத்தில் தேர் ஓடும் ஒரே கோயில் என்ற பெருமையும் இதற்குண்டு. சில ஆண்டுகளில் புரட்டாதி மாதத்தில் தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறுவதும் உண்டு. மட்டக்களப்பு மாநிலத்திலே சித்திரத்தேர் எனப்படும் பெரிய தேரில் சிவன்பார்வதி சமேதராயும் பிள்ளையார் எனப்படும் சிறிய தேரில் விநாயகர் முருகப்பெருமானோடும் எழுந்தருள் வார்கள். தீர்த்தத் தினத்தன்று திருவேட்டையும் இதனையடுத்து கோயிற்பரிபாலகர்களையும், தொண்டுழியர்களையும் கௌரவிக்கும் சீர்வரிசை (குடுக்கை கூறுதல்) என்னும் நிகழ்ச்சியும் நடைபெறும். இவற்றின் விபரங்களைப் பங்கு கூறும் கல்வெட்டு, திருப்படைக் களஞ்சியம் முதலியவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தற்பொழுது ஆலயம் மிகப்பெரிய அளவில் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் நிருமாணிக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக விசேட உற்சவங்கள் நடைபெறுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. கூடிய விரைவில் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறும் என எதிர்பார்க்கலாம்.

**தாந்தாமலை**

மட்டக்களப்பு நகருக்கு தெற்கே மண்முனை ஊடாக 18 மைல் தொலைவில் தாந்தாமலை உள்ளது. இங்கு முருகப்பெருமான் கோயில் கொண்டருளியுள்ளார். மிகவும் பழைமை வாய்ந்த இத்தலம் ஒரு மலைச் சாரலிலே அமைந்துள்ளது.. சுற்றிவரக் காடுகள் சூழ்ந்துள்ள இத்திருத்தலத்தின் அருகில் ஒரு தீர்த்தக்குளம் உள்ளது. வருடாந்த மகோற்சவ காலங்களில் சுவாமி வீதிவலம் வந்து இத்தீர்த்தக்குளத்திலே தீர்த்தம் ஆடும் நிகழ்ச்சி இடம்பெறும். மலைச்சாரலில் முருகப் பெருமானுக்கும், வள்ளி, தெய்வானை இருவருக்குமான கோயில்கள் அமைய மலைஉச்சியில் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலிற் காணப்படும் அழிபாடுகளையும், கற்றூண்களையும் கவனிக்கு-மிடத்து மிகவும் பழைமை வாய்ந்த தலமாக இது இருந்திருக்க வேண்டுமென்பது புலனாகின்றது. குளக்கோட்ட மகாராசான் ஆட்சிக் காலத்தில் இத்தலம் நிருமாணிக்கப்பட்டிருக்கலாமெனஐதிகமாகக் கூறப்படுகின்றது.

இத்திருக் கோயிலைச் சுற்றிவர செந்நெற் காணிகள் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதி மக்கள் தங்களின் வயல் விளைச்சல் அறுவடை போன்ற காலங்களில் தாந்தாமலையானின் அருளை வேண்டி நிற்பதோடு பொங்கல் பூசனைகளும் செய்து வழிபடுபவர். 1956ம் ஆண்டின் பின்னரே இத்திருத்தலம் மக்கள் வழிபாட்டிற்காகப் புனரமைப்புச் செய்யப்பட்டு விடப்பட்டது. அதற்கு முன்னர் அழிந்த நிலையில் இருந்துள்ளது. இதன் நிருவாகத்தையும் கொக்கட்டிச்சோலைத் தான் தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர் கவனித்து வருகின்றனர். அத்துடன் கன்னன்குடா இந்துசமய விருத்திச் சங்கத்தினரும் சேர்ந்து ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தாந்தாமலையின் உச்சியில் உள்ள பிள்ளையார் மலையின் கண் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானைத் தரிசிப்பதற்குச் செல்லும் அடியார்களுக்கு இலகுவாக ஏறிச் செல்வதற்கு 600 அடி உயரத்திற்கு 300 படிக்கட்டுகள் ஒவ்வொன்றும் 20 அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலமும் 2 அடி நீளமும் கொண்டவையாக அமைக்க வேண்டியுள்ளது. இப்பெருங் கைங்கரியத்தில் இது வரை 40 படிகளே முற்றுப் பெற்றுள்ளன. ஏனையவற்றைப் பூர்த்தி செய்வதற்கும் யாத்திரிகர்கள் சென்று தங்குவதற்கும் மடமும் அமைக்கும் பணியில் சைவ அன்பர்கள் மிகவும் துரிதமாக ஈடுபடவேண்டுமெனப் பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர். கதிர்காம முருகப் பெருமானுடைய உற்சவத்துடனேயே இத்தலத்தின் உற்சவமும் ஆவணி மாதத்தில் நடைபெறுகின்றது. சின்னக்கதிர்காமம் என்றே இது அழைக்கப்படுகின்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இங்கு வருகின்றனர். மட்டக்களப்பு மாநில மக்கள் பெரும்பாலும் கதிர்காமத் தலத்திற்குச் செல்வதற்குப் பதிலாக தற்பொழுதெல்லாம் தாந்தாமலை முருகனையே தரிசித்துச் செல்கின்றனர். இத்தலத்தின் சிறப்பும் மகிமையும் வெளிக்கொணரப்பட வேண்டியது மிக அவசியமானவொன்றாகும்.

**மண்டூர்**

மட்டக்களப்பு நகரிலிருந்து தென்மேற்கே 24 மைல் தொலைவில் அமைந்துள்ளது. படைக்கோயில்களுள் ஒன்றாக இதனைக் கருதுகின்றனர். பூசைமுறைகளெல்லாம் கதிர்காமத்தில் நடைபெறுவது போன்று இங்கும் நடைபெறுகின்றன. இதனை மௌன பூசை என்று கூறுவர். மண்டூர்க் கந்தன் மிகவும் அருள்சுரப்பவனாக அடியார்களால் கொள்ளப்படுகின்றான். மிகவும் பழைமை வாய்ந்த தலமாக இது கொள்ளப்படுகின்றது. கோயிலைச் சுற்றிவர யாத்திரிகர்கள் தங்குவதற்குப் பல மடங்கள் இருக்கின்றன. உற்சவ காலங்களில் ஏராளமான பக்தர்கள் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக காவடி எடுப்பர்; அத்தோடு ஏராளமான பெண்கள் தீச்சட்டி எடுத்து தம் தம் நேர்த்தியினை நிறைவேற்றுவர். சுவாமி தீர்த்தம் ஆடுவதற்கு இத்தலத்திற்குச் சற்றுத் தொலைவில் தீர்த்தக்கேணி ஒன்றும் அமைந்துள்ளது.

இத்திருத்தலத்தில் கந்தசஷ்டி விரதம் மிகவும் சிறப்பான முறையில் அனுட்டிக்கப்படுகின்றது. விரதம் தொடங்கிய மூன்று நாளில் வள்ளியம்மை திருமணம் நடத்துகின்றார்கள். பொதுமக்கள் இதனைக் 'கல்யாணப் படிப்பு' என்றும் 'குரவைத்திருநாள்' என்றும் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அன்றிரவு முற்றும் முருகனுக்கும் வள்ளிநாயகியாருக்குமான திருமண நிகழ்ச்சியும் அதற்குரிய தெனப்படும் 'குரவையிடுதல் வழிபாடும் நடக்கின்றன. மட்டக்களப்பின் பாரம் பரியக் கலைகளான, வசந்தன், கொம்புமுறிப்பு, குரவைபோன்றவை வளர்க்கப்படும் இடமாக இத்தலம் விளங்குகின்றது. மண்டூர்க் கந்தசுவாமி கோயில் இன்றும் பழைமையான நிலையிலேயே காணப்படுகின்றது. வண்ணக்குமார் நிருவாக அமைப்பே நடைமுறையிலுள்ளது. மட்டக்களப்பு மாநிலத்திலுள்ள யாத்திரிகர்கள் விதிமுறைக்குட்பட்ட தலங்களுள் இதுவுமொன்று. மண்டூர்க்கந்தன் பெயரில் ஏராளமான காவடிப் பாடல்களும், பதிகங்களும் பக்தர்களால் பாடப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து இத்தலத்தின் சிறப்பினையும் மகிமையினையும் நாம் கண்டு கொள்ள முடிகின்றது. மண்டூர் முருகன் மேல் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஐயா அவர்களும் பதிகம்பாடியுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாநிலத்தில் புராதனச் சிறப்புமிக்க தலங்கள் பல இருப்பதால் எல்லாவற்றையும் பற்றி எடுத்துக்கூறுவது சிரமமானதாகவில்லாத விடத்தும்; கட்டுரை மிகவும் விரிவடைந்துவிடும் என்பதனைக் கருத்திற்கொண்டும் அமிர்தகளி ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமானது திருத்தலச் சிறப்பினை மட்டும் பார்ப்பதோடு நிறைவு செய்யலாம்.

**அமிர்தகளி**

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று சிறப்புக்களும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள சிறப்பு இத்தலத்திற்கே உரியது. மட்டக்களப்பு வாவி, வங்காள விரிகுடா கடலோடு சங்கமமாகும் இடத்தில் அமைந்துள்ள அமிர்தகளி என்னும் கிராமத்திலேயே இத்திருத்தலம் அமையப் பெற்றுள்ளது. இதன் பழைமையினை இராமாயண காலத்திற்கு முற்பட்டதாகவும் இராமாயண காலப்பகுதியினைச் சார்ந்ததாகவும் கூறும் பல கர்ணபரம்பரைக் கதைகள் உள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றைப் பார்க்கலாம். 'சீதையைத் தேடி இலங்காபுரி வந்து அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமன், பின்னர் இராவணனால் வாலில் நெருப்பு மூட்டப்பட்டதும் அதன் மூலம் இலங்காபுரியினைத் தீயிட்டுக்கொழுத்திவிட்டு வாலில் உள்ள நெருப்பினை மாமாங்கத் தீர்த்தக்குளத்திலே அணைத்துக் கொண்டதாகவும், கதையுண்டு. இக்கதை இராமாயண காலத்திற்கு முன்னரே இத்தலமும், அமிமுத்திதீர்த்தம் எனப்படும் இத்தீர்த்தக்குளமும் இருந்தது என்பதனைக் காட்டுகின்றது.

அடுத்தகதை: "இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதாபிராட்டியாரைச் சிறை மீட்டபின்னர் இவ்வழியால் திரும்பும் போது சிவலிங்க பூசை செய்ய நாட்டங் கொண்டு அனுமானை அழைத்து இந்தியாவிற்குச் சென்று சிவலிங்கம் எடுத்துவரும்படி பணித்ததாகவும்; இலிங்கம் எடுக்கச் சென்ற அனுமன் வரத்தாமதம் ஏற்பட்டதனால், இராமபிரான் ஒரு பிடி மண் எடுத்து இலிங்கம் சமைத்து தனது கோதண்டவில்லைப் பக்கத்திலே ஊன்றிக்குளம் ஒன்றினை உண்டாக்கி அபிஷேகம் செய்து பூசையை நிறைவேற்றியதாகவும் கதை கூறுகின்றது. இக்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயண காலப்பகுதியில் இத்திருத்தலம் அமையப்பெற்றது என்பதைக் காட்டுகின்றது. இக்கதைகள் எல்லாம் இக்கிராமத்தில் வாழ்ந்த முதியவர்களின் வாய் மொழியாகவே வழங்கி வந்தன. இக்கதைகளைக் கொண்டு இத்திருத்தலம் மிகவும் பழைமை மிக்கது என்பதை உணரக் கூடியதாக உள்ளதேயொழிய அதனை வரலாற்று முறையில் நிறுவுவதற்கு எதுவித பட்டயங்களோ, சாசனங்களோ, கல்வெட்டுக்களோ எமக்குக் கிடைக்கவில்லை. நூற்றாண்டு காலப் பழைமை வாய்ந்ததாக இத்தலம் விளங்கியபோதும் 1880ம் ஆண்டிற்குப்பின்னரே ஆலயத்தைப் பரிபாலித்து வந்த விபரங்களை நாம் அறியமுடிகின்றது. இன்னுமொரு சிறப்பு இக்கோயிலில் உள்ளது. அதுயாதெனில் மூலமூர்த்தி சிவலிங்கமாகவிருந்த போதும், இப்பகுதி வாழ்மக்கள் இதனை 'மாமாங்கேஸ்வரப்பிள்ளையார்' என்றே கருதி வழிபடுகின்றனர். சிவனையும், பிள்ளையாரையும் ஒன்றாகக் கருதிய நிலையினைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

"கொக்கட்டி மரநிழலிற்
கோயில் கொண்டாய்
குணமான நீருற்று
நதியுங் கொண்டாய்
சொக்கரலர் தன்னருளால்
வந்த மூர்த்தி
சோபிக்கும் சயம்புலிங்கம்
ஆனமூர்த்தி
விக்கினங்கள் அகற்றிடுவாய்
விநாயகமூர்த்தி
வீரமுள்ள கயமுகனைக்
காய்ந்த மூர்த்தி
மக்கள் துயர் தீர்த்திடும்
மாமாங்கமூர்த்தி -சுவாமி
மங்காத செல்வமெல்லாம் தருவாய்
நீயே."

மாமாங்கேஸ்வரர் மீது பாடப்பட்டுள்ள வேறு பாடல்களும் இதனை வலியுறுத்துகின்றன. "கை கூப்பித் தொழவும் நான் அறியேன் மார்க்கம் காருமையா அடியேனைக் கைலைநேசா" எனவரும் அடிகளும் குறிப்பிடத்தக்கன. இருதெய்வங்களுக்கும் சிறப்பான முறையில் வழிபாடு நடைபெறுகின்றது. வருடாந்த மகோற்சவமான ஆடி அமாவாசைப் பெருவிழா சிவபெருமானுக்கே உரியது. மாமாங்கேஸ்வரர் மீது ஏராளமான காவடிப் பாடல்கள், அம்மானைப்பாடல்கள், பதிகங்கள் என்பன பாடப்பட்டுள்ளன.

"நன்றான தம்பியரே நானுரைக்க
நீகேளும்
உண்டானதோர் மாசி மகமதில் உத்
தமரைக் கண்டதனால்
மாமாங்க வாசர் என நாமமிட்டாள்,"

என்ற பாடலடிகள் தோற்றச் சிறப்பினைக் காட்டுகின்றது.

அமிர்தகளி, புன்னச்சோலை, கருவப்பங்கேணி, நாவலடி, பாலமீன்மடு, மட்டிக்களி, ஊறணி ஆகிய ஏழு ஊர்க்கிராம மக்களும், கோட்டமுனை வேளாளப்பகுதியினரும் சேர்ந்தே இவ்வாலயத்தினைப் பரிபாலித்து வருகின்றனர். தொடக்க காலத்தில் பரம்பரையான வண்ணக்குமார் நிருவாகம் இருந்து வந்தது. பின்னர் ஏற்பட்ட நிருவாகச் சிக்கல்களினால் தேர்தல் முறையில்இரகசிய வாக்கெடுப்பு மூலம் வண்ணக்குமார் தெரிவு நடைபெறுகின்றது. இருபகுதியிலிருந்தும் ஒவ்வொரு வண்ணக்கரும் ஒவ்வொரு உதவி வண்ணக்கரும் தெரிவு செய்யப்பட்டு நிருவாகத்தை நடாத்தி வருகின்றனர். ஆலயத்தின் மிக அருகில் அமைந்துள்ள "அலிமுத்தி" தீர்த்தம் என அழைக்கப்படும் மாமாங்கத் தீர்த்தம் மிகவும் சிறப்பு மிக்கது. எனவே பிதிர்க்கடன் தீர்ப்பாளர்கள் ஆடி அமாவாசையில் இத்தீர்த்தம் ஆடுவதனைப் பெரும் பேறாகக் கருதி வருகின்றனர். ஏனைய வரலாற்றுப் புகழ் மிக்க தலங்களான கோறவெளி அம்மன், ஏறாவூர் பத்திரக்காளி அம்மன், ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விநாயகர், களுதாவளைப் பிள்ளையார் கோயில், பெரிய போரதீவு, பத்திரகாளி கோயில், கோயிற் போரதீவு ஸ்ரீ சுப்பிரமணியர் கோயில், பண்டாரியாவெளி நாககட்டு ஆகிய தலங்கள், அவற்றின் வரலாற்று ஆதாரங்கள் பற்றியெல்லாம் பிறிதோர் இடத்தில் நோக்கலாம்.

**நன்றி : *மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற வெள்ளிவிழாமலர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் சைவம்

நா. முத்தையா

ஈழத்தில் வாழும் சைவமக்களுட் சரி பாதிக்குமேல் மலையகத்தில் வாழுகின்றார்கள் என்பது பலர் சிந்திக்காத ஒரு விடயமாகும். யாழ்ப்பாணத்திலே திருவாசகக் கந்தபுராணக் கலாசாரங்களும் கிழக்குமாகாணத்திற் கண்ணகி வழிபாட்டுக் கலாசாரங்களும் மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்தது போல, மலையகத்தில் மாரியம்மன் வழிபாட்டுக் கலாசாரம் மக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும்.

ஈழத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தேயிலை, றப்பர் தோட்டங்கள் உள்ளன. எல்லாத் தோட்டங்களிலும் பாடசாலைகள் இல்லை. ஆனால் மாரியம்மன் வழிபாடு இல்லாத தோட்டம் இல்லையென்றே கூறலாம். பாரதநாட்டிலிருந்து மலையகமக்கள் இந்நாட்டிற்கு வந்தபோது அவர்களுடன் கூட வந்த கலாசாரம் மாரியம்மன் வழிபாடாகும். அந்தக் கலாசாரம் இன்றும் அவர்கள் மத்தியில் மங்காது மாறாது சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

மாரி என்ற பெயர் மழை எனப் பொருள்படும். வெப்பத்தைத் தணிவித்து, வெப்ப நோய்களாகிய அம்மை முதலியவற்றைத் தீர்த்து, நாடுதழைக்கச் செய்தும், மாடு பிழைக்கச் செய்தும் மக்களை மழை போலக் காப்பவள் இந்தத் தெய்வம் என்று மக்கள் போற்றுவர்.

தொழிலாளர் இந்த நாட்டுக்கு வந்த அதே காலத்திலே நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் பணம் சம்பாதிப்பதற்காக இந்த நாட்டிற்கு வந்தார்கள். செட்டியார்கள் நகரப்பகுதிகளிலே குடியேறினார்கள். எந்த நகரத்திலே கதிரேசன் கோயில் இருக்கிறதோ,. அங்கே செட்டியார்கள் வாழ்ந்தார்கள் என்பது அடையாளம் ஆகும். அவர்கள் கட்டிய கோயில் எல்லாம் கதிரேசன் கோயிலே. செட்டியார்கள் கோயில் கட்டியதோடு கோயிலைப் பரிபாலிக்க வேண்டிய வருவாய்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். அதனால்தான், செட்டியார்கள் பல நகரங்களை விட்டுப் பாரத நாடு சென்றிருந்த காலத்திலும் அவர்களுடைய கோயில்களில் பூஜைகள் முட்டின்றி நடைபெற்று வருகின்றன. நாமோ கோயிலுக்குக் குத்து விளக்கு வாங்கிக் கொடுப்போம். ஆனால் எண்ணெய் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கமாட்டோம்.

கண்டி மாநகரிலே தலதாமாளிகையைப் போன்ற பழைமையை உடைய இரு கோயில்கள் உள்ளன. ஒன்று கதிரேசன் கோயில், அடுத்தது பத்தினிதெவியோ என்று அழைக்கப்படும் கண்ணகை அம்மன் கோயில். இவை இரண்டும் தலதா மாளிகையோடு சம்பந்தமானவையாகும். மலையகத்து முக்கிய நகரங்களிலே கதிரேசன் கோயிலோடு முத்துமாரியம்மன் கோயிலும் சேர்ந்து விளங்குவதைக் காணலாம். செட்டியார்களை நகரத்தார் என்று அழைப்பது மரபு. அதனாலே கதிரேசன் கோயில்களை நகரத்தார் கோயில் என்றும், மாரியம்மன் கோயில்களை நாட்டார் கோயில் என்றும் அழைத்துவரும் வழக்கமும் உண்டு.

மலையகத்தின் நுழைவாயிலாக மாத்தளை கருதப்படுகின்றது. மாத்தளை நகருக்குள் நுழையும் போதே முத்துமாரியம்மன் கோயிலைத் தரிசிக்கும் வாய்ப்பு உண்டு; திருக்கோணமலை வீதியில் இராஜகோபுரத்துடன் காட்சி அளிக்கின்றது. இங்கு மாசி மாதத்தில் தீர்த்தோற்சவமும் முதல்நாள் தேர்விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது சுற்று வட்டாரங்களிலுள்ள தோட்டப்பகுதிகளில் வசிக்கும் சைவப் பெருமக்கள் தேர்த்திருவிழாவின்போது இலட்சக் கணக்கில் வந்து கூடுவர்; ஐந்து தேர்கள் பவனிசெல்லும் காட்சி மிக அழகானது. ஸ்ரீ முத்துமாரியம்பாள் எழுந்தருளியிருக்கும் தேரினைப் பெண்களே இழுத்துச் செல்லும் வழக்கம் இங்கு மாத்திரமே உண்டு. மாத்தளை நகரத்தில் கதிரேசன் கோயில் ஒன்றும் முத்து விநாயகர் கோயில் ஒன்றும் உள.

வத்தேகம நகரில் முத்துமாரியம்மன் கோயிலும் கதிரேசன் கோயிலும் உள; புசல்லாவை கம்பளை, நாவலப்பிட்டி நகர்களிலும் இவ்விருகோயில்களும் அமைந்திருப்பதைக் காணலாம். கற்றன், டிக்கோயா, மஸ்கெலியா பொகவந்தலாவை, தலவாக்கொல்லை, நுவரெலியா, பண்டாரவளை, அப்புத்தளை, பதுளை, பசறை ஆகிய இடங்களிலும் ஒரு கோயிலோ அன்றி இரண்டு கோயில்களோ இருப்பதைக் காணலாம். மாத்தளை, கண்டி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களிற் கொடியேற்றத் தேர்விழாவும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகின்றன; மற்றைய இடங்களில் அலங்கார விழாக்கள் மாத்திரமே நடைபெற்றுவருகின்றன.

தோட்டத்தில் வருடம் ஒரு முறை விழாக் கொண்டாடுவர். பெரும்பாலும் மூன்று நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் கொண்டாடுவர். விழாக் கொண்டாடும் நாட்களிலே தோட்டத்தில் வேலை இல்லை. நிர்வாகமே விழாவுக்கென ஒரு தொகையான பொருளைக் கொடுக்கின்றன. முதல் நாள் கரகம் பாலித்தல் என்ற கிரியை ஆற்றங்கரையில் நடைபெறும்; இரண்டாவது நாள் தெருத்தெருவாக அம்பாள் வீதிவலம் நடைபெறும். கடைசிநாளில் நீர்வெட்டு என்று சொல்லப்பெறும் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

ஒரு காலத்திலே ஆண்டில் ஒரு முறை மாத்திரமே விழாக்கொண்டாடி வந்த தோட்டப் பகுதிகளில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. வெள்ளிதோறும் கூட்டுவழிபாடும், நவராத்திரி, சிவராத்திரி, போன்ற விழாக்களும், சமயச் சொற்பொழிவுகளும், சங்கீத கதாப்பிரசங்கங்களும், திருமுறை ஓதுதலும் முக்கியமாக இடம் பெற்று வருகின்றன. பல கோயில்களில் நாளாந்த பூஜையும் இடம் பெறுகின்றது. ஆண்டுதோறும் ஆடியில் நடைபெறும் கதிர்காம விழாவைத் தரிசிக்க மலையகத்தார் சென்று வருவர். தற்போது திருக்கேதீச்சரம், கோணேச்சரம், யாழ்ப்பாணத் திருத்தலங்கள் ஆகியனவற்றுக்கு யாத்திரை செய்யும் பழக்கமும் ஏற்பட்டுள்ளது.

மலையகத்தில் மூன்று பெருஞ் சித்தர்கள் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தி உள்ளார்கள். மாத்தளையில் சமாதி அடைந்திருக்கும் பரமகுரு சுவாமிகள் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தம் இளமையிலேயே துறவு பூண்டு மாத்தளைக்கும் திருக்கோணமலைக்கும் இடையே உள்ள காட்டுப்பிரதேசத்தில் ஏகாந்தமாகத் தவம் செய்து தவசக்தி பெற்றவர். இவரை அண்டி உபதேசம் பெற்றவர் பலராவர்.

நாவலப்பிட்டியிலிருந்து தலவாக்கொல்லைக்குச் செல்லும் பாதையில் பதின்மூன்றாவது மைலில் 'குயீன்ஸ்பெரி' என்ற பெயருடைய தோட்டம் உள்ளது. அத்தோட்டத்தில் நவநாத சித்தர் என்ற மகான் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தினார். அவர் பல சித்துக்கள் புரிந்தவர். அவரது சமாதிக் கோயிலும் அதன் பக்கத்திலே முருகன் கோயிலும் அத்தோட்டத்தில் உள. இவர் இந்தியாவிலுள்ள கொல்லிமலையிலிருந்து வந்த ஒரு மகான். இவரும், கொழும்பு முகத்துவாரத்தில் சமாதிகொண்டெழுந்தருளியிருக்கும் பெரியானைக் குட்டி சுவாமிகளும், கிழக்குமாகாணத்திற் காரைதீவில் சமாதிகொண்டெழுந்தருளியிருக்கும் சித்தானைக் குட்டி சுவாமிகளும் சமகாலத்தவராவர்; மூவரும் ஒன்று சேர்ந்தே ஈழம் வந்து சேர்ந்தார்கள்.

அட்டனிலிருந்து கொழும்பு செல்லும் வீதியில் நான்கு மைல் தூரத்தில் இறாகலை என்றொரு நகர் உண்டு. அங்கு குயில்வத்தை என்றொருதோட்டம் உண்டு; அங்கு ஒரு சிவாலயம் உண்டு; அந்தச் சிவாலயத்தில் நாகநாதசித்தர் என்றொரு மகான் வாழ்ந்து வந்தார். அவரால் அப்பகுதி மக்கள் மிகப்பயன் அடைந்தனர். அவரது சமாதியும் கோயிலின் பக்கத்தே உள்ளது. சுவாமிகளுடைய சமாதிக்குப்பின் அவரது சீடரான குமரகுருபரசுவாமிகள் அந்த இடத்தில் இருந்து பல சிவ கைங்கரியங்கள் செய்து வந்தார். அவர் சமீபகாலத்திலே சமாதி அடைந்து விட்டார்.

கோயில்களும் மகான்களும் தவிர மலையகத்திலே சமயவளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவை சமயசங்கங்களும் சமயப் பாடசாலைகளுமாகும். பல தனிப்பட்ட சைவப் பெரியார்களுடைய முயற்சியினால் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் உதவியினாலும் சமயவளர்ச்சி கணிசமான அளவு ஏற்பட்டன.

மாத்தளையிலுள்ள பாக்கியம் வித்தியாலயமும் கந்தசாமி வித்தியாலயமும் கந்தசாமி குடும்பத்தாராற் கட்டப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வந்தன. யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வரா கல்லூரியும் எப்படியோ மாத்தளையில் இவ்விரு கல்லூரிகளும் அப்படி அமைந்தன எனலாம். கண்டி சைவமகாசபையின் நினைவாக விளங்குவது கண்டி இந்து சிரேஷ்ட பாடசாலையாகும். நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கத்தை நினைவூட்டிக் கொண்டிருப்பது கதிரேசன் கல்லூரி. மலையகத்திற் பெருஞ் சமூக தொண்டராக விளங்கிய இராசலிங்கம் அவர்களுடைய தனிப்பட்ட முயற்சியினால் தோன்றியது புசல்லாவ சரஸ்வதி பாடசாலையாகும். பதுளை சைவபரிபாலன சபையின் நினைவாக விளங்குவது பதுளை சரஸ்வதி மத்திய வித்தியாலயமாகும்.

நமது சமயம் அனாதியானது; சனாதனதர்மத்தை விளக்குவது; உலகிலுள்ள எல்லாச் சமயக் கொள்கைகளையும் உள்ளடக்கித் தாய்ச்சமயமாக விளங்குவது. இத்தகைய சமயத்திற் பிறந்த பெரும்பான்மையோர் சமய அறிவற்றவராக, கல்வி அறிவற்றவராக, சமய சாதனை அற்றவராக, நாஸ்திகராக விளங்குவதை கண்டு எந்தச் சைவனும் சந்தோஷம் கொள்ள முடியாது.

சமயச் சங்கங்களும், சமய அறிஞரும், பணம் படைத்தவர்களும் அடிக்கடி மலையகத்தை நாடி வந்து சமயப்பணி செய்ய வேண்டும் என்பது அடியேனுடைய தாழ்மையான வேண்டுகோளாகும்.

(நன்றி: *திருக்கேதீச்சரம் திருக்குடத்திருமஞ்சன மலர் 1976)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவ சமயம்

முல்லைமணி வே. சுப்பிரமணியம் B.A.(Hons)

*"எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்*
*வல்லோர் புகழருவி தெற்கெல்லை– நல்லதிருக்*
*கோணமலை கீழ்பால் கேதீச் சரமேற்கில்*
*மாணத் திகழ்வன்னி நாடு"*

என்னும் வெண்பா வன்னிநாட்டின் எல்லைகளை எடுத்துக் கூறுகின்றது. இவ்வெல்லைக்குள் அடங்கிய வன்னிநாடு மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களையும் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்பகுதியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பான்மையோர் சைவசமயத்தவர்கள். கிறிஸ்த்தவர்களும், இஸ்லாமியர்களும் சிறு பான்மையாக வாழ்கின்றனர். இவர்களின் வாழ்க்கையிலும் சைவசமயத்தின் பாதிப்பு இருப்பதைக் காணலாம்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சைவசமயிகளினுடைய வழிபாட்டு முறைகள் யாழ் மாவட்டத்திலுள்ளதை விடச் சற்று வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் புவியியல் தன்மை, மக்கள் மனப்பாங்கு, தொழில் என்பவற்றிற்கும் சமயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம்.

யாழ்ப்பாணக் கலாசாரம் 'கந்தபுராண கலாசாரம் என்பர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். யாழ்ப்பாணத்தில் முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்க முல்லைத்தீவில் சிவவழிபாடும், சக்தி வழிபாடுமே முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

முல்லைத்தீவு பிரதேச சைவசமயிகளின் வழிபாட்டு முறைகளை இருபெரும் பிரிவுகளாக வகுக்கலாம்.

1) பெருந்தெய்வ வழிபாடு
2) சிறுதெய்வ வழிபாடு

## பெருந்தெய்வ வழிபாடு

சிவன், சப்தகன்னியர் கண்ணகி அம்மன், பிள்ளையார், முருகன் என்னும் தெய்வங்களுக்குரிய வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்கள் இங்கு உண்டு. முள்ளியவளைக் காட்டு விநாயகர் நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார், தண்ணீருற்று ஊற்றங்கரை வினாயகர் குமுழமுனை கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் என்பவை பிரசித்தி பெற்ற வினாயகர் ஆலயங்களாகும். ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரன் ஆலயம் மிகவும் பழைமை வாய்ந்த சிவன் கோயிலாகும். வற்றாப்பழைக் கண்ணகை அம்மன், வட்டுவாகல் சப்தகன்னியர் என்பவை சிறந்த சக்தி வழிபாட்டுத் தலங்களாகும். குமாரபுரம் சித்திரவேலாயுதர், முள்ளியவளைக் கல்யாண வேலவர் ஆலயங்களும் பிரசித்தி வாய்ந்தவை.

## சிறு தெய்வ வழிபாடு

விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட இப் பகுதி மக்கள் ஐயனார் வன்னியில் தெய்வம், அண்ணமார் வதனமார், வைரவர், வீரபத்திரர், நாகதம்பிரான், பத்திரகாளி போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இவற்றுள் நாக தம்பிரான் ஐயன் வைரவர் என்னும் தெய்வங்களுக்கே நிரந்தர கோயில்கள் உண்டு. ஏனையவற்றிற்கென கோயில்கள் இல்லை. விவசாய விருத்திக்காகவும், வனவிலங்குகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் நோய் நீக்கத்தின் பொருட்டும் விவசாயத்திற்கு உதவியான கால்நடைகளின் பாதுகாப்பிற்காகவும் இத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

## பிள்ளையார்

ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோயில்கள் மாத்திரமன்றி வயல் வெளிகளிலும் வினாயகர் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். விவசாயத்திற்கும், கல்விக்கும், நோய் நீக்கத்திற்குமாகப் பிள்ளையார் வழிபடப்படுகின்றனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள வினாயகர் ஆலயங்களில் முள்ளியவளைக் காட்டு வினாயகர் ஆலயமே மிகவும் பழைமை வாய்ந்தது. இவ்வாலயத்தை யாழ்ப்பாணத்தை யாண்ட பரராசசேகர மன்னன் வழிபட்டான் எனக் கர்ணபரம்பரைக் கதையுண்டு. பரராசசேகர மன்னன் பெயரால் அமைந்த கோட்டையின் அழிபாடுகள் இவ்வாலயத்தின் அண்மையில் உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் முடியையும் செங்கோலையும் மறைத்து வைத்து உன் மத்த வைரவனைக் காவல் வைத்தான் என்றும் காட்டுவினாயகர் ஆலயத்தை வழிபட்டான் என்றும் யாழ்ப்பாணவைபவமாலை குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினவன் கந்தன் என்னும் பக்தனைப் போர்த்துக் கேயப்படை வீரர் துரத்திச் சென்றனர். அவன் விநாயகர் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள மரமொன்றில் ஏறி இருந்தான். தன்னைப் படைவீரர் கண்ணுக்குக் காட்டாமல் மறைக்குமாறு விநாயகரை வேண்டினான். மரத்திலிருந்த குளவிக்கூடு உடைந்து குளவிகள் படை வீரரைத் துரத்தத் தொடங்கின. நினவன் கந்தன் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்ற மணியொன்றை வார்ப்பித்துக் கொடுத்தான். அந்த மணி இப்பொழுதும் ஆலயத்தில் உண்டு. அடிக்கும் பொழுது 'நினவன் கந்தன்' என்றே ஒலிக்கின்றது. மறைந்திருந்த பக்தனைக் காட்டாதபடியால் காட்டா விநாயகன் என்றும், அடியவனுக்கு அருள் காட்டியதனால் காட்டுவிநாயகன் என்றும் அழைக்கப்படுகின்றார். வற்றாப்பழைக் கண்ணகை அம்மன் பொங்கல் கிரியைகளுடன் இவ்வாலயம் தொடர்புடையது. கதிரையப்பர் பள்ளில் மூத்த நயிந்தை என இவ்விநாயகர் குறிப்பிடப்படுகிறார்.

குமுழமுனையில் கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் ஆலயம் உண்டு. "கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கும்மிகள்" என்னும் நூல் இவ்வாலயத்தின் வரலாற்றை விரித்துக்கூறுகின்றது. பரத கண்டத்திலிருந்து பட்டாணி ஒருவன் மூன்று விநாயகர் விக்கிரகங்ளைக் கருவாடு ஏற்றிவந்த படகிலே இலங்கைக்குக் கொண்டுவந்தான். கருவாட்டின் நாற்றத்தைச் சகிக்காமல் விக்கிரகங்கள் செம்மலைக் கடலிலே குதித்துவிட்டன. இவற்றுள் ஒன்று குமுழமுனையிலுள்ள கொட்டுக்கிணற்று வயலிலும் மற்றது கொக்குத் தொடுவாயிலுள்ள கோட்டகக் கேணியிலும், மூன்றாவது விக்கிரகம் அமரிவயலிலும் சென்று மறைந்து கொண்டன. குமுழமுனையை அடைந்த பிள்ளையார் மருதமரமொன்றின் கீழுள்ள நெற்களத்தை அடைந்து அங்கே தூற்றாப் பொலியுள் மறைந்திருந்தார். மூன்று நாட்களாக நெல்லைத் தூற்றியபோதும் பொலி பெருகிக் கொண்டே வந்தது. பொலி தூற்றியவர்கள் களைப்பினால் நித்திரையாகி விட்டனர். பிள்ளையார் கனவில் தோன்றிப் பட்டாணியொருவன் தன்னைத்தேடி வருவான் என்றும் 'நெல்லுக்குள் இருக்கும் கல்லைத் தவிர வேறு கல் இல்லையென்று சத்தியம் செய்யவும்' என்று கூறினார். பட்டாணி தேடிவந்து விசாரித்த போது அவர்கள் அப்படியே கூறினர். பின்னர் கொட்டுக் கிணற்றடியில் பிள்ளையாரைப் பிரதிட்டை செய்து பூசிக்கத் தொடங்கினர்.

கோட்டகக் கேணிப் பிள்ளையார் முஸ்லிம் ஒருவருக்கு அருள் புரிந்ததாகக் கூறப்படுகின்றது. உழவு மாட்டைக் காணாமல் முஸ்லிம் ஒருவர்பல நாட்களாகத் தேடினார். கவலையுடன் இருக்கும் போது கோட்டகக் கேணிப் பிள்ளையாருக்குக் கற்பூரம் கொளுத்தித் தேங்காய் அடிப்பதாக நேர்த்திக் கடன் வைத்தால் மாடு கிடைக்கும் என்று ஒருவர் கூறினார். நேர்த்தி வைக்கவே மாடுகள் அகப்பட்டன. தேங்காயும் கற்பூரமும் கொண்டு கோட்டகக் கேணியை நோக்கிச் செல்லும்போது தெருவில் ஒருவர் விசாரித்தார். நேர்த்திக் கடனை நிறைவேற்றப் போவதாகக் கூறவே பிள்ளையாருக்கு எங்கேயும் கற்பூரம் கொளுத்தலாம் என்று வழிப்போக்கன் கூறினான். அதன்படி அவ்விடத்திலேயே கற்பூரம் கொளுத்தித் தேங்காய் அடித்தார். திரும்பிப் பார்க்கும் போது வழிபோக்கரைக் காணவில்லை. பிள்ளையாரே வழிப்போக்கனாக வந்து காட்சி கொடுத்தார் எனக் கருதப்படுகின்றது.

தண்ணீரூற்று ஊற்றங்கரை வினாயகர் கோயில் வரலாற்றையும் பிள்ளைச் சதகம் என்னும் நூல் விரித்துக் கூறுகின்றது. 'நெடுங்கேணி வில்வையடிப்பிள்ளையார் பாமாலையில்' வில்வையடிப் பிள்ளையார் வரலாறு கூறப்படுகின்றது.

## சக்தி வழிபாடு

சப்த கன்னியர் வழிபாடும், கண்ணகை அம்மன் வழிபாடுமே மிகமிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஒட்டு சுட்டானுக்கும் புதுக்குடியிருப்புக்குமிடையேயுள்ள மன்ன கண்டல் என்னுமிடத்தில் சப்த கன்னியர் ஆலயமொன்றின் அழிபாடுகள் உண்டு. மிகவும் தொன்மைவாய்ந்த சப்த கன்னியர் ஆலயம் வட்டு வாகலில் உண்டு. முன்பிருந்த பழைய ஆலயத்தைத் திருத்திக் கட்டுவதற்காக அகழ்ந்த பொழுது கிடைத்த கட்டடப்பொருள்கள் இந்தியாவிலுள்ள வேதாரணியத்திற்கு அண்மையிலுள்ள திருக்கிளர் என்னுமிடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கருதப் படுகின்றது. சப்த கன்னியர் பற்றிய விபரம் சப்த கன்னியர் தோத்திரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

*மங்கை அபிராமி மகேஸ்வரி கௌமாரி*
*நங்கை நாராயணியாம் நாதனொடு— தங்கிமன்றுள்*
*வாதாடுங்காளி வராகி யிந்திராணி யிவர்*
*பாதாரவிந்தம் பணி.*

ஏட்டுப் பிரதியாகவுள்ள சப்தகன்னியர் தோத்திரம் பொங்கல் காலத்தில் பாராயணம் செய்யப்படுகின்றது. ஆனிமாதப் பௌர்ணமியை அடுத்துவரும் திருவோணத்திற்கு முன்பின்னாக வரும் திங்கட்கிழமை பொங்கல் நடைபெறும்.

பொங்கல் தினத்தன்று பூசாரியார் மஞ்சள் உடை உடுத்துதலையை மஞ்சள்துணியால் கட்டிப்பின்னுக்குத் தொங்கவிட்டு பொற்பிரம்பு சொருகி உருக்கொண்டு ஆடும் காட்சியை இன்றும் காணலாம். முள்ளியவளையிலுள்ள பூசாரியர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே பரம்பரை பரம்பரையாகப் பூசையையும் பொங்கலையும் நடத்தி வருகின்றனர்.

## வற்றாப்பளைக் கண்ணகி அம்மன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகப்பிரசித்தி பெற்ற ஆலயம் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்திற்கு ஈழத்தின் பல பாகங்களிலிருந்து இந்துக்களும், பௌத்தர்களும் வழிபாட்டிற்கு வருகின்றனர். இவ்வாலயத்தின் தோற்றம் பற்றிச் 'சிலம்புகூறல்' என்னும் ஏட்டுப் பிரதியிலுள்ள காப்பியமும் 'அம்மன் சிந்து' 'வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வரலாற்றுச் சிந்து' 'பனிச்சையாடிய சிந்து' என்பன விரிவாகக் குறிப்பிடுகின்றன.

நந்திக்கடற்கரை வெளியிலே சிறுவர்கள் மாடுமேய்த்துக் கொண்டு நின்றனர். அப்பொழுது நரை மூதாட்டி யொருத்தி தோன்றினாள். சிறுவர்கள் அவளை வரவேற்று உபசரித்தனர். மூதாட்டியின் பசியைப் போக்க பொங்கல் செய்தனர். அப்பொழுது பொழுது சாய்ந்த நேரமாகையால் விளக்கேற்றுமாறு மூதாட்டி கூறினாள். எண்ணெய் இல்லையென்று சிறுவர்கள் கூறினர். கடல் நீரை அள்ளி நெய்யாக இட்டு விளக்கேற்றுமாறு மூதாட்டி கூறினாள். அவர்கள் விளக்கேற்றி மூதாட்டியின் பசியை ஆற்றினர். தனது தலையைப் பார்க்குமாறு மூதாட்டி கூறவே தலையைப் பார்த்தனர். தலையைப் பார்த்த சிறுவர்கள் அதில் ஆயிரம் கண்கள் இருப்பதைக் கண்டு பயந்து அலறினர். மூதாட்டி மறைந்து விட்டாள். தனது பெயர் கண்ணகி என்றும், தொடர்ந்து வைகாசி மாத விசாகத்தை அண்மிய திங்கட்கிழமை தான் வருவதாகவும் அசரீரி கூறியது. கண்ணகி அம்மன் காட்சி கொடுத்து மறைந்த பின் இச்செய்தியை ஊர்ப் பெரியவர்களிடம் கூறினர். ஊரவர்கள் ஒன்று சேர்ந்து நந்திக் கடற்கரையில் பொங்கல் செய்து வந்தனர். கண்ணகி அம்மன் வந்து அமர்ந்திருந்த வேப்பம் படவாள் தளைத்து மரமாக வளரத் தொடங்கியது.

காலப் போக்கில் அம்மன் பொங்கலுடன் வற்றாப்பளைக்கு அண்மையிலுள்ள கிராமங்கள் தொடர்புபடுத்தப்பட்டன. வையாபாடல், கதிரையப்பர்பள்ளு என்னும் நூல்களில் சிறப்பித்துக் கூறப்படும் முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்திற்கும் வற்றாப்பளைக் கண்ணகி அம்மனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அம்மன் காட்சி கொடுத்த இடத்தில் பொங்கலிட்டு வந்தவர்கள் அப்பொங்கலுக்கு முன்னோடியான வழிபாட்டு நிகழ்ச்சிகளை முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்தில் தொடங்கி வைக்கின்றனர். பொங்கலுக்கு முதல் மடைகளும் ஞாயிற்றுக்கிழமைப் பொங்கலும் காட்டுவிநாயகர் ஆலயத்தில் இடம்பெறுகின்றன. முதலிலே வேளாளரும் பிற தொழில்புரியும் சாதியினரும் இணைந்து நடத்தி வந்த பொங்கலில் பிராமணர்களும் பங்குகொள்ளத் தொடங்கினர்.

ஆகம முறைப்படி கோயில் அமைக்கப்பட்டு தென்னன் மரபடியிலிருந்து வருவிக்கப்பட்ட அந்தணர்கள் திங்கட்கிழமைகளில் பூசை செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

இன்னும் ஏட்டுப்பிரதியாக இருக்கும் சிலம்பு கூறல் காவியம் சிலப்பதிகாரக் கதையிலிருந்து சற்று வேறுபட்ட கதையை மிகவிரிவாக எடுத்துக்கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் மானிடப் பெண் தெய்வமான கதை கூறப்பட சிலம்பு கூறலில் உமாதேவியாரே பாண்டியன் மகளாகப் பிறப்பதாக உரைக்கப்படுகின்றது. பாண்டியன் நெடுஞ்செழியன் மகப்பேறுவேண்டித் தவஞ் செய்தான். சிவபெருமான் உமாதேவியார் சகிதம் காட்சி கொடுத்தார். சிவபெருமான் பாண்டியனுக்குப் பெண்மகளொன்று பிறக்குமென வரமளித்தார். அப்பொழுது முன்செய்வினை சூழ பாண்டியன் உமாதேவியாரது தனபாரத்தைக் கண்டு சிற்றாசைகொண்டு சிரித்தான். தேவியின் கண்ணிலிருந்து தீச்சுவாலை தோன்றியது. அத்தீச்சுவாலை இறைவனது அருளால் அடங்கி இரண்டு தீப்பொறிகளாகி அருகே நின்ற மாமரத்தின்கண் சென்று தங்கி மலர்களாயின. உமையம்மையார் பாண்டியனைப் பார்த்து

*"அறிதிரண்ட முலைமிசைநீ ஆசைகொண்டு சிரித்ததனால்*
*குறிதிரண்ட கூடலுடன் கொன்றிடுவேன் உன்னையும் நான்"*

என வஞ்சினங் கூறி "உனக்குப் பிறக்கும் பிள்ளையினால் நீ ஆசை கொண்ட எனது முலையை உனது முன்னிலையில் திருகி எறிந்து மதுரையை எரிப்பேன்" என்று கூறி மறைந்தார். இதனால் மனக்கலக்கம் அடைந்த பாண்டியன் சிவபெருமானைத் தினந்தோறும் வழிபட்டு வந்தான்.

கோவிலருகிலிருந்த மாமரத்திலிருந்து நாள்தோறும் மாங்கனியொன்று விழுந்தது. அதனை இறைவன் பூசைக்கு உபயோகித்தான். ஒருநாள் இரண்டு மாங்கனிகள் விழுந்தன. நன்கு கனிந்ததைப் பூசைக்கு உபயோகித்து மற்றதை மறுநாள் பூசைக்கெனக் கருதிப் பொற்குடத்தில் இட்டான். அடுத்த நாள் பார்த்த பொழுது அழகானபெண் குழந்தையொன்று காணப்பட்டது. அக்குழந்தையைக் கோப்பெருந்தேவியின் கையிற் கொடுக்க தேவியும் மனமகிழ்ந்தார். சோதிடரை வரவழைத்து பலாபலன்களைப் பார்ப்பித்தான். அவர்கள் இக்குழந்தையால் மதுரைக்கும் மன்னனுக்கும் அழிவு நேரிடும் என்று கூறினர்.

பாண்டியன் அக்குழந்தையைப் பேழை யொன்றில் இட்டு அலைகடலில் தள்ளிவிட்டான். இப்பேழையைக் காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த மாநாகர் கண்டெடுத்து அதனுள் இருந்த குழந்தையை வளர்த்தார். குழந்தை வளர்ந்து மணப்பருவம் அடைந்ததும் மாசாத்துவான் மகன் கோவலனுக்குத் திருமணம் செய்து வைத்தான். கோவலன் கண்ணகியை அணைத்துக்கொள்ள நெருங்கவே அக்கினிச் சுவாலையொன்று கண்ணகியின் கக்கத்திலிருந்து எழுந்தது. அதன் காரணத்தைக் கோவலன் வினாவினான். அப்பொழுது கண்ணகி நான் ஒரு தெய்வீகம் நிறைந்த அவதாரப் பெண்ணாவேன். என்னை நீர் அணுகுவீராயின் அக்கினியால் எரிந்து நீறாகிவிடுவீர். நான் உலக ஆசாரப்படி தங்கள் மனைவியாக மங்களநாண் பூட்டப் பெற்றதற்கமையத் தங்களுக்குரிய தொண்டுகள் புரிந்து பார்ப்பவர்கள் கொண்டாடும் பத்தினிபோல் வாழ்ந்து வருவேன்' என்று கூறியருளினார். காப்பியம் முழுவதும் கண்ணகியைத் தெய்வத்தின் அவதாரமாகவே புலவர் வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி அம்மனின் அற்புதங்கள் பற்றிப் பல கதைகள் உண்டு. ஆலயத்தில் களவெடுத்துச் சென்றவர்களுக்கு உடனே கண்தெரியாமல் போய்விட்டது. உடனே களவெடுத்த பொருட்களை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். கண்ணகித் தெய்வத்தைப் பறங்கித்துரை யொருவன் ஏளனம் செய்தான். கோயிலுக்குப் பக்கத்திலே நின்ற பனிச்சை மரம் ஆடி அவன் மீது காய்களை எறியத் தொடங்கியது.

பத்தஞானி என்பவர் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த பத்ததியில் கூறியபடியே பொங்கற் கிரியைகள் எல்லாம் நடைபெறும். வற்றாப்பளை பொங்கலை அடுத்த வெள்ளிக்கிழமை முள்ளியவளையிலுள்ள நாவற்காட்டில் பத்தஞானியை அடக்கம் செய்த இடத்தில் பத்தஞானி பூஜை நடைபெறும்

வற்றாப்பளைப் பொங்கலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் 'பாக்குத் தெண்டுதல் என்னும் வைபவம் இடம்பெறும். இதுவே பொங்கலுக்குரிய ஆயத்தக் கிரியையாகும். அடுத்த திங்கட்கிழமை சிலாபத்தைக் கடலில் நீர் எடுத்துக்கொண்டு முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திற்குச் செல்வர். இவ்வைபவம் 'தீர்த்த மெடுத்தல்' எனப்படும். கடல் நீரையே நெய்யாக விட்டு எட்டு நாளும் விளக்கெரிக்கப்படும். பாக்குத் தெண்டிய நாள் தொடக்கம் பொங்கல் நடைபெறும் நாள்வரையும் வற்றாப்பளைக்கு அண்மையிலுள்ள கிராமத்தவர் அமைதியான வாழ்க்கையைக் கடைப்பிடிப்பர். இக்காலப் பகுதியில் மேளமடித்தல் அரிசி, தூள் என்பன இடித்தல் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் நடத்துதல் தவிர்க்கப்படும்.

## தான்தோன்றி ஈஸ்வரர்

ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயமே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரேயொரு சிவன் கோயிலாகும். இதன் தோற்றம் பற்றி 'தான்றி ஈஸ்வரன் பாமாலை என்னும் நூல் விரித்துக் கூறுகின்றது. மூன்று சித்தர்கள் ஒட்டுசுட்டானுக்கு வந்தார்கள். ஒருவர் ஒட்டுசுட்டானிலும், இன்னொருவர் சம்மாம் குளத்திலும் மூன்றாமவர் வாவெட்டி மலையிலும் சமாதி அடைந்தார்கள்.

யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த தீர புத்திரர் என்பவர் தம் சுற்றத்தவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக ஊரைவிட்டு இங்குவந்து குடியேறினார். அவர் காடு வெட்டித் திருத்தி குரக்கன் பயிர் செய்தார். குரக்கனை வெட்டிய பின் காய்ந்த ஒட்டுக்களை எரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார் ஒரு இடத்தில் ஒட்டு எரியவில்லை. மண்வெட்டியால் வெட்டி ஒட்டை அகற்ற முனைந்தார். அப்பொழுது இரத்தம் தோன்றியது. அவ்விடத்தைக் கூர்ந்து நோக்கிய போது ஓர் லிங்கம் காணப்பட்டது. இதனை வன்னி மன்னனுக்கு அறிவித்தார். அவ்விடத்திலே சிறிய ஆலயம் அமைத்து வழிபாடு நடைபெறத் தொடங்கியது. அவ்விடத்திற்கு ஒட்டு சுட்டான் என்றும் பெருமானுக்கு தான் தோன்றி ஈஸ்வரர் என்றும் பெயர் வழங்கியது. வேகாவனேஸ்வரர் என்றும் அழைக்கும் வழக்கமும் உண்டு.

ஒரு முறை வன்னி மன்னன் யானைகள் பிடித்துக் தரும்படி பணிக்கனுக்குக் கட்டளையிட்டான். பல நாள் தேடியும் யானைகள் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட தினத்திற்குள் யானைகள் பிடித்துத் தரப்படாவிட்டால் பணிக்கனைச் சிரச்சேதம் செய்வதாக வன்னி மன்னன் கூறினான்.

மன்னனின் தண்டனையிலிருந்து தன்னைத் தப்புவிக்குமாறு தான்தோன்றிஈஸ்வரனை வேண்டினான். யானைகள் கிடைத்தால் கோயிலைப் பெருப்பித்துக் கட்டுவதாக நேர்த்திக்கடன் வைத்தான். இறைவன் கனவில் தோன்றி இத்திமடுவிற்கு அண்மையிலுள்ள கிளிமடுக் காட்டினுள் பூரணை தினத்தில் சென்றால் யானைகளைக் காண்பாய் எனத்திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி யானைகளைப் பிடித்து வன்னி மன்னனுக்கு கொடுத்தான். தன் நேர்த்திக் கடனை நிறைவேற்றக் கோயிலைப் பெருப்பித்துக்கட்டினான். ஒட்டு சுட்டானில் பகிரங்க வேலைப்பகுதி ஓவசியர் சண்டிலிப்பாய் சின்னத்துரை என்பவர். அடுத்த கட்டத் திருப்பணியைத் தொடர்ந்தார். ஆலயத்தின் முன் அழகான தோற்றமுடைய திருக்குளத்தைக் கட்டுவித்தார். ஒருமுறை சீமெந்துப் பீப்பாக்களை கோயிலுக்கு வெளியேயுள்ள அரசமரத்தின் கீழ் பறிப்பித்து விட்டார். அன்றிரவு பெருமழை பெய்தது. சீமெந்து முழுவதும் பழுதடைந்து விடுமே என்று கவலை கொண்டு போய்ப் பார்த்தபொழுது சீமெந்துப் பீப்பாக்கள் ஆலய மண்டபத்தினுள் உருட்டி விடப்பட்டிருப்பதைக் கண்டார்.

(நன்றி : *ஆத்மஜோதி உலக இந்து மாநாட்டு மலர். 1982)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லை நகரில் வளர்ந்த சமயம்

க.சி. குலரத்தினம்- மில்க்வைற் செய்தி ஆசிரியர்

## நல்லூரின் பூர்வகாலப் புகழ்

இதிகாச காலத்து நல்லூர் எவ்வாறு இருந்தது என்பதை நன்றாக அறிவதற்குச் சான்றுகள் போதியனவாக இல்லை. வரலாற்றுக் காலத்தில் நல்லூர் புகழ் பெற்றமை இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகும் என்பர். பொன்பற்றியூர் வேளாளன் பாண்டி மழவன் என்பான் முயற்சியால் தமிழ் நாட்டுச் சிங்கையாரியன் என்னும் அரசகுமாரன் நல்லூரில் அரியணை ஏறிய பின்னரே நல்லூர் பலவழிகளிலும் நிறைவு கண்டது என்பர். சிங்கையாரியனின் மந்திரியாயிருந்த புவனேகபாகு என்பானின் அறிவாற்றலைப் புகழ்பவர்கள், அவனே நல்லூரை முன்னணிக்குக் கொண்டுவந்தானென்பர். இதற்கு ஆதாரமாகப் பழைய பாடலொன்றையும் குறிப்பிடுவர்.

*"இலகிய சகாப்த மெண்ணூற் றெழுப தாமாண்டினெல்லை*
*யலர் பொலி மார்பனாம் புவனேகவாகு*
*நலமிகு யாழ்ப்பாணத்தினகரி கட்டுவித்து நல்லைக்*
*குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே".*

புவனேகவாகு என்னும் மந்திரியார் சேக்கிழாரைப் போல ஒரு சைவப்பெரியார். அவர்காலம் இப்பாடலிற் குறித்தவண்ணம் கி.பி. 950ம் ஆண்டளவிற்றாயின் அவர் சேக்கிழாருக்கு முற்பட்டவராகும். அவரே நல்லூர்க் கந்தசுவாமியார் கோயிலைக் கட்டுவித்தார் என்பது பாடலிற் குறிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பொன்னமராவதியெனப் பொலிந்து விளங்குவதற்கு ஏதுவாக எங்கும் மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், அழகிய சோலைகள், கோயில்கள் திருக்குளங்கள், மடங்கள் முதலியன பொலிவு பெற்றன. தேரோடும் வீதிகள், ஆனைப் பந்திகள், அஸ்வ பந்திகள், அத்தியடிகள், பிராமணர் இருக்கைகள், செட்டிமார் தெருக்கள், புலவர்மார் இல்லங்கள், பஞ்சகம்மாளர் இருக்கைகள், நெசவாளர் இருக்கைகள், தூபமிடுவோர் இருக்கைகள், மட்பாத்திரஞ் செய்வோர் வீடுகள், துணிவெழுப்போர் இருக்கைகள், அவர்களுக்குக் குளங்கள் முதலியன வரிசைவரிசையாக அமைக்கப்பெற்றன. மருத்துவர், சோதிடர், மந்திரங்கள் ஆகமங்கள் அறிந்தோர் மனைகள் சித்திரந் தீட்டுவோர், புலவர்கள், நூல்செய்வோர் இல்லங்கள் யாவும் வரிசை நோக்கி அமைக்கப்பெற்றன.

நல்லூரில் நடுநாயகமாய் அமைந்த கந்தசுவாமி கோயிலைச் சூழ நாற்றிசைகளிலும் காவற்கோட்டங்களாக நகரப் பெருவீதிகளில் கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலும், தெற்கில் கைலாசநாதர் கோயிலும், மேற்கில் வீரமாகாளியம்மன் கோயிலும், வடக்கில் சட்டநாதர் கோயிலும் அமைந்தன. இத்திருக்கோயில்களைச் சூழ இன்னும் பல பரிவார தெய்வங்களுக்கும் கோயில்கள் எழுந்தன.

யாழ்ப்பாணத்து நாகரிகம் குளங்கரை நாகரிகம் என்பது கூறாமலே அமையுமாறு ஊர்கள் தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட குளங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். குளம்தொட்டு வளம் பெருக்கிய நாகரிகம் தமிழ்நாகரிகம் என்பதற்கு யாழ்ப்பாணத்தையும் அவர்கள் செல்வாக்குப் பரந்த வன்னிநாட்டையும் விட வேறு இடங்கள் மிகக்குறைவானவை என்றே கூறுதல் அமையும்.

நல்லூரிலேயே, யமுனாஏரி, நாயன்மார்கட்டு பிராமணக்குளம், பண்டாரக்குளம், அம்மைச்சிகுளம், ஆரியகுளம், தாமரைக் குளம், தேவீர்க்குளம், பூதராயர்குளம், பரவைக்குளம் முதலிய பல குளங்கள் உள்ளன. நல்லூரையடுத்த திருநெல்வேலி, இருபாலை, கைதடி, செம்மணி, கந்தர்மடம் முதலிய இடங்களில் மேலும் பல குளங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.

கனகசூரியனுக்குபின் அவன் மைந்தர் காலத்தில் நல்லூர் மேலும் பல சிறப்புக்கள் பெற்றிருந்தன. நல்லூரிலமைந்த தமிழ்ச் சங்கமும் அறுபத்து மூன்று நாயன்மார் கட்டும் குளமும் மடமும் புலவர்கள் இருக்கையும் முன்னர் பாண்டியன் சைவமும் தமிழும் வளர்த்த பாங்கையொத்திருந்தன. அரச குடும்பத்தார் அனைவரும் செந்தமிழன்பும் சிவநேயமும் பூண்டிருந்தனர். பண்ணில் தோயப் பொருள் பொதிந்த பாடல்களை யாத்த புலவர்களுக்கு எண்ணி எண்ணிப் பொன் முடிப்புக்களை ஈந்தனர். அறுபத்து மூவர்கட்டு என்னும் மடத்தோடு அடியார்க்கு நல்லார் திருக்குளமும் புலவர்களுக்கு உறைவிட வசதியாய் இருந்தன. அரச குடும்பத்தவருள் ஒருவராய அரசகேசரி என்பார் காளிதாசரின் இருகுவம்சம் என்னும் காவியத்தைத் தமிழில் பெயர்த்தெழுதித் திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயிலில் அரங்கேற்றினார். யாழ்ப்பாணத்து அரசர் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், இராமேஸ்வரம் முதலிய ஈஸ்வரங்களை அதிகாரிகளை நியமித்துப் பரிபாலித்தனர். அரண்மனைப் புரோகிதர்களாகக் கங்காதரக்குருக்களின் பரம்பரையினர் இருந்தனர் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராண கலாசாரம்

காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணத்தை அரங்கேற்றிய காலத்தை அடுத்து வீரராகவன் என்னும் சைவப்பெரியார் கந்தபுராணப் பிரதி ஒன்று கொண்டு யாழ்ப்பாணம் வந்தார் என்பர். அவர் வருகையோடு யாழ்ப்பாணமெங்கும் கந்தபுராணம் படித்துப் பயன்சொல்லும் பாரம்பரியமும் உண்டாயிற்று. யாழ்ப்பாணத்துக் கலாசாரம் மூலம் கந்தபுராணமாயிற்று. நல்லூரின் மேற்கெல்லை அரசவெளி எனப் பெயர் பெற்றிருந்தது. அங்கே அமைந்த மடம் ஒன்றில் கந்தபுராணம் படிக்கப் பெற்றதால் அம்மடம், கந்தபுராணமடம் எனப் பெயர்பெற்றதோடு அந்த இடம் கந்தமடம் எனப்பெயர் பெறுவதாயிற்று. கந்தமடவூரில் கந்தபுராண மடத்தை விட செல்லப்பிள்ளையார் மடம், சின்ன மடம் முதலான மடங்களும் கேணிகளும் நல்லூர்ப்பெருமானை நாடிவரும் அயலூர் அன்பர்களின் வசதிகளுக்காக அக்காலத்தில் கட்டப்பெற்றன.

சைவப்பிரகாச வித்தியாசாலை அம்மச்சி குளக்கரையிலிருந்தது. இன்னும் கடையிற் சுவாமியார் வழிவந்த சின்னச்சாமி அவர்களின் சமாதிப்பேறுள்ள குருவார அன்னசத்திரமும், சின்மயானந்த சுவாமிகள் வழிவந்த சார்சன் சுவாமிகள் என வழங்கும் சின்னத்தம்பி சுவாமிகள் சீடர் கனகரத்தின சுவாமிகள் தாபித்த வேதாந்த மடமும் கந்த மடவூரில் பணிபுரிந்து வந்தன. நாவலரவர் கண்டனங்களுக்காளாய கந்தமடப்பிரபு சைவப்பணியும் கல்விப்பணியும் செய்துவந்த பெரியவர். ஆனால் சாராயக் குத்தகை எடுத்தமையும் கூத்தாடிகளை வரவழைத்தமையையும் நாவலர் ஐயா விரும்பவில்லை.

## இரகுநாதமாப்பாண முதலியார் புதிய கோயில் அமைத்தல்

தமிழரசர் ஆட்சியும் நல்லூரின் பெருமையும் 1621 ஆம் ஆண்டின் பின் ஒளி குன்றக் காரணமாயிருந்தவர் பறங்கியர் என வழங்கும் போர்த்துக்கேயராவர். அவர்களுக்குப் பின் வந்த ஒல்லாந்தர் காலத்தில் நீறு பூத்த நெருப்புப் போல இருந்த குடும்பங்களுள் ஒன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தம் முன்னோராவர். அவர்களுள் ஒருவராய ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகளே ஒல்லாந்த அதிபதிக்குப் பசுக்கன்று கொடுப்பதிலும் பார்க்கத் தேசாந்தரம் போகலாம் எனக்கருதி பாரதநாட்டுக்குச் சென்றவர். அங்குப் பெரும் பணி புரிந்தவர்.

ஒல்லாந்தர் காலத்திற் பிற்பகுதியில் ஓரளவு சைவ சமயம் ஒளிகாலத் தொடங்கியது. அக்காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் அலுவல் பார்த்த இரகுநாதமாப்பாண முதலியார் என்பார் 1734 ம் ஆண்டில் குருக்கள் வளவு என்னும் நிலப்பரப்பில் கந்தசுவாமியாருக்கு ஒரு வேற்கோட்டம் அமைத்தார். அது நாள்தோறும் வளர்ந்து உலகப் புகழ் பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாக வளர்ந்துள்ளது. இரகுநாத முதலியார் அவர்களின் வழித்தோன்றல்கள் இக்கோயிலை நன்கு பரிபாலித்து வருகின்றார்கள். இன்று தமிழ்நாட்டிற் காண முடியாத வகையில் உற்சவங்கள் காலந்தவறாமல் நடைபெறுகின்றன. இவற்றைக் கண்டு வள்ளி தேவயானை சமேத முருகப்பெருமானைப் பணிந்து போக நாள்தோறும் காலைமாலை பல்லாயிரவர் வந்து போகின்றனர். உற்சவங்கள் இல்லாத சாதாரண நாட்களிலும் நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் வழிபட்டுப் போகும் சிறப்பு வேறெங்குங் காண முடியாததாகும்.

## சைவம் வளர்த்த புலவர்கள்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் அலுவல்பார்த்த மற்றொருவர் வில்வராய முதலியார் என்பாராவர். அவர் மைந்தர் சின்னத்தம்பி பெரும்புலவராய் இருந்ததோடு இளமையிலேயே சுயம்பாடத் தொடங்கியவர். அக்காலத்தில் திருவண்ணாமலை ஆதீனத்தம்பிரான் சுவாமிகளுள் ஒருவரான கனகசபாபதி யோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் என்பார் யாழ்ப்பாணத்திற்கு எழுந்தருளி வண்ணை வைத்திலிங்கம் செட்டியாரைக் கொண்டு வண்ணை வைத்தீஸ்வரக் கோயிலைக் கட்டுவித்தவர். அவர் இடையிடை நல்லூர் வில்வராய முதலியார் இல்லத்தில் கதாகாலட்சேபஞ் செய்வது வழக்கம் என்பர். அக்காலத்தில் நல்லூர் புகழ்பெற்றிருந்தமையைக் குழந்தைக் கவிராய சின்னத்தம்பிப்புலவர் வீசுபுகழ் நல்லூர் எனப்பாடியுள்ளார்.

அவர் கரவெட்டி வேலாயுத முதலியார் மீது கரவைவேலன் கோவை பாடி நல்லூரில் பண்டாரக் குளத்தடி வயலைப் பரிசாகப் பெற்றவர் என்பர். அவர் திருமறைக்காடு என்னும் வேதாரணியத்து இறைவன் மீது மறைசையந்தாதி பாடி அரங்கேற்றித் தமிழ்நாட்டிற் பெரும்புகழ் பெற்றவர். அவரே பறாளை விநாயகப்பள்ளு முதலிய பல பிரபந்தங்களையும் பாடினார் என்பர்.

சின்னத்தம்பிப் புலவர் செய்த நூல்கள் யாவும் இலக்கிய நயஞ் சிறந்துள்ள அளவில் சைவசமயத்திறனும் பொருந்தியுள்ளன. பழைய சைவ சம்பிரதாயங்கள், ஒழுங்குகள் சம்ஸ்காரங்கள் என்பன அவர் பாடல்களில் பல விடங்களில் பக்தி பூர்வமாகக் கூறப்பெற்றுள்ளன.

ஆறுமுகநாவலர் அவர்களின் தாயார் சிவகாமி, தந்தையார் வேதவனம் என்பவரின் முன்னோரே முன் சொன்ன ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளாவர். நாவலர் அவர்களின் தந்தையார் கந்தர் என்னும் இலங்கையரின் முன்னோர் மூத்ததம்பி முதலியார், சோதிநாதர் இலங்கை காவலர், பரமானந்தர் என்பவராவர். நாவலருடன் முன் பிறந்த சகோதரர் தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு என்பவராவர். இவர்களைவிட நாவலரவர்களுக்குச் சகோதரிமார் ஆறுபேரிந்தனர்.

நாவலரவர்களின் குடும்பத்தினர் நல்லூர் முருகனையே தங்கள் குலதெய்வமாகக் கொண்டவர்கள். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருமே புலமை வாய்ந்தவர்களாவர். அவர்கள் முருகன் மீது பல பக்திப்பிரபந்தங்களும், தனிப்பாடல்களும் பாடியுள்ளார்கள். நல்லூரை மையமாகக் கொண்டு சைவப் புனருத்தாரணஞ் செய்வதும் மறுமலர்ச்சி செய்வதுமே நாவலரவர்களின் வேணவாவாகும். அது வீணவாவாப்போதலாகாது எனக்கருதியே அவர் நைட்டிகப் பிரமசாரியாயிருந்ததும் தமது ஆசிரியத் தொழிலைப் பரித்தியாகஞ் செய்ததுமாகும்.

நல்லூரினணித்தாக வாழ்ந்து நாள்தோறும் வழிபடுதல் வேண்டும் எனக் கருதிச் சின்னத்தம்பிப் புலவர், சேனாதிராச முதலியார், சரவணமுத்துப் புலவர், சிவசம்புப் புலவர் சபாபதி நாவலர், குமாரசுவாமி முதலியார், ஐயாத்துரை ஐயர், பரமானந்தப் புலவர், தில்லைநாதப்புலவர், சோமசுந்தரப்புலவர் முதலாக ஐம்பதுக்கதிகமானோர் பல்வேறு வகைப்பட்ட பக்திப் பிரபந்தங்கள் பாடியுள்ளார்கள்.

நல்லூரில் நல்லமுறையில் சைவம் வளர வேண்டும், சைவச்சூழல் உண்டாதல் வேண்டும், சைவச்சிறார்கள் சைவப் பெரியார்களாய் உருவாதல் வேண்டும் எனக்கருதிய பெரியவர்கள் சைவப் பெண்களை நினைவிற் கொண்டு மங்கையர்கரசி வித்தியாசாலை, பார்வதி வித்தியாசாலை, மகேஸ்வரி வித்தியாசாலை முதலிய சைவப் பாடசாலைகளை நிறுவினார்கள்.

## பக்திப் பிரபந்தங்கள், பாடல்கள்

நல்லூர் முருகன் மீது புலவர்கள் பக்திநெறியாளர் பாடிய பிரபந்தங்கள் பக்திப் பாடல்கள் மிகப் பல. கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் நல்லைக்கலிவெண்பா பாடியுள்ளார். அவர் மாணாக்கரும் ஆறுமுகநாவலரின் ஆசிரியருமான இருபாலைச் சேனாதிராய முதலியார் நல்லூரிலே அலுவலகம் அமைத்து நல்லூர்த் திருக்கோயிலை நாளும் வழிபட்டு நல்லைவெண்பா நல்லையந்தாதி, நல்லைக்குறவஞ்சி முதலிய பிரபந்தங்கள் பாடியுள்ளார். " திருவாரும் நல்லைநகர், கொடிவளரு மணிமாடக்கோபுரஞ்சூழ் நல்லூர், காங்கேயன் காதலித்து வந்த நல்லூர், நன்னூல் கலை விளங்கு நல்லூர் என்றெல்லாம் போற்றியுள்ளார்.

சேனாதிராய முதலியாருக்கு முன் வாழ்ந்த சந்திசேகரபண்டிதர் என்பர் 1785ம் ஆண்டில் ஒல்லாந்து காலத்திலே நல்லூர் முருகன் மீது கிள்ளைவிடு தூது பாடியுள்ளார். " விந்தைசெறி நல்லூர் விரும்பியுறு கந்தன்பாற் சுந்தரஞ்சேர் கிள்ளைவிடுதூது" என்று தமது காப்புச் செய்யுளில் குறிப்பிடுகின்றார்.

ஆறுமுகநாவலரின் தந்தையார் கந்தர் நல்லை நகர்க்குறவஞ்சி பாடியுள்ளார். நாவலரின் தமையனார் பரமானந்தர் நல்லைக் கந்தரகவல், நல்லைக்கந்தன் கீர்த்தனம் முதலிய பிரபந்தங்கள் பாடியுள்ளார். ஆறுமுகநாவலர் தமது இளமைக்கால முதலாக வழிபட்டுவந்த நல்லூர்ப் பெருமானை வாழ்த்தி பலவிருத்தப்பாக்கள் பாடியுள்ளார். "தருண மிதுவெனவமரர் பணி நல்லை யமர்கந்தர் தமதடியர் நிதமும் வாழி சகசநிரு மலபரமசுகித்த பரிபூரண சடாட்சரம் வாழி வாழி என வருவது ஒரு பாடல் ஈற்றடி.

நாவலவரர்களின் மாணாக்கர்களுள் ஒருவராய கொக்குவில் சபாரத்தின முதலியார் முருகப்பெருமான் மீது பக்திகொண்டவர் என்பதோடு, குகதாசர் எனத் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டவர். தமது உபாசனா மூர்த்தியாய குகப்பெருமான் அடியிணையை முடியணியாகக் கொண்டு வாழ்வாம் என்று காப்புப் பாடல் பாடிய அவர் நல்லை நான் மணிமாலை என்னும் பிரபந்தமும் பாடியுள்ளார். மறுமலர்ச்சிக்காலம் முதலாக இன்று வரை நூற்றுக்கு மேற்பட்ட முருகனடியார்கள் நல்லூரையும் முருகனையும் போற்றிப் பல்வேறு பிரபந்தங்கள் பாடிச் சைவம் வளர்த்துள்ளார்கள். அவர்கள் முருகன் மீதும் வள்ளிதெய்வானை மீதும், வேல்மீதும், மயில்மீதும், நல்லூர் மீதும் பாடிய பாடல்கள் அதிகம். அவை கிளிக்கண்ணி, காவடிப்பாட்டு, சிந்து முதலிய துறைகளிலும் அமைந்துள்ளன.

## நல்லூர் இருதயஸ்தானம்

நல்லூர் யாழ்ப்பாண அரசின் தலை நகரமாயிருந்த காலம் போய் இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சைவசமயத்தின் இருதய ஸ்தானமாய் இலங்கையருக்கு இன்ப சுகமளிக்கின்றது. உள்ளூரவர், அயலூரவர், இலங்கையர் என்ற விரிவில் வியாபக முற்று அயல் நாட்டவர் வெளி நாட்டவர் உலக உல்லாசப் பிரயாணிகள் என எல்லோரும் நல்லூரைக்கண்டு தலை தாழ்த்திப் போவதற்குக் காரணமான காந்த சக்தி இங்கே வேலை செய்கிறது. பாரம்பரியமாய் அறங்காவல் செய்து வருகின்ற மாப்பாணர் குடும்பத்தாரை எத்தனை முறை பாராட்டினாலும் தகும். அவர்கள் கோயில் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாய் இருப்பவர்கள்.

## சைவம் வளர்த்த மடங்கள்

முற்காலத்தில் அயலூரவர் கால்நடையாகவும், மாட்டுவண்டி மூலமும் நல்லூருக்கு வந்த காலத்தில் அவர்கள் திருக்கோயிலின் சூழலில் தங்கி உண்டு உறங்கி வணங்கிப்போவதற்கு வசதி வாய்ப்புச் செய்யும் மடங்கள் வெளிப்பிரகாரங்களில் ஆங்காங்கே அமைந்திருந்தன. கிழக்கு வீதியில் அறுபத்து மூவர் குருபூசை மடம், சடையம்மா மடம் என்னும் மடங்களின் உள்ளன. முருக பக்தியில் முதிர்ந்து விளங்கிய சடையம்மா கீரிமலையிலும், கதிர்காமத்திலும் மடங்கள் கட்டித் தொண்டு புரிந்தவர். அறுபத்து மூவர் மடத்தில் முன்னர் வாழ்ந்த கார்த்திகேசுச்சுவாமி என்பார் வேலணையைச் சேர்ந்தவர் என்பர். இவர் இளமையிலே நல்லூரையடைந்து ஆசார சீலராய் மூவகைத்தீட்சைகளையும் முறையாகப் பெற்று ஆத்ம ஞானப்படியில் முன்னேறியவர். நல்லூரில் தினமும் சிவநாமஞ் சொல்லிவந்த இவர் பழுத்த சிவஞானியாய்ச் சீவன் முத்தராய் வாழ்ந்து சமாதி கூடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு வீதியில் பிராமணர்களின் மனைகளிடையே வாழ்ந்த ஜானகி அம்மாள் என்பார் தமது வளவை 1872ம் ஆண்டளவில் ஆறுமுகநாவலர் அவர்களுக்கு விலைக்கு விற்றபோது அதிலே மடம் அமைத்துக் கந்தபுராணம் படித்து வருதல் வேண்டும் என விருப்பந்தெரிவித்திருந்தார். அம்மையாரின் விருப்பம் ஏறக்குறைய நூறாண்டுகளின்பின் 1969ம் ஆண்டு முதலாக அங்கே நாவலர் மண்டபம் உருவாகி நடைபெற்று வருகின்றது.

மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோயிலருகில் மங்கையர்கரசி வித்தியாலயமும் பெரிய மடமும் மானிப்பாயைச் சேர்ந்த மதியாபரண முதலியார் மைந்தர் மூத்த தம்பி என்னும் சிறாப்பர் அவர்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இப்பெரியார் நல்லூர்த் தீர்த்தக்கேணியை நல்முறையில் திருத்திக் கட்டுவித்தார் என்றும் அறியக்கிடக்கின்றது.

வடக்கு வீதியில் சின்னர் மடம் எனப் பெயர் பெற்று நிலவிய மடத்தில் இன்று கோயிற் குருக்கள்மார் சிலர் வாழ்ந்து வருகின்றனர். நல்லூரிலும் அதனை மருவிய அயலூர்களிலும் வாழ்ந்த பெரியவர்கள் அக்காலத்தில் மடங்களில் புராணபடலங்கள், சைவப்பிரசங்கங்கள் கேட்டு உய்தியடைந்து, தங்கள் பெருநிலப்பரப்பின் ஒருபகுதியைத் திருக்கோயில்களுக்குத் தருமசாதனஞ் செய்தார்கள். தாமும் சில இடங்களில் மடங்கள் அமைத்துப் பரிபாலித்தார்கள்.

கந்தமடத்தில் வாழ்ந்த தம்பையா உபாத்தியார் என்னும் சாமிநாதபண்டிதர் ஆறுமுகநாவலரவர்களின் மருகருமான வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்று விற்பத்திமானகி, சைவாலயங்களில் சைவப் பிரசங்கங்கள் செய்தும், திருமுறைகளையும் சிவஞானபோதத்தையும் அச்சிட்டுப் பரப்பியும் பெருந்தொண்டு செய்தார்.

## சித்தர் பரம்பரை செய்த பணி

இலங்கையைச் சிவ பூமியென்று திருமூலர் பாடியுள்ளார். இலங்கையை ஆண்ட இராவணன் மேலது நீறு என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியுள்ளார்.

இராவணனின் தேவி மண்டோதரிக்குச் சிவபிரானருள் செய்த திறத்தை மாணிக்கவாசக சுவாமிகள் போற்றியுள்ளார். சிவ பூமியாய சீரிலங்கா புரியின் சிறப்பும் மேன்மையும் மத்திய காலத்தில் போர்த்துக்கேயர் வருகையால் மறைக்கப்பட்டன. கிரகண காலம் போல ஐரோப்பியர் ஆக்கிரமிப்பு நீங்கும் வேளையில் மகத்தான மறுமலர்ச்சி உண்டாயிற்று.

மறுமலர்ச்சிப் பாதையில் புனராவர்த்தம் புதுப்பொலிவோடு உதயமாவதற்கு மூலபண்டாரம் வழங்கியவர்கள் முப்பெருஞ் சித்தர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த இவர்கள் மும்மூர்த்திகள் போல் வடதேயத்திலிருந்து தெற்கு நோக்கித் தட்சிணாமூர்த்தத்தில் வந்தார்கள். இவர்கள் முத்தியானந்தர், சின்மயானந்தர், நிரஞ்சனானந்தர் என்பவர்களாவர். இவர்கள் இலங்கையின் மூலை முடுக்கெங்குஞ் சென்று மூல பண்டாரம் வழங்கிச் சித்தமலம் அறுவித்துச் சிவநெறி காட்டி வந்த காலத்தில் ஈழத்துச் சித்தர் பரம்பரை எங்கும் உண்டாயின.

முத்தானந்தர் என்பவரே புகழ்பெற்ற கடையிற் சுவாமிகளாவர். இவர் தரிசனத்தால், திருநோக்கால் பரிசத்தால், ஏச்சினால், பேச்சினால், உபதேசத்தால், தீட்சையால் உய்யும் நெறிகண்டவர்கள் பலர். இவர் நடந்து சென்ற பாதையின் மண்ணை வாரித் திருநீறைப் பூசியவர் பலர்.

கடையிற் சுவாமிகள் கந்தர்மடத்தில் நடமாடிய காலத்தில் சாஜன்ற் சின்னத்தம்பி கந்தபுராண வீதியில் வாழ்ந்தவர். சின்னத்தம்பி அவர்கள் கடையிற் சுவாமிகளை பின்தொடர்ந்தபோது அவரை சின்மயானந்தா சுவாமிகளிடம் அனுப்பிவிட்டு நல்லூருக்குச் சென்றார். நல்லூர்த் தேரடிக்கு அணித்தாகச் செல்லப்பா என்றொருவர் ஞானமார்க்கத்தை அவாவி விசர்ப்போக்கில் ஒரு மூலையில் முடங்கிக்கிடந்தார். மூலையில் முடங்கிக் கிடந்த செல்லப்பரைக் கடையிற் சுவாமி ஏச்சினால் உபதேசித்து நோக்கினால் தீட்சை புரிந்து, மூலையைவிட்டு வெளியேறித் தேரடியில் இருக்குமாறு பணித்தார்.

*"மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்*
*சாலப் பெரியர் என்றுந் தீபற*
*தவத்தில் தலைவர் என்றுந்தீபற"*




(நன்றி: *ஆத்மஜோதி உலகமாநாட்டு சிறப்பு மலர் 1982*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர மயச் சூழலில் இந்து மத வழிபாடுகள்

பொன்.ராஜகோபால்
ஆசிரியர்
ஞாயிறு வீரகேசரி

தலைநகர் பல இனமத கலாசாரங்களைக் கொண்ட ஒரு சமூக அமைப்பாகும். பெரும் தொகையினராகப் பௌத்த மதத்தினர் வாழும் இப்பகுதியில் இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவையும் தங்களை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன.

இவற்றிலே இந்து மதமானது தன் தொன்மையை விதந்து, மிளிர்ந்து, கொண்டிருக்கிறது. இதற்கு கோயில்களும், சமய ஆர்வலர்களும் பக்கபலமாக உள்ளமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.

ஒரு பிரதேசத்தின் சமயநிலை, வழிபாட்டுத் தலங்களால் நிர்ணயிக்கப்படும், அதே வேளை, மக்களின் ஈடுபாட்டு விழுமியங்களால் முதன்மைப்படுவது இன்றியமையாததாகும். இத்தகைய ஒரு நிலையை பல்லினம் வாழும் தலைநகரில் இந்துமதம் சார்பாக காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தலைநகர் நாட்டின் ஒரு பிரதான பாகம். வேற்று நாட்டு மக்களுக்கு நாட்டின் கலாசார அம்சங்களை வெளிப்படுத்துவதில் சிறப்பிடம் பெறுவது தலைநகரமே. எனவே இத்தகைய இடத்தில் இந்து மதத்தின் மிளிர்வை ஆலயங்களே பறை சாற்றுகின்றன. அத்துடன் மக்கள் மனதில் சமய ஈடுபாட்டை ஏற்படுத்தி அதன்வழி ஒழுகப்பண்ணுவதும் இவ்வாலயங்களின் செயற்பாடேயாகும்.

இந்நிலையில் தலைநகரில் இருக்கும் ஆலயங்கள் பல அரசினதோ, நிறுவனங்களினதோ துணையின்றி சமய ஆர்வலரின் துணையுடன் பிரமிக்கத்தக்க அளவிற்கு கட்டி எழுப்பப்பட்டிருப்பதும், திருவிழாக்கள் செய்யப்படுவதும் தலைநகரின் இந்துமதச் சிறப்பிற்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன.

தலைநகரில் மிளிரும் ஆலயங்களில் சில ஆகம முறைப்படி பூஜை நடைபெறும் கோயில்களாக இருக்க, சில வழிவழி முறைப்படி பூஜை நடைபெறும் கோயில்களாக இருக்கின்றன. இவ்விரண்டுவகைச் கோயில்களும் சகல மட்டத்தினரையும் திருப்திப்படுத்தும் வகையில் பூஜை அனுட்டானங்களை நெறிப்படுத்தியுள்ளன.

வழிவழி முறைப்படி பூஜை நடைபெறும் சிறு தெய்வ வழிபாட்டு தலங்களுக்கு, விரைவில் பலனை எதிர்பார்த்துச் செல்லும் மக்களே அதிகமாக சென்ற வண்ணம் இருப்பர். திரைப்படக் கலாசாரத்தின் எதிரொலியாகக் கூட இதைக் கொள்ளலாம். அதாவது திரைப்படங்களில் சிறு தெய்வ வழிபாட்டுக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவம், குறிப்பிடத்தக்கது. ஒருவனின் வேண்டுதலுக்கு உடனடி நிவாரணம் கிடைப்பதாகக் திரைப்படங்கள் காட்டுகின்றன. திரைப்பட கலைஞர்கள் ஆதரவும் அவற்றிற்கு இருக்கின்றன இத்தகை மனப்பதிவு இலகுவான வெற்றிக்கு சிறுதெய்வ வழிபாட்டு முறையே சிறந்தது என உணர்த்த மக்களும் அவ்வறே செயற்படுகின்றனர்.

இதேவேளை ஆகம முறைப்படி நடைபெறும் கோயில்களுக்கு ஆன்மிக ஈடேற்றம் கருதியும், மன அமைதி நோக்கியும் செல்லும் ஒரு பகுதியினர் கல்வி கேள்விகளில் உயர்ந்த நிலை உடையவர்களாக இருக்கின்றனர்.

இவ்வகையினரே தலைநகரில் ஆகம முறைப்படி அமைந்த கோயில்கள் பல எழுவதற்கு காரணங்களாக இருந்திருக்கின்றனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சேர். பொன் இராமநாதன், சேர், பொன், அருணாசலம் ஆகியவர்கள். இவர்களின் அடியொற்றி இன்றும் சிலர் ஆகம முறைப்படியான கோயில் அமைப்புக்கைங்கரியங்களுக்கு ஆதரவளித்து வருவது மறுக்க முடியாதது.

நெருக்கடி மிக்க இந்நகரில் கோயில் திருவிழாக்களில் சில நிகழ்வுகளான தேர்த்திருவிழா, சூரன்போர் போன்றவை குறைவிலாது நடந்தேறி வருவது மக்களின் சமய ஈடுபாட்டையே காட்டுகின்றது. ஏனெனில், இவ்வகை நிகழ்வுகள் வீதி உலா வந்து பல்லின மக்களின் பார்வைக்கும், பங்குபற்றலுக்கும் வழிகோலுவன. எனவே இத்தகைய நிகழ்வுகள் தலைநகரில் இடம்பெறுவது இந்து மதத்தின் பல தத்துவங்களை பராதீனப்படுவதாக உள்ளது.

இந்த வகையில் வேல் விழாவையொட்டிய ஊர்வலங்கள் ஆற்றிய பெரும் பங்கும் பணியும் குறைந்து மதிப்பிடத்தக்கவையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புறத்தில் இங்கே யந்திர வேகத்திற்கு ஈடு கொடுக்கக்கூடிய அளவிற்கு மக்களும் பழக்கப்பட்டவர்களாகின்றனர். எனவே அவர்களது கலாசார விழுமியங்களும் அவ்வேகத்திற்கும் பொருள் கோடலிற்கும் ஈடுகொடுத்து வளர்வது ஒரு இயல்பான வளர்ச்சி போக்கு. அதேவேளை ஒரு மதத்தின் அனுஷ்டான முறையில் இன்னொரு மதத்தின் பிரதிபலிப்பு மற்றும் சில கவர்ச்சி அம்சங்களின் ஊடுருவல் இவ்வாறாண இயந்திர மயமான நகர்பகுதிகளில் காணப்படுவது தவிர்க்க முடியாததாகும். அந்தவகையில் தலைநகர மக்கள் தாம் வாழும் வசதிக்கும், தேவைக்கும் ஏற்றவாறு வழிபாட்டு அனுஷ்ட்டானங்களைக் கடைப்பிடிப்பது புதுமையானதல்ல.

பல்லின மக்களை சமய சார்பாக திருப்திப்படுத்த முனையும் போது ஒரு மதத்திற்கு உரித்தான அனுஷ்டான முறையில் மாற்றம் ஏற்படுகின்றது. உதாரணமாக இந்து மசய சக்தி வழிபாட்டில் காளி வணக்கம் சிங்கள மக்களின் பெருமதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால் கோயிலில் பரிவார மூர்த்தியாக இடம்பெற்றிருக்கும் 'காளித் தெய்வம்' முக்கியம் பெற்று முதன்மையாகி பல வேண்டுதல்களையொட்டி ஆலாபனை பண்ணப்படுகின்றாள். அவளுக்கு வைக்கப்படும் நைவேத்தியங்களும் பூஜைக்கு எடுக்கப்படாத மலர்களாகவும் பழங்களாகவும் இருப்பது இன்று பல கோவில்களில் காணக்கூடியதாக உள்ளது. இது நகரில் இந்துமதம் பல்லின மக்களையும் திருப்திப்படுத்தும் ஒரு நிலைக்கு தன்னைக் கொண்டுவந்துள்ளமையையே காட்டி நிற்கிறது.

மேலும் நகர்மய மக்களின் வழிபாட்டு முறை ஒரு குறிப்பிட்ட நோக்கம் கொண்டதாக இருப்பதும் அவதானிக்கத்தக்கது. அதாவது எதையாவது கேட்டுப் பெறுவதற்கும் (நேர்த்திவைத்து) பெற்றவற்றுக்கு நன்றி செலுத்துவதற்கும் அல்லது செய்தவற்றிற்கு பிராயச்சித்தம் செய்வதற்கும் அல்லது ஒன்றைச் செய்வதற்கு துணிவு பெறுவதற்கும் ஆலய தரிசனத்தை பயன் கொள்வர். இந்த விடயத்தில் கிராமபுற மக்களை விட நகர்ப்புற மக்கள் வேறுபடுகின்றன.

இவை ஒரு புறமிருக்க ஆலயங்கள் மட்டுமல்லாது சில நிறுவனங்களும் தலைநகரில் இந்துமத மிளிர்வுக்கு கால் கோளிடுவதும் மறுக்க முடியாத ஒன்று. இந்நிறுவனங்கள் சமயச் சொற்பொழிவுகள், சமயவகுப்புகள், பரீட்சைகள் கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள் என பல தரத்தினருக்கும் ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றில் அரசு சார்பாக இந்து கலாசார அமைச்சு பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதும், நான்காவது உலக சைவ மாநாடு போன்ற மாநாடுகளை நடத்துவதும் இந்து மதத்தினை உலகளாவிய விதத்தில் ஆய்வு மூலம் சமய மறுமலர்ச்சிக்கு வித்திடுவதும் கிராமிய சமய நடவடிக்கைகளை விட ஓரளவு சிறப்பாகவே முன்னிக்கின்றன. இதற்கான காரணம் அறிவுஜீவிகள் மட்டத்தில் இவை மேற்கொள்ளபடுவதும் நடைமுறைபடுத்தப்படுவதுமாகும்.

இவ்வகையில் நோக்கும் போது தலைநகரில் இந்துமதம் செழித்தோங்குதற்கு ஆலயங்களும், சமய ஆர்வளர்களும் மட்டுமன்றி பல்லின மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாயமைந்ததொன்மை வரலாற்றுப் பாரம்பரியங்களும் வழக்கும் உந்து சக்தியே என்பதில் ஐயப்பாடிருக்க முடியாது.

'உள்ளது ஒரு பொருளே! அறிவாளர் அதனைப் பல பெயரால் வழங்குவர்'

*(ஏகம்சத் விப்ர, பஹூதாவதந்தி)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

மு.சிவராசா

சித்தாந்த சைவம் மிக மிக தொன்மையானது. அதன் தொன்மைக்கும், அது பரந்து நிலவிய தன்மைக்கும் சிந்து வெளி நாகரீக ஆராய்ச்சி முடிவுகளும் உறுதியளிக்கின்றன. சைவ நெறியில் மக்கள் வாழ்வதற்கும் அதினின்று விலகியிருப்போருக்கு உய்வு நெறி காட்டுவதற்கும் உறுதுணையாய் இருப்பவை சைவ ஆலயங்கள், சைவப் பள்ளிக்கூடங்கள், சைவ ஆதீனங்கள் என்பன. ஆலயங்கள் பக்தியை வளர்க்கவும், பள்ளிக்கூடங்கள் அறிவை வளர்க்கவும், ஆதீனங்கள் பண்பை வளர்க்கவும் பெரிதும் உதவுவனவாம்.

முதலாவது ஆலயம் எங்கே, எப்போது அமைக்கப்பட்டதென்பதை அறுதியிட்டுக் கூற முடியாதாயினும், பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே அது இருந்தது என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளுவர். முதலாவது சைவப்பாடசாலை கல்லாலமர நிழலில் நான்கு மாணவரோடு ஆரம்பிக்கப்பட்டது. காலம் எதுவெனக் கணக்கிட முடியவில்லை. முதலாவது ஆதீனம் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையில் தொடங்கப்பெற்ற திருஞானசம்பந்தர் ஆதீனமாகும். இது மங்கையர்க்கரசியார் வேண்டுதலினால் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மதுரைக்கு எழுந்தருளி வந்து தங்கியிருந்ததும், சமணரால் தீ கொளுத்தப்பட்டதுமான மடத்தில் தொடங்கப்பெற்றது. ஆதீன பரம்பரையில் தற்போது பீடாதிபதியாக அருளாட்சி செய்பவர் 292 ஆவது குருமகா சந்நிதானம் ஆவர்.

மதுரை ஆதீனம் தோன்றிய பின், சைவத்துறை விளங்கும் பொருட்டு அருளாளர்களால் வேறும் பல ஆதீனங்கள் அவ்வப்போது தொடங்கப்பட்டன. இவற்றுள் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனம், காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் என்பன சில.

தமிழ்நாட்டில் பல்வேறு ஆதீனங்கள் தோன்றிப் பல காலமாகப் பணிபுரிந்து வருகின்றனவே யெனினும், தேவாரப் பாடல் பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணமலை ஆகிய சிவ ஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஈழ நாட்டில் ஓர் ஆதீனம் இல்லாமை பெருங்குறையாக இருந்தது. சைவத்துக்கும் தமிழுக்கும் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துச் சேவை செய்த நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களே இக்குறையை வெளிப்படுத்தி மனம் மிக வருந்தினார்கள்.

ஈழத்துச் சைவ நன் மக்களின் தவப்பயனாக இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன் 1966 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை ஸ்ரீமத் ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள் நிறுவினார்கள். இவர்கள் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் மகா சந்நிதானத்தைக் குருவாகப் பெற்று மந்திரோபதேசமும் காஷாயமும் வாங்கிக்கொண்டார்கள். தம்பிரான் ஸ்வாமிகள் 1977 ம் வருடம் ஆவணி மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் நல்லை ஆதீனக் குருமுதல்வராக அபிஷேகம் செய்து ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் எனத் திருநாமம் கொண்டார்கள்.

சித்தாந்த வித்தகர் பிரமஸ்ரீ செந்திநாத ஐயர், இலக்கணப் பேரறிஞர் வித்துவான் கணேச ஐயர் ஆகியோரது பேரனாக பிரமஸ்ரீ செல்லையாக் குருக்கள் கனகாம்பாள் அம்மையார் ஆகியோருக்கு மகனாக அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் பிறந்தவர் சிவசுப்பிரமணிய ஐயர். இவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையிலும், யாழ் இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்று தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் பயிலும் காலத்தில் அவரது நாட்டம் புகழ் பெற்ற சங்கர சுப்பையர் சுவாமிகளின் இன்னிசை விரிவுரைகளிலேயே சென்றது. இக்கலையில் அந்நாட்களில் தன்னிகரற்றும், விளங்கிய சுவாமிகள் சைவத்தையும், சைவத் திருமுறைகளையும் யாழ்ப்பாண மக்களின் நெஞ்சில் ஆழமாகப் பதித்துக்கொண்டிருந்தார்கள். இவர் பிரசங்கங்கள் எங்கு நடந்தாலும் நிழல்போல் இவரைத் தொடர்ந்துசென்று அநுபவித்து வந்தான் சிறுவன் சிவசுப்பிரமணியன். அவரைப் போல் தானும் கதை செய்ய வேண்டும் என்ற வேணாவா சிறுவனைப் பிடித்துக் கொண்டது. சிறுவனது ஆர்வத்தை அறிந்த சுவாமிகள், தமக்குப்பின் இக்கலையில் புகழ்பெற்று விளங்கக் கூடியவன் என அவர் உள்ளுணர்வு தெரிவித்தமையால் மணிஐயருக்கு தமது சுருதி வாத்தியத்தையும் வழங்கி ஆசீர்வதித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பதினெட்டாவது வயதில் இன்னிசை விரிவுரை நடத்தத் தொடங்கிய சிவசுப்பிரமணிய ஐயர் நாளடைவில் சுவாமிகளின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பத் தகுந்தவர் ஆனார். வண்ணை ஸ்ரீ. சி.எஸ்.எஸ். மணி ஐயர் என்ற பெயரில் புகழடைந்த இவர் நாடகம், நடனம், ஓவியம் ஆகிய துறைகளிலும் சிறந்த விற்பன்னராயிருந்தார். தமது முறைப்பெண்ணான யோகாம்பாள் என்பவரை வாழ்க்கைத் துணையாக ஏற்று முருகானந்தா சர்மா என்பவரைப் புத்திரராகப் பெற்றார்.

மணி ஐயரின் கதாப்பிரசங்கங்கள் பிரபல்யமடையவே அவர் " மணி பாகவதர்" ஆனார். அவரது கதாகாலட்சேபங்கள் இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளிலும் மக்களை பெரிதும் கவருவதாயிற்று. கந்தபுராண பெரியபுராண, திருவிளையாடற் புராண பிரசங்கங்களும் இராமாயணம் பாரதம் போன்ற இதிகாசங்களின் தொடர் கதாப்பிரசங்கங்களும் பலப்பல முறைகள் செய்துள்ளார்கள். இராமாயணம் தொடர் பிரசங்களும் 25 முதல் 40 நாள்வரை நீடிக்கும். இதனை 40 தடவைக்கு மேல் செய்துள்ளார்கள். இவர்களது இன்னிசை விரிவுரைகளில் திருமுறைகள், திருப்புகழ், அநுபூதி, அலங்காரம், அபிராமி அந்தாதி, பிள்ளைத் தமிழ் ஆகியன எல்லாம் பொங்கி வழியும் தத்துவார்த்த விளக்கங்கள் நிறைந்திருக்கும். பக்திச்சுவை நிறைந்த இவரின் விரிவுரைகள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன 291 வது குருமகா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவுள்ளத்தில் ஒரு குறிப்பைத் தோற்றுவித்தது. அதன் பிரகாரம் 'மணிபாகவதர்' 1966 ம் ஆண்டில் இல்லற வாழ்வைத் துறந்து சந்நிதானத்திடம் மந்திரோபதேசமும் காஷாயமும் பெற்று ஸ்ரீமத் ஸ்வாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் ஆனார். பதினொரு ஆண்டுகளின் பின் பீடாதிபதியானார்கள்.

நல்லை ஆதீனம் பொருள்வளம் படைத்ததன்று. ஆயின் அருள்வளம் நிரம்பவுடையது. பணம் இல்லையெனினும் அங்கு பண்பு நிலவுகிறது. ஆதீன சம்பிரதாயங்களைக் கட்டிக் காத்து வருவது. நல்லை ஆதீன முதல்வரைப் போன்று சமயப் பிராசாரத்துக்காக மனமொழி, மெய்களால் அரும்பாடுபட்ட ஆதீனகர்த்தர்கள் வெகு சிலரே இருந்திருக்கலாம். நல்லைக்குருமணி அருளாட்சி இயற்றிய காலத்துள் ஆதீனப்பணிகள் பெருகிக்கொண்டே வந்தன. ஆதீனத்தில் மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளைத் தவிர இலவச சமயதீட்சை, விசேட தீட்சை, உபநயனம், திருமணக் கிரியைகள், வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், சமயபாட வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள், யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் என்பனவும், நாயன்மார் குருபூசை, மாகேசுர பூசைகள், மாநாடுகள், விழாக்கள் யாத்திரிகர்களை உபசரித்தல் முதலியனவும் ஆதீனப் பணிகளுள் சிலவாம்.

தொடங்கப்பெற்ற ஆதீனம் தொடர்ந்து இயங்க வேண்டுமென்ற பெருவிருப்பு ஸ்வாமிகள் திருவுள்ளத்தில் மிக்கிருந்ததால் சிறியவர்களும் பெரியவர்களுமான பலரை ஆதீனத்தில் சேர்த்து உணவும், உறையுளும் வழங்கி அவர்களைச் சிவப்பணியில் ஈடுபடுத்த முயன்றார்கள். சிலர் அணுகினர்– பலர் அகன்றனர். சுவாமிகள் தெரிந்தெடுத்த சிறுவன் சுந்தரலிங்கத்தைத் தமது ஞான பரம்பரைக்கு உகந்தவன் எனக் கண்டார்கள். 7–4–1977 இல் இளைஞனுக்கு மந்திரோபதேசம் செய்து ஆதீன இளவரசாக்கி ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆக்கினார்கள். தற்போது இருபத்தைந்து வயது நிரம்பிய இளவரசு சிறந்த பக்தர்; பண்பாளர்; அமைதியாகப் பேசுபவர்; பழக இனியவர்; பார்வைக்கு எளியவர்; அவர் சிவபூசை செய்வதைக் காண்போர் பரவசமடைவர்.

சரீர வளமும் சாரீர வளமும் பெற்றிருந்த குருமகா சந்நிதானம் சில காலமாக உடல் நலம் குன்றியிருந்தார்கள். பல நாட்களில் தினம் மூன்று நான்கு இன்னிசை விரிவுரைகள் செய்வதால் உடல் தளர்வதாயிற்று. இரத்த அழுத்தம் அதிகரித்திருப்பதால் விரிவுரைகளை மட்டுப்படுத்துமாறு வைத்தியர்கள் பலகாலும் இரந்து கேட்டார்கள்.

(நன்றி : *ஆத்மஜோதி - உலக இந்து மாநாட்டு மலர் 1982.)*

(குறிப்பு : மு.சிவராசா மன்றத்தின் முன்னைய பொதுச் செயலாளர்களில் ஒருவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அர்த்தமுள்ளது இந்து மதம்

1. தில்லை திரு நடனம்
2. Dance of Siva as seen by Dr. Anandacumarasamy
3. தாய்மையே இறைவனின் முதல்வடிவம்
4. Saiva Siddhantha
5. பிறவிப் பிணி
6. The Hindu Family
7. பொன்னூஞ்சலும் அதன் உட்பொருளும்
8. ஆன்மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கை
9. வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிவகுக்கும் இந்து மதம்
10. இலிங்காயத மரபு – சில குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தில்லைத் திரு நடனம்

**ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா**

*"கற்பனை கடந்து சோதி கருணையே வடிவமாகி*
*அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்*
*சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று*
*பொற்பிறு நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி"*

## சிதம்பர ஸ்தலம் -

உரைமன மிறந்து நின்றவொழி தனிக்கடவுள் ஆன்மாக்கள் மீது வைத்த பேரருளினாலே அவ்வருளே வடிவமாகத் தோற்றுவான் என்னும் உண்மையை "நடராஜ வடிவம்" என்னும் வியாசத்தினுள் ஆராய்ந்துணர்ந்தாம். ஆங்கு உருவம் பற்றி ஆராய்ந்தோம். "தில்லைத் திரு நடனம்" என்னும் இத்தலைப் பெயர்க்கீழ்த் தொழில்பற்றியாராய்வாம். முதலில் தரிசித்த முத்திதரும் தலமாகிய சிதம்பர ஸ்தலத்தின் மகிமையைப்பற்றிச் சில குறிப்புகள் கூறியப்பாற் செல்வாம். நிலவுலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும் வண்ணம். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களுள்ளே மிகச் சிறந்த ஸ்தலம் சிதம்பர ஸ்தலமாம். இது முன்னாளில் தில்லைக் காடாகவிருந்த காரணம் பற்றித் தில்லைவனம் எனவும் வழங்கப்படும். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும் ஆதிசேஷனுடைய அவதாரமாகிய பதஞ்சலி மகா முனிவரும் தவம் புரிந்து நடராஜ மூர்த்தியைக் கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற இடம் இத்தில்லைவனமென்ப. இந்தத் தில்லைவனமானது விராட் புருடனுக்கு நடுநாடியாகிய சுழுமுனை நாடியாக அமைந்தது. இந்த ஸ்தலத்திலே மூலலிங்கத்துக்குத் தெற்கே வேதங்களுங் காணாத நிலைபெற்ற சபையொன்றுண்டு; அச்சபையின் கண்ணே எம்மையாளுடைய ஐயன் எக்காலத்தும் ஆநந்த நிருத்தஞ் செய்தருளுவான். இவ்வுண்மையை,

*"நாடரு நடுவினாடி நலங்கிளர் தில்லை நேர்போய்த்*
*கூடுமங் கதனின் மூலக்குறியுள் ததற்குத் தென்னர்*
*மாடுறு மறைகள் காணா மன்னுமம் பலமொன் றுண்டங்*
*காடுது மொன்று மென்றா னென்னையா ளுடைய வையன்"*

என்னும் கோயிற்புராணச் செய்யுள் இறைவனுடைய திருவாக்காக எடுத்துக் கூறும். அண்டமும் பிண்டமும் தம்முள் ஒப்புடைய வாதலினாலே, பிண்டத்தில் அமைந்திருக்கின்ற இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுனைநாடி யென்னும் இவற்றிற்கு நேரொப்பாக இலங்கை, இமயம், தில்லையாகிய மூன்று தலங்களும் அண்டத்தில் அமைந்திருக்கின்றன. இடைநாடி இலங்கைக்கு நேராகச் செல்லும், பிங்கலைநாடி நன்மைமிக்க இமயமலைக்கு நேராகப் போகும், நாடுதற்கரிய சுழுமுனை நாடி தில்லை வனத்திற்கு நேரே போய்க்கூடும் எனவும், தாம் அத்திருத்தலத்தில் சதா ஆநந்த நிருத்தம் செய்வதாகவும் நடராஜ மூர்த்தி ஆதிஷேஷனுக்குக் கூறினார். சுழுமுனை நாடியிற் பிராணனை நிறுத்திய யோகிகளுக்குப் பேரின்பப் பெறும்பேறு வந்து எய்துவதை யொப்பச் சிதம்பர ஸ்தலத்தை யடைந்து தரிசித்த பேருக்கு முத்தியின்பங் கைகூடுமாதலினால், அண்டத்திலுள்ள சிதம்பரமும் பிண்டத்திலுள்ள சுழுமுனை நாடியும் நம்முள் ஒத்து நடப்பன.

*"எண்டரு பூத மைந்து மெய்திய நாடு மூன்று*
*மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே*
*பிண்டமு மண்ட மாகும் பிரமனோ டைவ ராகக்*
*கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காணலாகும்."*

## சிற்சபை பிரமபுரம்

சித் + அம்பரம் = சிதம்பரம். அம்பரம் என்னும் மொழி, ஆகாசம். வெளியெனப் பொருள்படும் இச்சொல் அம்பலம் என்த திரிவு பட்டும் நடக்கும் சிதம்பரம் சிற்றம்பலமாகும். ஹிருதய கமலத்திலே சிதாகாச வடிவமாகிய பரவெளியமைந்திருகின்றது. இது அனைத்தினுக்கும் ஆதாரம். சாந்தோக்கியோபநிடதத்தின் எட்டாவது பிரபாடகத்தின் முதற்காண்டம் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. அக் காண்டத்தை மொழி பெயர்த்துத் தருவாம்.

1. ஓம் பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கின்றது. அவ்வாகாசத்தினுள்ளேயிருக்கிற பொருளைத் தேடியறிதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. "பிரமாபுரமாகிய இச்சாரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கிறது. அவ்வாசகத்தினுள்ளே எதனைத் தேடியறிதல் வேண்டும்? என (மாணாக்கர்) விசாரிப்பாரெனில்,

3. "புறத்தே யிருக்கிற ஆகாசம் எவ்வளவு விரிவாயிருக்கிறதோ, இருதயத்தினுள்ளேயிருக்கிற ஆகாசமும் அவ்வளவு விரிவாயிருக்கிறது; மண்ணுலகமும், வானுலகமும் காற்றும், நெருப்பும்., சூரியனும், சந்திரனும், மின்னற் கொடியும் நக்ஷத்திரக் கூட்டமும் என்று புறத்தே தோன்றுகின்றவும், இனிமேல் தோற்றப் போகின்றனவுமாகிய அனைத்தும் அதனுள்ளேயிருக்கின்றன" என்று (ஆசிரியன்) கூறுவான்.

4. "எல்லாப் பிராணிகளும் எல்லா விருப்பங்களுமாகிய அனைத்தும் (இச்சரீரமாகிய) பிரமபுரத்தினுள்ளிருக்கின்றனவென்றால் வயது முதிர்ந்த உடல் விழும்போது யாதுசம்பவிக்குகின்றது ?" என (அவர்கள்) விசாரித்தால், அதற்கு மறுமொழி வருமாறு:-

5. "இதனுடைய மூப்பினால் அது மூப்படைவதில்லை, இதனுடைய மரணத்தினால் அது மரணமடைவதில்லை. (இருதய கமலத்தினுள்ளிருக்கும் உண்மைப் பொருளாகிய) அதுவே உண்மையான பிரமபுரம். அது தீங்கற்றதாய், மூப்புச் சாக்காடற்றதாய், துன்பமற்றதாய், பசிதாகமற்றதாய், உண்மையை விரும்பி உண்மைத் தீர்மானங்களைக் கைக்கொள்ளும். (இங்குள்ளார் இடந்தேசங்களின் மேற் பற்று வைத்துக் கட்டளைக் கமைந்து நடப்பது போல)".

6. "இவ்வுலகத்திற் பாடுபட்டுத் தேடிய பொருள் அழிந்து போவது போலப் புண்ணிய பலத்தினால் வந்த மேலுலக வாழ்க்கையும் அழிந்துபோம். ஆன்மாவாகிய உண்மைப் பொருளையறியாது இவ்வுலக வாழ்க்கையினின்றும் நீங்குவோர் மற்ற உலகங்களிலும் பந்தமுற்றவராவர். இவ்வுலக வாழ்க்கையில் ஆன்ம ஞானத்தை அடைந்தவராவர் எல்லா உலகங்களிலும் பந்தமற்ற கட்டு நிலையையடைந்தவராவர்."

மேலே சுருதியுரைத்த ஆகனாசமே நிதாகாச மெனப்படுவது,

## பஞ்சபூதபரிணாமம்

சித்தாகாசம், பூதாகசம் எனவேறு இருவகை ஆகாசங்கள் இருக்கின்றன. நம்முடைய இயல்பினை நோக்கும்போது நாம் ஒருவரில் மூவராயிரக்கின்ற தன்மையையறிவோம். சீதோஷ்ணங்களால் வருந்தும் போதும் நோயுற்றபோதும் உடலுமே நாமென்று நினைத்துத் துன்புறுவோம். ஞான சாஸ்திரங்களையாராயும் போது அவற்றின் மேல் கருத்துப் பதியச் சரீரத்தை மறந்து மனமே நாமென்றுமெண்ண முற்றிருப்போம். மனம் மடிந்த சமாதி நிலையில் சிவத்தோடு அத்து விதமாகநின்ற நமது உண்மை நிலையையறிவோம். மேலேயெடுத்துக்காட்டிய சுருதியினால் அறிவுறுத்தப்பட்டது அவ்வுண்மை நிலையேயாம். இம்மூன்று நிலைக்கு மொப்பவே மூவகை ஆகாசமும் நிலைபெற்று நின்றன. பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாகிய மாயையும் மூன்று. அவை சுத்தமாயை (மகா மாயை, பரப்பிரகிருதி, விந்து, குண்டலினி, வித்தை, மாயை, பரை, பரவாகீசவரி என்பன பரிகாச நாமங்கள்). அசுத்தமாயை (சூக்குமப் பிரகிருதி, மோகினி). பிரகிருதிமாயை (தூலப்பிரகிருதி, மகத்) என்பன. தூலப் பிரகிருதியினுட் சூக்குமப் பிரகிருதியும், சூக்குமப் பிரகிருதியினுள் மகாமாயையும் வியாபித்து நிற்பது போலப் பூதாகாசத்தினுட் சித்தாந்தகாசமும் சித்தாகாசத்தினுட் சிதாகாசமும் வியாபித்து நிற்பன. ஆதலினால் சிதாகாசமே அனைத்தினுக்கும் ஆதாரமானது. ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்பும், அப்பினின்று பிருதுவியுந் தோன்றுவனவென்பது சமய நூலுக்கும் பௌதிக சாதிரத்துக்கும் ஒப்ப முடிந்ததாதலின், பரப்பொருளாகிய பிரபஞ்சத்தோற்றமாக நங்கண் முன்னே தோன்றுகிற மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்க மகா பூதங்களும் அருவுருவ வடிவான பூதாகாசத்தினின்று தோன்றினவென்பது புலப்படுகின்றது. ஆகாச (Ether) ப் பரப்பிலே நீரிற் சுழிகள் போற்றோன்றி நின்ற நுண்ணிய மின்னுரு (Eletrons) களின் கூட்டமாகிய அணுக்களா (Atoms) லமைந்த அனைத்துச் சடப்பொருட்களுமெனத் தற்காலத்து விஞ்ஞான நூலாசிரியருங் கூறுவர். சிதாகாச சித்தாகாசங்களினியல்பை அன்னாரறியார்.

## பஞ்சகிருத்தியத் தலைவர்

இனித் தோற்றக் கிரமத்தை யாராயும்போது அதுவும் தூலதிருஷ்டி சூக்குமசிருஷ்டியென இருவகைப்படுமென்றறிவாம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களும், மண், நீர், அனல், வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களும் நிரனிரையாக ஒன்றினோடொன்று தொடர்புற்று நிற்பன. அருவுருவமாகிய ஆகாயத்தினின்று உருவ பூதங்களும் வாயு, தேயு, அப்பு, பிருதுவியென்னுமிவை முறையே தோற்றியது போல நிஷ்கள சகல வடிவினராகிய சதாசிவ மூர்த்தியினிடத்தினின்று மகேசுவரர், உத்திரர், விஷ்ணு, பிரமா என்னுஞ் சகல மூர்த்திகள் நால்வரும் முறையே தோற்றுவர். பிருதுவி தத்துவத்தினுள் வியாபித்து நின்ற நிவிர்த்தி கலையை யதிஷ்டித்த பிரமதேவர் உலகங்களைப் படைப்பார்; நாராயண (நீரிற்றோன்றிய) மூர்த்தி உலகங்களைக் காப்பார். அக்கினி நிறத்தினராய் அக்கினி புவனத்திலிருக்கும் உருத்திரர் அழிதற்றொழிலைச் செய்வார். வாயு புவனத்தினின்ற மகேசுரர் மறைத்தற்றொழிலைச் செய்வார். ஆகாய புவனத்தில் வசிக்கும் சதாசிவர் அநுக்கிரகத் தொழிலைச் செய்வார்.

## திரு நடனத்தினாலே பஞ்சகிருத்தியமும் நடைபெறுவன

"அவனன்றி யோரணுவுமசையாது" என்னும் ஆப்தர் வாக்கின்படி பஞ்சகிருத்தியத் தலைவர் பரமபதியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடைய அருட்சத்தியினாலே ஐந்தொழிலும் நிறைவேற்றுவர். அவன் இயக்காவிட்டாற் பஞ்சகிருத்தியங்களும் நடைபெறமாட்டா. முதல்வன் உயிருக்குயிராகி நின்றமையினால் அவன்மேற்பட்ட அடி சர்வ ஜீவகோடிகள் மேலும்பட்டது; அவன் சனகர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் ஞானபாதத்தை யுபதேசித்த பொழுது ஒருகண நேரத்துக்கு யோக நிலையிருலிக்க விண்ணுலகத்துக் தேவரும், மண்ணகத்து மானிடரும் காமப் பற்றின்றியிருந்தனர்; உமாதேவியார் இறைவனது கண்ணினை மறைக்க எல்லாவுலகங்களிலும் இருள் சூழ்ந்து கொண்டது.

*'நாயகன் கண்ணை யப்பா னாகிய புதைப்ப வெங்கும்*
*பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினக்கு நெற்றித்*
*தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்*
*றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னார்"*

*கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு*
*விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மாறான்*
*எண்ணிவேண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற*
*பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்"*

*"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்*
*யோகியா யோகமுத்தி யுதவுத லதுவு மோரார்*
*வேகிய னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்*
*ஊகியா மூட ரெல்லா மும்பரி னொருவனென்பார்"*

*"உலகமே யுருவ மாக யோநிக ளுறுப்ப தாக*
*இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக*
*அலகிலா வுயிர்கட் கெல்லா மறிவினை யாக்கி யைந்து*
*நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னாதன்."*

அரங்கத்திலே புகுந்து : நடிக்கின்ற கூத்தற்கு உருவுமுறுப்பும் கரணமும் பயனுந் தொழிலும் அமைந்தவாறே. சிதா காசமாகிய அரங்கத்து நடிக்கும் பரம நாடகனாகிய முதல்வனுக்கும் அசித்துப் பிரபஞ்சம் தூல உருவமாகவும், சித்துப் பிரபஞ்சம் உறுப்புக்களாகவும், இச்சை ஞானக்கிரியைகள் காரணமாகவும், உயிர்கட்கு அறிவினையாக்கிவைத்தல் பயனாகவும், பஞ்சகிருத்திய விரிவே தொழிலாகவும் அமைந்து நின்றன.

### பஞ்சகிருத்திய வடிவத்தின் இலக்ஷணம்

தோற்றப் பொருளனைத்தினுக்கும் ஆகாசம் ஆதாரமென முன்னர்க் கூறினோம். இவ்வாகாசம் ஒலிபற்றி யெழுவது; ஆதலால் இறைவனுடைய கையிலேந்திய டமருகம் ஒலிக்குறிப்பின் வழி வந்த ஆகாசத்துக்கு உற்பத்தித் தானமானது. ஆதலால் அனைத்துப் பொருட்களுக்கும் உற்பத்தித் தானமாயிற்று. 'அஞ்சன்மின்' என்னுங் குறிப்பினைக் காட்டும் அபயகரம் காத்தற்றொழிலைச் செய்கின்றது. கையிலேந்திய அக்கினி சங்காரத் தொழிலைச் செய்வது. முயலகன் ஆணவ வடிவம்; அவனை மிதித்த திருப்பாதம் மறைதற்றொழிலைக் காட்டுவது, தூக்கிய திருப்பாதத்தின் நிழலில் இந்த கலியுகத்திற்றானும் திருநாளைப் போவார் நாயனாரென்னும் நந்தனாரும், திருவாதவூரடிகளும் அடைந்தார்கள்.

### சிதம்பர ரகசியம்

சிதம்பரத்தில் சிற்சபையிலே, நடராஜ மூர்த்திக்கு வலப்பக்கத்திலே மாசுபடியா ஆகாய மூர்த்தமாகிய சிதம்பர ரகசியம் இருக்கின்றது. இம்மூர்த்தம் நாமரூபவிகற்பப் படாதது; ஆதலினால் அனைவராலும் வழிபடற்குரியது.

தில்லைத் திருநடனத்தைக் கண்டு 'தரிசித்த கண்ணினாலே பின்னர்க் காண்பதற்குத் தகுந்த பொருள் வேறு இல்லையாதலால், மைதீட்டிய ஒள்ளிய கண்ணினையுடைய உமாதேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப, எம்மிறைவன் கனகசபையின் கண்ணே எந்நாளும் செய்கின்ற ஆனந்த நடனத்தைக் காண்பதே கண்ணினைப் பெற்ற பயனாகும்.'

*'குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்வாயிற் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த வையகத்தே."*

*திருச்சிற்றம்பலம்*

நன்றி : *கோயில்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Office Of Siva

## As seen by Dr. Anandacumarasamy

MISS. SATSOROOPAVATHY NATHAN

*President, Colombo Young Women's Hindu Association*

Hinduism which is known for its spiritual pursuits, realised that the entire activity of the cosmos is a manifestation of the eternal Dance of Siva as Nadarajah. It is most significant that the word chitthambaram attributed to the Lord's theatre for his eternal cosmic dance literally means the "Ether of Wisdom". Beauty and awareness are seen unified as one in the concept of almighty as Dancer Siva performs in every atom and activates both the living and non living forces of nature. Human beings are part of this dance. It is this divine force that is the cause of every motivation. The supremacy of Siva over other deities as the King of dancers can be perceived at various levels of understanding through a correlated appreciation of ichnography and the thirumurai.

The pinnacle of metaphysical analysis is seen in the Thirumanthiram and Unmai Vilakkam. The Hindu ichnography the anantha thandava of Nadarajah is the grandest achievement.

Thiruvathavuradikal puranam. "Think of our Lord says a devotee; As the peerless dancer, and dancing master who abideth in all bodies as heat in fuel and maketh all creatures dance". The dance of Siva which represents all the "five fold acts" of God inspired the eminent son of Sri Lanka, Kalayogi Ananda Cumaraswamy to a great extent. He was born on 22.8.1877 and was the son of Sir Muthukumarasamy. He started his career as a geologist. He lived most part of his life in U.K. and America but travelled the whole globe and brought to light the beauty and splendour of Indian art and architecture through his writings. The prestigious Indira Gandhi National Centre for the arts in Delhi has now completed 10 volumes of Ananda Cumaraswamy's writings in the first stage of its ambitious programme, sponsored by the Indian Government to publish the complete works of the famed Sri Lankan scholar. One of his famous books is titled "Dance of Siva". This includes 14 articles on various aspects of Indian art. One of these elaborates the beauty and significance of the "Dance of Siva". The opening lines of this article reads thus-

"The Lord of Thillais Court a mystic dance performs.
What's that my dear" - a translation from Thiruvasagam.



This article runs to 12 1/2 pages and has many quotations from Thirumanthiram unmai Vilakkam, Sivagnana Sithiyar and Thiruvarutpayan. Kalayogi summaries the whole interpretation of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dance as follows, "The essential significance of Sivas' dance is threefold. First it is the image of his rhythmic play as the source of all movement within the cosmos, which is represented by the arch, the purpose of his dance is to release the countless souls of men from the snare of illusion and thirdly the place of the dance, Chidambaram, the Centre of universe, is within the heart".

The creative activity of Nadarajah is intuited as an expression of Joy. It is also visualized as a grand symphony without, any jarring note. Ananda Cumarasamy states that the dance in fact represents Lord's five activities Panchakiritiya. He quotes from Unmai Villakam verse 36, to explain the detailed symbolism of his dance.

"Creation arises from the drum, Protection proceeds from the hand of hope, from fire proceeds destruction, the foot held aloft give release".

Kalayogi gives a detailed description of the South Indian copper image of Shri Nadaraja, the Lord of the dance. A typical image could be described thus-

"The image represents Siva dancing having four hands with braided and jewelled hair of which the lower locks are whirling in the dance. In his hair may be seen a wreathing cobra, a skull and a mermaid figure of ganga, upon it resets the crescent moon and it is crowned with a wreath of cassia leaves. In his right ear he wears a man's earring, a woman's in the left. He is adorned with necklaces and armlets, a jewelled belt, anklets, bracelets, fingers and toe rings. The chief part of his dress consist of tightly fitting breeches and he wears a glittering scarf and a sacred thread. One right hand holds a drum, the other is uplifted in the sign do not fear. One left hand holds fire, the other points down upon the demon Mugelakan, the left foot is raised. There is a lotus pedestal from which springs an encircling glory fringed with flame and touched by the hands holding drum and fire."

It is very interesting to note that this description is as a result of study made on many bronze statues of Siva including the one unearthed from the buried city of Polonnaruwa, the statue which is now preserved in the Colombo Museum (Memoirs of the Colombo Museum written by Dr. K. Kumarasamy - series A published in 1914).

The significance of this form is also explained with reference to Thirumular's Thirumanthiram, unmai vilakkam etc. by Kalayogi in his article. The deepest significance according to him is felt when it is realised that the dance takes place within the heart and the self. Everywhere is God that everywhere is the heart. It is to this end, all else but the thought of God must be cast out of the heart, that he alone abide and dance therein. Kalayogi poses a question what does Siva destroy? To this his answer is as follows:-

"not merely the heavens and the earth at the close of the world cycle, but the fetters that bind each separate soul".

He admires the aesthetic conception of the form Nadaraja. "How amazing the range of thought and sympathy of those rishi artists who first conceived such a type as this, affording an image of reality, a key to the complex tissue of life, a theory of nature".

He concludes by stating that "the figure of Nadaraja has commanded the adoration of so many generations past, familiar with all secepticisms expert in tracing all beliefs to primitive superstitions, explorers of the infinitely great and infinitely small, we are worshippers of Nadaraja still".

"In the drum behold evolution, in the assuring hand preservation, in fire involution, in the planted foot observation and in the foot held aloft emancipation."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையே இறைவனின் முதல் வடிவம்

பண்டிதை சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

*துணைத்தலைவி அகில இலங்கை இந்துமாமன்றம்*

"தாயினும் நல்ல தலைவர்என் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை யமர்ந்தாரே"

உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் தாய் வடிவமாகும். அதாவது குழந்தையைப் பெற்று பாலூட்டி தாலாட்டி தொட்டிலில் வளர்த்தி பின்பு சிறிது வளர்ந்த ஞான்று விளையாட விட்டு பின் நின்று பார்த்து மகிழ்பவள் தாய். குழந்தை குறும்பு செய்யுமாயின் அச்சுறுத்தியும் பின்பு அணைத்தும் அறிவுரைகள் கூறியும் பேணுபவள் தாய். எவை எவை எப்பொழுது தேவையென அறிந்து கொடுத்து வளர்ப்பதுவுமின்றி அமைதியாக உறங்க வைப்பதும் தாய். இதே நிலையிலேயே இறைவனும் தாயாக நின்று ஆன்ம கோடிகளைப் பேணி எடுத்துப் பிறப்பறுக்கின்றான் என்பது சைவ சித்தாந்த முடிவு. இறை நிலையில் இது ஒரு உயர்ந்த தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண் குலமே அமையவேண்டும். தர்மம் சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்குப் பெருமை தருவன. பிறந்த இடத்துக்கும் புகுந்த இடத்திற்கும் பெருமையைத் தேடி கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி விளங்க வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்து மதம். இதையொட்டியே சாக்தம் என்ற ஒரு பிரிவு ஏற்பட்டது. சைவம் அம்மை அப்பனாகப் பேசி நிற்க சாக்தம் எல்லாம் அம்மையின் உறவாகவே இணைந்து விடுகிறது.

தாய்மையருள் மீன் கண் பார்வைபோல் இரட்சிப்பது. அருளே உமையாகவும் அறிவே சிவமாகவும் இவ்வுலகை இயக்கி நிற்கும் நிலையை சைவத் திருமுறைகளில் பரக்கக் காணலாம்.

ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது திருக்கூத்து. இதனை ஆடுபவன் நடராசன். தாளம் போடுபவள் பராசக்தி. அம்மையின் தாள லயம் குன்றினால் அப்பனின் தாண்டவம் பிழைத்து விடும். தாண்டவம் பிழைத்தால் உலக இயக்கமே தாறுமாறாகிவிடும். இதனால் எம்பெருமான் அம்மையின் பக்கம் நோக்கி அமைதியாக ஆடுகிறான்.

*"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதக் தனிக் கூத்தாடும் நாதனார்"*

என்று போற்றுகிறார் சேக்கிழார்.

சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றி வாழ்ந்த சிறப்புக்குரியவர்கள். தீயினில் தெறலாய், பூவினுள் நாற்றமாய், கல்லினுள் மணியாய், சொல்லினுள்ள வாய்மையாய் இறைப் பொருளை அனுபவித்தவர்கள்.

எனினும், பெண்மக்கள் திருவிளக்கேற்றியும், மலர்தூவியும், நெல் தூவியும், கோலமிட்டும் வழிபட்டமைக்குச் சான்றுகள் பலவுண்டு. வீட்டு முற்றத்து மல்லிகை, மலரும் மாலை நேரத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்வதில் அவர்கள் ஈடுபாடு கொண்டமையும், குரவைக் கூத்தாடி முருகனைப் பூசித்த முறைமையும் அக்காலப் பாடல்களில் காணமுடிகின்றது.



தை நீராடிப் பாவை நோன்பு அனுட்டித்த சிறப்புக்களையும் அகநானூறு என்ற நூலில் காணமுடிகிறது.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டும் முகமாகப் பூம்பாவையை எழுப்பிய இடத்தில் ஞானசம்பந்தர் வேண்டுதலைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்*
*உண்மையா மெனில் உலகர் முன்வருகென உரைப்பார்"*

அடியாரைப் போற்றலும் அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபடுதலும் பெண்குலத்தின் கடமைகள் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

இன்னும் பக்தி நெறியில் பெண்மக்கள் கொண்டுள்ள பங்கைக் கவனிப்போம். திருவாசகத்திலே மணிவாசகர் கூற்றொன்றில் காணலாம்.

*" முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே*
*உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்*
*உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எங்கணவ ராவா ரவருகந்து*
*சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்*
*இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*என்ன குறையுமிலோ மேலோ ராம்பாவாய்"*

கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப் பெறும் கணவன்மார் சிவதொண்டர்களாகவே அமைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றனர்.

ஏனென்றால் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்றாய் அமையாவிடத்துத் திருப்தியாக இல்லற தர்மம் அமையாது. இதற்கு எடுத்துக் காட்டாகக் காரைக்கால் அம்மையார் வாழ்வு அமைகிறது. விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வளர்ந்தவர் அம்மையார். ஆனால் திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லை யெனினும் கணவனாலேயே ''தெய்வம்'' எனப் போற்றப்படும் பெருநிலையும் இவருக்கு ஏற்படுகிறது. அந் நிலையிலே சிவநெறி யொன்றே கைவரப்பெற்றவராய் உற்பவித்தெழுந்த ஞானத்தொருமையிலே அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிறார் அதில் ஒரேயொரு பாடல் மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

*"வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்*
*தானத்தா னென்பாரும் தாமென்க– ஞானத்தான்*
*முன்னஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்*
*என்நெஞ்சத் தான் என்பன் யான்"*

இங்கே ஒரு பெருமிதம் தோன்றுகிறது. அதாவது ஆண்டவன் தன்னகத்திலே குடியிருக்கிறான் என்பதே அதற்குக் காரணமாகும்.

''ஒன்றே நினைத்திருந்தேன்'', ''ஒன்றே துணிந்தொழிந்தேன்", " ஒன்றே என்னுள்ளத்தினுள் அடைந்தேன்" என்று பாடிப் பேய் வடிவுடன் காற்றினும் கடிதாகச் செல்கிறார்.

*"அண்டர் நாயனார் என்னை அறிவாரேல் அறியா வாய்மை*
*எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாயென்"*

என்பது அவர் கருத்து.

தலையினால் நடந்து திருக்கையிலையே அண்மித்த பொழுது " வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" என்று கூறி இறைவன் உமையம்மைக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். அதுவுமின்றி அம்மையே உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டஞான்று அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அருள் வாக்குகளை நாம் என்றென்றும் போற்றி ஓதவேண்டியவர்களாக இருக்கிறோம். இறைவனை நோக்கி அம்மையார் வேண்டி நின்ற இவ்வரம் எம்மையும் தெருட்டுகிறது.

*"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேன் உன்னை என்று*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்"*

இறைவனால் " அம்மையே" என்று அழைக்கப்பட்ட பெருமையைச் சேக்கிழார் வியந்து போற்றி " மடுத்த புனல் வேணியினார் அம்மை யென மதுரமொழி கொடுத்தருளப் பெற்றாரை, அடுத்த பெருஞ் சீர் பரவல் யாரளவாயினதம்மா! எனப் பாடியருளினார்.

வீட்டிலே கணவன்மாருக்குப் பின்னணியாக நின்று பெருந் தொண்டும் தியாகமும் புரிந்த பல பெண்மணிகளைப் பெரிய புராணம் எடுத்துக்காட்டுகிறது. திருநீலகண்டம் என்ற சொல்லையே தனது மந்திர வாக்காகக் கொண்டு ஒழுகி அடியார்களுக்குத் திருவோடு செய்தளித்து வாழ்ந்தவர் திருநீலகண்டர். இவருடைய புறவொழுக்கங் காரணமாகக் கருத்து வேற்றுமை மனைவியாருக்கிருந்தது. சிவனடியார் ஒருவருக்கு இத்தகைய மாசு ஏற்படக்கூடாது என்பது அவருடைய மனைவியாரின் எண்ணம். ஒரு நாள் கணவனார் தீண்டபோன சமயத்தில் " எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று சத்தியம் செய்தார். கணவனார் சிறந்த சிவ தொண்டராகையால் அன்று முதல் தமது மனைவியையோ பிற பெண்களையோ சாரவில்லை. எவருக்கும் இச் செய்தி தெரியாவண்ணம் வாழ்க்கை நடாத்தினார் அவர் மனைவியார்.

*"கற்புறு மனைவியாரும் கணவனார்க்கான எல்லாம்*
*பொற்புறு மெய்யுறாமல் பொருந்துவம் போற்றிச் செய்ய*
*இற்புறம் பொழியா தங்கள் இருவரும் வேறுவைகி*
*அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தார்"*

கணவருடைய கடமைகளிலும் குடும்பக் கடமைகளிலும் தவறு நேராமலும் வேண்டியாங்கு செய்து வேறு வாழ்ந்தமையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிப்பது இப்பாடலாகும். இயற்பகையார் மனைவியும் சிறுத்தொண்டர் மனைவியும் புரிந்த தியாகம் அனைவரும் அறிந்ததே. ஏன்! பிற்காலத்தில் அன்னை சாரதாதேவியின் தியாகம் எம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறதே. தொண்டு நெறியில் தலைப்பட்டு தூண்டு தவ விளக்காக அமைந்து பிறந்த குடியையும் கூடிப்பிறந்த தம்பியையும் பெருமைப்படுத்திய பணி திலகவதியாருடையது. தம்பியார் உளராக வேண்டும் என வைத்து தயவு பெருகிச் சைவத்தையே வளர்த்த தொண்டரை ஆக்கித் தந்தது,. திலகவதியாரின் துய தொண்டுகளுக்கு இது ஒரு பெரும் எடுத்துக்காட்டாகும்.

இவ்வழியில் நின்று நாட்டை மேலோங்கச் செய்த பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. நாட்டையும் குடி மக்களையும் நன்நெறியில் செலுத்த வேண்டியது அரசியல் தர்மமாகும். அரசியற் பணியில் இது சிவதர்மமாகவே மாறிவிட்டது.

*"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்*
*வளவர் திருக்குலக் கொழுந்துவளை கைமானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்*
*தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை*
*நங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே*
*நம் தமிழ் நாடுற்ற இடர் நீக்கித் தங்கள்*
*பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்*
*போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே*

தம்மைப் பேணிய தன் கணவனைப் பேணி சைவத்தைப் பேணி, பாண்டி நாட்டையே, பேணிய பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. ஆன்மீகத்தோடு கலவாத அரசியல் அர்த்தமற்றது என்பதை மன்னனுக்கு எடுத்துக்காட்டியவர் இவர். இடர்ப்பாடு மலிந்த காலத்திலே நெருக்கடிக்குள்ளே சைவத்தைப் பேணி வளர்த்த அம்மையார். "தெய்வப் பாவை" என்று போற்றப்படுகிறார். பெண் பிறந்தார் யாவரும் இத்தகைய பணிகளிலும் முன்னின்று நாட்டை ஆன்மீக நெறியில் நலனடையச் செய்தல் வேண்டும்.

நன்றி : *அகில உலக இந்து மாநாடு மலர் 1982*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAIVA SIDDANTHA

***The Late Sivamani Sir Kanthiah Vaithianathan***

(The Late Sivamani Sir K. Vaithianathan, a former President of All Ceylon Hindu Congress, is remembered as one of the great Hindus after Sri La Sri Arumuga Navalar and Sir Pon. Ramanathan. He was devout Hindu and a keen student of all devotional literature and the Saiva Siddantha. Amidst his multi-farious official duties as a Civil Servant and later as a Minister he found the time to spread and stabilise the Hindu faith in minds of the people and we take great pleasure in publishing the summary of his Presidential Address at the 49th annual conference of the Saiva Siddantha Samajam held at Virudunagar, India on the 25th of December 1954)

It is fitting that the 49th Conference, which precedes the completion of the half century of devoted service in the cause of Saiva Religion of the Saiva Siddantha Samajam should be held in the City of Virudunagar (the city of victory) in old Pandiyan Territory, which was the nursery of Tamil Language and culture for over two thousand years. The city of Virudunagar is already famous in current times having given birth to the present Prime Minister of Madras State, Mr. Kumaraj Nadar. It is also noteworthy coincidence that the word "Virudu" is the first word of the laudatory songs sung by Saint Sambandar about Thiruketheeswaram, the ancient and sacred shrine of Lord Shiva in Ceylon, which is now being reconstructed to mark the revival of Saivaism in Ceylon.

The Samajam had intimate connection with Ceylon from its very inception . Saiva Siddantha and Tamil Scholars of Ceylon have made their lasting impression on the activities of the Samajam. It is significant that Sir Ponnambalam Ramanathan presided over the first Annual Conference of the Samajam 49 years ago. The earliest reference to Saivaism in Ceylon is in the Ramayana period, when Ravana performed severe penances to obtain great boons from Lord Shiva Saint Manikkavasagar (who lived in the 5th or 6th century A.D.) sings the praises of the devotion to Lord Shiva of Mandothari, the wife of Ravana. The recorded history of Saivaism in Ceylon in literature and through archaeology is so well known that it needs no repetition here.

The history of Shiva worship is as old as the existence of man on the Continent of Asia, including the parts like Laemuria, which according to geologists now lies under the Indian Ocean. The porto-mediterranean culture extending from Mexico through Wales, Malta, Crete, Mesopotamia into India is not unconnected with the Saiva Culture of the early Dravidian people. The discoveries at Harappa and Mohenjodaro are only connecting links of comparatively recent times. The concluding verses of Thiruvilayadal Puranam where reference is made to Lord Shiva himself disappearing into the Siva Lingam erected by Sage Agasthiar, raises an astronomical speculation regarding the time of Agasthiar. If the description of Agasthiar as the Sage of Zodiacal Sign of Khumba could be related to the precision of equinox, when the equinox fell within that sign, the age of Agasthiar may go into astronomical figures of time! This is an interesting piece of poetic speculation and may be followed as fancy leads.

Quite apart from truths arising from revelation and from Puranic and Shastric theories and dogmas as to the origin of Shiva worship, we have it in the works of Thiru moolar (a historic personage) that the early Saiva Saints called "Sithar" worshipped and realised the "Absolute Reality" in the form and traditional manner of Shiva. The culture of the Tamils of the Sangam Period, two thousand years ago, described in the Sangam classics like Purananuru, breathes a spirit of liberality most surprising in the present spirit of cast - iron orthodoxy of present-day pundits-"All the world is my country and humanity is my kith and kin" says a poet of old and "There is only one race (or caste), humanity, and one Lord reigns over all" says another. To them Divinity rested within the human personality. They turned their gaze inwardly and sat in contemplation to realise that Divinity. To Thiruvalluvar of early Christian era the Supreme Being had no name; he had only Divine qualities. It is this self-same spirit that moved the medieval Saints, like Saint Navukkarasar, to treat the human frame as the temple and control and subdue the senses and the wandering mind in order to realise the Lord within. "The God I worship" he said, "is the genuine devotee of Lord





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Shiva, may he be a leper pariah keeping body and soul together by eating the flesh of a cow". Saint Sundarar saw the Lord's devotees in all true worshippers of God outside even Saivaism. The universality of Saiva religion oozes from every line of Saint Manikkavasagar's Lyrics (6th to 8th century)-"To the Divinity that has no name, no form, not even 'substance'. we give a thousand names and forms to suit our own (play of mind)" says he. Ultimate Realization (call it Moksha, Heaven illumination or Nirvana) he, says can only be conceived "in images without words", "in 'feeling' without mind and memory". His own illumination he dares to sing of "Today I have seen an inner illumination like the sun dispelling darkness................"

Saivaism is the mother of the religions of India. In this back-ground, I plead for a greater sense of liberality among Saiva Siddantha orthodoxy in their attitude to the Sages and Saints of India of all ages, including modern times and the ages yet to come. Thayumanavar, the scholar, sage and saint of the 17th century, sings. "I have dissected and examined the various religions of our times and I see no real contradiction in their diverse teachings." It is a matter for regret that among a certain group of pundits that advaitsm (non-duality) of such a Saiva Saint is also frowned upon! The judgment on Saint Ramana Maharishi, nurtured in Saiva lore, seems still in suspense. Many other names of interest to students of Hindu Religion need not be referred to in this summary. But what of Sankarachariya? Professor Meenachi Suntharam claimed him as a Saivite at one of the conferences of this Samajam, and referred to the establishment by him of Siva temples and Saiva Muths from Kashmir to Cape Comorim, from East coast to West coast of India. His sin was that he wrote in Sanskrit, the lingua franca of religion of his times (like Latin in the Middle Ages Europe). He was nevertheless a Tamil of the Chera country long before that part of India adopted Malayalam. His Saiva works and services to Siva temples are worthy of review by Tamil Scholars. His fame and name have risen far above ordinary controversy; so much so that allegation by some that he was Buddhist in Hindu clothes and by others that he was an idolator, a Mayavadin or a Nihilist, do not mar his resplendent personality.

If in Radhakrishnan's Modern Treatise on Hindu Philosophy in two Volumes of 1,500 pages, Saiva Siddantha philosophy finds only 12 pages of a portion of a chapter, we have to look for the fault in our own orthodoxy, our pundits and heads of our Muths which are the traditional repository and patrons of religious learning. Whether it be a world Conference on religions like the Chicago Conference at which Swami Vivekananda shone, or the All-India Philosophical, Oriental or Religious Conferences, the devotees of Saiva Siddantha seem either indifferent, incapable or tongue tied or we send the wrong type of delegates.

I should refer, before I conclude, to some of the current problems which Saiva Siddantha has to face and solve. One is the language of temple worship. I note that at the 47th Annual Conference presided over by Swami Kuntrakudi, it was resolved that in temples in Tamil Nadu temple service should be conducted in Tamil. Ceylon waits to see how this is going to be given effect to. Meanwhile, it need only be mentioned by me here that this problem is nothing new; it arose in the times of Saiva revival of our Samaya Achariyas, when they sang that our Lord was "both an Aryan and a Tamil . It is also a note worthy fact that community singing and worship introduced by some advanced thinkers is now a feature of Saiva ritul, at gatherings at temples after the usual puja, or at private residences or public meetings. This practice, besides rousing popular religious enthusiasm, is also an answer, to the language problem.

There is also a serious wave of anti religion particularly in South India, which threatens the extinction of Temples, Even for this, I should say, it is partly our orthodoxy which is the root cause and partly our failure to impart proper religious education and social recognition of the under privileged. In the nature of things, an open opposition movement of this nature acts like the persecution and should strengthen the fervour of the faithful; so that I hope that it would eventually lead to a religious revival. But that would not happen without a conscious effort on our part. The modern youth looks not to our preachings but to the nature of the lives which their elders lead. If there had been reason and sincerity in the practice of religion, we would not be encountering now the organized opposition which faces us. Real culture in life does not consist in pundit learning. This was the substance of a recent public address by Sri Rajagopalachariar, which reminds me of what Einstein once said, "Culture is what is left in man after be has forgotten all he has learnt". Presiding over the 46th Annual Conference of this Samajam, Sri Omandur Ramaswamy Reddiar, your ex-prime Minister, appealed for regular household religious worship at levels appropriate to each, in which the parents, children and even friends can join. This, I consider to be the nearest to the jungle universities of old where pupils received individual teaching and training according to his standard of progress. This is the kind of example and leadership which is likely to influence the coming generation and the common man.

No amount of clever platform orations or legalistic philosophical talk or appeal to national sentiment can cure the present day ills arising from indifference to religion. We need a new generation of sincere broad minded men trained on religious principles for the progress of Asia, which waking to a new life of freedom,

(Courtesy : "Saiva Neethi" Law Students Hindu Maha Sabha Magazine 1969)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப்பிணி

கோ. ஆழ்வாப்பிள்ளை

அனாதியாகிய ஆன்மா, அனாதியான இறைவனுக்கு, அனாதி காலத்திருந்தே அடிமைப்பட்டுள்ளதென்பது சைவ சமூகத்தில் தோன்றிய முனிவர்களும் இருடிகளும் நாயன்மாரும் கண்ட முடிபு. இந்து மதம், வைதீக தர்மம், சனாதன தர்மம் எனப் பலபடக் கூறப்பட்டபோதிலும், இவையெல்லாம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து நிலவி வருவதும் மறு மதங்களுக்கெல்லாம் தாயகமாயுள்ளதுமான சைவ மதத்தையே குறிப்பன. சில கொள்கை பேதங்கள் காணப்படினும் சைவசித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கி சமயாதீதப் பொருளை எட்டி நிற்கின்றது. " உண்மை ஒன்றே அதைப் பலபடக் கூறுவர் ஞானியர்" என்ற இருக்கு வேத வாக்கியத்தில் அறிஞர் சமாதானம் காண்பர்.

முப்பொருள் உண்மையை நிலை நாட்டிய பெருமை சித்தாந்தத்துக்குரியது. இறைவனோடு ஆன்மாவும் நித்தியப் பொருள் என்பதோடு, இவ்விரு பொருள்களை இடையிட்டிருக்கும் ஆண்டான் அடிமைத் தொடர்பையும் சித்தாந்தம் வலியுறுத்தும். "இரும்பு நேர் நெஞ்சக் கள்வனேயானாலும் உன்னை இடை விட்டு நின்ற துண்டோ, என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ" என விண்ணப்பிக்கின்றார் தாயுமான சுவாமிகள். இந்த அடிமைநிலையையும் இறைவனை அடைய வேண்டுமென்ற அதன் இலட்சியத்தையும் உணராதிருக்கும் வகை அவித்தை அல்லது அறியாமை என்ற இருள் ஆன்மாவை மறைப்பதாகும். இவ்விருளைப் போக்கும் ஒளியை ஆன்மா தன் முயற்சியாலும் இறைவன் உதவியாலும் பெற வேண்டிய காரணத்தினால் பிறவி நிகழ்கின்றது. அதன் முயற்சிக்குத் துணையாக தநுகரண புவன போகங்களை இறைவன் வழங்குகிறான். ஆனால், ஆணவம் கன்மம், மாயை ஆதிய மலச் சேர்க்கை காரணத்தினால், ஆன்மாவின் அறிவு, இச்சை, செயலாவன களங்கப்பட்டு, தநு வாதிகள் துர்ப்பிரயோகத்துக்குள்ளாகி பிறவியில் இன்பத்தோடு துன்பமும் நிகழ்கின்ற. இவற்றால் கன்மமலம் அதிகரிக்கப் பிறவியும் மீண்டும் நிகழும். எனவே பசுவின், அதாவது ஆன்மாவின், அறிவு இச்சை, செயலெல்லாம் நீங்கப் பெற்று, யான் என தென்னும் செருக்கு அறப்பெற்று, ஆணவமுனைப்பு ஒடுங்கப்பெற்று, பசு கரணங்களெல்லாம் பதிகரணங்களாகப் பெற்று, பதியின் அறிவு இச்சை செயல்கள் பசுவைச் சேர்ந்து பொருந்தும்படி செய்தலே பசுவின் வீடு பேற்றுக்கு ஒரே மார்க்கமென நம் ஞானிகளும் நாயன்மார்களும் வற்புறுத்திப் போந்தனர்.

இங்கே இக வாழ்க்கையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் குறித்துச் சைவத்துக்கும் வேறு சில மதங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காண்கின்றோம் இன்பாநுபவங்களை விழைவதும் துன்பங்களை ஒழிப்பதுமே வாழ்க்கையின் நோக்கமெனப் போதிக்கும் சில மதங்கள். ஆனால் சைவமோ, " பேறிழவு இன்பமொடு பிணி மூப்புச்சாக்காடு, ஆறு முன் கருவுட்பட்டது" என்ற கொள்கையிலே, இன்ப துன்பங்கள் வினையால் வருபவை, ஆதலின் இவற்றைப் பொருட்டாகக் கருதாமல், வினையை யொழித்து ஈற்றில் வினையால் வரும் பிறவியையும் ஒழிப்பதே ஆன்ம இலட்சியமாயும் வாழ்க்கையின் நோக்கமாயும் அமையுமென ஆணித்தரமாகக் காட்டும். எனவே மும்மலங்களினின்று விடுபடுவதற்கு ஆதியில் பிறவி வேண்டப்படுமெனினும், பிறவி ஒரு பிணி யென்றே கொள்ளப்பட்டது. பிணி மூப்புச்சாக்காடாகிய துன்பங்கள் உயிர் சார்ந்திருக்கும் உடம்புக்குரியன. "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்" என்பது ஆன்றோர் வாக்கு. இத்துன்பங்கள் உயிரையும் பாதிக்காமலில்லை. அது பற்றியே பிறவிக்கும் வினைக்குமுள்ள தொடர்பைச் சைவமகான்கள் நிர்ணயித்தனர். இத்தொடர்பைத் தெள்ளத்தெளிய உரைக்கும் குமர குருபரர் பாடல் பின்வருமாறு:

*".படர்தரும் வெவ்வினைத் தொடர்பால் பவத்தொடர்பு*
*அப்பவத் தொடர்பால் படரா நிற்கும்*
*விடலரும் வெவ்வினைத் தொடர்பு அவ்வினைத் தொடர்புக்கு*
*ஒழிபுண்டோ வினையேற்கம்மா."*

எனவே ஆணவ மலத்தினின்று விடுபடுவதற்குக் கன்மமும் மாயையும் துணை புரிவன. ஆனால் " இருவினை இன்பதுன்பத்து இவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும்." என்றபடி பிறவி மீண்டும் நிகழ்வதற்குக் காரணமாவதும் கன்மமே.

பிறவியைப் பாதிக்கும் இழுக்குகளில் மிகக் கொடியதும் வேதனை தருவதுமானது சாக்காடு. நல்வினைகளைப் புரிந்து இறைவனைப் பக்தி செய்தால், இறை காட்சி கைவரப்பெறும் சந்தர்ப்பத்திலே "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" எனப் பிறவியை வியக்கின்றார் அப்பரடிகள். ஆனால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப் பரடிகளே பிறவியின் இழிவையும் ஆணித்தரமாக விளக்குகிறார். அந்தப்பாசுரம் பின்வருமாறு. பிறத்தலும், பிறந்தாற் பிணிப்படவாய் நதசைந்துடலம் புகுந்து நின்று இறக்குமாறுளதே இழிந்தேன் பிறப்பினை நான், அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச்செற்றக்குரோத நீக்கியுன் திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே'' நம் பொருளிலக்கியங்களிலும் அருளிலக்கியங்களிலும் வேறு பல அடைகளுடனும் பிறவி அழைக்கப்படுகின்றது. நோய், கடல், பெளவம், துயர், தொடக்கு என்றெல்லாம் கூறப்படுகின்றது. பிறவி இழிந்தது, வேண்டப்படாதது, வெறுத்தற்குரியது, ஒழிக்கப்படவேண்டியது என்ற கொள்கை சைவத் தோத்திர சாஸ்திரங்களில் விளக்கம் பெறுகிறது. அத்தோடு இப்பிணிக்கு மருந்தையும் ஐயந்திரிபற இவை எமக்கு விரித்துரைக்கின்றன. இறைவன் கருணைப்பிரவாகத்தில் தோய்ந்து, அவனால் ஆட் கொள்ளப்படுவது, பிறவியையும் வினைகளையும் ஒழிப்பதற்கு ஒரேயொரு வழி. அவன் அருள் எல்லார் மட்டும் செல்லுமாயினும் அறவழி நின்று, சாதனைகள் புரிந்து, இடையறாமல் பக்தி செய்து, தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்பவர் மாட்டே தானே அது வெளிப்படுகின்றது. இவ்வுண்மையை நம் நாயன்மார்களுடைய வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் காண்கின்றோம். தூய இறைபக்தியின் தன்மையை அருமையாக வர்ணிக்கின்றார் மணிவாசகப் பெருமான். அவர் பாடல் பின்வருமாறு:

"இருத்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னினல்லால்
விருத்தின னேனை விடுதிகண்டாய் மிக்கநஞ் சமுதா
அருந்தினனே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
மருந்தினனே பிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கே"

இறைவனை பக்தி செய்து, தம் வினையெல்லாம் ஒழியப் பெற்று, பிறவியை ஒழித்து, இறைவனடி சேர்ந்தவர்கள் சைவப் பரம்பரையில் பலர். இவர்கள் உலக வாழ்க்கையிலிருந்து முற்றும் ஒதுங்கினவர் அல்லர். " மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும், எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை'' என்பதற்கேற்ப இவ்வுலகில் நடமாடியவர்கள் பக்தியை வளர்க்கும் அறம், அன்பு, அருளென்னும் பண்புகளால் தம் வாழ்க்கையை நிரப்பியவர்கள். பிறரிடம் அன்பு காட்டினால்தான் இறைவனிடம் அன்பு வளரும் பிறரிடம் அருள் நோக்கு இருந்தாலே இறைவன் அருளுக்குப் பாத்தியப்படலாம். அத்தோடு இறைவழிபாட்டை இறையன்பை வளர்க்கும் ஒரு முக்கிய சாதனமாய்க் கண்டார்கள். இறைவழிபாட்டில் சிறந்த முறை கோயில் வழிபாடு. பக்திமார்க்கத்தில் நான்கு படிகளை வகுத்து இறைவன் மேல் பக்தியைப் பெருக்கும் சாதனைகளை சரியா கிரியா ஒழுக்கங்களில் நம் நாயன்மார்கள் வைத்தார்கள். கோயில் கட்டல் கோயிலைப் புனர் உத்தாரணம் செய்தல், விழா நடத்தல், இறைவன் புகழைப் பாடுதல், அவன் உருவத்திருமேனியைப் பூசித்தல் ஆகியவை சரியை கிரியைகளிலடங்கும். இருவினையும் ஒய்ந்தால் தான் பிறப்பு அறும். ஆனால் தீவினையைப் போக்குவதற்கு நல்வினை உதவும். இறைவனைக் கோயிலில் பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தால் பக்திபெருகுவதோடு நல்வினைச் செய்கை தூண்டப்படும் .

யாதொருகோயில் திருப்பணி நிறைவேறுங்காலை அக்கோயில் மூர்த்தியைத் திருமஞ்சனம்செய்து அலங்கரித்து வழிபடுங்கால் அவர் விசேட அருள் பக்தர் மேல் பதியும் என்ற நம்பிக்கையில் கும்பாபிஷேகம் வழிபாட்டு முறையாகக் கருதப்பட்டு வந்தது. ஆலய வழிபாடு பண்டைவினைகளைக் களைவதற்குச் சாதகமாய் அமையுமென நம் நாயன்மார்கள் போதித்ததோடு தாமே தலங்கள் தொறும் சென்று இறைவனைத் தரிசித்துப் பதிகங்கள் பாடினார்கள்.

குறிப்பு : *திரு. ஆழ்வாப்பிள்ளை மாமன்றத்தை நிறுவிய முக்கியஸ்தர்களில் ஒருவர். அவர் மாமன்றத்தின் முதலாவது பொதுச் செயலாளர்.*

(நன்றி: *திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் 1976*)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE HINDU FAMILY

*Mrs. Poomani Gulasingham*

The family is the basic unit in a society, evolved through the years by tradition and culture, to satisfy the psychological, biological and social needs of man and woman while fulfilling the sacred task of bringing forth, nurturing and training of its young for adult society. The family, therefore, caters to the needs, aspirations and idologies of that particular society. The health of a nation is dependent on the proper functioning of the family. It really forms the cradle of a nation's culture and morals.

Before getting on to my theme, I shall give a sociological definition of the family and then elucidate the philosophy of the Hindu family, and the roles and functions of its members.

## DEFINITION OF A FAMILY

Burges & Locke defines the family, as a "group of persons united by ties of marriage consisting of a single household, interacting and communicating with each other in their respective social roles of husband and wife, mother and father, son and daughter, brother and sister, creating and maintaining a common culture and forming a well knit "we" group". Although the family had its origins as a reproductive unit, it has evolved into a basic social unit of the highest importance to man and society. "Of all the organisations large and small which the society upholds" observes MacIver and Page "none transcends the family in the intensity of its sociological significance. It influences the whole society in innumerable ways. Any changes within it reverbrates through the whole society and Nation".

The primary functions of the family have been classified as (a) the more stable satisfaction of the sex need of man and woman; (b) Procreation and nurturing of the young; (c) sharing of the home and all that it involves. As a social unit the family has already assimilated through the years and ages the traditions, sentiments and mode of behaviour of the society. It, therefore, plays the part of a suitable medium to convey them to its individual members. Thus in the family, the biological, psychological and social forces meet to give the individual a start in life. Man is not born human or social, but he becomes so both through association and communication and the family, is the first and foremost agency-in his cultural conditioning, by providing for him, and directing his earliest behaviour patterns and standards of conduct. The foundations of the physical intellectual, emotional, social, moral and spiritual growth and development of the young are laid in the family.

## PROBLEM TODAY

In the modern materialistic age the rapid advances in Science Technology and the consequent changes in the socio economic life of man, has had its repercussion on the family. Marriages are loosing their sanctity and their rightful purpose. "It is becoming an egoistic contractual association of male and female in the interest of pleasure and utility" says Prof. Sokorin in 'Reconstruction of Humanity'. Even in the Hindu family several of the original functions like education, nurturing, the social economic leisure time and religious functions have been gradually taken over by other agencies, Social and Welfare Organisations - both private and public Sector. The earlier extended family is now replaced by the new independent neuclear family. This is a poor school for the socialization of children. In their search for freedom, power, status and pleasure, parents have no time for the family. With both parents





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

working, children are largely left to themselves with minimal parental control and guidance. The aged feel, insecure, and neglected. Due to inadequate emotional satisfaction children lack respect, trust and confidence in parents and feel insecure. Loneliness, mental ailments, neurosis, juvenile delinquency, disrespect for elders and their law are on the ascendency. These manifest in unrest, tension, alcoholism, drug addiction, violence, rape and crime and even suicide. Society is also faced with the problem of orphans and aged. Hence there is a real need, to re-examine traditional values and re-orient the family paving the way for a stable and peaceful society.

## PHILOSOPHY OF HINDU SOCIETY

To understand the Hindu family it is necessary to know the essentials of Hinduism. Being one of the oldest religious traditions, it was not founded by a single person but contains the eternal laws (truths) discovered by the Sages of old. These are contained in the Vedas and the Vedas are not books but a body of sacred knowledge concerning the Universe and the spiritual laws governing them, as revealed to the sages, in the depths of their meditation. The principles they discovered include (1) the Unity of existence (2) the Divinity of the Soul (3) Unity in Diversity. All these have been proved by modern science. Moreover, biological science accepts spiritual evolution as the third dimension of human development. The personality of man has been found to consist of three dimensions (1) brute (2) the human (3) the Divine. The purpose of life is to rise above brute level and rise to the level of human and Divine or spirit level.

The ancient Hindu Sages through their subjective research found the Divine pervading the entire Universe, in all its dimensions. Man being part of nature has this divinity within him. All things in nature complete their life cycle and get back to the source. The purpose of human existence is also to evolve spiritually and get back to the source - the individual soul (Atman) has to get back to the Universal Soul. To actualise this man has to liberate the Soul from the bondage of the senses overcome Annavam, Karma and Maya while living in the material world and achieve perfection through self control and discipline. All things in nature function according to a natural unerring eternal law which the Upanishads call "Sathiyam Ritam". Man is also governed by this law which is Dharma or righteousness. In fact the original name of Hinduism is Sanathana Dharma which means the Eternal laws. The Hindu religion is therefore, a way of life, based on the Dharma and Suwadharma for self-improvement. For this man has to discipline his mind (the controller of thoughts and actions) purify the heart and emotions and develop the Will to fall in line with the Dharma. He needs to manifest his spirit which is the embodiment of love and unselfishness which paves the way for sacrifice, co-operation, peace and harmony leading to the common good. Religion therefore, is the core of Hindu life associated with worship, prayer, chanting of hyms, mantras, abstinence, sacred days, a set of ceremonies rites rituals and festivals guiding one towards the Goal of life - Union with the Supreme spirit for which the soul has to be rid of "Malam".

## HINDU SOCIAL INSTITUTION

The primary development of spiritual evolution is met by the Hindu Social Institution of the "Ashrama Dharma". The family institution called "Illaram" has been designed for this purpose. Man was found to go through four stages of psychological development which the Hindu Sages discovered in Vedic times. These being (1) <u>**Brahamachariya Asramam**</u> the youthful stage of student hood a period of preparation for life. Unlike our present education which is directed to certification and employment, the ancient Gurukula system was a process of discipline in the Art and Science of spiritual unfoldment under an evolved soul the Guru - from the age of 7 to 21 - 22. It was for building a man of character. For this the training of the mind for analysing, discriminating and development of the will was considered vital. Purity of heart was indispensable. The study of the scriptures and its practise developed their ethical and moral sense. They fully realised their goal in life and fashioned their life accordingly. At the convocation the Guru exhorts the disciple to speak the Truth. Be honest, perform the five fold duties, continue the study of scriptures, remember the devotion to God, respect parents and elders and contribute his share to the welfare of society. Today our children receive free education and do not want to pay this debt to society by contributing to its welfare. Instead they indulge in grabing or taking everything free for their individual



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

gain. Hence society and environment become poorer and poorer due to the practise of "robbery".

(2) The next stage 25 - 50 years is the **Girhasta Ashramam** or Illaram where he lives the life of a householder raises a family and works for his spiritual evolutions and the good of the society. (3) The third is the **Vanaprasta** Stage 50 - 70 years where he gradually detaches himself from the responsibility of the family and serve as a consultant. (4) The Senile stage is the **Sanniyas Ashramam** where he really becomes old and feeble. His eye sight weakens, hearing gets impaired, memory poor - he cannot contribute any more to society so he detaches himself completely from the family living only in the thought of God. Children perform their duty and gain their blessings.

## FAMILY LIFE "ILLARAM" - GIRHASTA STAGE

This is the most important stage in the life of man and woman - The life of a house holder. The welfare of society and mankind is dependent on the proper functioning of this Ashramam.

Family life begins with marriage or "Vivaha", a union of two souls to commence together the "jeeva yarthirai". Marriage is a sacred bond for procreation, nurturing of the young, caring of elders, performing all the duties for the welfare of the family and transmission of culture. Religion forms the core of life and everything is done for the Supreme Being and with His blessings.

Man and woman are equal partners in the home but their roles and functions are necessarily different and dependent on their suvadharma. Hence duties are complementary. One cannot exist without the other. They both have to work towards the building of a happy home, the temple of sacred traditions and a laboratory of love - abounding in give and take reciprocal love, unselfishness, sacrifice and co-operation. To the Hindu the Soul has no gender but it takes a male or female form to work out its karma. Hence each one has to live in his or her Suvadharma, equality lies in the equal chances of spiritual evolution. Here the wife is the "Sahadharmini". No religious rites can be performed without her.

The modern trend of equality and liberation claimed by women results in uniformity or the same roles and functions. This leads to competition, manifesting in jealousy, disharmony and conflicting roles. Uniformity cannot build unity. As in nature diversity builds unity and peace. Hence the roles and functions need to be varied and complementary for the building of a happy home. For the women, chastity was a virtue to be safeguarded, for this she needed the parental protection at childhood, the husband after marriage and sons at old-age.

Motherhood is the ideal for the woman and the family needs a son to carry on the traditions. The type of child the couple (Dampathy - தம்பதி) gets is dependant on their virtues (merits) so children are born with much yearning and prayer than through lust. To the wife the husband is the Lord and Master. He should be respected, obeyed and adored, by her. The husband on the other hand has to treat her with respect affection and kindness. She being the cause of the begetting of offsprings and their nurturing. His Dharma is to protect her and keep her happy - for the welfare of the family depended on this. Both had to be loyal and faithful to each other - this has to be maintained even after the death of any one of the partners.

The traditional family is a joint one built on co-operation, love, mutual trust, service and sacrifice for the common good. Often two to three generations lived in one household - the family was a miniature society and provided all the experience and training for life - Economic, psychological, social, religious and moral. In the home the "Illal" the Lady of the house was ruler. The quality of the home was not dependent as its structure and facilities but the mother. Thiruvalluar says the maintenance of the peace and happiness in the home and the performance of (Aram) Dharma depended on her, she had to be relaxed, control her thoughts, speech and actions. To be a mother to all needed self control, unselfishness and sacrifice. Her duties were being a helpmate and adviser to her husband, caring the offsprings, and attending to all their needs, giving them support and reassurance at all times, preparing and serving food with love, and affection, serving the aged parents and elders, spending carefully, maintaining cordial relations with relatives and guests and managing the entire household in a spirit of service and love. The softer feminine qualities blossomed through performance of these duties. Life was lived on the basis



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of Aram Porul Inpam Dharma Artha Kamma leading to Moksha - the mother observed all the religious traditions, her bakthi and faith in good gave her strength and courage to carry on her varied duties. Both husband and wife perform the Pancha yajanas and seek the blessings for the good of the family. These include the duty to the Gods, duty to the dead ancestors, duty to family and community, duty to guests - (Poor who come to the door) and duty to the dumb creatures. To the Hindu, life was not a selfish search for personal gain but service through the concept of duty, the idea of giving was emphasised. Happiness comes through giving and not grabbing. Unlike in today's world where man is fighting for rights even at international levels to restore justice and peace, the Hindu system valued duty and this Dharma - each one performing his or her duty, justice and order was maintained. This was the means to the goal of life. Dharma was therefore the foundation on which the life of family and society depended. In the pursuit of economic activities - Artha - Dharma had to be upheld, wealth was earned through right and just means. This was not for hoarding but for the welfare of the family and community. Even in the pursuit of "Karma" the emotional ends self-control and restraint had to be exercised. Brute instincts and lust had to be averted. All women were treated as mothers and girls were treated with great respect. "When women in the household are happy the Gods rejoice". "When women are unhappy even religious rites will not bear fruit." Say the Dharma Sastras. Purity, honesty, chastity and self control guided one in the pursuit of "kamma".

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப்படும்

says the Thirukkural. Moral conduct was highly prized in Hindu life,

Children were well cared for, treated with love, affection and care. All religious festivals, feasts and celebrations had a special place for children. The four fundamental needs (i) new experience (ii) security (iii) recognition (iv) response, were fully satisfied and children grew in an atmosphere of care and concern. They were gradually given responsibility and trained to become independent.

The aged too were treated with respect and cared for as a matter of duty and paying off debts. They being happy was a source of blessing for the family.

## CONCLUSION

In the Hindu system family life was organised in an orderly manner with an emphasis on Dharma, duty or righteousness because the goal was spiritual evolution. In the modern family the goal is wealth and status and this can be actualised by any means. Hence there is an erosion of moral values. Materialism and consumerism is changing the Hindu ways of life. Our education system being geared to employment and not character creates competition not only between man and man but man and woman. This also builds negative values of hatred, jealousy, anger and fear. In the clamour for equality and liberation the women are gradually liberating themselves from their place in the home and exposing themselves to the outer world. This is seen in the increase of sexual misconduct and violence which is a problem to society. The family life is getting dis-organised and children are growing up in neglect, loss of affection and care. Family life has lost its meaning. Despite the increase in nurseries, creches, schools, hotels and eating houses as substitutes for the home, juvenile delinquency and youthful criminality and vandalism is on the increase. It is, therefore, necessary to re-examine the present family system and re-emphasise the traditional Hindu values which would help to build a harmonious and peaceful society.

## BIBLIOGRAPHY


1. Burges L.W. & Locke J. - The Family
2. MacIver R.M. & Page - Society
3. R. Linton - The Study of Man
4. L. brown - Social Psychology
5. Prof. Sokorin - Reconstruction of Humanity
6. Prof. D.S. Sarma - Ethical philosophies of India
7. Dr. S. Radhakrishnan - (i) The Hindu View of Life (ii) East West Philosophies .
8. Swami Renganatharanda - Eternal Values for a Changing Society.
9. Swami Prabhavananda - The Spiritual Herit age of India
10. Alva L. - The future Shock.
11. C.N. Singaravel - Glimpses of Saiva - Siddhanta.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னூஞ்சலும் அதன் உட்பொருளும்

க. இராசரெத்தினம்,
ஆரையம்பதி - 01.

அரிதரிது மானிடராய்ப் பிறத்தல். மக்கட் பிறப்பே கிடைத்தற்கரிய பிறப்பென்கிறது சிவஞான சித்தியார்!, இறைவன் உயிர்களின் வினைக்கீடாக எண்பத்து நான்கு நூறாயிர உருபேதங்களில் மானிடப்பிறவியை நமக்குத் தருகின்றான்.

*"அண்ட சஞ்சுவதே சங்களுற்பிஞ்சஞ் சராயுசத் தொடெண்டரு*
*நாலெண் பத்து*
*நான்கு நூறாயிரத்தாய் உண்டுபல் யோநியெல்லா மொழிந்து*
*மானுடத்தித்தல*
*கண்டிடற் கடலைக் கையானந்தினன் காரியங்காண்"*
*– சி. சித்தியார் –*

மானுடப்பிறவியை எடுத்தல் பெரிய சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரையேறினதற்கு ஒப்பாகும் என்பது அருணந்தி சிவாச்சாரியாரின் கருத்து.

இறைவன் நமக்கு இப்பிறவியைத் தருவது நம்பொருட்டேயாகும். உயிரை அனாதியே பீடித்துள்ள மலங்களைத் தேயவைத்து இறப்புப் பிறப்பென்னும் வட்டத்தில் சுழல விடாமல் தடுத்து நம்மை அவனிடம் ஒடுங்கவைப்பதே அவனது நோக்கம். உயிரை இறைவனுடன் ஒடுங்க வைப்பதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று சரியை, கிரியை நெறிநின்று இறைவனை அகப்புறக் கருவிகளால் திருக்கோயில்களில் எழுந்தருளுகின்ற திருவருட் திருமேனிகளிடத்து உயிரை ஒடுங்கவைப்பது. மற்றையது யோக ஞானநெறி நின்று இறைவனை வழிபடுகின்றவர்கள் தத்தம் உடம்பிற்குள்ளே உறைகின்ற இறைவனை தத்தம் உடல்களாகிய திருக்கோயில்களுக்குள் கண்டுகளித்துச் சமாதி கூடியிருத்தல். இதில் முன்னையதே நம்போன்றோருக்குச் சாத்தியமானது.

இறைவனை அடையும் நெறியைக் காட்டும் துணைப்பொருள் நமது ஆலயங்களாகும். ஆலயங்களிலே நடைபெறும் பூசைகள், விழாக்கள், உற்சவங்கள் அனைத்தும் வேதாகமம் தழுவியதாகவும் சித்தாந்தக் கருத்தை உள்ளடக்கியதாகவும் அமைவன. ஆலயங்களில் இடம்பெறும் கொடியேற்றம் இறைவனின் படைத்தல் தொழிலையும், திருவிழாக்கள் காத்தல் தொழிலையும், இரதோற்சவம் அழித்தல் தொழிலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் குறிப்பவையாகும். விழாக்கள் முடிவுறுங்காலத்து ஆலயங்களில் பொன்னூஞ்சல் ஆட்டுவது வழக்காறு, அருள்பெற்ற உயிர் (ஆன்மா) அருள்பாலிக்கும் இறைவனுடன் (பரமாத்மா) கலக்கும் போது நிகழும் சலனத்தை வெளிப்படுத்திக் காட்டுவான் பொன்னூஞ்சல் ஆட்டம் ஏற்படுத்தப்பட்டதெனலாம்.

உயிர் சடப்பொருள்களான கருவிகளுடன் கூடிவாழ்ந்து பலபிறப்புக்களில் உழன்று இறுதியில் பக்குவநிலை எய்தி இறைவனாகிய பரமாத்மாவுடன் இரண்டறக்கலக்கும்போது நிகழும் சலனம் பொன்னூஞ்சல் ஆட்டம். இதனை சாலனதந்திரம் என யோகிகள் கூறுகின்றனர். இதனை வேறுவகையாகக் கூறுவதானால் பாவனையால் காண்பிப்பதே பொன்னூஞ்சல் ஆட்டம்.

ஆன்மா இறைவனுடன் கலக்கும் சலன காலத்தில் தான் அனுபவித்த இன்ப துன்பங்களை அதாவது தான் அசுத்த மாயையில் அடங்கியிருந்த பொழுது அனுபவித்தவைகளை சுத்தமாயையினுட் புகும் பொழுது மீறாது விடும் அல்லது மறைந்து போகும். இதன் காரணமாகத்தான் பொன்னூஞ்சல் ஆடும் போது பாடப்படும் பாட்டுக்களில் அவனின் அருளும் புகழும் இன்றி அவனது திறன் பேசப்படுவதில்லை. ஆன்மா இறைவனுடன் கலக்கும் நிலையை திருமந்திரத்தின் ஐந்தாவது தந்திரமும் சிவஞான போதத்தின் எட்டாவது சூத்திரம் முதலானவைகளும் தெளிவாக விபரிக்கின்றன.

*"அவனே தானேயாகிய வந்நெறி யேகனாகி யிறைபணி நிற்க*
*மலமாயை*
*தன்னொடு வல்வினையின்றே"*
*– சிவஞானபோதம் –*

உயிர் முப்பத்தாறு தத்துவங்களினின்றும் விரிந்த தனுகரண புவன போகங்களிலிருந்து தன்னை வேறாகக் கண்டு தனது ஈடேற்றத்திற்கு முயலும்போது இறைவன் திருவருளால் தூய்மையடைந்து உயிர்வடிவம் பெற்று "நான் எனது" என்னும் ஆணவச் செருக்கை அடக்கித்தன் செயலைச் சிவன் செயலாக கருதித்தனக்கேற்படுகின்ற இறப்புப் பிறப்புச் சுழற்சியை உணர்ந்து தன்னைச் சிவனாகப் பாவித்த (சாரூபம்) திருவருளுடன் ஒன்றாகப் பொருந்து வீட்டின் பத்திய (சாயுச்சியம்) திளைக்கும் என்பதன் பாவனையே பொன்னூஞ்சல் ஆட்டம் என்றால் தவறாகாது.

இந்த உண்மைகளை அறியாத சிலமூடர்கள் தங்கள் மனம்போனபோக்கில் இல்லிக்குடமன்ன ஊஞ்சல் பாட்டுக்களை எழுதி ஆலயங்களில் படிக்கின்றார்கள். அறங்காவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கோரிடம் ஆராயாமல் அப்படியான பாட்டுக்களை ஆலயங்களில் பாட அனுமதித்துவிடுகின்றார்கள். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். சைவ ஆலயங்களிலே சைவ நெறியைச் சரிப்பட வளர்த்தும் அவைகளைப் பேணிப் பாதுகாத்தும் வரவேண்டியவர்களான அறங்காவலர்கள் மூடத்தனமாக நடந்துகொள்வது சைவசமய சித்தாந்த சாத்திரங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவதற்கொப்பாகும்.

ஒரு கோயிலிலே ஒருவர் கண்ணகிமேல் ஊஞ்சல் பாட்டெழுதிப் பாடினார். அப்பாடல்கள் கண்ணகியின் வாழ்க்கையைச் சித்திரிப்பதாகவிருந்தது. கண்ணகியின் வாழ்க்கை அசுத்தமாயையினால் மூடப்பட்டிருந்தது. இறைவனின் திருவருளினால் அவளைப் பீடித்திருந்த மலபந்தம் நீங்கி சுத்தமாயையினுள் புகுந்து இறைவனுடன் கலக்கும் நிலையையே கண்ணகியின் ஊஞ்சல் காட்டுவது . அசுத்த மாயைநீங்கிய விடத்து அவள் அனுபவித்த இன்பதுன்பங்களும் மறைந்து விடுகின்றன. அப்பால் அவளது வாழ்க்கையைக் கதைபேசுவதில் அர்த்தமில்லை. அல்லாமல் யாரும் அவ்வழி நிற்றலுமில்லை. இருபாலைச் சேனாதிராயர் பாடித்தந்த கண்ணகி ஊஞ்சல் பாட்டில் கண்ணகி எப்படி வாழ்ந்தாள் என்பது பேசப்படவில்லை. இதேபோல் ஏனைய ஊஞ்சல் பாக்களிலும் மூர்த்திகளின் திறன் கூறப்படுப்படுவதாக இல்லை. சிவபிரான் முப்புரம் எரித்தான், நஞ்சுண்டான். தக்கன் வேள்வியை அழித்தான் என்றெல்லாம் அவன் மேல் பாடப்பட்டிருக்கும் ஊஞ்சல் பாக்களில் காண முடியாது. இதே போலவே ஏனைய மூர்த்திகளின் மேல் பாடப்பெற்ற ஊஞ்சல் பாக்களும் அமைந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். அவனது அருள், புகழ் உறைகின்ற இடம் காதாடு குண்டலங்கள் பற்றியே ஊஞ்சல் பாட்டுக்கள் கூறும். ஊஞ்சல் ஆடும் பழக்கம் அனாதியானது. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரம் இதனைச் சுட்டிக் காட்டுகின்றது.

*"வடங் கொண் மணி ஊஞ்சல் மேலிரீஇ ஐயையுடங் கொருவர்கை நிமிர்த்தாங்கு ஒற்றை மொலூக்க"*

உவகை எழுங்காலை மக்கள் ஊஞ்சல் ஆடும் வழக்கம் கிராம மக்கள் இடையேயுள்ளது. ஆலயங்களிலே நடைபெறும் ஊஞ்சலும் அங்கு பாடப்படும் பாட்டும் சற்று வேறுபாடுடையது. பிரணவத்தை , பொன்னாலான பலகையாக்கி அதன்மீது மூர்த்தியை இருத்தி அவனது புகழையும் அருளையும் பாடி ஆடுவதனால் இதனைப் பொன்னூஞ்சல் என்கின்றோம். பொன்னூஞ்சல் பாட்டுக்கள் அநேகமாக பத்துப் பதினொரு பாட்டுக்களுக்கு மேற்படாது, அவைகள் தெய்வம் சூட்டிய பாட்டுக்களாகவே அமைந்திருக்கும். மணிவாசகப் பெருமான்பாடிய ஊஞ்சல் பாட்டுக்கள் ஒன்பது மட்டுமே. இதற்கு உரை எழுதிய நவநீதிக் கிருஷ்ணபாரதியார் அவர்கள் பொன்னூஞ்சல் பாட்டுக்களின் அமைப்பு எவ்வாறிருக்க வேண்டுமென்பதைக் கூறும் வகையைக் கவனிப்போமாக.

பொன்னூஞ்சலில் இயற்கைப் பொருளடைவு இருபகுதிகளாகும். அவையாவன இறைவனின் பொதுத் திறனைப் பற்றியும் அருளைப் பெறுபவனுடைய திறனைப் பற்றியுமாகும்.

**1ம் பிரிவு :**

01. இறைவனுடைய குணம் பரவி ஊஞ்சலாடுதல்.
02. இறைவனுடைய தூய புகழ்பாடி ஆடுதல்.
03. இறைவன் தங்குமிடம் பாடி ஆடுதல்.

**2ம் பிரிவு :**

04. நம்மை ஆண்டானைப் பற்றியாடுதல்.
05. இறைவன் தங்கும் மாடமாளிகை பாடியாடுதல்.
06. நாயேனை யாண்டானுடைய காதாடுங்குண்டலங்கள் பாடியாடுதல்.
07. என்னை ஆண்டு கொண்டான் எழில்பாடுதல்
08. எம்பிறப்பற மங்கையும் தானும் வந்தபணி கொள்ளும் குணம் பரவியாடுதல்.
09. நமக்கு ஊராகத் தந்த அவன் திருவடிகளைப் பாடி ஆடுதல் என்பனவாகும்.

அறங்காவலர்களும், ஊரவர்களும், குருமார்களும் ஏனையோரும் ஆலயங்களில் இடம்பெறும் சகல கருமங்களும் சைவநெறி பிறழாது இடம்பெறவேண்டியதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத்தவறுவார்களேயானால் அவர்கள் தெய்வ தண்டனைக்குள்ளாவார்கள்.

பிரணவ மலையில் மனதையும் பார்வையையும் வைத்துச் சாலன என்னும் தந்திரத்தைச் செய்தால் ஈசான திசையில் சிவன் தோன்றி ஆனந்தத்தைக் கொடுப்பான் என்னும் சித்தாந்தக் கருத்தை விளக்குவது பொன்னூஞ்சலின் உட் பொருளாகும்.

*"ஊன் அறியாதொன்றும் உயிர் அறியாதொன்றும் இவை, தானறியாதார் அறிவார் தான்"* – திருவருட்பயன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கை

தமிழ்மணி (திருமதி) பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்
திருகோணமலை.

ஆன்மீகம் என்ற சொல் எல்லா மதங்களுக்கும் பொதுவாக இருப்பினும் சிறப்பாக அது இந்து மதத்தினராலேயே அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகக் கருதப்படுகின்றது. இந்து சமயத்தின் அடிப்படை நாதமே ஆன்மீகந்தான்.

வாழ்க்கை என்று கூறும்போது அது உடலும் உள்ளமும் சேர்ந்ததாகவே இருக்க வேண்டும். உடலுக்குப் பொருள் தேவை உயிருக்கு அருள் தேவை.

இதனாலேயே அருளில்லார்க்கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றார் வள்ளுவர். இவ்வுலகில் நாம் வாழ்வதற்குப் பொருள் ஒரு இன்றியமையாத அம்சமாகிவிட்டது. அதிலும் இன்றைய காலகட்டத்தில் இந்த வாழ்க்கை எமக்கும் கிடைத்ததே பொருளீட்டத்தான் என்ற தப்பான எண்ணத்தில் மக்கள் அதற்காக தம் அன்றாட இல்லற தர்மங்களையே மறந்து கொண்டிருக்கிறார்கள்.

உண்மை செல்வம் இவ்வாழ்வுக்கு அவசியமான ஒரு பொருள்தான். ஆயின் அது தர்மவழியில் ஈட்டப்பட வேண்டும். அதேபோல் அருள் இல்லாவிட்டால் எமக்கு அவ்வுலகத்தில் இடமிருக்காது.

உடல் தேவைகள் வசதியாக அமையாவிடின் உயிர் நலமும் உடல்நலமும் சிறப்பாக அமைய முடியாது. பொருள் ஏராளமாக இருந்தும் அதில் அருள் கலக்காது விட்டால் வாழ்க்கையின் குறிக்கோள் ஊனமாகிவிடுகிறது.

நம்மைச் சுற்றியுள்ள வான், நீர், வாயு, நிலம், பூமி, ஆகியவற்றை நாம் உயிர் வாழ்வதற்கேற்றவாறு எமது அறிவியலை மையமாக வைத்து எமக்கு வேண்டியவாறு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவுவதே அறிவியல் அல்லது விஞ்ஞானம் என்று கூறிக் கொள்ளப்படுகிறது.

ஆன்மீகத்தின் தரத்தை அறிந்து அதை மேலும் உயர்த்துவதற்கு முயற்சி செய்யும் வாழ்க்கைக்குப் பெயர்தான் ஆன்மீகம். அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றுக்கொன்று துணையாக இருக்கவேண்டியவை. ஆன்மீகம் அற்ற அறிவியலும் அறிவியல் அற்ற ஆன்மீகமும் வாசமற்ற மலருக்கும் சுவையற்ற பாலுக்கும் ஒப்பானவை.

இன்று உலகத்தை, இல்லை உலகத்தில் ஒரு சிறு துளியாக இருக்கும் எமது நாட்டை எடுத்துக் கொள்வோம். மக்கள் அணு ஆயுதம், போருக்குகிடையில் சாவதா வாழ்வதா என்ற நிலையில் பயத்தின் விழிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அருளியல் கலவாத அறிவியல் ஆர்வத்துக்குப் பதிலாக அழிவையே தரவல்லது.

அறிவியல் என்றும் ஆன்மீகம் என்றும் கூறும்போது சமூகநோக்கில் இவைபற்றிச் சிறிது சிந்திப்பது சாலவும் சிறந்ததென்று எண்ணுகிறேன்.

சமூகம் என்று கூறும்போது மனிதர் பலர் கூடிவாழும் பிரிவுகளாகக் குறிக்கும் சமூக அமைப்பிற்கு அறிவியல் மிகவும் முக்கியமான அம்சமாகும். ஆரம்பத்தில் மனிதர்களுக்கு விலங்குகளாலும் , திருடர்களாலும், அயலவர்களாலும், ஏற்படும் தீங்குகளை எதிர்த்துச் சமாளிக்கவே இப்படியான சமுதாய அமைப்புக்கள் தோன்றின. இவற்றின் வளர்ச்சிக்குப் பொருளாதாரம் மிகவும் பயனுடையதாக அமைந்தது. ஆனால் வேறுநோக்குகளில் பொருளாதார வளம் பெருகத்தொடங்கியபோது சமுதாய அமைப்பும் சீர்குலையத் தொடங்கியது. சமூகக் கட்டுக்கோப்பு நெகிழத் தொடங்கியது.

காலப்போக்கில் சமூகம் என்பது பெயரளவிலேயே இருக்க சமுதாய உணர்வும் பயன் அற்றதாய் விட்டது. அறிவியலால் சூழலை மட்டும் சுத்தப்படுத்தினால் போதாது. ஆன்மீக ரீதியிலான புறத் தூய்மையும் தேவை. ஆன்மாவைச் சுத்தஞ் செய்யும்போது சமூக உறவுகள் மலர வழி பிறக்கிறது. ஒருவர் எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும் மனிதன் தனியாக வாழ முடியாது. அவனுக்கென்றொரு குடும்பம், உறவினர், நண்பர் என்று இருந்தாற் தான் வாழ்க்கை முழுமை பெறும்.

ஒரு அலுவலகத்தில் நேர்மையான செயலர்கள் இருந்தால் அந்த அலுவலகம் சிறப்பாக இயங்கும். வளம் பெருகும் வாழ்வு சிறக்கும். எந்த ஊரில் அறிவும் புலனும் பக்குவப்பட்ட அநுபூதி மான்கள் வாழ்கிறார்களோ அங்கு பகை இருக்காது. பல குழுக்கள் இருக்காது. போர் இருக்காது. அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். இது ஒரு சிறந்த சமூகச் சூழல். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு, அறிவியலைப் பெறுவதற்கு ஆன்மீக சிந்தனை தேவை. இன்று சகல நாடுகளிலும் பரவிவரும் கொலை, கொள்ளை, தற்கொலைகள், கற்பழிப்பு, போர்கள், கவலைகள் அனைத்துக்குமே காரணம் எமது சமூக வாழ்க்கை ஆன்மீகம் சார்ந்த அறிவியலைக் கொண்டிராததேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு என்பது சிறந்த வாழ்க்கை. அமைவதற்காகப் போடப்படும் அத்திபாரமாகும். இதனாற்தான்

*அன்பும் அறனும் உடைத்தாயின்*
*இல்வாழ்க்கை பண்பும் பயனுமது*

இந்த அன்பு உயிர்ப்புள்ள ஆற்றல்மிக்க பண்பாகும். செலவின்றி வாரி வழங்கக் கூடிய ஒரு வஸ்து இருந்தும் அன்பு செய்தலைக் குறிக்கோளாகக் கொண்ட அனைவருமே அல்லற்பட்டுள்ளனர்.

உதாரணமாகச் சிபிச்சக்கரவர்த்தி, அரிச்சந்திரன், தருமன், இராமன், இன்னோரன்ன பலரும் அன்பினால் துன்பப்பட்டவர்கள். இதுதான் உலகவாழ்க்கை. ஆனாலும் அவர்கள் புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. அறிவியல் சார்ந்த வாழ்க்கைக்கு அன்பே திறவுகோல்.

இவ்வாறிருக்க ஆன்மா, புலன்கள், பொறிகள், ஆகிய கருவிகளுடன் கூடிய உடலுடன் வாழத்தொடங்கிய நாள்முதல் பொருள் இன்றியமையாததாய் விட்டது. வாழ்வாங்கு வாழப் பொருள்தேவை. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று ஏற்கனவே கூறியுள்ளோம். பொருள் என்பது இங்கே பணத்தைக் குறிப்பதன்று. உண்டு உடுத்து வாழ்வதற்குப் பயன்படும் நுகர் பொருள்களையே குறிக்கும். இவற்றை நாம் உழைத்துப் பெறவேண்டும். இவை விலைமதிக்க முடியாதவை. ஆன்மீக வாழ்வில் பணத்துக்கு மதிப்பில்லை. வேளாண்மைச் தொழில் கால்நடை வளர்த்தல் ஆதியன பொருள்தரும் தொழில்களில் சிறந்தனவாகும்.

இதை விடுத்துப் பிற பொருள் அபகரித்தல் வட்டிமேல் வட்டி பெறல் ஆகியவை அறிவியல் சார்ந்த தொழில்கள் அல்ல. உழைப்பதற்கென்றே ஆண்டவன் இந்த உடலையும் இயற்கை வளங்களையும் படைத்துள்ளான்.

உழைப்பின்மையாலே அறியாமை, வறுமை, நோய், கலகம், போர், ஆதியன நிகழ்கின்றன. இவற்றிலிருந்து விடுதலைபெற உழைப்புத்தேவை. இவ்வுழைப்பு சமூகத்திற்கு நலம் பயக்கும் உழைப்பாக இருக்கவேண்டும். உழைப்பதில் சுரண்டல் இருக்கக்கூடாது. சுரண்டிப் பிழைப்பவன் ஒருபோதும் நேர்மையான உழைப்பை விரும்ப மாட்டான். தொழிலாளியும் காலப்போக்கில் முதலாளியாக மாறும்போது முதலாளிகளின் சுரண்டற் போக்கை எதிர்த்துப் போராடவேண்டும். உழைப்பு வழியில் மட்டுமே பொருளீட்டும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். பிறர் பொருளை திருடிச் சொத்துச் சேர்க்கும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். எந்த வகையிலும் சுரண்டிப் பிழைக்கும் செல்வந்தர்களைவிட அறிஞனும் உழைப்பாளியும் தரம் குறைந்தவர்களல்ல.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் சமுதாயத்தை அலசிப் பார்க்கும் போது செல்வந்தர்களும் அரசியல்வாதிகளும் சொல்லிக் கொள்ள எந்தவித தகுதி இல்லாவிட்டாலும் கூட அவர்கள் செய்யும் பஞ்சமா பாதகங்களை எல்லாம் மன்னிக்கத் தயாராக இருக்கிறது உலகம் இன்றைய கலாசாரம் வளரும் சமுதாயத்திற்கு ஏற்புடையதன்று. அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், உழைப்பாளிகளையும் மதிக்கும் மனப்பண்பு வளர்ந்தாற்தான் இன்றைய உலகம் உருப்படும். இன்று மக்களிடையே வளர்ந்துள்ள பணமதிப்பீட்டுச் சமுதாயம் முற்றாக மாறவேண்டும். மனிதனை மனிதனாக மதிக்கும் மேம்பாட்டுச் சமுதாயம் உருவாக வேண்டும்.

அயலவன் துன்பப்படும்போது நாம் அவனுக்கு ஆறுதல் கூறவேண்டும். அவனது உள்ளம் திருந்த உதவவேண்டும். அவன் பட்டினியாக இருக்கும் போது நாம் அறுசுவை உண்டி உண்பது நெறியல்ல. அது பாதுகாப்பற்ற நிலையும் கூட. அயலவன் விழித்தெழுந்தால் நமது நிலை பாதிக்கும். ஆகவே வாழ்வு அறநிலையில் கட்டி எழுப்பப் படவேண்டும். இப்படியான வாழ்க்கையை அப்பர் அடிகளும் அண்ணல் காந்தியும் எடுத்துக் கூறினார்கள் பாவேந்தர் பாரதிதாசனும்

உலகம் உண்ண ஊண் உடுத்த உடுப்பாய் என்றார். மற்றவர்களுக்கு வழங்கி மகிழ்வித்து மகிழ வாழப்பழக வேண்டும். அதனால் நாமும் இன்பம் அடைவோம்.

பொதுவாக நமது சாத்திரங்கள் பலவித கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. இன்றைய வாழ்க்கை முறைக்கேற்றபடி நெறிகளை ஏன் மாற்றி அமைக்கக் கூடாது என்று சிலர் வினவுகிறார்கள். சரி.... மாற்றம் செய்வதென்றாரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது. அப்புறம் நமது உலகியல் சுகங்கள் தான் சாத்திரமென்றாகிவிடும்.

சாத்திரங்கள் கூறியவண்ணம் முற்றாக நடப்பது சாத்தியமில்லை என்று நாம் நினைப்பதாலேயே எமக்கு அவை சாத்தியமில்லாமற் போய் விடுகின்றன. நாகரீகம் என்ற பெயரால் நாம் எதை எதையோ எப்படியெல்லாமோ செய்து கொண்டிருக்கிறோம். முதலில் நாம் எம்முடைய தேவைகளைக் குறைத்துக் கொண்டாலே போதும். இன்றைய உலகில் அவசியமற்ற பல தேவைகளை நாம் உண்டாக்கிக் கொள்கிறோம். இவற்றைக் குறைத்துக் கொண்டாலே போதும். இப்படிக் குறைத்துக் கொள்ளும்போது ஆசாரங்களை விடவும் வேண்டாம். பணம் பணம் என்று சொல்லி அலையவும் வேண்டாம்.

இன்றைய காலகட்டத்தில் நமது குறிக்கோள் நோக்கம் அனைத்துமே எப்படிப் பணம் சம்பாதிப்பது என்பதிலேயே செலவிடப்படுகிறது. இதை விடுத்து சற்று நேரம் இறைவனை நினைக்க எமது நேரத்தைச் செலவழிப்போமாக இருந்தால் வாழ்க்கையில் திருப்தியும் நிம்மதியும் ஏற்படும். இந்துமத தத்துவங்களைக் சிறப்பாகக் கூறும் சிறந்த உபதேசம் பகவத்கீதை. மகாபாரதத்தின் ஓர் அம்சமாக இது அமைந்துள்ளது. உன்னதமான உண்மைகளைப் கூறுவதற்குக் கண்ணன் ஏன் போர்க்களத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது சில பகுத்தறிவாளர்களது வினா. கண்ணனும் அர்ச்சுனனும் பல ஆண்டுகள் அந்நியோன்யமாய்ப் பழகியவர்கள்தானே. இந்த உபதேசங்களைச் செய்வதற்கு எத்தனையோ இடங்கள் இருக்க போர்க்களத்தை ஏன் தெரிந்தெடுத்தார்கள் என்று சிந்திக்கத் தோன்றுவது இயற்கை. அர்ச்சுனனும் கண்ணனும் நண்பர்களாகப் பழகியவர்கள். ஆயினும் அர்ச்சுனன் போர்க்களத்தை அடைந்தபோது எதிர் அணியில் நின்றவர்களைப் பார்த்தபோது அவன் மனம் வேதனையாற் கும்பியது. அங்கே நிற்பவர்கள் சாதாரண மக்கள் அல்ல. அவனது சகோதரர், ஆசிரியர், நண்பர், உறவினர் ஆகியோராகும். ஆகவே போக்களத்தில் அவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்ததும் தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பதற்கிணங்கி அவனிடம் அதுவரை இருந்த வீரமும் துணிவும் விடைபெற்றுச் சென்றன. வில் அவனை அறியாமல் கைநழுவிக் கீழே விழுந்தது. அவன் உடனே தன் நண்பன் கண்ணனை நோக்கி ' கன்னா நீதான் இந்த இக்கட்டான நிலையில் எனக்குப் புத்தி கூற வேண்டும்' என்று கண்ணனிடம் சரணாகதி அடைந்தான் அந்த வேளையிற்தான் கண்ணன் அவனுக்குக் குருவாகத் தென்பட்டான். உபதேசம் கேட்கும் பக்குவம் அப்போதுதான் அவனுக்கு உண்டாகியது.

அர்ச்சுனன் குழப்பம் நீங்கித் தெளிவு பெறவும், பலன் பெற்றுத் தொழிற்படவும் தேவையானதை, அப்போதுதான் கண்ணன் உபதேசித்தான். 'கீதா உபதேசம்' அர்ச்சுனனுக்காக மட்டும் தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டதல்ல. உண்மையை அறிந்து தெளிவு பெற விரும்புகிறவர்கள் எல்லோருக்குமாகச் செய்யப்பட்டது. ஆனால் இன்று இந்து மதத்தினரிடம் இருக்கும் பெரிய குறைபாடு என்னவென்றால் உண்மைகள், தத்துவங்கள் எம் மதத்தில் அளவுக்கதிகமாக உள்ளன. ஆனால் அவற்றை எம்மவர் படித்து உணர்ந்து பயன்பெற முயற்சி எடுப்பதுமில்லை. பக்குவம் அடைவதுமில்லை. எம்மதத்தின் தத்துவங்கள் உண்மைகள் துளி துளியாகப் பிறரால் சுரண்டப்பட்டுக் களவாடப்பட்ட பின் அவற்றை சுலபமான முறையில் எம்மதத்தவருக்கு சீனி கலந்தூட்டி தம்மதத்திற் சேர்த்துக் கொள்கின்றனர். எமது தேவாரங்கள், பிள்ளைத் தமிழ்கள், ஆற்றுப்படைகள் நீதிவெண்பாக்கள், திருவாசகங்கள் எல்லாம் இப்படிப் போய்க் கொண்டே இருக்கின்றன. நாம் என்ன வென்றால் இன்னும் எம்மதத்தைப் பற்றி ஆராய்ச்சி பண்ணிக் கொண்டே இருக்கிறோம்.

ஆலயங்களிற் கூட அர்ச்சனை பூசை அபிடேகம் என்பன பணத்துக்காகவே செய்யப்படுகின்றன. சில ஆலயங்களில் குறிப்பிட்ட இவ்வளவு ரூபாவுக்குக் குறைய அர்ச்சனையோ அபிடேகமோ செய்ய மறுக்கிறார்கள். இப்படியான வேளைகளில் அல்லற்படும் ஏழைகள் ஐந்து குழந்தைகள் இருந்தால் ஆளுக்கு ஐந்தோ பத்தோ கொடுத்து அர்ச்சனை பண்ண முடியுமா? அவர்கள் வெளியே நின்று மலரை வாயிலிற் போட்டு அர்ச்சித்து விட்டுப் போகிறார்கள். ஒரு சிலர் வேறு மதங்களிற் சேர்ந்தும் விடுகிறார்கள்.

*ஆவுரித்துத் தின்கின்ற புலையரேனும்*
*கங்கைவார் சடைகரந்தார்க் கன்பராகில்*
*அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே*

என்று பாட நாவுக்கரசரும் தற்போதில்லை.

*'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்*
*உறவுகலவாமை வேண்டும்'*

என்று பாட வள்ளலாரும் இல்லை. அவர்கள் காட்டிய வழியிலாவது நடக்க நல்ல வழிகாட்டிகளுமில்லை. ஆகவே இப்படியான பண்புகளைச் சிறார்களிடம் வளர்க்க வழிவகுக்கப்படவேண்டும்.

தற்காலத்தில் ஆலயங்களில் தேவாரம் பாடுபவர்கள் பண் தவறாமல் ராகம் பிழைக்காமல் தாளம் சரியாக அமைய பாடுவதிலேயே தமது புலனைச் செலவழிக்கிறார்களே தவிர கருத்தொன்றி பொருள் விளங்கிப் பாடுவது மிகவும் குறைவாகவே உள்ளது.

ஜனநாயகத்தத்துவம் முதலில் கிறீஸ் நாட்டிற்தான் பிறந்ததாக எல்லோரும் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் நமது வேதமே அதைத்தான் அரசியற் தத்துவமாகக் கொண்டுள்ளது. தனி நபர் வாழ்க்கை குடும்ப வாழ்க்கை சமுதாய வாழ்க்கை தேசிய வாழ்க்கைபற்றி எல்லாம் வேதம் கூறுகிறது. ஆளும் மக்கள் ஆளப்படுவோர் என்று இரண்டாகப் பிரித்து இந்த இரண்டுக்கும் உதவி செய்ய ஒரு தெய்வீக அதிகாரத்தை வேதம் கூறுகிறது. அரசியற் சக்தி மக்களிடமிருந்தே உருவாகிறது. மக்களது கருத்தைத் தெரிந்து கொள்ள அரசியல் சபைகள் அப்போதே இருந்தன. சபையிற் கலந்து கொண்டே அரசன் அவர்கள் கருத்துக்களை அறிகிறான். ஆனால் அவன் தனது கருத்தை அங்கே உடனடியாகக் கூற முடியாது சபையை நிர்வகிக்கச் சபாபதி என்றொருவர் இருப்பார் என ரிக்வேதம் கூறுகிறது. எந்த இடத்தில் எல்லோரும் சமமாக இருக்கிறார்களோ அதுதான் சபை. பெரும்பான்மை சிறுபான்மை என்றிராமல் சபையின் முடிவுகள் ஒரு மனதாக இருக்க வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது. பல்வேறு தொழில் புரியும் பிரதிநிதிகளும் சபையில் இருப்பர். இதைத் தவிர சமிதி என்ற மேற் சபையும் இருந்தது.

அரசர்கள் சபையைக் கூட்டி ஆலோசனை செய்த பிறகே எக்காரியத்தையும் தொடங்குவர் என்று வேதம் கூறுகிறது. அரசியலில் மக்களே முக்கியமானவர்களாக இருந்துள்ளார்கள். வேதத்தில் மக்களின் சபைபற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர மந்திரி சபை பற்றி எதுவும் கூறப்பட வில்லை. அரசர் தம்மிச்சைப்படி நடக்க வேதம் அனுமதிக்கவும் இல்லை. இதையெல்லாம் அறிந்து கொள்ளாமல் அரசியல் தத்துவம் எங்கோ பிறந்து நம்நாட்டுக்கு வந்ததாக நாம் எண்ணுகிறோம். மனிதனாகப் பிறந்தவனுக்கு எத்தனையோ பாக்கியங்கள் உள்ளன. அவற்றில் எல்லாம் மேலான பாக்கியம் மனிதசமுதாயத்திற்குச் சேவை செய்வதே .

இதுதான் ஆன்மீகம் கலந்த அறிவியல் திருமூலரும்.

*'நடமாடாக்கோயில் நம்பர்க் கொன்றீயின்*
*படமாமாய் பகவதற்கதாமே' என்று பாடியுள்ளார்.*

இதன் அர்த்தம் மக்களுக்குச் செய்கிற உதவி சாட்சாத் ஈஸ்வரனுக்குச் செய்கிற பூசையே என்பதாகும். நாமும் இவ்வழிகளைப் பின்பற்றி ஆன்மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கை வாழ்வோமாக. இப்படியான ஒரு ஆன்மீகம் கலந்த அறிவியல் வாழ்க்கையின் சின்னந்தான் இந்த அகில இலங்கை இந்து மாமன்ற மாடிக்கட்டிடம்.

*'யாதுமற்றவர் வாய்ச் சொல்லருளீர்'*

என்ற மகாகவியின் வார்த்தைக்கிணங்க இவ் ஆன்மீகம் கலந்த அறிவியல் சின்னத்தை ஆசீர்வதிக்க இறைவனைப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் இந்துமதம்"

இரா.பரமேஸ்வரன்
அட்டன்

பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் நிறுவப்பட்ட மதங்கள், அவற்றைத் தோற்றுவித்தவர்கள் யார்? அவை தோன்றிய காலம் எது என்பவை நமக்குத்தெரியும். ஆனால் எமது இந்து மதம் தோன்றிய காலமோ, தோற்றுவித்தவர் யார் என்பதோ நமக்குத் தெரியாது. இதுவே நமது மதத்திற்குள்ள பெருமை.

எமது மதத்தை இந்துமதம், அல்லது இந்து சமயம் என்று அழைக்கின்றோம். ஆனால் நமது மதத்தின் உண்மையான புராதனப் பெயர் சனாதன தர்மம்–வைதிக மதம் என்பதே. "தொன்மைச் சிறப்பு வாய்ந்தது" "இறைவனால் மக்களுக்கு உணர்த்தப்பெற்றது" என்பது பொருள்! எமது சமயம் தோன்றிய காலமும், தோற்றுவித்தவர் யார் என்பதும் தெரியாமையினால் அதனை, இறைவன் மனித இனத்துக்கு அருளிய ஒரு வழிகாட்டி நெறியாகக் கருதுகின்றோம்.

மத உணர்வு வாழ்க்கையின் பல அம்சங்களில் ஒன்று என்று மேலை நாட்டினர் கருதுகின்றனர். ஆனால் நமது இறையடியார்கள் சமயமே வாழ்வின் முழுமை என்று உபதேசித்துள்ளனர். பிற மதங்கள் போல் அல்லாது நமது மதம் வழிபாட்டு முறையிலும் கொள்கைகளிலும் சுதந்திரம் கொடுத்துள்ளது.

இறைவனை நாம் பல பெயர்களால் வழிபட்டாலும் இறைவன் ஒருவனே என்பதுதான் அடிப்படைக் கொள்கை. பல வகைவழிகளிலும் நம்மை ஒரே இறைவனிடத்தில் கொண்டு சேர்க்கின்றன என்று உபநிடதங்கள் கூறுகின்றன. நமது மதத்தை இந்து மதம் என்பதை விட " இந்து தர்மம்" என்று குறிப்பிடுவது தான் மிகப் பொருத்தம்.

இந்து மதச் சாத்திரங்களுக்கு மூலாதாரம் என்று கருதப்படுவதும், பழைமை வாய்ந்ததும் எமது வேதங்களே. வேதங்கள் அனைத்தும் இறைவனிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டவை. இக்கருத்தினை மனதில் கொண்டு வேதங்களைச் " சுருதி" என்று சிறப்பாக அழைக்கின்றனர்.

இந்துமதச் சாத்திரங்கள் அனைத்தும் வேதங்களிலிருந்து உணரப்பட்ட உண்மைகளின் தொகுப்புகளே. அவற்றிற்கெல்லாம் அடிப்படை ஆதாரம் வேதங்களே. ஆகவேதான் பிறசாத்திரங்களை "ஸ்மிருதி" என்று அழைக்கின்றோம். " ஸ்மிருதி" என்றால் "நினைவு" என்பது பொருள்.

இந்து மதத்தின் முக்கியமான தவிர்க்க முடியாத அம்சமாக விளங்குவது உருவ வழிபாடு. பழங்காலத்திலே உருவ வழிபாடு இருக்கவில்லை. அக்கினி வளர்த்து அக்கினியில் ஓமம் செய்வதே முக்கிய வழிபாடாக இருந்தது. இதனை வேள்வி என்று கூறுவர். அதனைச் செய்வதற்கும் ஒருவிதி முறை இருந்தது.

இந்து மத சாத்திரங்கள் ஐந்து வகை வேள்விகளைச் செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகின்றது. அவை தேவயக்ஞம், பிதிர்யக்ஞம், ரிஷயக்ஞம், நிருயக்ஞம், பூதயக்ஞம் என்பனவாகும்.

தேவயக்ஞம் என்பது தேவர்கள் மக்களுக்கு அருளும் நன்மைகளுக்கு நன்றி செலுத்தவும், அவர்களைத் திருப்திப்படுத்தவும் எனச் செய்யப்படும் வேள்வியாகும்.

நம் முன்னோர்கள் பிதிர் உலகத்திலே வாழ்கின்றனர். அவர்கள் நம்மை இவ்வுலகில் மகிழ்வுடன் வாழத்துணை புரிகின்றனர். ஆகவே அவர்களை மகிழ்விக்க மனிதன் மேற்கொள்ளும் வேள்வி பிதிர்யக்ஞம் எனப்படும்.

மனிதன் சாத்திர விதிமுறைகளை அனுஷ்டித்து வாழ வேண்டும் என்பது விதிமுறை. இவற்றை மனிதனிடத்தில் எதிர்பார்ப்பவர்கள் ரிஷிகளும் மகான்களும். அவர்கள் நம்மிடம் வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை. நாம் மனத்தூய்மையுடன் இறைவனை நினைப்பதற்கு உதவுபவர்கள் ரிஷிகள். ஆகவே அவர்களை மகிழ்விக்க மேற்கொள்ளப்படுவது ரிஷியக்ஞம்.

நம்முடன் சேர்ந்து வாழும் சகோதரர்களின் நன்மை கருதிச் செய்யப்படுவது நிருயக்ஞம்.

இறைவனுடைய அம்சத்தைப் பெற்றவர்கள் மனிதர்கள்! உருவங்கள் அனைத்திலும் இறைவன் மறைந்து வாழ்கின்றான். ஆகவே நாம் நம்முடன் வாழ்கின்றவர்களுக்குச் செய்கின்ற நன்மைகள், அவர்கள் துயர்களைக் களைய மேற்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் என்பவற்றினால் அவர்கள் மகிழ்கின்றனர். இது நாம் இறைவனுக்குச் செலுத்தும் சிறந்த வழிபாடு ஆகும். ஆகவே நம்மைச் சூழ்ந்து வாழும் மக்களின் துன்பம் நீங்கி இன்பம் பெறும் நோக்கில் செய்யப்படுவது நிருயக்ஞம் எனப்படும்.

பூதயக்ஞம் எனப்படுவது மனிதனுக்கு மனநிறைவையும், இன்பத்தையும் கொடுப்பதுடன் இறைவனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதற்காக விலங்குகள், பறவைகள் போன்ற ஐந்தறிவு பெறாத ஜீவன்களின் நலன் கருதிச் செய்யப்படுவது.

இந்து மதம் மனிதன் வாழவேண்டிய வாழ்க்கை முறையை நான்கு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற கடமைகளையும் கூறுகின்றது. அவை –

பிரமச்சரியம் என்னும் மாணவ வாழ்க்கைநிலை. கிருஹஸ்தம் என்னும் இல்லற வாழ்க்கை நிலை. அடுத்து சன்னியாசம் என்னும் துறவு நிலைக்கு மனிதன் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் வானப்பிரஸ்தம் என்பது. கடைசியாக சன்னியாசம் அல்லது துறவு நிலை ஆகும்.

மனிதன் தனது வாழ்க்கையில் எதுவித சிக்கலும் இன்றி முழுமையாக அனுபவிக்க உதவுவதுதான் ஆசிரம தர்மத்தின் நோக்கமாகும். இந்த ஆசிரம நிலை ஒரு உயர்ந்த பக்குவமான மேன்மை நிலையை அடைய வழிகாட்டுகின்றது. அதாவது மனிதன் செய்யவேண்டிய கடமையை அந்தந்தப் பருவத்தில் சரிவரச்செய்தால் அந்த மேன்மை நிலையை அடையலாம் என்று கூறுகின்றது இந்து தர்மம்.

மனிதனின் ஆன்மீக உணர்வுகளை ஒழுங்குபடுத்தி அவன் சரியான பாதையில் செல்வதற்குத் துணை புரிவது இந்து மதம்.

மனிதன் இறுதியாக முக்தி நெறி அடையவேண்டும் என்பதை விட, அவன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது இந்து மதம்.

மனிதனுக்கு ஏதாவது ஒன்றின் மீது நம்பிக்கை இருந்தால் தான், அவனுக்கு அதன் மீது நம்பிக்கை இருக்கும். அழியக்கூடிய பொருட்கள் மீதோ, உயிர்களிடத்தோ வைக்கும் நம்பிக்கை நிலையில்லாதது. அவை அழியக்கூடியவை. ஆகவே அழியாத பரம்பொருளாம் இறைவன் மீது வைக்கும் நம்பிக்கையே சிறந்தது என்று கூறுகின்றது இந்து மதம். அதனைப் பக்தி என்றும் கூறுகின்றோம். அதாவது இறைவனிடத்தில் பக்தி வைக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று இந்து மதம் கூறுகின்றது. அந்தப் பக்தி நெறிக்கு அடிப்படை ஆழ்ந்த நம்பிக்கையே. பக்தியினால் ஒழுக்கம், மன அமைதி, மன ஒருமைப்பாடு என்பன ஏற்படுகின்றன என்பது ஆன்மீகப் பெரியோர் அனுபவித்துக் கூறிய உண்மை.

இந்து மதம் ஒழுக்கத்தைப் போதிக்கின்றது. இந்து மதத்தின் எந்த ஓர் அம்சமும் ஒழுக்கத்தையே போதிக்கின்றது. அது இந்து மதத்தின் ஓர் அம்சம்.

உலகத்திலே வாழும் உயிர்களிடத்திலே பேதங்கள் ஏற்பட்டிருப்பது எதனால்? அதற்குக்காரணம் கர்மவினையே. உயிர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் அனைத்திற்கும் காரணம் அவை முற்பிறப்பில் செய்த கர்மமே என்று கூறுகின்றது இந்து மதம்.

இறைவனடி பற்றுவதற்குச் சைவசமயம் நான்கு சாதனங்களைக் கூறுகின்றது. அவையாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

ஆலயத்தைச் சுத்தம் செய்தல், விளக்கேற்றல், நந்தவனம் அமைத்தல் போன்ற தெய்வப் பணிகள் செய்தல் சரியை எனப்படும்.

இறைவனை முறைப்படி பூசை செய்து வழிபடல் கிரியை எனப்படும்.

இறைவன்–பால் சிந்தையைச் செலுத்தி, உடலை ஒடுக்கி, மனதை அடக்கி மேற்கொள்ளும் பயிற்சி யோகம் எனப்படும்.

வேதம், புராணம், சாத்திரங்கள் போன்றவற்றை முழுமையாகப் பயின்று ஆழ்ந்து சிந்தித்து இறைவன் தொடர்பான உண்மைகளை உள்ளபடியே உணர்ந்து கொள்ளும் நிலை ஞானம் எனப்படும்.

எமது சமயம் இறைவனுக்கும், பிரபஞ்சத்திற்கும் உயிர்களுக்குமிடையே உள்ள தொடர்பை பல்வேறு சாதனங்கள் மூலம் விளக்குகின்றது. அதில் முக்கியமானவை, பதி (இறைவன்) பசு (ஆன்மா) பாசம் (ஆன்மாவைப் பற்றியுள்ள மலம்). இம் மலத்தை ஆன்றோர் மூன்றாகப் பிரித்துக் கூறியுள்ளனர். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன.

ஆணவம் என்பது “ இருள்” இது ஆன்மா, இறைவனைப் பற்றிச் சிந்திக்காது' அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கச் செய்வது.

கன்மம் என்பது முற்பிறப்பில் செய்த நன்மை தீமைகளின் விளைவாக இப்பிறப்பில் அனுபவிக்கும் ஓர் நிலை. மாயை என்பது ஆன்மாவின் ஞானத்தை மறைத்து இறைவனை உணர முடியாமல் தடுத்து நிற்கும் ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அனைவரும் ஒரேமாதிரியான உளநிலை கொண்டவர்கள் அல்லர். அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்ப பலவகைப் பாதைகளை வகுத்து உதவுகின்றது இந்து மதம்.

உலகிலுள்ள சமயங்கள், தத்துவங்கள், நூல்கள் ஒரே கருத்து உடையனவாக இல்லாது முரண்பட்டு விளங்குகின்றன. இருப்பினும் பிறசமயங்கள் தங்கள் சமயமே உண்மைச் சமயம் என்றும், தங்கள் வேதங்களே உண்மையானதும் என்று கூறிப் பிறமதங்களைச் சாடுகின்றன. ஆனால் இந்து மதம் இவ்வாறு கூறவில்லை. அது அனைத்தையும் தன்னுள் அடக்கி ஒற்றுமைகாண முயல்கின்றது. சைவ சமயம் "அன்பு மதம்" இதனை திருமூலர் "அன்பே சிவம்" என்றார். இறைவனின் அருளைப் பெற வேண்டுமானால் பயன் கருதாது அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதே சைவ சமயத்தின் அடிப்படைத்தத்துவமாகும்.

தத்துவங்கள் நிறைந்தது இந்து மதம். வாழ்க்கையை நெறிப்படுத்த சடங்குகள் இந்து மதத்தில் உண்டு. நீதிக்கதைகள், புராணக்கதைகள், அவதாரக்கதைகள் நிறைந்தது இந்து மதம். ஆனால் இவைகள் மட்டுமே இந்து மதமாகி விடாது. ஆழ்ந்து சிந்தித்தால் மட்டுமே புலனாகும். பல விஷயங்கள் இந்து மதத்தில் உண்டு. கவிதை, கற்பனை, சிற்பம், சித்திரம், இசை போன்ற கலைப் படைப்புக்கள் நிறைந்தது இந்து மதம். ஆனால் இவற்றிற்குள்ளேயே மனிதனை மூழ்கடித்துப் பலியாக்கும் போக்கு இந்து மதத்திற்கு இல்லை.

வாழ்க்கையைப் பாழடிக்கும் வரட்டுத் தத்துவங்களை இந்து மதம் வரவேற்கவில்லை. மனிதன் மிருக உணர்ச்சிக்கு போய் நிலைதடுமாறாது தனது மனித எல்லைக்குள்ளேயே கட்டுப்பட்டுத் தெய்வ நிலைக்கு உயர வழி கூறுகின்றது, இந்து மதம்.

குடும்பத்தைக் கோவிலாகவும், பெற்றோரைத் தெய்வமாகவும், குழந்தைகளைச் செல்வமாகவும் கல்வியை ஒழுக்க நெறியாகவும் காட்டுவது இந்து மதம்.

இந்து மதம் பெண்களுக்கும் உரிய இடத்தைக் கொடுத்துள்ளது. பெண்களை அம்பிகையின் வடிவில் கண்டது இந்து மதம். கல்விக்கும் செல்வத்திற்கும், வீரத்திற்கும் கடவுள்களாக பெண்களை உருவகப் படுத்திய பெருமை இந்து மதத்திற்கே உண்டு.

மனிதன் எப்படி வாழ வேண்டும் என்கிற மகத்தான விளக்கத்தைத் தருவது இந்து மதம்.

"இந்து மதம் சொல்லாதது எதுவுமில்லை. சொல்லப்பட்ட எதுவும் இந்து மதத்தில் இல்லாமலும் இல்லை."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலிங்காயத மரபு சில குறிப்புகள்

ஆ. சிவநேசச் செல்வன் M.A,M.Sc
*பிரதம ஆசிரியர், வீரகேசரி*

இந்திய சிந்தனை வரலாற்றில் சமயங்கள் மனித வாழ்க்கையோடு இணைந்து பெற்ற பரிமாணங்கள் பற்றி விரிவான ஆய்வுகள், பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்க வரலாற்றின் பாரிய வளர்ச்சியாகச் சைவசிந்தாந்த மரபு உருவாகியது. நாடெங்கும் எழுந்த கோவில்களும் மடங்களும் சமூக நிறுவனங்களாக வளர்ந்தன. பக்தி இயக்கப் பின்னணியில் கோவில்கள் அரச ஆதரவோடு பொருளாதார வளம் பெற்ற நிறுவனங்களாக எழுந்தன.

கோவில்களின் பக்க விளைவாக மெய்யடியார்கள் தங்குமிடங்களாகவும் ஒன்று கூடும் இடங்களாகவும் வளர்ந்த நிறுவன அமைப்பான மடங்கள் மடாலயங்கள் என அழைக்கப்பட்டன. இவை சமய தத்துவ சிந்தனைக் களங்களாக வளர்ந்தமை ஒரு தனியான வரலாறாகும். வேதாந்தமரபு சைவசித்தாந்த மரபு போன்ற பல்வேறு கிளைகள் தோன்றுவதற்கு மூல விசையாக இவை அமையலாயின. மடங்களின் பின்னணியில் தனி மனிதர்களாகவும் நிறுவன ரீதியாகவும் உருவாக்கிய சிந்தனை வளர்ச்சி இந்திய சமய வரலாற்றின் உயிரோட்டத்தை மக்களோடு இணைக்கும் பாலமாகி எழுச்சி பெற வைத்தது!.

வேதம், ஆகமங்கள், உபநிடதங்கள் நீண்ட தத்துவ விசாரங்களுக்குட்படுத்தப்பட்டன. ஆதிசங்கரர், இராமனுசர், மத்துவர் போன்ற சிந்தனையாளர் ஊட்டிய பேரொளி இந்திய சிந்தனை வரலாற்றில் உலகாயத வாதத்திலிருந்து இந்து சமயமரபை விடுவித்து பல மரபுகளையும் அணைக்கும் அடித்தளத்தை இட்டது. தென்நாட்டிலும் வடநாட்டிலும் இணைந்து எழுந்த சமய மரபுகளெல்லாம் ஒன்றுபட்டு உயர் நிலைச் சமய சிந்தனைகளை உருவாக்கின.

சைவ, வைணவ சமண பௌத்த, இலக்கிய வளர்ச்சியும் சித்தாந்த வளர்ச்சியும் உருவாக்கிய மனித நேய வளர்ச்சியும், வாழ்க்கை முறையும் சித்தாந்த வளர்ச்சியையும் மக்களைச் சென்றடைந்த, வரலாறு ஏறத்தாழ ஆறாம் நூற்றாண்டு முதல் முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பெற்ற வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே இந்திய சமய சிந்தனைக் கருவூலங்கள் எழுச்சி பெற்றன. அரச ஆதரவு, சமூக நிறுவன ஆதரவு போன்றவற்றினூடாக இந்திய துணைக்கண்டத்தில் பரந்து வாழ்ந்த பல்வேறு இனக் குழுவினரின் மத்தியில் நம்பிக்கைகள், சடங்குகள் ஆசாரங்கள் சிந்தனைமலர்ச்சி ஆதியன பேராற்றிப் பெருவெள்ளம் பெருகுவது போல உருப் பெற்றமை ஒரு நீண்ட வரலாறு.

தென்னாட்டிலே பக்தி இயக்கம் நிறைவு பெற்ற காலப்பகுதியின் பின்னர் குறிப்பாக 9ம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டை அடுத்த காலப்பகுதியில் இந்திய மண்ணில் மூன்று சமயப் பிரிவுகள் முளைவிட்டன. அவை காஷ்மீர சைவம், சைவ சிந்தாந்தம், வீரசைவம் என்பவையாகும். காஷ்மீர சைவம் காஷ்மீரப் பகுதியில் உருவானது. சைவசித்தாந்தம் தமிழ்நாட்டு பக்தி இயக்கத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியாக உருவாகியது. வீரசைவம் கர்நாட மாநிலத்தில் தோற்றம் பெற்றது. இந்த மூன்று சமயப் பிரிவுகளும் வேத விளக்கமான ஆகம பாரம் பரியத்தில் தோன்றியவை. இவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை.

இம்மூன்று சமயப் பிரிவுகளும் சிவனை முழுமுதற் பொருளாகக் கொண்டவை. சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மையை முதன்மைப்படுத்துவது போல் காஷ்மீர சைவமும் வீரசைவமும் சக்தியை முதன்மைப்படுத்திக் காட்டுகின்றது. வீரசைவத்தை சந்திவிசிட்டாத்வை எனவும் அழைப்பர். வீரசைவத்திற்கு மூலாதாரமானது வீராவாகமம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகம பாரம்பரியத்தில் தோன்றிய வீரசைவம் கர்நாடக மாநிலத்திலேயே தோற்றம் பெற்றது. இச்சமயப் பிரிவு காலப்போக்கில் விஜய நகரப் பேரரசு எழுச்சி பெற்ற காலத்தில் தமிழ் நாட்டிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் ஈழநாட்டிலும் செல்வாக்குப் பெற்றது. இவ்வாறான அடிப்படையில் வீரசைவம் பற்றிய சில குறிப்புகளைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சக்தி விசிட்டாத்வைதம் வீரசைவம், இலிங்காத மதம் என வழங்கப்படும் இம்மதப் பிரிவினர் இலிங்கத்தைக் கையில் வைத்தோ அல்லது கழுத்தில் பூண்டோ வழிபடுபவர்கள் ஆவர். இலிங்க தாரிகளாகிய இவர்கள் இஷ்டலிங்கத்தைத் தவிர வேறெதனையும் வழிபட வேண்டியதில்லை என்ற அடிப்படை நியமத்தைக் கொண்டவர்கள். இதன் காரணமாக பால்வேறுபாடு சாதி வேறுபாடு கடந்த சிந்தனையை உடைய இவர்கள் இலிங்க தாரணம் செய்யாதவர்களிடம் உணவு முதலியன உட்கொள்ளாத கடின கோட்பாடுகளை உடையவர்கள்.

பலதெய்வவழிபாடு விக்கிரக வழிபாடு ஆதியன வற்றைக் கண்டிக்கும் இவர்கள், குருலிங்க சங்கமக்கோட்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறியவர்கள். கர்நாடக மாநிலத்தில் உருவான இச்சமயப்பிரிவு பல்லவர் காலத்தில் தமிழ் நாட்டில் உருவாகிய பக்தி இயக்கத்தின் பக்க விளைவாக தோன்றியது. ஆயினும், கர்நாடக மாநிலத்தின் சமூக பொருளாதார வருணாச்சிரம முறைமையே இச்சமயப் பிரிவு வீரசைவ எழுச்சிக்கு மூலவிசையாக விளங்கிய பசவர் அல்லது பசவேசர் 1105 ஆம் ஆண்டு பிஜாப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த பகவதி கிராமத்தில் பிராமண குடும்பத்தில் தோன்றியவர். இவரை பசவண்ணர் எனவும் கூறுவர். வீரசைவ எழுச்சிக்கு உருக் கொடுத்து பசவேசர் மேற்கொண்ட முயற்சிக்கு முன்னோடியாக வருணாசிரம தருமத்திற்கு எதிரான சிந்தனையோட்டம் உஜ்ஜயினி, கேதாரம், ரம்பாபுரி, காசி, பருப்பதம், ஆகிய மடங்களின் பின்னணியில் உருவாகியது. ரேணுகாசாரியார், தாருகாசியார், பண்டிதாராத்தியர் போன்றோர் இலிங்காயத மதத்தின் தோற்றப் பின்னணிக்கான களத்தை ஏலவே உருவாக்கியிருந்தனர்.

கல்யாணி நகரில் ஆட்சிபுரிந்த பிஜ்ஜனன் என்ற மன்னனிடம் அதிகாரியாகத் திகழ்ந்த பசவேசர் தமது காலப்பகுதியில் நிலவிய வருணாசிரம முறைமையையும் சமூக பொருளாதார வரலாறு சமய மரபைச் சிதைப்பதையும் உணர்ந்து தீவிரமாகச் செயற்பட்டார். மனிதநேய மரபை மலினப்படுத்தும் வகையில் அமைந்த வேத மரபுக்கு எதிராக இலிங்காயத மரபரை நாடளாவிய பரந்த சமயமுறையாக எழுச்சி பெறச் செய்த பசவேசர் இந்து சமயத்திற்குப் புதிய பரிமாணத்தைக் கொடுக்க முன்வந்தார்.

பசவேசர் தலைமையிலே, பிரவு தேவர், சென்ன பசவர், மகாதேவியக்கா, பீமகவி, ஆதியோர் வீராகம மரபின் அடிப்படையில் இலிங்காயத மதத்தையும், அதன் தத்துவங்களையும் வருத்தினர். அரச ஆதரவுடன் இச்சமயம் கர்நாடக மாநிலத்தில் பெற்ற செல்வாக்கு படிப்படியாக ஆந்திர மாநிலத்திலும் தமிழ்நாட்டிலும் பரவியது. பசவேசர் இலிங்காயத மரபு கோட்பாட்டு ரீதியாக எழுச்சி பெறுவதற்குக் காரணராக இருப்பினும் இம்மதத்தின் தத்துவக் கூறின் மூலக் கருக்களை ஆந்திராவிலும் தமிழ் நாட்டிலும் காண முடியும் எனவும் கூறுவர்.

திருமூலரின் சிந்தனைப் போக்கிலேயும் இலிங்காயத மதம் அல்லது வீரசைவக் கோட்பாடுகளின் தடத்தைக் காண முடியும். "கோயிலுக்கு வழங்குவது அடியார்க்கு சேராது" என்ற உணர்வோட்டத்தை முன்வைக்கும் திருமூலர் கோயில் வழிபாட்டுச் சிந்தனையை உடைந்து எறிகின்றார். கும்பகோணம் பெரிய மடம் என அழைக்கப்படும் வீரசிம்மாசன பீடம் பற்றி ஒட்டக் கூத்தர் தக்க யாகப் பரணியில் தெரிவிக்கும் கருத்து முக்கியமானது. வீர பத்திரக் கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தமிழ்நாட்டு வீரசைவர் வீராக மரபை பேணுபவர்கள் என்பதைப் பேராசிரியர் பொ. பூலோக சிங்கமும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மடங்களின் பின்னணியிலேயே வீரசைவம் எழுச்சி பெற்றது. தமிழ் நாட்டில் உள்ள வீர சைவ மடங்கள் இலிங்காயத வழிபாட்டு மரபினை பேணிவருவது இம்மதம் பிற்காலத்தில் பெற்ற செல்வாக்கை வலியுறுத்துவனவாகவுள்ளன. விஜய நகரநாயக்க மன்னர் ஆட்சிக்காலத்திலும் கலிங்க மாகன் ஆட்சிக்காலத்திலும் வீரசைவ மரபு ஈழத்தின் பல பாகங்களிலும் செல்வாக்குப் பெற்றது. இலங்கையில் காணப்படும் வீரசைவ மரபு எச்சங்களும் வழிபாட்டு மரபுகளும் விரிவாக ஆராயப்பட வேண்டியவை.

காலசூரி மன்னனான பிஜ்ஜனன் காலத்திலேயே இலிங்காயத மதம் அரச ஆதரவுடன் பெரும் செல்வாக்குப் பெற்றது. வேதமரபு, பிராமண செல்வாக்கு ஆதியனவற்றிற்கு எதிரான பௌத்த, சமண வழிபாட்டுமுறைகள் கர்நாடகத்தில் பெருகி வந்தது. இவை எவ்வாறு வேதமரபு, வர்ணாச்சிரம மரபுகளுக்கு எதிராக உருவாகினவோ அதே அளவு கோல்களுடன் இந்து மதத்தின் பாரிய எழுச்சியாக இலிங்காயதம் கர்நாடகத்தில் மிகப்பெரும் நிறுவன வளர்ச்சியைப் பெற்றமை இன்றும் அவதானிக்கக் கூடியது.

பசவேர் புரட்சிகரமான சிந்தனையுடன் சமூக பொருளாதார நிறுவனங்களை அணைக்கும் வகையில் இலிங்காயத கோட்பாடுகளை உருவாக்கி. அதனை மக்கள் மத்தியில் எடுத்துச்சென்ற போது இலிங்காயதம் கர்நாடகத்தில் பேரியக்கமாக எழுச்சி பெற்றது. இலிங்காயதர் என்ற சமூகக்குழுவே தோற்றம் பெற்றது! மனிதநேயமற்ற அணுகுமுறைகளையும், வருணாச்சிரம மரபையும் எதிர்த்து பசவேசர் நிறுவன ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் காலசூரி மன்னர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கிய எழுச்சி விஜயநகர மன்னர் ஆட்சிக் காலத்தில் உறுதிபெற்றதுடன், விஸ்காயத மடங்களும் பெருவளர்ச்சி பெற்றன.

கர்நாடக மாநிலத்தில் உறுதிபெற்ற லிங்காயத மரபில் முதலாவது அடிப்படை, மதப்பிரிவு ஒரு சமூக நிறுவனமாக வளர்ந்தமை ஆகும். தமிழ் நாட்டின் பக்தி இயக்க மரபிற்கு மூலவர்களாகவும், வழிவழி மரபுகளை உருவாக்கியவர்களாகவும் நாயன்மார்கள் விளங்கினர். பசவேசர் இவர்களைப் 'புராதனர்' என இனங்கண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்தத் தொண்டர் குலமே தென்நாட்டுப் பக்தி இயக்கத்தின் மூலவிசை என்பது யாவரும் அறிந்ததொன்று.

இதேவிதமான அடிப்படையில் வீரசைவ மரபில் 'சாரணர்' மரபு பசவேசரால் உருவாக்கப்பட்டது. இலிங்கம் தரித்த சாரணர்கள் வீரசைவமரபைக் கர்நாடக மாநிலத்தில் செழிக்கச் செய்தனர். வீரசைவம் என்ற மார்க்கம் தனித்துவமான முத்திரையுடன் எழுச்சி பெறச் சாரணர்கள் என்ற தொண்டர்கள் கூட்டமைப்பாகச் செயற்பட்டனர். சமய தூதுவர்களாக மக்கள் மத்தியில் இவர்களே சமயக் கோட்பாடுகளையும் மரபுகளையும் எடுத்துச் சென்றனர்.

வைதீக மரபிற்கு எதிர்நிலையாகவே பௌத்த சமண மரபுகள் வடநாட்டில் எழுந்தன. பிராமணியப் பிடியிலுள்ள மரபுகள் சடங்காசாரங்கள், வர்ணாச்சிரம மரபுகளில் இருந்து மக்களை விடுவிக்கும் இம்முயற்சிகளாக அவை அமைந்தன. பசவேசர் மேற்கொண்ட முயற்சி பிராமண இந்து மேலாதிக்கத்தில் இருந்து சமூக குழுக்களாக விடுவிக்கும் முயற்சியே என்பதை இங்கு மனங்கொள்வது அவசியமானது. வைதீக மரபின் அழுங்குப் பிடியால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் மத்தியில் 'சாரணர்கள்' எடுத்துச் சென்ற சிந்தனைகள் வீரசைவத்தை பாதிக்கப்பட்ட சமூககுழுவினரின் எழுச்சியாகி வீரசைவமரபைப் பரிணமிக்க வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசவேசர் தான் இந்த வீரசைவக் கூட்டமைப்பை முழுமையாக உருவாக்கினர் என கூற முடியாது. அவரின் காலத்திற்கு முன்னரே பல்வேறு மட்டங்களில் உருவாகி வந்த சிந்தனைக் கிளர்ச்சிகள் யாவற்றையும் இணைந்த ஒரு பாலமே பசவேசர் என்பதை ஆய்வாளர்கள் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர். சுருங்கக் கூறின் பசவேர் முன்னைப் பழைமையில் எழுந்தவைகள் தன் யாவற்றையும் தமது காலத்துச் சிந்தனை மலர்ச்சியோடு இணைந்து இலிங்காயதத்தை ஒரு நிறுவன ரீதியான வாழ்க்கையாக எழுச்சி பெறவைத்த ஒரு பாரிய உந்து சக்தியாக இயங்கினார்.

இலிங்காயதத்தை ஒரு கோட்பாட்டு ரீதியாக கர்நாடக மாநிலத்தில் எழுச்சி பெறவைத்த பசவேசரின் சிந்தனைக் கருவூலங்களும், செயலாண்மைத் திறமும் அரசியல், சமூக ஆதரவைப் பெற்றது மட்டுமன்றி வரலாற்றுப் போக்கிலே இலிங்காயதர் என்ற சமூக நிறுவன அமைப்பையும் உருவாக்கி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. காலசூரி மன்னர்கள் பசவேசரின் சிந்தனைப் போக்கை அரவணைத்தமையே வேகமான வளர்ச்சிக்குப் பக்க பலமாகவும் அமையலாயிற்று

பசவேசர் 1105–1167 காலத்தின் பின்னர் காலசூரி மன்னர்களின் ஆட்சிமங்குதலையடைந்தது. ஏறத்தாழ இரண்டரை நூற்றாண்டு காலமாக இலிங்காயத இயக்கமும் செல்வாக்கு இழந்தது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் விஜய நகர மன்னர் ஆட்சிக் காலத்தில், லக்கண்ண தனதேச (1425), சித்தலிங்க யாதி (1510) போன்றோரின் அயராத முயற்சியால் இலிங்கநாயகத இயக்கமும் வீரசைவமும் மீண்டும் புதுமலர்ச்சி பெற்றமை வரலாறு.

இலிங்காயதம் ஒரு இனக்குழுவைச் சார்ந்த சமயமாக கர்நாடக மாநிலத்தில் வேரூன்றியமையும், மடாலயங்கள் செழித்து வளர்ந்தமையும் விஜய நகரமன்னர் காலத்தில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. பசவேசர் காலத்தில் கோட்பாட்டு ரீதியாக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு பெருமளவில் ஒன்றுபடுத்தப்படாத தனியமைப்புகளாக பின்னர் சிதறியது. குருபீடங்களை ஒன்றுபடுத்தி வளர்க்கும் பாரிய பணி சித்தலிங்க யாதி காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இது ஒருவகையில் சமூக இனக்குழுக்களைக் குருபீடங்களின் ஊடாக ஒன்றுபடுத்தும் முயற்சியாகவுமே அமைந்தது.

சமயங்கள் அரச ஆதரவின் ஊடாக எழுச்சி பெறுவதும் மங்குதலை அடைவதும் இயல்பானது. பதின்மூன்றாம் பதினான்காம் நூற்றாண்டுகளில் கர்நாடக மாநிலத்தின் வடபகுதியில் இஸ்லாமியர் ஆட்சியும், பாமினி மன்னர்கள் ஆட்சியும் தொடர்ந்தமை இந்து சமயத்தை பலவீனமடைய வைத்தது. இதன் காரணமாக வைதீக சமயங்கள் நிறுவன ரீதியாக மீண்டும் ஒழுங்குப்பட்டுச் செயற்பட வேண்டிய சூழலும் உருவாகியது.

விஜய நகர மன்னராட்சியின் கடைசிக் கூறில் இலிங்காயதம் அரசஆதரவை பெறமுடியவில்லை. காளாமுகம், சைவம், வைணவம், சமணம் மீண்டும் அரச ஆதரவைப் பெற்றது. கர்நாடக மாநிலத்தில் இலிங்காயத சமயத்தின் எழுச்சியையும் வளர்ச்சியையும் விரிவாக ஆராயும் முயற்சிகள் கடந்த தசாப்தத்தில் உதிரியாகப் பல்வேறுமட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீரசைவம் என்ற இலிங்காயத மதத்தின் வளர்ச்சியும் செல்வாக்கும் ஈழம் வந்தமையும், அவை எவ்வாறு சமூக, சமய நிறுவனங்களிலே வேரூன்றியது, இதன் அடிப்படையிலான சமுதாயப்பின்னணி என்ன என்பவை விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒரு முக்கிய துறையாகும்.

## *சிவன் விரதங்கள் - 8*

1. கார்த்திகை மாதம் திங்கட்கிழமைகளில் கைக்கொண்டு பின் தொடர்ந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் இருப்பது; 2. மார்கழி திரு ஆதிரை நாளில் மேற்கொண்டு, பின் மாதந்தோறும் வரும் திரு ஆதிரை நாளில் இருப்பது; 3. உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கைக்கொண்டு பின்வரும் எல்லாப் பௌர்ணமி நாட்களிலும் இருப்பது. 4. மாசி, தேய்பிறை சதுர்த்தசி (சிவராத்திரி) யில் தொடங்கி ஒவ்வொரு மாத சிவராத்திரியிலும் மேற்கொள்வது. 5. கேதாரேஸ்வர விரதம்- புரட்டாசி வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி அமாவாசை வரை இருப்பது; 6. பங்குனி உத்திரநாளில் திருமண விரதம் கடைப்பிடிப்பது; 7. தை சதுர்த்தசியில் பாசுபத விரதம் இருப்பது; 8 வைகாசி வளர்பிறை அட்டமியில் அட்டமி விரதம் இருப்பது.

## *உமை விரதங்கள் - 3*

1. சித்திரை மாதம் வளர்பிறை வெள்ளிக்கிழமை தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இருப்பது. 2. ஐப்பசி உத்திரநாளில் இருப்பது. 3. புரட்டாசி வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரையில் இருப்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# இறை வழிபாட்டு முறைகள்

1. ஈழநாட்டுச் சைவகிரியைகளும் சடங்குகளும்
2. நித்திய பூசையும் அதன் தத்துவமும்
3. திருக்கோவில் விக்கிர அமைப்புகளும் பூசை வழிபாட்டு முறைகளும்
4. சைவத் திருமுறைகளும் பண்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ நாட்டுச் சைவகிரியைகளும் சடங்குகளும்

-சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள்-

அநாதி முத்த சித்துவாகிய பரமசிவன், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்ந்து கடைத்தேற வேண்டும் என்னும் பெருங்கருணைத் திறத்தினால் திருவாய் மலர்ந்தருளிய முதனூல்கள் வேத சிவாகமங்களாம். இவ்விருவகை நூல்களிலும் கூறப்பட்ட விதிகளுக்கமையவே மனிதன் பண்டுதொட்டுத் தன் இகபரவாழ்வுக்கு வேண்டிய கருமங்களைச் செய்து வருகிறான்.

பாரதத்தை தாயகமாகக் கொண்டு, ஈழ மணித் திரு நாட்டிற் புகுந்த, இந்து சமயம் என்ற பெருநதியானது சைவம், சாக்தம், வைணவம், காணபதம், கௌமாரம், சௌரம் என்னும் ஆறுகிளைகளை உடையது. இவ்வாறு கிளைகளும் எம் நாட்டிலேதான் அவற்றின் தனித்துவம் கெடாது பேணிக்காக்கப்பட்டும், ஒன்றுக்கொன்று போட்டி பூசலின்றி ஒருங்கிணைந்தும் அனுட்டிக்கப்பட்டும் வருகின்றன. இது ஈழநாட்டிற்குரிய ஒரு தனிப் பெருமை.

வேதத்தை ஓதவும், ஓதுவிக்கவும் அதிகாரிகளாயுள்ளோர் அதன் பகுதிகளாகிய சங்கிதை, பிராம்மணம், ஆரண்யகம், உபநிடதம் என்பவற்றைப் பயின்று தத்தம் கோத்திரம், சூத்திரம் என்பவற்றுக்கேற்ப அவற்றில் விதிக்கப்பட்ட சடங்குகளையும், கிரியைகளையும் இம்மியும் வழுவாது அவ்வவற்றுக்கு விதிக்கப்பட்ட காலங்களில் நிறைவேற்றி, அவற்றின் பயனைப் பெறுகின்றார்கள். அவற்றுள் முக்கியமானவைகளாகக் கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம், உபநயனம் (தீக்ஷை), விவாகம் என்பவற்றைக் கூறலாம். தாம் தாம் முன்செய்த வினைகளைப் பூந்தாமரையோன் பொறிவழியே பிறவி எடுத்து அனுபவிப்பனவாகிய ஆன்மாக்கள் தத்தம் தாய், தந்தையர் வழியாக எய்திய பாவங்களைப் பரிபரிக்கவே எரியோம்பலாகிய கிரியைகளுடன் கூடிய இச்சடங்குகளைச் செய்கிறார்கள். இவை அவர்கள் உடற்குற்றங்களை நீக்கவும், ஆன்ம விருத்திக்காகவுஞ் செய்யப்படுபவை.

கன்மத்துக்கீடாகப் பிறவி எடுக்கும் ஆன்மாக்களுள்ளே ஆறறிவு படைத்த மக்கட் தொகுதியினர் தம் வாணாளில் இறுக்க வேண்டிய கடன்கள் நான்கு. அவர்கள் அக்கடனிலிருந்து தப்பவே முடியாது. அவைதாம் தேவர் கடன், முனிவர் கடன், பிதிரர் கடன், மனிதர் கடன் என்பன. அவற்றுள் தேவர் கடன், திருக்கோவில் வழிபாடு, ஆலயங்கள் சமைத்தல், திருக்கோவில் வழிபாடு, திருத் தொண்டுகள், புராண படனம் என்பவற்றினாலும், முனிவர் கடன், இருடிகளுக்குச் செய்யப்படுந் தர்ப்பணங்கள், ஐயம், தியானம் என்பவற்றினாலும் பிதிரர் கடன் அற நெறிப்பட்ட இல்லறவாழ்க்கை, ஆண்டுதோறுஞ் செய்யப்படும் மகாளயம், சிரார்த்தம், புண்ணிய காலங்களில் செய்யப்படும் நீர்க்கடன் என்பவற்றினாலும், மனிதர் கடன் விருந்தோம்பல், சுற்றம் பேணல் என்பவற்றின மூலமும் இறுக்கப்படுவன. இவை எல்லா வருணத்தார்க்குமுரியவை.

முதற்கண் கூறப்பட்ட தேவர்கடன் எல்லாவருணத்தார்க்கும் எல்லா ஆச்சிரமத்தினருக்கும் உரியவை. அவர்கள் இக பர நலன்களை அடைதற்காகவே திருக்கோவில் வழிபாடு விதிக்கப்பட்டது. இத் திருக்கோவில்களைப் பற்றி விசேடித்துக் கூறுவன சிவாகமங்கள். அவ்விதி நூல்களிற் கூறப்பட்டவாறு சிற்ப சாத்திர இலக்கண நுணுக்கங்களுக்கமைய ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன. வேத காலங்களின் பின்னர் காணப்படும் " தோன்று கோயிலும், தோற்றிய கோயிலும்" காமிகம் முதலாகி ஆகம விதிகளுக்கமைய எழுந்தவையேயாம்.

குரு லிங்க சங்கமம் ஆகிய மூவகைத் திருமேனிகளிடத்திலும் எழுந்தருளி நின்று ஆன்ம கோடிகளுக்கு அருள் செய்யும் இறை, சர்வான்மாக்களுக்குந் திருவருள் சுரக்க வேண்டி, இரண்டாவதாகக் கூறப்பட்ட இலிங்க வடிவிலேயே திருக்கோவில்களில் சாந்நித்தியராய் எழுந்தருளி இருக்கிறான். இத்தகைய இலிங்கங்களிலும், பிம்பங்களிலுஞ் செய்யப்படும் மந்திரம், கிரியை, பாவனை என்பனவற்றோடு கூடிய வழிபாடே ஆன்மாக்கள் தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்பனவற்றை அடைய உதவுவன. அவைதாமும் சைவ நாற்பாதங்களுள் சரியை, கிரியை என்னும் இரண்டின் மூலமும் எய்தற்பாலன. மிகவும் அரிதிற் கிடைத்த இம்மானிட ஜென்மத்தில் இவையிரண்டும் மிக இன்றயமையாதன எனநூல்கள் விதந்தோதுகின்றன.

ஆலயங்களிற் செய்யப்படும் கிரியைகள் முப்பெரும் பிரிவினுள் அடங்கும்; அவை கர்ஷணாதி பிரதிட்டாந்தம், பிரதிட்டாதி உற்சவம், உற்சவாதி பிராயச் சித்தாந்தம் என்பன. அவற்றுள் முதலாவது ஆலயமில்லாவிடத்து புதிதாக ஆலயம் (தோன்று கோவில்) சமைக்கத் தொடங்கும் கால் நிலத்திலுள்ள அசுத்தங்களை நீக்குவதற்கு அவ்விடத்தை உழுதல் (கர்ஷணம்) முதலிய கிரியைகளைச் செய்து திருக்கோவிலை எழுப்பி மூர்த்தியைப் பிரதிட்டை செய்யும் வரையுள்ள கிரியைகளைக் குறிக்கும்; இரண்டாவது, கோவில் குடமுழுக்கு முடிந்ததும் ஆங்கு தினமும் நடக்கும் நித்தியக் கிரியைகளும் விசேட தினங்களில் நடக்கும் நைமித்தியக் கிரியைகளும் நாட்டுக்கு நன்மை வேண்டிச் செய்யப்படும் காமிகக் கிரியைகளும், அலங்கார உற்சவம், விசேட தினங்களில் இறைவன் திருவுலாக் கொண்டருளும் நிகழ்ச்சிகளுமாம்; மூன்றாவது வருடந்தோறும் ஆலயத்தில் இறைவனது பஞ்சகிருத்திய நடனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐந்தொழிலாடல்) விளக்கும் (கொடியேற்றம், தேர், தீர்த்தம்) மஹோற்சவக் கிரியைகளும் அவற்றின் முடிவில் நடைபெறும் பிராயச்சித்தம் என்பனவுமாம்.

புராணேதிகாச காலங்களில் விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சட்டி விரதம், கேதார கௌரி விரதம், வரலக்ஷ்மி விரதம் நவராத்திரி விரதம், சத்தியநாராயண விரதம் முதலிய விரதங்கள் யாவும் இல்லங்களிலேயே அவ்வப் பிரதிமைகளைச செய்து புரோகிதரை அழைத்துப் பூசை முதலியன செய்வித்துப் பூசித்த விக்கிரகத்துடன் தக்ஷஷணை முதலியன கொடுத்து உபசரிப்பதே முறையாக இருந்தது. ஆனால் ஆகமங்களிற் கூறப்பட்டவாறு சிற்பசாத்திர விதிக்கமையத் திருக் கோவில்கள் எழுந்த பின்னர் அவ்விடத்திலேயே விரதிகள் ஒருங்குகூடி சங்கற்பம், அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், பூசை, ஆராதனை, அர்ச்சனை, ஜபம், தபம் முதலிய வழிபாடுகள் அனைத்தையும் செய்யத் தலைப்பட்டனர். இவ்வழிபாட்டு முறையையே இன்று நாம் காணக்கூடியதாக உள்ளது.

சிவாகமப்படி கட்டப்பட்ட திருக்கோவிலை மையமாகக் கொண்ட ஊர்களில் வதியும் இலங்கைச் சைவ மக்கள் அத்திருக்கோவில்களிலேயே வேதாகமச் சடங்குகளுட் சிலவற்றையும் செய்கின்றனர். நாம் முன்னர்க் குறித்த வைதீகச் சடங்குகளுள்ளே குழந்தையைக் கோவிலுக்கு எடுத்துச் செல்லுதல் பால் பருக்குதல், முடி இறக்குதல், வித்யாரம்பம், தீக்ஷை என்பவற்றை ஆலயங்களில் நடத்துகின்றனர். இவற்றுள் தீக்ஷை ஒழிந்த ஏனைய சடங்குகள் இறைவன் இன்னருள் வேண்டி வழிபாட்டுடன் மட்டும் செய்யப்படுவன. இல்லங்களிலே செய்யப்படுவன விவாகம், கிருஹப் பிரவேசம் என்பனவாம்.

இலங்கைச் சைவ மக்களிடையே வழங்குங் கிரியைகளை முப் பெரும் பிரிவுகளில் அடக்கலாம். அவை வைதிகக் கிரியைகள், ஆகமக் கிரியைகள், வேதாகம சம்மேளனக் கிரியைகள் என்பன. ஆலயங்களிலே செய்யப்படும் கிரியைகள் யாவும் வேதாகம சம்மேளனக் கிரியைகளேயாம். அதாவது சிவாகமங்களிலுள்ள விதி முறைகளுக்கேற்ப வேதமந்திரங்களை அவ்வவ்விடத்தில் ஓதிச் செய்யப்படுவதாம்.

**முதற் கிரியைகள் :**

ஆலயங்களிலே நிகழுஞ் சங்காபிஷேகம், கும்பாபிஷேகம், யாகம், மஹோற்சவம் என்பனவற்றிலும் இலங்கைச் சைவர்களின் இல்லங்களில் நிகழும் விவாகம், தீக்ஷை, கிருஹப் பிரவேசம், சாந்தி என்பவற்றிலும் நிகழும் முதற்கிரியைகள் சில எல்லா இடத்திற்கும் பொதுவானவை; சங்கற்பம், பஞ்சகவ்யம், புண்ணியாகம், அங்குரார்ப்பணம், இரக்ஷாபந்தனம் என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். இவையாவும் சிறந்த கருத்துக்களோடு கூடியவை.

**சங்கற்பம் – அனுஜ்ஞை :**

சங்கற்பம் என்பது எடுத்துக்கொண்ட காரியத்தைக் குருவின் உதவியுடன் செய்து முடிப்பதாக உறுதி பூணல்; உறுதி பூணும் அத்தினத்தை விசேடித்துக் குறிப்பிட்ட ஒருவர் தனக்கும், குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், ஊரவர்க்கும் இகபர நல்வாழ்வு கிடைத்தற் பொருட்டும் அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு புருடார்த்தங்களையும் எய்தற் பொருட்டும், நவக்கிரகங்களால் வரக்கூடிய ஊறுகளை நீக்குவதன் பொருட்டும், அட்ட ஐசுவரியங்களைப் பெறுவதற்குமாகப் பிரார்த்தித்து செய்யப்படுவது.

**அனுஜ்ஞை- விநாயக பூசை :**

அனுஜ்ஞை என்றால் உத்தரவு பெறல் என்பது பொருள். முழுமுதற் பொருளாகிய விநாயகரைப் பூசித்து அவரனுமதி பெற்றுப் பின்னர் சிவாசார்யர்கள், அந்தணோத்தமர்கள் என்போரதும் மூலமூர்த்தி முதலாகச் சண்டேசுவரர் இறுதியாகவுள்ள எல்லாத் தெய்வங்களுடையவும் அனுமதியை பெறல்.

**பஞ்சகவ்யம் :**

பஞ்ச-ஐந்து; கவ்யம்- பசுவிலிருந்து பெறப்படுவது. எனவே பஞ்சகவ்யம் என்றால் பசுவிலிருந்து பெறப்படும் ஐந்து பொருள்கள் எனப் பொருள்படும். அவையாவன-பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பன. இவை தமிழில் "ஆனைந்து" என்று விதந்தோம்பப்படும். "ஆனைந்துமாடினாள்காண்" என்றும் ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்" என்றும் வரும் திருப்பாடற் சொற்றொடர்கள் நோக்கற்பாலன.

பசு எங்ஙனம் சைவசமயத்துக்கு உயிர் நாடியோ, அங்ஙனமே இப்பஞ்ச கவ்வியமும் ஆகமக்கிரியைகள் அனைத்துக்கும் மூலாதாரமாக விளங்குகிறது. யாகசாலைக் கிரியைகளின்போது ஒரு முறைக்கு மேலும் பஞ்சகவ்விய பூசை நிகழ்த்துவதும் உண்டு. இது எங்களுடைய உடம்பிலுள்ள அந்தகரணங்களைச் சுத்தி செய்தற் பொருட்டும், ஸ்தல சுத்தியின் பொருட்டும், மூர்த்திகளைச் சுத்தி செய்தற் பொருட்டும் செய்யப்படும் கிரியையாகும்.

**புண்ணியாகம் :**

இது இடத்தைச் சுத்தி செய்தற் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். வைதிகக் கிரியைகளிலும் ஆகமக்கிரியைகளிலும் சலதேவதையாகிய வருணனை பூசித்துப் பஞ்சகவ்வியத்துடன் சேர்த்துத் தெளிப்பதே புண்ணியாகம் செய்தல் எனப்படும். ஸ்நபனாபிஷேகம், செய்யும் போதும், சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் முதலியன செய்யும் பொழுதும் ஒவ்வொரு யாகபூசை செய்யத் தொடங்கும் பொழுதும், சப்பரம், இரதம், முதலிய வாகனங்களில் மூர்த்தியை ஆரோகணிக்கும் போதும் இக்கிரியை இடம் பெறும். சைவ மக்களது ஜெனனாசௌச, மரணசௌச முடிவிலும் ஏனைய சுபாசுபக் கிரியைகளிலும், கிரியை தொடங்கும் பொழுதும் இது முதற் கிரியையாக அமையும்.

**பிரவேச பலி :**

இது புதிதாக கட்டப்படும் ஆலயங்களிலும், அயலில் குடியில்லாத வெளிகளில் கட்டப்படும் இல்லங்களிலும், நெடுங்காலமாகக் கிலமாகக் கிடந்து நித்தியம், நைமித்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய பூசைகள் நிகழாத ஆலயங்களிலும் கும்பாபிஷேகத்து முன்னர் செய்யப்படுவது; கிராமத்திலுள்ள துட்ட தெய்வங்களின் இடையூறுகளை நீக்குதற் பொருட்டும் இது செய்யப்படும்; பூத பிசாச, பிரம்ம இராட்சதர்களை அவ்வத்திக்குகளிலிருந்துந் துரத்துவதற்குச் செய்யப்படும். "மகாதேவனுடைய ஆனையினாலே இவ்விடத்தில் ஆலயம் சமைக்கப் போகிறோம். இப்பலிகளை ஏற்று வேறிடம் செல்லுவீர்களாக" என்று வேண்டி அவைகளை அகற்றும் பாவனையாகச் செய்யப்படும்.

**இரக்ஷேக்னஹோமம் :**

பிரவேச பலி புறத்தேயிருக்கும் தேவதைகளை அகற்றுவதற்குச் செய்யப்படுவது போலவே "இரக்ஷேக்னம்" என்னும் ஆலயத்தில் உள்ளிருக்கும் துட்ட தேவதையை விசேஷ ஹோமத்தின் மூலம் பிரதி செய்து வெளியேற்றப்படுவது "இரக்ஷேக்னம்" எனப்படும். இதில் காஞ்சிரம், சமித்து, வெண் கடுகு, மிளகு, தவிடு முதலியன உபயோகிக்கப்படும். வைதிகக் கிரியைகளில் ஜாதகர்மம் நாமகரணங்களின் போதும் பலிகரண ஹோமம் செய்யப்படுதல் நோக்கற் பாலது.

**கிராம சாந்தி**

கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலியவற்றில் இடம் பெறும் கிரியைகளுள் கிராம சாந்தி முக்கியமானது. இது கிராம மக்களது நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். இது ஆலயத்துக்குக் காவலாளியாக விளங்கும் பைரவ மூர்த்தியின் மூலமாக அவரது ஆதிக்கத்தின் கீழுள்ள ஏனைய அசுர, இராட்சத தேவதைகளினால் வருங் கேடுகளைத் தவிர்ப்பதற்குச் செய்யப்படும். இது பெரும்பாலும், ஆலய மேற்குப் புறத்தில் நிகழ்வதாகும். வட கிழக்கில் அல்லது கிழக்குத் திக்கிலும் செய்யப்படலாம்.

**வாஸ்து சாந்தி**

இக்கிரியை மூன்று வகைப்படும். ஆலயம் சமைப்பதற்கு முன் செய்யப்படுவது ஒரு வகை; இரண்டாவது பிரதிட்டை சம்புரோக்ஷணை முதலிய காலங்களிலே இடம் பெறுவது; மூன்றாவது வகை சங்காபிஷேகம், உற்சவம் சண்டாளப் பிராயச் சித்தம் முதலிய காலங்களிற் செய்யப் பெறுவது. வாஸ்து சாந்தி கிரியா முறையில் மண்டலங்களைப் பொறுத்தவரை மூன்று வகைப்படும்.

இக்கிரியை நாம் பிரதிட்டை செய்ய விரும்பும் இடத்துக்கு அல்லது கட்டவுள்ள வீட்டுக்கு அல்லது கட்டி முடித்துள்ள வீட்டுக்கு அதி தெய்வமாகவுள்ள வாஸ்து புருஷனை மகிழ்வித்தற் பொருட்டு செய்யுங் கிரியையாகும். வாஸ்துவின் அதிதெய்வமாகிய பிரமதேவரையும் சக்திகளையும் பூசித்து, ஏனைய தேவதைகளையும் பூசித்தல் மூலம் இதன் நோக்கம் பெறப்படும். அதுவும் மூவகைத்து. பூசனை, ஓமம், பலி என்னும் மூன்றினாலும் மகிழ்வித்து வாஸ்து புருஷனை அக்கினியிற் கொழுத்தி, ஆலயம் அல்லது வீட்டிலுள்ள எல்லா இடங்களுக்கும் இழுத்துச்சென்று சுத்திகரிக்கப்படும். பின் அவ்விடம் புண்யகலசத்தினால் சுத்திகரிக்கப்படும்.

**நலக்கிரக யாகம் அல்லது கிரகயக்ஞம் :**

வேதோக்கம் ஆகமோக்தம் ஆகிய எல்லாச் சுபகாரியங்களிலும் நவக்கிரகயாகம் விசேடித்துச் சொல்லப்படுகிறது. இறைவனுடைய இல்லத்திற் கோள்களுக்கு இடமேது என்ற காலம் போய், கிரகங்கள் இல்லையெனில இறைவனெவ்விடத்தான் என்ற உண்மை உணருங்காலம் வந்துள்ளது. அவன்தாள் வணங்க அவனருள் வேண்டும். அங்ஙனமே கோணிலையறிந்துதான் எக்கோளையும் பிரதிட்டை செய்ய முடியும். ஒன்பது கிரகங்களுக்கும் அதிதேவதைகளாகவும் பிரத்திபதி தேவதைகளாகவும் 18 தெய்வங்கள் உள. கும்பாபிஷேகம், உபநயனம், விவாகம், ஆயஷ்ய ஹோமம், சாந்திகள் முதலிய சகல மங்கல காரியங்களையுங் கோள்களின் உதவி நாடியே செய்தல் வேண்டும். பிரதிட்டையின் போதுள்ள கிரியைகள் யாவற்றிலும் ஏற்படும் பல்வேறு லக்ன தோஷங்களையும் நீக்குதற் பொருட்டே கிரகங்களுக்குப் பிரீதி செய்யப்படுகின்றது.

**மிருத் சங்கிரகணம்-அங்குரார்ப்பணம் :**

இவையிரண்டும் உற்சவம், பிரதிட்டை முதலிய தேவாலயக் கிரியைகளில் செய்யப்படுவன. ஆனால் அங்குரார்ப்பணம், தீக்ஷை, உபநயனம், விவாகம் முதலிய எல்லாச் சுபகருமங்களிலுஞ் செய்யப்படுவது. மிருத் சங்கிரகணம் என்றால் மண் எடுத்தல் என்பது பொருள். அதாவது ஆசாரியர் முளையிடுதலுக்கு புது மண் எடுத்தல் என்பது பொருள். ஆற்றங்கரை, மலையடிவாரம், நந்தவனம் முதலிய பரிசுத்தமான இடங்களில் இக்கிரியை நடைபெறும்.

அங்குரார்ப்பணம் என்பது அங்குர-அர்ப்பணம்; முளைஇடுதல் எனப்பொருள்படும். இது எப்போதும் சுபகருமங்களுக்கு முன்னதாக 5 நாள் அல்லது 9 நாள் முன்னதாக மங்கள கிரமாக முளையிடுதலைக் குறிக்கும். இவை ஆகமப்படி 40,24,16 பாலிகைகளில் இடவேண்டும். வைதிகப்படியாயின் 5 பாலிகளில் இடலாம். அவற்றிலே சிவாசாரியார் தானே சுமங்கலியாய் நன்முளையிட்டு காலை, மாலை, பஞ்சகவ்ய நீர் வார்த்து, அவற்றின் முளைகளை அவதானித்து, பயன்களை அறிந்து, அவற்றின் சூசகத்தை உணர்த்தல் வேண்டும்.

**இரக்ஷாபந்தனம் :**

இரக்ஷா பந்தனம் என்பது காப்புக் கட்டுதல் எனப் பொருள்படும். அதாவது சிவாசாரியார் தமக்கும் யாகத்தில் பங்கு பற்றும், ஏனைய சிவாசாரியார்கட்கும் காப்புக் கட்டுவதுடன், மூலமூர்த்திக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் அவரவருக்குரிய தானத்திலும் ரஷாபந்தனம் செய்ய வேண்டும். இதனுடைய நோக்கம் கர்மாரம்பந் தொடக்கம், அது முடியும் வரை வெளியுலக உபாதைகள் ஒன்றும் இவர்களைத் தீண்டா என்பதாம்.

**பூதசுத்தி : அந்தர்யாக பூசை : ஆத்ம பூசை:**

இவை ஆலயக்கிரியைகளில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவன. இவையின்றேல் புறப் பூசைகளினாற் பயனில்லையாம். இது சிவாசாரியார் இருதய கமலத்தில் சிவனைத் தியானித்துப் பூசித்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சிவாசாரியார்கள் யாவருஞ் சிவோகம் பாவனை செய்தலாம். அவர்கள் தமது வலது கையைச் சந்தனத்தினால் சிவஹஸமாகப் பாவித்து, அக்கையினால் தம்மைச் சிவமாகப் பாவனை செய்து தாம் புறத்தே பூசிக்க இருக்கும் மந்திரங்களை அகத்தேயும் பூசிப்பர். எனவே சிவாசாரியர்களும் தாம் புறத்தே சிவத்தைப் பூசிக்கும் முன்னர் தாமும் சிவமாவார். காண்பான், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் சிவமாகும். இவ்வுண்மையை சண்டேசுவர நாயனார் தத்துவத்தில் விளக்கமாகக் காணலாம். சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்யும் பொழுது, சிவத்துடன் இரண்டறக் கலந்து நின்ற தன்மையினால் அவருக்குப் புறத்தே நிகழ்ந்த ஒன்றும் தெரிந்திலது. காண்பானும் சிவம், காட்சியும் சிவம், காட்சிப் பொருளும் சிவம், என்ற முறையில் மூன்றும் ஒன்றித்த நிலையில் நிற்பதே சிவோகம் பாவனையாம். இந்நிலையை விளக்குவதே பூசுத்தி, அந்தர் யாகம், ஆத்தும பூசை என்பவற்றின் தத்துவங்களாகும். சண்டேசுவர நாயனார் சிவமாக நின்று சிவபூசைக் கிடையூறு செய்த ஒருவரின் காலைத் துண்டித்தமையால் அக்குற்றம் அவர் மேல் செல்லவில்லை. அத்தகைய திரிகரண சுத்தியுடன் கூடிய வழிபாடுதான் பயனளிப்பது; பக்த கோடிகளின் மனதை வசீகரிப்பது; ஆன்மாக்கள் லயிப்பதற்கு வழிகோலுவது; கிரியை நடக்கும் இடத்தை ஆலயம் ஆக்குவதுமாம்.

**கடஸ் தாபனம்** :

கடஸ்தாபனம் என்றால் கும்பம் வைத்தல் எனப் பொருள்படும். இக்கிரியையின் கருத்து ஆராயற் பாலது. விநாயகப் பெருமானை வழிபடுவதற்கு நாம் கோமயம், மஞ்சள், சந்தனம் ஆகியவற்றால் உருவமைத்து உடன் பூசனை செய்கிறோம். அங்ஙனமே சிவபூசை செய்யுமிடத்தும் சிவலிங்கத்திற்குப் பதிலாக உருத்திராக்கம், சந்தனம் என்பவற்றில் ஆவாகித்து வழிபாடு செய்கிறோம். அங்ஙனமே கடவுள் யாவரையும் தற்காலிகமாகப் பூசிப்பதற்குக் கும்பங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. உருத்திராபிஷேகத்திலோ, நபனாபிஷேகத்திலோ, சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் முதலியவற்றிலோ, வேறு எப்பூசையிலோ கும்பம் மூலம் மூர்த்திகள் உருவேற்றப்பட்டுப் பூசிக்கப்படுகின்றனர். வைதிகக் கிரியைகளிலும் இம்முறையே கையாளப் படுகின்றது. பாலஸ்தாபனத்திலும் கூட சில தினங்கள் வைத்துப் பூசிப்பதற்குக் கும்பங்கள் காலாகர்ஷணப் பொருளாக விதிக்கப்பட்டுள்ளன.

கும்பம் தாபித்தலின் தத்துவம் யாது? அது மூர்த்தியாகவே பாவிக்கப்படுகின்றது. கும்பத்தோடு சகஜமாக இருக்கின்ற மண்ணானது, உடலுக்குரிய அம்சமாகும்; அதில் சுற்றப்படும் நூல் எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளாகும்: அதில் சுற்றப்படும் வஸ்திரம் தோல் ஆகும்; கும்பத்தினுள் விடப்படும் நீர் இரத்தமாகவும், மேதை எனப்படும் ஏழுதாதுகளாகவும் விளங்கும்; கும்பத்தினுள் இடப்படும் நவரத்தினம், வெள்ளி, பொன் நாணயங்கள் சுக்கிலமாகும் ; அந்தக் கூச்சம் (உள்வைக்கப்படுவது) முள்ளந்தண்டாக கருதப்படும். மாவிலை சடையாகவும், தேங்காய் கபாலமாகவும் கொள்ளப்படும். வெளியே போடப்படும் கூர்ச்சம் மாவிலைகளோடு கூடச் சடைகளை முடித்த குடுமியாகவும் கொள்ளப்படும். நியாசங்கள், பிராணப் பிரதிட்டை முதலிய மந்திரங்கள் ஜீவனாகும்; கீழே பரவப்படும் தானியங்கள் மூர்த்திக்கு ஆசனங்களாகவும் கொள்ளப்படுவன; உத்தரியபமாலைகள், சுகந்த புஷ்பங்கள் அலங்காரப் பொருள்களாம்.

**அக்கினி காரியம்** :

சைவர்களிடையே வழங்கும் சடங்குகள், கிரியைகள் என்பவற்றில் முக்கிய இடம் பெறும் அதிமுக்கிய கிரியை அக்கினி காரியம் (எரியோம்பல்) ஆகும். இக்கிரியை வேதகாலந்தொட்டே மிகப் பிரதானமானது. திருக்கோவில் வழிபாடு ஏற்படுவதற்கு முன்னர் பல்வகை வேள்விகளே வாழ்வின் மூலமும் முடியும் இலட்சியமும் என்றிருந்த காலத்தில் எரியோம்பலே முதலிடம் வகித்தது. பின்னர் தெய்வங்களுக்குத் திருக்கோவில் அமைத்து வழிபாடாற்றத் தொடங்கிய பின்னர், எரியோம்பல் வழிபாட்டில் ஓரங்கமாக அமைந்தது. எனினும் இன்றும் அது தன் சிறப்பிடத்தை வகிக்கின்றது. இல்லத்தில் செய்யப்படும் சடங்குகளிலும், ஆலயத்திற் செய்யப்படும் நித்திய நைமித்திய வழிபாடுகளிலும் திவேட்டல் இன்றியமையாததாக உள்ளது. வேதமும் கேள்வியும் ஆய பரமசிவன் முதல் பிதிர் தேவதைகள் வரையுள்ள அசரீரிகள் சகலருக்கும் ஆன்மாக்கள் அளிக்கும் அவி முதலிய அர்ப்பணங்கள் யாவும் அக்கினி தேவன் மூலமே அவர்களைச் சென்றடைகின்றன.

உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளையும் கலி பீடித்திருக்காதிருத்தற் பொருட்டு சுற்றாங்கெரியோம்பி நிதமும் தங்கருமம் செய்வாராகிய அந்தணப் பெருமக்கள், ஆன்மார்த்தமாகிய சிவபூசையிலும் பரார்த்தமாகிய ஆலய சேவையிலும் எரிபெருக்கியே பணியாற்றுகின்றனர்.

*"ஓமத்து ளங்கியி னுள்ளுள எனம்பிறை*
*ஈமத்து ளங்கி யிரதங்கொள் வானுளன்*
*வேமத்து ளங்கி விளைவு வினைகடற்(கு)*
*ஓமத்து ளங்கி குரைகட றானே*

என்னும் திருமூலர் திருவாக்கு எங்ஙனம் ஆன்மாக்களது கன்மமாகிய நெருப்பையவிக்கும் கடல் போல ஓமாக்கினி விளங்குகின்றது என நயம் படக் கூறியிருப்பது நினைக்கும்தோறும் சுவை தருவதாகும்.

இதனாலேயே வைதிகச் சடங்குகள் ஆகமச் சடங்குகள் என்பவற்றிலும் கணபதி ஹோமம், சிவமகாயாகம், சண்டி மகாயாகம் போன்ற தாந்தி விகக் கிரியைகளிலும் இன்னோரன்ன பிறவற்றிலும் " ஆகுதி வேட்கு மருமறையந்தணர்" செய்யும் பெருவேள்விகள் யாவற்றிலும் அக்கினி காரியம் சிறப்பிடம் வகிக்கின்றது.

*(நன்றி : திருக்கேதீச்சரத் திருக்குடத் திருமஞ்சன மலர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய பூசையும் அதன் தத்துவமும்

தருமபுரம் சிவாகமரத்னாகரம் எஸ். சுவாமிநாதசிவாசாரியர்

நூன்முகம்: சர்வக்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுதந்திரத்வம் என்னும் ஆறு குணமுடையவராய், அஷ்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான் எங்கும் வியாபகமாக இருப்பினும், சிவலிங்கம் முதலிய திருமேனியும் குருவும் சங்கமமும் இடமாகிக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பர் ; மற்றவிடங்களில் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் யாவரும் பரமபதியான சிவபெருமானை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபட வேண்டும்.

இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதேயாகும். மலம் நீங்கிய சிவஞானிகளும், பூர்வமலவாசனை தாக்காமையின் பொருட்டும் மேன்மேலும் சிவானந்தம் வளருதற் பொருட்டும், சிவலிங்கம் முதலிய திரு மேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முக்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம் பெற்று முக்தியடைவர்.

*"மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்*
*வார்த்தை சொலசற்குருவும் வாய்க்கும் பராபரமே"*

– தாயுமான சுவாமிகள்.

விபூதி இல்லாத நெற்றி வீண்; சிவாலய மில்லாத ஊர் பாழ்; ஈஸ்வர பூஜை செய்யாத ஜன்மா பாழ்; சிவனைக் கூறாத வித்தை பாழ் என்று "ஸ்மிருதிசங்கிரஹம்" என்னும் நூல் கூறுகிறது.

பிறவிகளுள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணியமேலீட்டினால் அடைந்த யாவரும் பசுபதியாகவும், உலகிற்குக் கர்த்தாவாயுமுள்ள சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும். அந்த சிவ பூஜையானது ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இரு வகைப்படும். ஆசாரியாரால் தீக்ஷை செய்விக்கப்பட்டு, அந்தத் தீக்ஷாகுருவால் கொடுக்கப்பட்ட மண்டலம், க்ஷணிகம், ஸ்படிகம் முதலான லிங்கங்களில் ஆன்ம நலம் கருதிச் செய்யப்படுவது ஆன்மார்த்தமாகும். பரார்த்த பூஜை என்பது சிவாலயங்களில் தனக்கும் பிறர்க்கும் அருள் பாலிக்கும் பொருட்டுச் சிவாலயங்களில் விளங்கும் சுயாம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ஆசுரம், பாணம் என்ற ஏழுவித லிங்கங்களுள் ஒரு லிங்கத்தில் ஆதிசைவர்கள் எனப்படும் சிவாசாரியாரைக் கொண்டு செய்விக்கப்படும் பூஜையாகும்.

*"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்*
*உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள*
*அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்*
*பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து"*

– பெரிய புராணம்

இருபத்தெட்டு ஆகமங்களையும், இருநூற்றிருபத்து நான்கு உபாகமங்களையும் தோற்றுவித்த பரம கருணாநிதியாகிய இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூஜை என்பதை உணர்ந்த உமாதேவியார்,

*"இங்கு நாத ! நீ மொழிந்த வாகமத்தியல் பினாலுனையர்ச்சனை புரியப்*
*பொங்குகின்ற தென்னாசை யென்றிறைஞ்சிப் போகமார்த்த பூண்முலையாள் போற்றி"*

என்றபடி, ஆலய வழிபாட்டின் பெருமையும், ஆகமங்களால் அர்ச்சிப்பதால் இறைவனுக்கு ஏற்படும் அளவு கடந்த அன்பையும், அவ்வன்பினால் ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் அறம்பொருள் இன்பத்துடன் பேரின்பத்தையும் உலக மக்களுக்கு உணர்த்தவே திருவுளங்கொண்ட உமாதேவியார் காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், மயிலாப்பூர் முதலிய இடங்களில் சிவபெருமானைப் பூஜித்தாள் என்று அறியப்படுகிறது.

எல்லாக் காரியங்களையும் நிறைவு செய்வதாலும், ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவபூஜை எனப்பெயர் பெற்றது. அத்தகைய சிவபூஜை செய்பவன் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னி காரியத்தினால் சம்பத்தையும், ஜபத்தினால் பாபநிக்ரஹத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான். மதம் கொண்ட யானைகளும், காற்றைப்போல் வேகமாக ஓடும் குதிரைகளும், தேவவனிதைகளுக்கு ஒப்பான பெண்மணிகளும் எவருடைய இல்லத்தில் இருக்கின்றனவோ, அது முறையுடன் செய்யப்படும் சிவபூஜையின் பலன் என்ற வாக்கியங்களைக் கொண்டு, முறையுடன் செய்யப்படும் சிவார்ச்சனை ஆன்மார்த்த பூஜையாயினும் பரார்த்த பூஜையாயினும் அது வேண்டிய பயனை அளிக்கக் கூடியது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதீக்ஷை பெற்ற அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் யாவரும் ஆன்மார்த்த பூஜை செய்யலாம்; பரார்த்த பூஜை செய்யக் கூடாது.

சிவதீக்ஷை பெற்றவர்களாயினும் சாதாரண அந்தணர் முதலானோர் மோஹத்தினால் பாரார்த்த பூஜையைச் செய்வார்களேயானால், அரசனுக்கும் ராஷ்டரத்திற்கும் நாசம் உண்டாகும். மற்றும் தனது ஜீவனத்திற்குச் சாமான்ய பிராம்மணர்கள் பரார்த்தமாகச் சிவனை அர்ச்சிப்பார்களேயானால் ஆறு மாதத்தில் வீழ்ச்சி அடைவார்கள். ஆதலால் அத்தகைய சாமானிய அந்தணர்களைக் கொண்டு பரார்த்தபூஜை செய்வதை நீக்கவேண்டும்.

சிவப்பிராமணர் எனப்படும் ஆதிசைவர்களாலே "ஆன்மார்த்தம், பரார்த்தம்" இரண்டும் செய்யத் தகுந்தது. சிவபெருமானின் ஆணையின் வசமுள்ளவர்களான ஆதிசைவர்களுக்குப் "பரார்த்த பூஜை" விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஆத்மார்த்த பூஜையும் செய்ய வேண்டும். சிவபெருமானின் ஆணைக்குட்பட்ட இவர்களுக்குப் "பரார்த்த பூஜை" தோஷமற்றது.

(தீக்ஷைபெற்று ஆன்மார்த்த பூஜையைத் தனியாகச் செய்யாத ஆதிசைவர்கள் தமது தீக்ஷையில் இஷ்டலிங்கமாகப் பெற்ற மூர்த்தியை பரார்த்தாலய சிவபூஜையுடன் பூஜை செய்யலாம்; இவ்வாறு செய்வது சம்பிரதாயம்.)

சிவாலயங்களில் பரார்த்த பூஜை செய்யும் சிவாசாரியர்கள், பதினாறு வயதிற்கு மேல் எழுபது வயது வரையில் பூஜை செய்யலாம் என்று காமிகாகமம் கூறுகிறது.

இத்தகைய ஆசாரியரைக் கொண்டு பரார்த்த பூஜையை முறைப்படி செய்தால், அதிவிருஷ்டி அனாவிருஷ்டி முதலான ஈதிபாதைகள் இல்லாமலும் நீர்வளம், நிலவளம் முதலான செழுமையுடன் உலகம் விளங்கும். ஆலயங்களில் செய்யப்படும் பூஜையானது உத்தமோத்தமம், உத்தமமத்யமம், உத்தமாதமம், மத்தியமோத்தமம், மத்தியமத்திமம், மத்தியமாதமம், அத மோத்தமம், அதமத்யமம் என்ற எட்டுக்கால பூஜை அஜிதாகமத்தில் கூறப்படுகிறது. அவைகளுள் உத்தமத்தில் கடைசியான ஆறுகால பூஜையானது இங்கு விளக்கப்படுகிறது.

சூரியன் உதயமாவதற்குமுன் மூன்றேமுக்கால் நாழிகைக்கு ஆரம்பித்து நடத்தப்படும் பூஜை உஷைகாலம் எனப்படும். காரணாகம வாக்கியப்படி உஷை காலபூஜை முடிவதற்கும் சூரியன் உதயமாவதற்கும் சரியாக இருக்கவேண்டும்.

ஆசாரியன் உஷை காலத்தில், அதாவது இரவு 36½ நாழிகை அளவில் எழுந்து, அவசியமான நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, பல்துலக்கி ஸ்நானம் செய்து (பஸ்மதாரணம்) விபூதி அணிந்து கொண்டு பத்து ஆவர்த்தி பஞ்சாக்ஷரம் ஜபித்து, தூய்மையான வெண்மை வஸ்த்திரம் உடுத்திக் கொண்டு, ருத்ராக்ஷரம் முதலிய பஞ்சாங்க பூஷிதராய், கையில் புஷ்பம் வைத்துக் கொண்டு மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆலயத்துள் நுழைந்து சுவாமிகள் சந்நிதியில் புஷ்பத்தை எதிரில் போட்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து பிரார்த்தித்துப் பள்ளியறைக்குச் சென்று பாவனையினால் இறைவனுக்கு தந்ததாவனம், ஸ்நானம் முதலியவைகளைச் செய்வித்து அஷ்ட புஷ்பம் அணிவித்துச் சிவபெருமானைப் பாதுகையில் ஆரோகணித்துப் பிரதக்ஷணமாக வந்து மூலகர்ப்பக்ரஹத்தில் வைத்து மூலலிங்கத்துடன் சேர்க்க வேண்டும். உதயத்திற்குமுன் ஒரு முகூர்த்தத்தில் (அதாவது இரண்டு நாழிகைக்குள்) உஷைகால பூஜை செய்யவேண்டும். பின்னர் தேவியின் ஆலயம் சென்று பூஜை செய்ய வேண்டும். நடராஜர், சோமாஸ்கந்தர் முதலிய மகேஸ்வரபேதங்களுக்கும் மற்றைய பரிவாரமூர்த்திகளுக்கும் பூஜை செய்யக்கூடாது.

ஆசாரியனுக்கு ஆன்மசுத்தி முதலான பஞ்சசுத்தி, பலி போடுதல் முதலியன கிடையாது. இதனை காரணாகமம் உஷை காலபூஜா விதியில் காண்க.

உஷைகால பூஜை முடிந்தவுடன் ஆசாரியன் யதோக்தமாக இரண்டு வித கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்தபின்னர் காலசந்தி பூஜைக்குத் தொடங்கவேண்டும். காலசந்திபூஜை தொடங்கு முன்பு "தீர்த்த சங்பிரஹணம்" அதாவது ஆறு, குளம் முதலிய இடங்களிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வரவேண்டும்.

## தீர்த்த சங்கிரஹணம் :

சிவபெருமான் அர்த்தயாம பூஜையின் முடிவில், சிபிகை மீது எழுந்தருளி கீதம், நர்த்தனம் முதலிய வாத்ய கோஷங்களுடன் சயனாலயத்திற்குச் சென்றதும், பரமசிவனுடைய ஜடையிலுள்ள கங்கை அங்கு பள்ளி அறையிலுள்ள மனோன்மணி அம்பிகையைப் பார்த்து வெகு வேகமாக அங்கிருந்து நீங்குவாள் மீண்டும் கங்காதேவியை பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் சேர்க்கும் பொருட்டு வேதியர் சுத்தமாக இருந்து பலவித வாத்ய கோஷங்களுடனும் ஸகல உபசாரங்களுடனும் சுவர்ணம் முதலிய எதாகினும் ஒரு குடத்தில் நதியிலிருந்து நீரை நிரப்பி, மாவிலை தேங்காய் முதலியவற்றால் அலங்கரித்து பரிசாரகரின் தலைமீது வைத்து அல்லது சிவலிங்கத்தின் மீது விஸர்ஜனம் செய்ய வேண்டும். இதற்கு "கங்கா ஹரணம்" (தீர்த்த சங்கிரஹணம்) என்று பெயர். இதன் பிறகு காலசந்தி தொடங்க வேண்டும்.

சூரியன் உதயம் தொடங்கி ஏழரை நாழி காலம் காலசந்தி பூஜா காலமாகும். அதில் முதலில் சூரியனைப் பூஜித்து பின்பு கணபதியை பூஜிக்க வேண்டும். அதன் பிறகு மகேஸ்வரபேதங்களுக்கும், மூலலிங்கத்திற்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம் செய்யவேண்டும். நைவேத்யம் செய்யும் பொழுது முதலில் கணபதிக்கும் பிறகு மூலமூர்த்தியான சுவாமிக்கும், நடராஜர், சோமாஸ்கந்தர் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும் நிவேதனம் செய்து, அதன் பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் முதலிய உபசாரம் செய்து பலிபோட்டு மடப்பள்ளியிலிருக்கும் குண்டத்தில் நித்யாக்கினிகாரியம் செய்து, நித்யோத்ஸவம் செய்து சண்டேச பூஜையை முடிவாகச் செய்ய வேண்டும் என்ற முறையானது காலசந்தி பூஜைக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலசந்தி பூஜை முடிந்தவுடன் 3¾ நாழிகைக் காலம் ஓய்வு நேரமாகும்; அதாவது 7½ நாழிகைக்கு மேல் 11¼ நாழிகை வரையில் பொது மக்கள் தரிசனம் அர்ச்சனை முதலியன செய்யும் காலம். அந்தப் பதினொன்றேகால் நாழிகைக்குப் பிறகு உச்சிகால பூஜை செய்ய வேண்டும். அதற்கு ஸ்நபனம் பஞ்சகவ்யம் வைத்துப் பூஜித்து, வாஸ்து நாதனைப் பூஜித்துக் கொண்டு, துவார பூஜை செய்து லிங்க சுத்தியுடன் சுவாமிக்கு முறையாக அபிஷேகம் செய்து போகாங்கம்வரையில் பூஜித்துத் தேவிக்கும் அபிஷேகமும் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்காரமும் செய்து சண்டேஸ்வரருக்கு பூஜை செய்ய வேண்டும்.

காலையிலும் உச்சிக்காலத்திலும் சாயங்காலத்திலும் பலிபோட வேண்டும் என்ற காரணாகம விதிப்படி உச்சிக்காலத்தில் பலிபோட்டுப் பூஜையை முடிக்க வேண்டும்; ஸ்நபனாங்கமாக ஹோமம் செய்ய வேண்டும்; பரிவாரங்களுக்கு பூஜை வேத்யம் கிடையாது.

## அபிஷேக திரவ்யங்களின் வரிசையும் அளவும் பலனும்

| வரிசை | திரவ்யம் | அளவு | பலன் |
|---|---|---|---|
| முதலாவது | வாசனைத்தைலம் | ஒருபடி | சுகமளிக்கும் |
| இரண்டாவது | மாப்பொடி | ஒருபலம் | கடனைத் தீர்க்கும் |
| மூன்றாவது | நெல்லிமுள்ளி | ஒருபலம் | அரசன் வசம் |
| நான்காவது | மஞ்சள் பொடி | ஒருபலம் | ரோகத்தைப் போக்கும் |
| ஐந்தாவது | ஜலதிரவியம் | இரண்டுபலம் | |
| ஆறாவது | பஞ்சகவ்யம் | ஒருமரக்கால் | பாபத்தைப்போக்கும் |
| ஏழாவது | பஞ்சாமிர்தம் | ஒருமரக்கால் | புஷ்டி அளிக்கும் |
| எட்டாவது | பசுவின் நெய் | அரைப்படி | மோக்ஷமளிக்கும் |
| ஒன்பதாவது | பசுவின்பால் | ஆறுபடி | ஆயுளைக் கொடுக்கும் |
| பத்தாவது | பசுவின் தயிர் | 12 படி | பிரஜாவிருத்தி உண்டாகும் |
| பதினொன்றாவது | தேன் | ஒரு ஆழாக்கு | சுகமளிக்கும் |
| பன்னிரண்டாவது | கரும்பின்சாறு | ஒருபடி | ஆரோக்யமளிக்கும் |
| பதின்மூன்றாவது | சர்க்கரை | மூன்று பலம் | |
| பதின்நான்காவது | பழுவர்க்கம், வாழைப்பழம், | 25 | பயிரை வளர்க்கும் |
| | மாம்பழம் | 15 | வச்யம் |
| | மாதுளை | 10 | கோபத்தைப்போக்கும் |
| | பலாப்பழம் | 10 | புஷ்டியளிக்கும் |
| பதினைந்தாவது | எலுமிச்சம்பழம் | 25 | |
| | | 10 | நேர்மை |
| பதினாறாவது | இளநீர் | 25 | போகமளிக்கும் |
| பதினேழாவது | அன்னாபிஷேகம் | ஒருமரக்கால் | சாம்ராஜ்யமளிக்கும் |
| பதினெட்டாவது | சந்தனம் | ஒருமரக்கால் | லக்ஷ்மியைக் கொடுக்கும் |
| பத்தொன்பதாவது | கும்பம் | 10 | மோக்ஷப்ரதம் |
| இருபதாவது | பத்ராம்பு | ஒருமரக்கால் | உலகவசம் |
| இருபத்தொன்றாவது | தாராம்பு | ஒரு மரக்கால் | இன்பமளிக்கும் |
| இருபத்திரண்டாவது | சிருங்கதோயம் | ஒருமரக்கால் | தைரியத்தை அளிக்கும் |
| இருபத்திமூன்றாவது | ரத்னோதகம் | ஒருமரக்கால் | லக்ஷ்மீப்ரதம் |
| இருபத்திநான்காவது | குசோதகம் | ஒருமரக்கால் | தூய்மையளிக்கும் |
| இருத்தைந்தாவது | அர்க்யோதகம் | ஒருமரக்கால் | ஞானமளிக்கும் |
| இதன் பிறகு | சங்கோதகம் | ஒருமரக்கால் | புண்யப்ரதம் |
| | தீப எண்ணெய் | ஒருபடி | |

ஜலம் காலையில் – 5 பாரம், உச்சியில் – 10 பாரம், மாலையில் – 3 பாரம்; மற்றக் காலங்களில் விருப்பம் போல் (பயன் – இஷ்டசித்தியளிக்கும்).

இவ்வாறு ஒருபடி எண்ணெய் அபிஷேகம் செய்தால் மேற்கூறிய இந்த திரவ்யங்கள்முறையானதாகும். எண்ணெய் அதிகமானால் சாமான்களை அதிகப்படுத்த வேண்டும். எண்ணெய் குறைந்தால் அதன்படி சாமான்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. இதை நித்திய பூஜா லக்ஷண சங்கிரஹத்தில் காணலாம். அபிஷேகம் முடிந்தவுடன் சுத்தான்ன நிவேதனம் செய்துவிட்டு திருஒத்தாடைபோட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் ஆசாரியனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொளுத்துவார் என்பது ஆகம விதி. வஸ்திரம், சந்தனம், புஷ்பம் அணிவித்து, நைவேதியம் தீபாராதனை செய்ய வேண்டும்.

சாயுங்காலம் :

சூர்ய அஸ்தமனத்திற்கு முன்பு மூன்றே முக்கால் நாழிகை தொடங்கிச் செய்யப்படும் பூஜை பிரதோஷ பூஜையாகும். இது நித்தியபிரதோஷம் எனப்படும். நித்யநைமித்திகபிரதோஷம் என்பது சுக்ல கிருஷ்ண தியோதசியன்று மாலையில் செய்யப்படும் பூஜையாகும். நித்யத்தில் நைமித்திகம் என்று தீப்த்தாகமம் கூறுகிறது.

நித்யபிரதோஷபூஜை

இதில் முதலில் நடராஜப் பெருமானுக்கு நிவேதனம் செய்து, பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் தீபாராதனை செய்து, பிறகு சோமாஸ்கந்தருக்கு நிவேதனம் செய்து, அம்பாளுக்கு நிவேதனம் செய்து முடிப்பதாகும்.

நைமித்திக பிரதோஷம்

மாலையில் முதலில் நந்திதேவருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். நித்யபிரதோஷத்திற்கு "நந்திநிவேதனம்" கிடையாது.

சூரிய அஸ்தமனம் தொடங்கி $7\frac{1}{2}$ நாழிகையில் செய்யப்படும் பூஜை "மஹாசந்தி" எனப்படும் (சாயரக்ஷைபூஜையாகும்.) இதன் ஆரம்பத்தில் ஆசாரியன் தேஹசுத்திமுதலிய பஞ்சசுத்திகளைச் செய்து கொண்டு ஸ்நபநபூஜையுடன் துவாரபூஜை செய்து மூலமூர்த்திக்கு அபிஷேகம் அலங்காரம் நைவேத்தியதுடன் ஷோடச உபசாரம் செய்யவேண்டும்.

ஷோடசோபசாரம் என்பது : 1. ஆவர்ஹனம், 2. ஸ்தாபனம், 3. பாத்யம், 4. ஆசமனம், 5. அர்க்கியம், 6. அபிஷேகம், 7. வஸ்திரம், சந்தனம், 8. புஷ்பாலங்காரம், 9. தூபதீபம், 10. நிவேதயம், 11. பலி, 12. ஹோமம், 13. நித்யோத்ஸவம், 14. கேயம்வாத்யம், 15 நிருத்தம், 16. உத்வாஸநம் என்ற பதினாறு உபசாரம் ஆகும்.

கீழ்வரும் பதினாறு தீபங்களும் "தீபஷோடசோபசாரம்" என்று அஜிதாகமத்தில் பெயர் பெறும்.

| வரிசை | பொருள் | பயன் |
|---|---|---|
| முதலாவது | தூபம் | உற்சாகத்தைத்தரும் |
| இரண்டாவது | ஏகதீபம் (உருக்களி) | விழிப்பைத்தரும் |
| மூன்றாவது | அலங்காரதீபம் (புஷ்பதீபம்) | சாம்ராஜ்யத்தைத் தரும் |
| நான்காவது | நாகதீபம் | லோகாதிபத்யம் தரும் |
| ஐந்தாவது | விரஷபதீபம் | அரசை அளிக்கும் |
| ஆறாவது | புருஷாமிருக தீபம் | தீபம் |
| ஏழாவது | சூலதீபம் | வயிற்றுவலிநீக்கும் |
| எட்டாவது | ஆமைதீபம் | ஜூலகண்டத்தைத் தடுக்கும் |
| ஒன்பதாவது | கஜதீபம் | ஐஸ்வர்யத்தைக்கொடுக்கும் |
| பத்தாவது | சிம்மதீபம் | ஆயுளைக் கொடுக்கும் |
| பதினொன்றாவது | வியாக்ரதீபம் (புலி) | விலங்குகளிடத்தில் பயத்தைப்போக்கும் |
| பன்னிரண்டாவது | கொடிதீபம் | சோபையைத்தரும் |
| பதின்மூன்றாவது | மயூரபதி (மயில்) | புத்திரப்பேறு அளிக்கும் |
| பதினான்காவது | பஞ்சதட்டுடன் பூர்ணகும்பம் | சாம்ராஜ்யமளிக்கும் |
| பதினைந்தாவது | நக்ஷத்திரதீபம் | பாதுகாப்பு ஆதிபத்தியமளிக்கும் (காவல்துறை அதிகாரி) |
| பதினாறாவது | மேருதீபம் | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும் |

நீராஜதம் விபூதிசாத்துதலும் ரக்ஷையுமாகும். அவை பதினாறு உபசாரத்தில் அடங்கியவை.

மேற்கூறியவாறு பதினாறு உபசாரங்களையும் செய்து, பழம், தாம்பூலம் நிவேதனம் செய்து, கற்பூர ஹாரத்தி செய்து, சுளுகோதகசமர்ப்பணம் செய்து பிரார்த்திக்கவேண்டும். சுளுகோதகம் என்பது ஆசாரியன் மூல மந்திரத்தை இயன்ற அளவு ஜபம் செய்து, அம்மந்திரத்தைக் கையில் புஷ்பத்துடன் சேர்த்து கவச மந்திரத்தினால் அவகுண்டம் செய்து, தீர்த்தத்தைக் கீழே விட்டுச் சுவாமியின் வரத ஹஸ்தத்தில் சேர்க்கவேண்டும். இவ்வாறு ஜப சமர்ப்பணம் செய்யாத பூஜை பயனற்றதாகும். சுவாமிக்கும் ஆசாரியனுக்கும் தொடர்பு அற்று பூஜா பலன் கிட்டாது. ஆதலால் சுளுகோதகசமர்ப்பணம் முக்கியமாகும். இவ்வாறு சாயுங்கால பூஜை செய்யவேண்டும். சாயரக்ஷையில் மகேஸ்வரன் முதலிய மூர்த்திகளுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும், பிறகு தேவிக்கும் சண்டீசன் பைரவன் முதலானவர்களுக்கும் பூஜை உபசாரம் செய்து பலிஹோமம் நித்தியோத்ஸவம் செய்யவேண்டும். இது சாயரக்ஷையின் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அர்த்தயாம புஜை

சாயுரக்ஷாகாலபூஜை முடிந்தவுடன் தொடங்கி $3\frac{3}{4}$ நாழிகை அளவில் அர்த்தயாம பூஜை செய்ய வேண்டும். அதாவது $7\frac{1}{2}$ நாழிகைக்கு மேல் $11\frac{1}{4}$ நாழிகைக்குள் செய்ய வேண்டிய பூஜை அர்த்தயாம பூஜை எனப்படும்.

சுவாமிக்கு அபிஷேகத்தின் பொருட்டு நபன பூஜை செய்து, பஞ்சாமிருதம் பஞ்சகவ்யம் செய்து கொண்டு, சுவாமிக்கு சலாஸனம் பூஜை செய்து, அபிஷேகம் நிவேதனம் தூபம் தீபம் கொடுத்து, கௌரிக்கும் நிவேதனம் செய்து சயனாலய பூஜையுடன் க்ஷேத்ரபாலபூஜை செய்து முடிக்கவேண்டும்.

அர்த்தயாமத்தில் அபிஷேகம் செய்யலாம்; செய்யாமலுமிருக்கலாம். அபிஷேகம் செய்வதானால் சுவாமிக்கு மாத்திரம் செய்யலாம். அவ்வாறு செய்யும் அபிஷேகத்திற்கு நல்லெண்ணெய் கூடாது; ரஸவர்க்கம் சேர்ந்த பஞ்சாமிருதம், தேன், சர்க்கரை, பசுவின்பால், இளநீர், சந்தனம், விசேஷ திரவியங்களாகும்; மற்றவை வேண்டியதில்லை.தைலாபிஷேகம் செய்ய விரும்பினால், சந்தனாதி தைலம் முதலிய வாசனைத் தைலத்தால் அபிஷேகம் செய்யலாம்.

### பூஜையில் ஐந்தொழில்

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்யம் காத்தல்தொழில், பலிபோடுதல் சங்காரத் தொழில் தீபம் திரோபாவத் தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

மேற்கூறியவாறு ஆறு கால பூஜையின் முறைகளைச் சில ஆகமங்களின் சாரங்கொண்டு எமது புத்திக்கு எட்டியவாறு கூறியுள்ளோம். "ஆகமவிபின" என்றார் ஒரு அபிக்ஞர். "ஆகமம்" என்பது நுழைய முடியாத காடு; அது 28 எண்ணையுடையதாயினும், 224 உபாகமங்களை உடையது. இறைவனின் திருவாக்கு. கேட்பவர் தகுதிக்கு ஏற்றவாறு சிலவற்றைக் கூட்டியும், குறைத்தும் மாற்றியும் கூறியிருக்கிறார் பரம கருணா நிதியான பரம சிவன். இதைக் கண்ணுறும் அன்பர்கள் குற்றம் நீக்கிக் குணம் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இக்கட்டுரையை திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத ஸ்ரீ கேதீச்வரஸ்வாமி திருவடிகளில் மலராக கும்பாபிஷேகக மலருக்கு அளிக்கிறோம். திருக்கேதீச்சரம் ஆலய தருமகர்த்தாக்களும், திருப்பணிக் குழுவினர்களும், நோயற்ற வாழ்வுடன் சகல போக பொக்யங்களைப் பெற்று நூறு ஆண்டுவாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மழை வழங்குக மன்னனோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே.

*சிவம்.*

(நன்றி : *திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர்*)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில், விக்கிரக அமைப்புகளும் பூசை, வழிபாட்டு முறைகளும்

த. செ. நடராசா
*செயலாளர், ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்.*

உலகெலாமாகி வேறுமாய் உடனுமாய் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனின் உருவத்தைப் பண்டைத் தமிழ் மக்கள் கல்லில் வடித்து, முதன் முதல் மரத்தடியில் வைத்து வணங்கினர். இதனாலேயே பழைய தமிழ் நூல்கள் இறைவனை "ஆல் அமர் செல்வன்" எனக் குறிப்பிடுகின்றன. பின்னர் நாகரிகம் முதிர முதிர, சிற்பம் வளர வளர, ஆகமம் பெருகப் பெருக, மரத்தடிகள் மாளிகைகளாய், மண்டபங்களாய், கோபுரங்களாயின.

ஆதித் தமிழகத்துக் கோவில்கள் அழியத்தக்க மண், மரம், உலோகம், செங்கல், சுண்ணாம்பு இவற்றால் ஆனவை. பின்னர் மலையைக் குடைந்து கோவில் கட்டும் கலை பரவிற்று. விசித்திரசித்தன் என்ற பட்டப்பெயர் பெற்ற பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்தில் என்றும் அழியாத நிலையில் இருக்கத்தக்க குகைக் கோவில்கள் கட்டப்பட்டன. பாடல்பெற்ற கோவில்கள், ஈசுவரம், பெருங்கோவில், ஆலக்கோவில், சுரக்கோவில், ஞாழற்கோவில், கொகுடிக்கோவில், இளங்கோவில், மாணிக்கோவில், தூங்கானைமாடம் எனப் பல பெயர் பெற்றிருந்தன என்பது அப்பர், சுந்தரர், ஆளுடைய பிள்ளையார் ஆகிய மூவரினதும் திருப்பதிகங்களிலிருந்து அறியலாம். பண்டைய அரசர் பற்பல கோவில்களை அமைத்திருப்பினும் ஒரே அரசன் இறைவனுக்கு எழுபது ஆலயங்கள் எழுப்புவித்தான் என்பதை,

*"...................... இருக்கிலங்கு திருமொழிவா*
*யெண்டோளீசற்கு*
*எழில்மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட*
*திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்*
*திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே."*

என்று திருமங்கையாழ்வார் போற்றிப் பரவுகிறார்.

பரம்பொருள் வீற்றிருக்கும் இன்றைய திருக்கோவில்கள், சக்தியை அதிகரித்துப் பக்தர்கள் பயனடைவதற்காகவும் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்காகவும் சிற்ப சாஸ்திர முறைப்படி அமைந்துள்ளன. ஆகம விதியின் படி அமையாத ஆலயங்கள் மடாலயங்கள் எனப்படும்.

ஆலயங்களின் அமைப்புப் பற்றி அனுபூதிமான்கள் கூறி வைத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில் பெரியோர்கள் கூறிய குறிப்புக்களைக் கொண்டு சிலவற்றைக் காணலாம்.

*"குறிகளும் அடையாளமும் கோயிலும்*
*நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்*
*அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்*
*பொறியிலீர் மனம் என்கொல்புகாததே."*

என்கிறார் அப்பர் சுவாமிகள் தனது தேவாரத்தில்: கோவில் வெறுங்கட்டிடமன்று. அது தத்துவ அமைப்பு. அவ்வமைப்பின் நுட்பம் தெரியாது கும்பிட்டால் அது கல்லாக, மண்ணாக, வேடிக்கையாகவே தோன்றும். ஒரு யோகி காலை நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் முறையாக அமைந்துள்ளது கோவில். யோகி கோவில்; யோகியின் காலைப் போன்றது. முன்கோபுரம்; மூலாதாரத்தை ஒத்தது கொடிக்கம்பம்; தோப்புகளை நிகர்த்தது பலிபீடம்; சிரசு போல்வது கர்ப்பக்கிரகம்; சிரசின் மத்தியை ஒத்தது மூலஸ்தானத்திலுள்ள தாமரைப்பூக்கண்ணாடியும் விளக்கும். அங்குள்ள தீபஒளி இறைவனின் அருவுருவத்தை நினைவூட்டும். புறக்கோவில் அமைப்பு உடற்கோயிலின் பரிணாமம் என்பதற்கு திருநாவுக்கரசரின் " காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" என்ற தேவாரமும் " உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" என்ற திருமூலர் திருமந்திரமும் சான்றாகும்.

கோவில்களில் கோபுரம் கடவுளது விராடசொரூபம், ஸ்தூபி– இறைவனுடைய ஸ்தூல ரூபம், உள்ளிருக்கும் திருமேனி– ஆக்குமலிங்கம், கோவில்களில் உள்ள முக்கிய மண்டபங்கள் கற்பக்கிருக மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தான மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்ற ஆறாகும். இவ்வாறு மண்டபமும் முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அணாகதம், விசுத்தி, ஆக்கினை என்ற ஆறு ஆதாரங்களையும் குறிக்கின்றது என்பர். கோவில்களில் அமைந்துள்ள மூன்று வீதி– தூல சூக்கும, காரண தேகங்களையும், ஐந்து வீதி– அன்னமயம், பிராணமயம் மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற பஞ்சகோசங்களையும், ஏழு வீதி – உடம்பிலுள்ள இரசம், இரத்தம், மாமிசம். மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்ற ஏழு தாதுக்களையும் குறிப்பதாகும். இவை எல்லாவற்றையும் குறிக்கக்கூடிய ஒரு வீதி அமைந்த கோவில்களுமுண்டு. இங்குள்ள கதவுகள் கோபம், ஆசை, அவா, அகங்காரம் என்பவைக்கு காரணமான அவித்தையை உணர்த்துகின்றன. சிவசந்நிதானத்தில் மறைவாக இடப்படும் திரைச்சீலை மாயையைக் குறிக்கும். மூலமூர்த்தி, நந்தி, பலிபீடம் முறையே பதி, பசு, பாசத்தை குறிப்பவையாகும். கொடிக்கம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலத்தான விம்பத்திற்கு நேராக நிறுத்தப்பட்டிருக்கும். கம்பத்தைப் போலச் சரீரம் நேராக இருந்து அசையாது தியானிக்கில் பரமானந்த சொரூபியாகிய பரமசிவன் தரிசனமாகும் என்பதை அறிவிக்கின்றது. இக் கொடிக்கம்பம். இப்படியாக நமது திருக்கோவில்களின் அமைப்பு பல நுட்பமான உண்மைகளை சொல்லாமல் சொல்கின்றது.

உருவமற்ற கடவுளை உணர்வதற்கு உருவத் துணை வேண்டும். உருவம் உள்ளத்தில் பதிவது போல் அருவம் பதிவதில்லை. ஆதலின் மக்கட்குச் சமயப் பற்றையும், அறிவையும் உண்டாக்க கண்ணையும், கருத்தையும் ஈர்க்கும் அழகிய விக்கிரங்களைப் பல வடிவில் அமைத்து கோவில்களில் வைத்து வணங்கினர். விக்கிரகங்கள் மூலவர் விக்கிரம், உற்சவர் விக்கிரகம் என இரு வகைப்படும். மூலவர் விக்கிரகங்கள் மரம், சுதை, கல் படிகம், மண் முதலிய பலவகைப் பொருட்களாலும் செய்யப்பட்டிருக்கின்றன. இராமேச்சுரத்து இலிங்கமாகிய இராமநாதசுவாமி மணலால் ஆனதென்றும் பழனிமலை மீதுள்ள தண்டாயுதபாணி நவபாஷாணத்தால் ஆனதென்றும் அறிகிறோம். உற்சவ விக்கிரகங்கள் செம்பு. பித்தளை, வெள்ளி, வெள்ளீயம், பொன் ஆகியவை கலந்த பஞ்ச உலோகங்களால் செய்யப்பட்டன. விக்கிரகங்கள் பலவாக இருந்தாலும் அவை ஒவ்வொன்றிலும் தத்துவ அறிகுறிகள் அமைந்துள்ளன. விக்கிரகங்களில் உயர்வு தாழ்வு கருதக்கூடாது. ஒருவித மண்ணில் பலவகையான பாண்டங்கள் வனையப்பட்டாலும், அவைகள் உடைந்ததும் ஒரே மண்ணாவது போலவும், பொன்னால் பல நகைகள் செய்தாலும் அவை உருக்கப்பட்டதும் பழையபடி பொன்னாகுவது போலவும் "மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும் திருந்தொழிய தாரகையும் திசைகளெட்டும் ஒரிரண்டும் பிறவுமாய பெருந்தகை". யாம் இறைவனை அவரவர் மனநிலைக்கு ஏற்ப பல திற விக்கிரகங்களில் ஆராதித்து வருகின்றனர். அநுபூதிமான்கள் அர்ச்சாவதாரமாம் இவ் விக்கிரகங்களுக்கு தரும் தத்துவங்கள் சிலவற்றை இங்கு காண்கிறோம்.

## சிவலிங்கம்:

இது எங்கும் வியாபகமாய் அருவமாய் காண முடியாத இறைவனைக் காணுவதற்கு ஏற்பட்ட மூர்த்தம். லிங்கம், பீடம் என்பன உலகத்தோற்றத்தை குறிக்கும் சிவ சக்திகளின் குறிகள் என்று புராணங்களும், மற்றைய நூல்களும் கூறும். பீடம் வேள்விக்குண்டத்தையும், லிங்கம் அனற்பிழம்பையும் குறிக்கின்றன என்று கூறுவாருமுளர். லிங்கங்கள் பஞ்சலிங்கம், எட்டுப்பட்டைலிங்கம், 16 பட்டைலிங்கம் 108 பட்டைலிங்கம் எனப் பலவகைப்படும்.

## அம்பாள் விக்கிரகம்.

பாதி ஆண் பாதி பெண்ணாகக் கருதப்படுபவர் இறைவன், பெண் பாதி சக்தியாக உருப்பெற்றது. அச் சக்தி சிவனிடத்தில் அமைதியான நிலையில் உமையாகவும் பார்வதியாகவும் கடுமையான நிலையில் துர்க்கை. காளி. சாமுண்டி பைரவி முதலியோராகவும். விஷ்ணுவிடத்தில் இலக்குமியாகவும். பிரமனிடத்தில் சரசுவதியாகவும் இணைக்கப்பட்டுள்ளது. அம்பிகை எல்லாத் தேவர்களுக்கும் தாய். மூன்று உலகத்தையும் ஆட்சி செய்து திரிபுவனேசுவரியாகவும் பெரும்புகழும் தண்ணளியும் கொண்டு ராஜராஜேஸ்வரியாகவும் வேறும் பல நாமங்களையும் கொண்டு கருணைத் தெய்வமாக விளங்குபவளும் எம்பெருமாட்டியே.

## விநாயக விக்கிரகம்:

விநாயக விக்கிரகம் நினைக்க எளிது, மறக்க முடியாதது. இவரது பேரருளைக் குறிக்க நீண்ட தும்பிக்கை. எமது குறைகளை நன்றாகக் கேட்க பெரும் காதுகள், சர்வவியாபக சக்தியின் நினைவுக்குறி பெருவயிறு. உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டது. பரம்பொருள், என்ற உண்மையையும் விநாயக விக்கிரகம் உணர்த்துகிறது. விநாயக விக்கிரகங்கள் வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர், நர்த்தன விநாயகர் எனப் பல வகையில் அமைந்துள்ளன.

## சுப்பிரமணியர் விக்கிரகம்:

கருணை விழியும், பொன்மேனியும், மயிலூர்தியும் கோழிக்கொடியும், வள்ளியும், தெய்வயானையும் வேலுங்கொண்ட உருவம் முருகப்பெருமான். வள்ளியும் தெய்வானையும் வேலும் முறையே இச்சாகிரியா ஞான சக்திகளையும், மயில் விந்துவையும் சேவல் நாதத்தையும், வேல் கலையையும் உணர்த்துகின்றன. "நாதவிந்து கலாதீ நமோ நம" என்பார் அருணகிரிநாதர். முருகப்பெருமான் உயிர்கட்கு வள்ளி நாயகி மூலம் இகத்தையும், தெய்வயானையின் மூலம் பரத்தையும், தம் கரத்தில் விளங்கும் வேலாயுதத்தின் மூலம் வீடு பேற்றையும் அருள் புரிகிறார் என்பர். தமிழ்க் கடவுளாகிய முருகன் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியனாகவும், தண்டாயுதபாணியாகவும் ஆறு திருமுகங்களையுடைய பெருமானாகவும் காட்சியளிக்கக் காண்கிறோம்.

## அரங்கநாதன் விக்கிரகம்:

பாற்கடலில் அரவணையில் அறிதுயில் செய்யும் கோலம் அரங்கநாத வடிவம். அப்பெருமான் உந்தியில் அயனின் தோற்றமும் அழகாகக் காட்சியளிக்கிறது. இது திருமாலின் மூர்த்தங்களில் ஒன்று. திருப்பாற் கடல் விந்து தத்துவத்தையும் அரவணை நாத தத்துவத்தையும் உணர்த்துகின்றன. அரங்கநாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் நாகபாம்பின் மீது பள்ளி கொண்டிருக்கிறது. அரங்க நாதனின் நாவிக் கமலத்தில் உள்ள அயனது தோற்றம் படைப்புக்கு அறிகுறி என்பர். திருமாலின் வேறு பல மூர்த்தங்களில் கோதண்டராமன், லட்சுமி நாராயணன், வேணு கோபாலன், சந்தான கோபாலன், கண்ணபிரான் முதலியவை அடங்கும்.

## நடராஜர் விக்கிரகம்

சிவபிரானுக்கு சந்திரசேகரர், தட்சணாமூர்த்தி அர்த்தநாரீஸ்வரர், உமாமகேசர், பிட்சாடனர், சோமாஸ்கந்தர், கஜசம்காரர், ரிஷபாரூடர், கங்காதரன், திரிபுராந்தகர் போன்ற மூர்த்தங்கள் உள. அவற்றுள் ஒன்று நடராஜர் விக்கிரகம். ஐந்தொழிலும் நிகழ அப்பன் கூத்தாடுகிறான். அவரது திருநடனங்களில் பிரதானமானவைகள், கால் மாறியாடு நடனம், பாண்டரங்கம், கொடுகொட்டி, சந்தியாநிருத்தம். சண்டதாண்டவம், வீரட்டாகாசம், கௌரிதாண்டவம், ஆனந்தநடனம், அனவரத தாண்டவம், பிரதம மகா சங்காரநிருத்தம் என்பவைகளாம். எம்பெருமானின் இரண்டு முக்கிய நடனக்கோலத்தில் ஒன்று நடராஜனின் தூக்கிய கால் வான் நோக்கி நிற்கும் திருவாலங்காட்டு நெடுங்கோலம். மற்றையது எடுத்த பொற்பாதமாக இருக்கும் தில்லைத்திருக்கோலம். முன்னையது இரத்தப் புரட்சிக்கும் பின்னையது படைப்பாதி தொழில்களின் நிகழ்ச்சிக்கும் அறிகுறியென்பர்.

நமது கோவில்களில் உள்ள விக்கிரகங்கள் அனைத்தும் உருவம் இல்லாத கடவுளுக்கு உருவம் கொடுக்கும் முயற்சிகளிலும் தத்துவசோதனைகளிலும் தோன்றியவைகளே எனலாம். இத்தனை ஆண்டுகளாக பலகோடி மக்கள் இவ் விக்கிரகங்களை நினைத்தும் வாழ்த்தியும் வணங்கியும் வந்துள்ளனர். நன்மக்களின் நோக்கும், ஞானிகளின் நோக்கும் குருமார்களின் நோக்கும் இவ் விக்கிரகங்களுக்கு அளக்கொணா ஆற்றல் வாய்ந்த சக்தியை கொடுத்துள்ளது. சமயகுரவர் நால்வராலும், பன்னிரண்டு ஆழ்வார்களாலும் வேறும் பலராலும் போற்றி வளர்க்கப்பட்ட தெய்வீக சக்தி வாய்ந்த விக்கிரகவழிபாடு எமது சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரியவனான இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூசை என்பதை உணர்ந்து காஞ்சிபுரத்தில் உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்ததை,

*"என்னில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம்விரும்பும்*
*உண்மையாவது பூசனையென உரைத்தருள*
*அண்ணலார்தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தாள்*
*பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக்கொழுந்து"*

என்று பெரியபுராணத்தில் போற்றுகிறார் சேக்கிழார். அருச்சுனன் சிவபூசை செய்து பாசுபதாஸ்திரம் பெற்றான். முருகப்பெருமான் சிவபூசை செய்த இடம் திருச்செந்தூர். விநாயகப்பெருமான் பூசித்த தலம் திருச்செங்காட்டங்குடி. பிரமன் பூசித்த இடம் சீர்காழி. திருமாலின் அவதாரமான இராமச்சந்திரமூர்த்தி இராமேஸ்வரத்தில் சிவனைப் பூசித்ததாகவும் அறிகிறோம். இவர்களையன்றி மேலும்,

*"இயக்கர் கின்னரர் யமனொடுவருணர்*
*இயங்குதீவளி ஞாயிறு திங்கள்*
*மயக்க மில்புலி வானர நாகம்*
*வசுக்கள் வானவர் தானவரென எண்ணற்றோர் இறைவனை*
*அர்ச்சித்து அருள் பெற்றதாக*

சுந்தரமூர்த்திசுவாமிகள் தனது தேவாரத்தில் வலியுறுத்துகிறார்.

கோவில்களில் நடைபெறும் பூசைகள் நித்யம், நைமித்திகம், காமியம் என மூன்று வகைப்படும். கோவில்களில் தினந்தோறும் நடைபெற்று வரும் பூசை நித்திய பூசை எனப்படும். வெள்ளிக்கிழமை, பிரதோஷதினம், கிருத்திகை, சதுர்த்தி மற்றும் ஆடிப்பூரம், ஆவணிமூலம், நவராத்திரி, விஜயதசமி போன்ற விஷேட தினங்களில் நடைபெறும் பூசை நைமித்திக பூசை எனப்படும். குறிக்கோள் ஒன்றினை மனதில் கொண்டு அது நிறைவேறியதும் தாம் எண்ணிய அர்ச்சனை அபிடேகம் திருவிழா முதலியவற்றை கோவில்களில் செய்விப்பதை காமியப்பூசை என்பர்.

பூசைகள் மூன்று வகையாக அமைந்தாலும் அபிடேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம் கூறி வாழ்த்துதல் முதலியன அவற்றின் பொது அம்சங்களாகும். எம்பெருமானுக்கு அபிடேகம் செய்யும் திரவியங்கள் இருபத்தைந்தாகும். இதைச்சுருக்கி 16 அல்லது 12 திரவியங்களாலும் செய்வதுமுண்டு. எண்ணெய், அரிசிமா, மஞ்சள்மா, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பழவகைகளின்சாறு, இளநீர், அன்னம், வெந்நீர், விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், கும்பஜலம் என்பன அபிடேகத்திற்குரிய சில திரவியங்களாகும். இவற்றின் அளவும் இவ் வபிடேகங்களினால் நாம் அடையும் பயன்களும் ஆகமத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தீர்த்தாபிடேகத்தினால் பத்துக்குற்றங்களையும், பாலினால் நூறு குற்றங்களையும், தயிரினால் ஆயிரம் குற்றங்களையும், தேனினால் பதினாயிரம் குற்றங்களையும், நெய்யினால் இலட்சம் குற்றங்களையும், இளநீரினால் எண்ணிறைந்த குற்றங்களையும் இறைவன் பொறுத்துக் கொள்கிறார் என்பர். அபிடேகம் முடிந்த பின்னர் அலங்கரிக்க உபயோகிக்கும் ஆடை, பட்டாடைகளாகவோ அநேக வர்ணமுள்ள வஸ்திரமாகவோ இருத்தல் வேண்டும். பழைமையான கிழிந்த வஸ்திரங்கள் அலங்காரத்திற்கு உகந்ததல்ல. இறைவனுக்கு சாத்தும் புஷ்பங்கள் தாமரை, அலரி, வில்வம், துளசி, நந்தியாவட்டை, மந்தாரை, முல்லை, சண்பகம், கொன்றை, மருக்கொழுந்து எனப் பலவாகும். உரோமம், புழு இவைகளால் தீண்டப்பட்டதும், வாடியவையும், அசுத்தமான பாத்திரத்தில் கொண்டுவரப்பட்டவையும், பூமியில் விழுந்த புஷ்பங்களும் பூசைக்கு விலக்கப்பட்டனவாகும். விஷ்ணுவை வெள்ளெருக்கம் பூவால் பூசிக்கலாகாது. சிவனுக்கு தாழம்பூ உகந்ததல்ல. தேவிக்கு மந்தாரை கூடாது. விநாயகருக்கு துளசி ஏற்றதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு நிவேதனம் திரைபோட்ட பின்னர் நிகழும், நிவேதனம் செய்யும் அன்னம் அரை அரிசி உள்ளதாகவோ, துர்நாற்றம் உடையதாகவோ, உமி, கல், மணல், புழு உள்ளதாகவோ இருத்தல் கூடாது. இவை இருக்குமாகில் தரித்திரமும், வியாதியும், மரணமும், சம்பவிக்கும் என்பர்.

பூசையில் முக்கிய நிகழ்ச்சி தீபாராதனை. எமது அறியாமையை ஒழித்து, அறிவைப் பெருக்குவதற்காக தூபம், தீபம், அலங்காரதீபம், நாகதீபம், விருஷிகதீபம், புருஷாமிருகதீபம், சூலதீபம், ஆமைத்தீபம், மயூரதீபம், கும்பதீபம், நட்சத்திரதீபம், மேருதீபம் போன்ற 16 தீபங்கள் தீபாராதனையில் இடம்பெறும். இத் தீபங்களை காட்டும் முறையும் இவற்றால் அடையும் பெறுபேறுகளும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன. கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம், போன்ற உபசாரப்பொருட்களையும், தீபங்களைப் போல் காட்டிய பின்னர் கர்ப்பூர ஆரத்தி நடைபெறும். பூசைமுடிவில் ஆசார்யன் இறைவனுடைய மூலமந்திரத்தை செபம் செய்து இறைவனிடம் சமர்ப்பணம் செய்தல் வேண்டும். இவ்வாறு சமர்ப்பணம் செய்யாத பூசையால் ஒருவித பயனுமில்லை. கோவில்களில் செய்யப்படும் பூசைகளில் அபிடேகம் படைத்தலையும், நைவேத்தியம் காத்தலையும் பலிபோடுதல் அழித்தலையும், ஹோமம் செய்தல் அருளலையும் ஆகிய ஐந்தொழிலையும் குறிப்பதாகும்.

இசைவடிவமாக இருக்கும் இறைவனை கோவிற்பூசை நேரங்களில் மகிழ்விக்க எத்தனையோ இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. இவற்றுள் மணிஓசை முக்கிய இடம் பெறுகின்றது. எல்லாப் பூசை வேளைகளிலும் தேவர்களைக் கூவியழைப்பதற்கும் அரக்கர்களைத் தூரவிரட்டுவதற்குமாகவே மணிஒலி எழுப்பப்படுகின்றது.

கோவிற்பூசை முறையைக் கூறும் ஆகமம் நுழையமுடியாத காடு என்பர். அங்கு நடைபெறும் ஒவ்வொரு கிரியைக்கும் விபரமான விளக்கமுண்டு. ஆதலின் பொறுப்பு வாய்ந்த தொண்டு செய்யும் அர்ச்சகர்கள் வடமொழி, தென்மொழிகளைப் பயின்று தேர்ச்சியடைந்து தத்துவஞான நூல்களில் நுண்புலமை பெற்றவர்களாயிருப்பின், மற்றவருக்கு எடுத்துக்காட்டாகத் துணை செய்யும்.

உயிர்களைப் பிணித்திருக்கும் ஆணவமலம், மாயாமலம் என்ற இருமாசுக்களினின்றும் விடுதலை பெற வழிபாடு ஒன்றே சிறந்த மருந்தாகும். வழிபாடாற்றுவோர் யாதாயினும் ஒரு பொருளால் இறைவனை வழிபடுதல் மரபு. சாக்கியர் கல்லாலும், நாவரசர் சொல்லாலும், சம்பந்தர் தமிழாலும், சுந்தரர் பாட்டாலும், பாணபத்திரர் இசையாலும், மணிவாசகர் வாசகத்தாலும், குசேலர் அவலாலும், கண்ணப்பர் ஊனாலும், வந்தி பிட்டாலும் வழிபாடாற்றி பெரும் பேறு பெற்றார்கள். தமிழ் நாட்டில் தோன்றிச் செந்தமிழை வளர்த்த நால்வரும் தமது பாடல்களில் வழிபாட்டின் சிறப்புக்களை வற்புறுத்தியுள்ளனர்.

திருக்கோவில் வழிபாடு மனதை ஒருவழிப்படுத்துவதற்கும், கீழ்ப்படிவு, நீதிவழிநிற்றல், தன்னலமறுப்பு, பணிவு, இரக்கம் ஆகிய பல சிறந்த பண்பாடுகளையும் உண்டாக்குவதோடு ஈற்றில் மோட்ச சாம்ராச்சியத்தையும் அடைவதற்கு வழிபண்ணுகிறது.

திருக்கோவிலுக்குச் செல்வோர் அகமும் புறமும் தூய்மையுடையவராய்ச் சென்று, கோவிலின் உள்ளிருக்கும் தெய்வத்தின் பருவ வடிவமான கோபுரத்தை முதலில் வணங்கல் வேண்டும். உட்சென்றதும் திருச்சுற்றை வலம் வந்து கொடிமரம், பலிபீடம் முதலியவற்றை முறையே வணங்கல் வேண்டும். பலிபீடத்திற்கு இப்பால் நின்று வழிபடும் போது ஆணவமலத்தின் காரியமாகிய அகந்தை, மமதை, ஆசை, கோபம், மயக்கம், அஞ்ஞானம் இவைகளைப் பலியாக இடுகிறேன்; ஏற்று இறைவனை வழிபடுவதற்கு ஞான ஒளியைத் தந்தருளுவாயாக எனச் சிந்தித்தல் வேண்டும். பின்னர் கருவறையை அணுகி மூலமூர்த்தியை நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்குதல் வேண்டும். கையுறையாக கொண்டு வந்த மலர்கள் முதலானவற்றை அர்ச்சகரிடம் அளித்த பின் இறைவனை நாம் மனதினால் நினைந்து, வாயினால் பாடி, கைகளால் கும்பிட்டு வணங்குதல் வேண்டும். கும்பிடுவதன் கருத்து யாது? கும்பிடும் போது இரண்டு கைகளும் ஒன்று சேர்கின்றன. இயற்கையாக நம்முடைய கைகள் விரிந்து பல பல செய்கைகளைச் செய்கின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் அந்தச் செய்கைகளெல்லாம் ஒழிந்து ஒன்று சேர்ந்து குவிகின்றன. கைகளை குவிப்பதினால் "ஆண்டவனே இனி என்னுடைய செயல் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தேன். எல்லாம் உன் அருட்செயலே என்று உணர்த்தும் அறிகுறியே கும்பிடு எனலாம்.

மூலமூர்த்தி வழிபாட்டின் பின்னர் அம்பாள் சந்நிதி மற்றும் பரிவாரமூர்த்திகளின் சந்நிதிகளையும் முறைப்படி வணங்கி, ஒன்பது கோள்களையும் வலம் வந்து, அவற்றோடு தொடர்புடைய பிற தெய்வக்கருவறைகளையும் கண்டு வணங்குதல் முறையாகும். கடைசியில் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து சிவயோகத்தில் இருக்கும் அவரை விளிக்கச் செய்வதற்காக மும்முறை கைதட்டி, தரிசனத்தை அவரிடம் ஒப்பித்து அதன் பலனைப் பெற்றுத்தர வேண்டுமென வேண்டிக்கொண்டு மீண்டும் கொடிமரத்தின் முன் நின்று மூலமூர்த்தியை அட்டாங்கமாகவோ, பஞ்சாங்கமாகவோ, நிலந்தோய விழுந்து, வணங்கி எழுந்து, மண்டபத்தில் சிறுபொழுது அமர்ந்து திருவைந்தெழுத்தைச் செபம் செய்து எழுந்து புறப்படுதல் கோவில் வழிபாட்டு முறையாகும் என்பர் சான்றோர்.

எனவே நாம் கோவில்களை அவமதிக்காது

*"ஆக்கை யாற்பயனென் – னரன்*
*கோயில் வலம் வந்து*
*பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ்*
*வாக்கை யாற்பயனென்"*

என்ற அப்பர் திருவாக்கை நினைவில் நிறுத்தி, எமது சமயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாகிய தெய்வீக சக்திவாய்ந்த விக்கிரகங்களை போற்றி, அவற்றை முறைப்படி பூசித்து வழிபட்டால் மக்கள்பால் நல்லெண்ணம் பெருகும். அதனால் நல்ல குடும்பம் அமையும், ஊரும் உலகமும் சிறப்புற்று ஓங்கும், அமைதி நிலவும், கலைகளும் வளம்பெற்று ஆண்டவன் அருள் ஆட்சி புரிவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருமுறைகளும் பண்களும்

சைவப்புலவர், பண்ணிசைமணி, 'ஞான பண்டித ஆய்வரசு *கதிர். தணிகாசலம்*

உலகிலுள்ள எண்ணிலடங்கா உயிர்வகைகளும் அவை செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப பிறவிகளை எடுத்து உழல்கின்றன. இப்பிறவிகள் யாவற்றிலும் மிகச் சிறந்த மானுடப் பிறவியை எடுப்பது மிக அரிய தொன்றாகும். இப்பிறவிகளில் தெரிந்தும் தெரியாமலும் இழைத்த புண்ணிய மிகுதியால் நாம் இந்த மானுடப் பிறவியை அடைந்துள்ளோம். எனினும் துன்பத்திற்கு ஏதுவாகிய கூன், குருடு, செவிடு மற்றும் குறைபாடுகளின்றிப் பிறத்தல் அரிது. கல்வி, அறிவு, ஒழுக்கமுடையவராதல், அதனினும் அரிது. இவற்றைப் பெற்றிருப்பினும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளும் அமையப் பெற்றுள்ள சைவ சமயியாகுதல் அரிது; அதனினும் அரிது திருநீறு, உருத்திராக்கம் பூணும் பேற்றினையும், சிவவழிபாட்டினையும், கொல்லாமை, புலாலுண்ணாமை, பிறன் மனை நயவாமை முதலாம் நற்பண்புகளையும் பேணி வாழ்தல்.

இவையெல்லாவற்றிலும் மேலாக 'திருநெறிய தமிழ்' என்றும், 'திராவிட வேதம்' என்றும், 'அருண் நூல்' என்றும் போற்றித் துதிக்கப் பெறும் பன்னிரு திருமுறைகளையும் ஓதி உணர்ந்து வழிபடும் சாதன அருள்நெறியைக் கடைப்பிடிப்பதே சாலச் சிறந்ததாகும். ஆதியும் அந்தமுமில்லாப் பேரருளாளன் சிவபெருமானை தேவாரம் முதல் திருத்தொண்டர் புராணம் ஈறாகவுள்ள பன்னிரு திருமுறைகளையும் நாம் வாயார ஓதி அன்புடன் வழிபடுதலே நம் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஒரே வழி என்பர் ஞானிகள்.

திருமுறை என்பது பாடுவோரையும், கேட்போரையும் இறையுணர்வில் விரைவில் ஈடுபடச் செய்யும் தெய்வீகப் பாடல்களின் தொகுப்பு ஆகும். இத்தகைய மேன்மையுடைய எண்ணிலடங்காப் பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது நம் தமிழ் மொழியே.

'திரு' என்பது சிவபரம் பொருளையும், சிவத்தோடு இணைபிரியாதிருக்கின்ற அருளாகிய சக்தியையும் அச்சக்தியின் துணையால் உயிர்கள் அடையும் பேரின்பத்தையுமே குறிக்கும். இதையே அப்பர் பெருமான் 'திருவே என் செல்வமே' என்றும், 'சென்றடையாத திருவுடையானை' என்றும், முறையே சிவபெருமானையும், சிவசக்தியையும் குறிப்பிடுதலால் தெளியலாம்.

'முறை' என்பது அன்பு செய்தல், வேண்டுதல், நூல், பழைமை, முறைமை மனித வாழ்க்கை முறையைச் சீராக்குதல், ஒழுங்கு படுத்தல் முதலாம் பல பொருட்களை உணர்த்தும். "இறை நிலம் எழுதுமுன் இளைய பாலகன், முறை வரைவேன் என முயல்வ தொக்கும்" என்ற கந்தபுராண அவையடக்கச் செய்யுள் இக்கருத்தை வலியுறுத்தும்.

திருமுறைகள் ஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் ஈறாகவுள்ள அருளாளர்கள் இருபத்தெழுவராற் பாடப்பெற்றவை. திருமுறைகளின் எண்ணிக்கையாலும், அவற்றைப் பாடிய அருளாளர்களின் எண்ணிக்கையாலும் ஒரு தனிச் சிறப்பைக் காணலாம். சூரியன் ஒவ்வொரு ராசி வீட்டிலும் தங்கி உலகிலுள்ள புறவிருளைப் போக்கும் பான்மை போல, சிவபரம்பொருள் 12 திருமுறைகளுள்ளும் அருட்சுடராக இருந்து உயிர்களின் அகவிருளைப் போக்குகின்றார். வான மண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் அமைந்து இரவிருளில் மயங்கும் உயிர்கட்கு ஒளி காட்டுவது போல, இவ்வருட் பாடலாசிரியர் 27 பேரும் உலகோர்க்கு ஒளிவளர் விளக்காக விளங்குகின்றனர்.

இத் திருமுறைகள் தித்திக்கும் தென்னமுதம். உள்ளத்தைக் கனிவிக்கும் முத்தமிழ், 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், வைகலும் எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை" என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு'. நன்று நாள்தொறும், நம்வினைபோயறும், என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்" என்பது அப்பர் அருள்மொழி. "இம்மையே தருஞ் சோறுங் கூறையும் ஏத்தலாம், இடர் கெடலுமாம், அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே' என்பது சுந்தரர் சீர்மொழி.

பல்லாயிரக் கணக்கான பாடல்கள் இவ்வருளாளர்களால் பாடப்பெற்றிருப்பினும் மறைந்த பாடல்களைத் தவிர கிடைத்தவை மட்டுமே 12 திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பிகளால் இராசராசச் சோழன் வேண்டுகோட்படி தொகுக்கப் பெற்றுள்ளன. முதல் மூன்று திருமுறைகளையும் அருளியவர் திருஞானசம்பந்தர். இவை 384 பதிகங்களில் 4159 பாடல்களாக அமைந்துள்ளன. அடுத்துவரும் 4, 5, 6ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைகளையும் 313 பதிகங்களில் 3067 பாடல்களாக திருநாவுக்கரசரும்; 7ம் திருமுறையாக உள்ள 100 பதிகங்களை 1026 பாடல்களில் சுந்தரரும் அருளியுள்ளனர். இவ்வேழு திருமுறைகளும் 'தேவாரம்' எனவும் 'மூவர் அடங்கன் முறை' எனவும் வழங்கப்பெறும். 'தே' என்பது தெய்வம், இறைவன் என்பதையும், 'வாரம்' என்பது அன்பையும் குறிக்கும். 'தேவ + ஆரம்' எனில் இறைவனுக்குச் சாத்தப்பெறும் மாலை எனினும் பொருந்தும்.

மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக் கோவையாரும் 8ம் திருமுறையாக வகுக்கப் பெற்றுள்ளது. திருவாசகம் 656 பாடல்களையும் திருக்கோவையார் 400 பாடல்களையும் கொண்டுள்ளன. இவ்வெட்டுத் திருமுறைகளையும் அருளிச் செய்தோரே சமயகுரவர் 'நால்வர்' என்று போற்றப்படுபவர். 9ம் திருமுறையிலுள்ள பாடல்களை அருளியோர்:- திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருந்தி நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மராவர். இத்திருமுறை 29 பதிகங்களைக் கொண்டு 303 பாடல்களாக விளங்குகின்றன. திருமூலரால் அருளப்பெற்ற திருமந்திரம் 9 தந்திரங்களைக் கொண்ட 3050 பாடல்களாலானது. இது 10ந் திருமுறையாகும். 11ம் திருமுறையில் உள்ள பாடல்களை 12 அருளாளர்கள் பாடியருளினர். இது 40 பிரபந்தங்களைக் கொண்டு 1406 பாடல்களுடன் விளங்குகின்றது. பாடியோர்:- திருவாலவுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான் நாயனார், நக்கீரதேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகியோர். திருத்தொண்டர் புராணம் என்றழைக்கப்படும் பெரிய புராணம் 12ம் திருமுறையாகும். 63 நாயன்மார்களுடைய வரலாறு கூறும் நூல். இது சேக்கிழார் பெருமானால் பாடி அருளப்பெற்றது. இதில் பாண்டம் 2, சுருக்கம் 13, பாடல்கள் 4283 உள்ளன. பன்னிரு திருமுறைகளிலும் ஆக மொத்தம் 18,350 திருப்பாடல்கள் தெரிய வந்துள்ளன.

இறையருள் பெற்ற இந் நாயன்மார்கள் இத் திருமுறைப் பாடல்களை அருளிய போது குறித்த பயன்களை அடையுந் தன்மை பெற்றிருந்தன. இன்றும் அப்பயன்களை திருமுறைப் பாடல்கள் நல்கி வருகின்றன. சம்பந்தமூர்த்தி சுவாமிகளால், 1350 வருடங்களுக்கு முன் அருளப் பெற்ற விடந்தீர்த்த பதிகம் இன்றும் அவ்வாறே விடந்தீர்த்து வருகின்றது. அன்று பாண்டியனின் வெப்பு நோய் தீர்த்த 'திருநீற்றுப் பதிகம்' இன்றும் வெப்பு (சுரம்) நோயைக் குணமாக்கி வரும் அற்புதத்தைக் காண்கிறோம். திருமுறை ஏடுகளில் 'கயிறு சார்த்தி'ப் பார்த்து, உரிய திருமுறைகளை ஓதி துன்ப நீக்கம் பெறும் உண்மையையும் அறிகிறோம். எனவேதான், இத்திருமுறைகளையே அர்ச்சித்து வழிபடும்முறை சைவ மக்களாகிய எம்மிடையே இருந்து வருகின்றது. இது திருமுறைகளுக்கே உள்ள தனிச்சிறப்பாகும்.

இத் திருமுறைகளுக்கு ஏற்ப பண்கள் அமைத்தவர், திருஞானசம்பந்தருக்கு யாழ் வாசித்த திருநீலகண்டயாழ்ப்பாணரின் வழி வந்த ஒரு இசைவல்ல பெண்மணியாவார். இவை அக்காலத்திலிருந்தே அவற்றிற்குரிய பண்ணோடு ஓதப்பெற்று வருகின்றன. திருமுறைகளைப் பண்ணோடு ஓதுபவர்கள் ஓதுவார். அல்லது 'ஓதுவார் மூர்த்தி' என்று பெயர் பெறுவர். சோழ மன்னர்களின் ஆட்சி முடிவுற்ற பின் இவர்களை ஆதரிப்பார் இல்லாமையால் பல பண்கள் வழக்கொழிந்து போயின. முன்னர் இருந்த 103 பண்களில் இக்காலம் பயிலப் பெறுபவை 23 பண்களே. எனினும் சில பண்கள் வடிவம் மாறி இக்கால இராகங்களின் சாயலைப் பெற்றிருக்கலாம். திருக்கோயில்களிலும் சைவ ஆதீனங்களிலும் திருமுறைகள் 1300 வருடங்களுக்கு மேலாக ஓதுவார்களால் ஓதப்பட்டு வருகின்றன.

தமிழ் இசைப்பண்களில் வரும் ஏழு இசைகளும் இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை எனப்பெயர் பெறும். இக்கால இசையில் இவை முறையே ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என வழங்கப்படும்.

திருக்கோயில்களில் திருமுறைகள் ஓதப் பெறும்போது, வரிசை முறையாகப் பன்னிரு திருமுறைகளையும் ஓதமுடியாத விடத்து 'பஞ்சபுராணம்' ஓதினாற் போதுமானது. அதாவது, மூவர் தமிழில் ஒன்றும், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகியவற்றில் ஒவ்வொன்றும் ஆகும்.

*'நிறையருட் பாடலாகி நிரம்பு தேவாரம் யாரும்*
*அறைதிரு வாசகம் சீர் அமை இசைப்பா பல்லாண்டு*
*குறைதவிர் புராணம் இன்ன கொண்டுறத் துதித்தல் செய்து*
*மறைபுகல் விபூதிமேனி வளைந்திரு கையால் ஏற்க'* —என்பது,

'சிவாலய தரிசன விதி' பற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பாடல் ஒன்று. இதிலிருந்து பஞ்சபுராணம் ஓதும் பழைமையை உணரலாம். திருவாசகப் பாடல்கள் அனைத்தும் மோகன இராகத்திலும், திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஆனந்தபைரவி, இராகத்திலும், பெரிய புராணம் அனைத்தும் மத்தியமாவதி இராகத்திலும் பாடப்படுவதே முறையாகும். திருமுறைகளுக்கு விதிக்கப் பெற்ற பண்களிலல்லாது மாற்றிப் பாடுவது முறையாகாது. தியாகராஜர், தீட்சதர் போன்றோரின் கீர்த்தனைகளையோ, கிருதிகளையோ எவரும் இராகம் மாற்றிப் பாடுவதில்லை. இது போன்றே பண்களை விட்டு, வேறு பண்களிலோ இராகங்களிலோ பாடுவது முறையாகாது.

அருள் வழிப்பட்ட இத்திருமுறைகளை ஓதுவதற்கு உரிய பண்களும் அவற்றை ஒத்த இக்காலத்து இராகங்களும் கீழே தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | திருமுறைப் பண் | ஒத்த இராகம் |
|---|---|---|
| 1. | நட்டபாடை ( நைவளம்) | நாட்டை கம்பீரநாட்டை |
| 2. | தக்கராகம் | காம்போதி |
| 3. | தக்கேசி | காம்போதி |
| 4. | பழந்தக்கராகம் | சுத்தசாவேரி |
| 5. | குறிஞ்சி | அரிகாம்போதி |
| 6. | வியாழக்குறிஞ்சி | சௌராட்டிரம் |
| 7. | அந்தாளிக்குறிஞ்சி | சாமா |
| 8. | மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |
| 9. | யாழ்மூரி | அடாணா |
| 10. | காந்தாரம் | நவறோசு |
| 11. | பியந்தைக் காந்தாரம் | நவறோசு |
| 12. | கொல்லி | நவறோசு |
| 13. | கொல்லிக் கௌவாணம் | நவறோசு |
| 14. | இந்தளம் | மாயாமாளவகௌளை |
| 15. | சீகாமரம் | நாதநாமக்கிரியா |
| 16. | நட்டராகம் | பந்துவராளி |
| 17. | சாதாரி | பந்துவராளி |
| 18. | செவ்வழி | எதுகுலகாம்போதி |
| 19. | காந்தார பஞ்சமம் | கேதாரகௌளை |
| 20. | பஞ்சமம் | ஆகிரி |
| 21. | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| 22. | கௌசிகம் | பைரவி |
| 23. | புறநீர்மை ( நேர்திறம்) | பூபாளம், பௌளி |
| 24. | செந்துருத்தி ( செந்திறம்) | மத்தியமாவதி |
| 25. | திருக்குறுந்தொகை | மாயாமாளவகௌளை |
| 26. | திருத்தாண்டகம் | அரிகாம்போதி |
| 27. | திருநேரிசை | நவறோசு (சாமகானம் போல) |
| 28. | திருவிருத்தம் | பைரவி, சங்கராபரணம் போன்ற எந்த இராகத்திலும் பாடலாம். |

திருமுறைகளை சுத்தாங்கமாகவோ (தாளம் இல்லாது) லயாங்கமாகவோ (தாளத்துடன்) உரிய பண்களில் பாடுவது மரபாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மத ஸ்தாபனங்களின் பணிகள்


1. Religion and caring for Society
2. இந்து சமய சங்கங்களின் பணி
3. இந்து சமய வளர்ச்சியில் பத்திரிகைகள்
4. இந்து சமய கல்வியும் எதிர் நோக்கும் தேவைகளும்
5. இலங்கையில் இந்து சமய கல்வி வளர்ச்சிக்கு உதவிய பெரியோர்களும் தாபனங்களும்
6. பல்கலைக் கழக மாணவரின் பார்வையில் மாமன்றப் பணிகள் – எதிர் பார்ப்புகள்
7. பாடசாலை மாணவியின் பார்வையில் மாமன்றப் பணிகள் – எதிர் பார்ப்புகள்
8. மாமன்றத்தின் குருகுலப்பணி
9. சிவானந்த குருகுலம் பாடத்திட்டம்
10. மனம் கனிந்த நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RELIGION And Caring For SOCIETY

***(MRS.) VANATHY RAVINDRAN***

***SECRETARY - SOCIAL WELFARE COMMITTEE, ALL CEYLON HINDU CONGRESS***

God is the embodiment of mercy, of compassion, of love - though to self centered mortals some of His actions may seem the antithesis of mercy. Thirumoolar, a famous saint of the Hindu faith expounds this truth in the following poem :-

More than fire, fiery is He,
more than water, cool is He,
nevertheless, no one fully understands
the mercy of God.
Aloof though He may be, He is benevolent,
Close is He to the devotees;
more than a mother,
tender-hearted is He,
the Lord of trailing matted locks
the two kaayam-s (musk and asafoetida)
though you may boil together,
the great fragrant musk's odour
will eclipse the other;
similarly, even if all the world joined together
and consider someone a God,
it will not be equal
to communion with Isan.

Today we find numerous people needing help around us. All over the world. In every community. The circumstances may be different in each case. Some may be orphans, others disabled, some others too old and left with no one to look after them. How do they exist? What are their living conditions? What will happen to them? They are not people forgotten by God, but, due to their fate, karma or destiny however we may want to word it, have happened to be born into a situation which has now become beyond their control to survive in.

We find many Organisations around us who are willing to help. We find many individuals who have the intentions of helping. They visit Homes, try to find out what is required and how they can be provided. There are many who wish to do something every time adversity confronts them. And yet these do not seem to be enough. Infact, on occasions the sheer magnitude of the task ahead engulfs us. Have we not seen the common enemy of man, poverty and hunger, ravage the people around us. Have we not been overwhelmed with a feeling of helplessness? The very magnitude of the problem sometimes drives us to insensitiveness.

A feeling pervades us that what is our effort going to do? After all, it is a drop in the ocean. "A little boy was walking along the beach throwing back into the sea all the star fish that had got washed ashore. A man walking in the other direction looked at him and said, 'What are you doing? Don't you realise that there are millions of them and what you are doing will not make a difference' The boy only picked up one more and flicked it out into the sea and said, 'Sure, for that one it did'."

Service should be rendered to the limits of one's capacity, neither more nor less. What matters is that something is being done to the people in need rather than nothing at all. So the need of to-day is to educate, emphasise and bring about an awareness in societies, our communities nation wide, and in our world for the increase in need to wipe a tear, hold a hand and specially motivate more helping hands.

Very often the Organisations that showed their willingness to help and the individuals who went to see, leave the inmates of the Homes for the Aged, Homes for the Disabled, Orphanages and the Refugee Camps and so on to sit and wait with hope and patience, for the eyes that saw, hands that wished to serve and the hearts that felt the needs, for the promises that were made.

How many remember what they saw, heard, or felt? How many fear the immensity of the problems they witnessed and therefore the immensity of what has to be done?

All Religions believe that there is a God showering Grace upon all those who profess to abide by that Faith alone. The followers of each Religion call upon that one God, who is omnipresent, omniscient and omnipotent to listen to their prayers and help them from all calamities and confer upon all mankind health, prosperity, peace and happiness.



However, inspite of great progress in many other areas of life, religious animosity is aflame even to-day, in many parts of the world. It has to be



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

emphasised that Religion is not the root cause of this state of affairs. Religions attempt to implant holy ideals in the hearts of men. But man does not allow them to sprout and grow. They encourage people to see God in all living beings, specially in the ones that need help. They give us a deeper understanding of the underlying truth that we are all God's creatures and therefore are one, irrespective of caste, creed or language.

The Bhagavad Gita in chapter (iv) declares thus: -

**Having obtained real knowledge from a self-realised soul you will never fall again into the illusion, for, by this knowledge you will see that all living beings are but part of the Supreme, or in other words, that they are mine -**

Hinduism has been founded through the revelation of the Truth as that which was heard by the great sages when in direct communion with the Supreme. These spiritual experiences are recorded in the primary authorities called the VEDAS.

The Vedas are considered supremely authoritative on representing that which is eternal. UPANISHADS , also referred to as VEDANTA, are mystic treatises which reveal the most profound spiritual truths in the Vedas, explain the presence of the Brahman, the Supreme Being present in all, thus: -

**Filled with Brahman are the things we see,**
**Filled with Brahman are the things we see not,**
**From out of Brahman floweth all that is,**
**From Brahman all - Yet He is still the same.**
**Om...peace. peace. peace.**

It further continues to say that: 'Life in the world and life in the spirit are not incompatible. Work or action is not contrary to knowledge of God, but indeed, if performed without attachment is the means to it. On the other hand, renunciation is the renunciation of the ego, of selflessness, not of life.

The end, both of work and of renunciation is to know the 'SELF' within, and the 'BRAHMAN' without, and to relate to their identity. The self is Brahman and Brahman is All.'

Service is an apt vehicle for this realisation and to see God in all. Love is what created this world and only through that love can man see and realise God - the Scriptures assert. God is in all beings. To know God. one must first learn to expand oneself in love, to love all beings and see good in all and serve the God in all.

Article 25 of the UN DECLARATION OF HUMAN RIGHTS states:

-' Every one has the right to a standard of living adequate for the health and well-being of himself and his family, including food, clothing, housing and medical care and necessary social services, and the right to security in the event of unemployment, sickness, disability, widowhood, old age or other lack of livelihood in circumstances beyond his control' -

To-day, the need for service is immense. Wherever we turn, there can be heard cries of anguish and tears of helplessness. The wants seem to outweigh the resources that are available. Then we realise that the years of life allotted to man is very short and the world with its need is too demanding.

Time extends far behind and far beyond. What little man has to do has to be done quickly, at the place that is assigned to him, to serve the needs of his fellow men. The easiest and most pleasant means by which this can be accomplished is by developing a spirit of dedication and devotion to ensure peace, security and prosperity within the parameters allotted to the each of us.

We talk of social service. Where is it needed? In our society, in our community, in our neighbourhood - for the people who create all these and the world we live in. They are joined together by common aims and work together sharing their skills. However, diversities are found to be a natural phenomena. And it was found that it was essential to have laws and customs in the community to bring about harmony, mutual tolerance and peace. Even then, today the world is wrought with misunderstandings, intolerance and disharmony prevails in all walks of life. If we want a better world we have to work towards it. The world can get better only in the future and the future of the world are the children of today.

The children of today are the citizens of tomorrow. They need more than basic physical necessities. They need to experience their share of joy that should come simply with being a child. By going in to provide them with the confidence of security, love and caring, the number of delinquent children affected by drugs and alcohol and other misfortunes of today can be brought down.

The experience of the older generation could be of help. But often clashes of ideas the young have with the old makes it difficult for both to work together. However, if an earlier training had been given by religious teachings - to listen, care, respect, learn from and obey the elders from the days of childhood, this task would have become much easier as they grew. It is also imperative for the elders to realise the trends of thoughts in the young to be more advanced in the fast developing world and act accordingly in imposing the laws and customs of the community on the young.

The codes of conduct culled in Hinduism called



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the DHARMA SASTRAS, have various divisions and sub-divisions. They combine RELIGION, DEVOTION and CONDUCT, to make the impact felt and the codes to be adhered to by the society in which people of all castes and creeds and classes live together.

By this combination, first the appeal was made to the heart - to be imagined in situations common to all, and then it was explained, to give logical understanding to make people realise why they should behave in a certain manner.

In the beginning to a certain extent it subordinates the individual reason, giving rise to acceptance without questioning and then, once the understanding of the importance of following the Codes of Conduct is realised, it gives the freedom to practise by even altering some of the Codes if necessary, according to the changing situations and times.

The Hindu Religious Stories illustrate the truth and the accepted norms of life by means of stories of kings, adventures of Gods, legends of saints forming the Hindu Mythology. Further, to establish the Hindu Dharma or Codes of Conduct, epics like 'Ramayana' and 'Mahabharata' were created to explain by example through long stories, episodes, dialogues, discourses and sermons.

But today we find many of these codes and conducts disappearing, from what we call a 'free-thinking society'. It is becoming increasingly difficult to have close ties and responsibilities for which personal sacrifices may be needed. Caring for the unwanted, the orphans, disabled and the aged is very much in the wanting now, as the structure of interdependence of the family system is slowly disintegrating and we can blame only the people for it.

We asked for education - it has given us wider horizon; we asked for liberation and we have no responsibilities. The change was felt in the West in the past. But East still trying to cling to its traditions and Religion, is slow to follow, but is surely doing it.

It has to be accepted by all that there is an urgent necessity of developing moral excellence and virtues and human values in people. Especially to enable them to understand the importance of accepting the Codes of Conduct and when the need arises to change them within the parameters of freedom given by our scriptures.

Training is given by encouraging simple acts like sacrifices (to develop devotion), alms giving (to foster generosity), fasting (self control) and so on in the practice of religion through rites and ceremonies in the day to day living, 'to purify the wise', as the Bhagavad Gita puts it.

It is only when rituals are made ends in themselves, without leading to any virtues or to any chastening of the spirit that they become dead wood impeding the growth of the soul. A virtuous life thus gained, purifies and strengthens man.

Another acute problem this world is facing today is the Refugee Rehabilitation Programme. War, and mainly civil conflicts are rampant today and have disrupted the progress of many a Nation and have destroyed family life in many countries. The physical and mental anguish they have faced is being carried on to the next generation through the children who were exposed to this kind of violence and unrest. In many parts they do not even realise that life could be any better. What is the future of these people? Definitely to answer this question in a positive manner, more involvement by all social service organisations, Governmental and Non-Governmental should be considered.

It will be interesting to note that during World War II, approximately 27,000,000 people fled their homes and either crossed an international border or moved from one area to another within their countries. The United Nations Relief and Rehabilitation Administration (UNRRA) was created in 1943 to assist these displaced people with material support and to help them return to their homes. UNRRA initially did not consider or determine refugee status. However in 1949, the UN General Assembly resolved to establish a High Commissioner's Office for Refugees (UNHCR). In the statute creating the UNHCR, the Assembly defined the High Commissioner's various functions as including 'seeking permanent solutions for the problems of refugees by assisting Governments and, subject to the approval of the Governments concerned, private organisations to facilitate the voluntary repatriation of such refugees, or in their assimilation within new national communities'.

The Organisations set up for social service are a tremendous force for doing good in the community. They combat the social illnesses that may affect the society as an outcome of adverse situations and this growing awareness has also brought in many voluntary Non Governmental Organisations to shoulder the responsibilities of the well-being of the society.

What do we, the individuals, involved in these organisations get out of our involvements? Peace in our hearts and a happiness that comes with the knowledge that we have done whatever we could within the limited resources and ability to create a better and healthy society for the world that we live in, for the future generation. However, caring for people cannot be done with full justice for money or any other reward in kind. This feeling of service must come from the heart for it to become meaningful. For this attitude each heart must be prepared. If every human heart is made to feel this feeling of caring for others and if every wanting heart, the ones that need people, are made to find solace also in higher thoughts and draw strength from it, then half the battle is won.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is the faith of all religions that those who serve the needy are dear to Him, the God and He will look after the welfare while in the pursuit of service. We can on this faith carry on even the impossible task, as they would seem as did the Hindu saint Thirunavukkarasu Nayanar and gain strength even when we feel helpless, faced with the obstacles in our path to service.

-On his way to Thiruppaingeeli
he became very wearied,
and on thirst for water
along with hunger assailing him,
he went forward
undistracted in mind by these.
The Lord with the forehead bearing an eye
abiding in Paingeeli
girt by beauty-abounding groves
intent on revealing the suffering of His servitor,
Grove and Tank He first created,
then turning himself
into a way-showing guide,
He appeared before the unique King of Speech
in the form of a Brahmana
adorned with the sacred ash,
bearing in His hands
the desired-for bundle of rice
and awaited his pleasure.
Thus acted He
who was impossible of being seen
by the Bird riding the skies
and the unique Boar
tearing into the bowels of the earth.

This verse tells us that we should have faith in the direct Grace of God. With that faith we must look within us for the strength to carry on and find the many hands and hearts willing to help if we only look out for them without any prejudice.

How do we create among ourselves more and more awareness, motivation, and satisfaction to inspire more work?

Hinduism opens wide the doors of wisdom by accepting all teachings. The Upanishads explain this acceptance by stating thus in their treatises- 'Cows have many colours, but the milk of all of them is white. Likewise look upon all teachers as cows and knowledge as milk'.

This expansion and acceptance encourages the society to mingle in friendship and extend a helping hand outside their closed circle. The first requisite for extended service is a genuine spirit of love and fellow feeling. If there is no feeling of kindness and compassion, whatever service that is done, becomes an artificial exercise which gives neither satisfaction nor motivation to carry on the good work.

Most often people who are helped are left with a feeling of gratitude waiting for more help to come by their way. 'Treat people as if they were what they ought to be, and you help them become what they are capable of being' should be the attitude in our rounds of social service. Try to leave them as much with self-appreciation as possible. Increase international awareness of the needs of our fellow human beings in need, living in not so comfortable climes and help initiate and develop projects that serve the gaping needs of mankind, particularly the poor. The exchange of international thought is the only possible salvation of the world's needs.

In the modern age, at the end of last century, it was Swami Vivekananda who preached a great message in India. He emphasised that in India, 'the key note of the whole music of the national life was Religion', a Religion which preached the 'spiritual oneness of the whole universe', and that when that was strengthened everything else would take care of itself. To all his countrymen he declared, 'The power of Brahman lies in every one of you; the Deity in the poor wants your service'.

Bhagawan Sri Sathya Sai Baba believed by many as a God incarnate tells us - 'Man is immortal; dust he is and to dust he returneth. But, in him, there shines an Atma, as a spark of the immortal flame. This is not a term of flattery invented by the vedantists. The Atma is the source, the substance and the sustenance. The Atma is God; the particular is the universal, no less. Therefore recognise in each man, a brother, the child of God, and ignore all limiting thoughts and prejudices based on status, colour, class, nativity and caste',' The service of man by man can lead to the discovery by man of God, that is his own reality. Every act must be regarded as an offering to the Divine. It may not be easy to develop such an attitude. But if the effort is made sincerely, it can be achieved. Selfless service is the yoga that secures Divine Grace.

Guided by these thoughts let us lead ourselves and our friends in society in service, and share not only our riches but also reveal to them their own and find strength to combat the needs arising out of adversities natural and man-made, that seem to take such gigantic proportions as to engulf us, and the world. Let us also realise that, that part of our lives - Religion - has to be supported to be supportive for our extended service to humanity world-wide to be successful.

(Note : This is the abridged version of a paper presented by Mrs. Ravindran representing ACHC at the Social Workers World Conference held at BMICH on 10th July 1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயசங்கங்களின்பணி

சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன்
மாமன்ற பிரதிச் செயலாளர்
பொதுச் செயலாளர் – விவேகானந்த சபை

இந்துசமயம் உலகளாவியது. அதிலும், சைவ சமயம் மிகத்தொன்மையானது. இன்றும் நாம் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" எனத் தினமும் வாழ்த்துகின்றோம்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 1983 ம் ஆண்டிற்குப் பின்பு எமது சமயம் உலகளாவியது என்பதை இந்து மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். இக்காலகட்டத்தில் எமது சமயத்தை வளர்ப்பதற்கும், அதனுடைய கோட்பாடுகள் தத்துவங்களைப் பரப்புவதற்கும் இந்து சமய சங்கங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என்பது வெள்ளிடை மலையாகும்.

பண்டைய காலத்தில் அரசர்கள் தமிழையும், சைவத்தையும் வளர்த்தார்கள், பாதுகாத்தார்கள். அரசர்களின் அரசாட்சியின் பின்பு சங்கங்கள் தோன்றித் தமிழையும், சமயத்தையும் வளர்த்து வந்துள்ளது. சங்ககாலத்தின் பின்பு ஆதீனங்களும் சமயஸ்தாபனங்களும் சமய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வந்திருக்கின்றன......... வருகின்றன. இந்து மக்கள் இப்படியான ஸ்தாபனங்களிலிருந்து பல செயற்பாடுகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் விரும்பும் செயற்பாடுகளைப் பூரணத்துவமடையச் செய்வதானால் சமய சங்கங்களிடையே ஒற்றுமை வேண்டும். அர்த்தமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் சமயப்பணிகள் இடம்பெற வேண்டுமென்றால் நாம் அனைவரும் தொண்டாற்றி வருகின்ற சமய தாபனங்களோடு இணைந்து பணியாற்ற முனைவதே சாலச்சிறந்ததாகும். அதை விடுத்து ஆளுக்கொரு சங்கமும், தெருவுக்கு ஒரு சங்கமும் தொடக்கி மக்களிடையே போட்டி, பொறாமை, கருத்து வேறுபாடுகள் முதலியவற்றைத் தோற்றுவித்தால் சங்கங்களின் பணிகள் முன்னேற்றமடையாது மழைக்கு முளைக்கும் காளான்கள் போலாகிவிடும்.

எத்தனையோ பெரும் சங்கங்கள் இயங்குவதற்குத் தொண்டர்கள் இல்லாது தவிக்கின்றது. அம்மட்டோடல்லாது சமய சங்கங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மக்கள் ஒன்று கூடுவதுமில்லை. இதனால் வளர்ந்துவரும் சமுதாயம் சீரற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றது. பாடசாலையில் படிப்பதைவிடப் பரந்துபட்ட அறிவு, சமய சம்பிரதாயங்கள், பெரியோர்களின் வாழ்க்கை நெறி, மாணவச் செல்வங்களுக்கு மிகவும் அத்தியாவசியமானவை. கல்வி என்பது புத்தகப் படிப்பு மாத்திரமல்ல, அனுபவக் கல்வியையும், காலத்திற்குக் காலம் ஏற்படும் விளைவுகளையும், கல்விமான்களின் போதனைகளையும் நாம் பெறவேண்டுமானால் குறிப்பாக மாணவர்கள் சமய சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும், பெரியோர்களோடு பழக வேண்டும், சமயப்பணிபுரியவேண்டும், இப்படிச் செய்வதானால் அறிவு, அறிவுக்கும் மேலான ஒழுக்கம் வளர்ச்சியுறும், தமக்குத் தெரியாதவையைக் கேட்டறிந்து செயலாற்றும் வாய்ப்பும் உண்டு. இப்படியான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் சங்கங்களின் தலையாய கடமை.

சமய சங்கங்கள் நூல்கள் வெளியீட்டு விழா நடத்துவதுமல்லாது தக்க நூல்களைத் தக்கவர்களைக் கொண்டு எழுதி வெளியீடு செய்தல் பெரும் நன்மை பயக்கும். தற்காலத்தில் இந்து சமய சங்கங்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் மலிந்து வருவதனால் பகிரங்கமாக ஒன்றையொன்று பத்திரிகை மூலமாகத் தாக்கிக் கொள்கின்றன.

முகாமைப் பேரவை உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து ஆராய்ந்து இந்து மக்களின் நிலையையும் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டபின் மாமன்றம் தைப்பொங்கலை விமரிசையாகக் கொண்டாடாமல் வழிபாடு தினமாக அனுட்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இன்னுமொரு சங்கம் இதற்கு மறுப்புத் தெரிவிக்குமுகமாக பத்திரிகையில் இந்து மக்களின் கருத்தைப் பிரதிபலிக்காத தனிமனிதனின் அபிப்பிராயத்தைக் கருத்தாக வெளியிட்டது.

இம்மட்டோடல்லாது சமய சங்கங்கள் அரசியலில் பிரவேசிப்பது முறையல்ல என்ற கருத்து ஒரு புறமிருக்க ஒரு சங்கம் பத்திரிகையில் இந்துக்களின் பிரதிநிதி தான்தான் என்று அதன் தலைவர் கூறிக் கொண்டு அரசாங்கம் வெளியிட்ட அரசியல் திருத்தச் சட்டங்களை இந்து மக்கள் முழுமையாக வரவேற்கும் பாணியில் பத்திரிகையில் எழுதுகிறார். ஏனைய சில சங்கங்கள் அத்தீர்விலுள்ள குறைபாடுகளைக் குறிப்பாக இந்து மக்கள் விரும்பமாட்டார்கள் என்றும், அது எப்படி அமைய வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கிறது.



ஆகவே இப்படியான முரண்பாடுகள் சங்கங்களின் பணிக்கு அழகல்ல, தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்களின் வளர்ச்சிக்காக, சமுதாயப் பணிகளில் முன் நின்று உழைப்பதே மேல். இதைத்தான் அனைவரும் விரும்புகிறார்கள்.

சமய சங்கங்கள் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் சமய கோட்பாடுகளை எவ்வாறு கடைப்பிடிக்கிறார்கள். அதை எப்படி முற்றாக அவர்களை ஈடுபடச் செய்யலாமென்பதில் கவனத்தைச் செலுத்தி அதற்குத் தேவையானவைகளை, உதவ முடியுமானால் அது பெரிய தொண்டாகும். வளர்ந்துவரும் இளைஞர்கள், யுவதிகள் சமயம்வேறு, வாழ்க்கை வேறாகக் கருதி வாழ்கிறார்கள். அவர்களது கலாசாரம் மீண்டும் ஐரோப்பிய கலாசாரத்தைத் தழுவுகிறதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. மீண்டும் ஆறுமுக நாவலர் தோன்ற வேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம் என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

ஆலய வழிபாடு என்றால் அர்ச்சனை செய்வதோடு முடிந்து விடுவதா ? இளம் சமுதாயத்தினர் தேவார திருவாசகம், நீதிநூல்கள் படிப்பதில், மனனம் செய்வதில் அக்கறை காட்டுவதில்லை. இக்குறையை சங்கங்கள் நீக்குவதற்கு முனையலாம். சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறும் நூல்களைக் கொண்டு அப்பணியைச் செய்ய சங்கங்கள் முன்வர வேண்டும்.

விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்றவர்களுடைய தத்துவங்களைப் பலரும் இலகுவாக அறியச் செய்து, சாதனை செய்யவும் முயற்சிக்க வேண்டும். இந்து மக்களிடையே தியானம் செய்பவர் மிகக் குறைவு. தியானத்தில் தான் நாம் இறைவனைக் காணலாம் என்ற உண்மையைச் சமய சங்கங்கள் பரப்ப வேண்டும். அதில் மக்களை ஈடுபடச் செய்யவேண்டும்.

அகில இலங்கை இந்துமாமன்றம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இலங்கையிலுள்ள இந்து சமய சங்கங்கள் அனைத்தும் (ஒரு சிலவற்றைத்தவிர) இம் மாமன்றத்தில் அங்கம் வகித்துள்ளதனால் இந்துக்கள் இம்மாமன்றம் காலத்திற்குக் காலம் எடுக்கும் தீர்மானங்களுக்கு செவிமடுத்து அதன்படி நடப்போமானால் நம்மிடையே ஒற்றுமை வளர்ந்து நாட்டில் இது ஓர் சக்தி மிக்க மன்றமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை. பழம்பெரும் விவேகானந்த சபை சைவ சமயத்திற்கு ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. அதன் செயற்பாட்டினால் நாட்டில் சைவசமயம் போற்றப்படுகின்றது. இச்சபை நாவலர் காட்டிய வழித் தொண்டில் ஈடுபட்டு அதன் பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது. இதனை அடியொற்றி கொம்பனித் தெரு சைவமுன்னேற்றச் சங்கமும், வட கொழும்பு இந்து பரிபாலன சங்கமும் இயங்கி வருகிறது.

வடகிழக்கிலுள்ள இந்து சமய சங்கங்கள் நாட்டின் நிலை காரணத்தினால் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறதை நினைக்கும் போது நமது மனம் கலங்குகிறது. கவலையடைகிறது. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, நல்லூர் ஆதீனம், தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம் போன்றவைகளின் மகோன்னதமான பணிகளை மக்கள் மறக்கமுடியாது. காலத்தின் அவலநிலையால் சிதறுண்ட நெல்லிக்கனிகளைப் போன்று நம் தமிழ் மக்கள், சைவமக்கள் அலமந்து திகைக்கின்றோம்.

இறைவனின் அளப்பெருங் கருணையால் இந்நிலை மிக விரைவில் மாறும் ...... மாற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.

*"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாது*
*வேறொன்றறியேன் பராபரனே"*

## பஞ்ச நடன சபைகள்

*இந் நடராஜமூர்த்தி நடனஞ் செய்யும் ஸ்தலங்கள் பலவற்றுள் சிறப்புடையன ஐந்தாம். அவை திருவாலயங்காடு, சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம் என்பனவாம். இவற்றிலுள்ள நடன சபைகள் முறையே இரத்தின சபை, பொற் சபை, இரசித (வெள்ளி) சபை, தாமிர (செம்பு) சபை, சித்திர சபையென்பனவாம். இவ்வைந்து சபையிலும் அன்புடன் சென்று அருள் நடனங் கண்டு இன்புருவானவரே இனிப் பிறவாநிலையை அடைவரென்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வளர்ச்சியில் பத்திரிகைகள்

*சட்டத்தரணி இ.சிவகுருநாதன்*
*முன்னைநாள் பிரதம ஆசிரியர். தினகரன், விரிவுரையாளர்*
*இலங்கை சட்டக்கல்லூரி*

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற் சொல்லுதமிழ் எங்கே? சுருதி எங்கே? பிரசங்கம் எங்கே?

நாவலர் தம் பெருமையை எடுத்துக் கூறும்போது இவ்வுண்மையை எவரும் மறந்து விடுவதில்லை. பத்திரிகை மூலமாகவே நாவலர் பெருமான் தன் போராட்டத்தை நடத்தினார். சமய வளர்ச்சியில் பத்திரிகைகள் என்ன பங்களிப்பு செய்தன என்று ஆராய முற்படுவோர் நாவலரையே துணைக்கு நாடுவதுண்டு.

எமது இலங்கைத் திருநாட்டில் இந்து சமயம் நிலைபெற்றிருப்பதற்குத் தமிழ்ப்பத்திரிகைகள் ஆற்றிய தொண்டினை வரலாற்று ஆய்வாளர்கள் புறக்கணிக்க முடியாது. உண்மையில் மிக ''ஆபத்தான சூழல் இங்கே உருவாகிக்கொண்டிருந்த வேளையில் தமிழ்ப்பத்திரிகைகளே பாதுகாப்பு அரணாக இருந்தன என்பதனை நாம் மறந்திட முடியாது.

வெள்ளைப்பறங்கியர்கள் என்று பாரதி வர்ணித்த மேலைத் தேயத்தவர்கள் 1505ல் இந்நாட்டுக்கு வந்ததும் புதிய ஒரு சகாப்தமே எமது வரலாற்றின் ஆரம்பமாவது என்பர். மக்களின் நடை உடை பாவனைகளில் மட்டுமல்ல நிர்வாக அமைப்பிலும் புரட்சிகரமான மாற்றங்கள் காணப்படலாயின. எமது நாட்டு வாசனைத் திரவியங்களான ஏலம், கறுவா, கராம்பு, இஞ்சி, சாதிக்காய் போத்துக்கேயரைக் கவர்ந்திருந்தன. இலங்கை நாட்டுடன் தற்செயலாக ஏற்பட்ட தொடர்பு நிலைபெறவேண்டும் என விரும்பிய போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தையும் இங்கு நிலைநாட்ட முயன்றார்கள். நிலைத்திருக்க நேர்ந்த போர்த்துக்கேயருக்காகவும் இவர்களது தயவைப் பெற்று சமூகத்தில் முன்னேற்றம் காண ஆவலுற்று கத்தோலிக்கத்தை பேணியவர்களுக்காகவும் பல்வேறு இடங்களில் கத்தோலிக்க தேவாலயங்கள் கட்டப்பட்டன. கத்தோலிக்கம் பிறர் உணர்ந்து கொள்ளாத வகையில் இங்கே பரவி வளர்ச்சி காணத் தொடங்கிற்று. இந்து சமயம் பாதிக்கப்பட்டது. பலர் மதம் மாறினார்கள். பெயர்களைமாற்றினார்கள். இன்று நாம் இங்கு காண்கின்ற கத்தோலிக்க சமூகம் இக்காலத்திலேயே ஆரம்பமானது எனலாம். இந்து சமயத்தலைவர்கள் பிற சமய வளர்ச்சியால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணரவில்லை. அன்றிருந்த சமூகத்தலைவர்களும் பாராமுகமாகவே இருந்திருக்கவேண்டும். ஏனெனில் எதிர்ப்பை எவரும் காட்டவில்லை. தடையின்றி கத்தோலிக்கம் வளர்ந்தது.

போர்த்துகேயரைத் தொடர்ந்து இங்கு வந்தவர்கள் ஒல்லாந்தர். இவர்களின் ஆட்சிக்காலத்திலே இந்து சமயம் மேலும் கஷ்டநிலை கண்டது. இந்துக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். திரிசூலத்தை சிலுவை என்று காட்டி சிப்பாய்களை சைவர்கள் ஏமாற்ற வேண்டிய நிலை இருந்தது. விரதம் அனுஷ்டித்தவர்கள் சோறு உண்ண உபயோகித்த வாழை இலையை வீட்டுக்கூரையில் சொருகி மறைக்க வேண்டிய நிலை இருந்தது. புரட்டஸ்தாந்து வேதம் பரப்பப்படுவதற்கும் என முறை பின்பற்றப்பட்டது. இத்தகைய சூழல் இருந்தும் சந்தர்ப்பவாதிகள் வாளாவிருக்கவில்லை. இன்று கட்சி மாறுவோரைப்போல அன்று சொந்தலாபத்துக்காக மதம் மாறினார்கள்.

மார்டின் லூதர் 'ஜோன் கல்வின்' உள்றிக் சுவிக்கிலி பிலிப் மெலத்தன் போன்ற சிந்தனையாளர்கள் பிரசுரமுறையைப் பயன்படுத்தி எழுதினார்கள். பத்தலமேயு சீகன்பால்கு. வில்லியம் கேரி ஆகியோர் சமயப் பிரசாரம் செய்தனர். யேசு சபைக்குருமார் என்ற கத்தோலிக்க இயக்கத்தினரும் சமயப் பிரசாரத்தை ஆரம்பித்தனர். அச்சுயந்திரத்தின் உதவியுடன் பிரசாரம் துரிதமடைந்தது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் அரசும் மதமும் பிரிக்கமுடியாதபடி ஒன்றாகப் பிணைந்துகிடந்தன. பிரசார முயற்சியின் விளைவாக இந்துக்கள் மதம் மாறத் தொடங்கினர். அந்நிய மொழியைப்பேசி மேலைத்தேய வாழ்க்கை நடத்தத் தொடங்கினர். இப்போக்கை எதிர்க்க எவரும் முன்வரவில்லை.



ஒல்லாந்தரைக் தொடர்ந்து பிரிட்டிஷ்காரர் வந்தார்கள். இவர்களோடு புரட்டஸ்தாந்து மிஷனரி இயக்கங்கள் இங்கு வர அனுமதிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவிலிருந்து மசர்ச்சு சேற்ஸ் மாநிலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தினர் புதிய சகாப்தத்தை ஆரம்பித்தனர். மத நிறுவனங்கள் இவ்வாறு செயற்பட இக்கால அரசியல் நிர்வாகப்பீடம் இடம் கொடுத்தது. ஏகாதிபத்தியத்தில் செறிவை அடிமனத்திற்கொண்டு கிழக்கே இயங்கிய அமைப்புகள் சமயத்தை பயன்படுத்த எண்ணின. மதம் கிழக்குலக மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ள ஒன்றாகும். மதத்தின்மூலம் எதையும் சாதிக்கக் கூடியதாக அன்று இருந்தது.

மிஷனரிமார் அச்சுயந்திரத்தைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்தத் தொடங்கியதும். எமது சமயங்களுக்கு ஆபத்து உருவாகிறது. மக்கள் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டதால் சமூகத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டது. மானிப்பாயில் இலங்கை அமெரிக்க மிஷனின் அச்சகம் நிறுவப்பட்டதும், நூல்கள், பிரசுரங்கள் வெளிவரத்தொடங்கின. 1841ல் வெளியான உதயதாரகை கிறிஸ்தவ பிரசாரத்துக்கு முதன்மை இடம் அளித்தது. இதனைத் தொடர்ந்து பல பத்திரிகைகள் மிஷனரிகளுக்கு ஆதரவாக வெளிவந்தன. சைமன் காசிச்செட்டியின் உத்யாதித்தன், உரைகள் 1848 பாலியர் தேசன் 1864ல் இலங்கை பாதுகாவலன், 1868 ல் கத்தோலிகர் பாதுகாவலன், 1876 போன்ற கிறிஸ்தவம் ஏடுகள் கிறிஸ்தவ பரவ உதவின.

இவ்வாறு கிறிஸ்தவம் பிரசாரத்தின் மூலம் வளர்ச்சி காணத் தொடங்கியதும் சுதேசிகள் ஆத்திரம் கொண்டனர். கிறிஸ்தவ பிரசாரத்துக்கு பதில் அளிக்கும் வகையில் பல சைவ ஏடுகள் தோன்றின. 1877ல் திரு. எச்.எம். சின்னத்தம்பி ஆரம்பித்த இந்து சமயச் சார்பான இலங்கை நேசன் புதிய உணர்வை வெளிப்படுத்தத்தவறவில்லை. இதில் ஆறுமுகநாவலர், பலவற்றை எழுதினார். "இது நல்ல சமயம்" என்ற தலைப்பில் நாவலர் எழுதிய விஷயம் அக்கால மக்களின் வேதனையை எடுத்துக்காட்டத்தவறவில்லை. நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்களும் வெளிவந்தன. கிறிஸ்தவ பிரசுரங்களுக்கு மறுப்பாக இவை அமைந்திருந்தன. நாவலர் ஆபத்து நிலையை உணர்ந்து கேள்வி பதில் பகிரங்கக் கடிதங்கள் போன்றவற்றால் கிறிஸ்தவத்துக்கு சவால்விட்டார்.

ஆனால் சவாலை செயற்படுத்த முடியாதிருந்தனர். எனினும் அவரது சிஷ்யர்கள் பத்திரிகைகள் மூலம் இயக்கம் நடத்தவேண்டும் என்று கொண்டு சில ஏற்பாடுகளைச் செய்தனர்.

கொழும்பிலிருந்து சுப்பிரமணியர் ஆலயத்தில் பிரசங்கங்கள்செய்து வந்த சாமுக்குருக்கள் எதிர்பிரசாரம் செய்ய சைவப்பத்திரிகை அவசியமென்ற கோரிக்கை விடுத்தார். கிறிஸ்தவ சமய ஏகாதிபத்தியத்தை முறியடிக்க முனைந்த சக்திகள் சைவப் பிரகாச் சமாஜம் அமைத்தனர். இவர்கள் 1880ல் சைவ உதயபானுவை வெளியிட்டனர். சைவசித்தாந்த தத்துவங்கள் இதில் விளக்கப்பட்டன.

1885ல் உருவான சைவ பரிபாலன சபை 1889ல் இச்சாதனம் வெளியிட்டது. நல்லூர் த. கைலாசபிள்ளை இதன் ஆசிரியராக இருந்து அருந்தொண்டாற்றினார். இந்து சமயக்காவலர் மிஷனரிமாருக்கு எதிராகப் போராட்டம் நடத்தத் தொடங்கினரென்றாலும் மிஷனரிகளின் நடவடிக்கைகளை முகங்கொள்வதில் கஷ்டம் கண்டனர். நாவலரைப்போல சங்கரபண்டிதரும் மற்றும் சீடர்களும் பிரசுரங்கள் மூலம் எதிர் பிரசாரம் செய்தார்கள். பத்திரிகை மூலம் நடைபெற்ற பிரசாரம் போராட்டத்தை இலங்கை நேசன் புதினக் கடதாசிகளின் யுத்தம் என்று வர்ணித்தது. நாவலருடைய சிந்தனையின் தாக்கம் காரணமாகவே கண்டி பீட்டர் எம்ஸி. சித்திலெப்பை முஸ்லிம் நேசனை வெளியிட்டார் என்றும் சிலர் கருதுவதுண்டு.

1883ல் சைவாபிமானி, 1907 ஆத்ம போதினி, 1908ல் ஞானசித்தி, 1908ல் இந்து போதினி, 1910ல் சைவ நாலிய சம்போதினி, 1908ல் இந்துபாலனபோதினி வெளியிடப்பட்டன. இப்பத்திரிகைகள் எமது நாட்டில் சைவம் மறைந்திடாது பாதுகாத்தன எனலாம்.

இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் பௌத்தம் முன்னிடம் பெற்றது. ஆனால் இந்து சமயமும் ஏனைய சமயங்களும் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதமும் அளிக்கப்பட்டது.

எனினும் இந்து சமயம் வளர்ச்சிகாணவேண்டுமெனில் பொதுஜன ஆதரவு தேவைப்படுகின்றது. மக்களின் ஆதரவை ஈர்க்கும் ஏற்பாடுகளை இந்து நிறுவனங்கள் செய்து வருகின்றன. அகில இலங்கை இந்து மாமன்றம் எடுத்துவரும் நடவடிக்கைகள் இந்தப் பிரக்ஞையுடனேயே எடுக்கப்படுகின்றன என்பதனைத் தெளிவாக்குகின்றன.

இன்றைய செய்தி ஏடுகள் மீது இந்நிலையில் பெரும் பொறுப்பு சுமத்தப்படுகின்றது. இந்துமக்களின் தேவைகளையும், சமய வளர்ச்சி காண்பதற்குத் தடையாக நிற்கின்ற இடர்களையும் இனங்கண்டு அவ்வப்போது ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பது மிகமுக்கியமானதாகும். சில வேளைகளில் சில பிரச்சினைகள் அரசியல் கலப்பையும் பெற்றிருக்கக் கூடும். இவ்விஷயங்களிலும் அவ்வப்போது அரசுக்கும் சைவநன்மக்களுக்கும் அறிவுரை கூறுதல் விரும்பத்தக்கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயக் கல்வியும் எதிர்நோக்கும் தேவைகளும்

## அகில இலங்கை இந்து மாமன்றம்
## கல்விக்குழு மாநாட்டு அறிக்கை

*(அகில இலங்கை இந்து மாமன்றக் கல்விக் குழுவால் நடத்தப்பட்ட "இந்து சமயக் கல்வியும், எதிர்நோக்கும் தேவைகளும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து அறிக்கையாகக் கல்விக்குழு தயாரித்தது. அவ்வறிக்கையை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக அதன் உறுப்பு அங்கத்துவ சங்கமான அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கம் அச்சிட்டு வெளியிட்டது.*

*அகில இலங்கை இந்து மாமன்றத்தினதும் அதன் அங்கத்துவ சங்கங்களினதும் பணிகளுக்கு எதிர்காலத்திலும் இது ஒரு நல்ல வழிகாட்டியாக அமையும் என்பதால் இம்மலரில் இதனை வெளியிடுகிறோம்.)*

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கல்விக் குழு இந்து சமயக் கல்வியும் எதிர்நோக்கும் தேவைகளும் எனும் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடல் நடாத்தத் தீர்மானித்து 1990 ஜனவரி மாதம் 19 ஆந் திகதி கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த இந்து சமய மாணவர்கள் பயிலும் பாடசாலை அதிபர்களுக்கும், இந்து சமய நிறுவனங்களுக்கும், இந்துக் கோயில் நிருவாகங்களுக்கும் 1990 பெப்ரவரி 17 ஆந் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றி அவர்களுடைய ஆலோசனைகளையும் வழங்குமாறு அழைப்பு விடுத்தது. இவ்வழைப்பு கௌரவ பொதுச் செயலாளர் திரு. செ. சச்சிதானந்தசிவமும், கல்விக் குழு அழைப்பாளர் திரு. த. மனோகரனும் விடுத்த அழைப்பாகும்.

அழைப்பினை ஏற்று வருகை தந்த பிரதிநிதிகளுடன் கல்விக் குழுக் கருத்தரங்கு பெப்ரவரி மாதம் 17 ஆந் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அன்றைய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டோருக்கு விருந்துபசாரம் செய்யும் முழுப் பொறுப்பினையும் ஏற்றுத் திறம்பட நிறைவேற்றினார். அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் திரு. செ. சச்சிதானந்தசிவம் கருத்தரங்கினை நடத்துவதற்கு ஏற்பனபற்றி உரையாற்றியதோடு மட்டுமன்றி "வளர்ந்தோருக்கான சமயக் கல்வி" பற்றிய ஆய்வுக் குழுவுக்குத் தலைமை தாங்கி அதனைத் திறம்பட நடத்திவைத்தார். பொருளாளர் திரு. எம். கந்தசாமி, உபதலைவர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை, துணைச் செயலாளர்கள் திரு. எஸ். சிவப்பிரகாசம், க. நீலகண்டன். துணைப் பொருளாளர் திரு. கு. மகாலிங்கம் உட்பட மாமன்ற முகாமைக் குழு அங்கத்தவர் பலர் கருத்தரங்கிலே கலந்து கொண்டு ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்கது. புத்தளம், குருணாகலை மாவட்டங்களிலிருந்து இந்து சமய நிறுவனப் பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இராமகிருஷ்ண மிஷன் பிரதம சுவாமிகள் சுவாமி சம்பிராஜ்னானந்தா அவர்கள், இந்து சமய, இந்து கலாசார பதில் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் என்போர் கருத்தரங்கிலே பங்குகொண்டு சிறப்பித்தமை மனங்கொளத்தக்கது.

மங்கள விளக்கேற்றி, இறைவணக்கஞ் செய்து, வரவேற்று நல்லாசிகளும், வாழ்த்துக்களும் பெற்று ஆரம்பிக்கப்பெற்ற கருத்தரங்கில் முன்னிகழ்ச்சிகள் கருத்தரங்கின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட உரைகளாக அமைந்தன. திரு. கு. குருசுவாமி, டாக்டர் க. வேலாயுதபிள்ளை, பேராசிரியர் பொ. பூலோகசிங்கம், திரு. த. மனோகரன், திரு. செ. சச்சிதானந்தசிவம், செல்வி குந்தவி பாலச்சந்திரன் ஆகியோர் இவற்றை ஆற்றினார்.

இடைவேளைக்குப் பின் கருத்தரங்கு ஒன்பது குழுக்கள் மத்தியில் நடைபெற்றது. மேல்வரும் விடயங்கள் அக்குழுக்களின் கலந்துரையாடல்களுக்குப் பொருளாக அமைந்தன.

i) பாடசாலைகளில் இந்து சமயக் கல்வியும், பணியும்.

ii) தோட்டப் பாடசாலைகளில் இந்து சமயக் கல்வியும், தோட்டப் பகுதிகளில் சமயச் செயல்பாடுகளும்.

iii) இந்து சமய நிறுவனங்களும், சமயக் கல்வியும்.

iv) இந்துக் கோயில்கள் மூலம் சமயக் கல்வி.

v) வளர்ந்தோருக்கான சமயக் கல்வி.

vi) ஆரம்ப வகுப்புகளில் சமயக் கல்வி.

vii) உயர் வகுப்புகளில் சமயக் கல்வி.

viii) சமயக் கல்வியைப் பரப்புவதற்கான வழிவகைகள்.

ix) இந்து சமயக் கல்வி நூல்கள்.

ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு மத்தியட்சகரின் கீழ் ஏறக் குறைய பத்து உறுப்பினரை உடையதாக விளங்கியது. ஒன்பது குழுக்களும் தங்கள் பணிப்புரைகளைக் குறித்துக் கொடுத்ததோடு அமையாது கருத்தரங்கில் பங்குபற்றியோர் வினாக்களுக்கு விடைகளும் அளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது குழுக்களின் அறிக்கைகளையும் ஒருசேரவைத்து, அவற்றின் பணிப்புரைகளைக் கிரமப்படுத்திக் களையவேண்டுவனவற்றைக் களைந்து இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறையிலே விடயவாரி அமைப்புப் பின்பற்றப்பட்டுள்ளது. இதனால், ஒரு விடயத்தின் கீழ் இடம் பெற்றது வேறொரு விடயத்தின் கீழும், பொருத்தம் நோக்கி இடம்பெறலாம்.

இங்கு சமர்ப்பிக்கப்படும் கருத்துக்கள் கல்வி கருத்தரங்கிலே வெளிப்போந்த கருத்துக்களேயன்றித் தனிப்பட்ட எவரினதும் அல்ல. இவற்றை அகில இலங்கை இந்து மாமன்றம் ஆலோசித்து ஆவன செய்யவேண்டும் என்று கருத்தரங்கிலே கருத்துரைக்கப்பட்டதனை இங்கு ஞாபகப்படுத்துவது அவசியமாகும்.

கருத்துரைகள் அடுத்து வருகின்றன :-

## 1) பாடசாலை / கல்லூரி

1) இந்து மாணவர் உள்ள பாடசாலைகளில் இந்து சமய பாடம் கற்பிக்கப்படாதவிடத்து அதற்கான ஒழுங்குகளைக் கல்விப்பணிப்பாளருடன் மேற்கொள்ளல்.

2) வேற்றுமொழி / சமய பாடசாலைகளிற் கற்கும் தோட்டப்பகுதிப் பிள்ளைகள் அங்கு சமயக் கல்வி கற்க முடியாத நிலை நீக்கப்படுதல்.

3) தோட்டப் பகுதிப் பாடசாலைகளில் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத குறையை நிவர்த்தி செய்தல்.

4) சில பாடசாலைகளில் ஆரம்ப சமயக் கல்வி போதிக்கப் போதிய ஆசிரியர் இல்லாத குறை நீக்கப்படல்.

5) தோட்டப் பகுதிகளில் பல தமிழ் (இந்து) பாடசாலைகள் அழிந்து கிடக்கின்றன. அவற்றைப் புனருத்தாரணம் செய்தால் இந்துப் பிள்ளைகளின் வேற்றுமொழி / சமய சூழல் நீங்கும்.

6) பொதுவான பாடசாலைகளில் பெரும்பான்மை மாணவர் இந்துக்களானால் இந்துவொருவர் அதிபராக அமைதல் வேண்டும்.

7) இந்து மாணவர் விகிதாசாரத்திற்கு ஏற்ப பொதுப் பாடசாலைகளில் இந்து ஆசிரியர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

8) பிறமத ஆசிரியர் இந்து சமயம் கற்பித்தல் தவிர்க்கப்படல்.

9) இந்துப் பாடசாலையில் வேற்றுமத ஆசிரியர் தம் மத உணர்வுகளுடன் செயற்பட்டு இந்துப் பிள்ளைகளை வருத்துதல் கண்டிக்கப்படல்.

10) பிறமத பாடசாலைகளில்:

அ) இந்து சமயிகளுக்குக் காலை ஆராதனை செய்ய வழி செய்தல்.

ஆ) பிற மதத்தவர் ஆடைகளை இந்து மாணவிகள் அணிய வற்புறுத்துவதைத் தடுத்தல்.

இ) இந்து சமய போதனைக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளல்.

11) இந்து சமய ஆசிரியர் பற்றாக்குறையைத் தொண்டர் ஆசிரியர் மூலம் நிவர்த்தி செய்தல்.

12) இந்து சமய பாடசாலைகளில் :

அ) நித்திய ஆராதனை.

ஆ) முதற் பாடம் சமய பாடமாக அமைதல்.

இ) ஒழுங்கான உடை பாடசாலைகளுக்கு அணிதல்.

13) "தமிழ்ப் பாடசாலை" என்ற பெயரை நீக்கி "தமிழ் இந்து சமய பாடசாலை" என்ற பெயரைக் கொண்டு வருதல்.

14) இந்து சமய பாடசாலைகளின் நிலைமைகளை அவதானிக்கும் குழு நிரந்தரமாக அமைதல்.

## 2) ஆசிரியர் :

1) இந்து சமயம் கற்பிக்கப் பயிற்சி ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கி பாடசாலையில் நியமித்தல்.

2) ஆசிரியர் பயிற்சியில் சமயப் பயிற்சிக்குப் போதிய இடந்தரல்.

3) ஆசிரியர்களுக்கு பயிற்சியில் வருடா வருடம் புத்தூக்க சமய வகுப்புகள் நடத்தல்.

4) பல்கலைக்கழகத்தில் ஆசிரியருக்குச் சமய டிப்ளோமாப் பயிற்சி.

5) கருத்தரங்குகள் ஆசிரியருக்கு அடிக்கடி ஒழுங்கு செய்தல்.

6) இசை, நடன ஆசிரியர்களை இந்து சமய பாடசாலைகளில் நியமித்தல்.

7) மாணாக்கர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர் தொகை இல்லாமை ஆசிரியரையும், மாணவரையும் வெகுவாகப் பாதித்தல்.

8) கடமை லீவு நடுவராகப் பணிசெய்யும் இடத்து ஆசிரியருக்கு வழங்கப்படுதல்.

9) சமய ஆசிரியர் கண்காணிப்புக்கு ஒரு கல்வி அதிகாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) மாணாக்கரை இந்து நாகரிகத்தை உயர்தர வகுப்பில் பாடமாக எடுக்க ஊக்குவித்தல்.

### 3) பாடவிதானம் :

1) இந்து சமயத்தின் ஆழமான கருத்துக்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளவும், ஆசிரியர் இலகுவாகக் கற்பிக்கவும் ஏற்றவாறு விதானம் திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

2) முதல் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்புவரையிலான சமய பாடத்தின் தரம் உயர்த்தப்படல் வேண்டும்.

3) உயர் வகுப்புப் பாடவிதானம் வரையறுக்கப்பட்ட தெளிவான பாடத் திட்டமாக மாணாக்கர் பெறக்கூடிய வசதி.

4) சமய போதனையில் இசை, நடனம், பண்ணோதல் பண்ணிசைப் பயிற்சி, நாட்டிய நாடகம்.

5) தலயாத்திரை, தலவரலாறு, தலமகிமை.

6) சமய நிகழ்ச்சிகள் : குருபூசைகள், சமயப் பெரியோர் கலந்துரையாடல் சமய / பண்ணிசைப் போட்டி, பட்டிமன்றம், பரிசில்.

7) உயர் வகுப்பு மாணவர் கருத்தரங்குகள் : இந்து மாணவர் மன்றம்.

8) சமய பாடவேளை கூட்டப்படுதல்.

### 4) பாட நூல்கள் :

1) பாடசாலை / கல்லூரி மாணவரின் சமய பாடத்திற்கு உதவும் உப பாட நூல்களை எழுதுதல்.

2) பாடநூல்களைத் திருத்தி அமைத்தல்.

3) ஆசிரியர் வழி காட்டி நூல்களை வெளியிடல்.

4) சமய பாட நூல்கள் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்களிற் சில :

அ) வகுப்பு வித்தியாசத்திற்கு ஏற்ப "சமயம்" என்பதன் வரைவிலக்கணம் தெளிவாக விளக்குதல்.

ஆ) வயதிற்கு ஏற்ப மொழி நடையில் அமைதல்.

இ) சமய அனுட்டானங்களின் தெளிவான விளக்கம்.

ஈ) தெளிவான புராணக் கதைகள்.

உ) முரண்பட்ட கட்டுக்கதைகள் தவிர்க்கப்படுதல்.

ஊ) தேவார சந்தர்ப்பம், பொழிப்பு.

எ) மனனஞ் செய்யும் பஞ்சபுராணம்.

ஏ) திருத்தலங்களின் பெருமை, வரலாறு.

ஐ) தெய்வங்களின் தோற்ற விளக்கம்.

ஒ) இந்து சமய வரலாறு.

ஓ) இந்து ஒழுக்கநெறி; திருக்குறள் விளக்கம்.

5) பாடத்திட்டத்திற்கு அமைய க.பொ.த. (உயர்தர)ப் பாடத்திற்கு இந்து நாகரிக வழிநூல்.

6) கல்விப்பொதுத் தராதர (சாதாரண / உயர்தர) மாணாக்கருக்குப் பாடத்திட்டத்திற்கு அமைவான சஞ்சிகை வெளியிடல்.

7) குழந்தை முதல் பாமரர் வரை விளங்கும் வகையில் சமய தத்துவம், அநுட்டானங்களை விளக்கும் நூல்.

8) இந்து சமயத்தின் விஞ்ஞான பூர்வமான உண்மைகளை விளக்கும் நூல்.

9) இந்து சமய, கலாச்சார, பண்பாடுகளை உணர்த்தும் வகையில் சிறுவருக்கு விளங்கும் வகையில் மாசிகை.

10) மலிவான விலையில் இந்து சமய நூல்களைப் பெறுவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

### 5) சமயப் பரீட்சை :

1) சமயப் பரீட்சை வினாத்தாள்களைப் பாடசாலைகளுக்கு இலவசமாக வழங்குதல்.

2) பரீட்சித்து சான்றிதழ், பரிசில் வழங்குதல், பரிசிலுக்கு நிறுவனம் அறவிடும் பரீட்சைக் கட்டணத்தில் ஒரு பகுதி.

3) ஞாயிறு பாடசாலை மாணாக்கரையும் சமயப் பரீட்சையில் ஈடுபடுத்தல்.

4) பரீட்சை / போட்டி ஊர், மாவட்டம், மாகாணம், அனைத்திலங்கை என்ற ரீதியில் விரிவுபடுத்தல்.

5) சமயப் பரீட்சை எழுத்துப் பரீட்சையாக மட்டுமல்லாது பேச்சு, வாதம், பண்ணிசை என விரிவு படுத்தல்.

6) திறமைக்கு மட்டுமன்றித் தேவைக்கும் ஏற்ப சான்றிதழ், பரிசில் வழங்குதல்.

### 6) ஞாயிறு பாடசாலை :

1) பாடசாலை செல்லும் வயதை எட்டாத பிள்ளைகளுக்கும், பாடசாலை செல்லும் மாணவருக்கும் ஞாயிறுகளிலே சமய வகுப்பு நடத்தல்.

2) கிராமக் கோயிலோ அல்லது இந்து சமய மன்றங்களோ இவற்றை ஒழுங்கு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பெற்றோருடன் தொடர்புகொண்டு பிள்ளைகளை வகுப்புக்கு வரத் தூண்டுதல்.

4) வருகைக்குப் பரிசில் வழங்கல்.

5) பாடசாலை அதிபர் கண்காணிப்பில் பாடசாலை சமய ஆசிரியர் ! சமய அறிவுடைய தொண்டர் மூலம் நடத்தல்.

6) ஆசிரியருக்கு வேதனம் வழங்கி ஊக்குவித்தல்.

7) பண்ணிசைப் பயிற்சி, பட்டி மன்றம், சமயப்போட்டி முதலிய நிகழ்ச்சிகள், சமயப் பரீட்சைகளில் கலந்து கொள்ள வைத்தல்.

## 7) கோயில் :

1) பொது மக்களின் சமயவுணர்வுகளுக்குக் கேந்திரமாக அமைவது கோயில் என்பதை மறத்தல் சாலாது. எனவே அவற்றின் பராமரிப்பும் செயல் முறையும், சமய வாழ்க்கையில் முக்கியமாகும்.

2) கோயில்களைச் சுற்றி இருந்த மடங்கள் பல பராமரிப்பு அழிந்து இல்லாது விட்டன. மடங்கள் சமூகத்தின் இன்றியமையாத பணிகளுக்குக் காலாக இருந்தமை மறக்கப்பட்டுவிட்டது. அந்நிலை மாறவேண்டும் புது மடங்களைக் கட்ட ஊக்குவித்து அவற்றைச் சமூகத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

3) தோட்டப் பகுதிகளில் நிர்வாகம் செய்யமுடியாத நிலையில் பல கோயில்கள் இருக்கின்றன. பண வசதி இன்மையே முக்கிய காரணம். இவற்றை இனங்கண்டு, அவற்றின் பராமரிப்புக்கு வழி செய்தல், கிரியைகளைப் போற்ற உதவுதல்.

4) வசதி படைத்த கோயில்கள் பல்வேறு வசதிகளை இந்துக்களுக்கு வழங்கமுடியும். கூட்டுப்பிரார்த்தனை, சமய வகுப்புக்கள், சமயச் சொற்பொழிவுகள், புராண படலம், குருபூசைகள், சமய தீட்சை முதலியவற்றோடு வசதி குறைந்தவர்களின் படிப்புக்கும், வாழ்வுக்கும் பொருள் உதவி செய்து வழிசெய்ய முடியும்.

5) கோயில்களில் சமயக் கிரியைகளையும், சடங்குகளையும் செய்வதற்கு ஏற்படும் செலவுகளை வசதிபடைத்த கோயில்கள் குறைப்பதன் மூலம் இவ்வநுட்டானங்களை ஊக்குவிக்க முடியும்.

## 8) சமய தாபனங்கள் :

1) ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு திருக்கோயில்களும், பாடசாலைகளும், மன்றங்களும் உள்ளபோது அவற்றின் செயற்பாட்டை ஒன்றிணைக்கும் தேவை ஏற்படுகிறது. இதனால் இவற்றின் விபரங்கள் தொகுக்கப்படல் ஒன்றிணைப்புக்கு அதி முக்கியமானதாகும். இதனை இந்து மாமன்றம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

2) இவ்விணைப்பினைக் கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம் எனப் படிமுறையே வளர்த்துச் செல்லல் பொருத்தமாகும். அத்தகைய வளர்நிலையே இந்து மாமன்றத்தின் உறுப்பினருக்குப் பூரணமான பிரதி நிதித்துவத்தை அளிப்பதாகும்.

3) கோயிலுக்கும், இந்து மாமன்றத்திற்கும் இடையில் வரும் ஏணி ஏற்றத்தில் :

பாடசாலை அதிபர்.
பாடசாலை ஆசிரியர்.
தொண்டர்கள்.
கோயில் தர்மகர்த்தாக்கள்.
ஏனைய மன்ற உறுப்பினர்கள்.

உள்ளடங்கிய பொது அமைப்பு ஒன்று வரவேற்கத்தக்கது. இப்பொது அமைப்புகள் ஒன்றிணைந்து பல காரியங்களைச் சாதிக்க முடியும்.

4) சைவத் தொண்டர் / இந்து வாலிபர் / இந்து மகளிர் அணிகள்.

## 9) சமய தாபனங்கள் பங்களிப்பு :

1) வசதியற்ற கோயில்களுக்கு வசதி செய்து தரல்.

2) பாடசாலை சமயக் கல்வியிற் கவனம் செலுத்துதல், பிரச்சினைகளைத் தீர்த்தல்.

3) தொண்டர் ஆசிரியர்களைத் தெரிந்து, நியமித்து வேதனந்தருதல்.

4) ஞாயிறு சமய பாடசாலைகளை ஒழுங்கு செய்தல்.

5) கூட்டுப் பிரார்த்தனைகளைக் கோயில்களில் வெள்ளி தோறும் நடத்துவித்தல்.

6) கோயில்களில், மன்றங்களில் மாதாந்தம் சமயச் சொற் பொழிவுகள்.

7) சமய மாநாடுகளை ஆண்டுதோறும் ஒழுங்கு செய்தல்.

8) குருபூசைகள், சமயக் கிரியைகள் முதலியவற்றைக் கவனித்தல்.

9) புராண படலம் .

10) பொது விடங்களில் மட்டுமின்றி வீடுகளிலும் சமய நிகழ்ச்சிகளை நடத்துதல்.

11) வசதி குறைந்த நிறுவனங்களுக்கும், பிரதேசங்களுக்கும் உதவிகள் செய்தல்.

12) புறசமயப் பிரசாரத்தைத் தோற்கடித்து இந்துக்களைத் தம் சமயத்தை அறிந்து போற்றும் வகையில் அணிசேர்த்துச் செயற்படவைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) சமய தீட்சையை ஊக்குவித்தல்.

14) எழுத்தறிவற்ற வளர்ந்தோருக்கான வகுப்புக்கள் நடத்துதல்.

## 10) வெகுசனத் தொடர்பு :

1) இந்து சமய, கலாசாரம் தொடர்பாக நிகழ்ச்சிகள் வெகுசனத் தொடர்பு சாதனங்களில் கூடுவதற்கு வழி செய்தல்.

2) வெகுசனத் தொடர்பு சாதனங்களில் சமய சிந்தனைகளை எளிதாக அமைத்தல்.

3) சமயப் பிரசாரகர் நிகழ்ச்சிகளுக்குப் போதிய விளம்பரம் வழங்கல்.

4) சிரமதான நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல்.

5) நூல் நிலைய வசதிகளை ஏற்படுத்தல்.

## 11) கல்வி நிதி :

1) இந்து கல்வி கலாசார பாதுகாப்பு நிதியம் நிறுவல், மாதவருவாயில் இரண்டு வீதத்தை அதற்கு அளிக்க ஊக்குவித்தல்.

2) சங்கங்கள் மூலம் நிதி சேகரித்தல்.

3) வசதிபடைத்த இந்துப் பெருமக்களின் உதவியைப் பெறுதல்.

## 12) சமூகமயம் :

1) அநாதை / வயோதிபர் / இல்லங்கள்.

2) அநாதை / வறிய பிள்ளைகளுக்கு இலவச கல்வி / மருத்துவ வசதிகள்.

3) ஏழை, அநாதை, வயோதிபர், அகதிகளைக் காத்து, வாழவைத்து சமயத்தைச் சமூகமயப்படுத்தல்.

4) வசதி படைத்த கோயில்கள், மன்றங்கள் போன்றவற்றைச் சமூகப்பிரச்சினைகளை அணுகச் செய்தல்.

## 13) அகில இலங்கை இந்து மாமன்றம் :

மாமன்றம் தன் யாப்பு விதிகளை முற்போந்தனவற்றைச் செயற்படுத்தும் நோக்குடன் மாற்றியமைத்தல் அவசியம்.

பொ. பூலோகசிங்கம்
(ஒப்பம்)
கல்விக்குழு தலைவர்

த.மனோகரன்.
(ஒப்பம்)
கல்விக்குழு அமைப்பாளர்

## கருத்தரங்கில் பங்கேற்றோர்

சுவாமி சம்பிராஜ்னானந்தா, பேராசிரியர் பொ. பூலோகசிங்கம், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை, கலாநிதி சோ. சண்முகசுந்தரன், திருவாளர்கள் : கு. குருசுவாமி, ந. மன்மதராஜன், ச. சரவணமுத்து, மா.செ. சுப்பையா, இ. சிவகுருநாதன், செ. சச்சிதானந்தசிவம், வே. பாலசுப்பிரமணியம், வீர. வேலாயுதன், மு. கந்தசுவாமி, சு. சிவப்பிரகாசம், கு. மகாலிங்கம், க. நீலகண்டன், சு. செல்லையா, டீ. ஆர். இராஜலிங்கம், சு. பாலசந்திரன், வி. மாரிமுத்து, நா. பொன்னையா, சிவபத்மயோகன், டி. மகேசன், பெ. பரமபாதன், வே. கார்த்திகேசு, சு. தியாகராஜா, கே. இராஜரட்ணம், எம். பூரணம், கே. ஸ்ரீநமசிவாயம், வி. சந்தனமுத்து, வீ. கதிரேசன், வே. மூர்த்தி, ச. செல்வகுமார், மு. சவுந்தர சண்முகநாதன், வை. வேலுப்பிள்ளை, சோ. ஞானப்பிரகாசம், கே.பி. சர்மா, ஆ. சிவராம், எஸ். ரமேஷ், மு. சுந்தரச் செல்வன், செ. கோ. சந்திரசேகரம், பி. எஸ். சிவஞானம், பி. மாமுண்டி, எஸ். ரவிசங்கர், சி.பி. விமல்சங்கர், எம். சரேஸ், எஸ். சதாசிவம், எம். மோகன், பி. கணநாதன், த. கனகரத்தினம், எ. விஜயரட்ணம் ஆ. தேவராசன், கே. திலீபன், எஸ். சிவநேசன், பி. சேகர், ஏ. இராசரத்தினம், ஏ. கருப்பழகி, பி. மாடசாமி, செ. ஜெ. வினோதரத்தினம், க.ப. சோமசுந்தரம், ஆர். சிவஞானசுந்தரம், ஆர். ஆர். ராமதாஸ், டி. மகாதேவன், வி. தங்கவேலு, பி. இரங்கநாதன், ப. தங்கவேலு, எம். காளிமுத்து, எஸ். குமாரன், தி. ச. மயில்வாகனம், பி.சி. சாமுவேல், என். மோகன், எ. இளங்கோவன், த. முகுந்தன், ஏ. பரசுராமன், எஸ்.ஸ்ரீகுமார், பி. சுப்பையா, கே. தங்கவேலு, கே. பெரியதம்பி, ஏ. கனகரத்தினம், எஸ். சிவானந்தன், ஆர். இராமகிருஷ்ணன், வி. சிவலிங்கம், அ. சங்கரன், வி. இராமையா, பி. இரகுநாதன், டி. தேவராஜா, ந. மகாதேவன், தி. மாணிக்கவாசகர், நா. சுப்பிரமணியன், த. மனோகரன்.

திருமதிகள் : சாந்தி நாவுக்கரசன், ரூபவதி சிவகுருநாதன், யோ. இராமநாதன், அ. மன்மதராஜன், தவலட்சுமி சிவகுருநாதன், கே. காங்கேயன், என். குமாரசாமி, வி. தம்பிராஜா, ஜெ. ஜெயராம், ஆர். எம். சந்திராவதி, சி. பாலச்சந்திரன்.

செல்விகள் : குந்தவி பாலச்சந்திரன், கே. ஜெயதேவா, நவமணி விஜயலட்சுமி, ஆர். சுபாஷினி, டி. தேவகி, என். சாந்தகுமாரி, அ. அமிர்தாம்பிகை, சே. நாகரத்தினம், ஜீ. ஸ்ரீபத்மநாதன், ஏ. அமிர்தலிங்கம், ஸ்ரீமதி நந்தனாதேவி, அ. அருட்சோதி, பொ. அருமைக்கிளி, எஸ். சுபலக்ஷ்மி, எஸ். மஞ்சுளாதேவி, கே. ரூபினி, பாலசாந்தினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்து சமய கல்வி வளர்ச்சியும் அதற்கு உதவிய பெரியார்களும் தாபனங்களும்

க. அருணாசலம்
முன்னாள் அதிபர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
செயலாளர், வடகிழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்க சம்மேளனம்

இலங்கையில் இந்துசமயக் கல்வி வரலாறு மிகப்பழமை வாய்ந்த ஒன்றாகும். இலங்கையில் வந்து முதல் குடியேறிய ஆரியர் இந்துக்களானதால் அதன் கால எல்லை ஆரியர் வருகை தொடக்கம் இன்று வரையும் நீண்டுள்ளது. காலத்துக்கு காலம் நடைபெற்ற தமிழ்நாட்டு படையெடுப்புகளுடன் வந்து குடியேறியவர்களாலும் தனிப்பட்ட முறையில் வந்த தமிழ் மக்களும் கல்வியில் கவனம் செலுத்தியதாக தெரிகிறது. அவர்கள் இங்கு கொண்டு வந்த கட்டிடக்கலை, ஓவியம் போன்ற கலைகள் சமய அடிப்படையிலேயே இருந்தன.

தமிழர் வடக்கே தனி இராச்சியம் அமைத்ததும் கல்விக்கு உகந்த இடம் அளித்தனர். செகராசசிங்கன், பரராசசிங்கன் போன்ற அரசர் காலத்தில் எழுந்த பலதரப்பட்ட நூல்கள் இதற்கு எடுத்துக்காட்டு. தமிழர் ஆட்சி மறைவுற்று அந்நியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது ஆட்சி நிலவிய காலத்தில் இந்து சமயக் கல்வி அரசியல் ஆதரவற்ற நிலையை அடைந்தது. போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை நிலைபெறச்செய்யும் நோக்குடன் தமது சமயத்தையும் மக்கள் மீது திணிக்க முற்பட்டனர். இந்த நோக்கத்துடன் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலிருந்த இந்துக் கோயில்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினர். ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் விதித்த சட்டங்கள் இந்து சமயத்தவர்களை துன்புறுத்துவதாயிருந்தன. இதனால் இந்து சமயக் கல்வி வளர்ச்சியில் இக்காலத்தை இருள் சூழ்ந்த காலம் எனலாம்.

ஆங்கிலேயர் ஒல்லாந்தரிடம் இருந்து ஆட்சியைப் பெற்றதும் இலங்கை மக்களின் நன்மதிப்பைப் பெற்று தமது ஆட்சியை நிலை பெறச் செய்யும் எண்ணத்துடன் பௌத்த, இந்து, கத்தோலிக்க சமயத்தவர்களது பொது வழிபாடுகளிற்கு எதிராக ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கினர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் இந்து சமய விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தாலும் இந்து மக்கள் தங்கள் சமய அனுட்டானங்களையும் வழிபாட்டு முறைகளையும் கைவிடவில்லை. அக்காலத்து கிறிஸ்தவ பாதிரிமாரது ஆவணங்களை நோக்கின் சைவ உற்சவ முறைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது புலனாகிறது.

திருமதி வின்சிலோ 1835 பதிப்பித்த அறிக்கை ஒன்றில் நல்லூர் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு அறிக்கையில் சைவர்களது விரதநாட்கள், பிரதான சமய நாட்கள் பற்றிய விபரங்கள் உண்டு. ஆனால் மக்களின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் காணப்படவில்லை.

இக்கால இந்துக்களின் கல்வி முறையை நோக்கின் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் ஆரம்பக் கல்வியும் குருசீட முறையில் உயர்கல்வியும் மாணவர்களுக்கு புகட்டப்பட்டன. இப்படியான குருசீட முறையில் கல்வி புகட்டிய தனிப்பட்ட கல்விமான்களுக்கே இந்து சமயக் கல்வி முற்றாக வீழ்ச்சியடையாமல் காப்பாற்றிய பெருமை சேர்கிறது.

கல்வி வரலாற்றிலே 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வேறு ஒரு மாற்றமும் காணப்பட்டது. ஆங்கிலேயரின் வருகையுடன் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் புரட்டஸ்தாந்து மத குருமார் பெருமளவில் வந்தனர். இவர்கள் இலங்கை மக்களுக்கு கல்வி அறிவு ஊட்டுவதில் பெரும் அக்கறை காட்டினார்கள். இதற்காக கல்வி நிலையங்களையும் அமைத்தனர். இவர்களுடைய உண்மை நோக்கம் மாணவர்கள் மூலம் மக்களை மதமாற்றுவதே.

அமெரிக்காவிலிருந்து வந்த மிசனரிமார்களே கல்வி வளர்ச்சியில் கூடிய ஆர்வம் காட்டினர். இவர்கள் வட்டுக்கோட்டையில் 1823ல் ஸ்தாபித்த செமினரி உயர்கல்விக் கழகமாக விளங்கிற்று. போதனையை தமிழிலும் ஆங்கிலத்திலும் நடாத்தி சமஸ்கிருதம், கிரேக்கம், தத்துவம், அளவையியல், கணிதம் வானசாஸ்திரம் விஞ்ஞானம் முதலிய பாடங்களை கற்பித்தனர்.



வெஸ்லியன் மிசன் திருச்சபை 1814ல் இங்கு வந்து யாழ்நகர், பருத்தித்துறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலக்கல்வி போதிக்கும் பாடசாலைகளைத் தாபித்தார்கள். 1916ல் வந்த சேர்ச் மிசன் வேறு இடங்களில் கல்வி நிலையங்களை அமைத்தனர். தமிழ் மக்கள் கல்வி பெறும் நோக்கத்துடன் இத்தாபனங்களில் சேர்ந்தார்கள். ஆனால் அங்கு அவர்களைக் காத்திருந்தது மதமாற்றம்.

1833க்கு பின்னர் ஆங்கிலக் கல்வி பெற கிறிஸ்தவ கல்விநிலையங்களை அணுகியவர்களின் தொகை பெருகிற்று. அந்த வருடம் வந்த கோல்புறூக் குழுவினர் அரசாங்க பரிபாலன முறையில் மாற்றத்தை சிபாரிசு செய்து கீழ்மட்ட அரசபதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்கினர். இவற்றை பெற ஆங்கில அறிவு அவசியமாயிற்று. ஆங்கிலம் படிப்பதற்கு மிசனரிமார்களின் கல்வி தாபனங்களை நாடவேண்டி இருந்தது. அப்படியானவர்கள் எல்லாம் மதமாற்றம் அடைய வேண்டி இருந்தது.

**ஆறுமுகநாவலர்.**

இந்த மதமாற்றத்திற்கு எதிராக நாவலர் கிளர்ந்தெழுந்தார். சைவ மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். மிஷனரிமாரின் மதப்பரம்பல் வேகத்தை பெருமளவு தணித்து தமிழர் மத்தியில் சைவ பாரம்பரியத்தை நிலைநாட்டினார். ஆறுமுக நாவலர் வெஸ்லியன் பாடசாலையில் கல்விகற்று அங்கு சிலகாலம் ஆசிரியராகவும் பணியாற்றியவர். ஆகவே நாவலர் கிறிஸ்தவ சமயம் பரப்ப மிசனரிமார் உபயோகித்த முறைகளை நன்கு அறிந்தவர். அதே முறைகளை கிறிஸ்தவ சமயம் பரவுதலை தடுத்து சைவ மக்கள் தங்கள் பண்பாட்டின் சிறப்பை உணர வைப்பதற்கு பின்பற்றினார். கிறிஸ்தவர் போன்று சைவசமயத்தின் பெருமையை வலியுறுத்துவதற்கு பிரசங்க முறையை அறிமுகம் செய்தார். சமயப் பிரசங்கங்களை வண்ணை வைத்தீஸ்வரக் கோயிலில் ஆரம்பித்து மற்றைய இடங்களிலும் செய்தார். வசன நடையை மேற்கொண்டு சமய நூல்களை எழுதித் தங்கள் சமயத்து உண்மை நூல் கருத்துக்களை சைவ மக்கள் எளிதில் விளங்கச் செய்தார்.

அவர் செய்த பெரிய தொண்டு கல்வித் தொண்டே. கல்விக் கொள்கை வகுத்து மாணவர்க்காகிய பால பாடங்கள் போன்ற நூல்களை இயற்றி ஒரு மாதிரிப் பாடசாலையையும் ஆரம்பித்தார். அவர் 1852ம் ஆண்டிலே தாபித்த வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை அக்காலத்தில் ஒரு மாதிரிப் பாடசாலையாக அமைந்தது. அது இன்றும் இயங்குகிறது.

இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் தனிய கற்பித்து வந்த காலத்தில் சமய நூல்களை இன்றியமையாதனவாக்கி பண்பாட்டு பேணலுக்கு நாவலர் வழியமைத்தார். நாவலர் கல்வியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தினார் என்றால் மிகையாகாது.

ஆங்கிலக் கல்வி கற்பதற்கு சைவ சூழலில் பாடசாலைகளை அமைக்க வேண்டிய அவசியத்தை அக்காலத்து பெரியார்க்கு உணர்த்துவதற்காக தானே ஆங்கிலம் மூலம் கல்விகற்பிக்கும் ஒரு பாடசாலையை வண்ணார்பண்ணையில் நிறுவினார்.

**சைவ பரிபாலன சபை:-**

நாவலர் தாபித்த ஆங்கில பாடசாலை சில வருடங்களின் பின் மூட வேண்டியதாயிற்று. நாவலரின் மறுமலர்ச்சி இயக்கத்தினால் உந்தப்பட்ட சில பெரியார்கள் 1888ல் வண்ணார் பண்ணையில் சைவசமய பரிபாலன சபையை அமைத்தனர். இச்சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று ஆங்கிலக் கல்லூரி ஒன்று அமைப்பதாகும். இந்தக் கல்லூரியை அமைப்பதில் பல இன்னல்களை அவர்கள் எதிர் நோக்க வேண்டி இருந்ததெனினும் அவர்கள் முயற்சி தோல்வியடைய வில்லை. அச்சபை அமைத்தவர்களில் ஒருவரான அப்புக்காத்து சி. நாகலிங்கம் ஏற்கனவே ஒரு பாடசாலையை நடாத்தி வந்தார். இந்தப் பாடசாலையை வண்ணார்பண்ணைக்கு மாற்றி, அதன் மாணவர்களை முதல் மாணவராகக் கொண்டு 1890ம் ஆண்டு இந்து உயர்தரப் பாடசாலையை நிறுவினார். சைவபரிபாலன சபையினர் இப்பாடசாலையை நிறுவுவதில் கூட்டாக இயங்கினாலும் அவர்களுள் முன்னின்று உழைத்தவர் நாகலிங்கம் அவர்களே. அவரே கல்லூரியின் முதல் முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டார். அவருக்குப் பக்கபலமாக இருந்தவர் பசுபதிச் செட்டியார். கல்லூரி ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நெவின்ஸ் செல்வத்துரை அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் கிறிஸ்தவ ராயிருந்தாலும் சைவ பண்பாட்டுக்கு மாறானவரல்லர். அக்காலத்துச் சிறந்த கல்விமான்களில் ஒருவர். வடமாகாணத்தின் கல்வியை உயரிய நிலை அடைய உதவிய வட மாகாண ஆசிரிய சங்கத்தின் முதல் தலைவராக நீண்டகாலமாகப் பணியாற்றியவர். ஆகவே அக்காலத்துக் கல்வியின் நுணுக்கங்களை எல்லாம் அறிந்திருந்தார். முகாமையாளர் நாகலிங்கமும் அதிபர் நெவின்ஸ் செல்வத்துரையும் இணைந்து செயலாற்றி இக்கல்லூரிக்குப் பலமான அத்திவாரம் இட்டனர். அதன் காரணமாகவே இன்று பௌத்தருக்கும் ஆனந்தாக் கல்லூரி முதன்மை பெற்று விளங்குவது போல் இந்துக்களுக்கு யாழ் இந்துக் கல்லூரி முன்னணியில் உள்ளது.

**தனிநபர் நிறுவிய இந்துப் பாடசாலைகள்**

யாழ் இந்து உயர்தரப் பாடசாலையை நிறுவிய சைவப் பரிபாலன சபையினர், வடமாகாணத்தில் மற்றைய இடங்களிலும் சைவச் சூழலில் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவ தங்களது பத்திரிகையாகிய இந்து சாதனம் மூலம் ஆங்காங்குள்ள பெரியார்க்கு ஊக்கம் அளித்தனர். இதற்காக ஒரு இயக்கமே ஆரம்பித்தார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். இதனாலேயே அந்தக் காலப் பகுதியில் யாழ்குடாநாட்டில் வெவ்வேறு பகுதிகளில் பல தனிநபர்களால் ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பமாகின. சுழிபுரத்தில் 1876ல் கனகரத்தின முதலியார் ஆரம்பித்த பாடசாலை சிலவருடங்களில் ஆங்கிலப் பாடசாலையாக மாறிற்று. 1892ல் வெளிவந்த இந்து சாதனத்தில் ஒரு இதழ் சுழிபுரத்தில் கனகரத்தின முதலியார் நடாத்தும் ஆங்கில பாடசாலை அரசு உதவிக்கு அங்கீகாரம் பெற்றுள்ளது என்று அறிவித்தது. அரசின் அங்கீகாரத்தைப் பெற்ற முதல் இந்துப் பாடசாலை இதுவே. இதுதான் இன்றைய விக்ரோறியா கல்லூரி. இன்னும் பல்வேறு பகுதிகளில் விளங்கும் பெரியார்கள் கூட்டாக இயங்கி பாடசாலைகளை அமைத்தனர். 1894ம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று கந்தரோடையில் கந்தையா உபாத்தியாயர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியையும் அளவெட்டியில் அருணாசலம் எனும் பெரியார் அருணோதயக் கல்லூரியையும் வட்டுக் கோட்டையில் அம்பலவாண நாவலர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியையும் ஒரே நாளில் ஆரம்பித்தது இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, மகாஜனாக் கல்லூரி 1910ல் பாவலர் துரையப்பா பிள்ளையால் தெல்லிப்பளையில் ஆரம்பிக்கப்பட்டது. இதேபோல் மற்றைய இடங்களில் - புலோலியில், கரவெட்டியில், சாவகச் சேரியில், மானிப்பாயில், உரும்பிராயில், காரைநகரில், புத்தூரில் இன்னும் வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் இன்று சிறந்த கல்லூரிகளாக விளங்குகின்றன.

## இராமநாதன்

இந்துக்கல்வி சிறப்புற தொண்டாற்றியவர்களில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் முக்கிய இடம் பெறுகிறார். சட்ட சபையில் கிறித்தவ பாடசாலைகளில் இந்து மாணவர்க்கு கிறித்தவம் கட்டாயமாக கற்பிப்பதற்கு எதிராக குரல் கொடுத்தவர் அவரே. 1890களில் எழுந்த பௌத்த கல்வி மறுமலர்ச்சி இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்து கொழும்பில் பௌத்த, இந்து பாடசாலை அமைப்பதற்கும் முற்பட்டார். இந்த முயற்சி கைகூடவில்லை.

தன்னுடைய செலவிலேயே இரண்டு பெரிய கல்வி கழகங்களை ஆரம்பித்தார். அவற்றில் ஒன்று தான் இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி. மற்றையது சைவப் பெண்கள் கல்லூரிக்கென மருதனாமடத்தில் கட்டப்பட்ட இராமநாதன் கல்லூரியாகும்.

## சைவவித்தியா விருத்திசங்கம்

1890-1920 ஆண்டுகளில் தாபித்த இந்துக் கல்வி நிலையங்கள் மக்கள் தொகை பெருகிவரும் யாழ்ப்பாண குடாநாட்டுக்கு போதியனவாக இல்லை. பெரிய இந்துக் கல்லூரிகளிலுள்ள விடுதிகளுக்கு கிராமங்களில் இருப்பவர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்ப அவர்களிடம் பணவசதியும் இருக்கவில்லை. ஆகவே கிராமங்கள்தோறும் ஆங்கில பாடசாலைகள் அமைக்க வேண்டியிருந்தது. சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் வைத்திலிங்கம் துரைசாமி முதலிய தலைவர்கள் இதனையிட்டு சிந்தனை செய்து செயலாற்ற 1923ம் ஆண்டில் சைவ விருத்தியா சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இச்சங்கத்திலே வடகீழ் மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்யும் சைவப்பெரியார்கள் இடம் பெற்றனர். இவர்கள் முயற்சியால் வடமாகாணத்தில் பல பாகங்களிலும் ஆங்கிலப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இந்த பாடசாலைகள் நிறுவியதில் கூடிய பங்களிப்பைச் செய்தவர், சங்கத்தின் நீண்டகால செயலாளரும் சட்ட சபை அங்கத்தவராய் இருந்த இந்து போட் இராசரத்தினம் அவர்களே. அந்நேரம் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே அரசாங்க உதவி கிடைத்து வந்தது. எனவே காலத்துக்கு காலம் சைவப் பெருங்குடி மக்களின் நன்கொடைகள், ஆசிரியர்களது காணிக்கைகள் போன்றவற்றின் துணையுடன் நிலம்வாங்கி பாடசாலைகள் கட்டிடங்கள் ஏற்படுத்தி ஆசிரியர் நியமனங்கள் செய்து புதிய பாடசாலைகளை மூலைமுடுக்குகள் எல்லாம் ஆரம்பித்தார். இவரின் சேவையின் பயனாக அரசினர் பாடசாலைகளை பொறுப்பேற்கும் பொழுது வித்தியா விருத்திச் சங்கம் 182 பாடசாலைகளை கையளித்தது. இச்சங்கத்தினர் ஒரு ஆசிரிய கலாசாலையையும் நிறுவி தங்கள் பாடசாலைகளில் சேவை செய்வதற்கு ஆசிரியர்க்கு பயிற்சி கொடுத்தனர்..

## இராமகிருஷ்ண சங்கம்

இராமகிருஷ்ண சங்கத்தின் சேவையின் பெரும்பயனைப் பெற்றது கிழக்கு மாகாணமே. அங்கு பலபாடசாலைகள் இயங்கி வந்தாலும் 20ம் நூற்றாண்டு ஆரம்பம் வரையில் அவைகள் எல்லாம் கிறிஸ்தவர்களாலேயே நடாத்தப்பட்டன. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் பண்டிதர் பூபாலபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை போன்ற கல்விமான்கள் தனிப்பட்ட முறையில் பாடங்கள் சொல்லிக் கொடுத்து இந்த சமய உயர்கல்விக்கு ஊக்கம் அளித்தனர். இந்த நூற்றாண்டு ஆரம்பம் தொடக்கம் சில தனி நபர்களும் சில இந்து பாடசாலைகளை நிறுவினர். இவர்களுள் குறிப்பிடத் தக்க, சேவை செய்தவர் முதலியார் கா. வ. மார்க்கண்டனாரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள். முதலியார் மார்க்கண்டன் நிறுவிய பாடசாலைகளுள் காரைதீவு, மண்டூர், ஆரைப்பற்றை, ஆணைப்பந்தி பாடசாலைகளும் அடங்கும் என்பர். கல்லடி உப்போடையில் கல்விக்காக ஒரு கட்டிடமும் அவர் அமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணத்தில் சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ண சங்கம் மூலம் தனது கல்விச்சேவையை ஆரம்பித்ததும், மார்க்கண்டன் தனது பாடசாலைகளை அவரிடம் உவந்து அளித்ததுடன் அவருக்கு வேண்டிய வேறு உதவிகளும் செய்தார்.

சுவாமி விபுலானந்தர் நூலாசிரியராகவும், உரை ஆசிரியராகவும், அண்ணாமலை இலங்கை பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகவுமிருந்து செய்த கல்விப் பணிகள் அனைத்தும் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். கிழக்கு மாகாணத்தில் இவர் புகழ் சாற்றி நிற்பன, இவர் அமைத்த திருகோணமலை இந்துக்கல்லூரியும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயமுமே.

## கொழும்பில் இந்து சமயக்கல்லூரி

கொழும்பிலே இந்து சமயச் சூழலில் மாணவர்க்கு கல்வி புகட்ட வேண்டும் என்று முதல் உணர்ந்தவர்கள் கொழும்பு விவேகானந்த சபையினரே. வடகொழும்பில் 1926ம் ஆண்டு விவேகானந்த வித்தியாலயம் இவர்களால் நிறுவப்பட்டது.

1930ம் ஆண்டு கொழும்பு சைவமங்கையர் கழகம் கொழும்பிலுள்ள சைவப் பெண்கள் தங்கள் சமயச் சூழலில் கல்வி பெற சைவ மகளிர் கல்லூரியை தாபித்தனர்.

மற்றையவர் 1950ம் ஆண்டு மட்டும் அப்பொழுது கொழும்பில் காணப்படும் பொதுப்பாடசாலைகளில் கல்வி கற்றனர். 1943 கன்னங்கரா அறிக்கையைத் தொடர்ந்து கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் தமிழர்களைச் சிந்திக்கச் செய்தன. முக்கியமாக தேசிய மொழிகள் மூலம் கல்வி கற்றல் தேசிய பாடசாலைகளின் தமிழ்ப்பிரிவுக்கு தமிழ் மாணவரை ஒதுக்கின. இப்பிரிவுகளுக்கு தமிழ் மாணவர்கள் அனுமதி பெறுதல் இலகுவான காரியமாக இருக்கவில்லை. இந்த நிலையை அறிந்த கொழும்பு சைவப்பெரியார் சிலர் ஒன்றுசேர்ந்து கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கத்தை (Colombo Hindu Educational Society) அமைத்தனர். இந்தச் சங்கத்தின் தலைவர் அக்கால நீதியரசராய் சேவையாற்றிய திரு. சி. நாகலிங்கம் அவர்கள். மற்றைய உத்தியோகர் சேர் கந்தையா வயித்தியநாதன், மூதவை உறுப்பினர் பெரிய சுந்தரம், திரு. S. மகாதேவன், மு. சச்சிதானந்தன் ஆவர்.

இவர்களும் இச்சங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களும் கொழும்பில் செல்வாக்கு உடையதாக இருந்ததினாலும் ஒன்று சேர்ந்து இயங்கியதனாலும், தன்னலமற்றசேவையாளராக இருந்ததினாலும், வேண்டிய நிலம், பணம் ஆகியவற்றைப்பெற்று பம்பலப்பிட்டியில் பிரதம பாடசாலையையும், இரத்மலானையில் இடைநிலைப் பாடசாலையையும் நிறுவினர். இரு பாடசாலைகளும் விரைவில் வளர்ச்சியடைந்து கொழும்பிலுள்ள மற்றைய பெரிய பாடசாலைகளின் தரத்துக்கு உயர்ந்தன.

இரத்மலானையில் அமைந்த கல்லூரி 1958, 1983 நிகழ்வுகளினால் பாதிக்கப்பட்டதினால் அதன் வளர்ச்சி தடைப்பட்டது. ஆனால் பம்பலப்பிட்டியில் பிள்ளையார் பாடசாலை என்ற பெயரில் நிறுவின கல்விக்கழகம் இன்று இந்துக்கல்லூரி கொழும்பு என்ற பெயரில் தேசியக் கல்லூரியாக பூரண கல்லூரியாக வளர்ச்சிபெற்று தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கிறது.

1960ம் ஆண்டு உதவி பெறும் பாடசாலைகளை அரசு ஏற்கும் பொழுது இந்து மக்கள் தங்கள் சமயச் சூழலில் கல்விகற்று தங்கள் பண்பாட்டை பேணக்கூடிய வகையில் இந்துப் பாடசாலைகள் அமைத்துச் சேவை செய்த பெரியோர்க்கும், தாபனங்களுக்கும் இந்து மக்கள் என்றென்றும் கடப்பாடுடையவர்களாக இருக்க வேண்டும்.

## உதவிய நூல்கள்

இலங்கையின் சைவக் கல்வியின் எழுச்சி -வ. ஆறுமுகம்
திரு. க. அருமைநாயகத்தின் கட்டுரைகள் இந்து சாதனம்
கொழும்பு இந்துக் கல்லூரி சஞ்சிகைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்துமாமன்றப் பணிகளும் எதிர்பார்ப்புகளும்

***இரா. யசோதரன்***
*G.A.Q. மாணவன்*
*பேராதனை ,ஆரையம்பதி.*

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் பொருட்டும் இந்துக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு, சமய நெறி ஆகியவைகளைப் பேணிப் பாதுகாத்தற் பொருட்டும் சமய அபிவிருத்திக்கு உதவும் பொருட்டும் இலங்கையின் தலை நகரமான கொழும்பில் இயங்கி வருவது அகில இலங்கை இந்துமா மன்றமாகும். 18 ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலர் அவர்கள் சைவ பாலன சபையொன்றை ஏற்படுத்தி இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் அரும் பெரும் பணியாற்றி சைவத்தை வளர்த்து வந்தார். பல நூல்களையும் சஞ்சிகைகளையும் அச்சுவாகனமேற்றி வெளியீட்டு வந்தார். அவர் மேற்கொண்ட இன்னோரன்ன பணிகளை கொழும்பு அகில இலங்கை இந்துமா மன்றமும் பின்பற்றி சமய சமூக நலன்களைப் பேணுவது வரவேற்கத்தக்கது.

கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றம் பல்வேறு துறைகளில் செயல்பட்டு சைவநெறியைப் பேணிப் பாதுகாக்கவும் வளர்க்கவும் அமைக்கப்பட்டது. இந்து சமய சித்தாந்த சாஸ்திர நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும், பன்னிரு திருமுறைகளையும், சமய தத்துவார்த்த நூல்களையும், சஞ்சிகைகளையும், இலக்கிய இலக்கண, சோதிட நூல்களையும் மக்களின் பயன் கருதி வெளியிட வேண்டியவர்களாக இந்து மாமன்றத்தினர் உள்ளனர். தற்காலத்தில் அரிய சமய நூல்களைப் பெறுதல் முயற்கொம்பாக உள்ளது. ஆலயங்களுக்கும் மாணவர்களுக்கும் பயனளிக்க கூடிய திருவாதவூரடிகள் புராணம் கிஞ்சித்தும் கிடைக்க முடியாத நிலையில் உள்ளது. இதே போன்று பல நூல்கள் கிடைப்பதரிதாகும். இக்குறைபாடுகளையெல்லாம் இந்து மாமன்றம் தீர்த்து வைக்குமெனக் கருதுகின்றோம்.

சில ஆலயங்கள் வியாபார நிலையமாகவும் களியாட்ட மேடைகளாகவும் இயங்குவனவாகக் காணப்படுகின்றன. இன்னும் ஆலயங்களில் நிர்வாக சீர்கேடுகளும் நிதி மோசடிகளும் காணப்படுகின்றன. ஆலய நடைமுறைகள் தடம் புரள்கின்றன. ஆலய சீர்கேடுகளை களைய இம்மன்றம் முன்னின்று சட்டமொன்றைக் கொண்டு வருதல் உகந்ததாகும்.

க.பொ.த. சா/த பரீட்சைக்கு சமயபாடம் ஒரு கட்டாய பாடமாக இருந்த பொழுது மாணவர்களிடையே சமய அறிவும் உணர்ச்சியும் தென்பட்டன. ஆனால் சமய பாடம் கட்டாயம் என்பதிலிருந்து நீக்கப் பெற்ற பின்பு மாணவர்களிடையே சமயக் கல்வி குன்றி விட்டது. எனவே சமய பாடத்தை மீண்டும் ஒரு கட்டாய பாடமாக்க வேண்டிய கடப்பாடு இம்மன்றத்திற்கு உண்டு.

இந்துக்களின் ஆலயங்களிலும் கட்டிடங்களிலும் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டிருப்பதை நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால் இந்நிலைமை பிற மத கட்டிடங்களில் காண்பது அரிது. அன்று திருக்கேதீஸ்வரத்தை நிறுவுவதில் சைவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அனுபவித்த துன்பம் துயர்களை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். இன்று அந்த இடத்தை நாம் அண்மிக்கக் கூட முடியாது. இத்தகைய துர்ப்பாக்கிய நிலையை அகற்றி இந்துக்கள் சுதந்திரமாக தங்கள் கோயில்களில் வழிபாடு செய்ய அகில இலங்கை இந்துமா மன்றம் முன்வர வேண்டும்.

பிற இடங்களில் இருந்து வருகை தரும் சமயப் பெரியார்கள் சிவாச்சாரியார்கள், சமய முன்னோடிகள் ஆகியோர் தங்கிச் செல்ல இம்மன்றத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கித் தருமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இராமகிருஷ்ண மிஷன் மடம் ஒன்று தான் இடவசதியளித்து வருகின்றது. இது போதமானதல்ல இதேபோன்று மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களிலும் இவ்வாறான கட்டிட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது இந்துக்களுக்குப் பெரு நன்மையாக அமைய முடியும்.

நமது நாட்டில் நடைபெறும் அநர்த்தங்கள் காரணமாக ஆயிரக்கணக்கான இந்துக்கள் அகதிகளாகி அனுபவிக்கும் இன்னல்கள் சொல்லுந்தரமன்று. பிற மத நிறுவனங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை போன்று நமது மத ஸ்தாபனங்கள் செயல்படுவதைக் காண முடியவில்லை. இந்துக்களுக்காகச் செயல்படும் ஒரு நிறுவனம் அகில இலங்கை இந்துமா மன்றமேயாகும். இம்மன்றமும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதே சமயம் இந்துக்கள் மதம் மாறாமல் தடுப்பதற்குரிய பணியை முன்னெடுத்துச் செல்லும் இவர்களது கடமையாகும்.

இந்து சமய சிவாச்சாரியார்கள் சுகயீனமுறும் காலத்தில் அரச வைத்தியசாலைகளில் இவர்களுக்குத் தனியான தங்கு வசதி செய்து கொடுக்க முயல வேண்டும்.

சமய புண்ணிய காலங்களை இருவேறு பஞ்சாங்கங்கள் வேறு வேறு காலங்களைச் சுட்டுகின்றன. இதனால் இந்துக்கள் தடுமாற்றம் அடைகிறார்கள். சிவராத்திரி தினத்தை சில காலங்களில் இருவேறு தினத்தை காட்டி விடுகின்றனர் பிற மதத்தவருக்கு இது ஒரு கேலிக்கூத்தாக அமைகிறது. பௌத்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு தலைமைப் பீடம் இருப்பது போல் எமது இந்து சமயத்துக்கு ஒரு தனியான தலைமைப்பீடமொன்றை ஏற்படுத்த முன்வரவேண்டும் அப்போதுதான் எமக்குள் ஏற்படும் இத்தகைய கருத்து முரண்பாடுகளைச் சிக்கல்களை களைய ஏதுவாக அமையும்.

இவ்வாறாக மேற்கண்ட விடயத் தானங்களினை கருத்தில் கொண்டு செயற்பட்டால் அகில இலங்கை இந்துமா மன்றம் சர்வதேச ரீதியில் பேரெழுச்சி கொண்ட ஒரு பலமான ஒரு நிறுவனமாக விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(குறிப்பு: *பல்கலைக்கழக மாணவர்களிடையே மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றப் பணிகள்

## ஒரு பாடசாலை மாணவியின் எதிர்பார்ப்பில்

எஸ்.சிவப்பிரியா
ஆண்டு 13, பலாங்கொடை தமிழ் மகாவித்தியாலயம்

(குறிப்பு: *பாடசாலை மாணவர்களிடையே மாமன்றம் நடத்திய கட்டுரை போட்டியில் முதலிடம் பெறும் கட்டுரை*)

சற்றேறக்குறைய ஐயாயிரம் வருடகாலம் என்று ஆராய்ச்சியாளர்களால் கணிப்பிடப்பெற்ற வரலாற்றை உடையது இந்துமதம். அதன் நீண்ட காலப் பாதையில் சந்தித்த மேடு பள்ளங்களும் ஏற்றத்தாழ்வுகளும் அநேகம் விரிந்து, பரந்து, செழித்துக் கிளைத்த காலமும் உண்டு. ஒடுங்கிச் சிறுத்து, வரண்டு, மலைத்த காலமும் உண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் ஒருவரோ பலரோ, ஒரு ஸ்தாபனமோ சங்கமோ மன்றமோ எதுவோ ஒன்றால் அது மீண்டும் தளிர் விட்டுத் துளிர்த்துத் தன் தனிப்பெருமையை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. வரலாற்றின் ஏடுகளை நாம் புரட்டிப் பார்த்தால் அவை நமக்கு எடுத்துக் கூறும் உண்மைகளில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அதன் விளைவுகளெல்லாம் நன்கு புலனாகின்றன இந்த வகையில் இப்போது சமயங்களில் பெயரால் அமைக்கப்படும் மன்றங்களும் தமக்கென பற்பல லட்சியங்களைக் கொண்டே செயற்படுகின்றன. இவ்வடிப்படையில் ஏனைய மன்றங்களை விட சமய ரீதியான மன்றங்களுக்கு வேறோர் கடமைப்பாடும் உண்டு. ஆம், ஏனெனில் மக்களின் ஆன்மிகம், லௌகிகம் என்ற இரு பெரும் பகுதிகளையும் ஒரே நேரத்தில் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் உயர்விற்கான வழி வகுக்கவும் வேண்டியதாகியுள்ளது. ஆகவே தான் நாம் இந்துமா மன்றத்தின் பணிகளைச் சமயப்பணி, சமுதாயப்பணி என்ற இரு பெரும் கிளைகளாகப் பிரித்துப் பார்க்க வேண்டியவர்களாகின்றோம்.

இன்று எல்லா உலக நாடுகளிலும் இலங்கையில் மாத்திரமே பாடசாலைப் பிள்ளைகளுக்கு சமயபாடம் பாடசாலையில் கற்பிக்கப்படுகிறது. எனவே பல பரீட்சைகள், போட்டிகள் போன்ற ஊக்குவிப்புக்களைச் செய்தவன் மூலம் பள்ளிக் குழந்தைகளிடையே ஒரு ஆர்வத்தினையும் அதன் மூலம் வளமான சமய அறிவினையும் ஏற்படுத்தலாம். தற்போது இவ்வாறான பல்வேறு பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. சில நிறுவனங்கள் இப்பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றன. ஆயினும், இங்கு சிறு குறைபாடொன்றினை நாம் காணக்கூடியதாயுள்ளது. நடத்தப்படும் சகல பரீட்சைகளும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை மாத்திரமே நடத்தப்படுகின்றன. உயர்தர மாணவர்களுக்கு எவ்விதமான ஊக்குவிப்புப் பரீட்சைகளும் காண்பதற்கில்லை. தமது வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமானதோர் தறுவாயில் இருப்பவர்கள் உயர்தர மாணவர்களே. ஆகவே சமய அறிவு அவர்களுக்கு அவசியம் என்ற வகையிலும் சமயம் ஒரு வாழ்க்கைத் தத்துவம் என்ற வகையிலும் அவர்களுக்கு ஊக்குவிப்புக்கள் மிக அவசியமானதாகும்.

பாமர மக்களின் பல்வகைப்பட்ட வழிபாட்டு முறை அந்நிய மதத்தவர்களை இதுவா இந்து மதம் என்று திகைக்க வைக்கக் கூடிய அளவிற்கும் கேலிசெய்யும் அளவிற்கும் வைத்துள்ளமையை நாம் அறிவோம். இதற்குக் காரணம், அறியாமையே ஆகும். ஆம் எமது சமுதாயத்தில் காணப்படும் மூடநம்பிக்கைகளையே அவர்கள் பரிகசிக்கின்றனர். பாமரர்கள் ஆராய்ந்து பாராமல் எதையும் அப்படியே ஏற்றுக் கொள்பவர்கள். இத்தகைய அறியாமையே பல மூடநம்பிக்கைகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது. இதனைத் தீர்க்க வேண்டுமாயின் பரந்த அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு சமூகப் பணி ஒன்றை மட்டுமே இலக்காகக் கொண்டு பாரிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். மக்களின் அறியாமையினை நீக்கி அறிவொளி பிரகாசிக்கும் புதியதோர் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். இந்துக்களின் விசேட நிகழ்வுகள் யாவும் குறிக்கப்பட்ட வரையறைக்குள்ளாக அமையும் போது அதன் பெருமை மென்மேலும் மேலோங்க வழியுண்டு.

"இவ்வுலகில் எத்தனையோ ஆன்மாக்கள் தோன்றுகின்றன. ஆனால் எல்லா ஆன்மாக்களும் மகாத்மாக்களாவதில்லை. எவனொருவனது இதயம் ஏழைகளுக்காக இரத்தக் கண்ணீர் வடிக்கின்றதோ, அவனையே நான் மகாத்மா என்கிறேன்." என்று கூறினார் சுவாமி விவேகானந்தர். " மக்கள் பணியே மகேசன் பணி ' என்று ஒரு வாசகம் அடிக்கடி எமது செவிகளில் விழுகின்றது. இவையெல்லாம் வெறும் வாசகங்கள் மட்டுமல்ல. இன்பத்திலாகட்டும், துன்பத்திலாகட்டும். சமயமானது என்னை எந்த நேரத்திலும் பின் தொடரும் என்று ஒருவன் நினைக்கும் போது, அந்நினைப்பைச் செயற்படுத்த வேண்டியது இந்து மன்றங்களின் செயற்பாடாகின்றது. மக்களின் பொருளாதாரச் சமூகத் தேவைகள் மக்கள் மட்டத்திலேயே அணுகப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒருவனது தேவையின் பரிமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவனால் புரிந்து கொள்ளப்படாமலேயே போய்விடும். எம்மைக் கண்காணிக்க மட்டுமல்ல, கவனிக்கவும் அமைப்பு ஒன்றுண்டு என்ற சிந்தனை மக்கள் மனதில் வேரூன்ற வேண்டும். பிரதேச ரீதியாகக் கிளை நிறுவனங்களாக இயங்கக் கூடிய அமைப்புக்களில் பிரதேசத்தின் சகல இந்து மக்களும் அங்கத்தவராக இருக்க வேண்டும். ஏனைய மத அமைப்புக்களைப் போல் அங்கத்தவர்கள் குறிப்பிட்ட சந்தாவைச் செலுத்தும் போது கிளை நிலையங்களின் அங்கத்தவர் என்ற வகையில் தனி மனிதர் ஒவ்வொருவருமே மன்றத்தின் கட்டுக் கோப்பிற்குள் தன்னையறியாமலேயே தன்னை அடக்கி விடுகிறார்கள். அதேபோல் வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்துமா மன்றமானது ஒருவனுக்குப் பற்றுக்கோடாகவும், பண்பாட்டு அரணாகவும், தோள்கொடுக்கும் நண்பனாகவும் இருக்க வேண்டும்.

சமூக நலன், நீதி, நேர்மை என்றெல்லாம் முழங்கும் பலர், நேருக்கு நேர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் போது பல்வேறு தற்காப்பு உத்திகளைக் கையாண்டு களத்திலிருந்து வெளியேறி விடுகின்றனர். சந்தர்ப்ப வாதமே அவர்கள் நீதியாக அமைந்து விடுகின்றது. மேடையில் முழங்கியவர்கள் வீட்டிற்குள் ஒழித்து கொள்கின்றனர். சிலர் திடீரென கட்சி மாறிவிடுகின்றனர். உண்மையான சமூக நலன் நோக்குனரில் ஒரு சிலர் மாத்திரமே சுயநலக் கலப்பற்ற கடமையுணர்வுடன் பிரச்சினையினை அணுகுகின்றனர். இவ்வாறான வாய்ப்பேச்சு வீரர்களைப் பின்பற்றும் மக்கள் அநேகர் பெரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகின்றனர். திடீரென நடுவழியில் கைவிடப்பட்டு வேறு பாதையில் இட்டுச் செல்லப்படுகின்றனர். பாமரர்களின் இவ்வறியாமையினைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஒரு சாரார் அவர்களை ஏமாற்றித் தம் வழிக்குத் திசை திருப்பிக் கொள்கின்றனர். அதாவது, மதமாற்றம் செய்து விடுகின்றனர். அறியாமையினால் மறைக்கப்பட்டுக் கிடக்கும் பாமர மக்கள், இந்து, மதத்தின் நிகரற்ற பெருமையினை உணராது அவர்களது பேச்சிலும் நடையுடை பாவனைகளிலும் கவரப்பட்டு விடுகின்றனர். "எல்லா வழிகளும் என்னை அடைவனவே" என பகவான் கிருஷ்ணர் கீதையில் கூறியுள்ளார் தான். ஆனாலும் சென்று கொண்டிருந்த ஒரு வழியை விட்டு விட்டு வேறோர் வழியில் செல்லத் தலைப்பட்டால், தொடர்ந்து போவது எவ்வாறு என்ற ஓர் திகைப்பு ஏற்படுவதுடன் மதங்களை அவமதிக்கும் ஒரு செயலாகவும் ஆகி விடும். எங்கள் மதத்தின் அருமை பெருமைகளை மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் பிரசங்கங்களோ, உறுதிமிக்கதோர் உயர்நிறுவனமோ எம்மத்தியில் காண்பதற்கில்லை. இவர்களை மதமாற்றம் செய்தால் இவர்களது மேலிடம் எம்மைத் தட்டிக் கேட்கும் என்ற ஒரு பயம் பிறருக்கு உண்டாகத்தக்க வகையில் ஓர் உறுதியும் ஸ்திரத் தன்மையும், உத்வேகமும் கொண்டதோர் அமைப்பு எமது சமுதாயத்திற்கு மிக அவசியத் தேவையாக உள்ளது. இந்து மாமன்றத்தின் கிளைகள் நாடளாவிய ரீதியில் நிழல் தரும் ஆல விருட்சமாகப் பணியாற்ற வேண்டும்.

மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் உதவி புரிதலும், வழிகாட்டலும் இந்துமதம் என்ற பெரும் சமயத்தின் அங்கத்தவர்களை ஓர் அமைப்பின் கீழ் பேணுதல், மக்கள் தொகையின் குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், நடுத்தர வயதினர், முதியோர் போன்ற சகலரும் அவரவர் மட்டத்தில் பயன் பெறக் கூடிய வகையில் பல்வேறு சேவைகளைச் செய்தல் போன்ற யாவும் மன்றத்தின் தன்னமலற்ற பணிகளுள் அடங்க வேண்டும். சமயத்தினைப் பாதுகாக்கும் ஓர் ஒப்பற்ற அன்னையாக மட்டுமல்லாது, மனித சமுதாயம் என்ற ரீதியில் எவ்விதப் பேத வேற்றுமைகளும் பாராட்டாது ஓடோடி வந்து சேவை செய்யும் தெய்வம் போலவும் செயற்பட வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவையல்லவா! தன்னலமற்ற சேவையினை மனித சமுதாயத்திற்காக அர்ப்பணிப்பதே இந்து மதம் என அனைவரும் உணர, மன்றத்தின் பணிகளுக்கும் மகத்தான முயற்சிகளுக்கும் நாமும் முன்னின்று உழைத்து இந்து மதத்தைப் பேணுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்றத்தின் குருகுலப் பணி


**எம். ஆர். ராஜ்மோகன்**

செயலாளர் - மாமன்ற சமய விவகார, விழாக்கள், குருகுலம் குழு

பொதுச் செயலாளர் - சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்




*"தேவாலயம் தோறும் வித்தியாசாலை தாபித்து அதிலே பிள்ளைகளுக்குக் கருவி நூல்களையும் வேதம் ஆகமம் முதலிய நூல்களையும் கிரமப்படியே கற்பித்தல் வேண்டும். கற்ற பிள்ளைகளைப் பரீக்ஷித்து அவர்களுக்குள்ளே அதி சமர்த்தர்களாயும் நல்லொழுக்கமும் பக்தியும் உடையவர்களாயும் உள்ளவர்களையே தேவாலயத்துக்கு ஆசாரியர் முதலாயினோராக நியமித்தல் வேண்டும்.* இது ஆறுமுக நாவலர் பெருமானின் திருவாக்கும் இலட்சியமுமாகும். 1955 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று 40 ஆண்டுகளுக்கு மேல் ஈழத் திருநாட்டின் தலைசிறந்த இந்து ஸ்தாபனமாகத் திகழும் எமது அகில இலங்கை மாமன்றம் நாவலர் பெருமானின் மேற்கண்ட இலட்சியத்தை ஆரம்பகாலத்திலிருந்தே தலையாய நோக்காகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளது.

ஐம்பதுகளில் பல்வேறு சைவ அன்பர்கள் சுன்னாகத்திலும் யாழ்ப்பாணத்திலும் புங்குடுதீவிலும் அர்ச்சகர் பாடசாலைகளைத் தாபித்து நடத்தி வந்தார்கள். இவை யாவும் காலகதியில் மாணவர்கள் தொகை சுருங்கச் சுருங்க தொழிற்படாது நின்று விட்டது. இவற்றை ஆராய்ந்து அறிந்தபின், சீரான குருகுலக்கல்வி அமைதியும், புனிதமும் நிறைந்த ஆலயத்தின் அண்மையில் குருகுலக்கல்வி நிலையம் அமைவது பொருத்தமானதென மாமன்றம் அறிந்துகொண்டது. இளமைப் பருவத்திலேயே உள்ளத்தை ஒருவழிப்படுத்தவும் உலக விவகாரங்களில் மனதைச் செலுத்தாமல் கல்வியிலேயே கருத்தைச் செலுத்தவும் அமைதியான சூழ்நிலையும் தெய்வீக சுற்றாடலும் வேண்டுமெனவும் மாமன்றம் ஆலோசித்து மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயமைந்துள்ள திருக்கேதீச்சரமே "சிவானந்த குருகுலம்" ஸ்தாபிப்பதற்கு மிகமிகப் பொருத்தமானதெனத் தீர்மானிக்கப்பட்டது.

1961 ஆம் ஆண்டில் குருகுலம் தாபிப்பதற்கு வேண்டிய நிலத்தைத் திருக்கேதீச்சர திருப்பணிசபையார் ஒழுங்கு செய்து கொடுத்தனர். இக்காலகட்டத்தில் இந்து மாமன்றத்தின் தலைவராயும் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைக்கும் தலைவராக இருந்து தொண்டாற்றிய சைவப் பெரியார் சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியின் பயனாக ஜூலை 1961இல் ரூ 30,000/- செலவில் சிவானந்த குருகுலமானது கட்டிட வசதிகளும் தளபாடம் மற்றும் இந்து சமய கலாசார முறைப்படி வாழக்கூடிய விடுதிகளும் கொண்டதாக அமைக்கப்பட்டது.

சிவானந்த குருகுல திறப்பு விழா பிலவ வருடம் தைமாதம் 13ம் திகதி (26-1-1962) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இத்தாபனத்திற்கு சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்கள் முகாமைக்காரராகவும் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாகவும் சிவஸ்ரீ. கி. நாராயண சாஸ்திரிகள் அவர்கள் உப பிரதம குருவாகவும் உயர்திரு. கொக்குவில் த. குமாரசாமிப் புலவர் அவர்கள் தமிழ்ப் பயிற்சி ஆசிரியராகவும் சுன்னாகம் திரு. த. சிவலிங்கம் அவர்கள் காரியதரிசியாகவும் கடமையாற்றினர். ஆரம்பத்தில் சுமார் 12 மாணவர்கள் குருகுலத்தில் கல்வி கற்றனர். இக் குருகுலத்தின் மாணவர்களுக்கு கல்வி, உணவு, உடை, தங்குமிடம் யாவும் இலவசமாகவே கொடுக்கப்பட்டன. மாணவரொருவருக்கு வருடம் ஒன்றிற்கு ரூ. 600 அளவில் செலவாகியது. மாமன்றத்தின் வேண்டுகோளையடுத்து இந்து சமய ஆலோசனை சபை வருடாந்தம் ரூ 1000 மட்டும் கொடுத்துதவியது.

சிவானந்த குருகுலத்தில் பிராமணப் பிள்ளைகளுக்கு 5 வருடப்பயிற்சியும் பின்னர் கோயில்களில் இருவருட பயிற்சியுமாக 7 வருடத்தின் பின்னர் அவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு ஆசாரிய அபிடேகம் செய்யப்படுவதாகவும் நிர்ணயிக்கப் பட்டிருந்தது. எனினும் 1965 ஆண்டளவில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் வகுப்புகள் நிறுத்தப்பட்டன. பின்னர் 1966 வருட ஆரம்பத்தில் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு வகுப்புகள் நடைபெற்றன. மாமன்றத்தின் தொடர்ந்த வேண்டுகோளுக்கு செவிசாய்த்த அரசாங்கம் 1967 ஆம் ஆண்டிலிருந்து இந் நன்முயற்சிக்கு ரூ 2400 நிதி உதவியாக வருடாந்தம் வழங்கி வரலாயிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டில் தொடர்ந்து குருகுலக்கல்வியைச் சிறப்பாகக் கற்பிற்பதற்கு இந்தியாவிலிருந்து ஒரு தகுதிவாய்ந்த வேதாகம ஆசிரியரை அழைப்பித்து குருகுலத்தில் நியமிப்பதற்கும் பிராமணப்பிள்ளைகளையும் சைவப் பிள்ளைகளையும் இரு வகுப்பாக நடத்த நியமிப்பதற்கும் மாமன்றம் நடவடிக்கைகளை எடுத்தது. இதே காலகட்டத்தில் கொழும்பு ஆலயங்களின் தர்மகர்த்தாக்களை அழைத்து மாமன்றம் 1968 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்திய கூட்டத்தில் குருகுலத்திலிருந்து பட்டம் பெறும் குருமார்களையே இக் கோயில்களில் இனிமேல் பூசகர்களாக நியமிப்பதெனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது இவ்வாறிருக்க 1970 ஆம் ஆண்டளவில் அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோயில் சைவ மடத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அரும்பெரும் முயற்சியால் சைவக் குருக்கள் பயிற்சி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுமேலும் விஸ்தரிக்கப்பட்டு வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியிலும் பண்டத்தரிப்பிலும் நடைபெற்று வந்தது. இங்கு 1971 ஆம் ஆண்டளவில் சுமார் 30 சைவப் பிள்ளைகள் பயிற்சி பெற்று வந்ததாக அறிக்கைகளில் அறியக்கிடக்கிறது.

28–1–1972 இல் அழகொல்லைப் பிள்ளையார், ஆலயத்திற்கு அருகாமையில், அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் முதல் முறையாக அகில இலங்கை இந்து மாமன்றக் குரு குலப் பயிற்சி நிலையத்தில் பயிற்றுவிக்கப்பட்ட எட்டு மாணவர்களுக்கு ஆசாரிய அபிஷேகம் நடைபெற்றது. இவர்களுக்கு சைவகுருகுலப் பயிற்சி அளித்த பிரதம குருவான உயர்திரு. செ. சோமாஸ்கந்த குருக்கள் அவர்கள் இவ் அபிஷேகத்தைச் செய்து வைத்தார். பிற்பாடு யாழ்ப்பாணத்தில் சைவக் குருமார் பயிற்சி நிலையமொன்று யாழ். வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகாமையில் 1972 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது.

இதே சமயம் திருக்கேதீச்சரத்தில் இயங்கி வந்த சிவானந்த குருகுலத்தில் பிள்ளைகள் தொகை குறைந்து கொண்டு போனதால் 1973ஆம் ஆண்டளவில் மூடப்பட நேர்ந்தது துர்ப்பாக்கிய சம்பவமாகும். இவ்வாறு குருகுலம் மூடப்பட்டதால் மனம்வருந்திய சைவ அன்பர்கள் பலர் கூடி ஆலோசித்து, சிவாசாரியர்களாகப் பயிற்சி பெறும் மாணவர்களையும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியர்களையும் யாழ் மற்றும் பல்வேறு பிரதேசங்களிலிருந்து திருக்கேதீச்சரத்துக்குக் கொண்டு சென்று சிவானந்த குருகுலத்தை நடத்துவதை விட இருசாராரும் அதிகமாக இருக்கும் யாழ்ப்பாணத்திலேயே சிவானந்த குருகுலத்தை நடத்தலாம் என மாமன்றத்திற்கு ஆலோசனை தெரிவித்தனர். இவ் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட பின் சிவானந்த குருகுலத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கென அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவுடன் பரிபாலன சபை ஒன்று 1974ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு இச் சிவானந்த குருகுலப் பரிபாலன சபை இந்த இறை சேவையைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

ஆரம்பத்தில் வண்ணை வரதராஜப் பெருமாள் கோவிலிலும் அடுத்து வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலும் இடையில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் மண்டபத்திலும் பின்னர் நல்லை ஆதீனத்தின் ஒரு கட்டிடத்திலும் வகுப்புகள் ஆரம்ப காலத்தில் நடத்தப்பட்டு வந்தன. ஆரம்ப வருடங்களில் 40 க்கு மேற்பட்ட மாணவர்கள் இக் கல்வி நிலையத்தில் கற்று வந்தனர். யாழ் சிவானந்த குருகுலத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா யாழ் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 2–8–1975 அன்று கோலாகலமாக நடைபெற்றது. இரண்டாவது ஆண்டு விழா 24–7–1976 இல் நடைபெற்றது.

1976 இல் திரு. பேரம்பலச் செட்டியார் சுப்பிரமணியச் செட்டியார் அவர்களால் குருகுலப்பாடசாலைக் கட்டிடம் அமைப்பதற்காக யாழ் கடைச்சாமி ஒழுங்கை 33/1 இலக்கமுடைய காணியில் 3 3/4 பரப்பு நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டது. இக் காலகட்டத்தில் சுமார் 64 மாணவர்கள் குருகுலத்தில் பயின்று வந்தனர். அத்துடன் கல்வி நிலையத்தின் பாடங்களுக்கு மேலதிகமா செயன்முறைப்பயிற்சி என்ற முறையில் மாணவர்கள் பல்வேறு கோவில் உற்சவங்கள் கும்பாபிஷேகங்கள் போன்றவற்றில் கலந்து கொண்டு சாதனைப் பயிற்சி பெறும் வாய்ப்பும் பெற்றார்கள். மேலும் சைவ அன்பர்கள் பலர் செய்த பெருமுயற்சியின் பயனாக குருகுலத்திற்கெனப் பெறப்பட்ட காணியில் கட்டிமொன்றை கட்டுவதற்கென வைபவ ரீதியாக அடிக்கல் நாட்டுவிழா 1977 ஏப்ரல் மாதம் 3 ம் திகதி அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு.வீ.சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதே காலகட்டத்தில் குருகுல நிர்வாகத்தைத் திறமையாக நடத்துமுகமாக சிவானந்த குருகுல பரிபாலன சபை தனியான ஸ்தாபனமாகக் கருதப்பட்டு மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன் சிவானந்த குருகுல பரிபாலன சபை அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றாக நிதி அமைச்சரினால் 11.10.1977 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும் தொடர்ந்தும் மாமன்றத்தின் மூலம் பெறும் உதவித் தொகை மூலமே குருகுலம் தொடர்ந்தும் நடக்கலாயிற்று. இவ்விபரம் 77–78 குருகுல பரிபாலனசபை கணக்கறிக்கையில் மாமன்ற உதவித் தொகை ரூ 10,980/– என்றும் இதர வரவுகள் ரூ 834/– என்றும் பதிவு செய்யப்பட்டிருப்பதிலிருந்து அறியக் கூடியதாகவிருக்கிறது.

சிவானந்த குருகுலத்திற்கான கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு திறப்பு விழாவானது சரியாக இற்றைக்கு 15 வருடத்திற்கு முன்பு மாமன்ற தலைமைக்கட்டிடத் திறப்பு விழா நடக்கும் இதே சித்திரை மாதத்தில், 9.5.1981 சனிக்கிழமையன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. அதிசயத்தக்க ஒற்றுமையென்பது எனது அபிப்பிராயமாகும். இத் திறப்பு விழா அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது இதன் சிறப்பம்சமாகும்.

குருகுலம் தொடர்ந்து இறையருளாலும் சைவ அன்பர்களின் பேராதரவினாலும் சிறப்பாக வளர்ந்து வந்தது. 82– 84 காலப்பகுதியில் பிரம்மஸ்ரீ இ. சதாசிவசர்மா அவர்களும் பிரம்மஸ்ரீ என். சிவராம கிருஷ்ண சாஸ்திரிகளும் கல்வி கற்பித்தனர். தொடர்ந்து வந்த வருடங்களில் வகுப்புகள் விரிவுபடுத்தப்பட்டு தினசரி வகுப்புகளாகவும் வார இறுதி வகுப்புகளாகவும் நடைபெற்றன. தினசரி விரிவுரைகள் இரண்டு பிரிவுகளாகவும் வார இறுதி விரிவுரைகள் மூன்று பிரிவுகளாகவும் வகுக்கப்பட்டிருந்தன. மொத்தம் 43 மாணவர்கள் 1986–87 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்விகற்று வந்தனர். பாடத்திட்டங்கள் பேராசிரியர் சிவஸ்ரீ க. கைலாசநாதக் குருக்களினதும் குருகுல வித்துவ சபையினதும் ஆலோசனைக்கமைய அமைக்கப்பட்டன. வகுப்புகள், பிரவேச வகுப்பு, அர்ச்சகர்சாரியர் வகுப்பு, ஸ்நபனாசாரியர் வகுப்பு, உத்ஸவாசாரியார் வகுப்பு எனத் தரம்பிரிக்கப்பட்டு வேதம், ஆகமம், சமஸ்கிருத பாஷை, திருமுறை பொது அறிவு, சைவசித்தாந்தம், தமிழ்ப்பாசை, சதானா பாடம், மகோற்ச பத்திகள், சமஸ்கிருத இலக்கணம், புராணப்படலம், சிற்பசித்த கலைகள், சமஸ்கிருத இலக்கியம் முதலியன வெவ்வேறு தரங்களுக்கான பாடல்களாகக் கற்பிக்கப்பட்டு ஒரு பூரணமான கல்வியினைப் பெறும் வாய்ப்பை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற்படுத்தப்பட்டது.

இதே காலகட்டத்தில் அரசாங்கத்திலிருந்து குருகுலங்களைப் பராமரிப்பதற்கென இந்து மாமன்றத்திற்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை 1986 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டது. முயற்சிகள் பல செய்தும் அவையனைத்தும் கிணற்றில் போட்ட கல் போலாகின. ஆயினும் மாமன்றம் முடிந்த அளவில் தொடர்ந்தும் சிவானந்த குருகுலத்திற்கான உதவிகளைச் செய்து வந்தது. ஆயினும் தொடர்ந்து வந்த வருடங்களில் நாட்டு நிலைமைகள் தலைகீழாக மாறத் தொடங்கியதிலிருந்து குருகுலத்தைச் சீராக நடத்த முடியாத நிலைக்கு மாமன்றமும் சிவானந்த குருகுல பரிபாலனசபையும் தள்ளப்பட்டன.

தொடர்ந்து வந்த பிரச்சினைகளினால் சிவானந்த குருகுலத்திற்கும் மாமன்றத்திற்கும் இருந்து வந்த தொடர்புகளும் சீரற்றுப் போய் முற்றாய்த் தூண்டிக்கப்பட்டன. மீண்டும் பல அன்பர்கள் மேற்கொண்ட முயற்சியினால் சிவானந்த குருகுலத்திற்கான உதவியைத் தொடர்ந்து வழங்க முயற்சிகள் 1988 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. உதவிகள் மீண்டும் தொடர்ந்தன. இவ்வேளை இந்து குருமார் பயிற்சி நிதியம் ஒன்று மாமன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பத்தொகையாக ரூ 100,000/– நிரந்தர வைப்பிலிடப்பட்டது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதான நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ள ஆறு விடயங்களில் பின்வரும் இரு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1) இந்து தர்ம அறிவையும் சாதனையையும் விருத்தி செய்தல்

2) இந்து சமய அர்ச்சகர்களுக்கு வேதாகம தத்துவ சாத்திர அறிவும் பயிற்சியும் அளிக்கும் பொருட்டு சமய சாத்திரக் கல்லூரி நிறுவுதல்.

மேற்கண்ட பிரதான நோக்கங்களின் அடிப்படையில் சமய விவகாரங்கள், விழாக்கள், குருகுலம் குழுவின் பணிகள் என மாமன்ற அமைப்பு விதிகளில் குறிப்பிடப்பட்ட வகையில் குருகுலம் சம்பந்தப்பட்ட பகுதியை ஒருமுறை பார்ப்போம்.

i) யாழ்ப்பாணத்திலுள்ள சிவானந்த குருகுலமுகாமைத்துவ சபையுடனான கலந்தாலோசனையுடன் குருகுலத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ii) பேரவை தீர்மானிக்கின்ற முறையில் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் குருகுலங்களைத் தாபித்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

iii) குருகுலங்கள் முகாமை செய்யப்படுதலையும் குருகுலங்களில் பயிற்சிகள் வழங்கப்படுவதையும் மொத்தத்தில் மேற்பார்வை செய்தல்.

vi) குரு குலங்களின் கணக்குகளைப் பரிசீலனை செய்தலும் மாமன்றத்தினால் குருகுலங்களுக்கு அனுப்பப்படும் பணங்கள் குருகுலங்களின் அதிகப்பட்ச நன்மைக்குப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தலும்.

குருகுலக் குழுவிடம் மாமன்றம் சுமத்தியிருக்கும் இப்பாரிய பணியின் அடிப்படையில் நாட்டின் நானா பகுதிகளிலும் குரு குலங்களை அமைத்து இச் சிவசேவையை சிறப்புற செய்ய வேண்டும் என்ற உத்வேதத்துடன் செயற்பட்டு வருகிறோம். இதுகாலும் நாம் பராமரித்து வந்த குருகுலங்களில் பயின்றோர் எமது நாட்டில் மட்டுமன்றி, கடல்கடந்து சிங்கப்பூர் மலேசியா, இங்கிலாந்து, மொறீசியஸ், கனடா, போன்ற தேசங்களிலும் சிவாசாரியர்களாகச் செயலாற்றிவருகிறார்கள் என்பதை அறியும் போது மனம் பெருமிதமடைகிறது. எனினும் எம் தாய்த்திருநாட்டின் நிலை சாணேற முழம் சறுக்கும் நிலையிலிருந்து படுபாதாளத்தில் தலைகீழாக வீழ்ந்து கொண்டிருக்கும் பயங்கர காலகட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. இந்நிலையில் உடனடி சமூகப்பணிகளிலேயே மாமன்றம் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருவதால் குருகுலப் பணிகளை உடனடியாகத் தொடரும் வாய்ப்புகள் அரிதாகவே இருக்கிறது. எவ்வாறேனும் இந்துக் குருமார் பயிற்சி நிதியமும் குருகுலத்திற்கென வருடாந்தம் மாமன்றம் ஒதுக்கி வரும் ரூ 12000/– உம் தொடர்ந்து வைப்பிலிடப்பட்டுள்ளன. மாமன்றக் கட்டிடப் பூர்த்தியடைந்திருக்கும் இப் பொன்னாளில் வருங்காலம் வளமாகி எமது சமயப்பணிகள் மேலும் தொடர எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சிவானந்த குருகுலம்

திருக்கேதீச்சரம்

## வேத சிவாகம பாடசாலையும் உயர்தரக் கல்லூரியும்

### நிர்வாகம்

பாடசாலைப் பிரதம குரு :

சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் (அச்சுவேலி)

உப அதிபர்கள்

(1) சமஸ்கிருத பயிற்சி :

சிவஸ்ரீ கி. நாராயண சாஸ்திரிகள்

(2) தமிழ் பயிற்சி:

திரு. த. குமாரசுவாமிப் புலவர் (கொக்குவில்)

குரு பஞ்சாயம் :

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

" சு. துரைச்சாமிக் குருக்கள்

" ச. கணபதீசுவரக் குருக்கள்

" இ. கு. பூரணானந்தேசுவரக் குருக்கள்

" ஐ. கைலாசநாதக் குருக்கள்

ஆலோசனைச் சபை :

சேர். கந்தையா வைத்தியநாதன்

குரு பஞ்சாங்கம்

உப அதிபர்கள்

செயலாளர் அகில இலங்கை இந்து மாமன்றம்

" திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

" சிவானந்த குருகுலம்

திரு. ச. சோமசுந்தரம்

டாக்டர் த. நல்லைநாதன்

திரு. ஆ. சின்னத்தம்பி

" மு. ஞானப்பிரகாசம்

" ச. அம்பிகைபாகன்

*முகாமைக்காரர் :* சேர். கந்தையா வைத்தியநாதன்

*செயலாளர்:* த. சிவலிங்கம்.

## பாட விதானம்

முதலாவது வகுப்பு

| பாடங்கள் | விபரம் |
|---|---|
| சமஸ்கிருதம் காவியம் | இராமோதந்தம் |
| இலக்கணம் | (அ) ஆரம்பத்திலிருந்து சர்வநாம சப்தம் முடிய<br>(ஆ) அமரம் முதற்காண்டம் காலவர்க்கம் முடியப் பெயர்ப் பிரிவுடன் |
| சுத்தியம் வேதம் | அபிநவபாடாவளி முதற்புத்தகம் புருஷ சூக்தம், புண்யாகம், பஞ்சகவ்வியம் |
| ஆகமம் | தீபாராதனை மந்திரங்கள்<br>(அ) ஆகமங்களின் பெயர், விக்கிநேசுவர பூஜை, பஞ்ச கவ்வியம், புண்ணிய யாகம்<br>(ஆ) விக்கிநேசுர தியானம், ஷோடச நாமம், அஷ்டோத்தரசத நாமம்,சுப்பிரமணிய தியானம், அஷ்டோத்தரசத நாமம், சிவ தியானம், தேவி தியானம். |

| பாடங்கள் | விபரம் |
|---|---|
| | (இ) யுகம், வருஷம், அயனம், இருது, திதி மாதம், வாரம் நக்ஷத்திரம், யோகம், கரணம் அறிதல் – சங்கற்பம். |
| | (ஈ) பஞ்சவிம்சதி ஸ்நபன மண்டபம் வரைதல் |
| தமிழ் இலக்கியம் | திருவாதவூரடிகள் புராணம் (செய்யுள்) திருக்குறள்–பாயிரம் 10 அதிகாரங்களும் |
| இலக்கணம் | இலக்கணச் சுருக்கம் |
| சமயபாடம் | இரண்டாம் சைவ வினாவிடை, இரண்டாம் சைவபோதம் உண்மைவிளக்கம், சைவப் பிரகாசிகை 4–ஆம் புத்தகம். |
| திருமுறைகள் | தேவாரம்–திருக்கேதீச்சரப் பதிகங்கள்.<br>திருகோணமலைப்பதிகம்<br>திருவாசகம்–திருச்சதகம்–முதற்பதிகம்<br>திருவிசைப்பா – 2<br>திருப்பல்லாண்டு – 2<br>பெரிய புராணம் – 2<br>திருப்புகழ் – 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது வகுப்பு

| பாடங்கள் | விபரம் | பாடங்கள் | விபரம் |
|---|---|---|---|
| **சமஸ்கிருதம்** | | **தமிழ்** | |
| காவியம் | நீதிசாரம் நூறு சுலோகம் | இலக்கியம் | கந்தப் புராணம் – நாடு நகரம், உற்பத்தி காண்டம்: நாவலர் நாலாம் பாலபாடம், திருக்குறள் அடுத்த 10அதிகாரங்கள். |
| இலக்கணம் | சர்வநாம சப்தத்திலிருந்து முற்றும்<br>அமரம் பிரதமகாண்டம் முற்றும் | இலக்கணம் | நன்னூல் – எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல் |
| சுத்தியம் | அபிநவபாடாவளி இரண்டாவது புத்தகம் கோஷசாந்தி | சமயப்பாடம் | திருவருட்பயன், சைவப் பிரகாசிகை 5 ஆம் புத்தகம் |
| வேதம் | பஞ்சாந்தி, சமகம், ஓஷதி சூக்தம் | | |
| ஆகமம் | (அ) இருபத்தைந்து மூர்த்திகளின் நாமம், நடேசர், சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, இலட்சுமி, ஸரஸ்வதி, இடபம், பலிபீடம், சண்டேசுரர் தியானங்கள், தர்ப்பலட்சணம் பவித்திரலட்சணம் முதலியவை.<br>(ஆ) நித்திய பூஜா விதி, காரணாகமம்: நித்தியார்ச்சனா விதி படலம்<br>(இ) அஷ்டோத்தர சத ஸ்நபன மண்டபம் வரைதல். | திருமுறைகள் | தேவாரம் – பஞ்சாக்கரப் பதிகங்கள் நான்கும்<br>திருவாசகம் – திருச்சதகம் – இரண்டாம் பதிகம்; திருப்பள்ளியெழுச்சி<br>திருவிசைப்பா – 2<br>திருப்பல்லாண்டு – 2<br>பெரிய புராணம் – 2<br>திருப்புகழ் – 2 |

## மூன்றாவது வகுப்பு

| பாடங்கள் | விபரம் | பாடங்கள் | விபரம் |
|---|---|---|---|
| **சமஸ்கிருதம்** | | **தமிழ்** | |
| காவியம் | இரகுவம்சம் முதல் இரண்டு சர்க்கம்<br>இதோபதேசம் மித்திரலாபம். | இலக்கியம் | கந்த புராணம் – அசுரகாண்டம், திருக்குறள் – துறவறவியல் 10 அதிகாரங்கள் |
| இலக்கணம் | தாது ரூபம்<br>அமரம் இரண்டாங்காண்டம் வைச்ய வாக்கம் வரை. | இலக்கணம் | நன்னூல் – மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் |
| சுத்தியம் | அபிநவபாடாவலி மூன்றாம் புத்தகம் | சமயப்பாடம் | சிவப்பிரகாசம் – முதல் ஐம்பது செய்யுள் |
| வேதம் | ஆயுஷ்யசூக்தம் உதகசாந்தி ஸ்ரீ ருத்திரம் | திருமுறைகள் | தேவாரம் – திருஞானசம்பந்த சுவாமிகள் முதற்பதிகம், திருநீற்றுப்பதிகம், திருநாவுக்கரசு சுவாமிகள் முதற்பதிகம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதற்பதிகம்,<br>திருவாசகம் – திருச்சதகம் – மூன்றாம் பதிகம்; திருவெம்பாவை<br>திருவிசைப்பா – 2<br>திருப்பல்லாண்டு – 2<br>பெரிய புராணம் –2<br>திருப்புகழ் – 2 |
| ஆகமம் | (அ) வீரபத்திரர், பத்திரகாளி நவக்கிரக தியானங்கள், பரிதி விஷ்டரலக்ஷணம் முதலியவை.<br>(ஆ) மகோற்சவபத்ததி<br>(இ) காரணாகமம் மகோற்சவ விதிபடலம்<br>(ஈ) சகஸ்ரகலச ஸ்நபன மண்டபம், வாஸ்து சாந்தி வரைதல்.<br>(உ) சைவ சிரார்த்த விதி | | |

## நான்காவது வகுப்பு

| பாடங்கள் | விபரம் | பாடங்கள் | விபரம் |
|---|---|---|---|
| **சமஸ்கிருதம்** | | | |
| காவியம் | இரகுவம்சம் மூன்றாம் நாலாம் சர்க்கம் ஹிதோபதேசம் சுகிர்பேதம். | ஆகமம் | (அ) பிரதிஷ்டை பூர்வாங்க கிரியைகள்<br>(ஆ) சாந்திஹோமம் மூர்த்திஹோமம் திசாஹோமம்<br>(இ) நவக்கிரக மண்டலம், கௌரீலதை மண்டலம் வரைதல்.<br>(ஈ) அகோர சிவாசார்யர் பூர்வம் சிவபூஜா விதி. |
| இலக்கணம் | சந்திகள்<br>அமரம் இரண்டாங் காண்டம் முடிய தசகுமார சரிதம் | | |
| சுத்தியம் | | | |
| வேதம் | தைத்திரீயம் 1 ஆம் பிரசனம்<br>ஸ்ரீ ருத்ரம், கும்பஸ்தாபனம் விசேஷ ஹோம மந்திரங்கள் வைதிக சிராத்த விதி. | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காவது வகுப்பு தொடர்ச்சி

| பாடங்கள் | விபரம் | பாடங்கள் | விபரம் |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| இலக்கியம் | கந்தபுராணம் – மகேந்திரகாண்டம் | | |
| | திருக்குறள் – பொருட்பால் 10 அதிகாரங்கள் | | திருவாசகம் – குழைத்த பத்து; சிவ புராணம் |
| இலக்கணம் | நன்னூல் பெயரியல் | | திருவிசைப்பா – 2 |
| சமய பாடம் | சிவப்பிரகாசம் – பிற்பகுதி ஐம்பது செய்யுள்கள். | | திருப்பல்லாண்டு – 2<br>பெரிய புராணம் – 2 |
| திருமுறைகள்: | தேவாரம் – மூவர் பாடல்களிலும் ஒவ்வொரு பதிகம். | | திருப்புகழ் – 2 |

## ஐந்தாவது வகுப்பு

| பாடங்கள் | விபரம் | பாடங்கள் | விபரம் |
|---|---|---|---|
| சமஸ்கிருதம் | | தமிழ் | |
| காவியம் | குமாரசம்பவம் முதல் மூன்று சர்க்கம், சமாசம், | இலக்கியம் | கந்தபுராணம் – தேவ காண்டம் |
| இலக்கணம் | தாதுரூபாவளி | | திருக்குறள் – பொருட்பால் அடுத்த பத்ததி காரங்கள் |
| வேதம் | நவக்ரஹ மந்திரம், வைதிக பூர்வம் ஸ்ரீ சூக்தம், இந்திராதிகளுக்கு மந்திரம் அக நிர்ணயம் | இலக்கணம் | நன்னூல் – வினையியல், இடையியல் |
| ஆகமம் | (அ) சிவலிங்கப்ரதிஷ்டாவிதி இரண்டாம் பாகம் காரணாகமம் மண்டப பூஜாவிதி படலம் | சமயப்பாடம் | முப்பொருள் விளக்கம் |
| | | திருமுறைகள்: | தேவாரம் – மூவர் பாடல்களில் ஒவ்வொரு பதிகம் |
| | | | திருவாசகம் – பிடித்த பத்து; கோயிற் திருப்பதிகம் |
| | (ஆ) யாகசாலாலக்ஷணம் குண்ட லக்ஷணம் | | திருவிசைப்பா – 2 |
| | (இ) தேவி விநாயக சுப்பிரமண்யர் முதலிய மூர்த்திகளின் மண்டப பூஜை. | | திருப்பல்லாண்டு – 2 |
| | (ஈ) பிரசாத சட்சுலோகி | | பெரியபுராணம் – 2 |
| | (உ) வாதுளாகமம் தத்துவ லக்ஷணம் மூர்த்தி லக்ஷணம் | | திருப்புகழ் – 2 |

### எல்லா வகுப்புகளுக்கும் சமமான பயிற்சிகள்

★

1. கிரியாவிளக்கம் முத்திராலக்ஷணம் வைதிகசந்தி சைவ சந்தி மண்டலங்கள் வரைதல், சதாசாரம், பவித்திரம், கூர்ச்சம் முதலிய முடிதல் முதலியவை.

2. தேவஸ்தானத்திற் சென்று மூர்த்திகளைச் சுத்தம் செய்தல், வேறு கைங்கரியங்கள், கோயிற் பழக்கங்கள் நேரிற் பயிற்சிமூலம் தெரிந்து கொள்ளல்.

3. ஆங்கில மொழி

ஆரம்ப பாடங்களும், உலக சரித்திரம், பொது அறிவு முதலியனவும் வசதிக்கேற்றபடி கற்பிக்கப்படும்;

### அறிக்கை

முதலாம் வகுப்பிற் சேர்வதற்குத் தகுதியற்ற மாணவர்களை ஆரம்ப வகுப்பிற் சேர்த்துக் கல்வி கற்பிக்க வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படும்.

பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அவரவர் தகுதிக் கேற்ற தராதரப்பத்திரம் வழங்கப்படும்.

### உயர்தர கல்லூரி

உயர்தர கல்லூரிக்குரிய இரண்டுவருடப் பாட விதானம் இதன் வேறாக வெளியிடப்படும்.

இப்பாடவிதானத்தில் சித்தாந்த சாத்திரங்கள், இந்து தத்துவ ஞானம், சகல வேதாகம கிரியை முறைகள், மேல் நாட்டு விஞ்ஞான அறிவு முதலியனவற்றிய பாடங்கள் இடம்பெறும்.

*(அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் 1966 ல் பிரசுரிக்கப்பட்ட இப்பாடவிதானத்தை சரித்திர முக்கியத்துவம் காரணமாகவும் எதிர்கால பயன்கருதியும் ஈண்டு பிரசுரிக்கின்றோம்.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேடுகளிலிருந்து

# நிழற் படங்கள்

1. மாமன்ற விழாக்களும் நிகழ்ச்சிகளும்
2. முன்னைநாள் தலைவர்கள்
3. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை
4. நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்
5. முகாமைப் பேரவை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன்ற விழாக்களும் நிகழ்ச்சிகளும் – நிழற் படங்கள்.



**08.09.1991** அன்று நடைபெற்ற பரத நாட்டிய நிகழ்ச்சியில் அன்றைய தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியம், மாண்பு மிகு பீ.பீ. தேவராஜ், நகரபிதா க. கணேசலிங்கம் திருமதி கணேசலிங்கம்.



அன்று நடன விருந்தளித்த செல்வி வானதி ஈசுபரதாசன்.



செல்வி ஈசுபரதாசன் தன்குரு திருமதி சிவகுமாரி ஞானேந்திரனும் ஏனைய கலைஞர்களுடனும்



மறைந்த தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியத்திற்கு அஞ்சலி செலுத்திய கூட்டத்தில் சுவாமிஜி ஆத்மகனானந்தஜி உரையாற்றுகிறார். மற்றும் முன்னைநாள் பிரதம நீதியரசர் சர்வானந்தா மாண்புமிகு இராச மனோகரி புலேந்திரன், திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம், திரு. மு. சிவசிதம்பரம், திரு.வி. கயிலாசபிள்ளை, வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை, பேராசிரியர் பி. பூலோகசிங்கம் ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.



நேபாளதினத்தையொட்டிஶ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்தில் நடந்த வைபவம் ஒன்றில் நேபாள நாட்டு பிரதிநிதி உரையாற்றுகின்றார். மாண்பு மிகு எம்.எஸ். செல்லச்சாமி, திரு தெ.ம. சுவாமிநாதன், சுவாமிஜி ஆத்மகனானந்தஜி, திரு. கயிலாசபிள்ளை, திரு. கந்தையா நீலகண்டன் ஆகியோர் நிற்கின்றனர்.



**24.04.93** அன்று இரண்டாம் கட்ட வேலைகளை ஆரம்பிக்குமுன் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் பிரதித் தலைவர் திரு. தவயோகராசா அன்னதானத்தை ஆரம்பித்து வைக்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25.04.93 அன்று இரண்டாம் கட்ட வேலை ஆரம்ப சாந்தி பூசையைச் சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.



அச்சாந்திப் பூசையில் பொங்கல் பொங்குகின்றது. திருமதி கயிலாசபிள்ளையும் திருமதி தனபாலாவும் மகிழ்வுடன் பொங்கலில் ஈடுபட்டுள்ளனர்.



கொழும்பு இந்து மகளிர் மன்றத்தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் மாமன்றத் தலைவரிடம் தமது மன்றத்தின் நிதி உதவியை அளிக்கின்றார்.



மங்கள விளக்குகள் ஏற்றப்படுகின்றன. திரு. க. பாலசுப்பிரமணியமும் திரு. எம். ஆர். இராஜ்மோகனும் தீபங்களை ஏற்றுகின்றனர்.



அன்றைய இந்து விவகார அமைச்சின் செயலாளர் திரு. க. தயாபரன் வளை வைக்கும் நிகழ்ச்சியில் பங்குபற்றுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



05.02.95 அன்று இறுதிக் கட்ட வேலைகளுக்கான சாந்திபூசை ஆரம்பிக்கு முன் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் பூசை நடக்கின்றது



ஆலயத்திலிருந்து ஆரம்பமாக இருக்கின்ற ஊர்வலத்தை திரு க. பாலசுப்பிரமணியம் ஒழுங்கு செய்கிறார்.



மாமன்றத்தை வந்தடைந்த ஊர்வலத்தில் திருவாளர்கள் மா. தவயோகராசா, சின்னத்துரை தனபாலா, கு. மகாலிங்கம், மு. கந்தசாமி, சுவாமிப் படங்களுடன்.



பூசை நடக்கின்றது.



சீ.ரீ.சீ. ஈகிள் நிறுவன இயக்குனர்கள் திருவாளர்கள் சந்திரா ஜயவர்த்தனாவும் தங்கக்கோனும், காளாஞ்சி பெறும் காட்சி.



பூசையில் கலந்து கொண்ட மகளிர் கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஞ்சி காமகோடி பீடாதிபதியிடம் ஆசிபெறும் திரு. நீலகண்டன், திரு. கயிலாசபிள்ளை, திரு. சத்தியமூர்த்தி.



காஞ்சி காமகோடி பீடாதிபதியுடன் திருவாளர்கள் நீலகண்டன், கயிலாசபிள்ளை, சென்னை சமயத் தொண்டர் திரு. எஸ். அருச்சுனராஜா.



மாமன்றத்தின் முதலாவது செய்தி மடலைத் தலைவரிடம் திரு. பொ. விமலேந்திரன் கையளிக்கின்றார்.



1995 செப்ரெம்பரில் மாமன்றத்திற்கு விஜயம் செய்த பேரூர் ஆதீனத் தலைவர், பழனி ஆதீனத் தலைவர் ஆகியோருடன் மாமன்றத்தில்.



06.12.95 அன்று நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பொருளாளர், தலைவர், பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர் ஆகியோர்.



ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பேராளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01.05.1996 அருள்மிகு சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்திலிருந்து ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜ பெருமான் மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்திற்கு ஊர்வலமாக வருகிறார்.



03.05.1996 இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் சிவாச்சாரியார்கள் கும்பத்தை ஊர்வலமாக எடுக்கும் காட்சி.



ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் நடக்கின்றது.



இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஆசி வழங்குகிறார். காஞ்சிபுரம் சிவஸ்ரீ இராயப்பு குருக்கள் சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள் ஆகியோர் அருகில் நிற்கிறார்கள்.



கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 ஆண்டுகளுக்கு முன் ......

திருக்கேதீச்சரத்தில்



சிவானந்த குருகுல வகுப்பு நடக்கும் காட்சி.



அன்று முற்றுப் பெறாத ஆலய முகப்புத் தோற்றம்.



சிவானந்த குருகுல மாணவர்களும் உப அதிபரும்



மாமன்றம் நடத்தி வந்த சிவானந்த குருகுலத்தின் முகப்புத் தோற்றம்.

30 ஆண்டுகளுக்கு முன் ......

மாமன்ற நிறைவேற்றுக்குழு



12.02.1966 இல் நடந்த நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
## PAST PRESIDENTS



C. Cumaraswamy



A. Sinnathamby



Sir Kanthiah
Vaithianathan



V. Balasubramaniam



Hon. Justice
V.Siva Subramaniam



Hon. Justice
P. Sriskandarajah



S. Somasunderam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
## HONORARY MEMBERS


Swamiji Atmagahandaji


V.T.V. Deivanayagampillai


Sivathamilz Selvi Thangammah Appacutty


A. Sinnathamby


A. Gunanayagam


D. Eassuwaren


D. M. Swaminathan


Hari Selvanathan


S. Sathiyamoorthy


V. Kailasapillai


M. Thavayogarajah


Kandiah Neelakandan


Sinnathurai Dhanabalaa


M. Kandasamy


Dr. Velauthapillai


T. Nadesan

**Note:** There are 17 honorary members. The photograph of Mr. S. K. Ganeshwaran is not received.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS

## BOARD OF TRUSTEES
## as at 3.5.1996



Mr. A. Gunanayagam
Chairman



Mr. Hari Selvanathan
Vice Chairman



Mr. V. Kailasapillai
(President ACHC)



Mr.M.Thavayogarajah
(Deputy PresidentACHC)



Mr.A.Sinnathamby



Mr. D. M
Swaminathan



Mr.D.Eassuwaren



Mr. S.Sathiyamoorthy



Mr. T. Nadesan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
## EXECUTIVE COMMITTEE 1995/96



V. Kailasapillai
President



M. Thavayogarajah
Deputy President &
Chairman, Fund raising
Committee



Kandiah Neelakandan
General Secretary and
Secretary Publications
Committee



Sivathamilzselvi
Thangammah
Appacutty
Vice President



M. Kandasamy
Treasurer



Dr. K. Velauthapillai
Vice President and
Chairman, Social Welfare
Committee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
## EXECUTIVE COMMITTEE 1995/96
## (Continued).



Sinnathurai Dhanabalaa
Vice President &
Chairman Buildings
Committee



S.Saravanamuttu
Vice President and
Chairman, Religious
Affairs, Gurukulam &
Celebrations Committee



S. Sivarasa PC
Vice President &
Chairman Constitutional
Amendments Committee



A. Karuppannapillai
Vice President



S. P. Samy
Vice President



E. Kandasamy
Vice President



N. Manmatharajah
Vice President



K.Rajapuvaneeswaran
Deputy Secretary and
Chairman, Membership
Committee



K. Mahalingam
Asst.Secretary ACHC. &
Secretary Building
Committee



D. Manoharan
Asst. Secretary ACHC
and Secretary Education
Committee



M.Sockalingam
Asst. Treasurer



N. Perinpanayagam
Secretary Fund raising
Committee



K. Balasubramaniam
Secretary Membership
Committee



K. Vivekanandan
Secretary Constitutional
Committee



M. R.Rajmohan
Secretary, Religious
Affairs, Celebrations &
Gurukulam Committee



Mrs.Vanathy Ravindran
Secretary Social Welfare
Committee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
# COUNCIL OF MANAGEMENT

Contd....



K. Arunasalam
Chairman
Education Committee



Mrs. V.Ariacutty



K. E. Arumugam



S.T.Arulanantham



Mrs. S. Balasingam



Mrs. S. Balasubramaniam



C.S.Chandrasekeram



K. Chelliah



T. Duraisingham



T. Gananathalingam



Mrs. Y. Ganeshalingam



E. Ganeshan



S. Ganeshan



Mrs.A.Kailasapillai



S. T. Kanagalingam



R. S. Kanagaratnam

(Note: Members of the Board of Trustees and the members of the Executive Committee are also the members of the Council of Management)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
# COUNCIL OF MANAGEMENT

**Contd....**



S. Kanagasabapathy



V. Kanapathipillai



P. Kandasamy



Mrs. Ponmalar Kandasamy



P. Karuppiah



S. Kumarasamy



T. Kulainthaivelu



Dr. K.Mahalingasivam



N. Mahathevan



R. Mailvaganam



S. Manickavasagar



T. Manickavasagar



P. R. Muthusamy



K. Manivannan



S. Murali



T. S. Nadarajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
# COUNCIL OF MANAGEMENT

**Contd....**



. Nadarajah



R. Namasivayam



M. Nagarathinam



V. Nagathevan



K. Nagendran



Miss. Satsoroopavathy Nathan



N. Piraisoodi



G.G. Ponnnampalam Jr.



S. Ratnasingham



R. Ratnasingham



V. Selvanayagam



M. K. Sambasivam



Mrs. V.Sathiyamoorthy



R. Seenithamby



M. K. Sellarajah



S. Shanmugarajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
# COUNCIL OF MANAGEMENT

Contd....


S. Sivagnanam


Dr. K Sivagnanam


R. Sivagurunathan


A. Sivanesachelvan


M. Sivanesarajah


C. Sivapathasuntheram


S. Sivapragasam


T. Someswaran


N. Subramanian


T. Sivayogarajah


Mrs. V. Thavayogarajah


S. Theivanayagam


S. Thiagarasa


Y. Thivakaran


V. Vallipuram


K. Veeriah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALL CEYLON HINDU CONGRESS
# COUNCIL OF MANAGEMENT

**Contd...**



P. Vimalendran



S. R. Yoganathan



N. Yogeraja



Dr. Pon.Wignarajah



K. T. Dharmarajah



P. Ramasamy

Note: Photographs of C. Brindavan, T. Manikavasagar, S. Nadarajah, Dr. P. Poologasingham, S. Rajaratnam, V.K. Sathyalingam, S. Selvaratnam, K.Sivanathan, S.Sivanathan, R. Sivanathan, V. Sathiyamoorthy, S.R. Wigneswaran, D. Yuvarajan, Miss. G. Thamotharampillai and Mrs. S. Vishnukanthan are not received.

---

# IN THE SERVICE OF THE CONGRESS

## Audit and Financial Review



N. R. Gajendran
(Auditor)



W. S. Kirupairatnam



V. Kandasamy



S. Sitambaranathan

(Members of Financial Advisory and Review Committee)

## Staff



S. Vallipuram
(Stores Keeping)



S. Samynather
(Building Supervision till 30.06.93)



T. Sivasuntharalingam
(Building Supervision till 31.12.95)



M. Sinniah
(Administration)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRIBUTE TO
# OUR
# SPECIAL MEMBERS



V. S. THURAIRAJAH

Well known Architect, Mr. V.S. Thurairajah has demonstrated his talents in planning the ACHC Headquarters reflecting the Hindu Culture. He rendered his services voluntarily and the beauty and elegance of the building is another example of his talents and dedicated professional service. His contributions to Tamil language and Hinduism are always admired by the People.

Mr. N. A. Vaithialingam who is well known for his marvellous contribution to the Ceylon Government Railway as its Chief Engineer, had been a Consultant Engineer of Asian Development Bank in Manila and also lectured in Civil Engineering at Singapore University. This simple unassumed elder works like a youth even at the age of 85. He has been climbing the stairs and supervising our work for the last few years. His temperament kept the others working with him in the Building Committee cool and calm even when controversial issues came up for discussion.



N. A. VAITHIALINGAM

**YOUNG ENGINEERS WHO HAVE BEEN HELPING US IN THE RECENT PAST.**



S. ARUMAINATHAN



V. KENGATHARAN



P. NAGULENDRAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN MEMORIAM



THE LATE MR. S. GNANAPRAGASAM

The late Mr. S. Gnanapragasam worked tirelessly since 1990 to complete the construction of the ACHC Headquarters. His dedication and commitment to the responsibilities entrusted to him was always commendable. Having retired from the Buildings Department he joined the Ministry of Education and Higher Education. He always ensured that the optimum result was achieved at minimum expense. He passed away on 15th July 1995.

The late Mr. S. K. Thurairajah, who was the Secretary of the Building Committee of the ACHC was one of the office bearers who took very active interest in the building works of the ACHC Headquarters. He was instrumental in following up the approvals of the building plans and related matters. His enthusiasm made the others to also work hard. He was also the Assistant Secretary. His demise on 7.8.1991 was an irreperable loss to the ACHC.



THE LATE MR.S.K. THURAIRAJAH



THE LATE MR. S. SATCHITHANANTHASIVAM

The late Mr. S. Satchithananthasivam (Attorney-at-Law) was elected the General Secretary on the 26th October 1986 on which day Mr. V. Balasubramaniam became the President. Although he unfortunately passed away on the 2nd April 1990 his contributions during the period of his office laid the foundation for resumption of building works in October 1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார்ந்த நன்றி




மாமன்றம் இந்நாட்டின் இந்து மக்களின் உச்ச நிறுவனம். இந்து மக்கள் நெடுங்காலம் கண்ட கனவான தலைமையகக் கட்டிடம் பூர்த்தியாகியிருக்கின்றது. அக் கட்டிடத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் இப்போது எழுந்தருளி எங்களுக்கெல்லாம் அருள் பாலித்து நிற்கின்றான். அவன் தாழ் பணிந்து அந்த எல்லாம் வல்ல ஈசப் பெருமான் திருவடிகளில் இச்சிறப்பு மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இந்நாட்டின் இந்து மத நிறுவனங்களின் ஒன்றியமாகத் திகழ்கின்ற மாமன்றத்தின் வரலாறு இந்நாட்டில் இந்து சமயத்தின் அண்மைக்காலச் சரித்திரத்துடன் பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

எனவே தலைமையகப் பூர்த்திச் சிறப்பு மலருக்கு 'இலங்கையில் இந்து சமயம்' எனும் கருப்பொருளைத் தெரிந்து எடுத்தோம். பாடல் பெற்ற இரு ஈழத்திருத்தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றின் படங்களும் வடக்கிலும், கிழக்கிலும் ஒப்பாரும் மிக்காருமில்லா முறையில் சமயப்பணி செய்து புகழ்பூத்த பெருமக்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரினதும் ஸ்ரீ விபுலானந்தரினதும் படங்களும் இம்மலரின் அட்டையிலும் மலரின் கருப்பொருளை எதிரொலிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

கொழும்பு 2 கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய திருத்தலத் திருக்கோபுர நிழலில் எங்கள் தலைமையகம் வளர்ந்திருப்பதைப் பின் அட்டை சித்திரிக்கின்றது.

கருப்பொருளுக்கமைய அறிஞர்களும் அன்பர்களும் எழுதிய ஆக்கங்களுடன் பழம்பெரும் ஏடுகள் மாமன்ற அங்கத்துவ சங்கங்களின் வெளியீடுகள் ஆகியவற்றிலிருந்தும் சில பயன்தரும் கட்டுரைகளை எடுத்து மீள்பிரசுரம் செய்திருக்கிறோம்.

காலம் கடந்தும் அவற்றின் உள்ளடக்கம் இந்நாட்டு இந்து மக்களுக்குப் பயன்தரவல்லவையாக இருக்கின்றன. அவற்றைப் படைத்தவர்கள் ஸ்ரீ விபுலானந்தர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மூதறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்ற அறிஞர்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் எங்களின் முன்னோடிகளான சேர். கந்தையா வைத்தியநாதன், திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, திரு. எஸ். அம்பிகைபாகன், பண்டிதர் செ. பூபாலபிள்ளை ஆகியோரும் என்பதனால் அவை இன்னும் சிறப்புப் பெறுகின்றன. கட்டுரைகள், கவிதைகள் எழுதித்தந்துதவிய சகலருக்கும் மீள்பிரசுரம் செய்யப்படும் ஆக்கங்களை முதலில் வெளியிட்ட நிறுவனங்களுக்கும் எங்கள் நன்றி. கருப்பொருளைத் தெரிவதிலும், கட்டுரை விடய தானங்கள் பற்றி தீர்மானிப்பதிலும் ஆலோசனை வழங்கியவர் செல்வி சற்சொரூபவதிநாதன். இச்சிறப்பு மலரின் அமைப்பிலும் பொருளடக்கத்தினை ஒழுங்கு செய்வதிலும் ஆர்வத்துடன் உழைத்தவர் திரு. எம். ஆர். இராஜ்மோகன். செல்வி சற்சொரூபவதியும், திரு இராஜ்மோகனும் வெளியீட்டுக் குழு உறுப்பினர்களாக செய்த சேவையின் பிரதிபலிப்பே இம்மலர் என்றால் மிகையாகாது. அவர்கள் தந்த உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் என் மனமார்ந்த நன்றி. திரு. க. இராஜபுவனீஸ்வரன், திரு. மு. கந்தசாமி, திரு. த. மனோகரன், திருமதி. ஆ. கயிலாசபிள்ளை போன்ற பலர் அச்சுப்பிரதிகளைத் திருத்தம் பார்ப்பதில் உதவினர். யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினர் குறிப்பாக உரிமையாளர் திரு பொ. விமலேந்திரனும் முகாமையாளர் திரு இ. முகுந்தனும் தந்த ஒத்துழைப்பிற்கு நன்றி கூற வார்த்தைகளின்றித் தடுமாறுகின்றேன்.

இச்சிறப்பு மலரில் நான் கூடிய நேரமும் கவனமும் செலுத்த வகை செய்து மகாகும்பாபிஷேக ஒழுங்குகளை இரவு பகலாகக் கவனித்த திரு சின்னத்துரை தனபாலா, திரு. க. பாலசுப்பிரமணியம், திரு சு. சத்தியமூர்த்தி, திரு. மு. கந்தசாமி ஆகியோருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக - முக்கியமாக - இம்மலரை வெளியிடநிதி அனுசனை தந்த சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனிக்கும் அதன் நிர்வாக இயக்குநர் திரு. சந்திரா ஜெயரத்னா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

பெயர்கூறி ஒவ்வொருவரையும் நன்றி கூற முடியாவிட்டாலும் தலைமையகக் கட்டிடப் பூர்த்தி செய்து வரலாறு படைத்த இவ் வேளையில் இலங்கையில் இந்து சமய வரலாற்றுப் பொக்கிஷமாக இதனைச் சமர்ப்பிக்க திருவருள் கிடைத்தடையிட்டு ஆனந்தம் பெருகி நிற்கின்றோம்.


இல : 91/5 சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு 2
இலங்கை
தொலைபேசி : 434990 - 344720.
தெலிபாக்ஸ் : 445255.

கந்தையா நீலகண்டன்
பொதுச்செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Our grateful thanks to*

*the principal sponsor of the publication of this*

*Special Souvenir*

**CTC Eagle Insurance Co. Ltd.**

இந்தச் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு பிரதான அனுசரணை தந்த

**சீ.ரீ.சீ. இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட்**

நிறுவனத்திற்கு

எங்கள் மனமுவந்த நன்றி.

*We greatly appreciate the excellent job done by*

**UNIE ARTS (PRIVATE) LTD**

Unie-Arts

*and its Managing Director , Mr. P. Vimalendran*

*in producing this special Souvenir*

- Special Souvenir Committee

*இம்மலரை அழகுற அச்சிட்டு உதவிய*

**வரையறுக்கப்பட்ட யுனி ஆட்ஸ்**

*தனியார் நிறுவனத்திற்கும் அதன் நிர்வாக இயக்குநர்*

*திரு. பெ. விமலேந்திரன் அவர்களுக்கும்*

*மாமன்றத்தின் மனமார்ந்த*

*நன்றி*

– சிறப்பு மலர்க்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இறை பணி நிற்க

அகில இலங்கை இந்து மாமன்றம்



# All Ceylon Hindu Congress

**SPECIAL SOUVENIR**

**on the occasion of the completion of the Congress Headquarters Building**

Unie Arts (Pvt) Ltd. No. 48 Bloemendhal Street, Colombo 13. Tel.330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org